

கல்கி ஆகஸ்ட் 4உ
34ம் ஆண்டுச்
சிறப்பிதழ்
ர. சு. நல்லபெருமாள் எழுதும்
திருடர்கள்
புதிய தொடர்கதை ஆரம்பமாகிறது
விஜயா

திருடர்கள் அதிர்ச்சி அளிக்கும் நவீன

கன்னம் வைத்து வீட்டுக்குள் புகுந்து திருடிக் கையும் களவுமாகப் பிடிபட்டால்தானா திருடன்? சமூகத்தில் வேறு எத்தனையோ விதமான திருடர்களையும் பார்க்கிறோம்.

பொய்க் கணக்குத் தயாரித்தளிப்பது, லஞ்சம் வாங்கிக் கொண்டு கண்ட்ராக்ட் பெற்றுத் தருவது போன்ற எத்தனையோ பல காரியங்களில் ஈடுபட்டு மக்கள் தரும் வரிப் பணத்தைக் கொள்ளையடிப்பவர் ஒரு பக்கம்; பெண்களின் கற்பைச் சூறையாடுகிறவர் ஒரு பக்கம்; ஏழை மக்களுக்கு ஆசை காட்டி ஏய்த்துப் பிழைப்பவர் ஒரு பக்கம்; ஆபாசக் களஞ்சியங்களைப் பிரசுரித்து மக்களின் மன ஆரோக்கியத்தைப் பறிப்பவர் ஒரு பக்கம்; இதெல்லாம் போதாது என்று ஒருவர் மனத்தை ஒருவர் திருடிக் கொள்ளும் தூய இளம் காதலர் ஒரு பக்கம்!

இப்படிப் பல்வேறுபட்ட திருடர்களைத் தமது புதுமையான நாவலில் உலவ விட்டு விருவிருப்பானதும் சுவை மிக்கதுமான கதையோட்டத்தையும் புகுத்தியிருக்கிறார் திரு ர. சு. நல்லபெருமாள்.

தைரியமாக எழுதப்பட்டுள்ள **'திருடர்கள்'** படிப்பவருக்கு அதிர்ச்சி அளிப்பது நிச்சயம். வாசகர்களிடையே பரபரப்பை ஏற்படுத்தப் போவது சர்வ நிச்சயம். இந்த ஆண்டின் தலைசிறந்த நாவலாக விளங்கப்போவது அதைவிட நிச்சயம்!

இதர புதிய அம்சங்கள் :

- **பொன்னியின் புதல்வர்**
  அமரர் கல்கியின் வாழ்க்கை வரலாறு — **சுந்தா.**
- **ஆயிரம் ரூபாய் பரிசுக் கதையும்**
  அதைத் தொடர்ந்து இதர பரிசுக் கதைகளும்.
- **நம்மைச் சுற்றி . . . பி. வி. ஆர்.**
- **நகர்வலம்** — மாதமொரு நகரமாக விஜயம் செய்து எழுதப்படும் பயணக் கட்டுரைகள்.
- **செய்தியில் விளைந்த சிறுகதைகள்** — ரா. வீழிநாதன்


திருடர்கள்
ர.சு.நல்லபெருமாள்

1. வழக்கு

காலை ஒன்பது மணியிலிருந்தே நீதிமன்றத்தில் கூட்டம் கூடத் தொடங்கிவிட்டது. அன்று பரபரப்பான ஒரு வழக்கு நடைபெறவிருந்தது. பத்திரிகைகளில் ஏற்கனவே அது பற்றி ரசமான செய்திகள் வெளியாகியிருந்தன. நீதி மன்றத்தில் பதினொரு மணியளவில் கட்டுக்கடங்காத கூட்டம் கூடிவிடவே, போலீஸ்காரர்கள் ஒழுங்குபடுத்த வேண்டியிருந்தது.

வழக்கு நடைபெறவிருந்த பெரிய அறைக்குள் வழக்கறிஞர்கள் நிரம்பியிருந்தார்கள். முன் வரிசையில் இடது பக்கத்தில் அரசாங்க வழக்கறிஞர் முனுசாமி, கம்பீரமாக அமர்ந்திருந்தார். அவருக்கு இடது பக்கத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டரும் வலது பக்கத்தில் சப் இன்ஸ்பெக்டரும் தங்கள் மீசைகளைத் தடவிவிட்டுக் கொண்டு அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்குப் பின்வரிசையில் இருந்த வழக்கறிஞர் கருணாகரன், முகத்திலிருந்த பருக்களைக் கிள்ளிவிடுவதில் முனைந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் அவருடைய ஜூனியர் கான் முகமது, விரல் நகத்தைக் கடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். அவரைச் சுற்றிலும் ஒருவித நெடி வீசிக் கொண்டிருந்தது. கருணாகரன் மூக்கைச் சுளித்தார். இரு முறை தும்மினார்.

''என்னப்பா நாற்றம் இது, மூக்கை அரிக்கிறதே!'' என்றார் கருணாகரன்.

கான் முகமது ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தார். ''இது வெளிநாட்டுப் பௌடர். வாசனை கொஞ்சம் அதிகம்'' என்றார்.

''முகப் பௌடருக்கா இந்த வாசனை ? காட்டமா யிருக்கிறதே!'' என்று கூறி மீண்டும் இரு முறை தும்மினார். பக்கத்தில் இருந்த பிராஸிக்யூட்டர் முனுசாமி சிரித்தார்.

''உங்கள் ஜூனியர் முகத்தில் பூசியிருக்கும் பௌடருக்கே இவ்வளவு காட்டமான வாசனை இருக்குமானால், இவர் உபயோகிக்கும் சென்ட் எவ்வளவு காட்டமாயிருக்குமோ?'' என்றார்.

'' எல்லோரும் ஓட வேண்டியிருக்கும் '' என்றார் கருணாகரன்.

''இன்றைக்கே கேஸை முடித்துவிடலாமா?'' என்று பிராஸிக்யூட்டரைப் பார்த்துக் கேட்டார் எதிர் வரிசையில் இருந்த வழக்கறிஞர், ஆவுடையப்பபிள்ளை.

அவருக்குப் பதில் சொல்ல முனுசாமி முனைந்த போது, பின்னாலிருந்த கருணாகரன் காலை மிதிக்கவே திரும்பிப் பார்த்தார்.

''டாக்டரை நாளைக்குத்தான் விசாரிக்க முடியும். இன்றைக்கு வேண்டாம்'' என்றார் கருணாகரன் இரகசியமாக.

''ஏன்? மொத்தமே ஐந்து சாட்சிகள் தானே? டாக்டரை மத்தியானம் விசாரித்துவிடலாமே!'' என்றார் முனுசாமி.

''வேண்டாம் சார். டாக்டர் இன்றைக்கு வேண்டாம். இன்னும் ஆசாமி வழிக்கு வரவில்லை.''

''ஓ....!'' என்று தலையை அசைத்துவிட்டுத் திரும்பினார் முனுசாமி. ''இன்றைக்கு முடியாது சார். டாக்டர் இன்றைக்கு வரவில்லை. திங்கட்கிழமை முடித்துவிடலாம்'' என்று ஆவுடையப்பபிள்ளையைப் பார்த்துச் சொன்னார்.

''டாக்டரை பதினைந்து நிமிஷங்களில் விசாரித்து அனுப்பிவிடலாமே.... வீணாக நாளைக் கடத்துவானேன்?'' என்றார் பிள்ளை.

முனுசாமி இதற்குச் சம்மதித்துவிடக் கூடாது என்பதற்காகப் பின்னாலிருந்து அவருடைய குதிங்காலை அழுத்தி மிதித்தார் கருணாகரன்.

''டாக்டருக்கு இன்று வர முடியாதுபோல் இருக்கிறது.... முதல் சாட்சியிடமே உங்கள் விசாரணை இன்று முழுதும் இருக்குமே!'' என்று கூறிச் சிரித்தார் முனுசாமி.



''என்னுடைய குறுக்கு விசாரணை உங்கள் விசாரணையைப் பொறுத்திருக்கிறது'' என்றார் ஆவுடையப்பபிள்ளை.

''என்னுடைய விசாரணை ரத்தினச் சுருக்க மாக இருக்கும்.''

''ஏன், வழக்கில் பலமில்லையோ?''

''நீங்கள் அசைக்க முடியாத வழக்கு இது. அதனால்தான் என் விசாரணை நீள வேண்டி யிருக்காது. ஒரு சில கேள்விகள்தாம். இருந் தாலும் முதலாவது சாட்சியைப் பார்த்து விட்டால் பிறகு நீங்கள் குறுக்கு விசாரணையை நீட்டிக் கொண்டிருப்பீர்கள்'' என்று முனு சாமி கூறியதும் பக்கத்திலிருந்த மற்ற வழக் கறிஞர்கள் சிரித்தார்கள்.

''முதலாவது சாட்சி என்ன ரம்பையா, ஊர்வசியா?'' என்று கேட்டார் ஒரு வய தான வக்கீல்.

''வருவாள் பாருங்களேன்'' என்றார் அரசாங்க வக்கீல் முனுசாமி.

''பார்த்துக் கொண்டே யிருந் தால் குறுக்கு விசாரணை எப்படி நடைபெறும்?'' என்று கேலி செய்தார் இன்னொரு வக்கீல்.

இந்தக் கேலிப்பேச்சைஆவுடை யப்ப பிள்ளை ரசிக்கவில்லை. அவ ருக்கு இடது பக்கத்தில் அமர்ந் திருந்த அவருடைய ஜூனியர்க ளான சம்பத்தும் நளினியும் உள்ளூறச் சிரித்துக் கொண் டிருந்தார்கள். தம்முடைய ஜூனியர்களுக்கு எதிரில் அப்படி ஒரு விரசமான கேலிப் பேச்சை விரும்பாததால் முகத்தைச் சுளித் தார் ஆவுடையப்பபிள்ளை.

''மிஸ்டர் பிள்ளைக்கு இதில் ரசனை கிடை யாது'' என்றார் ஒரு வக்கீல்.

''ஏன்? வயது இன்னும் அறுபத்தைந்துகூட ஆகியிருக்காதே!'' என்றார் கருணாகரன் குறுக்கிட்டு.

கருணாகரனின் கேலிப் பேச்சை விரும்பாத ஆவுடையப்பபிள்ளை, ''இதெல்லாம் வய தைப் பொறுத்த விஷயமில்லை. மனத்தைப் பொறுத்தது. உங்களுக்கு எழுபது வயது ஆனாலும் இந்தச் சபலம் போகப் போவ தில்லை'' என்றார்.

''எழுபதென்ன, தொண்ணூறு ஆனாலும் நான் 'ஆக்டி'வாகத்தான் இருப்பேன்'' என்று வெடுக்கெனப் பதில் சொன்னார் கருணாகரன்.

''ஆக்டிவாக இருக்க வேண்டும் என்று ஆசை மட்டும் இருந்தால் போதுமா? வெளியில் சொல்லிக் கொள்ளலாம், ஆக்டி வாக இருப்பதாக'' என்று ஆவுடையப்ப பிள்ளை சொன்னதும் அறைக்குள் குபீரென்று சிரிப் பொலி எழுந்தது. கருணாகரனின்முகம் சுண்டியது. ஏற் கனவே கறுத்து



அம்மைத் தழும்புடன் விகாரமாயிருந்த அவருடைய முகம் இப்போது இன்னும் விகாரமாகியது. ஆவுடையப்பபிள்ளையின் பேச்சில் மறைந்து கிடந்த உண்மை பல ருக்கும் தெரிந்திருக்குமோ என்னும் எண்ணம் கருணாகரனின் மனத்தை அரித்தது. எல்லோ ரும் ஏளனமாகத் தன்னைப் பார்ப்பதாகக் குமுறினார். ஆவுடையப்பபிள்ளை மீது அளவு கடந்த கோபமும் வெறுப்பும் தலைதூக்கின.

கருணாகரனுக்கு வயது ஐம்பத்தைந்து. இந்த வயதிலும் மூன்றாவது கல்யாணம் செய் திருந்தார். பெண்கள் விஷயத்தில் அவ ருடைய மனம் எவ்வளவு பலவீனமானதோ, அந்த அளவுக்கு அவர் உடலும் பலவீனப்பட் டிருந்தது. இதனால் மனத்தின் ஆசைகளை உடலால் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் அவர் கஷ்டப்பட்டார். இப்படி அவருக்கு நேர்ந்து விட்டதற்குப் பலவிதமான கார ணங்கள் வதந்திகளாக உலவின. இந்தப் பலவீனத்தை உலகிடமிருந்து மறைக்கத்தான் மூன்றாவது முறையாகக் கல்யாணம் செய் திருந்தாரோ என்னவோ? கருணாகரனின் முகத்தில் தெரிந்த உணர்ச்சிகளைக் கண்ட தும் ஆவுடையப்பபிள்ளையின் மனம் வருந்தி யது. கருணாகரன் பற்றி நாம் கேள்விப்பட் டிருப்பதெல்லாம் உண்மையாயின் அவர் அனுதாபத்துக்குரியவர் என்று எண்ணினார். இவ்வளவு கூட்டத்தில் அவரைப் பற்றி அவ் விதமாகத் தாம் பேசியிருக்கக் கூடாது என்று தம்மையே கடிந்து கொண்டார். பொது வாக ஆவுடையப்பபிள்ளை எவர் மனமும் புண்படும்படி பேசுவதில்லை. ஆனால் இன்று தம்மைப் பற்றிப் பிறர் பேசியது விரசமாகப் போகவே தம்மை மீறிய கோபத்தில் அவ் விதம் கூறிவிட்டார். அவர் சொன்னதில் உண்மை இருந்தாலும்கூட ஒருவரைப் பற்றிப் பொது இடத்தில் அவ்வளவு கூட்டத்தில் அம்மாதிரி பேசியது தவறுதான் என்பதை உணர்ந்தார்.

சற்று நேரம் அந்த அறைக்குள் மௌனம் நிலவியது. ஆவுடையப்பபிள்ளையின் சொற்க ளால் ஏற்பட்டுவிட்ட புண்ணை மனத்தால் நக்கி நக்கித் துடைத்துக் கொண்டிருந்தார் கருணாகரன். புண்ணின் வேதனை, உள்ளூற மிகுந்த வெறுப்பையும், பகையையும் தோற்று வித்துக் கொண்டிருந்தது.

நளினி மெதுவாகச் சம்பத்தின் காதுப் பக்கம் குனிந்து, ''ஏன் எல்லோரும் சிரிக்கி றார்கள்?'' என்று இரகசியமாகக் கேட்டாள்.

''அப்புறம் சொல்கிறேன்'' என்று கூறி விட்டுக் கருணாகரனைப் பார்த்தான் சம்பத்.

இந்தச் சமயத்தில், ''ஸைலன்ஸ்....'' என்று ஒரு குரல் கேட்கவே, அறையிலிருந்த அனைவரும் மரியாதையுடன் எழுந்து நின் றார்கள். அறைக்குள் வந்த நீதிபதி நாக சுந்தரம், தம் நாற்காலியில் அமரும்வரை அனை வரும் நின்றுகொண்டிருந்தார்கள். அவர் அமர்ந்ததும் மற்றவர்களும் அமர்ந்தார்கள்.

சற்று நேரத்தில் குற்றவாளிக் கூண்டில் ஓர் இளைஞன் வந்து நின்றான். எல்லோருடைய பார்வையும் அவனை மொய்த்தது.

''பார்த்தால் ஹைஸ்கூல் பையன் மாதிரி இருக்கிறான்; இவனா?'' என்று ஒரு வக்கீல் சந்தேகத்தோடு முனகினார்.

''பார்க்கத்தான் அப்படி. வயது இருப தாகிவிட்டது. அவன் செய்திருக்கும் காரி யம்....'' என்றார் அரசாங்க வக்கீல்.

''இந்தக் காலத்தில் எவனும் எதுவும் செய் வான் சார்'' என்றார் இன்னொரு வக்கீல்.

''சார்! இன்னும் முதலாவது சாட்சி வரக் காணோமே!'' என்று அவசரப்பட்டார் ஒரு வயோதிக வக்கீல்.

''ஐயோ பாவம், அவருக்கு அவசரம்...'' என்றார் பக்கத்திலிருந்து ஒருவர்.

''வேலம்மாள்.... வேலம்மாள்....வேலம் மாள்.....'' என்று மூன்று முறை அலறி னான், நீதி மன்றச் சேவகன். எல்லோரும் ஆவ லோடு வாசலை நோக்கினார்கள். ஒரு பெண் உள்ளே வந்து சாட்சிக் கூண்டில் ஏறி நின்றாள். நூற்றுக்கணக்கான கண்கள் அவளைச் சுற்றி வளைத்தன.

அவளுக்கு இருபத்தைந்து அல்லது இருபத் தாறு வயது இருக்கும். கண்களில் மற்ற வர்களுடைய பார்வையை எதிர்த்து வம்பு செய்யும் குறும்பு. நல்ல வளர்த்தியும் அதற் கேற்ற அமைப்புக்களும் பொருந்திய கட்டு உடல். இடை தெரியும்படியாகப் புடவையை இறக்கிக் கட்டியிருந்த விதமும், மினி ரவிக்கையை அணிந்திருந்த பாணியும், புருவத்திலும் இமையிலும் மையிட்டு விகாரப் படுத்தியிருந்த ஒப்பனையும், கொண்டையின் விநோத அமைப்பும் அந்த அறை முழுவதை யும் ஆட்கொள்வதா யிருந்தன.

எல்லாருடைய கண்களும் அவளையும், குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டிருந்த இளைஞனையும் மாறி மாறிப் பார்த்துப் பொருத்தத்தைக் கணக்கிட்டுக் கொண் டிருந்தன.

அந்த வழக்கு, ரசனை மிகுந்தது மட்டுமல்ல, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததும்கூட. அந்த வழக்கை நிரூபித்துக் குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டால், — ஆளும் கட்சிக்கும், புரட்சிக் கட்சிக்கும் மாபெரும் வெற்றிதான். அரசியலில் இது ஒரு நபரைப் பழி வாங்க உதவும். அதுவும் வக்கீல் கருணாகரனுக்குத்தான் அதில் மிகுந்த அக்கறை. ஏற்கனவே இரண்டு பஞ்சாயத்துத் தேர்தல்களில் கருணாகரனின் புரட்சிக் கட்சி யின் தோல்விக்குக் காரணமாக இருந்தவ ருடைய மானப் பிரச்னை இந்த வழக்கு. குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிறானே, அவனுடைய தந்தை ரகுபதி நாயுடு, ஒரு காந்தி பக்தர். ஆதியில் உப்புச் சத்தியாக் கிரகத்திலும், தனி நபர் சத்தியாக்கிரகத்தி லும் ஈடுபட்டுப் பல முறை சிறைக்குச் சென்ற தியாகி. பல ஆண்டுகளுக்குமுன் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி விட்டார். ஒரு காலத் தில் தியாகமும், நேர்மையும் சேர்த்து வளர்த்துவிட்ட அந்த மாபெரும் ஸ்தாபனம் இப்போது, அவருடைய கணிப்பில், பாரத நாட்டை ஆளும் அருகதையை இழந்துவிட் டது. இந்த முடிவுக்கு அவர் வந்ததால், பஞ்சாயத்துத் தேர்தல்களில் சுயேச்சை யாகவே போட்டியிட்டார். அவருக்கு எதி ராகக் காங்கிரஸ் யாரையும் போட்டிக்கு நிறுத்துவதில்லை. அந்த அளவுக்குக் கட்சி அவர் மீது நன்றியோடு இருந்தது. அவ ருடைய ஊர் மக்களும் அவருடைய பெரு

மையை உணர்ந்து அவருக்கே வாக்களித்துப் பஞ்சாயத்துப் போர்டின் தலைவராக்கி நன்றியைச் செலுத்தினார்கள். அவரை எதிர்த்து நின்ற வக்கீல் கருணாகரன் இருமுறை தோல்வியுற்று டெபாசிட்டையும் இழந்தார். ரகுபதியினுடைய செல்வாக்கால் கருணாகரனின் புரட்சிக் கட்சி அந்தப் பகுதியில் வேரூன்றவே முடியாமல் தவித்துக்கொண்டிருந்தது. ஆனால் சமீபத்தில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தேர்தலில் ஆளும் கட்சியும், புரட்சிக் கட்சியும் கூட்டுச் சேர்ந்து இயங்கிய போது, ஆளும் கட்சி அபேட்சகரின் பணமும், புரட்சிக் கட்சியின் அடாவடித்தனமும் நாயுடுவைத் தோற்கடித்து விட்டன. மூன்று வாக்குகள் வித்தியாசத்தில்தான் நாயுடு தோல்வியுற்றார். நாயுடுவுக்கு இரண்டாயிரம் ரூபாய்தான் நஷ்டம். ஆனால் வெற்றி பெற்றவருக்கு ஐம்பதினாயிரம் நஷ்டம். அந்த ஊர் மக்களுக்கு நேர்மையும், தியாகமும் நஷ்டம்.

நாயுடுவைப் பழி வாங்கச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி யிருந்தார்கள் ஆளும் கட்சிப் பிரமுகர்களும் வக்கீல் கருணாகரனும். அந்தச் சந்தர்ப்பம் இப்போது வந்துவிட்டது. ரகுபதி நாயுடுவின் மகன் குருசாமியைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியாகிவிட்டது. அவனுக்குத் தண்டனையை வாங்கிக் கொடுத்துவிட்டால், பழி வாங்கும் படலம் பூரணமாகிவிடும். இனி அந்தத் தொகுதியில் காங்கிரஸுக்குச் செல்வாக்கு இல்லாமலும் போய்விடலாம்.

கருணாகரனின் பார்வை அந்த அறை முழுவதும் சுழன்றது. நாயுடுவைக் காணவில்லை. அவர் மானமுள்ளவர். தம்முடைய மகன் மீது சுமத்தப்பட்டிருக்கும் கேவலமான குற்றச்சாட்டைக் கேட்ட போதே உடலும் உள்ளமும் குன்றிப் போனார். இப்போது நீதி மன்றத்துக்கு வர மறுத்துவிட்டார். நாயுடு வராதது கருணாகரனுக்குச் சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது.

''மிஸ்டர் முனுசாமி! சாட்சியை விசாரிக்க ஆரம்பிக்கலாமே !'' என்று நீதிபதி கூறியதும் முனுசாமி தம்முடைய ஆசனத்திலிருந்து எழுந்தார்.

2. விசாரணை

அரசாங்க வழக்கறிஞர் முனுசாமி, வழக்கைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்த போது, நீதிபதியின் பார்வை, அடிக்கடி சாட்சிக் கூண்டில் தலை குனிந்தவாறு நின்று கொண்டிருந்த வேலம்மாளின் பக்கம் சென்று கொண்டிருந்தது. முனிசாமி மிக உருக்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

''ஆண்துணை இல்லை என்பதைப் புரிந்து கொண்ட குற்றவாளிக்கு இந்தக் குற்றத்தைச் செய்யத் துணிவு ஏற்பட்டதில் வியப்பில்லை, யுவர் ஆனர்'' என்று முனுசாமி கூறிய போது நீதிபதி, இலேசாகச் சிரித்தார். ''ஆண்துணை இல்லாத பெண்களுக்கெல்லாம் இந்த மாதிரி ஆபத்து நேர்ந்து கொண்டா இருக்கிறது?'' என்று கேட்டார்.

''அநேகமாக நேரத்தான் செய்யும் யுவர் ஆனர். ஒரு பெண் நடுநிசியில் எவ்விதப் பயமுமின்றித் தனியே வெளியே செல்லக் கூடிய சூழ்நிலை எப்போது உருவாகிறதோ, அப்போது தான் இந்நாடு பூரண சுதந்திரம் பெற்றதாக அர்த்தம் என்று காந்திஜி சொன்னார். அந்த மாதிரி ஒரு சுதந்திரம் இன்னும் நம் நாட்டுக்குக் கிடைத்தபாடில்லை'' என்றார் முனுசாமி.

''அந்த மாதிரி சுதந்திரம் உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லை'' என்று குறுக்கிட்டுச் சொன்னார், ஆவுடையப்பபிள்ளை.

''பெண்ணுக்குத் துணை இல்லை என்னும் தைரியம்தான் குற்றவாளியைக் குற்றம் புரியத் தூண்டியிருக்கிறது'' என்று முனுசாமி மீண்டும் அழுத்திக் கூறிய போது நீதிபதி குறுக்கிட்டார்.

''உங்களுடைய சாட்சி அளிக்கும் தோற்றமே கூடத் தூண்டியிருக்கலாம் அல்லவா?''

அறைக்குள் சிரிப்பொலி கிளம்பியது. அரசாங்க வக்கீல் சிரித்துக் கொண்டே ஒருமுறை சாட்சிக் கூண்டைப் பார்த்தார். பேச்சு முழுவதும் ஆங்கில மொழியில் இருந்ததால் விவரம் தெரியாமல் வேலம்மாள் தலையை நிமிர்த்திப் பார்த்தாள். எல்லாருடைய பார்வையும் தன்னை நோக்கியதை உணர்ந்ததும், மீண்டும் தலையைக் குனிந்து கொண்டாள்.

''ஒரு வாரப் பத்திரிகையில் ஒரு சிறுகதை வந்தது ... அதாவது மறைக்க வேண்டியதை மறைக்கத் தவறுவது, மற்றவர்கள் குற்றம் புரியத் தூண்டுகிறது என்ற கருத்தில் ...'' என்றார் நீதிபதி.

''நாலைந்து மாதங்களுக்கு முன்னால் வெளியான கதை'' என்று குறுக்கிட்டுச் சொன்

ஞன், ஆவுடையப்ப பிள்ளையின் ஜூனியர் சம்பத்.

''எஸ், அந்தக் கதைதான் ... பணத்தை வெளியே தெரியும்படி வைத்திருப்பவன் திருடனைத் தூண்டுவதுமாதிரி, கண்ணியமற்ற முறையில் உடை உடுத்துபவள் காமுகனைத் தூண்டுகிறாள் என்ற கருத்தில் அமைந்திருந் தது; இல்லையா மிஸ்டர் சம்பத்?'' என்று கேட்டார், நீதிபதி.

சம்பத், மரியாதையாக எழுந்து, ''எஸ், யுவர் ஆனர்'' என்று கூறிவிட்டு அமர்ந்தான்.

முனுசாமி திகைத்தார். வழக்கைப் பற்றிக் கருத்து வேறு திசையில் திரும்பி விடுமோ என்று பயந்து பரபரப்புடன் பேசினார்.

''நானும் அந்தக் கதையைப் படித்தேன். திறந்த வீட்டில் எந்த நாயும் நுழையும். நாய்தான் நுழையும்! ஆனால் கண்ணியமுள்ள வன் நுழைய மாட்டான். சமூகத்திலிருந்து அப்படிப்பட்ட நாய்களை விலக்கி வைக்கத் தான் சிறைச்சாலை இருக்கிறது.''

முனுசாமியின் சாதுர்யமான பேச்சைக் கேட்டுத் திகைத்தார், நீதிபதி. சில சமயங் களில் முனுசாமிகூடச் சாதுர்யமாகப் பேசி விடுகிறாரே என்று அதிசயித்தார்.

''சாட்சியின் தோற்றம் தூண்டுவதாயிருந் தாலும் அதற்காகக் குற்றவாளியை மன்னிக்க முடியாது யுவர் ஆனர்'' என்றார் முனுசாமி அழுத்தமாக.

''நோ ... நோ ... நான் அந்த அர்த்தத் தில் சொல்லவில்லை. தோற்றமும் குற்றம் புரியத் தூண்டி யிருக்கலாம் என்றேன். அவ்வளவுதான்'' என்றார் நீதிபதி நாக சுந்தரம்.

''அவள் தோற்றம் குற்றத்துக்கு உடந்தை யாயிருந்தது என்று கூடச் சொல்லலாம்'' என்றார் ஆவுடையப்பபிள்ளை குறுக்கிட்டு. அவருடைய இதழ்களில் குறும்புத் தனமான புன்னகை தோன்றியது.

முனுசாமி திரும்பி ஆவுடையப்ப பிள்ளை யைப் பார்த்தார்.

''அப்படிக் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. யாரை உடந்தை என்று பழிக் கிறீர்களோ அவள்தான் இந்த வழக்கில் களவு கொடுத்தவள்'' என்று கோபமாகச் சொன்னார். அறைக்குள் சிரிப்பொலி எழுந் தது.

இரண்டு வழக்கறிஞர்கள் மோதிக் கொள்வதைப் பார்த்து ரசித்தார் நீதிபதி. பதில் சொல்ல ஆவுடையப்பபிள்ளைமுனைந்த போது நீதிபதி குறுக்கிட்டார். ஆவுடையப்ப பிள்ளையின் வாதத் திறமையையும், புத்தி கூர்மையையும், சொல்லாட்சியையும் நீதிபதி நன்கு அறிவார். அவரைத் தொடர்ந்து பேச அனுமதித்தால் முனிசாமியைப் பேச்சி லேயே நையப் புடைத்து வீழ்த்தி விடுவார் என்பதை உணர்ந்து ஆவுடையப்பபிள்ளை யைப் பார்த்துச் சிரித்தபடியே கையமர்த்திப் பேசவேண்டாம் என்று தடுத்தார். பிறகு முனுசாமியைப் பார்த்து, ''மிஸ்டர் முனுசாமி! உங்கள் கருத்தைப் புரிந்து கொண்டேன். தொடர்ந்து சாட்சியை விசா ரியுங்கள்'' என்றார். எந்த இடத்தில் வழக்கு விவரத்தை நிறுத்தினோம் என்பது முனு



''என்னப்பா! சிமெண்ட் கண்ட்ரோல் விலை ரூ. 13தானே! நீ, ரூ. 31 சொல்கிறாயே?''
''என்ன சார் செய்வது? சாம்பல் மூட்டை ரூ. 18 சொல்கிறானுகளே!''

சாமிக்கு மறந்து விட்டது. சற்று நேரம் விழித்துக் கொண்டு நின்றார். மூளை வேலை செய்ய மறுத்தது. முனுசாமியின் சங்கடத் தைப் புரிந்துகொண்டார் நீதிபதி. முனு சாமியின் அறிவில் சுறுசுறுப்புக் கிடையாது என்பது நீதிபதிக்கு நன்கு தெரியும். இந்தத் தொழிலுக்கு எவ்விதத்திலும் லாயக்கில்லாத முனுசாமி அரசியல் செல்வாக்கினால் இந்தப் பதவியைப் பெற்றார் என்பதையும் அறிவார். இந்தமாதிரி தகுதியற்றவர்களின் பேச்சை யெல்லாம் கேட்டுத் தொலைக்க வேண்டி யிருக்கிறதே என்று உள்ளூறப் பொருமிய வாறே, ''எஸ், ப்ரொஸீட்...'' என்றார்.

முனுசாமியின் சிந்தனை தொடர்பற்றுத் தவித்தது. நீதிபதி உதவினார்.

''இரவு எட்டு மணிக்கு மாட்டுக்கு வைக் கோல் போடுவதற்காகத் தொழுவத்துக்கு வந்தாள் என்றீர்கள் ... பிறகு?'' என்றார்.

''ஆ! ... எஸ் யுவர் ஆனர் ... அப் போது குற்றவாளி, சுவர் ஏறிக் குதித்து வேலம்மாளைப் பலாத்காரமாகக் கற்பழித்து விட்டான். உதவி கோரி வேலம்மாள் கூக் குரலிடவே, பக்கத்து வாய்க்காலில் குளித் துக் கொண்டிருந்த இருவர் ஓடி வந்து குற்றவாளியைப் பிடித்துக் கொண்டார்கள்.''

அரசாங்க வழக்கறிஞர் முனுசாமி சாட்சிக் கூண்டில் நின்ற வேலம்மாளை விசாரிக்கத் தொடங்கிய போதே அவள் அழத் தொடங்கி விட்டாள். அழுது கொண்டே பதில் சொன்ன தால் அவள் கூறிய வார்த்தைகள் தெளிவாக இல்லை.

''மிஸ்டர் முனுசாமி! சாட்சி அழாமல் பதில் சொன்னால், கொஞ்சம் தெளிவாகப் புரியும்'' என்றார் நீதிபதி.

''இந்தாம்மா, அழாமல் தைரியமாகக் கோர்ட்டாரைப் பார்த்துப் பதில் சொல்'' என்றார் முனுசாமி.

வேலம்மாள் சேலைத் தலைப்பால் கண்ணீ ரைத் துடைத்துக் கொண்டாள். சம்பத் வியப்போடு திரும்பி ஆவுடையப்பபிள்ளை யிடம், ''நன்றாக நடிக்கிறாளே. கண்ணீர் எப்படித்தான் வருகிறதோ!'' என்று மெது வாகச் சொன்னான். (தொடரும்)

உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு வைட்டமின்களும் தாதுப் பொருள்களும் இன்றியமையாதவை



அவை போதுமான அளவில் கிடைக்கின்றனவா?

வைட்டமின்கள் மற்றும் தாதுப்பொருள்களின் பற்றுக்குறை குடும்ப ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடும். சோர்வு, ஜல தோஷம், பசியின்மை, உடல் இளைத்தல், சரும மற்றும் பல் உபாதைகளுக்குக் காரணம் இவற்றின் பற்றுக்குறைதான்.

திட்டமிடப்பட்ட உணவில் கூட இக்குறை காணப்படுகிறது. அவ்வாறின்றி குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் தேவையான அளவில் இந்த இன்றியமையாத சத்துக்கள் கிடைக்க தினம் விம்க்ரான் கொடுங்கள்.

விம்க்ரானில் 11 முக்கிய வைட்டமின்களும் 8 தாதுப் பொருட்களும் அடங்கியுள்ளன. இரும்புச் சத்து—இரத்தப் பெருக்கத்திற்கும், சுறுசுறுப்பிற்கும், கால்ஷியம்—எலும்புகளையும், பற்களையும் உறுதியாக வைக்கவும், வைட்டமின் 'ஸி—ஜல தோஷத்தை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்கவும், வைட்டமின் ஏ—சிறந்த கண்பார்வைக்கும் ஆரோக்ய சருமத்திற்கும், வைட்டமின் பி12—பசியைத் தூண்டி, தாங்கும் சக்தியை அதிகரிக்கும் இவற்றுடன் இதர போஷாக்குச் சத்துக்களும் உள்ளன. இன்று முதல் தினம் உட்கொள்வீர்—விம்க்ரான்!

விம்க்ரான்®

பல்வேறு வைட்டமின்-தாதுச் சத்து மாத்திரைகள்
11 வைட்டமின்கள் + 8 தாதுப் பொருட்கள்



SQUIBB®
SARABHAI CHEMICALS PVT. LTD.

® இ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். எஸ்.ஸி.பி.எல். இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது

Shilpi-HPMA 2A/74 Tam

திருடர்கள்



• ர. சு. நல்லபெருமாள் •

3. நீதிமன்றத்தில் நாடகம்!

சாட்சிக் கூண்டில் நின்ற வேலம்மாளின் அழுகையைப் பற்றி ஜூனியர் சம்பத் 'நடிப்பு' என்றானல்லவா? அதைக் குறித்து "ஜட்ஜிடம் அனுதாபத்தைப் பெற வழி" என்று முணுமுணுத்தார் ஆவுடையப்ப பிள்ளை.

வேலம்மாளைப் பார்த்து முனுசாமி கேட்டார்: "ஆண்கள் துணை உனக்கு உண்டா?"

"கிடையாது. நானும் என் அம்மாவும் தாம்" என்றாள் வேலம்மாள்.

"வீட்டுக்காரர்....?"

"மலேயாவில் வியாபாரம் செய்யறாங்க."

"கூண்டில் நிற்கிறானே குற்றவாளி குருசாமி, அவனை உனக்குத் தெரியுமா?"

"பக்கத்து வீட்டுக்காரன்."

"என்ன தொழில் பார்க்கிறான்?"

"சும்மாதான் இருக்கிறான். ஒரு வேலையும் கிடையாது."

"இவனுடைய அப்பா என்ன செய்கிறார்?"

இந்தக் கேள்வியை முனுசாமி கேட்டதும் ஆவுடையப்ப பிள்ளை ஆட்சேபித்தார்.

"யுவர் ஆனர்! இந்தக் கேள்வி அனாவசியமானது. இந்த வழக்குக்குச் சம்பந்தமில்லாதது, தேவை யில்லாதது" என்றார்.

"நோ யுவர் ஆனர் ... இவனுடைய தந்தையின் செல்வாக்கு இவனுக்கு இந்த மாதிரி குற்றம் புரியத் தைரியமளித்தது என்பதைக் காட்டத்தான்" என்றார் முனுசாமி.

"யுவர் ஆனர்! நான் இதைப் பலமாக ஆட்சேபிக்கிறேன். குற்றம் புரிந்தவனுடைய தந்தையைப் பற்றியும் அவருடைய தொழிலைப் பற்றியும் இங்கு பேசப்படுவது பொருத்தமற்றது. இந்த வழக்குக்கும், குற்றவாளியின் தந்தைக்கும் சம்பந்தமே இல்லை" என்று ஆட்சேபித்தார் ஆவுடையப்ப பிள்ளை.

"யுவர் ஆனர்! குற்றவாளி வேலையற்றுத் திரிபவன். இவனுக்கு இப்படி ஒரு குற்றத்தைப் புரியும் தைரியமும், தெம்பும் வர ஏதாவதொரு பக்கபலம் இருந்துதானே ஆக வேண்டும்" என்றார் முனுசாமி.

"ஓ, என் நண்பர், இந்தக் குற்றத்துக்குக் காரணமே குற்றவாளியின் தந்தைதான் என்று வாதிப்பார் போலிருக்கிறதே!" என்று கோபமாகச் சொன்னார், ஆவுடையப்ப பிள்ளை.

"வேலை இல்லாமல் இருக்கிறான் என்ற காரணமே குற்றம் புரியத் தூண்டப் போதுமானதாயிற்றே" என்றார் நீதிபதி.

"இருந்தாலும், குற்றவாளிக்கு இவ்வளவு பெரிய குற்றத்தைப் புரியத் தைரியம் கொடுத்தது சூழ்நிலைதான், யுவர் ஆனர்" என்றார் முனுசாமி.

"என்ன சூழ்நிலை...? பக்கத்து வீட்டில் முதலாவது சாட்சி குடியிருப்பதா?" என்று நீதிபதி கேட்டதும், எல்லாரும் சிரித்தார்கள்.

"நோ யுவர் ஆனர், குற்றவாளியின் தந்தையின் செல்வாக்கு" என்று முனுசாமி கூறியதும் ஆவுடையப்பபிள்ளை பலத்த குரலில் ஆக்ஷேபித்தார்.

"என்னுடைய வாதம் என்னவென்றால், இந்த வழக்கே அரசியல் காரணத்தால் ஏற்பட்டதுதான். அரசியலில் புகழும் செல்வாக்கும் பெற்றுள்ள நேர்மையாளர் ஒருவருடைய பெயரை இங்கே இழுத்து மாசுபடுத்துவதை நான் பலமாக ஆக்ஷேபிக்கிறேன்."

"மகனுடைய செயலால் ஏற்படாத அவமானம் வழக்கினால் ஏற்பட்டு விடப் போகிறதா?" என்றார் முனுசாமி.

"மகன் குற்றவாளியா, இல்லையா என்பதே இன்னும் நிரூபணமாகவில்லையே?" என்றார் ஆவுடையப்பபிள்ளை, அழுத்தமாக.

"மிஸ்டர் ஆவுடையப்பபிள்ளை! உங்களுடைய ஆக்ஷேபணையை ஏற்றுக் கொண்டேன்" என்று கூறிவிட்டு முனுசாமியைப் பார்த்து மேற்கொண்டு கேள்வி கேட்கப் பணித்தார், நீதிபதி நாகசுந்தரம்.

வக்கீல் கருணாகரன் பொருமினார். நீதிமன்றத்தில் குற்றவாளியின் தந்தையான ரகுபதி நாயுடுவின் பெயரைக் குறிப்பிட்டுப் பல கேள்விகளை கேட்டு அவருடைய மானத்தை வாங்க வேண்டுமென்று போட்டிருந்த அவருடைய திட்டம் நிறைவேறவில்லை. கருணாகரனுக்கு நீதிபதியின் மீது கோபம் எழுந்தது.

"நம்முடைய வக்கீலைக் கேள்வி கேட்கவிட மாட்டார் போலிருக்கிறதே" என்று போலீஸ் இன்ஸ்பெக்டர், மெதுவாகக் கருணாகரனிடம் சொன்னார்.

"இந்த மாதிரி ஆசாமிகளெல்லாம் ஜட்ஜாக வந்தால் இப்படித்தான்" என்றார் கருணாகரன், எரிச்சலுடன்.

"ரகுபதி நாயுடுவைப் பற்றி ஒரு கேள்வி கூடக் கேட்க ஜட்ஜ் அனுமதிக்கவில்லையே?"

"வக்கீல்களை அவர்கள் போக்கில் வழக்கு நடத்த இவர் அனுமதிப்பதே யில்லை.. ரொம்ப மோசம்!"

"இவர் மீது உங்கள் வக்கீல் சங்கத்தில் கண்டனத் தீர்மானம் போடப் போவதாகப் பேச்சு இருந்ததே?"

"நாளைக்குப் போடப் போகிறோம். தீர்மானத்தை ஹைகோர்ட்டுக்கும் அனுப்பப் போகிறோம். அப்போதுதான் இந்த ஜட்ஜ் நம்மைப் புரிந்து கொள்ளப் போகிறார்!"



இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்த போது. நீதிமன்ற அறைக்குள் சலசலப்புத் தோன்றவே, அதைக் கவனிக்கத் தொடங்கினுர்கள்.

சாட்சிக் கூண்டில் வேலம்மாள் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

''ம் ... சொல்லு ... அழாமல் சொல்லு'' என்ருர் முனுசாமி.

''வேலம்மாளின் அழுகை அதிகரித்தது.

''அப்புறம் ...? நீ தோட்டத்துக்கு வந்தாய். இவன் மண் சுவருக்கு மறுபக்கம் இருந்து எட்டிப் பார்த்தான். பிறகு ... பிறகு ...?'' தொடர்ந்து சொல்லும்படி முனுசாமி தூண்டினுர். வேலம்மாள், ''சுவர் ஏறிக் குதித்து வந்து..'' என்று கூறி விட்டுக் குலுங்கக் குலுங்க அழத் தொடங்கிவிட்டாள்.

நீதிபதிக்கு எரிச்சலும் கோபமும் தோன்றின. வேண்டுமென்றே அழுது ஒரு துயரச் சூழ்நிலையை உருவாக்குகிருள் என்று நினைத்துப் பொறுமையை இழந்தார்.

''இந்தாம்மா..... இப்படி அழுதால் ஒன்றும் நடக்காது. நடந்ததைத் தெளிவாகச் சொல்லு. இல்லையென்ருல், கொஞ்ச நேரம் அழுது முடித்து விட்டுப் பிறகு சொல்லு'' என்ருர் நீதிபதி. அவருடைய குரலில் தொனித்த கோபத்தைப் புரிந்து கொண்ட வேலம்மாள், பரபரப்புடன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''என்ன சார், ஒரேயடியாக அழுகிருளே!'' என்ருர், முனுசாமி, இரகசியமாகக் கருணுகரனைப் பார்த்து.

''இலேசாக அழச் சொன்னேன். கேள்வி கேட்கும்போது பற்களைக் காட்டிக் கொண்டு நிற்காதே, கவலையோடு இருப்பதுபோலிரு, கொஞ்சம் அழுது கொள் என்று சொல்லி வைத்தேன். இவள் ஒவ்வொரு கேள்விக்கும் அழுது தொலைக்கிருள்'' என்ருர் கருணுகரன்.

''அப்புறம் சொல்லு...'' என்று வேலம்மாளைத் துரிதப்படுத்தினுர், நீதிபதி.

''சுவர் ஏறிக் குதித்து வந்து, என்னைக் கெடுத்து விட்டான்'' என்று கூறி முகத்தை மூடிக் கொண்டாள், வேலம்மாள். அவள் அழுகிருளா அல்லது வெட்கத்தினுல் முகத்தை மூடியிருக்கிருளா என்பது தெரியவில்லை.

''விவரமாகச் சொல்லு ... கெடுத்தான் என்ருல் எப்படி...?'' முனுசாமி கேட்டார். முகத்திலிருந்து கையை எடுத்து விட்டுக் குழப்பத்துடன் முனுசாமியைப் பார்த்தாள் வேலம்மாள். என்ன பதில் சொல்வது என்று புரியாமல் திகைத்தபடி நின்ருள்.

நீதிபதி குறுக்கிட்டு, ''சரி, சரி அவள்தான் சொல்லி விட்டாளே. இதற்கு மேல் விவரிக்க வேண்டுமா?'' என்ருர் சிரித்துக்கொண்டே.

முனுசாமி விடவில்லை. கேள்வி கேட்டார்: ''இந்தாம்மா, கெடுத்து விட்டான் என்று மட்டும் சொன்னுல் போதாது. எந்தப் பக்கமாக வந்தான்? உன்னேடு பேசினுனு? முதலில் எப்படி முயற்சி செய்தான்?''

இந்தச் சமயத்தில் ஆவுடையப்ப பிள்ளை எழுந்திருந்தார்.

''யுவர் ஆனர்! நண்பர் சாட்சியைப் பயமுறுத்துவது மாதிரி இருக்கிறது. அவள் கூறி முடித்து விட்டாள். மீண்டும் மீண்டும் விவரம் கேட்க வேண்டிய அவசியமில்லை'' என்ருர்.

''விவரம் தேவை, யுவர் ஆனர்!'' என்று கூறி விட்டு வேலம்மாளைப் பார்த்து, ''இந் தாம்மா! குருசாமி, சுவர் ஏறிக் குதித்து வந்தான்... வந்தவன் கடைசி வரை நின்று கொண்டேவா இருந்தான் ...?'' என்று எரிச்சலோடு கேட்டுவிட்டு முறைத் துப் பார்த்தார் முனுசாமி. வேலம்மாள், சற்று யோசித்தாள். பிறகு ''இல்லீங்க, என் னைப் பிடித்துக் கீழே தள்ளினன்'' என்ருள்.

''ஆ ... அதைச் சொல்லு ... கீழே என்ருல் எங்கே?'' என்று கேட்டார் முனுசாமி, உற்சாகத்துடன்.

''நான் இதை ஆட்சேபிக்கிறேன் யுவர் ஆனர். கீழே தள்ளியதாகக் கூறிய பிறகு கேள்வியைத் தொடர்வது சாட்சியை 'லீட்' பண்ணுவதாகும்'' என்ருர் ஆவுடையப்ப பிள்ளை.

''கீழே என்ருல் எங்கே என்று தெரிய வேண்டாமா? கீழே கட்டாந்தரையிலா இல்லையென்ருல், கட்டிலிலா, மெத்தை யிலா?'' என்று தமிழில் முனுசாமி கேட் டார்.

''தொழுவத்தில் ஏது சார் கட்டிலும் மெத்தையும்?'' என்று தமிழிலேயே கேட்டார் நீதிபதி.

முனுசாமி சொன்னதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட வேலம்மாள், ''வைக் கோல் பரப்பு மீது தள்ளினன்'' என்று படபடப்புடன் கூறினள்.

ஆவுடையப்ப பிள்ள பலத்த குரலில் ஆக்ஷேபித்தார்.

''இந்தக் கேள்வியையும், பதிலையும் நான் ஆக்ஷேபிக்கிறேன் யுவர் ஆனர்! இந்தப் பதிலைக்கீழ்கோர்ட்டில் இவள் சொல்ல வில்லை'' என்ருர்.

''கீழ்க் கோர்ட்டில் விட்டுப்போயிருக்கும். அதைப் பற்றிக் கீழ்கோர்ட்டில் கேட்டிருக்க மாட்டார்கள், இவளும் பதில் சொல்லி யிருக்க மாட்டாள்'' என்ருர் முனுசாமி.

''நோ ... நோ... இந்த வைக்கோல் போர்க் கதை, இப்போது உண்டாக்கப் பட்டது, யுவர் ஆனர்! என்னுடைய ஆக்ஷேபணையை நீங்கள் ஏற்றுக் கொள்ள வில்லையென்ருல், என்னுடைய ஆக்ஷேபணை என்ன என்பதை நீங்கள் குறித்துக் கொள்ள வேண்டும்'' என்ருர் ஆவுடையப்பபிள்ளை. நீதிபதி, தலையை அசைத்து ''ஆக்ஷேபணை யைக் குறித்துக் கொண்டேன்'' என்ருர்.

ஆவுடையப்பபிள்ளை, அமைதியாக உட் கார்ந்தார்.

''வைக்கோல் போர் விஷயம் புதிதாயிருக் கிறதே''என்று கேட்டான், ஜூனியர் சம்பத்.

''டாக்டரின் பரிசோதனையில் அவளுடைய உடம்பில் வேறு காயங்கள் ஏதும் இல்லை என்றிருக்கிறது. தரையில் தள்ளிப் பலாத் காரம் செய்திருந்தால், முதுகுப் பக்கத்தில் சிராய்ப்பாவது இருக்க வேண்டும். அதற் காகத்தான் வைக்கோல் போர் மீது தள்ளி ஞன் என்று கூறப்படுகிறது'' என்ருர் ஆவுடையப்பபிள்ளை.

''சார்! உண்மையிலேயே வைக்கோல் போர் அவள் வீட்டில் இருக்கிறதா? மாடு வளர்ப்பதாகத் தெரியவில்லையே?'' என்று இரகசியமாகக் கேட்டான், ஜூனியர் சம்பத்.

''பொறு ... நான் குறுக்கு விசாரணை செய்யும் போது பார்த்துக் கொள்ளலாம்'' என்ருர் பிள்ளை.

4. வாழ்க்கை லட்சியம்

சம்பத்தும் நளினியும் சாப்பிடுவதற்காக ஆவுடையப்ப பிள்ளையின் அலுவலகத்துக்குச் சென்ருர்கள். நீதிமன்றத்துக்குப் பக்கத்துத் தெருவில் ஆவுடையப்ப பிள்ளையின் அலு வலகம் இருந்தது. தினமும் மத்தியானம் நளினிக்கு அவளுடைய வீட்டிலிருந்து சாப் பாடு வந்துவிடும். சம்பத், கான்டீனில் சாப் பிட்டுக் கொள்வது வழக்கம். சில நாட்களில் நளினி அவனைத் தன்னேடு சாப்பிடக் கூப் பிடுவாள். தினமும் அவள் சாப்பிடக் கூப் பிட்டால் நன்ருக இருக்குமே என்று ஏங்கு வான் சம்பத். அவளோடு சேர்ந்து சாப் பிடுவதில் உள்ள இனிமையை ரசிப்பது மட்டு மல்ல, அன்று அவன் கான்டீனுக்குச் செல வழிக்கவும் வேண்டியிருக்காது!

எத்தனையோ முறைகள் இருவரும் ஹோட் டலுக்குச் சென்று விருந்துண்டிருக்கிருர்கள். அப்போதெல்லாம் சாப்பாட்டுக்கான பணத் தைத் தானே கொடுப்பதாகச் சொல்லி, பர்ஸைப் பையிலிருந்து எடுப்பான், சம்பத். அது ஒரு நடிப்புத்தான். அவனுடைய பர் ஸில் கூடிப்போனல் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய்க்கு மேல் ஒருநாளும் இருக் காது. ஹோட்டல் பில்லோ நான்கு ரூபாய்க்கு மேல் ஆகியிருக்கும். அவனே கொடுக்கட்டும் என்று நளினி சும்மா இருந்து விட்டால், அவனுடைய மானம் போய்விடும். ஆனல்





இன்றுவரையில் அப்படி ஓர் இக்கட்டான நிலைக்கு அவனை அவள் ஆளாக்கவில்லை. அவளே முந்திக் கொண்டு பில்லுக்குப் பணத்தைக் கொடுத்து விடுவாள்.

''ஒரு நாள் கூட என்னைக் கொடுக்க விடமாட்டாய் போலிருக்கிறதே!'' என்று அங்கலாய்ப்பான்.

''அதனால் என்ன? தினமுமா இப்படிச் சேர்ந்து சாப்பிடுகிறோம்?'' என்பாள் நளினி.

நளினியின் தந்தை கஜேந்திரா மில்லின் அதிபர். அவருக்கு இரண்டே புத்திரிகள். நளினி இளையவள். வேறு ஆண் வாரிசு கிடையாது. ஒரு பெரிய பணக்காரரின் மகளோடு பழகும் வாய்ப்புக் கிடைத்ததை எண்ணிச் சம்பத் பெருமைப்பட்டுக் கொண்டான். அவனுக்கு அப்படி ஒரு வாய்ப்புக் கிடைத்ததில் மற்றப் பிரம்மச்சாரிவக்கீல்களுக்குப் பொறாமையும் கூட. அவர்கள் இருவரையும் காதலர்கள் என்றுகூட மற்றவர்கள் பேசத் தொடங்கி விட்டார்கள். அந்தப் பேச்சு, சம்பத்துக்கு உற்சாகத்தையும் தெம்பையும் அளித்தன. அவனுக்கு அவளைக் காதலிப்பதில் ஆக்ஷேபணை ஒன்றும் இல்லை. சிரித்துப் பேசுகிறாள், அவனுக்காக ஹோட்டல் பில்லுக்குப் பணம் கொடுக்கிறாள். நெருக்கமாகவே பழகுகிறாள். ஆனால் காதலுக்கு இவை மட்டும் போதுமா? சில சமயங்களில் இரவில் ஒன்பது மணி வரையில் கூட ஆவுடையப்ப பிள்ளையின் அலுவலகத்தில் இருவரும் வழக்கு விஷயமாகச் சேர்ந்து படிக்கவும் எழுதவும் நேரும்போது, அவனுக்கு உடலில் பரபரப்புத் தோன்றும். பார்வையில் ஒருவிதக் கிறக்கம் தோன்ற அவளைப் பார்ப்பான். அவளோ படிப்பிலேயே கவனமாக இருந்தாளே தவிர, அவனுடைய தவிப்பையோ, பார்வையின் அர்த்தத்தையோ, புரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளவே இல்லை. சில வேளைகளில் இருவரும் அருகருகே அமர்ந்திருந்தபோது ஏற்பட்ட ஸ்பரிசத்தைக்கூட அவள் இலட்சியம் செய்யவில்லை.

சம்பத் இரண்டு ஆண்டுகளாக ஆவுடையப்ப பிள்ளையிடம் ஜூனியராகப் பணியாற்றுகிறான். நளினி ஜூனியராகச் சேர்ந்து ஆறு மாதங்கள் இருக்கும். முதலில் நளினியைப் பற்றி அவன் அதிகமாக அக்கறை காட்டவில்லை. அவன் அக்கறை காட்டுமளவுக்கு அவளிடம் அபரிதமான அழகோ, கவர்ச்சியோ இல்லை. கறுப்பு நிறம். ஆனால் கட்டு உடல். உடை உடுத்தும் பாணியில்தான் கவர்ச்சியாகவும் நாகரிகமாகவும் தோற்றமளித்தாள். முதலில் அவளிடம் அலட்சியமாக இருந்த சம்பத், ஒருசில நாட்களில் அவள்மீது அக்கறை காட்டத் தொடங்கினான். அவன் அவள்மீது அக்கறை கொள்ள—காதலிக்கக் கூட — அவளைவிட அவளுடைய பணம் மிகவும் தூண்டியது.

சம்பத் கவர்ச்சியுடைய ஆணழகன். அவனை எவளும் இலகுவில் காதலித்து விடுவாள். அவனுடைய கலகலப்பான பேச்சும், கவர்ச்சியான உருவமும், போதை ஊட்டும் பார்வையும் அவனோடு படித்த பல மாணவிகளைக் கவர்ந்ததில் வியப்பில்லை. பலர் சட்டக் கல்லூரியில் அவனிடம் வலிய வந்து நட்புக் கொள்ள முயன்றபோது, அந்தச் சந்தர்ப்பங்களை அவன் நழுவ விட்டதே யில்லை. அவனிடம் போற்ற வேண்டியது என்னவென்றால், எவளோடு பழக நேர்ந்தாலும் தன்னுடைய பணத்துக்கு மட்டும் நஷ்டம் வராமல் காத்துக் கொள்ளும் திறமையைத்தான். கேவலம் இந்த நட்புக்காகப் பணத்தை இழக்க அவன் மனம் இடம் கொடுத்ததே யில்லை. எத்தனையோ சிநேகிதிகளிடம் கடனாகப் பணம் வாங்கி யிருக்கிறான். திருப்பிக் கொடுத்துவிடப் போவதாக அடிக்கடி பயமுறுத்தியிருக்கிறான். அவன் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடக் கூடாதே என்றுதான்அவனுடைய சிநேகிதிகள் பதறினார்கள். சட்டக் கல்லூரியை விட்டு அவன் ஊர் திரும்பியவுடன், சிநேகிதிகளையும் மறந்து விட்டான். அவர்களுடைய தொடர்பை என்றும் நீடித்துக் கொண்டிருக்கும் அளவுக்கு அவன் வசதி படைத்தவனுமல்ல, முட்டாளும் அல்ல. பாவம், அவனுடைய திருட்டுத்தனத்தைப் புரிந்துகொள்ளாத சில சிநேகிதிகள், இன்னும் அவனை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். வலியக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பொழுது போக்காகப் பயன்படுத்திக் கொண்டானே தவிர, எந்தப் பெண்ணையும் அவன் காதலித்ததும் இல்லை, பெண் மோகம் கொண்டு திரிந்ததும் இல்லை.

வாழ்க்கையில் அவனுடைய ஒரே குறிக்கோள், எவ்விதத்திலாவது பெரிய பணக்காரனாகி, காரும் பங்களாவுமாகப் பகட்டுடன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதுதான். ஆனால் அது எப்படி என்பதுதான் தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.

நடுத்தர வகுப்புக் குடும்பத்தில் ஐந்தாவது பிள்ளையாகப் பிறந்த சம்பத், எவ்வளவோ சங்கடங்களுக்கும் வறுமைக்கும் இடையே சட்டம் படித்து முடித்தான். சட்டத் தொழிலில் வாரி வாரிப் பணத்தை அள்ளலாம் என்றுதான் நினைத்திருந்தான். ஆனால் ஆவுடையப்ப பிள்ளையிடம் ஜூனியராக நீதிமன்றத்துக்குப் போகத் தொடங்கியதும் தன்னுடைய தவற்றை உணர்ந்தான். அவனைப் போன்ற எத்தனையோ இளம் வழக்கறிஞர்கள் ஒரு ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்க்கும் நோட்டீஸ் எழுதியதையும் இதுகூடக் கிடைக்காமல் ஒரு நேர வடைக்கும் காப்பிக்கும் கூட 'பெயில்' எடுக்க ஆஜர் ஆனதையும் கண்டபோது அதிர்ந்து விட்டான். நீதிமன்றத்தைச் சுற்றியிருந்த மாமரங்களின் நிழல்களில் சில ஏழை வழக்கறிஞர்கள் கடலை மிட்டாயைத் தின்று தண்ணீர் குடித்து வயிற்றை நிரப்பும் பரிதாபத்தைப் பார்த்தபோது தன்னுடைய நிலையும் அப்படி ஆகிவிடுமோ என்ற பயத்தில் உடல் நடுங்கினான்.

ஆவுடையப்ப பிள்ளை, அவனுக்கு மாதம் நானூறு ரூபாய்க்குக் குறையாமல் வரும்படி கிடைக்கும்படியாகப் பார்த்துக் கொண்டார். ஆரம்பத்தில் இருநூறு ரூபாய்தான் கிடைத்தது. இப்போது ஒரு வருஷமாக நானூறுக்குக் குறையாமல் கிடைக்கிறது. கேவலம் இந்த நானூறு ரூபாயா சம்பத்துடைய லட்சியம்? ஆனால் இந்த அளவுகூட வரும்படி இல்லாத

வக்கீல்களைப் பார்த்தபோது ஓரளவு மனச் சாந்தி கிட்டியது. ஆவுடையப்ப பிள்ளை மாதிரி மாதம் நாலாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் வரும்படி வரக்கூடிய அளவுக்குத் தனக்கு யோகம் வராவிட்டாலும், குறைந்தது ஆயிரம் ரூபாயாவது சம்பாத்தியம் செய்யவில்லை யென்றால், இந்த வக்கீல் தொழிலுக்குத்தான் என்ன மதிப்பு என்று எண்ணிக் கொண்டான். சில மாதங்களில் சம்பத்துக்கு ஐந்நூறு ரூபாய்கூடக்கிடைக்கும். அதெல்லாம் அவனைத் திருப்திப்படுத்தப் போதாது.

இந்தச் சமயத்தில்தான் நளினி ஆவுடையப்ப பிள்ளையிடம் ஜூனியராகச் சேர்ந்தாள். அவளுடைய கறுப்பு நிறத்தை கண்டதும், சம்பத் முகத்தைச் சுளித்தான். ஆனால் அவள் சிரிக்கும்போது கொஞ்சம் கவர்ச்சியாக இருப்பது போலத் தோன்றியது. ஆரம்பத்தில் அலட்சியமாக இருந்தவன், அவள் காரில் வந்து இறங்கியதையும், பர்ஸில் எப்போதும் நிறையப் பணம் வைத்திருந்ததையும் காண நேரிட்டபோது, அவள்மீது அக்கறை காட்டத் தொடங்கினான். அவள் ஒரு தொழிலதிபரின் மகள் என்பதை அறிந்தபிறகு மிகுந்த அக்கறையோடு வழக்குமன்ற நடைமுறைகளையும், சட்ட நுணுக்கங்களையும் அவளுக்குக் கற்றுக் கொடுத்தான்.

அவள் நீதிமன்றத்துக்கு வருவது வெறும் பொழுதுபோக்குக்குத்தான். ஆனால் சம்பத்துக்கு அது வாழ்க்கைப் பிரச்னை.

அல்லும் பகலும் பாடுபட்டும் மாதம் நானூறு ரூபாய்க்கு மேல் வரும்படி வரவில்லையே என்று தவித்துக் கொண்டிருந்த சம்பத்தின் மனத்தில் பளிச்சென்று ஓர் எண்ணம் உதித்தது. ஒரே நாளில் திடீரென்று பணக்காரனாகிவிடும் திட்டம் அவனுள் உருவாகியது. கார், பங்களா, படாடோப வாழ்க்கை எல்லாமே கிடைத்துவிடும். கேவலம் கொலைகாரனும் திருடனும் கொடுக்கும் பணத்தைக் கொண்டுதான் வாழ வேண்டும் என்னும் நிர்ப்பந்தம் இருக்காது. காரில் போய் நீதிமன்றத்தில் இறங்கும் போது மற்ற வக்கீல்கள் பொறாமையால் விழி பிதுங்கத் தன்னை எப்படிப் பார்ப்பார்கள் என்பதைக் கற்பனை செய்தபோது, அவன் மனம் ஆனந்தத்தால் துள்ளியது. ஆனால் தன்னுடைய திட்டம் நிறைவேறுமா என்ற சந்தேகம் மனத்தை அரித்துக் கொண்டிருந்தது. நளினியை மணந்து கொள்வது என்பதுதான் அவனுடைய திட்டம். ஆனால் அவள் சம்மதிப்பாளா? ஜாதியைப் பொறுத்த வரையில் எந்தத் தடையும் இல்லை. ஆனால் அந்தஸ்து....!

தனக்குள்ள தகுதிகளைப் பற்றி எண்ணிப் பார்த்தான். — நல்ல அழகு இருக்கிறது. பிறகு....பிறகு...? வேறென்ன இருக்கிறது? இதற்கு மேல் தனக்கு என்ன தகுதி இருக்கிறது என்பதைப் பற்றி எண்ணி எண்ணிப் பார்த்தான். ஒன்றும் புலப்படவில்லை. வருமானம்? சே, மாதம் நானூறு ரூபாய்! இதைக் கேட்டாலே ஒருவனும் பெண் தரமாட்டான். ஆவுடையப்ப பிள்ளையின் ஜூனியராக இருப்பதே ஒரு தகுதிதான். ஆனால் இதனால் அவனுடைய தொழில் தரம் உயர்ந்து, வரு



மறதி மன்னர்கள்!

சர் வால்டர் ஸ்காட்டுக்குக் கொஞ்சங்கூட ஞாபக சக்தியே கிடையாதாம். கவி பைரன் எழுதினார் என்று நினைத்துக்கொண்டு, சில கவிதைகளை அவர் மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறாராம் - அவைகளை இயற்றியது தாமேதான் என்பதை மறந்தவராக!

டாக்டர் ஆடம் ஸ்மித் ஒரு தடவை டீ போட்டுக் கொண்டிருந்தார். இரு ரொட்டித் துண்டுகளையெடுத்து மறந்து போய்த் தேநீர்ப் பாத்திரத்துக்குள் போட்டுக் கொதிக்க வைத்துக் குவளையில் ஊற்றி அருந்தினார். தம்மோடு இருந்தவர்களை நோக்கி, "வாழ்க்கையிலேயே இவ்வளவு மோசமான டீ நான் அருந்தியதேயில்லை!" என்று சொன்னார். பாவம்! அவர் டீ போடுவதற்குப் பதிலாக ரொட்டித் துண்டுகளை வேக வைத்துக் குடித்திருக்கிறார் என்பது அவர்கள் சொன்னபிறகுதான் அவருக்குத் தெரியுமாம்!

புகழ்பெற்ற திரைப்பட இயக்குநர் சர் கேரல் ரீட் ஒருமுறை ஆழமான நீருக்குள் இறங்கி ஒரு படத்தை இயக்கிக்கொண்டிருந்தார். அவர் உதவியாளர் கத்தினார்: "ஐயோ...உங்கள் வாட்ச் நனைகிறது!" அவர் உடனே, "ரொம்ப நன்றி" என்றவராக, அதைக் கழற்றி ஏற்கெனவே தொப்பலாய் நனைந்திருந்த பாக்கெட்டுக்குள் 'பத்திரமாக' வைத்துக்கொண்டார்!

- நன்றி: 'மிரர்' - உதகை நா. மனோகரன்

[நீங்கள் ஒரு ஞாபகமறதிக்காரரா? ஞாபக மறதியாக நீங்கள் செய்த ஒரு சிரிப்புக்குரிய காரியத்தை எழுதி அனுப்புங்களேன்! எல்லாரும் படித்து ரசிக்கலாம்! **ஆ-ர்.**]

மானம் அதிகரிப்பதற்குள் கிழவனாகிவிடுவானே?

தன்னுடைய தகுதி இன்மையை எண்ணித் தன்மீதே கோபம் கொண்டான்.

பணத்தின் மீது அவன் எவ்வளவு தூரம் அக்கறையும் வெறியும் கொண்டிருந்தான் என்பதை ஆவுடையப்ப பிள்ளை ஒரு நாள் உணர்ந்தபோது திகைத்தார்.

ஒரு நாள் வழக்கு விஷயமாக ஆவுடையப்ப பிள்ளையைத் தேடி ஒருவன் வந்தான். கஞ்சா வைத்திருந்ததாக அவனுடைய தம்பியைப் போலீஸார் பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள் என்றும், அவனை பெயிலில் வெளியே விட ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கூறினான். அது எளிய காரியமாதலால் அவனைச் சம்பத்திடம் அனுப்பினார்.

சம்பத், வழக்கு விவரம் முழுவதையும் கேட்டுக் கொண்டு, 'பெயில்' விண்ணப்பம் ஒன்றும் எழுதி முடித்தான். வந்தவன் சம்பத்திடம் பத்து ரூபாய் நோட்டை நீட்டினான். அதைக் கண்டதும் சம்பத்தின் கண்கள் கோபத்தால் சிவந்தன.

"என்ன...?"

"சாமி, நீங்கதான் தயவு பண்ணணும். இப்போது பத்து ரூபாய் வச்சுக்குங்க. பிறகு ஐந்து ரூபாய் தருகிறேன்" என்றான்.

ஒரு ஜோக்!

உலகப் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க இந்தியா யோசனை கூறியிருக்கிறது.

-ரேடியோ தலைப்புச் செய்தி (6-7-74)


தவளை தரும் உதவி!



"யானை குழியில் விழும்போது தவளைகூடப் பின்னாலிருந்து உதை ஓர் கொடுக்கும்!"

- வங்காளப் பழமொழி

சத்தியத்துக்குப் பெயர்போன அசோக சக்கரம் ரூபாய் நோட்டில் இருக்கிறது. ஆனால் 30 பைசா மதிப்புள்ள அந்த நோட்டை எதற்கு அசத்தியமாக ஒரு ரூபாய் என்று சொல்ல வேண்டும்? - லயன்



இந்தியா அணுவெடிச் சோதனை நடத்தியதற்கு 'திவானு' பத்திரிகை போட்டிருந்த கார்ட்டூன்! -பாபு

"பத்துக்கும் ஐந்துக்கும் இங்கே பெயில் எடுக்கிற வழக்கமில்லை" என்றான் சம்பத், எரிச்சலுடன்.

"இதற்கு முன்னே ஒரு பெயிலுக்கு மேலத் தெரு வக்கீலுக்குப் பத்து ரூபாய் தான் கொடுத்தேன்..."

இதைக் கேட்டதும் சம்பத், எழுதியிருந்த விண்ணப்பத்தாளைச் சுக்குநூறாகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டான்.

"இந்தாய்யா, கோர்ட்டுப்பக்கம் போனால் மாமரத்தடியிலே கடலை மிட்டாய் தின்று கொண்டு எவனாவது ஒரு வக்கீல் நிற்பான். அவனைப் போய்ப் பிடி. இரண்டு ரூபாய்க்குக் கூட பெயில் எடுக்க வருவான் போய்யா... போ!" என்று விரட்டினான்.

அந்த ஆசாமி அதிர்ந்து விட்டான். முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டே வெளியேறினான்.

"பெயில் எடுக்க வந்து விட்டான். பெயில் எடுக்க ஐம்பது ரூபாய்கூடக் கொடுக்க வக்கில்லை என்றால், ஏன் கஞ்சா வியாபாரம் பண்ணுகிறார்கள்?" — இரைந்தான் சம்பத்.

இவ்வளவையும் கேட்டுக் கொண்டு உள் பக்கத்து அறையில் அமர்ந்திருந்த ஆவுடையப்ப பிள்ளை, எழுந்து வெளியே வந்தார்.

"என்ன சம்பத், ஆளைவிரட்டி விட்டாய்?" என்றார்.

"பின்னே என்ன ஸார்; இந்த ஆபீஸுக்கு வந்துவிட்டுப் பத்து ரூபாயை நீட்டுகிறான்" என்றான் சம்பத், கோபத்துடன்.

"பாவம், பணம் இல்லையோ, என்னவோ?"

"அதற்கு நாமா பழி?"

"வந்த கட்சிக்காரனை விட்டுவிடக் கூடா தப்பா. நீ இளம் வயசு. தொழிலுக்குப் புதிது."

"சார்! நமக்கும் தரம் உண்டு. நம்முடைய ஆபீஸில் பத்து ரூபாய்க்கும் பெயில் எடுக்கப் போவோம் என்று வெளியே தெரிந்தால் நமக்குத்தானே கேவலம்?"

"அது சரி, அதற்காக மாமரத்தடியில் கடலை மிட்டாய் தின்கிறவர்களை ஏன் வம்புக்கு இழுக்கிறாய்?" என்று விசனத்துடன் கேட்டுச் சிரித்தார்.

"அந்த மாதிரிச் சிலர் இருக்கப் போய்த் தான் இந்தத் தொழிலே இவ்வளவு சீரழிந்து விட்டது" என்றான் சம்பத் படபடப்புடன்.

"பாவம், அவர்களுடைய அதிர்ஷ்டம் அப்படி" என்றார் ஆவுடையப்ப பிள்ளை அனுதாபத்துடன்.

"இப்படி ஐந்தும், பத்தும் வாங்கினால், என்றைக்கு சார், சம்பாத்தியம் பண்ணுவது; வக்கீல் தொழிலை நடத்தி ஐந்து ஆண்டுகளுக்குள் ஒரு கார் வாங்கும் தகுதி இல்லை என்றால், இது தொழிலா சார்?" என்று வேதனையோடு சம்பத் கூறியதைக் கேட்டு ஆவுடையப்ப பிள்ளை சிரித்தார். சம்பத்தினுடைய ஆசையை எண்ணி வியந்தார்.

சம்பத்தினுடைய ஆசையில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் அது நிறைவேறுவது எப்படி? இப்போது நிறைவேறும் சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாக எண்ணினான் சம்பத். நளினி அவனுக்குக் கிடைத்து விட்டால், எல்லாம் கிடைத்துவிடும். அவளை எப்படி அடைவது? அவனோடு பேசுகிறாள், சிரிக்கிறாள், அவனுக்காகப் பணம்கூடச் செலவழிக்கிறாள். அவனை விரும்புகிறாளா இல்லையா என்பதை மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவள் அவனை விரும்பும்படி செய்ய அவன் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தான். பெண்களோடு பழகி, அவர்களுடைய அபிமானத்தைப் பெறும் கலையில் அவனுக்குத் தேர்ச்சி உண்டு என்றாலும், அவனுடைய முயற்சி எதுவும் நளினியிடம் பலிக்கவில்லை என்று தான் நினைத்தான். ஒருவேளை மனத்தில் உள்ள எண்ணங்களை வெளியே தெரியாதபடி மறைத்துக் கொண்டிருக்கிறாளோ என்றுகூடச் சந்தேகப்பட்டான். ஒன்று நிச்சயமாகத் தெரிந்தது. அவனை அவள் வெறுக்கவில்லை. அவனுடைய பேச்சையும் நட்பையும் அவள் விரும்பினாள். சில சமயம் அவன் ஏதாவதொரு சாக்கில் அவளைத் தீண்டியபோது கூட அவள், கோபமோ, வெறுப்போ அடைந்ததில்லை. ஆனால் அவன் எதிர்பார்த்தது இவற்றுக்கெல்லாம் மேலான ஒருவித நெருக்கத்தை. அவனை அவள் மணக்க விரும்பும் அளவுக்கு அவள் மனம் அவன்பால் ஈடுபட வேண்டும். அதற்கு என்ன செய்வது? அதைப் பற்றித் தான் சிந்தித்துக் குழம்பிக் கொண்டிருந்தான் சம்பத்.

(தொடரும்)

5. நீதிமன்றத்தின் தரம்

நளினியும் சம்பத்தும் சாப்பிடுவதற்காக ஆவுடையப்ப பிள்ளையின் அலுவலகத்துக்குள் சென்ற போது, அவர்களுக்கு முன்பே அங்கு சென்றிருந்தார், ஆவுடையப்பபிள்ளை. வழக்கு சம்பந்தமாகச் சட்டப் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு கையால் வழுக்கைத் தலையை ரசித்துத் தடவிக் கொண்டிருந்தார். ஆழ்ந்த சிந்தனையிலோ அல்லது படிப்பிலோ இருந்தால், அவருடைய கை, வழுக்கைத் தலையைத் தடவிக் கொள்ளும்.

''இன்றைக்கு உனக்குச் சாப்பாடு இங்கேயா?'' என்று சம்பத்தைப் பார்த்துக் கேட்டார்.

''சார்! சர்க்கரைப் பொங்கல் வந்திருக்கும். நீங்களும் எங்களோடு சாப்பிட வாருங்களேன்'' என்று கூப்பிட்டாள் நளினி.

திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்

''எனக்குக் கோதுமைக் கஞ்சி. வந்த உடனேயே குடித்து முடித்து விட்டேன்'' என்றார் ஆவுடையப்ப பிள்ளை.

''ஐயோ பாவம்'' என்றான் சம்பத், அனுதாபத்துடன்.

''எதற்குப் பரிதாபப்படுகிறாய்?'' — வியப்புடன் கேட்டார், பிள்ளை.

''சம்பாத்தியம் பண்ணியும் அனுபவிக்க முடியவில்லை'' என்றான் சம்பத்.

''அவனவனுக்கு வாய்க்க வேண்டும். என்னைப் பார்த்துப் பொறாமைப்படுகிறார்கள். சர்க்கரைப் பொங்கலைச் சாப்பிட முடியாமல் இருக்கிறேன். நீ அடிக்கடி சொல்கிறாயே, மாமரத்தடியில் கடலை மிட்டாய் தின்கிற வக்கீல்களைப் பற்றி; அவர்களைப் பார்த்து நான் பொறாமைப் படுகிறேன்'' என்றார் பிள்ளை. நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு ''சாப்பிட்டு விட்டுக் காலையில் நடைபெற்ற விசாரணைக் குறிப்பில் இன்னொரு பிரதியை எடுத்து வை. கீழ்க் கோர்ட்டில் அவள் சொன்ன சாட்சியத்தையும் நன்றாகப் படித்து வை'' என்றார்.

சம்பத் தலையை ஆட்டினான். நளினி, சாப்பாட்டுப் பாத்திரத்தை எடுத்து வர உள் அறைக்குச் சென்றாள்.

''சாட்சியம் நமக்கு எதிராகப் பலமாக இருக்கிறதே'' என்றான் சம்பத், கவலையுடன்.

''பார்க்கலாம். குறுக்கு விசாரணையில் உடைகிறதா பார்ப்போம். வழக்கை நன்றாக ஜோடித்து விட்டார்கள். வக்கீல் கருணாகரனின் வேலை இது'' என்றார் பிள்ளை.

''வேலம்மாளுக்கும் குருசாமிக்கும் ஏற்கனவே தொடர்பு உண்டு என்று வாதாடுகிறார்களே, உண்மையாக இருக்குமா?'' — சம்பத் வியப்புடன் கேட்டான்.

''உண்மைதான். அன்றிரவு, இருவரும் ஒன்றாக இருந்ததை எவனோ பார்த்துவிடவேதான் அவள் கூக்குரலிட்டுக் குருசாமியைக் காட்டிக் கொடுத்து விட்டாள்!''

''அப்படியும் ஒருத்தி செய்வாளா, சார்!''

''அப்படித்தான் செய்வாள். அவளோ கல்யாணம் ஆனவள். இவனோடு இரகசியத் தொடர்பு வைத்திருக்கிறாள். அதை ஒருவன் பார்த்து விட்டான். அந்தச் சூழ்நிலையில், தனது மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள இவனைக் காட்டிக் கொடுப்பதைத் தவிர வேறு வழி அவளுக்கு என்ன இருக்கிறது? 'காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்' என்று கூக்குரலிட்டு விட்டாள்.''

''இது துரோகம் சார்!'' என்றான் சம்பத், கோபத்துடன்.

''அந்தச் சூழ்நிலையில் எந்தப் பெண்ணும் அப்படித்தான் நடந்து கொள்ள முடியும். வேறு எப்படி அவள் தப்பிக்க முடியும்?''





''அதற்காகச் செய்யாத குற்றத்துக்கு ஒருவனுக்குத் தண்டனை கொடுப்பதா?''

''இவன் என்ன குற்றம் செய்யவில்லை? இன்னொருத்தன் மனைவியோடு தொடர்பு கொண்ட குற்றத்துக்காகவாவது தண்டனை அடைய வேண்டியதுதானே. அந்தத் தண்டனையை இப்போது பலாத்காரக் குற்றத்துக்காக அடைகிறான் என்று வைத்துக் கொள்வோமே. உண்மையிலேயே இது பலாத்காரமா யிருந்திருந்து, யாரும் பார்த்திருக்கவில்லை யென்றால், கதை வேறு மாதிரிப் போயிருந்திருக்கும்'' என்றார் பிள்ளை.

''எப்படி?''

''பலாத்காரம் நடைபெற்ற பிறகு எந்தப் பெண்ணும் வெளியே சொல்ல மாட்டாள். மானமுள்ளவளாயிருந்தால் தற்கொலை செய்து கொண்டு சாவாள். இல்லையென்றால், யாரிடமும் சொல்லாமல் மறைத்து விடுவாள். பலாத்காரத்துக்கு முயற்சி செய்யும் போது தான் ஒரு பெண், உதவி கோரிக் கூக்குரலிடுவாளே தவிர, பலாத்காரம் நடைபெற்று முடிந்து விட்டால், பிறகு, சத்தம் போட மாட்டாள். போட்டால், அவளுக்குத்தானே கேவலம். நடைபெற்று விட்ட விஷயம், ஊருக்குத் தெரியாமலே இருந்து விடட்டும் என்று சும்மா இருந்திருப்பாள்'' என்றார் பிள்ளை.

''ஒரு பெண்ணின் சம்மதத்தின் பேரில் தொடர்பு கொண்டு இப்படிக் காட்டிக் கொடுக்கப்படுவதை விட, அவள் சம்மதமின்றிப் பலாத்காரம் செய்வது ஆபத்தில்லை போல் இருக்கிறதே'' என்று கூறிச் சிரித்தான், சம்பத்.

''சாப்பாடு இன்னும் வந்து சேரவில்லை'' என்று கூறிக் கொண்டு வந்த நளினி ,''டிரைவர் எங்காவது போயிருப்பான். கொஞ்ச நேரம் காத்திருந்து பார்க்கலாம்'' என்று சொல்லி, நாற்காலியில் அமர்ந்தாள்.


''நாளை வக்கீல் சங்கக் கூட்டத்துக்கு வரப் போகிறீர்களா?'' என்று கேட்டார் ஆவுடையப்பபிள்ளை.

''வேடிக்கை பார்க்கவாவது வரவேண்டாமா ?'' என்றான் சம்பத்.

''ஒரு நீதிபதி மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வருவது அசிங்கமான காரியம்'' என்றாள், நளினி.

''புரட்சிக் கட்சிக் கருணாகரனின் தூண்டுதல் தான் இது. அவருடைய வழக்குகளில் அவருக்கு எதிராக இந்த ஜட்ஜ், தீர்ப்புக் கூறுகிறாராம். இவர் வந்த பிறகு, கருணாகரனுடைய வழக்குகள் நிறையத் தோல்வியடைந்து விட்டன'' என்றார் பிள்ளை.

''அதற்காக நீதிபதி மீது கண்டனத் தீர்மானம் போட்டு விட முடியுமா? தீர்மா





னத்துக்கு என்ன கார ணம் காட்டுகிருர்கள்?'' நளினி கேட்டாள்.

''கருணுகரன் இரண்டு மூன்று வக்கீல்களைக் கைக்குள் போட்டிருக்கிருர். அவருடைய ஜூனியர் இருக்கிருனே கான் முகமது; ஒரே யடியாகக் குதிக்கிருன். ஜட்ஜை வாயில் வந்தபடி திட்டுகிருன்'' என்ருன் சம்பத்.

''ஜட்ஜ், வக்கீல்களை மரியாதையாக நடத்தவில்லை என்பதைத்தான் முக்கிய குற்றமாகச் சொல்கிருன்.''

''சாதாரணமான ஜட்ஜாக இருந்தால், வக்கீலின் எந்த உளறலையும் கேட்டுக் கொண்டிருப்பார். ஆனல், இந்த ஜட்ஜ் ரொம்பப் புத்திசாலி. எதையும் விரைவில் புரிந்து கொண்டுவிடக் கூடியவர். சட்ட நுணுக்கங்களை நன்ருக அறிந்தவர். இவரை ஏமாற்ற முடியவில்லை. முட்டாள்தனமாகவும், பொருத்தமில்லாமலும் வக்கீல்கள் கோர்ட்டில் பேசுவதை அவரால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இதனல்தான் இந்தத் தகராறு'' என்ருர் ஆவுடையப்ப பிள்ளை. ''என்ன இருந்தாலும் ஒரு நீதிபதியை அவமதிக்கிற மாதிரி கண்டனத் தீர்மானம் போடுவது நீதித் துறைக்கே நல்லதில்லை'' என்ருர். கை வழுக்கைத் தலையைத் தடவியது. அவருடைய முகத்தில் வேதனையின் சாயல் படர்ந்தது.

''கருணுகரன் மூக்கை நன்ருக அறுத்தீர்கள்'' என்ருன் சம்பத், உற்சாகத்துடன்.

''எப்போது ...? ஓ... கோர்ட்டில் சொன்னேனே, அதுவா, நான் அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. ஏதோ ஓர் எரிச்சலில் நிதானம் இழந்து விட்டேன்'' என்ருர் ஆவுடையப்பபிள்ளை, வருத்தத்துடன்.

''நீங்கள் சொன்னது சரிதான் சார். அப்போதுதான் அவர் அகம்பாவம் அடங்கும்!''

''நோ, நோ, அவருடைய சொந்த விஷயம் அது. மேலும் அவரைக் குறை கூறிப் பலர் முன் தூற்றுவதால் நமக்குத் தான் என்ன நன்மை? வீணுக அவர் மனம் புண்பட வைத்தது தான் மிச்சம். அனுவசியமாக என் மீது அவருக்கு வெறுப்பு ஏற்படும்படி நடந்து கொண்டேன்; அவ்வளவுதான்'' என்ருர் ஆவுடையப்ப பிள்ளை, வருத்தத்துடன்.

பிள்ளையின் பெருந்தன்மையையும், விசால மனத்தையும் எண்ணி வியந்தான் சம்பத்.

''நீங்கள் சாப்பிட்டு விட்டு நேராக கோர்ட்டுக்கு வாருங்கள். நான் வக்கீல் சங்கத்துக்குப் போய்விட்டு வருகிறேன். நாளைக் கூட்டத்துக்கு என்ன ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதைப் பார்த்து விட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு ஆவுடையப்ப பிள்ளை வெளியே வந்து காரில் ஏறினர்.

ஆவுடையப்ப பிள்ளைக்கு வயது அறுபத்தைந்து இருக்கும். கிரிமினல் வழக்குகளில் புகழ் பெற்ற வழக்கறிஞர்.

''வக்கீல் பிள்ளை இருக்கிருர்; வெட்டு தலையை'' என்று கூறிக் கொண்டு சந்தனத் தேவன், ஒரு கொலையைச் செய்தாலும்! இப்படி ஒரு கதை பரவும் அளவுக்கு அவர் பிரபலம் அடைந்திருந்தார்.

ஆவுடையப்ப பிள்ளையைப் பற்றி இப்படிப் பல கதைகள் உண்டு. அவற்றில் சில உண்மையானவை. பல கதைகள் புராணங்களைப் போன்றவை. வெள்ளைக்கார ஜட்ஜ்கள் கூட அவரைக் கண்டு அந்தக் காலத்தில் பயந்தார்கள் என்று சுற்றுப்புறக் கிராமங்களில் பலர் நம்பினர்கள். உண்மையில் ஆவுடையப்ப பிள்ளையின் பெருந்தன்மையிலும், இனிமையான குணத்திலும், சட்ட நுணுக்கங்களிலும், வாக்குச் சாதுர்யத்திலும் எல்லா நீதிபதிகளுமே மிகுந்த மரியாதை கொண்டிருந்தார்கள். வழக்குகளில் வெற்றி தோல்வியைப் பற்றிக் கலங்காமல், நிதானமாகவும், அழுத்தமாகவும் தம்முடைய கட்சியை எடுத்து வாதிக்கும் திறமையில் எல்லாரையும் மயக்கி விடுவார். வழக்கு விவரங்களையோ, சாட்சிகளையோ, சட்ட நுணுக்கங்களையோ குழப்பி, நீதிபதிகளைக் குழம்ப வைத்து, வழக்குகளில் வெற்றி பெறும் சிறுமை அவரிடம் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட நீதிபதிகள், அவர் மீது மிகுந்த நம்பிக்கையும் மரியாதையும் கொண்டிருந்தனர். ஆவுடையப்ப பிள்ளையின் வெற்றி இரகசியம் முழுவதும் குறுக்கு விசாரணை செய்யும் விதத்திலும், அதன் பிறகு கிடைத்த தகவல்களைக் கோவைப் படுத்தி வாதம் செய்யும் திறமையிலும் தான் இருந்தது.

ஆவுடையப்ப பிள்ளை இப்போது குடியிருக்கும் பெரிய பங்களா, ஒரு ஜமீன்தாருடையது. முப்பது ஆண்டுகளுக்கு முன் ஜமீன்தார் சார்பில் ஒரு கொலை வழக்கில் ஆஜரானர். ஜமீன்தாருக்கு விடுதலை வாங்கிக் கொடுத்ததற்காக அந்தப் பங்களாவை இனமாகக் கொடுத்தார், ஜமீன்தார்.

ஆவுடையப்ப பிள்ளை, வக்கீல் தொழிலுக்கு வந்து கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகள் ஆகி விட்டன. ஒரு தலைமுறைக்குள் நீதித் துறையில் எவ்வளவு மாறுதல்கள்!

ஆவுடையப்ப பிள்ளைக்கு நீதித் துறையின் இன்றைய சூழ்நிலை மிகுந்த மன வேதனையைக் கொடுத்தது. நீதிபதிகளின் வேலை நியமனத்திலும் கூட அரசியல் செல்வாக்கு தலையிடும் அவல நிலையை எண்ணி மறுகினர்.

ஒரு காலத்தில் சென்னை நீதித்துறை, இந்தியா வின் பெருமைக்கும், மரியாதைக்கும் உரியதாயிருந்தது. இன்று அந்தப் பெருமை யெல்லாம் மறைந்து கொண்டு வருவதை எண்ணிப் புழுங்கினர்.

அந்தக் காலத்து நீதிபதிகளுடைய புத்திக் கூர்மையையும், ஆழ்ந்த சிந்தனையையும் நீதியின் மீது அவர்கள் கொண்டிருந்த பக்தியையும், மரியாதையையும் நினைத்துப் பார்த்தார். அந்தக் காலத்துத் தீர்ப்புக்கள், இலக்கியங்களாகவே அமைந்திருந்த பாங்கை யும், நீதிபதிகளின் கண்ணியத்தையும், நீதி மன்றங்களில் அவர்கள் பெருந்தன்மையாக நடந்து கொண்ட முறையையும் எண்ணிப் பார்த்த பிள்ளை, இன்றைய மாறுதல்களை நினைத்து மலைத்தார். சோஷலிசம், ஜன நாயகம் என்னும் போர்வையில் நடைபெறும் சுயநல அரசியல், நீதித்துறையைப் பாதிக்கும் விதமும் நீதித்துறையிடம் மரியாதை குறைந்து விட்ட அவலமும் ஆவுடையப்ப பிள்ளையின் மனத்தைத் துன்புறுத்தின. அர சியல் வாதிகள் நீதித் துறையையும், நீதிபதி களையும் விமர்சனம் செய்வதை நாகரிகமாக எண்ணும் அளவுக்கு இந்நாட்டில் நீதித்துறை யின் கௌரவம் தாழ்ந்து விட்டதே என்பதை நினைக்கும்போது, வக்கீல் தொழிலையே உதறி விடுவோமா என்ற எண்ணம் கூட அவருள் எழுவதுண்டு. நீதிபதிகளின் நியமனத்தில் திறமையும், நேர்மையும் பரிசீலிக்கப்படா மல், அரசியல் செல்வாக்கும், சிபாரிசும் மட்டுமே கவனிக்கப்படும் போது; நீதித் துறையின் தரம் எப்படி உயர முடியும்? என்று நினைத்து வருந்துவார்.

தமது புகழுக்கு முதன் முதலில் காரண மாயிருந்த பரபரப்பான ஒரு வழக்கின் அப்பீல், உயர்நீதி மன்றத்தில் நடைபெற்ற போது, தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை அடிக்கடி எண்ணிப் பார்ப்பார்.

அது ஒரு விசித்திரமான வழக்கு. —

ஒரு குடிகாரக் கணவனை அவனுடைய இரண்டு இளம் மனைவிகளும் சேர்ந்து கொலை செய்து விட்டார்கள். சாட்சியங்கள் மிகப் பலமாயிருந்தன.

மாவட்ட நீதிமன்றத்தில் பிள்ளைக்குத் தோல்விதான் கிட்டியது. குற்றவாளிகள் இருவரும் ஆயுள் தண்டனை பெற்றனர். அந்த வழக்கின் அப்பீல், உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற போது, மூன்று நீதிபதிகள், பிள்ளையின் வாதத்தைக் கேட்டார்கள். மூன்று பேரில் இருவர் வெள்ளைக்காரர்கள்.

''தண்டனை வழங்குவது பற்றி உலகத்தின் சிந்தனைப் போக்கிலே இன்று மாறுதல் ஏற்பட் டிருக்கிறது, மைலார்ட்! மரண தண்டனை கூடாது என்றுதான் அறிவாளிகள் கருது கிறார்கள். தண்டனை, என்பது குற்றவாளி யைப் பழிவாங்குவதற்காக அமையக் கூடாது என்று எண்ணுகிறார்கள்.''

இந்தச் சமயத்தில் ஒரு நீதிபதி குறுக் கிட்டார். ''தண்டனையின் தத்துவமே பழி வாங்குவதுதான். துன்பம் அனுபவித்தவ னுடைய மனத் திருப்திக்காகவும், சமூகத்தில் மற்றவர்களுக்குப் பயம் இருக்க வேண்டும் என்பதற்காகவும் தான் தண்டனை.''

''மை, லார்ட், இரத்தத்துக்கு இரத்தம், பல்லுக்குப் பல், உயிருக்கு உயிர் என்பது, வளர்ச்சி பெறாத சமுதாயத்தின் பழங்காலச் சிந்தனைகள்'' என்றார் பிள்ளை.

குற்றவாளிகளின் மீது குற்றம் நிரூபண மாகி விட்டது; இனி வேறு வழியில்லை என்று தண்டனையைப் பற்றி ஆவுடையப்ப பிள்ளை பேசுகிறார் என்பதைப் புரிந்து கொண்ட ஒரு நீதிபதி சொன்னார்: ''சமூகத்தில், மனிதர் களுக்கு இடையே வெறி கொண்ட மிருகங் களை அலைய விடுவது தவறு. அதீதமான காரணம் இல்லாமல் செய்யும் கொலைகளுக் குத் தண்டனை கொடுத்தே தீர வேண்டும்.''

''இதைவிட அதீதமான காரணம் வேறு என்ன வேண்டும்; மை, லார்ட்? குற்றவாளி களுக்கு இருபத்தைந்து வயது கூட இல்லை. வாழ்க்கையை இன்பமாக அனுபவிக்க வேண்டும், எப்படியெல்லாமோ வாழ வேண் டும் என்று கற்பனை செய்யும் பருவம். இந்த வயதில் இவர்களை இவர்களுடைய கணவன் வாழ விட்டானா? குடித்து விட்டு வந்து தினமும் கொடுமைப் படுத்தினான். அணைக்க வேண்டிய கைகள், அடித்தன. கொஞ்ச



சமர்ப்பணம்

டாக்டர்கள் சமூகத்தில் மிகவும் கண்யமான, கௌரவமான இடத்தைப் பெற்றிருப்பவர்கள்; நோயைத் தீர்த்து மக்களை மறலியின் கையி லிருந்து மீட்டு உயிர் காக்கும் உயரிய பணியில் ஈடுபட்டிருப்பவர்கள். அவர்களது புனிதமான பணிக்கு மாசு கற்பிக்கும் வகையில் திரைக் கதையைப் புனைவது கொடுமை! கதை என்ன வென்று எழுதவே கூச்சமாக இருக்கிறது விடுங்கள்!

மனிதப் பண்பையும் சமுதாய அற நெறி முறை களையும், டாக்டர்களின் புனிதப் பணியையும் வேரோடு கெல்லி வெந்நீரையும் ஊற்றும் இந்த விபரீதப் போக்கான கதையை ஏன் படமாக்கி னார்கள்? (இதற்கு ஒரு நோக்கம் வேறு கேடா?)

ஆபாசத்துக்கும் குறைவில்லை. சமர்ப்பணம் என்ற புனிதமான சொல்லைக் களங்கப்படுத்தி விட்டார்கள்.

-காந்தன்

வேண்டிய வாய், தகாத ஏச்சுக்களைப் பொழிந்தன. ஒருநாளா? இரண்டு நாட்களா? இரண்டு ஆண்டுகளாக இந்த நகர வேதனை. எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னுடைய மனைவிகளை விபசாரத்துக்குக் கூடக் கட்டாயப்படுத்தும் அளவுக்கு அவனுடைய கொடுமை அதிகரித்து விட்டது. அவனுக்குக் குடிக்கப் பணம் போதவில்லை. எனவே, மனைவிகளை விற்கக் கூடத் துணிந்து விட்டான். இந்தச் சூழ்நிலையிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள ஒரு மானமுள்ள பெண்ணுக்கு இந்தச் சமுதாயத்தில் இரண்டு வழிகள் தாம் உண்டு. ஒன்று, தற்கொலை செய்து கொள்வது. மற்றொன்று, இப்போது இந்தப் பெண்கள் செய்ததைப் போல் தீரமான ஒரு காரியத்தைச் செய்வது. இவர்கள் கொன்றது மனிதனை அல்ல, மைலார்ட்! ஒரு மிருகத்தை, வெறிகொண்ட ஓர் ஆபாசமான மிருகத்தைத் தான்! தற்காப்புக்காக நடைபெற்ற கொலை. ஒரு கொடியவனிடமிருந்து தப்பிக்கத் துடித்த இந்த இளம் பெண்களின் செயலை நான் மனிதாபிமானத்தோடு நோக்குகிறேன். இந்தச் சமுதாயமும் இவர்களை மன்னிக்கத் தான் விரும்பும்'' என்று பேசிவிட்டு அமர்ந்தார் ஆவுடையப்ப பிள்ளை.

நீதிமன்றத்தில் சற்று நேரம் ஆழ்ந்த அமைதி நிலவியது. ஆவுடையப்ப பிள்ளையின் வாதத்தில் நிறைந்திருந்த யதார்த்த பூர்வமான விஷயங்கள், நீதிபதிகளின் சிந்தனையைக் கிளறி விட்டன. ஒரு வாரத்தில் தீர்ப்புக் கூறுவதாக எழுந்து விட்டார்கள்.

ஒரு வாரத்துக்குப் பிறகு, குற்றவாளிகளின் வயதையும், கொலை தற்காப்புக்காக நடைபெற்றது என்ற சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு இருவரையும் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டது. அதுதான் ஆவுடையப்ப பிள்ளையின் புகழுக்குக் காரணமாயிருந்த முதல் வழக்கு. அந்த வழக்கின் சூழ்நிலையையும்,தத்துவத்தையும் இன்றைய நீதிபதிகள் பலர் புரிந்து கொள்ளவே முடியாது என்பது தான் பிள்ளையின் கருத்து.

''அந்த மாதிரி ஒரு வழக்கில், குற்றவாளிகளை விடுதலை செய்யும் துணிவு இன்று யாருக்கும் இருக்காது'' என்று அடிக்கடி கூறுவார். நீதிபதிகளின் தரம் மட்டும் அல்ல, வழக்கறிஞர்களின் தரம் கூடக் குறைந்து போய் விட்டதாகச் சொல்வார் பிள்ளை. நீதியின் தத்துவங்களைப் புரிந்து கொள்ளாமல், வழக்கின் தரத்தைக் கணித்துக் கொள்ளாமல், சட்ட விவரங்களைக் கூடப் படித்துத் தெரிந்து கொள்ளாமல் நீதிமன்றத்தில் மேம்போக்காக எதையாவது பேசத் துணியும் வழக்கறிஞர்களைக் கண்டு வேதனையடைந்தார். இவ்விதம் பிறர் மீது அபிப்பிராயம் கொள்ளவும் கூறவும் தகுதி உள்ளவர் அவர்.

ஓர் உண்மையான வக்கீலுக்கு, வழக்கின் வெற்றி தோல்வி பெரிய விஷயமல்ல. அந்த வழக்கை நடத்துவதற்காகத் தாம் எடுத்துக் கொண்ட சிரமமும், படித்த படிப்பும், நீதிபதியின் முன்னிலையில் வழக்கை நடத்திய பாங்கும், எல்லாவற்றுக்கும் மேலாக, அந்த வக்கீலின் திறமையைப் புரிந்து கொள்ளக் கூடிய நீதிபதியின் புத்திசாலித்தனமும் தாம் மிகுந்த திருப்தியைக் கொடுக்கும். மந்தபுத்தியுள்ள நீதிபதியின் முன்னால் வழக்காடுவதைப் போன்ற துயர சம்பவம், ஆற்றல் உள்ள வக்கீலுக்கு வேறு இல்லை.

இப்போது, இதைப் பற்றியெல்லாம் யாரும் கவலைப்படுவதில்லை. யாரெல்லாமோ எப்படியெல்லாமோ நீதிபதிகளாக வருகிறார்கள். இதே தரத்தில், வக்கீல்களும் ஈசல் மாதிரி தோன்றி விட்டார்கள். நீதி மன்றத்தில் எப்படியெல்லாமோ வழக்குகள் நடைபெறுகின்றன; தீர்ப்பளிக்கப் படுகின்றன. நீதி, திசை தெரியாமல் திகைக்கிறது.

இப்படி ஒரு தரம் கெட்ட சூழ்நிலையில், ஒரு நீதிபதி மீது வக்கீல்கள், கண்டனத் தீர்மானம் போடுவதில் அதிசயம் ஒன்றுமில்லை என்று எண்ணியபடியே, வக்கீல் சங்கக் கட்டிடத்தின் படிகளில் ஏறினார், ஆவுடையப்ப பிள்ளை. (தொடரும்)

ஹவஸ்

இதன் பொருள் பேராசை. சிற்றின்ப இச்சை என்றும் ஓர் அர்த்தம் ஹவஸ் என்ற பதத்துக்கு உண்டு. காசுக்குப் பேராசைப்படும் திரைப்படத் தயாரிப்பாளர் சிற்றின்பத்துக்கே முக்கியத்துவம் தந்துள்ளார் இப்படத்தில். குளுகுளு கலர் என்ற வகையில் ஹவஸ் கண்ணுக்குக் குளிர்ச்சியான படம். பிரபல நட்சத்திரங்களைக் காரண காரியமில்லாமல் போட்டுக் கவர்ச்சியைக் காட்டிக் காசு பண்ணப் பார்த்திருக்கிறார்கள். அந்த வகையில் ரேகா, நீதுசிங், பிந்து ஆகியோர் உள்ளனர். கதாநாயகன் அனில் தாவன் - நல்ல கொழு கொழு மொழு மொழு! நடிப்பு? அதை யார் கேட்கிறார்கள்?

-கௌசிகன்



திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்

6. "நியூவேவ்"

வக்கீல் சங்கக் கட்டடம், நீதிமன்றத்துக்குத் தென்புறத்தில் அமைந்திருந்தது. சங்கக் கட்டடத்துக்குள் மத்தியானம் இடைவேளையில் கலகலப்பாயிருக்கும். வேலையில்லாத வக்கீல்களும், காலையில் மட்டும் வேலையிருந்து மத்தியானம் வேலையில்லாத வக்கீல்களும், அரட்டை அடிப்பதற்கென்றே அங்கு ஒரு பெரிய அறை இருந்தது. அந்த அறையில்தான் எப்போதும் கூச்சலும் கும்மாளமும் இருக்கும். அந்த அரட்டை அறைக்கு அடுத்துள்ள பெரிய அறையில் சில வயதான வக்கீல்கள் சாய்வுநாற்காலிகளில் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தார்கள். சில சமயங்களில் இவர்களுடைய தூக்கத்தைக் கலைக்கும் அளவுக்கு அரட்டை அறையிலிருந்து ஆரவாரம் கிளம்புவதும் உண்டு. அரட்டை அறைப் பேச்சுக்களை ரசிக்கச் சில சமயங்களில் வயதான வக்கீல்களும் வருவார்கள். அந்த இடத்தில் எந்தப் பொருள் பற்றியும் பேச்சு அடிபடும். அமெரிக்க ஜனாதிபதியின் வாட்டர்கேட் விவகாரத்திலிருந்து, தமிழகத்தில் அரிசி விலை ஏற்றம் வரையில் பேசித் தீர்க்கப்படும். ஆனால் எந்தப் பேச்சிலும் ஆழ்ந்த கருத்தையோ, சிந்தனைச் செறிவையோ, அறிவின் தீட்சண்யத்தையோ அந்த இடத்தில் எதிர்பார்க்க முடியாது. மேம்போக்காகவும், தமாஷாகவும் பேசுவார்கள்.

அந்த அரட்டை அறைக்கு நேர் எதிர்த் திசையில் வேறோர் அறை இருந்தது. அதில் ஓய்வு நேரங்களில் இலக்கியம், கலை, சட்ட நுணுக்கம், நீதிமன்ற நடவடிக்கைகளின் தரம், அரசியல் இவை பற்றிய பேச்சு நடைபெற்றுக் கொண்டிருக்கும். இங்கு நடைபெறும் பேச்சும், பேசப்படும் பொருளும் மிகுந்த தரம் உள்ளவையாயும் சிந்தனையைத் தூண்டுபவையாகவும் இருக்கும். பாலகிருஷ்ணய்யரின் சம்ஸ்கிருத ஞானமும், ஆவுடையப்பபிள்ளையின் தமிழ் ஞானமும் அங்கு நிறைந்து எல்லோருடைய மனத்தையும் நிரப்பும். சில வேளைகளில் சம்பத் போன்ற இளைஞர்கள், தற்கால இலக்கியத்தின் புதுமைப் போக்கையும், தரத்தையும் விமர்சிக்கும்போது, பாலகிருஷ்ணய்யர் போன்ற மேதைகளின் தர்க்கம் சிந்தனைக்கு விருந்தாக அமைவது உண்டு. வழக்கறிஞர்கள் அன்றைய அவரவர்களின் மன நிலைக்கு ஏற்ப அரட்டை அறைக்கோ அல்லது மற்றோர் அறைக்கோ செல்வார்கள் !

சம்பத் ஜூனியராகச் சேர்ந்தவுடன் அவனுக்கு முதன் முதலில் ஆவுடையப்பபிள்ளை சொன்ன புத்திமதி, ''வக்கீல் சங்க அரட்டை அறைக்குள் பொழுதைக்கழித்து விடாதே. அங்கு போனால் உன்னுடைய சிந்தனை தானே குறைந்துவிடும்'' என்பதுதான்.


ஆனால் அரட்டை அறையில் நடைபெறும் எந்தப் பேச்சிலுமே உயர்ந்த நோக்கமோ, நல்ல ரசனையோ, தரமோ இல்லை என்பதற்காக சம்பத் அங்கு போகாமல் இருந்து விடுவதும் இல்லை. அவனுக்கு ஓய்வு தேவைப்படும் போது பொழுதைக் கழிப்பதற்காக அங்கு போய் உட்கார்ந்து கொள்வான். அங்குள்ள சூழ்நிலையையும், எப்படியெல்லாம் ஒருவர் மீதுள்ள பொறாமையை மற்றவர்கள் வெளிப்படுத்துகிறார்கள் என்பதையும், எல்லாம் தெரிந்தவரைப் போல் பேச நினைத்து, சிலர் உளறுவதையும் கேட்கக் கேட்கச் சம்பத்துக்கு வேடிக்கையாக இருக்கும். தான் ஒரு கதாசிரியனாக இல்லாமற் போய்விட்டோமே என்று கூட அவன் வருந்துவான். பல நாவல்களுக்குப் போதுமான பல தரப்பட்ட பாத்திரங்களை அங்கு பொறுக்கலாம்.

அன்று அந்த அறையில் கூட்டம் நிரம்பி வழிந்தது. பல இளம் வக்கீல்கள், உட்கார இடமின்றி நாற்காலிகளின் கைகளில் ஒண்டியபடி அமர்ந்திருந்தார்கள். கூட்டத்தினரின் கவனம் முழுதும் அங்கு நடு நாயகமாக அமர்ந்திருந்த வக்கீல் கருணாகரன் மீதிருந்தது. அந்த அறைக்குக் கருணாகரன் எப்போது வந்தாலும் கலகலப்பாய்த்தான்இருக்கும். ஏதாவது புதுச் செய்திகளைக் கொண்டு வருவார். புரட்சித் தலைவர் என்பதால் சிலருக்கு அவர் மீது மரியாதையும், பயமும் உண்டு. அன்று கருணாகரன் மிக முக்கியமான விஷயம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். நீதிபதியின் மீது கண்டனத் தீர்மானம் போடுவது பற்றிய பேச்சு.

''இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாமே சார்!'' என்றார் ஓர் இளம் வக்கீல்.

''எத்தனை நாட்கள் பொறுப்பது? ஒரு வருஷமாகப் பொறுத்தாகி விட்டதே, போதாதா?'' என்றார் கருணாகரன்.





''ஜட்ஜ் இப்படி நடந்து கொள்வதற்கு அவருடைய குடும்பச் சூழ்நிலே காரணமாக இருக்கலாம்'' என்ருர் ஒருவர்.

''அவர் குடும்பத்தில் ஆயிரம் இருக்கும். இத்தனை வயதுக்கு மேல் கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டால் அப்படித்தான்'' என்ருர் கருணுகரன் கேலியாக. பலர் சிரித்தார்கள்.

''இவரே இத்தனை வயதுக்கு மேல் மூன்ருவது முறையாகக் கல்யாணம் செய்திருக்கிருரே!'' என்று கருணுகரனைக் காட்டி இரகசியமாகச் சொன்னர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஓர் இளம் வக்கீல். ''அப்படியிருந்தும் ஜட்ஜைக் கேலி செய்கிருர்!''

''ஜட்ஜுடைய மனேவி பெரிய எழுத்தாளியாகி விட்டாள் சார். இன்று அவளுடைய கதைப் புத்தகம் ஒன்றுக்கு வெளியீட்டு விழா நடக்கிறது. நம்முடைய வக்கீல் சங்கத்துக்கும் அழைப்பு வந்திருக்கிறது'' என்ருர் ஒருவர்.

''இன்றைக்கு வந்த 'நவரசம்' பத்திரிகையில் அந்த அம்மாளுடைய கதை ஒன்று வந்திருக்கிறது'' என்று கருணுகரனின் ஜூனியர், கான்முகமது பத்திரிகையை விரித்துக் காட்டினுன். ஒரு பெண்ணின் படம் முக்கால் நிர்வாணத்தில் அதில் இருந்ததைப் பார்த்து முறைத்தார்கள்.

''இதுவா அவளுடைய படம்?'' என்று விவரம் தெரியாமலோ அல்லது வேண்டுமென்றே கேட்டார் தலே முழுவதும் நரைத்துப் போன வயதான வக்கீல். எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

''மிஸ்டர் சர்மா, இது கதைக்கான படம். கதை எழுதியவருடைய படமல்ல'' என்ருன் கான்முகமது சிரித்துக் கொண்டே.

''ஓஹோ..... நான் இந்தக் கதைகளே எல்லாம் படிப்பதே இல்லே'' என்று முனகிக் கொண்டார் சர்மா.

''நீங்கள் கேஸ் கட்டைத் தவிர வேறு எதைப் படித்திருக்கிறீர்கள்?'' என்ருன் கான்முகமது.

சர்மா தலேயைத் தடவியபடியே சிரித்துக் கொண்டார்.

''என்ன கதை?'' கருணுகரன் கேட்டார்.

''நியூ வேவ்'' என்ருன் பத்திரிகையை வைத்திருந்த கான்முகமது.

''அவசியம் எழுத வேண்டியதுதான். நாடு இருக்கிற நிலேயில் நியூவேவ் கதை



இல்லாவிட்டால் என்ன ஆகிறது?'' என்றார் கருணாகரன். மீண்டும் சிரிப்பொலி எழுந்தது.

''பிரபல எழுத்தாளியாகிவிட்டாள்'' என்றார் ஒருவர்.

''எழுத்திலும் கவர்ச்சி; அவள் பார்க்கவும் கவர்ச்சியா யிருக்கிறாள்; நவரசம் பத்திரிகை ஆசிரியர் பிரமாதப்படுத்தி விளம்பரம் கொடுத்துவிட்டதில் வியப்பென்ன?'' என்றார் கருணாகரன் எரிச்சலுடன்.

''அவளுடைய கவர்ச்சிதான் அவளுடைய புகழுக்குக் காரணம் என்கிறீர்களா ?'' என்று கேட்டார் வேறோர் இளம் வக்கீல் வம்புக்காக. ஒரு நீதிபதியினுடைய மனைவியைப் பற்றி இப்படிப் பொது இடத்தில் பேசுகிறோமே என்ற கூச்சம்கூட இல்லை.

ஒருவர் வம்புத் தீ வளர்க்க ஆரம்பித்தால் இன்னொருவர் எண்ணெய் விடுவது இயல்பு.

''அதில் எவ்வளவோ விஷயம் அடங்கியிருக்கிறது. நவரசம் ஆசிரியர் இருக்கிறாரே, அவர் பெரிய ஆள்'' என்று கூறிக் கண்களைச் சிமிட்டினார், கருணாகரன். சிலர் புரிந்துகொண்டு சிரித்தனர்.

''கதாசிரியைக்காகவாவது நாம் ஜட்ஜின் மீது சிறிது இரக்கம் காட்டினால் என்ன?'' என்று ஓர் இளம் வக்கீல் கூறியதும், பலர் குபீரென்று சிரித்தார்கள்.

''இந்த ஜட்ஜ் மட்டமான ஆள். வக்கீல்களை மதிப்பதில்லை. கான்முகமது அன்று அழத்தான் இல்லை. அந்த அளவுக்குக் கோர்ட்டில் அவனை அவமானமாகப் பேசியிருக்கிறார். அவர் இஷ்டத்துக்கு நேரம் கழித்து வருகிறார். நாம் வாய்தா கேட்டால், மறுக்கிறார். கொஞ்சம்கூடப் பெருந்தன்மை இல்லாதவர். ஒரு முறை தீர்மானம் போட்டால்தான் இந்த மாதிரி நபர்களுக்குப் புத்தி வரும்'' என்றார் கருணாகரன்.

'' குறுக்கு விசாரணையே செய்யவிடாமல் தடுக்கிறார் சார். பிறகு எப்படித்தான் வழக்கை நடத்துவது ?'' என்று கோபத்தோடு ஒரு நடுத்தர வயதுள்ள வக்கீல் இரைந்தார்.

''இந்த ஆள் வந்த பிறகு ஏழு தூக்குப் போட்டாகி விட்டது. குற்றவாளிகளை விடுதலை செய்யும் அதிகாரத்தை இன்னும் ஹைகோர்ட் இவருக்குக் கொடுக்கவில்லை போலிருக்கிறது'' என்றார் கருணாகரன். பிறகு, ''நாளைக் கூட்டத்துக்கு எல்லோரும் வந்துவிடுங்கள். இரண்டாம் சனிக்கிழமை விடுமுறை என்று வீட்டில் இருந்துவிடாதீர்கள். நாளைக்குக் காலையில் பத்து மணிக்குக் கூட்டம். ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றி ஹைகோர்ட்டுக்கு அனுப்பிவிடுவோம் '' என்று கூறிவிட்டு எழுந்தார்.

''நம்முடைய சங்கத் தலைவர் ஆவுடையப்ப பிள்ளை என்ன நினைக்கிறாரோ ?'' என்று யாரோ ஒருவர் சொன்னார்.

''அவர் என்ன நினைத்தால் என்ன ? நாம் மெஜாரிட்டி இருக்கிறோம். என்ன பயம் ? பிள்ளை பத்தாம்பசலி ஆள். வழவழா என்று



தான் இருப்பார். அவருக்கெல்லாம் ஜட்ஜ் என்றாலே தொடை நடுங்கும்'' என்றார் கருணாகரன்.

''யார்? பிள்ளையா நடுங்குவார்? ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தேழில் இங்கே ஒரு வெள்ளைக்கார ஜட்ஜ் இருந்தான்.... ஐ.ஸி.எஸ். லாங்டன் என்று பெயர். பிள்ளையிடம் அவன் பட்டபாடு உமக்கு என்ன தெரியும்? நீர் அப்போது இந்தத் தொழிலுக்கே வரவில்லை'' என்றார் ஒரு வயதான வக்கீல் கோபத்துடன்.

''அதெல்லாம் அந்தக் காலத்தில்'' என்று கூறிக் கொண்டே கருணாகரன், அந்த அறையைவிட்டு விரைவாக வெளியேறினார். கருணாகரனின் தந்திரங்களில் இதுவும் ஒன்று. தமக்கு எதிர்ப்பு இருக்கிறது என்று தெரிந்தால் விரைவில் அந்த இடத்திலிருந்து நழுவி விடுவார்.

சங்கக் கட்டடத்தின் வெளி வராந்தாவுக்கு வந்த கருணாகரன், பஞ்சாயத்துப் போர்டு தலைவர் நிற்பதைக் கண்டதும் அவரை அழைத்துக் கொண்டு ஒரு தனி இடத்துக்குச் சென்றார்.

''சர்க்கார் வக்கீல் முனுசாமிக்கு நீங்கள் இன்னும் பணம் கொடுக்கவில்லையே?'' என்றார் கருணாகரன்.

''ரொம்பக் கேட்கிறீர்களே !'' என்றார் பஞ்சாயத்துப் போர்டுத் தலைவர்.

''நானா கேட்கிறேன்? அவருக்கல்லவா பணம் ? இந்த வழக்கில் வெற்றி அடைய வேண்டுமா, வேண்டாமா ?''

''ஏன் வேண்டாம். அந்தப் பயலை மூன்று வருஷங்களாவது ஜெயிலுக்கு அனுப்பி, ரகுபதி நாயுடுவின் மானத்தை வாங்காமல் நான் தூங்கமாட்டேன் சார்!'' என்றார் தலைவர், உணர்ச்சி பொங்க.

''பின்னே, பணம் கொடுக்கத் தயங்கினால் எப்படி ?''

''அவர் அரசாங்க வக்கீல். எப்படியும் இந்த வழக்கை நடத்த வேண்டியது அவருடைய பொறுப்புத்தானே சார்!'' என்றார் தலைவர், சிரித்துக் கொண்டே.

''இந்த வழக்கில் எதிரி தண்டனை அடைந்தாலோ விடுதலை பெற்றாலோ முனுசாமிக்கு ஒன்றுமில்லை.''

''சாட்சிகள்தான் பலமா யிருக்கிறதே !''

'' என்ன இருந்தாலும், வழக்கை நடத்த வேண்டியவர் அரசாங்க வக்கீல்தானே ?.... வழக்கை நன்றாக நடத்த வேண்டாமா ? ஆஸ்பத்திரியில் நோயாளிகளைக் கவனிப்பது டாக்டரின் கடமைதான். ஆனால் நம்மை நன்றாகக் கவனிக்க வேண்டும் என்பதற்காக டாக்டருக்குத் தனியாகவும் பணம் கொடுக்கிறோமே, அதே மாதிரிதான் இதுவும்'' என்றார் கருணாகரன்.

'' சார்.....! டாக்டர் விஷயம் என்னவாயிற்று ? வழிக்கு வந்தாரா ?'' — பரபரப்புடன் கேட்டார் பஞ்சாயத்துத் தலைவர்.

''டாக்டரைத் திங்கட்கிழமைதானே விசாரிக்கப் போகிறோம். அதற்குள் அவரைச் சரிக்கட்டிவிடலாம். இன்னும் வக்கீலுக்கே நீங்கள் பணம் தந்தபாடில்லை. டாக்டர் என்ன கேட்கிறாரோ..... மத்தியானம் கோர்ட் ஆரம்பிப்பதற்குள் நீங்கள் பணம் கொடுக்கவில்லை என்றால் பிறகு, முனுசாமி இந்த வழக்கில் அக்கறை காட்டமாட்டார். சாட்சிகளைச் சரியாக விசாரிக்கமாட்டார். விடுதலையாவதற்கு ஏற்றவாறு நடந்து கொள்வார் !'' என்றார் கருணாகரன்.

''ஆயிரம் ரூபாய் அதிகம் சார் !''

'' சரி, எழுநூறு கொடுங்கள். நான் சொல்லிச் சரிப்படுத்துகிறேன்.''

''இன்னும் அரை மணி நேரத்தில் கொண்டு வந்து தருகிறேன்'' என்று கூறிவிட்டுத் தம் காரை நோக்கி விரைந்து சென்றார் பஞ்சாயத்துப் போர்டு தலைவர்.

''உம்.... எழுநூறாவது வருகிறதே. அந்த வரை லாபந்தான்'' என்று நினைத்துக் கொண்டே வக்கீல் சங்கக் கட்டடத்தின் படிகளில் இறங்கத் தொடங்கினார் கருணாகரன். அப்போது ஆவுடையப்பபிள்ளை, படிகளில் ஏறிக் கொண்டிருந்தார்.

'' என்ன சார், குறுக்குவிசாரணையை இன்றைக்குள் முடித்துவிடுவீர்களா?'' என்று கேட்டார் கருணாகரன்.

படிகளில் ஏறியதால், சற்று மூச்சு வாங்க நின்றார் ஆவுடையப்பபிள்ளை.

'' இந்தப் படி ஏறுவதற்குள் இப்படி மூச்சு வாங்குகிறதே !'' என்றார் கருணாகரன்.

''எனக்கு வயது அறுபத்தைந்து. இரத்தக் கொதிப்பு வேறு இருக்கிறது'' என்றார், ஆவுடையப்பபிள்ளை.

''அறுபத்தைந்து ஒரு வயதா ?'' என்றார் கருணாகரன் அலட்சியமாக.

''நான் இன்னும் மாசே துங்கின் சிந்தனைகளைப் படிக்கவில்லை என்றும் இளமையாகவே இருப்பதற்கு'' என்று பிள்ளை கூறியதும் கருணாகரன், கலகலவென்று சிரித்துக் கொண்டே படிகளில் இறங்கிப் போய்விட்டார்.

(தொடரும்)

அடுத்த இதழில்

நகர்வலம்:

திருவனந்தபுரம்



7. அவமானத்துக்கு மேல் அவமானம்!

வக்கீல் சங்கக் கட்டிடத்திலிருந்து வெளியே வந்த கருணாகரன் தம்முடைய காரை நோக்கிச் சென்றார். காருக்குப் பக்கத்தில் அவருக்காகக் காத்துக் கொண்டிருந்த புரோக்கர் ஆறுமுகம், அவரைக் கண்டதும் மீசையைத் தடவிக் கொண்டே ஓர் அசட்டுச் சிரிப்பைச் சிரித்தான்.


''என்னப்பா?'' என்று கேட்டுக்கொண்டே காரின் முன் கதவைத் திறந்து உள்ளே அமர்ந்தார் கருணாகரன்.

''வேலம்பட்டி கேஸுக்கும், நத்தம் கேஸுக்கும் இன்னும் பணம் வாங்கவில்லை'' என்று கூறித் தலையைச் சொறிந்தான், ஆறுமுகம்.

''ஓ...இன்னும் வாங்கவில்லையோ? இத்தனை நாட்கள் எங்கே போய் விட்டாய்?'' என்று கூறிக் கொண்டே நூறு ரூபாயைப் பர்ஸிலிருந்து எடுத்துக் கொடுத்தார், கருணாகரன். பணத்தை எண்ணிய ஆறுமுகம், அவரைப் பார்த்துக் குழைந்து சிரித்தான். ''ரொம்பக் குறைத்து விட்டீர்களே!'' என்றான்.

''எப்போதும் போல்தான் கொடுத்திருக்கிறேன்'' என்றார் கருணாகரன்.

''இந்த இரண்டு கேஸையும் இங்கே கொண்டு வர ரொம்பச் சங்கடமாகிவிட்டது.



திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்

இரண்டு வழக்குகளும் வக்கீல் ஆவுடையப்ப பிள்ளையிடம் போயிருக்க வேண்டியது. நான் தான் கஷ்டப்பட்டுக் கலைத்து இங்கே கொண்டு வந்தேன். அதற்காக அலைந்ததற்கே எனக்கு இருபது ரூபாய்வரை செலவு ஆகிவிட்டது'' என்றான் ஆறுமுகம்.

''சரி, இந்தா'' என்று ஐம்பது ரூபாயை எடுத்துக் கொடுத்தார் கருணாகரன். அதைத் திருப்தியோடு வாங்கிக் கொண்டான் ஆறுமுகம்.

''மருதமுத்து கொலைக் கேஸ் என்ன ஆயிற்று? இன்னும் ஆள் ஒருவனும் வரவில்லையே?'' என்று கேட்டார் கருணாகரன்.

''அது, ஆவுடையப்ப பிள்ளையிடம் போய் விட்டதாகக் கேள்வி.''

''என்னப்பா, விட்டு விட்டாயே.''

''எவ்வளவோ முயற்சி பண்ணிப் பார்த்தேன். செலவு அதிகமானால் கூடப் பிள்ளையிடம் தாம் கேஸை ஒப்படைக்கப் போவதாகச் சொல்லி விட்டார்கள். இது போனால் போகட்டும். காடுபட்டி கொள்ளை கேஸ் என்னிடம் தான் சிக்கியிருக்கிறது. ஒன்பது குற்றவாளிகள். தலைக்கு இருநூறு ரூபாய் தரச் சொல்கிறேன்.''

''சரி, அதையும் விட்டு விடாதே.''

''இப்போது காடுபட்டிக்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்றான் ஆறுமுகம். மீசையைத் தடவிக்கொண்டான்.

கருணாகரன் இன்னொரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து, ''பஸ் செலவுக்கு வைத்துக் கொள்'' என்றார். ஆறுமுகம் மலர்ந்த முகத்தோடு பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்றான்.

கருணாகரனின் தொழில் தந்திரங்களில் இந்தப் புரோக்கர் முறையும் ஒன்று. தமக்கென்று அந்த மாவட்டம் முழுவதும் மூன்று புரோக்கர்கள் வைத்திருந்தார். அலைந்து திரிந்து அவர்கள் கொண்டு வரும் வழக்குகளுக்காக அவர் தாராளமாகவே கைக்கூலி கொடுத்தார். புரோக்கர் விஷயத்தில் சிக்கனமோ, ஏமாற்றமோ இருக்கக் கூடாது என்னும் தொழில் இரகசியத்தை நன்கு அறிந்திருந்தார். அதனால் புரோக்கர்கள் அவரிடம் விசுவாசமாக இருந்தார்கள்.

புரோக்கர் ஆறுமுகத்தை அனுப்பி விட்டு, காரை ஆளும் கட்சியின் மாவட்டத் தலைவரின் வீட்டை நோக்கிச் செலுத்தினார் கருணாகரன்.

கல்லூரிப் பக்கத்தில் கார் வந்ததும் காலையில் நடைபெற்ற சம்பவம் நினைவில் எழுந்து கோபத்தைக் கிளறியது. அவருக்கு மிகுந்த ஏமாற்றமும், அவமானமும் ஏற்பட்டிருந்தன.

''சே! ஒரு காலேஜ் பிரின்சிபால், என்னை மதிக்கவில்லை என்றால் ...'' — கருணாகரனின் வாய், கோபத்தால் முனகியது. காருக்குள்ளிருந்த டிரான்சிஸ்டர் ஸ்டீரியோ ரேடியோவைப் பாட வைத்தார். அதிலிருந்து கர்நாடக சங்கீதம் கேட்கவே, அதை நிறுத்தி விட்டு, டிரான்சிஸ்டர் டேப் ரிக்கார்டரைப் பாட வைத்தார். ஏதோ ஒரு சினிமாப் பாட்டு கேட்கத் தொடங்கியது. கார், கல்லூரியை நெருங்கி வந்ததும் கருணாகரனின் பார்வை அந்தக் கல்லூரியின்மீது பதிந்தது. அந்தக் கல்லூரியை இடித்துத் தகர்த்து விட வேண்டும் என்னும் கோப வெறி அவருள் எழுந்தது.

''சே! எவ்வளவு அவமானம். நல்ல வேளை, நாலு பேருக்கு முன்னால் இந்தப் பிரின்சிபால் அப்படிச் சொல்லவில்லை. போனில் பேசப் போய்த் தப்பித்தோம்'' என்று முனகியபடியே மீண்டும் ஒருமுறை அந்தக் கல்லூரியை முறைத்துப் பார்த்தார்.

கருணாகரன், நான்கு மாணவர்களுக்கு அந்தக் கல்லூரியில் சேர்வதற்காகச் சிபாரிசுக்



கடிதம் கொடுத்து அனுப்பி யிருந்தார். சிபாரிசு, கருணாகரனிட மிருந்து வந்திருப்பதை அறிந்த கல்லூரித் தலை வர், அந்த நால்வரையும் கல்லூரியில் சேர்க்க மறுத்து விட்டார். புரட்சிக் கட்சித் தலைவராகிய தமது சிபாரிசை ஏற்கவில்லையே என்ற ஏமாற்றம் கருணாகரனுக்கு. நாற்பது ஆண் டுகளாகவே அந்தக் கல்லூரியின் மீது அவருக்கு வெறுப்பும், கோபமும் இருந்து வந்தன. அந்தக் காலத்தில், அந்தக் கல் லூரி அவரை மாணவனாகச் சேர்த்துக் கொள்ள மறுத்து விட்டது. அந்த ஏமாற்றம் கருணாகரனின் மனத்தை விட்டு நீங்கவே யில்லை. கருணாகரனின் நிறம், யானையை ஒத்திருந்தது போல் குண மும் யானையை ஒத்திருந்தது. பகைமையை மறந்து விடாமல், நெஞ்சிலேயே தேக்கி வைத்திருக்கும் குணம்.

அன்று காலையில் கல்லூரித் தலைவருக்கு அவர் போன் செய்த போது, "யார்? எங்கிருந்து?" என்று கேட்டார் கல்லூரித் தலைவர்.

"கருணாகரன்" என்று அழுத்திச் சொன்னார் கருணாகரன்.

"கருணாகரனா....? எங்கிருந்து பேசு கிறீர்கள்? எந்தக் கருணாகரன்?"

கருணாகரனுக்குக் கோபம் தலைதூக்கியது. புரட்சிக் கட்சித் தலைவரைத் தெரியாதது போல் பேசுகிறாரே பிரின்சிபால் என்ற எரிச்சல்.

"புரட்சிக் கட்சித் தலைவர் கருணாகரன் பேசுகிறேன்."

"என்ன வேண்டும்?"

"உங்களை எப்போது சந்திக்கலாம்?"

"என்ன காரியமாக?"

"நேரில் சந்திக்க வேண்டும்."

"இப்போது, அட்மிஷன் நடந்து கொண் டிருக்கிறது. நேரமில்லை" என்றார் தலைவர்.

கருணாகரனுக்குக் கோபத்தால் கண்கள் சிவந்தன.

"அட்மிஷன் விஷயமாகத்தான் பேச வேண்டும். நான் அனுப்பிய மாணவர்களை நீங்கள் சேர்த்துக் கொள்ளவில்லையாமே?"

"யாரெல்லாமோ அனுப்பி வைக்கி றார்கள். இதென்ன சத்திரமா, கண்டவனை யெல்லாம் சேர்த்துக் கொள்வதற்கு?" என்றார் பிரின்சிபால்.

"நீங்கள் எந்த அடிப்படையில் மாணவர் களைச் சேர்க்கிறீர்கள்?" என்று கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டார் கருணாகரன்.

"அதெல்லாம் இப்போது சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை."

"புரட்சிக் கட்சித் தலைவர் என்ற முறை யில் கேட்கிறேன்" — கோபத்தில் இரைந் தார் கருணாகரன்.

"இந்தக் கல்லூரிக்கும் புரட்சிக் கட்சிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. என் நேரத்தை வீணாக்க வேண்டாம்" என்று கூறிக் கல்லூரித் தலைவர், போனை வைத்து விட்டார்.

கருணாகரன், அவமானத்தால் புழுங்கினார். "ஏற்கனவே பட்ட பாடு போதாது போலிருக் கிறது" என்று முனகினார்.

ஆறு மாதங்களுக்கு முன் அந்தக் கல்லூரி மாணவர்கள், தங்களுக்கு ஒரு யூனியன் வேண்டுமென்று கோரிப் போராட்டம் நடத் தினார்கள். அரசியல் கட்சிகள் அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயன் றன. புரட்சிக் கட்சிதான் அதில் தீவிரப் பங்கு கொண்டது. எந்த இடத்தில் கல வரமோ குழப்பமோ நிகழ்ந்தாலும் நிச்சய மாக அதில் புரட்சிக் கட்சியின் பங்கு இருக் கும். கருணாகரனின் தூண்டுதலின் பேரில் பல ரௌடிகள், மாணவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு, கல்லூரியின் மீது படை யெடுத்துக் கல்லூரியைக் கொள்ளையடித்து விட்டார்கள். அந்தக் கொள்ளையில் கல்லூ ரிக்குக் கிட்டத்தட்ட எண்பதினாயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு விட்டது. கல்லூரியில் நடைபெற்ற கொள்ளைக்கு முழுப்பொறுப்பும் கருணாகரன்தான் என்பதைப் புரிந்து கொண்ட கல்லூரித் தலைவர், கருணாகரனின் சிபாரிசை ஒதுக்கியதில் வியப்பேதும் இல்லை.

மற்றக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து அந்தக் கல்லூரிக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்று முடிவு செய்திருந்தார் கருணாகரன். அது விஷயமாகத்தான் அப் போது ஆளும் கட்சியின் மாவட்டத் தலை வரைப் பார்க்கப் போய்க் கொண்டிருந்தார்.

ஆளும் கட்சியின் மாவட்டத் தலைவ ரான தேன்மொழியனின் வீட்டில் அப்போது கூட்டமே இல்லை. உள் அறையில் தேன் மொழியனுடன் கட்சியைச் சேர்ந்த ஒரு பிர முகர் பேசிக் கொண்டிருந்தார். அவரைப்

பார்த்தால், கட்சியின் வட்டச் செயலாளரைப் போலிருந்தது. அவருக்குப் பக்கத்தில் இன்னொரு பிரமுகர் அமர்ந்திருந்தார், அவர் ஒரு கண்டிராக்டர்.

''முதல்வரிடம் முன்பே சொல்லி விட்டேன். எல்லாம் நடக்கும்'' என்றார் தேன்மொழியன்.

''இன்னும் ஆர்டர் வரவேயில்லை. நீங்கள் இன்னொரு தடவை போய் மந்திரியைப் பார்த்துக் காரியத்தை முடிக்க வேண்டும்'' என்றார் கண்டிராக்டர்.

''இன்னும் ஒரு வாரத்துக்கு என்னால் எங்கும் போக முடியாது. இந்த வீட்டுக் காம்பௌண்டுச் சுவருக்கு வேலை ஆரம்பித்தாகி விட்டது. பணத்துக்கு ஓடிக் கொண்டிருக்கிறேன்'' என்றார், தேன்மொழியன்.

அப்போது கட்சிப் பிரமுகர், கண்டிராக்டரை அர்த்த புஷ்டியுடன் பார்த்தார். அதைப் புரிந்து கொண்ட கண்டிராக்டர் ''அண்ணே! நீங்கள் கவலைப்படாதீர்கள்.. காம்பௌண்டு சுவர் வேலை தானாக நடக்கும். நீங்கள் நாளைக்குப் புறப்படுங்கள். மந்திரியைப் பார்த்துக் காரியத்தை முடித்து விட்டு வாருங்கள்'' என்றார்.

''இவ்வளவு வேலையை இங்கே விட்டுவிட்டு...'' என்று இழுத்தார், தேன்மொழியன்.

''அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம். நான்தான் சொல்லி விட்டேனே, காம்பௌண்டு சுவர் வேலை தானாக நடக்கும். என் பொறுப்பு'' என்றார் கண்டிராக்டர், அழுத்தமாக. தேன்மொழியன் ஓர் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தார். சிறு மீசையைத் தடவிக் கொண்டார்.

''பின்னே என்ன, நாளைக்கே புறப்படுங்கள். நானும் கூட வருகிறேன். சேர்ந்து போய்க் காரியத்தை முடித்து விடலாம்'' என்றார் கட்சிப் பிரமுகர்.

''ஆமாம், நீங்கள் இரண்டு பேரும் போய் விட்டு வாருங்கள், காம்பௌண்டு சுவரைப் பற்றி நீங்கள் கவலையே படவேண்டாம்'' என்று கூறிக் கொண்டே ஒரு கவரைத் தேன்மொழியனிடம் நீட்டினார், கண்டிராக்டர். தேன்மொழியன் அதை வாங்கி மேஜைக்குள் போட்டு விட்டு, ''சரி நாளைக்குப் புறப்பட வேண்டியதுதான்'' என்று சங்கடத்தோடு சம்மதித்தார்.

அறைக்குள்ளிருந்து கட்சிப் பிரமுகரும், கண்டிராக்டரும் வெளியே வந்ததும் கண்டிராக்டர் கேட்டார்: ''நீங்களும் கூடப்



போக வேண்டுமா? நீங்களும் வீணுக அலேவா னேன்?''

''அண்ணனைத் தனியாகவே அனுப்பக் கூடாது. மந்திரியிடம் அழுத்திச் சொல்ல மாட்டார்கள். கூட ஆள் இருந்தால்தான் காரியம் நிறைவேறும்'' என்ருர் கட்சிப் பிரமுகர். அவர்கள் இருவரும் காரில் ஏறிய சமயத்தில்தான் கருணுகரன் அங்கு போய்ச் சேர்ந்தார்.

கருணுகரன், வராந்தாப் படிகளில் ஏறிக் கொண்டிருந்த போது தேன்மொழியன், கண்டிராக்டர் கொடுத்த கவரைப் பிரித்து அதற்குள்ளிருந்த பணத்தை எண்ணி முடித்திருந்தார். ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் இருந்தது. மனத்துக்குள்ளேயே கணக்குப் போட்டார். இது ஓர் ஆயிரத்து ஐந்நூறு, காம்பௌண்டு செலவுக்கு எப்படியும் இரண்டாயிரம் ஆகும். ஆக மூவாயிரத்து ஐந்நூறு மொத்தம். கண்டிராக்டருக்குக் கிடைக்கப் போகிற லாபம் முப்பதினுயிரம். சரி சரி, நமக்கு வந்தது போதும். ஒரு வகையாக இந்த மாதிரியே பங்களா முழுவதையும் கட்டி முடித்தாகி விட்டது. பட்டணத்துக்குப் போய் விட்டு வந்ததும் கிரஹப்பிரவேசம் நடத்தினுல் குறைந்தது ஐயாயிரமாவது பரிசுகளாக வராதா....?

''என்ன பலத்த யோசனை?'' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு வாசலைப் பார்த்தார் தேன்மொழியன். சிரித்தவாறே கருணுகரன் அறைக்குள் வந்து கொண்டிருந்தார்.

புரட்சித் தலைவரைக் கண்டதும் தேன்மொழியன் முதலில் திகைத்தார். கருணுகரன் வருகிருர் என்ருல், ஏதாவது குழப்பமோ கலவரமோ ஏற்படும் என்பது தேன்மொழியனின் அனுபவம். கருணுகரன், கல்லூரித் தலைவரின் அகம்பாவத்தைச் சொன்னதும் தான் தேன்மொழியனுக்கு நிம்மதி ஏற்பட்டது. தம்முடைய சிபாரிசைப் பிரின்சிபால் ஏற்கவில்லை என்பதை மட்டும் சொன்னுர் கருணுகரன். தமக்கு போன் மூலம் ஏற்பட்ட அவமானத்தைச் சொல்லவில்லை.

''நாம் இந்த விஷயத்தில் என்ன செய்து விட முடியும்? அதுவோ தனியார் கல்லூரி. ஆறு மாதங்களுக்கு முன் கல்லூரியில் நடைபெற்ற கொள்ளைக்குப் பிறகு அரசியல் கட்சி எதையும் மதிப்பதில்லை என்றே முடிவு செய்து விட்ட மாதிரித் தெரிகிறது'' என்ருர் தேன்மொழியன், மீசையைத் தடவிக் கொண்டே.

''ஏன் உங்களுக்கும் மறுத்து விட்டாரா?'' என்று வியப்புடன் கேட்டார் கருணுகரன்.

''நான் மூன்று பேருக்குச் சிபாரிசுக் கடிதம் கொடுத்தேன். இன்றுவரையில் அட்மிஷன் கொடுக்கவில்லை.''

''இதைச் சும்மா விட்டுடக் கூடாது சார்!''

''என்ன செய்யலாம்?''

''நாம் எல்லோரும் போய்ப் பிரின்சிபாலைச் சந்திப்போம்.''

''சந்தித்து?''

''எந்த முறையில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கிறீர்கள் என்று கேட்போம். அரசாங்கத்திடம் அந்தக் கல்லூரி மான்யம் வாங்குகிறது. நமக்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்'' என்ருர் கருணுகரன்.

''ஒன்று செய்யுங்களேன். நீங்கள் முதலில் பிரின்சிபாலைச் சந்தித்துப் பேசிப் பாருங்கள்'' என்ருர் தேன்மொழியன்.

''சேச்சே. எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்தே தான் போக வேண்டும்'' என்று கருணுகரன் சொன்னவுடன் தேன்மொழியன், போன் மூலமாக மற்றக் கட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார். மற்றவர்களும் சம்மதிக்கவே, கல்லூரித் தலைவரை எப்போது சந்திக்க இயலும் என்பதை அறியக் கல்லூரித் தலைவருக்குப் போன் செய்தார்.

''என்ன விஷயமாகச் சந்திக்க வேண்டும்?'' என்று கேட்டார் தலைவர்.

''உங்களிடம் பேச வேண்டியிருக்கிறது. எல்லாக் கட்சித் தலைவர்களும் சேர்ந்து வருவதாக முடிவு செய்திருக்கிறோம்'' என்ருர் தேன்மொழியன்.

''என்ன விஷயம் என்பது பற்றி முன்கூட்டியே தெரிந்து கொள்ளாமல் சந்திக்க இயலாது'' என்ருர் பிரின்சிபால்.

''மாணவர்களைச் சேர்க்கும் விஷயமாக மக்களிடமிருந்து புகார் வந்திருக்கிறது. அது குறித்து.....'' தேன்மொழியன் பேசி முடிப்பதற்குள் கல்லூரித் தலைவர் குறுக்கிட்டார்:

''புகார் சொல்லும் மக்கள் என்னிடம் நேரடியாகவே புகாரைச் சொல்லலாம். அதற்கு ஓர் ஏஜண்ட் தேவை இல்லை!''

''அதுபற்றி நாங்கள் உங்களிடம் பேச வேண்டியிருக்கிறது. எப்போது சந்திக்கலாம்?''

''இது விஷயமாக நான் பேச வேண்டிய அவசியம் இல்லை!''

''அரசாங்கத்திடமிருந்து மானியம் வாங்குகிறீர்கள்'' என்ருர் தேன்மொழியன், கோபத்தோடு. கை, மீசையைத் தடவியது.

''அரசாங்கம் என்னிடம் விளக்கம் கேட்டால் நான் பதில் சொல்லிக் கொள்வேன். இது விஷயமாக வேறு யாரையும் நான் சந்திக்கத் தயாராயில்லை'' என்று கூறி போனைக் கீழே வைத்து விட்டார், கல்லூரித் தலைவர்.

தேன்மொழியனுக்கு அவமானமாயிருந்தது. இந்த அவமானத்துக்குக் காரணம் கருணுகரனின் யோசனையைக் கேட்டது தான் என்பதால் கருணுகரன் மீதே கோபம் வந்தது.

''உங்கள் பேச்சைக் கேட்டு நானும் போன் பண்ணினேனே? என் புத்தியைச் செருப்பால் அடிக்க வேண்டும்'' என்ருர் தேன்மொழியன்.

''இந்தக் காலேஜ் பிரின்சிபாலுக்கா இப்படிப் பயப்படுகிறீர்கள்? ஒரு போராட்டமே ஆரம்பித்து விடலாம் சார்!''

''எதற்குப் போராட்டம்? நம்முடைய சிபாரிசை மதிக்கவில்லை என்பதற்கா? உங்கள் சொல்லைக் கேட்டு அதில் நான் இறங்கினுல், என்னைப் பார்த்து ஊர் சிரிக்கும். வேண்டுமானுல், இந்தப் போராட்டத்தை உங்கள் கட்சியே முதலில் நடத்தட்டும். என்னை விடுங்கள்'' என்று கூறிக் கைகூப்பியபடியே எழுந்து விட்டார் தேன்மொழியன்.

தம்முடைய திட்டம் நிறைவேறவில்லை என்ற ஏமாற்றத்தோடு காரில் ஏறி அமர்ந்தார் கருணுகரன். சீறிக்கொண்டு கிளம்பிய கார், கருணுகரனின் மனத்தின் சீறலைப் புலப்படுத்தியது. (தொடரும்)

திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்

8. ஆடம்பர வாழ்க்கைக்கு அரசியல்

“கையாலாகாத பயல்களெல்லாம் தலைவனாக வந்து விட்டார்கள். புரட்சிக் கட்சி மட்டும் இன்று நாட்டை ஆண்டு கொண்டிருக்குமானால், இந்தப் பிரின்சிபால் படும்பாடு... மக்கள் மன்றத்தில் நிறுத்திச் சுட்டுக் கொன்றிருப்பேன்” என்று மனத்துக்குள்ளேயே உறுமிக் கொண்டார், கருணாகரன். அவருடைய காரும் உறுமியவாறே ஓடிக் கொண்டிருந்தது.

கருணாகரன் இவ்வளவு தூரம் மனம் உளைவதற்குக் காரணம் இருந்தது. நான்கு மாணவர்களுக்கு அந்தக் கல்லூரியில் இடம் வாங்கித் தருவதாகச் சொல்லி ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் இருநூறு ரூபாய் பெற்றிருந்தார். தமக்கு என்று பெற்றுக் கொள்ளவில்லை, கட்சியின் கட்டட நிதிக்காக என்று பெற்றுக் கொண்டார்.

கருணாகரன் மற்றவர்களிடமிருந்து பணம் பெறும் விதமே ஒரு கலைதான். பணத்தைப் பற்றி அக்கறை கொள்ளாதவர் என்று தான் மற்றவர்கள் நினைத்தார்கள். பணத்தின் மீது அவர் காட்டும் அலட்சியமும், பணம் தர இயலாதவர்களிடம் அவர் காட்டும் பரிவும் தாம், அவருடைய தொழில் இரகசியம். பணத்துக்காக அவசரப் படாதவரைப் போல் நடிக்கும் திறமையும்; அதே சமயம், பண விஷயத்தில் விட்டுக் கொடுக்காமல், மற்றவர்கள் உணராதவாறு கறந்து விடும் ஆற்றலும் அவருக்கே கைவந்த கலையாகும்.

தற்போது கருணாகரன், புரட்சிக் கட்சியின் மாவட்டத் தலைவராக இருந்தார். கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளாகவே ஏதாவதோர் அரசியல் கட்சியில் பங்கு கொண்டு பெற்ற அனுபவம், இன்று தலைமைப் பதவி வகிக்க உதவியது. சட்டம் படித்து முடித்து விட்டு வெளியே வந்ததும்தான் தம்முடைய தவற்றை உணர்ந்தார் கருணாகரன். வக்கீல் தொழிலுக்கும் தம்முடைய அறிவுக்கும் எவ்விதப் பொருத்தமும் இல்லையென்பதை உணர்ந்த போது திகைத்தார். முதல் இரண்டு ஆண்டுகள் ஒரு வழக்கில் கூட ஆஜராகும் வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவில்லை. அப்போதுதான் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. ஏதாவது ஓர் அரசியல் கட்சியில் சேர்ந்து கொண்டால், வருமானத்துக்கும் புகழுக்கும் வழி பிறக்கும் என்பதை உணர்ந்தார்.

நாற்பது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, புகழ்பெற்ற வக்கீல்கள் — ராஜாஜி, மோதிலால் நேரு, சாப்ரு போன்றவர்கள் — அரசியல் கட்சியில் சேர்ந்தார்கள். தங்களுடைய தொழிலையும், அபரிமிதமான வருமானத்தையும் தியாகம் செய்துவிட்டு அரசியலுக்கு வந்தார்கள். அதனால்தான் அன்றைய காங்கிரஸ் கட்சி, தியாக உணர்வாலும், நேர்மையாலும், சேவையாலும் ஒளிவிட்டது. இன்று, அரசியல் கட்சியிலிருந்து லாபம் பெற, பல வக்கீல்கள் அரசியலில் பங்குபெறத் தொடங்கி விட்டார்கள். அரசியலும் சீரழிந்து விட்டது.

இலகுவில் ஏமாறக்கூடிய வர்க்கம் எது என்பதைப் பற்றிக் கருணாகரன் யோசித்தார். வறுமையில் காலம் கழித்துக் கொண்டிருந்த பாட்டாளி இனத்தைக் கைக்குள் போட்டுக் கொள்ள எண்ணிப் புரட்சிக் கட்சியில் சேர்ந்தார்.

புரட்சிக் கட்சிக்காரர்களை அப்போது அரசாங்கம் வேட்டையாடிக் கொண்டிருந்தது. அவர்கள் தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட்டு ஆங்காங்கே திடீர் திடீரென்று வெளிப்பட்டுக் கொலை, கொள்ளை, வெடி வைப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். பிடிபட்டவர்களின் சார்பில் வழக்கு மன்றத்தில் வாதாடக் கருணாகரன் முன்வந்தார். வழக்கில் வாதாடத் தமக்குப் பணம் தேவை இல்லை என்று மறுத்து விட்டார். வழக்கு நடைபெறும் போது தேவையான சில்லறைச் செலவுகளை மட்டும் கட்சி அங்கத்தினர்கள் உண்டியல் மாதிரி ஏதாவது சேகரித்துக் கொடுத்தால்போதும் என்று கூறி விட்டார்.

கருணாகரன் போட்ட கணக்கு பிரமாதம். அந்தச் சமயத்தில் புரட்சிக் கட்சியில் சேர்ந்திருந்த பாட்டாளிகளின் எண்ணிக்கை அந்த மாவட்டத்தில்மட்டும் ஆறுயிரத்துக்குக் குறைவில்லை. அவர்களிடமிருந்து ஒவ்வொரு வழக்குக்கும் ஐம்பது பைசா கிடைத்தால், மூவாயிரம் ரூபாய் சேரும். நாலணா பிரிந்தால்கூட, ஆயிரத்து ஐந்நூறு கிடைக்கும். கட்சியைச் சேர்ந்த கிளைக் காரியாலயங்களின் பொறுப்பில் நிதி வசூலை விட்டு விட்டால், போதும்.

அப்படி ஒரு குயுக்தியான திட்டம், கருணாகரனுக்கு மிகுந்த லாபத்தைக்கொடுக்க ஆரம்பித்து விட்டது. பாட்டாளிகளுக்கு, தலைக்கு நாலணாவோ அல்லது எட்டணாவோ தான் செலவு. பல வழக்குகளுக்கு இப்படித் தான் கருணாகரன் ‘இலவச’மாக ஆஜரானார். புரட்சிக் கட்சிக்காரர்களின் மீதுள்ள வழக்குகளுக்காக அவர் ஒரு பைசாக்கூடப் பெற்றுக்



கொள்ளாமல் ஆஜராவதைக் கண்ட பாட்டாளிகளுக்கு அவர் மீது அளவுகடந்த மதிப்பும், மரியாதையும் தோன்றின. ஏதோ சில்லறைச் செலவுகளுக்கு உண்டி குலுக்குகிறார்கள், அவ்வளவே என்று எண்ணினார்கள். இத்தகைய வழக்குகளில் வாதாடி வாதாடிக் கருணாகரனுக்கு வக்கீல் தொழிலில் நல்ல அனுபவம் கிடைத்தது. கட்சியைச் சேராத வேறு பலரும் வழக்குகளுக்காக அவரை நாடி வரத் தொடங்கி விட்டார்கள். பல வழக்குகளில் கருணாகரனுக்குத் தோல்வி ஏற்பட்டபோதிலும், அவருடைய வருமானத்தில் குறைவு ஏற்படவில்லை.



ஒரு வக்கீலின் தொழில் வாய்ப்பு, கிட்டத்தட்ட ஒரு சினிமா நடிகையின் வாய்ப்பைப் போன்றதுதான். ஒரு நடிகையின் படம், எந்தக் காரணத்தினாலாவது நூறு நாட்கள் ஓடவிடுமேயானால் பிறகு, பட முதலாளிகள் அவளைத்தான் செம்மறி ஆட்டுக் கூட்டம் மாதிரி போய் மொய்ப்பார்கள். அதே மாதிரிதான் பரபரப்பான ஒரு வழக்கில் ஒரு வக்கீலுக்கு வெற்றி கிட்டிடுமேயானால், அதன் பிறகு, பல வழக்குகள் அவரைத் தேடி வரத் தொடங்கிவிடும். அப்போது பிரபலமான ஓர் அரசியல் கொலை வழக்கில் கருணாகரன் ஆஜர் ஆனார். அந்த வழக்கில் குற்றவாளி சார்பில் யார் வாதித்தாலும் வெற்றி நிச்சயம். சாட்சியங்கள் பலவீனமாயிருந்தன. கண்ணால் பார்த்த சாட்சியங்கள் எதுவும் இல்லை. அந்த வழக்கில் கருணாகரனுக்கு வெற்றி கிட்டியதும் அவருடைய புகழ் உயரத் தொடங்கி விட்டது. இதுவும் போதாது என்று இரகசியமாக நாலைந்து புரோக்கர்களையும் அமர்த்தியிருந்தார். அவர்கள் மூலமாகவும் வழக்குகள் வரத் தொடங்கின.

இதெல்லாம் பழைய கதை. இருபது ஆண்டுகளுக்கு முற்பட்ட கதை. இப்போதும் கட்சியின் தொண்டர்கள் வறுமையில் வாடிய படியே பல போராட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் போது கருணாகரன், ஒரு ஜமீன்தாரைப் போல் வாழ்க்கை நடத்தி வந்தார். பெரிய பங்களாவும், காரும், விலை உயர்ந்த படாடோபப் பொருள்களும், பொமரேனியன் நாயும், அழகான சயாமிஸ் பூனையும் மூன்றாந்தார இளம் மனைவியுமாக வாழ்ந்து வந்தார்.

'புரட்சிக் கட்சித் தலைவரை ஒரு கல்லூரித் தலைவர் மதிக்கவில்லையே?' என்னும் மன உளைச்சலோடு நீதிமன்றத்தை நோக்கிக் காரைச் செலுத்திக் கொண்டிருந்த கருணாகரன், தெருவின் ஒரு திருப்பத்தில் கூட்டம் கூடியிருந்ததைப் பார்த்துக் காரை நிறுத்தினார். ஒரு பெரிய 'கெடிலாக்' காரும்; ஒரு மாட்டு வண்டியும் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தன. தம்முடைய காரை நிறுத்தி விட்டு, கூட்டத்தை நோக்கி விரைந்தார். அப்பொழுதுதான், அடிபட்ட ஒரு சிறுவனை ஆம்புலன்ஸ் வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். போலீஸ்காரர்கள், 'கெடிலாக்' காரின் சொந்தக்காரரை அணுகி விசாரித்துக் கொண்டிருந்தார்கள். மாட்டு வண்டிக்குப் பக்கத்தில் ஒரு வயதான கிழவர் அழுது கொண்டிருந்தார். கருணாகரன், அந்தக் கிழவரை நெருங்கினார்.

''அடி பலமோ....?'' என்று அக்கறையோடு கேட்டார்.

''ஒன்றும் தெரியவில்லை. மூச்சுப் பேச்சு இல்லை. எனக்கு அடிபட்டிருக்கக் கூடாதா?'' என்று புலம்பினார் கிழவர்.

''இது எப்படி நடந்தது?''

''சனியன் புடிச்ச மாடு, காரைக் கண்டு மிரண்டு குறுக்கே பாய்ந்து விட்டது'' என்றார் கிழவர்.

கருணாகரன், கிழவரின் கையைப் பற்றி மெதுவாக வண்டிக்குப் பின்னால் அழைத்துச் சென்றார். இரகசியமாகப் பேசத் தொடங்கினார்.

''பெரியவரே! மாடு குறுக்கே போனதாகச் சொல்லிக் கொண்டிருக்காதேயும்'' என்றார்.

''பின்னே...? மாடுதானே மிரண்டுபோய்க் குறுக்கே பாய்ந்து விட்டது?''

''இப்படிச் சொன்னால், போலீஸ், உம்மைத் தான் பிடிப்பார்கள்.''

''ஐயோ...!'' கிழவர் பதறினார்.

''கார்தான் திடீரென்று வந்து மோதி விட்டதாகச் சொல்ல வேண்டும். இல்லை என்றால் உமக்குத்தான் ஆபத்து.''

''ஓ...'' — கிழவர், கண்ணீரைத் துடைத்துக் கொண்டு யோசித்தார்.

''சரிங்க ... நல்ல வேளை, கடவுள் மாதிரி வந்து யோசனை சொன்னீங்க... என் பையன் பிழைப்பானா? இரத்தமாகக் கொட்டியிருக்கே ?''

''ஆஸ்பத்திரிக் காரிலே ஏற்றியாச்சே. இனி பயமில்லை. யாராவது பணம் விஷயமாக உம்மிடம் ஏதாவது கையெழுத்து கேட்டால் போட்டு விடாதேயும். ஆஸ்பத்திரிச் செலவை அந்தக் கார்க்காரரிடமிருந்தே நான் வாங்கித் தருகிறேன். ஆயிரக்கணக்கில் வாங்கித் தருகிறேன்.''

''ஐயா யாரு? தெரியலையே?''

''நான் இங்கே வக்கீலா யிருக்கிறேன். சாயங்காலம் ஆஸ்பத்திரிக்கு வந்து பார்க்கிறேன். உங்களிடம் பணம் விஷயமாக யாராவது பேச்சை எடுத்தால் வக்கீலிடம் கேட்டுப் பதில் சொல்வதாகச் சொல்லி

விடுங்கள். இல்லையென்றால், உங்களை ஏமாற்றி விடுவார்கள். எதிலும் கையெழுத்துப் போட்டு விடாதீர்கள். நான் கட்டாயம் சாயங்கலாம் ஆஸ்பத்திரிக்கு வருவேன்.''

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது போலீஸ்காரர் அந்தப் பக்கம் வந்து விடவே, கருணாகரன் மெல்ல நழுவி, கூட்டமிருந்த பக்கத்துக்குப் போய் விட்டார். கூட்டத்துக்கு நடுவே நின்று கொண்டிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரை நெருங்கினார். சப் - இன்ஸ்பெக்டர் காரின் சொந்தக்காரரை விசாரித்துக் கொண்டிருந்தார். அந்தக் கார், கஜேந்திரா மில் அதிபர் ராகவனுடையது என்பது கருணாகரனுக்குத் தெரியும்.

''என்ன மிஸ்டர் ராகவன்?'' என்று கேட்டுக் கொண்டே ராகவனை நெருங்கினார் கருணாகரன்.

''ஒரு சிறு ஆக்ஸிடெண்ட்'' என்றார் ராகவன்.

''ஆபத்து ஒன்றுமில்லையே?''

''நோ, நோ. அடி கொஞ்சம் பலம். அவ்வளவுதான். உயிருக்கு ஆபத்தில்லை'' என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

''மிஸ்டர் கருணாகரன்! நீங்கள் கோர்ட் பக்கம்தானே போகிறீர்கள்?'' என்று கேட்டார் ராகவன்.

''ஆமாம்.''

''ஒரு சின்ன உதவி.''

''என்ன வேண்டும்?''

''என் பெண்ணுக்குச் சாப்பாடு கொண்டு வந்தேன். வழியில் இப்படி ஆகிவிட்டது. உங்களுக்குச் சிரமம் இல்லையென்றால், இந்த டிபன் காரியரை அவளிடம் கொடுத்து விட வேண்டும்.''

''நளினியிடம்தானே...? கொடுத்து விடுகிறேன்.''

''ஆவுடையப்ப பிள்ளையின் ஆபீஸில் அவள் இருப்பாள்!''

''எனக்குத் தெரியும். நான் கொடுத்து விடுகிறேன்'' என்று கூறி, டிபன்காரியரை வாங்கிக் கொண்டார் கருணாகரன்.

''இந்த விபத்தைப் பற்றிப் பயப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள். இல்லையென்றால், கவலைப்பட்டுக் கொண்டே யிருப்பாள்.''

''ஓ...யெஸ்'' என்று கூறியவாறே, டிபன் காரியருடன் தம்முடைய காரை நோக்கி நடந்தார் கருணாகரன்.

கருணாகரனுக்கு உள்ளூற மகிழ்ச்சி. இந்த விபத்தினால் எப்படியும் இரண்டாயிரம் ரூபாயாவது லாபம் கிட்டலாம். மனத்துக்குள்ளேயே கணக்குப் போட்டுக் கொண்டார்.

இலகுவான கணக்குத்தான் — நீதிமன்றத்தில் ஐயாயிரம் நஷ்டஈடு கேட்டு வழக்குத்



தொடர்ந்தால், மூவாயிரமாவது கிடைக்கலாம். அடிபட்டவனுக்கு ஆயிரம் கொடுத்தது போக மீதி இரண்டாயிரம் அவருக்குத்தான். அடிபட்டவனுடைய கையோ காலோ நிரந்தர ஊனம் அடைந்து விட்டால், பதினையிரத்துக்கு வழக்குப் போடலாம். மூவாயிரத்தைக் கொடுத்து விட்டால் பாக்கியுள்ள ஏழாயிரம் அவருக்கு. மாலையில் ஆஸ்பத்திரிக்குப் போனுல் தெரியும் அடிபட்டவனுடைய நிலை எப்படி என்பது. நல்ல வேளை, விபத்து நடந்த இடத்தில் வேறு வக்கீல் யாரும் இல்லை. இருந்திருந்தால் இந்த வாய்ப்பை அவன் தட்டிக் கொண்டு போயிருப்பான்...

கருணுகரன், கணக்குப் போட்டபடியே காரைச் செலுத்திக் கொண்டிருந்தார். ஆவுடையப்ப பிள்ளையின் அலுவலகத்தை அடைந்த போது, அங்கு நளினி இல்லை. "சாப்பாடு வராததால் ஹோட்டலுக்குப் போய் விட்டாள்" என்றுர் அங்கிருந்த குமாஸ்தா சண்முகம் பிள்ளை. டிபன் காரியரைக் குமாஸ்தாவிடம் ஒப்படைத்து விட்டு நீதிமன்றத்தை நோக்கிக் காரைச் செலுத்திஞர் கருணுகரன்.

9. காதல் விபத்தும்; கார் விபத்தும்

"ஹோட்டலுக்குப் போவோம்; இன்னும் சாப்பாடு வந்து சேரவில்லை" என்றுள் நளினி.

"இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போமே. வீணுக ஹோட்டலுக்குச் செலவழிப்பானேன்?" என்றுன் சம்பத்.

"நேரமாகி விட்டதே. இன்னும் அரை மணியில் கோர்ட் ஆரம்பமாகிவிடும். வாருங்கள், போகலாம்" என்று கூறியபடியே எழுந்தாள் நளினி.

இருவரும் பக்கத்துத் தெருவில் இருந்த கஸ்தூரி ஹோட்டலை நோக்கி நடந்தார்கள்.

"கோர்ட்டில் சிரித்தார்களே, ஏன் ?" என்று கேட்டாள் நளினி.

"எப்போது ?"

"கருணுகரனைப் பற்றி நம்முடைய சீனியர் ஏதோ சொன்னுரே அப்போது....?"

"ஓ.... அதுவா...?" என்று கேட்டு விட்டுப் பதில் சொல்லாமல் சிரித்தான் சம்பத்.

"என்ன விஷயம் ?" — நளினி கேட்டாள்.

"கருணுகரனைப் பற்றிய சொந்தவிஷயம்."

"என்ன அது?"

சம்பத் பதில் கூருமல் சிரித்தபடியே நடந்தான்.

"ஏன் இன்று சாப்பாடு வரவில்லை ?.... அனுப்ப மறந்து விட்டார்களோ?" என்று பேச்சை வேறு திசையில் திருப்பினுன். நளினி சிரித்தாள்.

"நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் பேச்சை மாற்றுகிறீர்களே!" என்றுள்.

"அதுதான் சொன்னேனே, கருணுகரனின் சொந்த விஷயம் என்று."

"அந்த விஷயம் என்னது?" — அழுத்திக் கேட்டாள் நளினி.

"நம்முடைய சீனியர் என்ன சொன்னுர்?"

"ஆக்டிவாக இருக்க வேண்டும் என்று ஆசை மட்டும் இருந்தால் போதுமா? வெளியில் சொல்லிக் கொள்ளலாம், ஆக்டிவாக இருப்பதாக என்றுர்."

"அதுதான்."

"அப்படி என்றுல்?" — புரியாமல் கேட்டாள் நளினி.

சம்பத் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

"பதில் சொல்லாமல் சிரிக்கிறீர்களே !"

"சீனியர் சொன்னதிலேயே பதிலும் இருக்கிறதே !" என்றுன்.

"அதற்கும் வக்கீல் கருணுகரனுக்கும் என்ன சம்பந்தம் ?"

"இன்னும் உனக்குப் புரியவில்லையா ? அவர் சொன்னது கருணுகரனுக்குப் பொருந்தும்" என்றுன் சம்பத்.

நளினி சற்று யோசித்தாள். பிறகு திடீரென்று புரிந்துகொண்டு வியப்புடன் புருவத்தை உயர்த்திச் சம்பத்தைப் பார்த்தாள். அவளுடைய பார்வையைப் புரிந்து கொண்டு, ஆமோதிப்பது போல் தன் தலையை அசைத்தான் சம்பத்.

கஸ்தூரி ஹோட்டலுக்குள் ஒரு தனி அறைக்குள் இருவரும் சென்று அமர்ந்தார்கள். அது ஒரு சிறு ஹோட்டல். மூக்காண்டி ஐயர் என்பவர்தான் அந்த ஹோட்டலின் சொந்தக்காரர், மானேஜர், சரக்கு மாஸ்டர் எல்லாம். அவருடைய இனிப்புப் பதார்த்தங்கள் அந்த வட்டாரத்தில் புகழ் பெற்றவை. வக்கீல்கள் அடிக்கடி அங்கு செல்வதால் மூக்காண்டி ஐயர், மிகுந்த சிரத்தையுடன் பதார்த்தங்களை ஆக்குவார். வக்கீல்களுக்கு மட்டும் தாமே சென்று பரிமாறுவார். மற்றவர்களுக்குப் பரிமாற இரண்டு சர்வர்களை வேலைக்கு வைத்திருந்தார். பாதாம் அல்வாதான் அவருடைய அபிமான பதார்த்தம். நளினியையும் சம்பத்தையும் கண்டதும் மூக்காண்டி ஐயர், முகம் மலர அந்த அறைக்குள் நுழைந்தார்.

"போன வாரம் வந்த பிறகு இன்றைக்குத்தான் வருகிறீர்கள். இப்போதுதான் பாதாம் அல்வா கிளறியிருக்கிறேன்" என்று கூறி விட்டு வெளியே செல்லப் புறப்பட்டார், மூக்காண்டி ஐயர்.

"ஐயர்! ஆளுக்கு இரண்டு ரவா தோசை. இவருக்கு மட்டும் முறுகல்" என்றுள் நளினி. மூக்காண்டி ஐயர் உற்சாகத்தோடு தலையை அசைத்துவிட்டு வெளியேறினுர். சற்று நேரத்தில் இரண்டு இலைகளில் சூடான பாதாம் அல்வாவுடன் வந்தார். நளினியின் முன்னுல் ஓர் இலையையும் சம்பத்தின் முன்னுல் ஓர் இலையையும் வைத்துவிட்டுச் சென்றுர்.

"அப்படியானுல் கருணுகரன் மூன்றுவது முறையாகக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறுரே!" என்று கேட்டாள் நளினி.

"ஆமாம்..." என்று கூறிக் கொண்டே இலையிலிருந்த அல்வாவில் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டான் சம்பத். அல்வா சூடாயிருந்ததால், வாயில் போட்ட

தும் கூடவே, அல்வாவை வாய்க்குள்ளேயே புரட்டிக் கொண்டிருந்தான். அவன் படும் பாட்டைக் கண்டதும் நளினிக்குச் சிரிப்பு வந்தது. அவனும் அசடு வழியச் சிரித்துக் கொண்டான்.

நளினி ஏதோ சிந்தனையில் ஆட்பட்டவளாகச் சாப்பிடத் தொடங்கினாள். சம்பத்தைப் பார்த்துக் கேட்டாள்: ''அப்படியானால், அவர் ஏன் திருமணம் செய்து கொள்கிறார் ?''

''தான் அப்படி இல்லை என்று மற்றவர்கள் நம்பவேண்டும் என்பதற்காகத்தான்.''

''ஓ......!''

நளினி புரிந்து கொண்டு தலையை அசைத்தாள். அவள் சாப்பிடுவதைப் பார்த்து ரசித்தான் சம்பத்.

''அல்வா பிரமாதம் இல்லையா ?'' என்று கேட்டான்.

நளினி அவனுடைய இலையைப் பார்த்தாள். இலை காலியாக இருந்தது. மூக்காண்டி ஐயர் ரவா தோசைகளுடன் வந்தார்.

''அல்வா கொண்டு வாரும்'' என்று கூறிச் சம்பத்தின் இலையைச் சுட்டிக் காட்டினாள் நளினி.

''எனக்குப் போதும்'' என்றான் சம்பத்.

''இன்னும் ஒரு பிளேட் சாப்பிடலாமே? மூக்காண்டி ஐயர், கொண்டு வாரும்'' என்றாள் நளினி.

''உனக்கு?'' — சம்பத் கேட்டான்.

''எனக்குப் போதும்.''

''எனக்கும் போதும்.''

''உங்களுக்குப் பாதாம் அல்வா பிடிக்கும்.''

''நீயும் சாப்பிடுவதானால் நான் சாப்பிடுகிறேன்.''

''இரண்டு பேருக்குமே கொண்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு ரவா தோசையை அவர்கள் முன்னால் வைத்துவிட்டு விரைந்து சென்றார், மூக்காண்டி ஐயர்.

சம்பத் ரவா தோசையைச் சாப்பிடத் தொடங்கினான். சாப்பிடும் போது மாத்திரம் அவன் அவலக்ஷணமாயிருப்பான். சாப்பாட்டை வாயில் திணித்துக் கொண்டு வாயைத் திறந்தவாறு அவன் சுவைப்பதைப் பார்க்க அறுவறுப்பாயிருக்கும். அவனுடைய கவர்ச்சியும் அழகும் சாப்பிடும்போது எப்படித்தான் மறைந்து விடுகின்றனவோ! நாகரிகமாகச் சாப்பிட அவனுக்கு யாரும் கற்றுக் கொடுக்கவில்லை போலும். மோர்ச் சாதமோ அல்லது பாயசமோ சாப்பிடும் போது, அவன் உறிஞ்சும் விதமே அறுவறுப்பாயிருக்கும். ஒரு விருந்தில் பலர் முன்னிலையில் சாப்பிடக் கொஞ்சம்கூட அருகதை இல்லாதவன். ஒன்றிரண்டு முறை அவனிடமே அதைப் பற்றிச் சொல்ல நினைத்தாள். ஆனால் அப்படிச் சொல்வது நாகரிகமில்லை என்று நினைத்துச் சும்மா இருந்துவிட்டாள் நளினி. அவனை நாகரிகமாகச் சாப்பிடப் பழக்க வேண்டும் என்று மட்டும் முடிவு செய்தாள்.

அதைத் தவிர அவனிடம் வேறு எந்தக் குறையையும் காணவில்லை. அவள்மீது அவன் கொண்டுள்ள அக்கறையை அவள் உணர்ந்திருந்தாள். அவனுடைய பேச்சு, பார்வை, நெருக்கம் எல்லாமே வெறும் நட்பு என்னும் எல்லையைத் தாண்டியிருந்தன என்பதை அவள் புரிந்து கொண்டுதான் இருந்



குரங்கு 'க்யூ'!

எஸ். எல். என். எஸ். டிரான்ஸ்போர்ட்ஸ் என்ற ஸ்தாபனத்தாரைச் சேர்ந்த பஸ் தினமும் காலை எட்டு மணி முதல் எட்டு பதினைந்துக்குள் 'சடத்தாங்கல்' முச்சந்தியைக் கடந்து, செய்யாறு நோக்கிச் செல்லும். பஸ் சடத்தாங்கலை நெருங்கி வரும் போதே டிரைவர் தொடர்ந்து ஹாரன் ஒலி எழுப்புகிறார். அண்மையில் ஒரு தோப்பில் வாசம் செய்யும் குரங்குக் கூட்டம் ஒன்று இவ்வொலியைக் கேட்டு அம்முச்சந்தியில் ஒரு குறிப்பிட்ட இடத்தில், சாலைக்குக் குறுக்காக வந்து சேருகிறது. சிறியவையும், பெரியவையுமாய்ச் சுமார் முப்பது நாற்பது குரங்குகள் வருகின்றன. உடனே பஸ் டிரைவர், ஒவ்வொரு குரங்குக்கும் ஒரு பன், ஒரு வாழைப் பழம் தருகிறார். குரங்குகளும் அவரிடமிருந்து அவைகளை ஒன்றோடொன்று போட்டியிடாமல் ஒன்றன்பின் ஒன்றாக க்யூ வரிசையில் வந்து பெற்றுச் செல்கின்றன.

இதற்காக டிரைவர் பஸ் புறப்படுமுன் பத்து ரூபாய்க்கு இரண்டு பைகள் நிறைய பன்னும், பழமும் வாங்கி வைத்துக் கொள்கிறார் !

-- எம்.எஸ். ராகவன்

தாள். ஆனால் அதைக் காதல் என்று முடிவு கட்டிக் கொண்டு, அதே நினைவில் மயங்கிப் போக அவளுக்கு விருப்பமில்லை. மொத்தத்தில் 'காதல்' என்பதிலேயே அவள் நம்பிக்கை இழந்திருந்தாள்.

தன்னுடைய கரிய நிறமும், எடுப்பாக அமையாத மூக்கும் பிறரைக் கவர முடியாது என்பதை உணர்ந்திருந்தாள். ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் சம்பத் தன்னை நேசிப்பதை உணர்ந்ததும் அவன்மீது அவளுக்கு நன்றி உணர்வே தோன்றியது. அந்த உணர்வைக் காதலாக எண்ணிக் கொள்ள அவள் அறிவு மறுத்துவிட்டது.

நளினியின் சகோதரி, காதலித்துத்தான் மணந்தாள். திருமணத்துக்குப் பிறகு கணவனுக்கும் மனைவிக்கும் ஒத்து வராமல் அநேக நாட்கள் அவள், தந்தை வீட்டிலேயே இருந்தாள். 'கண்ணே மூக்கே' என்று, காதலிக்கும் போது குழைந்து குழைந்து மறுகும் ஆண்கள், கல்யாணத்துக்குப் பிறகு கேவலமாக நடந்து கொள்ளும் விந்தையை நளினி பல குடும்பங்களில் கண்டிருந்ததால், காதல் விஷயத்தில் அக்கறை காட்டவில்லை. தன்னுடைய சகோதரியின் கண்ணீரையும், பெருமூச்சையும், மன வேதனையையும் கண்ட பிறகு, காதல் என்பதே ஓர் ஆணும் பெண்ணும் தங்கள் இயல்பை ஒருவரிடமிருந்து மற்றவர் அறியா வண்ணம் மறைத்துக் கொள்ளும் பாசாங்குத்தனம் என்ற முடிவுக்கு நளினி வந்தாள். கல்யாணத்துக்குப் பிறகு இயல்பான குணம் வெளிப்படும்போது, திகைக்க வேண்டியிருக்கிறது. அந்த மாதிரியான ஓர் ஏமாற்றத்துக்கு நளினி ஆளாகப் பிரியப்படவில்லை. பெற்



''உன் அந்தரங்கக் கடிதங்களையெல்லாம் உன் அண்ணன் படித்துவிடமாட்டானு ?''

''அதுதான் முடியாது. எல்லாக் கடிதங்களையும் அவன் காலேஜ் புத்தகங்களுக்குள் மறைச்சு வைச்சுடு வேன்!''

-கீதா

ளூர்கள் பார்த்து முடிவு செய்யும் எவனே டும் அன்பாக வாழ முடியும் என்று நம்பினுள்.

சம்பத்தினுடைய நட்பு அவளுக்குப் பிடித் திருந்தது; தேவையாகவும் இருந்தது. சில வேளைகளில் அவனுடைய பார்வையிலும், பேச்சிலும் ஏற்பட்ட குழைவையும், தாபத் தையும் அவள் உணர்ந்தபோது, அதைப் புறக்கணிக்கவும் முடியாமல் ஏற்கவும் முடி யாமல் தவித்தாள். அவன் மீது அவளுக்கு அன்பு உண்டு, அக்கறை உண்டு. அதற்கு மேல் வேறு எதையும் அவளிடம் அவன் எதிர் பார்ப்பதை அவள் விரும்பவில்லை. ஆனுலும் சில வேளைகளில் அவன் காட்டும் அன்பும் பரிவும் அவள் மனத்தில் குறுகுறுப்பை ஏற் படுத்தி விடுவதும் உண்டு.

ஓரக்கண்ணுல் அவனைப் பார்த்தாள் நளினி. அவன் ரவா தோசையைச் சாப்பிடுவதில் லயித்திருந்தான். அவனுடைய நெற்றியில் தலை முடி கலைந்து புரண்டு கொண்டிருந்தது. அதை ஒதுக்கிவிட வேண்டும் என்னும் குறுகுறுப்பு அவளுக்குத் தோன்றியது.

சாப்பிட்டு முடிந்ததும் மூக்காண்டி ஐயர், பில்லோடு வந்தார். அவருக்குத் தெரியும், யாரிடம் பில்லைக் கொடுக்க வேண்டும் என்று. மெதுவாக நளினியின் பக்கத்தில் வந்து பில்லை வைத்தார். நளினி, பர்ஸைத் திறந்து பணத்தைக் கொடுத்தாள். சம்பத் பரபரப் புடன் தன் பர்ஸை எடுத்தான்.

''நான் கொடுத்துவிட்டேன்'' என்றுள் நளினி, சிரித்துக் கொண்டே. சம்பத், பர்ஸைப் பைக்குள் போட்டபடியே சொன்னுன்:

''நீதான் தினமும் என்னை உபசரிக்கிறுய். உன்னை உபசரித்து விருந்து நடத்த வேண்டும் என்று எனக்கு ஆசை.''

''ஒருநாள் அதற்கு ஏற்பாடு செய்துவிட் டால் போகிறது'' என்றுள், நளினி சிரித்துக் கொண்டே. அவள் சிரித்தபோது கவர்ச்சி யாக இருந்தாள். அந்தக் கவர்ச்சியை ரசித் தான் சம்பத்.

இருவரும் பேசிக் கொண்டே நீதிமன் றத்தை நோக்கி நடந்த போது, ஒரு திருப்பத் தில் கருணுகரனின் காருக்குள் கருணுகரனும், பஞ்சாயத்துப் போர்டு தலைவரும் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

''நளினி...! உன்னுடைய டிபன் காரியரை உங்கள் ஆபீஸ் கிளார்க்கிடம் கொடுத்திருக் கிறேன்'' என்றுர் கருணுகரன்.

''உங்களிடம் எப்படி டிபன் காரியர் வந்தது?'' — வியப்புடன் கேட்டாள் நளினி.

''உன் அப்பாதான் கொண்டு வந்தார், வழியில் சிறு விபத்து!''

''ஐயோ....'' — நளினி பதறினுள்.

''பயமில்லை. சிறு விபத்துத்தான். வண்டி மீது கார் இலேசாக இடித்துவிட்டது. நான் அந்த வழியாகப் போனேன். டிபன் காரியரை நான் வாங்கி வந்தேன்.''

''யாருக்கும் அடி இல்லையே?'' — பதற்றத் தோடு கேட்டாள் நளினி.

''நோ நோ, நத்திங்.... மாட்டு வண்டியை ஓட்டி வந்த பையனுக்கு மட்டும் சிறு காயம். அவ்வளவுதான் பயப்பட ஒன்றுமில்லை.''

''அப்பா எங்கே ?''

''இப்போது போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருப்பார், வாக்குமூலம் கொடுக்க.''

''போன் பண்ணிக் கேட்டுக் கொள்கி றேன்'' என்று கூறிவிட்டு வக்கீல் சங்கத்தை நோக்கி விரைந்தாள் நளினி. அவளைத் தொடர்ந்து சம்பத்தும் சென்றுன். வக்கீல் சங்கத்து போன் மூலமாகப் போலீஸ் ஸ்டேஷனுடன் தொடர்பு கொண்டாள். ராகவன் அங்கிருந்து காயம் அடைந்தவனைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டதாகத் தகவல் கிடைக்கவே, ஆஸ்பத்திரிக்குப் போன் செய்தாள்.

''ஆபத்து ஒன்றுமில்லை. முதுகு எலும்பில் அடி. கை எலும்பும் முறிந்திருக்கிறது. வேறு ஒன்றுமில்லை'' என்றுர் ராகவன்.

நளினி நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள்.

''நளினி! நான் அடிபட்டவனுடைய ஆஸ் பத்திரிச் செலவுக்குப் பணம் கொடுத்தேன். அவனுடைய அப்பா வாங்க மறுக்கருரே ! வக்கீலிடம் கேட்காமல் வாங்க முடியாது என்கிருர். யாரோ ஒரு வக்கீல் சொன்னு ராம். விபத்து நடந்த இடத்தில் கருணுகரன் தான் இருந்தார்'' என்றுர் ராகவன்.

''சொன்னுலும் சொல்லியிருப்பார் !'' என்றுள் நளினி.

''சாப்பாடு வந்து சேர்ந்ததா ?''

''அதற்கு முன்பே நான் கஸ்தூரி ஹோட்ட லில் சாப்பிட்டு விட்டேன். அப்பா, இன் றைக்கு மத்தியானமும் கேஸ் இருக்கிறது. வீட்டுக்கு வர நேரமாகும். வரும்போது உங்களுக்குக் கஸ்தூரி ஹோட்டல் பாதாம் அல்வா வாங்கி வருகிறேன்'' என்றுள், நளினி. போனின் மறு பக்கத்தில் ராகவன் சிரிப்பது கேட்டது. நளினி போனைக் கீழே வைத்து விட்டுத் தலை நிமிர்ந்த போது, ''ஆபத்து ஒன்றுமில்லையே?'' என்று கேட் டான் சம்பத்.

''இல்லை...... விபத்து நடந்த இடத்தில் கருணுகரன் ஏதோ சதி பண்ணியிருக்கிருர்'' என்றுள் நளினி.

''என்ன?''

''யாரும் பணம் கொடுத்தால் வாங்க வேண்டாம் என்று அடிபட்டவனின் உறவின ரிடம் சொல்லியிருப்பார் போலிருக்கிறது.''

''நிச்சயமாகச் சொல்லியிருப்பார். நஷ்ட ஈடு கேட்டு வழக்குத் தொடர யோசனை கூறி யிருப்பார். தெருவில் எங்கே விபத்துநடக்கிறது என்று காத்துக்கொண் டிருப்பவர்களிலே ஒருவர்தான் இந்தக் கருணுகரனும்....'' என் றுன் சம்பத் முகத்தைச் சுளித்துக் கொண்டு.

நளினி கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். இரண்டு மணி. இருவரும் நீதிமன்றத்தை நோக்கி விரைந்தனர். (தொடரும்)

10. கோமளத்தின் குழைவும் கோபமும்

டெலிஃபோன் மணி அடித்ததுமே நாகசுந்தரம் தெரிந்து கொண்டார், வீட்டிலிருந்து மனைவி கூப்பிடுகிறாள் என்று. போனை எடுத்துப் பேசத் தயங்கினார். நிச்சயம் கோமளம் எரிமலையாகக் குமுறுவாள். போனை எடுக்காமலிருந்தால், ஆள் இல்லை என்று நினைத்துக் கொள்வாள். அப்படியே நினைத்துக் கொள்ளட்டுமே. ஆனால் இந்த நேரத்தில் நான் எங்கேயும் போக மாட்டேன் என்பதும் அவளுக்குத் தெரியும். வேண்டுமென்றேதான் நான் போனை எடுக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்வாள். சாயங்காலம் அவளிடம் என்ன சொல்லித் தப்ப முடியும்?

நாகசுந்தரம், போனை எடுத்தார். ''ஹலோ.... ஏன் இன்னும் வரவில்லை ?'' என்ற குரலிலேயே கோமளம் எவ்வளவு கோபத்தில் இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டார் நாகசுந்தரம்.

'' நான் காலையிலேயே சொன்னேனே, புது வழக்கு இன்று தொடங்குகிறது என்று.''

''முக்கியமான வழக்கு நடக்கிறது; நான் வர முடியவில்லை என்று அவர்களிடம் சொல்லேன்.''

''விருந்துக்கு அழைத்துவிட்டு இப்படிச் சொன்னால் சிரிப்பார்கள்.''

'' நான் இங்கிருந்து இப்போது வந்துவிட்டால், கோர்ட்டில் என்னைப் பார்த்துச் சிரிப்பார்களே?''

'' நீங்கள் வரவில்லை என்றால் இங்கே வந்திருப்பவர்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கமாட்டார்களோ ?''

'' எப்படியாவது சமாளித்துக் கொள்ளேன்.''

''உங்களுக்கு என்னைப் பற்றிக் கவலை கிடையாது. என்னைப் பற்றி யார் சிரித்தால் உங்களுக்கு என்ன?''

''கோமளம்....!'' — அவளைச் சமாதானப் படுத்த முயன்றார்.

''நீங்கள் வரப் போகிறீர்களா,இல்லையா?''



'' எனக்குக் காரணம் தேவை யில்லை. இன்னும் பதினைந்து நிமிடங்களில் நீங்கள் இங்கே வந்து சேர வேண்டும்.''

''மெதுவாகப் பேசேன். அங்கு யார் காதிலாவது விழப் போகிறது.''

''எல்லோரும் மாடியில் இருக்கிறார்கள். நான் பேசுவது கேட்காது. கேட்டால்தான் என்னவாம்? நீங்கள் இப்போது வராமல் இருப்பதைவிடவா அவமானம் வந்துவிடப் போகிறது ?''

''கோமளம்.....'' — நாகசுந்தரம் குழைந்தார்.

''எந்தக் காரணத்தையும் நான் கேட்கத் தயாரில்லை.''

''பாதியில் வழக்கை எப்படி விட்டுவிட்டு வருவது ?''

'' ஏன்? வழக்கை நாளை ஆரம்பித்துக் கொண்டால் என்னவாம்?''

''அது எப்படி முடியும்?''

''எப்படி முடியுமோ, எனக்குத் தெரியாது. இங்கே எல்லோரும் வந்துவிட்டார்கள். உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள்.''

கோமளத்தின் குரல் கரகரத்தது. கிட்டத்தட்ட அழும் நிலையில் இருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டார்.

'' கோமளம்! புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாயே. வழக்குக்காக வக்கீல்களும் சாட்சிகளும் காத்திருக்கும்போது, நான் பாதியில் வழக்கை நிறுத்திவிட்டுப் போவது அழகா ?''

''அப்படியானால், நேற்றே திட்டவட்டமாகச் சொல்லியிருக்கலாமே. இவ்வளவு பேரை விருந்துக்கு அழைத்து, என் மானத்தை வாங்கியிருக்க வேண்டாமே?''

கோமளத்தின் குரலில் கோபமும் அழுகையும் கலந்து வருவது தெரிந்தது.

''நான்தான் நேற்றே சொன்னேனே.''

''சரி, எதற்கு வீண் பேச்சு? இப்போது நீங்கள் வரப் போகிறீர்களா, இல்லையா ?''

''கேஸ் ஆரம்பமாகிவிட்டது.....''

''நீங்களும் உங்கள் கேஸூம்'' என்று கூறிக் கொண்டே போனைக் கீழே வைத்துவிட்டாள் கோமளம்.

நாகசுந்தரம் போனை வைத்துவிட்டுச் சோர்வுடன் சாய்வுநாற்காலியில் சாய்ந்தார். அந்த நேரத்தில் அவருடைய வீட்டில் இருபது பேர்களாவது கூடியிருப்பார்கள். அந்த விருந்துக்குக் கோமளம்தான் ஏற்பாடு செய்திருந்தாள். அன்று மாலை நடைபெறும் அவளுடைய புத்தக வெளியீட்டு விழாவை முன்னிட்டு அவளுடைய சிநேகிதிகளுக்காக ஏற்பாடு செய்திருந்த விருந்து அது. சிநேகிதிகளுடன் அவர்களுடைய கணவர்களும் வந்திருப்பார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் தன்னுடைய கணவரும் அருகில் இருக்க வேண்டும் என்று கோமளம் விரும்புவது நியாயம்தான். ஆனால், அவருக்கு நீதிமன்றத்தில் வேலை இருக்கும் போது.....

வேலையை ஒத்தி வைத்துவிட்டு அவர் போய்விடலாம். ஆனால் வழக்குக்காக வக்கீல்களும், சாட்சிகளும் தயாராக வந்துவிட்டபிறகு ஒத்தி வைத்தால், மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்? இப்படி ஏற்கனவே பல தடவைகள் ஒத்தி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். அது பற்றி வக்கீல் சங்கத்தில் குறை கூறினார்கள் என்ற செய்தி அவருக்கு எட்டியிருந்தது. இப்போது வீட்டில் நடக்கும் விருந்துக்காக நீதிபதி போய்விட்டார் என்று தெரிந்தால், வக்கீல்கள் நிச்சயம் கோபம் அடைவார்கள்.

ஏற்கனவே அவர்மீது பல குற்றச்சாட்டுகளை வக்கீல் சங்கம் சுமத்திக் கொண்டிருந்தது. அவர் மீது கண்டனத் தீர்மானம் போடக்கூட வக்கீல் சங்கம் முடிவெடுத்திருந்ததைப் பற்றி அவருக்குத் தெரியும். ஒரு நீதிபதி மீது கண்டனத் தீர்மானம் போடுவது என்பது எவ்வளவு அவமானகரமான நடவடிக்கை. இந்தச் சமயத்தில், அவர் மத்தியானம் நீதிமன்றத்துக்கு வராமல், வீட்டு விருந்தைப் பெரிதாக எண்ணிக் கொண்டு போவது நல்லதில்லை. இதை உணர்ந்த நாகசுந்தரம் மனம் குழம்பினார்.

அதே சமயம் கோமளத்தின் கோபதாபத்தை எண்ணியும் அவர் தடுமாறினார். இந்த வயதில் இப்படி ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு தவிக்க வேண்டியிருக்கிறதே என்று மனம் புழுங்கினார். உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆதரவு வேண்டும் என்ற தவிப்புத்தான் ஐம்பது வயதில் அவரை இரண்டாவது முறையாகத் திருமணம் செய்யத் தூண்டியது.

முதல் மனைவி மூலமாகக் குழந்தை இல்லை. அவள் இறந்த பிறகு, கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகள் தனிமையிலேயே வாழ்க்கையைக் கழித்தார். தனிமை அவரை வாட்டியது. குழந்தை இல்லையே என்ற ஏக்கம். கோமளத்தை மணந்து ஆண்டுகள் நான்காகியும் வாரிசு கிடைப்பதற்கான அறிகுறி இல்லை.

இதை நினைத்தபோது, நாகசுந்தரம் தமக்குள்ளேயே நகைத்துக் கொண்டார்.

தசரதச் சக்கரவர்த்தி, இக்ஷ்வாகு வம்சத்துக்கு வாரிசு அற்றுப் போய்விடுமே என்று தவித்த மாதிரி ஒரு தவிப்பா இது? என்னுடைய வாரிசு எந்த நாட்டை ஆளப் போகிறான்? இயற்கை வேகங்களுக்கு அடிமைப்பட்டு அதை வாரிசு தேவை என்னும் பாசாங்



இல் மறைத்துச் செய்து கொண்ட கல்யாணம் தானே இது? கோமளத்தின் குடும்பம், வறுமையில் வாடப் போய் அவளுடைய அப்பன், பெண்ணை விற்பது போல் அவளை எனக்குக் கொடுத்தான். ஆனால் கோமளத்தின் மீது என்ன குறை சொல்ல முடியும்? கொஞ்சம் பிடிவாதக்காரி. என் மீது அக்கறையோ அன்போ இல்லாமலா இருக்கிறாள்? ஆனால் அவளுடைய விருப்பங்கள் அனைத்துக்கும் ஈடு கொடுக்க எனக்கு நேரமோ தெம்போ இல்லையே!

அடேயப்பா! அவளுடைய ஆசைக்குத்தான் கணக்கு ஏது? அவைகளையெல்லாம் நான் ரசிக்கக்கூட முடியவில்லையே. ரசிக்கக் கூடிய வயதைத் தாண்டிவிட்டேனா, என்ன? என்ன இருந்தாலும், இத்தனை வயதுக்கு மேல் நான் கல்யாணம் செய்து கொண்டது தவறுதான். ஏழெட்டு மாதங்களுக்குமுன் ஜவுளிக் கடையில் சொன்னானே.... சே, அதை நினைக்கும்போது மனம் எவ்வளவு சங்கடப்படுகிறது? உண்மையிலேயே எனக்குக் குழந்தை இருக்குமானால், கோமளத்தைவிட வயதில் முதிர்ந்த ஒரு மகள் இருப்பாளே. பேரக் குழந்தைகள்கூடப் பிறந்திருக்கும். அந்த ஜவுளிக் கடைக்காரன் சொன்னதில் என்ன தப்பு? அவன்மீது எனக்கு ஏற்பட்ட கோபத்துக்கு என்ன நியாயம்?

நாகசுந்தரத்தின் மனத்தில் எண்ணக் குவியல்கள் நிறைந்தன —

''சார்! இந்தப் புடவை உங்கள் மகளுக்குப் பொறுத்தமாயிருக்கும்'' என்று ஜவுளிக் கடைக்காரன் சொன்னதும் நாகசுந்தரத்தின் மனம் கூசிக் குறுகிவிட்டது! கடைக்கண்ணால் கோமளத்தைப் பார்த்தார். அவளுடைய முகம் ஒரு கணத்தில் வாடிவிட்டது. கடைக்காரன் சொன்னதைக் கவனியாதவளைப் போல் பாசாங்கு செய்தாள். நாகசுந்தரத்தின் மனம் தவித்தது. ஜவுளிக் கடையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பொழுது, இருவருமே பேசிக் கொள்ளவில்லை. இருவருடைய மனத்தையும் ஜவுளிக் கடைக்காரனின் வார்த்தைகள் புண்படுத்தியிருந்தன. அதிகமாகப் பாதிக்கப்பட்டவர் நாகசுந்தரம்தான். கோமளத்தைப் பார்க்கக் கூடத் தெம்பிழந்து விட்டார்.

இரவு, நாகசுந்தரம் விரைவில் படுத்துக் கொண்டார். அவர் பக்கத்தில் போய் அமர்ந்த கோமளம் கேட்டாள்: ''ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்?''

கண்களை மூடிக் கிடந்த நாகசுந்தரம், கண்களைத் திறக்காமலேயே அவருடைய மார்பில் கிடந்த அவள் கரத்தைப் பற்றிக் கொண்டார். அவருடைய கை நடுங்கியதை அவள் உணர்ந்தாள். வாஞ்சையோடு அவருடைய தலையை வருடினாள்.

''எனக்குத் தெரியும், நீங்கள் ஏன் சோர்வாய் இருக்கிறீர்கள் என்று!'' என்று அவருடைய முகத்துக்குப் பக்கத்தில் குனிந்தபடி சொன்னாள். கண்களை விழித்த நாகசுந்தரம், கலக்கத்துடன் அவளுடைய கண்களை உற்றுப் பார்த்தார்.



அவள் சிரித்தாள். அந்தச் சிரிப்பு, அவருடைய மனப் புண்ணை வருடி வலியைப் போக்குவதா யிருந்தது.

''அந்த முட்டாள் ஜவுளிக் கடைக்காரன் சொன்னதை நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்'' என்றாள் கோமளம் சிரித்துக் கொண்டே.

''அவன் சொன்னதில் என்ன தப்பு?'' என்றார் நாகசுந்தரம், அவளுடைய கையை வருடினார்.

'' யாரும் எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும், அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்.''

''என்னைக் கல்யாணம் செய்து கொண்டதால் உனக்குத்தான் என்ன பெருமை?''

'' ஏன் இல்லை? நான் பெருமை அடையத்தான் செய்கிறேன்'' என்று கோமளம் கூறியதும் நாகசுசுந்தரம், அவளுடைய கையைத் தம்முடைய இரு கரங்களாலும் இறுகப் பற்றிக் கொண்டு கேட்டார்: ''உண்மையைச் சொல்; என்னோடு வெளியே வர உனக்குக் கூச்சமாயில்லையா?''

கோமளம் திகைத்துப் போய் அவரை உற்றுப் பார்த்தாள். அவருடைய மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டு சொன்னாள்: ''சத்தியமாகச் சொல்கிறேன், உங்களோடு சேர்ந்து சொல்வதில் எனக்கு எவ்வளவு பெருமையா யிருக்கிறது, தெரியுமா? நான் உங்கள் பக்கத்தில் இருக்கும்போது, என்னுடைய சிநேகிதிகள் என்னைப் பொறாமையோடு பார்ப்பதை நான் கவனிக்காமல் இல்லை. மற்றவர்கள் என்னைப் பார்த்துப் பொறாமைப்படும்படியான ஒரு வாழ்க்கை எனக்குக் கிடைத்திருக்கிறதே, இதைவிட எனக்கு என்ன வேண்டும்? உண்மையில் உங்களுக்குத்தான் என் மீது சலிப்புத் தோன்றியிருக்க வேண்டும். இல்லையா?''

இதைக் கேட்டதும் நாகசுந்தரத்தின் மனம் ஆனந்தத்தால் விம்மியது. அவளை அணைத்துக் கொண்டு பேசினார்: ''உன் மீது எனக்குச் சலிப்பு ஏற்படுமா? நீ என் பக்கத்திலேயே இருந்தால் எனக்கு வேறு ஒன்றுமே வேண்டாமே.''

அவருடைய ஆலிங்கனத்திலும் வார்த்தையிலும் பொங்கிய அன்பும், ஆசையும் அவளை மூச்சுத் திணற வைத்தன. ஒரு குழந்தையைப் போல் காதுக்குள் இரகசியமாகச் சொன்னாள்:

''நம்முடைய கல்யாணத்துக்குப் பிறகுதான் சந்தோஷம் என்றால் என்னவென்பதே எனக்குத் தெரியும். இப்போது நான் எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறேன், தெரியுமா? உங்களுக்கு எப்படி......?''

''கோமளம்.... கோமளம்...!'' என்று கொஞ்சிய நாகசுந்தரத்தின் பிடி இறுகியது.

எவ்வளவுதான் கோமளம் அவர்மீது வாஞ்சையாக இருந்தாலும், அவளுக்கு உரிய வாழ்க்கையைத் தம்மால் கொடுக்க முடிகிறதா என்னும் ஆராய்ச்சியிலேயே நாகசுந்தரத்தின் மனம் ஓய்ந்துவிடும். அவளை ஒத்த ஓர் இளைஞனால் அவளுக்குக் கிடைக்கக்



படம்: துப்பாக்கித் தோட்டாவினால் துளைக்க முடியாத உடை.

கூடிய வாழ்க்கையைத் தம்மால் நிச்சயம் கொடுக்க இயலாது என்னும் உணர்வுதான் அவருடைய மனத்தை அரித்துக் கொண்டிருந்தது. என்னதான் அவள் அவரை விரும்புவதாகச் சொன்னாலும், அவருடைய மனம் மட்டும் ஏனோ அதை ஒப்புக் கொள்ள மறுத்துக் கொண்டிருந்தது.

தம்முடைய பணத்தாலும், நீதிபதி பதவியாலும் அவளை விலைக்கு வாங்க முடிந்தது; அவளுடைய உடலுக்கு மட்டும்தான் தாம் அதிகாரி; உள்ளத்தை ஆட்கொள்ளும் அருகதை தமக்கு இல்லை என்னும் எண்ணங்கள் அடிக்கடி அவரைச் சோர்வடையச் செய்தன.

சில சமயங்களில் அவளை மிகுந்த பச்சாத்தாபத்தோடு பார்ப்பார். கிளியை விலைக்கு வாங்கிக் கூண்டில் அடைத்திருக்கிறோம் என்று நினைத்துக் கொள்வார். அவள் காட்டிய அன்பு, பரிவு, பணிவிடை எல்லாமே பாசாங்கோ என்றுகூட அடிக்கடி சந்தேகப்

"மொரமொரப்பாகவும் அதிமெல்லியதாகவும் வடாம் தயாரிக்கும் இரகசியம்,

பிரவுன் & போல்ஸன்

கார்ன்ஃப்ளவர்"




என்கிறார் திருமதி லட்சுமி சாமா, 'ஸோரெண்டோ', மவுண்ட் ப்ளஸண்ட் ரோடு, பம்பாய் – 6.

கார்ன் ப்ராடக்ட்ஸ் தேர்ந்தெடுத்த பரிசு - பெற்ற பக்குவ முறை

வடாம்

தயாரிக்க உதவுவது பிரவுன் & போல்ஸன் கார்ன்ஃப்ளவர்





பிரவுன் & போல்ஸன் கார்ன்ஃப்ளவர் சமோசா, பட்டீஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும் மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. (இரண்டு கோப்பை சாதா மாவுக்கு 1 டேபிள் ஸ்பூன் அளவு போதுமானது.) குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவும். பிரவுன் & போல்ஸன் கார்ன்ஃப்ளவர் இளங் குழந்தைகள், நோயாளிகள் ஆகியோருக்குத் தெம்பு தர ஆரோக்கிய மூட்டவும் சிறந்தது. அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்துடன் பக்குவப்படுத்தப் பட்டதால் கார்ன் ஃப்ளவர்களில் மிகவும் சிறந்தது, பிரவுன் & போல்ஸன். அட்டைப் பெட்டிகளிலும் கிடைக்கிறது.

பக்குவ முறை :

1 கோப்பை பிரவுன் & போல்ஸன் கார்ன்ஃப்ளவர்
6 கோப்பை தண்ணீர்
1 முதல் 1½ கோப்பை மோர்
4 - 5 பச்சைமிளகாய்
சிறிது பெருங்காயம்
1 மேசைக் கரண்டி (தலைதட்டிய அளவு) உப்பு (அல்லது சுவைக்கு ஏற்ற அளவு.)

1 தண்ணீரைக் கொதிக்க விடவும். அடுப்பின் சூட்டைக் குறைக்கவும். பிரவுன் & போல்ஸன் கார்ன் ஃப்ளவரை மோருடன் கலக்கவும். தண்ணீர் சேர்க்கவும். நன்கு கிளறவும். அத்துடன் உப்பு, பெருங்காயம் மற்றும் அரைத்த மிளகாயைக் கூட்டவும். சில நிமிடங்கள் கொதிக்க விடவும். பின்னர் கலவையைக் குளிர விடவும்.

2 பிறகு சுத்தமான போலிதீன் தாளை வெய்யிலில் பரப்பவும். அதன் மீது ஒரு மேசைக்கரண்டியளவு கலவையிலிருந்து எடுத்து ஊற்றவும். இவ்வாறே ஒவ்வொரு மேசைக் கரண்டியாக கலவை முழுவதையும் தாளின்மீது இடைவெளி விட்டு ஊற்றவும். மாலைவரையில் வெய்யிலில் காயட்டும். மறு நாள் காலை தாளிலிருந்து வடாம் பிரித்து எடுத்து, பெரிய தட்டில் புரட்டிப் போடவும். முற்றிலும் காயும் வரையில் இரண்டொரு நாட்களுக்கு வெய்யிலில் நன்கு உலர விடவும்.

3 காற்றுப்புகா டப்பாவில் வடாம் எடுத்து வைக்கவும். தேவைப்படி எண்ணெயில் பொறிக்கவும். வாணலியில் எண்ணெயை விட்டு சூடாக்கி, வடாம் பொறிக்கவும். பழுப்பாக மாறும் முன்பு வடாம் பொறித்து எடுக்கவும்.

உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்.

கார்ன் ப்ராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். சோமானி மார்க், பம்பாய் – 400 001.

OBM 0621 R-TM

பட்டார். அவளுடைய வாழ்க்கையில், தாம் குறுக்கிட்டுவிட்டதாக அவர் எண்ணியதால், அவளுடைய மனம் கோணக் கூடாது என்பதில் மிகவும் அக்கறையோடு இருந்தார். சில வேளைகளில் அவளுடைய பிடிவாதமும், முரண்டும், கண்ணீரும் அவருக்குக் கோபத்தையும், எரிச்சலையும் ஏற்படுத்தியதுண்டு. ஆனால், மறு கணமே அவளைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டிய தம் கடமையை எண்ணி மனம் நெகிழ்ந்து விடுவார்.

அவள் கதை எழுதுவதோ, பல இடங்களில் சொற்பொழிவாற்றச் செல்வதோ அவருக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும், அவளுடைய சந்தோஷத்துக்காக அதைப் பொறுத்துக் கொண்டார். வெளி இடங்களில் பலர் பலவிதமாகப் பேச நேரும் என்பதற்காகவே கூடுமானவரை அவளோடு பொது இடங்களுக்குப் போவதைத் தவிர்த்தார். ஆனால் கோமளத்தின் பிடிவாதத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அவளோடு செல்ல வேண்டிய நிர்ப்பந்தங்களும் ஏற்பட்டன.

அன்று வீட்டில் அவள் விருந்துக்கு ஏற்பாடு செய்ததை அவர் விரும்பவில்லை. கோமளத்தின் கதைப் புத்தகம் ஒன்றுக்கு அன்று ஒரு வெளியீட்டு விழாவை நடத்துவதாய் இருந்தார், நவரசம் பத்திரிகையின் ஆசிரியர் சந்தானம். அதை முன்னிட்டுச் சிநேகிதிகளுக்கு விருந்தளிக்க விரும்பினாள், கோமளம். அவளுடைய உற்சாகத்தைக் கெடுக்க மனமில்லாமல் சம்மதித்தார் நாகசுந்தரம்.

இப்போது அந்த விருந்து, அவருடைய வீட்டில், அவர் இல்லாமலேயே நடைபெறத் தொடங்கிவிடும். கோமளம் மிகுந்த ஏமாற்றத்துக்குள்ளாகியிருப்பாள். சிநேகிதிகளும், அவர்களுடைய கணவர்களும் கூடி ஆரவாரமாக இருக்கும் வேளையில் அவளுக்குத் துணையாகத் தாம் இல்லாதது அவளுக்கு எவ்வளவு வேதனையை அளிக்கும்.....

ஃபோனில் பேசியபோது அவளுடைய குரலில் தொனித்த அழுகையையும், ஏமாற்றத்தையும் நினைவுபடுத்திப் பார்த்தார். இருப்புக் கொள்ளவில்லை. மனம் தவித்தது. உடல் பரபரத்தது. கண்களைத் திறந்து பார்த்தார். சுவர்க் கடிகாரத்தில் மணி, இரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. அவசரமாகச் சாய்வுநாற்காலியில் இருந்து எழுந்தார். பெஞ்ச் கிளார்க்கைக் கூப்பிட்டு, மத்தியானம் நடைபெற வேண்டிய வழக்கைத் திங்கட்கிழமைக்கு ஒத்தி வைத்துவிட்டதாகச் சொல்லி விட்டுத் தம்முடைய காரை நோக்கி விரைந்தார்.

நீதிபதியின் போக்குப் புரியாமல் சற்று நேரம் அவர் போவதையே பார்த்துக் கொண்டு நின்ற பெஞ்ச் கிளார்க், ''கிழட்டு வயதில் கல்யாணம் செய்து கொண்டால் இப்படித்தான் திடீர் திடீரென்று புத்தி மாறும்'' என்று முனகிக் கொண்டே விஷயத்தை நீதிமன்றத்தில் காத்திருந்த வக்கீல்களிடம் தெரிவிப்பதற்காக விரைந்து சென்றார்.

(தொடரும்)



வேலூர் குழந்தைகள் பூங்காவின் ஒரு பகுதியான டயர் பார்க்கில் உள்ள டயர் மிருகம் தான் இது. குழந்தைகள் இதன் மீது ஏறி விளையாடுவார்கள். வீணான டயர்களால் உருவானது. இவற்றைசேகரிக்கப் பல நாட்கள் பிடித்ததாம்.
—ஈ. வெ. ரா. மோகன்



நேபாளம், காட்மண்டுவில் இந்திய கலாசாரத் தொடர்பு ஸ்தாபனத்தின் ஆதரவில் சுதந்திர தினத்தன்று ஸ்ரீமதி வைஜயந்திமாலா நடன விருந்தளித்தார். படத்தில் இந்தியத் தூதுவர் ஸ்ரீ ரஸ்கோத்ரா தம்பதி, நேபாள மன்னர், ராணி, பாலி-வைஜயந்தி தம்பதி காட்சியளிக்கின்றனர்.

முன் கதைச் சுருக்கம்

நளினி, சம்பத் இருவரும் வழக்கறிஞர்கள். நளினியின் தந்தை கஜேந்திரா மில் உரிமையாளர்; மிகப் பெரிய பணக்காரர். சம்பத் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவன்; வறுமையில் வாடியவன். எப்படியோ சட்டம் படித்துத் தேறினன்; சட்டத் தொழிலில் வாரி வாரிப் பணத்தை அள்ளலாம் என்று மனக் கோட்டையுடன் ஆவுடையப்ப பிள்ளையிடம் ஜூனியராகச் சேர்ந்தான். நளினியும் பிரபல கிரிமினல் வக்கீல் ஆவுடையப்ப பிள்ளையிடம்தான் ஜூனியராகச் சேர்ந்து பணியாற்றி வந்தாள். சம்பத் முதலில் அவளிடம் அதிகம் அக்கறை காட்டவில்லை; அவன் அக்கறை காட்டும் அளவுக்கு அவளிடம் அபரிமிதமான அழகோ, கவர்ச்சியோ இல்லை. ஆனல், சில நாட்களில் சம்பத் நளினியிடம் அக்றை காட்டத் தொடங்கினன். அதற்கு அவளது பணம் மிகவும் தூண்டியது. சம்பத் கவர்ச்சியுள்ள ஆணழகன்; அவனை எவளும் இலகுவில் காதலித்து விடுவாள்.

ஆனல் நளினி அவனை நண்பனுகக் கொண்டு மகிழ விரும்பினளேயன்றி காதல் அவள் உள்ளத்தில் இன்னும் எட்டிப் பார்க்கவில்லை. அவள் சகோதரியின் அனுபவம் அதற்குக் காரணமாயிருக்கலாம்.

நளினி நீதிமன்றத்துக்கு வருவது வெறும் பொழுதுபோக்குத்தான். ஆனல் சம்பத்துக்கு இது வாழ்க்கைப் பிரச்னை.

வக்கீல் கருணுகரன், பாட்டாளி இனத்தைக் கையில் போட்டுக் கொண்டு புரட்சிக் கட்சியில் சேர்ந்து தொழிலை வளர்த்துக் கொண்டார். பல தில்லுமுல்லுகளையும் வளர்த்தார்.

நீதிபதி நாகசுந்தரத்தின் மனைவி நியூவேவ் என்ற மேல் பூச்சில் ரசக் குறைவான கதைகளை எழுதிப் பிரபலமடைந்தவள். அவரை இரண்டாந் தாரமாக மணந்தவள்.

கருணுகரன் நடத்தும் ஒரு சுவையான வழக்கு நீதிமன்றத்தில் நீதிபதி நாகசுந்தரத்திடம் வருகிறது. அதிலிருந்து கதையில் பல சுவைகளும் வளர்கின்றன.

11. புகழ்ச்சிப் போதை!

பேசிவிட்டுப் போனைக் கோபத்தோடு கீழே வைத்த கோமளம், சற்று நேரம் ஒன்றும் தோன்றமல் போன் பக்கத்திலேயே நின்றாள். மாடியில் விருந்தினர்களின் பேச்சும் சிரிப்பும் கேட்டுக் கொண்டிருந்தன. எதிரே சுவரிலிருந்த கண்ணுடியில் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். உருவம் மங்கலாகத் தெரிந்தது. உற்றுப் பார்த்தாள். தன்னுடைய கண்களில் கண்ணீர் முட்டி நிற்பதை உணர்ந்து பரபரப்புடன் கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துவிட்டு மீண்டும் கண்ணுடியைப் பார்த்தபோது, உருவம் தெளிவாகத் தெரிந்தது.

''என்ன, ஜட்ஜ் வருகிறாரா ?'' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள். பின்னல் மாடிப் படியிலிருந்து 'நவரசம்' பத்திரிகையின் ஆசிரியர் சந்தானம் இறங்கிக் கொண்டிருந்தார். கோமளம் ஒரு கணம் திகைத்தாள். பதில் கூற முடியாமல் தவித்தாள். படியிலிருந்து இறங்கி வந்த சந்தானம் அவளுக்குப் பக்கத்தில் வந்ததும், ''ஜட்ஜ் புறப்பட்டு விட்டாரா ?'' என்று கேட்டார்.

கோமளம் சிரிப்பை வலிய வரவழைத்துக் கொண்டு, ''இன்றைக்குப் புதுக் கேஸ் ஆரம்பமாகிவிட்டதாம். வர நேரமாகலாமாம், முடிந்தால் வந்துவிடுகிறேன் என்றார்'' என்றாள்.

''அவர் வரும் வரை காத்திருப்போமா ?''

''வேண்டாம். விருந்தை ஆரம்பிக்கச் சொல்லிவிட்டார்'' என்று கூறி மீண்டும் சிரித்தாள். சிரிப்பில் உயிர் இல்லை. கண்ணுடியில் முகத்தைப் பார்த்தாள். மலர்ச்சி இல்லை என்பதை உணர்ந்துகொண்டாள். மலர்ந்திருப்பது போல் பாவனை பண்ணிக் கொள்ள வேண்டும் என்று முயன்றாள்.

'' வாருங்கள், விருந்தை ஆரம்பித்துவிடலாம்'' என்று சிரித்தபடி கூறிக் கொண்டே மாடிப் படியை நோக்கி நடந்தாள்.

''உங்களுக்கு மனசு சரியில்லை'' என்றார் சந்தானம்.

கோமளம், கேள்வியைப் பார்வையில் தேக்கி அவரைத் திரும்பிப் பார்த்தாள்.

''அவரும்கூட இருந்தால் எவ்வளவு சந்தோஷமாயிருக்கும். உங்களுக்கும் உற்சாகமாயிருக்கும்'' என்றார் சந்தானம்.

''பரவாயில்லை. அவருக்கு வேலை.''

'' என்ன வேலை? நினைத்தால் வந்துவிடலாம். வேலை செய்வதும் செய்யாததும்



ஜட்ஜினுடைய விருப்பம் தான். அவரை யார் கேட்க முடியும்?'' என்றார்.

கோமளம் நீண்ட பெருமூச்சு விட்டாள். அவளைத் தொடர்ந்து மாடிப் படிகளில் ஏறினார் சந்தானம். அவளுடைய பின்னழகையும் பின்னல் அழகையும் ஒருவித வெறியோடு ரசித்தவாறே படி ஏறிக் கொண்டிருந்தார்.

''கொஞ்ச நேரம் பொறுத்திருந்து பார்ப்போமா ?'' என்று கேட்டார்.

''வேண்டாம். ஆரம்பித்துவிடலாம்'' என்று கோமளம் கூறிய போது, அவளுடைய குரலில் தொனித்த கோபத்தையும், அலட்சியத்தையும் உணர்ந்து கொண்டார்.

மாடியிலிருந்த பெரிய அறைக்குள் கோமளம் நுழைந்தபோது, விருந்தினர்களின் கண்கள் ஆர்வத்தோடு அவளை நோக்கின. ஆண்களும் பெண்களுமாக இருபது பேர்கள்

அந்த அறையில் கூடியிருந்தனர். பெண்களின் பேச்சும் சிரிப்பும்தாம் அந்த அறையை நிரப்பி யிருந்தன.

''புறப்பட்டுவிட்டாரா ?'' என்று கேட்டார் கலெக்டர்.

''புதுக் கேஸ் ஆரம்பமாகி யிருக்கிறதாம். வர நேரம் ஆகலாம்'' என்றாள் கோமளம். உதட்டில் புன்னகையை இழைய விட்டாள்.

''ஓ...! இன்றைக்கு அந்தப் பரபரப்பான கேஸ் ஆரம்பமாகிறது. நேற்றே பேப்பரில் பார்த்தேன்'' என்றார் கலெக்டர்.

''தியாகி ரகுபதி நாயுடுவின் மகன் மேல் உள்ள கேஸ்தானே ? மத்தியானமும் தொடர்ந்து நடக்கும்'' என்றார் போலீஸ் சூப்பிரண்டெண்ட். கோமளம் அவரையும் பார்த்து ஒரு சிரிப்பைச் சிந்தினாள். ''விருந்தை ஆரம்பித்துவிடலாம்'' என்றாள்.

''ஜட்ஜ் இல்லாதது என்னவோ போல் இருக்கிறது'' என்றார் கலெக்டர்.

''அவருடைய வீட்டு விருந்தில் அவர் கலந்து கொள்ளவில்லை என்பது நமக்கெல்லாம் ஏமாற்றம்தான்'' என்று குறுக்கிட்டுக் கூறினார் சந்தானம்.

''அவர் இருந்தால் இந்த விருந்து இன்னும் சோபிக்கும்'' என்றாள் கலெக்டரின் மனைவி கனகா, தன் புருவத்தை நெரித்தபடி.

''எல்லாரையும்விட மிஸஸ் ஜட்ஜுக்குத் தான் பெருத்த ஏமாற்றம்'' என்றார் கலெக்டர்.

கோமளத்தின் முகத்தில் நாணம் படர்ந்தது. ''எல்லாரும் உட்காரலாமே. விருந்தை ஆரம்பித்து விடலாம்'' என்றாள்.

விருந்துக்காகப் போடப்பட்டிருந்த மேஜையின் முன்னால் எல்லாரும் உட்காரத் தொடங்கினார்கள்.

''பெண்கள் இந்தப் பக்கம்'' என்று எதிர் வரிசையைச் சுட்டிக்காட்டிச் சிரித்தார், போலீஸ் அதிகாரி.

''ஓ....! இன்னும் இந்த வர்க்கப் பிரிவினை போகவில்லையா? நாங்கள் எங்கள் விருப்பம் போல்தான் உட்காருவோம்'' என்றாள் கனகா. அவள் பேசிய போது, சாயம் திட்டப்பட்டிருந்த உதடுகள், நெளிந்தன. புருவங்களை ''ட்ரிம்'' செய்து ஐ புரோ பென்சிலால் புருவங்களை நீட்டி வளைந்து வரைந்திருந்தாள். அழகு என்று நினைத்துக் கொண்டு அவள் செய்திருந்த ஒப்பனை, நாடகத்துக்கு வேஷம் போட்டது போல் இருந்தது. அவளுடைய புருவங்களைப் போலீஸ் அதிகாரி உறுத்துப் பார்த்ததை உணர்ந்ததும் அவள், முகத்தை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள். போலீஸ் அதிகாரி, ''இது பெண்களின் விடுதலை யுகம். நீங்கள் எங்கு வேண்டுமானாலும் உட்காரலாம்'' என்றதும் பெரிய நகைச்சுவையைக் கேட்டுவிட்டதைப் போல் பலர், 'ஆஹா ஓஹோ' என்று பலமாகச் சிரித்தார்கள்.

''நான் இங்கேதான் உட்காரப் போகிறேன்'' என்று கூறிக் கொண்டே சந்தானத்துக்கு அடுத்திருந்த நாற்காலியை நெருங்கினாள் கனகா. சந்தானத்துக்குத் தர்ம சங்கடமாக இருந்தது. பரிதாபமாக விழித்தார். அசட்டுச் சிரிப்பு உதடுகளில் நெளிந்து கொண்டிருந்தது.

''உங்களுக்கென்ன, பயமா?'' என்று கேட்டாள் கனகா.

''நோ நோ'' என்று கூறிக் கொண்டே அவளுக்குப் பக்கத்திலிருந்த நாற்காலியில் அமர்ந்தார் சந்தானம். இதற்கும் பல பெண்கள் கலகலவென்று சிரித்தார்கள்.

''நான் எங்கே உட்கார வேண்டும் ?'' என்று கேட்டார் கலெக்டர்.

''மேஜை மீது'' என்று வெடுக்கென்று பதில் சொன்னாள் போலீஸ் அதிகாரியின் மனைவி. அறைக்குள் திடீரென்று பேரிரைச்சலுடன் சிரிப்பொலி எழுந்தது. சந்தானம் இருப்புக் கொள்ளாமல் தவித்தார். தம்முடைய பார்வையிலிருந்து கோமளம் தள்ளிப் போய்விடுவாளோ என்று பரிதவித்தார். அவருக்கு எதிரே அவள் அமர்ந்த பிறகுதான் அவர் நிம்மதி அடைந்தார்.

விருந்து நடைபெற்றுக் கொண்டிருந்த போது, பெண்கள் சிரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் உற்சாகமாயிருந்தனர். ஆண்கள் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. பெண்களின் பேச்சைக் கேட்பதிலும், அலங்காரங்களை ரசிப்பதிலும், கள்ளத்தனமாகப் பார்த்துக் கொள்வதிலும் ஈடுபட்டிருந்தனர். எதிர் எதிராக அமர்ந்திருந்ததினால்,பலருடைய பார்வைகள், பலருடைய பார்வைகளோடு பல முறை மோதி மோதிச் சிதறிக் கொண்டிருந்தன. சில சிதறல்களில் மின்சார அதிர்ச்சியிருந்தது. சிலவற்றில், இதமான வருடல் இருந்தது. சிலவற்றில் உடல் முழுவதும் சிலிர்த்து நடுங்குவதுபோன்ற குளிர்ச்சி இருந்தது. சிலவற்றில் எதிர்ப்பு இருந்தது. சிலவற்றில், எவ்வித உணர்வும் இன்றிப் பிரேதக் களை தட்டியது.

கோமளம், உற்சாகமாயில்லை. தன்னுடைய கணவர் இந்தச் சமயத்தில் வராமல் இருந்துவிட்டாரே என்னும் ஏமாற்றம்தான் அவளை அரித்துக் கொண்டிருந்தது. அவளுக்கு எதிரே இருந்த சந்தானம், உற்சாகமாக இருந்தார். அடிக்கடி அவளோடு பேசி, அவளையும் உற்சாகமூட்ட முயன்று கொண்டிருந்தார். விருந்து ஆரம்பமாகிச் சற்று நேரத்தில் கோமளம் கலகலப்பாகப் பேசத் தொடங்கிவிட்டாள். அவளுடைய உற்சாகம், சந்தானத்துக்கு மேலும் உற்சாகத்தை ஊட்டியது. ''விருந்து பிரமாதம்'' என்றாள் கோமளத்தின் சிநேகிதிகளில் ஒருத்தி.

''இந்த விருந்துக்குக் காரணம் ஆசிரியர் தான்'' என்று சந்தானத்தைச் சுட்டிக்காட்டினாள் கோமளம்.

''நான் என்ன காரணம்? நீங்கள் பிரியப்பட்டீர்கள்; விருந்து வைத்திருக்கிறீர்கள்'' என்றார் சந்தானம்.

''புத்தக வெளியீட்டு விழாவுக்கு நீங்கள் தானே காரணம்?''

''அதற்கும் நான் காரணம் இல்லை. உங்களுடைய எழுத்துத் திறமைதான் காரணம்'' என்றார் சந்தானம், உற்சாகத்துடன். கோமளத்தின் முகம் மலர்ந்தது. அவருடைய பார்வை, அவளைச் சுற்றி வளைத்தது.

இதைக் கேட்டுப் பலர் ஆரவாரம் செய்தார்கள்.

ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்த கூடைக் கொண்டைக்காரி ஒருத்தி, பக்கத்தில் பிரிமணைக் கொண்டை போட்டுக் கொண்டிருந்த சிநேகிதியைப் பார்த்துக் கண் சிமிட்டினுள். ''ஆசிரியர் ஐஸ் வைக்கிருர்'' என்ருள்.

''அவர் பார்ப்பதைப் பாரேன்'' என்று இரகசியம் பேசினுள், பிரிமணைக் கொண்டைக்காரி. இருவருடைய பார்வையும், கோமளத்தையும் சந்தானத்தையும் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கின.

''ஆசிரியர் சரியாகச் சொல்லிவிட்டார்'' என்ருர் போலீஸ் அதிகாரி.

''நான் நன்ருக எழுதவும் நீங்கள்தான் காரணம்'' என்ருள் கோமளம். நன்றிப் பெருக்குடன் சந்தானத்தைப் பார்த்தாள்.


''ஓ.....! நீங்கள் என்னை அதிகமாகப் புகழ்கிறீர்கள்'' என்று கூறிய சந்தானம் மேஜைக்குக் கீழே அவளுடைய காலை மெதுவாகத் தம்முடைய காலால் யதேச்சையாகப் படுவது போல் தீண்டினுர். அதை முதலில் உணராத கோமளம், பேச்சில் லயித்திருந்தாள். காலை அவள் நகர்த்திக் கொள்ளாததை அறிந்து சந்தானம் சற்றுத் தைரியம் அடைந்தார்.

''உங்கள் பத்திரிகை மூலமாகத்தானே இவர்களுக்குப் புகழ் கிட்டியது?'' என்ருர் கலெக்டர்.

''இவர்களுடைய புகழுக்கு எழுத்துத் திறமைதான் காரணம்'' என்ருர் சந்தானம்.

கோமளம் பெருமையால் பூரித்துப் போனுள். சந்தானம் தம்முடைய காலினுல் அவளுடைய ஸ்பரிசத்தைத் திருடிக் கொண்டிருந்தார். திருடு போய்க் கொண்டிருந்ததை உணர முடியாத அளவுக்குச் சந்தானத்தின் புகழ்ச்சி அவளை ஆட்கொண்டிருந்தது. ''ஒரு வகையில் சொல்லப்போனுல், இவர்களுடைய எழுத்து என்னுடைய பத்திரிகைக்குப் புகழைத் தேடிக் கொடுத்திருக்கிறது என்றுகூடச் சொல்லலாம்'' என்ருர் சந்தானம். மிகுந்த குளிர்ச்சியான மலர்கள், தலையில் கொட்டப்படுவது போலவும் அதன் குளுமையிலும் மணத்திலும் மயங்குவது போலவும் ஆனுள் கோமளம். சில விநாடிகள் அவளுடைய பார்வை, மிக்க நன்றியோடு சந்தானத்தின் பார்வையோடு கலந்தது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பார்வையிலேயே அவளுடைய முகம் முழுவதையும் வளைத்து வருடினுர். கோமளத்தின் முகத்தில் நாணத்தின் சாயலும், பெருமையின் பூரிப்பும் போட்டியிட்டன.





''பாருடி.... பாருடி....'' என்று இரகசியமாகக் கூறியபடியே பிரிமணைக் கொண்டைக்காரி, மற்றவளைத் தொடையில் இடித்தாள்.

''பார்வையைப் பார்த்தாயா ? நான் முன்பே சொன்னேனே, நீ நம்பமாட்டேன் என்றாய் !'' என்று கிசுகிசுத்தாள் கூடைக் கொண்டைக்காரி.

''கண்களாலேயே அவளைத் தின்றுவிடுவார் போல் இருக்கிறதே !''

''ஜட்ஜுக்குப் பல் இல்லை, தின்பதற்கு, இவர் தின்னட்டுமே!''

இப்படிச் சொன்னவளின் தொடையில் குறும்பாகக் கிள்ளினாள் மற்றவள்.

''நீங்கள் இப்போது என்னை அதிகமாகப் புகழ்கிறீர்கள்'' என்றாள் கோமளம்.

''இது அதிகமே இல்லை. உண்மையைத் தான் சொல்கிறேன். உங்களுடைய கதை வெளிவரும்போதெல்லாம் நவரசம், 'ஐயாயிரம்' பிரதிகள் அதிகமாக விற்பனை ஆகிறது'' என்று துணிந்து ஒரு பொய்யைச் சந்தானம் சொன்னதும் கோமளம், தன்னையே மறந்து விட்டாள்.

புகழ்ச்சியிலும், விருந்தினர்களின் ஆரவாரத்திலும் மெய்சிலிர்த்தாள். தனக்குக் கிடைத்திருக்கும் இத்தனை புகழுக்கும், விளம்பரத்துக்கும் சந்தானம்தான் காரணம் என்னும் நன்றிப் பெருக்கில் மிகுந்த ஆர்வத்தோடு அவரைப் பார்த்தாள்.

சந்தானத்தின் பாதம், சற்றுப் பலமாக அழுத்தி வருடவே, திடுக்கிட்டுக் காலை இழுத்துக் கொண்டு கீழே குனிந்து பார்த்தாள். சந்தானத்தின் பாதங்கள் அவள் பாதங்களை விட்டு விலகி, ஏதும் அறியாத அப்பாவிபோல் ஆடாமல் அசையாமல் இருந்தன. தலை நிமிர்ந்த கோமளத்தைப் பார்த்து, ''ஸாரி'' என்று மிக மெதுவாக உதட்டளவில் முனகினார். அதைப் புரிந்து கொண்ட கோமளம், பார்வையாலேயே, ''பரவாயில்லை'' என்று மரியாதைக்காகச் சொல்லிக் கொண்டாள்.

ஓரக் கண்ணால் மீண்டும் ஒரு முறை அவளைக் கவனித்தார். அவளுடைய முகத்தில் வெறுப்போ, கோபமோ, எரிச்சலோ இல்லாததைக் கண்டதும், தம்முடைய திருட்டுத் தனத்தை அவள் தெரிந்து கொள்ளவில்லை என்பதை அறிந்து நிம்மதி அடைந்தார்.

அப்போது கீழே கார் வந்து நின்ற சத்தமும், அதைத்தொடர்ந்து கார்க் கதவு திறந்து அடைக்கப்பட்ட சத்தமும் கேட்டன. கோமளத்தின் முகத்தில் வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே தோன்றின. ''வந்துவிட்டார் போல் இருக்கிறது'' என்று கூறிக்கொண்டே பரபரப்புடன் எழுந்தாள்.

''ஜட்ஜ் வந்துவிட்டாரா....? ரொம்ப சந்தோஷம்'' என்று கூறியபடியே கலெக்டர் எழுந்தார். அவர் எழுந்ததைக் கண்டதும், போலீஸ் அதிகாரியும் எழுந்தார்.

'' நீங்கள் இருங்கள். நான் போய் அழைத்து வருகிறேன்'' என்று கூறிவிட்டு உற்சாகத்துடன் துள்ளி ஓடினாள் கோமளம். சந்தானத்துக்கு மட்டும் சற்று ஏமாற்றமாக இருந்தது.

(தொடரும்

திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்

12. எழுத்துத் துரோகம்

நீதிபதி நாகசுந்தரம் வந்த பிறகு விருந்து களை கட்டியது. கோமளம் மிகுந்த உற்சாகத்தோடிருந்தாள். நவரசம் பத்திரிகையின் ஆசிரியர் சந்தானம், தம்முடைய பார்வையை அடிக்கடி கோமளத்தின் மீது செலுத்துவதைக் கட்டுப்படுத்திக் கொண்டார். இருந்தாலும் அவ்வப்போது அவருடைய கட்டுப்பாட்டையும் மீறி, அவருடைய பார்வை, அவள்மீது விழுந்தபோதெல்லாம் கடைக்கண்ணால் நாகசுந்தரத்தையும் கவனித்துக் கொண்டார்.

''நீங்கள் என்ன இவ்வளவு குறைவாகச் சாப்பிடுகிறீர்கள்?'' என்று வியப்புடன் நாகசுந்தரத்தைப் பார்த்துக் கேட்டாள், கலெக்டரின் மனைவி, கனகா.

''என்னுடைய அளவே இவ்வளவுதான். இதுகூட அதிகம்தான்'' என்றார் நாகசுந்தரம்.

''இவ்வளவு குறைவாகச் சாப்பிட்டு எப்படி....?''

''நம்முடைய உடலுக்கு இந்த அளவே அதிகம்தான். விவரம் தெரியாமல் சாப்பிட்டுக்கொண்டிருப்பதால்தான் நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. உண்மையில் உடலுக்கு எவ்வளவு தேவையோ அதைவிட இருபது மடங்கு அதிகமாகச் சாப்பிட்டே பழகி, வயிற்றைப் பெரிதாக்கிக் கொண்டிருக்கிறோம்'' என்றார் நாகசுந்தரம்.

''சிலர் சாப்பிடுவதைப் பார்த்தால் பயமாயிருக்கும். மலை போல் சோற்றைக் குவித்துக்கொண்டு, கவளம் கவளமாக விழுங்கிச் சாப்பிடுவார்கள்'' என்றார் போலீஸ் அதிகாரி.

''அப்படிச் சாப்பிட்டுப் பழகி விட்டார்கள். அவர்கள் சாப்பிடுவதில் இருபதில் ஒரு பங்குதான் உடலில் சேரும். மற்றவை எல்லாம் கழிவுப் பொருளாக வெளியேறிவிடும். இப்படிச் சாப்பிடுபவர்கள் எல்லாரும் நல்ல உர உற்பத்தியாளர்கள்'' என்று நாகசுந்தரம் சொன்னதும் எல்லோரும் சிரித்தார்கள்.

சந்தானத்துக்குச் சங்கடமா யிருந்தது. இன்னும் கொஞ்சம் தேங்காய்ப் பால் குழம்பு விட்டுச் சாதம் சாப்பிட வேண்டும் என்ற ஆசையைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

''என்ன எடிட்டர் சார், நீங்கள் பேசாமலிருக்கிறீர்கள்? நாட்டின் உணவுப் பொருள் விளைச்சல் எப்படி வீணாகிறது என்பதைப் பற்றிய சிந்தனையா?'' என்று சந்தானத்தையும் பார்த்து மெதுவாகத் தணிந்த குரலில் கேட்டாள் கனகா. அவளைப் பார்த்துப் புன்னகையை வீசினார், சந்தானம். அவளுடைய அலங்காரக் கோலம் வேடிக்கையாக இருந்தாலும், பன் போல உப்பியிருந்த கன்னங்களும், கொழு கொழுவென்றிருந்த உடலமைப்பும் பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவே இருந்தன.

''எல்லாரும்தான் பேசுகிறீர்களே. நான் பேச என்ன இருக்கிறது?'' என்றார் சந்தானம்.

''நாங்கள் பேசுவதை வைத்துக் கொண்டு ஒரு கதையே எழுதுவீர்கள்'' என்றாள், கனகா. சந்தானத்தின் கண்கள் அவளைக் கூர்ந்து நோக்கின. அவளை அவ்வளவு அருகிலிருந்து அன்றுதான் பார்த்தார். அதற்கு முன் பல சந்தர்ப்பங்களில் அவளைச் சந்தித்திருக்கிறார். அப்பொழுதெல்லாம் அவளுடைய ஒப்பனையை ஒரு வேடிக்கையாகப் பார்த்திருந்தாரே தவிர, அவளிடமும் கொஞ்சம் கவர்ச்சி உண்டு என்பதை அன்றுவரை அவர் உணரவே இல்லை. அவருடைய பக்கத்தில் அவள் அமர்ந்தபோதே அவளிடமிருந்து இனிமையான ஒரு மணம் வந்ததை அறிந்து கொண்டார்.

''வெளி நாட்டிலிருந்து சென்ட் கிடைத்திருக்கிறது போலிருக்கிறது'' என்றார்.

''வாசனை நன்றாக இருக்கிறதா? பாரிஸில் என் தங்கை இருக்கிறாள். அவள் அடிக்கடி அனுப்பி வைப்பாள்'' என்றாள் கனகா.

''வாசனை பிரமாதம். இந்த மாதிரி சுகமான வாசனை உள்ள சென்ட், இங்கே கிடைக்காது. உங்கள் தங்கையிடம் எனக்கு ஒரு பாட்டில் சென்ட் சிபாரிசு செய்ய முடியுமா?'' என்று கேட்டுவிட்டுக் கடைக்கண்ணால் மற்றவர்களைக் கவனித்தார் சந்தானம். மற்றவர்கள் ஏதோ பேச்சில் ஈடுபட்டிருந்ததையும், தம்மைக் கவனிக்க வில்லை என்பதையும் அறிந்து கொண்டார்.

''என்னிடம் இருக்கிறது. நானே உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன்'' என்றாள் கனகா.

''தாங்க்ஸ்'' என்று கூறி அவளை உற்றுப் பார்த்தார். அந்தப் பார்வை, நன்றியைத்



தெரிவித்ததா அல்லது தன்னுடைய அழகை ரசித்ததா என்பது தெரியாமல் தவித்தாள், கனகா.

''நீங்கள் ஒன்றும் எழுதுவதில்லையே?''— சந்தானம் கேட்டார்.

''எழுத வேண்டும் என்று ஆசைதான். ஆனால் எழுதத் தெரிய வேண்டுமே'' என்றாள்.

''ஆசை இருந்தால் போதும். எழுத்து, தானாக வந்துவிடும்.''

''அப்படியா?'' — வியப்புடன் கேட்டாள்.

''உம்.''

''ஒரு கதை எழுதி வைத்திருக்கிறேன்'' என்றாள் சிறிது நாணத்துடன்.

''ஓ.... அனுப்பி வையுங்களேன். ''நவரச''த்தில் போடுகிறேன்.''

''நன்றாக இருக்குமோ என்னவோ'' என்று தயங்கினாள்.

''பரவாயில்லை. நான் எடிட் செய்து கொள்கிறேன்.''

''அப்படியானால் அனுப்பி வைக்கிறேன். கதை பிரமாதமில்லை'' என்று கூறிவிட்டு, கதையின் கருத்தைச் சொன்னாள். ஏதோ குழந்தைகளுக்கு நீதிக் கதை சொல்லுவது போலிருந்தது. பொறுமையுடன் சந்தானம் கேட்டுக் கொண்டிருந்தார். அவருடைய கவனம், உண்மையில் அவளுடைய புருவங்களின் நெளிவிலும், உதடுகளின் அசைவிலும் பார்வையின் போக்கிலும்தான் லயித்திருந்தது.

''கதை எப்படி? பரவாயில்லையா?'' என்று அவள் குழந்தையைப் போல் குழைந்து கொண்டு கேட்ட பிறகுதான் அவர் சுய நினைவை அடைந்தார்.

'' நன்றாயிருக்கிறதே .... அனுப்பி வையுங்கள்'' என்றார். அவள், நன்றிப் பெருக்குடன் அவரைப் பார்த்தாள். ஒரு பெண்ணிடமிருந்து நன்றியோடு கிடைக்கும் குழைவான அந்தப் பார்வைதான் அவருக்குத் தேவை. அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு அவர் தம்முடைய கனவுகளை நிறைவேற்றத் தொடங்கி விடுவார்.

அந்தப் பார்வையில் எந்த இடத்தில் பலவீனம் இருக்கிறது என்பதை ஆராய்வார். கொஞ்சம் பலவீனம் இருந்தாலே போதும், அவருடைய வெற்றிக்கு. இது அவருக்கே கைவந்த கலை. ஆனால், கோமளத்தின் விஷயத்தில்தான் இன்னும் அவரால் எந்த முடிவுக்கும் வர இயலவில்லை. வெற்றிப் பாதையில் நடை போடுகிறோமா அல்லது ஏமாந்து கொண்டிருக்கிறோமா என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் திணறினார். கோமளத்துக்காக அவர் எவ்வளவோ உதவி செய்தார். இன்று கோமளத்தைத் தெரியாத வாசகர்கள் இருக்க முடியாது. 'நவரச'த்தில் அவளுடைய படத்தை அச்சிட்டுப் பிரபலப் படுத்தினார். அப்போதெல்லாம் அவளுடைய நன்றி கலந்த பார்வையையும், பேச்சையும் தம்முடைய கணக்குப்படி கணித்துப் பார்த்தார். விடை சரியாகக் கிடைக்கவில்லை. ஆனால் தம்முடைய மனோரதம் எப்படியும் நிறைவேறும் என்ற நம்பிக்கையை மட்டும் அவர் இழக்கவில்லை.

''நவரசம்'' பத்திரிகையின் ஆசிரியராகச் சந்தானம் பொறுப்பேற்றுக் கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. பதினாயிரம் பிரதிகளே விற்றுக் கொண்டிருந்த அந்தப் பத்திரிகையின் விற்பனை, இப்போது அறுபதினாயிரத்தை எட்டிவிட்டதற்கு முழுப் பொறுப்பு சந்தானத்தினுடையதுதான். அதனால் பத்திரிகையின் அதிபருக்குச் சந்தானத்தின் மீது மிகுந்த நம்பிக்கை விழுந்து விட்டது. ஆரம்ப காலத்தில் ''நவரசம்,'' ஒரு தரம் வாய்ந்த இலக்கியப் பத்திரிகையாக இருந்தது. அதிபருக்கு ஓரளவுலாபமும் கிடைத்துவந்தது. அப்போது சந்தானம் வேலையற்றுத் திரிந்து கொண்டிருந்தார். எப்போதோ ஒரு பத்திரிகையில் உதவி ஆசிரியராக வேலை பார்த்த அனுபவம் இருந்தது. அந்தப் பத்திரிகை அலுவலகத்திலிருந்த ஒரு பெண் டைப்பிஸ்டிடம் ஒழுக்கக் குறைவாக நடந்துகொண்டதற்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டார். அதற்குப் பிறகு வேறு எந்தப் பத்திரிகையிலும் சந்தானத்துக்கு வேலை கிடைக்கவில்லை. அவருடைய எழுத்தையும் எந்தப் பத்திரிகையும் பிரசுரிக்கத் தயாராயில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில்தான் குதிரைப் பந்தய மைதானத்தில் ''நவரசம்'' பத்திரிகை அதிபர் பாண்டுரங்கனின் நட்புக் கிடைத்தது. பாண்டுரங்கன் அவரை நம்பினார். ''நவரசம்'' பத்திரிகைப் பொறுப்பைச் சந்தானத்திடம் ஒப்



படைத்தார். பத்திரிகையின் விற்பனை அறுபதினுயிரத்தை எட்டியது. இதைச் சாதிக்க, சந்தானம் சங்கடம் ஏதும் படவில்லை. நல்ல இலக்கியங்களுக்கு ''நவரசத்தில்'' இடம் கொடுப்பதை நிறுத்தினுர். கதைகளுக்காகச் சிறந்த எழுத்தாளர்களை நாடாமல் நியூவேவ் என்ற பெயரில் ஆபாசங்களை எழுதத் தெரிந்த சிலரை மட்டும் பயன்படுத்திக் கொண்டார். முதல் அட்டையிலிருந்து கடைசி அட்டை வரையில் எவ்வளவு முடியுமோ அவ்வளவுக்குப் பெண்களின் புகைப்படங்களை அச்சிட்டார். கூடியவரை சினிமா நட்சத்திரங்கள், சில்லறை நடிகைகளின் படங்களையே தேர்ந்தெடுத்தார். எந்த மாதிரிக் கதையானுலும் பெண் கதாபாத்திரங்களின் படங்களில் சேலை, இடையையும் நெஞ்சையும் மறைத்துவிடாதபடி பார்த்துக் கொண்டார் — சந்தானம் செய்தவை இவ்வளவுதாம். விற்பனை அறுபதினுயிரத்தை எட்டிவிட்டது. சீக்கிரத்தில் லட்சத்தை எட்டிவிடும் என்ற நம்பிக்கையில் இருந்தார்.

''நவரசம்'' பத்திரிகையின் கௌரவத்தில் அக்கறை கொண்டிருந்த ஒருசிலர் பாண்டுரங்கனிடம் பத்திரிகையின் தற்போதைய தரத்தைப் பற்றிச் சொன்னுர்களாம். அதற்குப் பாண்டுரங்கன் சொன்னுராம்: ''என்னய்யா பெரிய தரம்? அறுபதினுயிரம் பிரதிகள் விற்பனையாகிறது. உங்களுக்குப் பிடிக்கவில்லை என்ருல் நீங்கள் படிக்க வேண்டாம். இந்த மாதிரி தரம்தான் வேண்டுமென்று வாசகர்கள் அலைகிருர்கள். படிக்கட்டுமே. நாய் விற்ற காசு குரைக்கவா போகிறது?'' என்று. பாவம், அந்த அப்பாவி மானஸ்தர்கள், பதில் பேசாமல் போய் விட்டார்கள்.

ஒரு சமயம் ஒரு சிறந்த எழுத்தாளர் ஒரு நாவலை ''நவரச''த்துக்கு அனுப்பி வைத்தார். நவரசத்தின் பழைய தரத்தை மனத்தில் வைத்துக் கொண்டு அனுப்பி விட்டார். அந்த நாவலைத் திருப்பிக் கொடுத்துவிட்டுச் சந்தானம் சொன்னுர்: ''நாவல் பிரமாதம். இலக்கியத் தரம் வாய்ந்தது. ஆனுல் 'தீம்' கொஞ்சம் ஹெவி. லைட்டாக ஏதாவது எழுதி அனுப்புங்கள். தமிழ் நாட்டில் இப்போது இவ்வளவு அருமையான நாவல்களைப் படிக்க ஆளில்லை.''

ஆசிரியர் சந்தானத்தின் கணிப்புத் துல்லியமானதுதான். அவருடைய திறமையால், ''நவரசம்'' பத்திரிகையின் புகழும் விற்பனையும் அதிகமாயின. விற்பனை கூடியதால் சந்தானத்தின் ஊதியம் கூடியது. பத்திரிகை ஆசிரியர் என்னும் பதவியால் அவருக்கு விளம்பரமும் பணமும் கிடைத்தது போல, அவருடைய ரசனைக்கு ஏற்ற சந்தர்ப்பங்களும் கிடைத்தன.

இளம் பெண் எழுத்தாளர்களை ஆதரிப்பதிலும் கௌரவிப்பதிலும் மிகுந்த அக்கறை



அடுத்த இதழில்

நகர் வலம்: புதுதில்லி



கொண்டிருந்தார். அது தம்முடைய கடமை என்றுகூட அடிக்கடி பறைசாற்றிக்கொண்டார். இரண்டொரு இளம் பெண்களை எழுத்தாளர்களாக்கிய பெருமையும் அவருக்கு உண்டு. பத்திரிகையில் தங்களுடைய படங்கள் பிரசுரமாவதிலும் கதைகள் பிரசுரமாவதிலும் சந்தானத்தின் புகழ்ச்சியிலும் அந்த இளம் பெண்கள் மயங்கிப் போயிருந்தார்கள். அந்தப் பெண்களுக்காகச் சந்தானம் செய்திருந்த அந்த மாபெரும் உதவிகளுக்காக அவர், அவர்களிடம் எதிர்பார்த்த கைம்மாறு — ஓ....! விளம்பரமும் புகழும் பெண்களின் அறிவை எப்படிச் சூறையாடி விடுகின்றன!

ஆனால் கோமளத்தின் விஷயத்தில்தான் இதுவரை அவருடைய திறமைகள் பலிக்கவில்லை.

எதிரே இருந்த கோமளத்தைப் பார்த்தார். அவள் சாப்பிட்டவாறே, கலெக்டரிடம் ஏதோ பேசிக்கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தைச் சற்று நேரம் கண் கொட்டாமல் பார்த்தார். களைபொருந்திய அவளுடைய முகம் அவருடைய நெஞ்சில் ஏக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தது. திடீரென்று நாகசுந்தரத்தைப் பார்த்தார். அவர், போலீஸ் அதிகாரியின் மனைவியோடு பேசிக் கொண்டிருந்தார். மீண்டும் அவருடைய பார்வை, கோமளத்தை வட்டமிட்டது.

அவளை அவர் முதன் முதலாகச் சந்தித்த சம்பவம் நினைவில் நிழலாடியது.

லேடீஸ் கிளப் ஆண்டு விழாவுக்குத் தலைமை வகிக்கக் கோமளம் வந்திருந்த போதுதான் அவளை முதன் முதலாகப் பார்த்தார். ''நவரசம்'' பத்திரிகைக்குஅழைப்புவந்திருந்ததால் பத்திரிகையின் அதிபர் பாண்டுரங்கமும் ஆசிரியர் சந்தானமும் விழாவுக்குச் சென்றிருந்தார்கள். கோமளம், நீதிபதியின் மனைவி என்பதால் விழாவுக்குத் தலைமை தாங்க அழைக்கப் பட்டிருந்தாள். நாகசுந்தரமும் கோமளமும் காரிலிருந்து இறங்கிய போது, சந்தானத்தின் கவனத்தைக் கவர்ந்தது, கோமளத்தின் கவர்ச்சியான முகம்.

''ஜட்ஜின் மகள் போலிருக்கிறது'' என்று முனகினர் சந்தானம்.

''மகளா...? ஜட்ஜின் மனைவி'' என்றார் பாண்டுரங்கன்.

''மனைவியா?'' — திகைப்புடன் கேட்ட சந்தானம், அவளைப் பார்த்தார். ''ஜட்ஜ் யோகக்காரர்தான்'' என்றார்.

பாண்டுரங்கன் புரிந்து கொள்ளாமல் சந்தானத்தைப் பார்த்தார்.

''இந்த வயதில் இப்படி ஓர் அழகான மனைவி கிடைத்ததைத்தான் சொல்கிறேன்'' என்றார் சந்தானம்.

''இந்த வயதில் அழகான மனைவி கிடைப்பதைப் போன்ற நரக வேதனை கிடையாது'' என்றார் பாண்டுரங்கன். சந்தானம் சிரித்தார்.

சந்தானத்தைக் கோமளத்துக்கும் நாகசுந்தரத்துக்கும் லேடீஸ் கிளப்பின் காரியதரிசி அறிமுகம் செய்து வைத்தபோது, கோமளம் வியப்புடன் சந்தானத்தைப் பார்த்தாள்.

''உங்களுடைய எழுத்துக்களைப் படித்திருக்கிறேன். இன்றுதான் நேரில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது'' என்றாள்.

இருவரும் அடுத்தடுத்த நாற்காலிகளில் அமர்ந்தனர்.

''நான் வேறு விதமாக உங்களைப் பற்றிக் கற்பனை செய்திருந்தேன்'' என்றாள் கோமளம்.

''எப்படி?'' — சந்தானம் கேட்டார்.

''நீங்கள் வயது முதிர்ந்தவர் என்று. இவ்வளவு இளைஞராக இருப்பீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை'' என்றாள்கோமளம்வியப்புடன்

''ஓ...! என்னுடைய எழுத்து அவ்வளவா கிழடுதட்டிப் போயிருக்கிறது?''

கோமளம் குபீரென்று சிரித்தாள். அவளுடைய சிரிப்பும் பேச்சும் சந்தானத்தை ஆட்கொண்டன.

''ஒரு பத்திரிகையின் ஆசிரியர், வயது முதிர்ந்தவரா யிருப்பார் என்று நான் தவறாக எண்ணிக் கொண்டதுதான் காரணம்'' என்றாள், கோமளம் சிரித்துக் கொண்டே.

தான் வயதானவனைப் போல் தோற்றமளிக்கவில்லை என்பதைக் கோமளத்தின் வாயிலாகக் கேட்க நேர்ந்தது எவ்வளவு அதிர்ஷ்டம்! அவளுக்கு மறு பக்கத்திலிருந்த நீதிபதி நாகசுந்தரத்தைப் பார்த்தார், சந்தானம். நீதிபதியின் தலை நரைத்திருந்தது. அதைக் கண்டதும் சந்தானத்துக்கு மிகுந்த திருப்தி ஏற்பட்டது.

மறுநாளே அவளைப் பார்ப்பதற்காக அவளுடைய வீட்டுக்கே சென்று விட்டார். பத்திரிகை ஆசிரியர் என்ற 'லைசென்ஸை' வைத்துக்கொண்டு எங்கு வேண்டுமானாலும் போகலாமே. அவளைப் பார்க்கப் போனபோது, ஆண்டு விழாவில் எடுத்த புகைப்படங்களைக் கொண்டு போக அவர் மறந்து விடவில்லை.

''நவரசம்'' பத்திரிகையின் ஆசிரியருக்கு நீதிபதியின் வீட்டில் நல்ல வரவேற்பு இருந்தது. அவர் போயிருந்தபோது, நாகசுந்தரம் நீதிமன்றத்துக்குச் சென்றிருந்தார். ஆண்டு விழாவில் கோமளம் பேசியதை வியந்து பாராட்டினார், சந்தானம். அவளுடைய புகைப்படத்தையும், பேச்சின் சுருக்கத்தையும் ''நவரச''த்தில் அச்சிடுவதாக அவர் சொன்னதும் கோமளத்துக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. பெருமையால் பூரித்துப்போனாள்.

இப்படித்தான் சந்தானத்துக்குக் கோமளத்திடம் பழகும் வாய்ப்புக் கிட்டியது. அடிக்கடி அவளைப் பார்க்கச் சென்றார். ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியரின் நட்புக் கிடைத்ததில் கோமளம் பெருமை அடைந்தாள்.

சந்தானம் ஒருநாள் சொன்னார்: ''ஏதாவது எழுதுங்களேன், ''நவரச''த்தில் பிரசுரிக்கிறேன்.''

''ஏதோ பேசிப் பழகியிருக்கிறேனே தவிர,எழுதிப் பழக்கமில்லை'' என்றாள், கோமளம்.

''பரவாயில்லை. எதையாவது எழுதுங்கள். நான் எடிட் செய்து கொள்கிறேன்.''

''என்ன எழுதுவது?''

'''ஜாலி'யாக ஏதாவது எழுதுங்கள்.''

''அப்படி என்றால்?''

''ரசமாக'' என்று கூறிச் சிரித்தார், சந்தானம்.

''எதைப் பற்றி?''

''இன்றைய பாணியில் எதைப் பற்றி வேண்டுமானாலும் எழுதுங்கள்.''

''இன்றைய பாணி என்றால்?''

''அதுதான் சொன்னேனே, 'ஜாலி'யாக என்று. அதாவது, 'நியூ வேவ்' பாணி.''

கோமளம் புரிந்து கொண்டாள். ''எனக்கு அதெல்லாம் எழுத வராது'' என்றாள் வெட்கத்துடன்.

''வராது என்று ஒன்றுமில்லை. இன்று ''நவரசம்'' இவ்வளவு பிரபலமடைந்திருப்பதற்குக் காரணமே 'நியூவேவ்' பாணிதான்.. நீங்கள் யோசிக்க வேண்டாம். ஏதாவது எழுதுங்கள். நான் அதில் நியூவேவைப் புகுத்திக் கொள்கிறேன்'' என்றார் சந்தானம்.

கோமளம் இப்படித்தான் எழுதத் தொடங்கினாள். எழுத்தில் உயிர் இல்லாவிட்டாலும், சந்தானத்தின் நியூவேவ் அதில் புகுந்து அவளைப் பிரபலப்படுத்தி விட்டது. அவளுடைய புகைப்படத்தை ''நவரச''த்தில் அச்சிட்டு அவளைப் பெருமைப்படுத்தினார். வாசகர்களுக்கு அவளுடைய எழுத்தில் ரசனை ஏற்படாவிட்டாலும் அவளுடைய அழகில் ரசனை ஏற்பட்டது. நீதிபதியின் மனைவி என்ற அந்தஸ்தும் சேர்ந்திருக்கவே, விரைவில் பிரபலமாகி விட்டாள். சந்தானத்துக்கு அவளிடம் மிகுந்த அக்கறை தோன்றியதற்குக் காரணம், அவளுடைய எழுத்தோ அல்லது நீதிபதியின் மனைவி என்ற அந்தஸ்தோ அல்ல. அவளுடைய கவர்ச்சியான உருவம்தான். 'நவரசம்' அவளைப் பிரபலப்படுத்தியது என்பதால், அந்தப் பிரபலத்தை ஏற்படுத்திக் கொடுத்த தமக்கு அவளுடைய அழகிய உருவம் சொந்தமாக வேண்டும் என்று திரும்பியது, பேராசை அல்ல என்றுதான் நினைத்தார் சந்தானம்!

''கதையை நாளையே அனுப்பி வைக்கட்டுமா?'' என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுச் சுய நினைவை அடைந்தார் சந்தானம். கலெக்டரின் மனைவி கனகாதான் பேசியது.



கதையல்ல ; சரித்திரம்!

கி. பி. 450ல் சாதகர்னி வமிசத்துக்கு வாரிசில்லாது போயிற்று. இன்றைய கன்னட ராஜ்யத்தை ஆண்டவர்கள் சாதகர்னிகள். ஆட்சியை நடத்த அரசனைத் தேர்ந்தெடுப்பது எப்படி? பட்டத்து யானையின் துதிக்கையில் மாலையைக் கொடுத்து அனுப்பினார்கள். அது யார் கழுத்தில் அந்த மாலையைப் போடுகிறதோ அவரையே மன்னராக ஏற்பதென்று முடிவு செய்தார்கள். யானை ஓர் ஏழை இடையனின் கழுத்தில் கொண்டு போய் மாலையைப் போட்டது. அவன் பெயர் ஜெயந்தன். கிருஷ்ண வர்ம கதம்பன் என்ற பெயருடன் சிங்காதனமேறினான் அந்த இடையன். கதம்ப வமிசம் தோன்றியது இப்படித்தான். யானை தேர்ந்தெடுத்த இவனுடைய கதம்ப வமிசம் கன்னட தேசத்தை 600 ஆண்டுகள் (1050 வரை) அரசாண்டது. —கௌசிகன்



''ஓ.... அனுப்பி வையுங்கள். வேண்டுமானால் நானே வந்து வாங்கிக் கொள்கிறேன்'' என்றார், சந்தானம் குழைந்தபடி.

''ஐயோ, நீங்கள் வீணாக அலைய வேண்டாம்'' என்றாள் கனகா.

''உங்கள் வீட்டுக்கு நான் வரக் கூடாதென்றால் வரவில்லை.''

''நோ, நோ, நான் அப்படிச் சொல்லவில்லை. வீணாக நீங்கள் அலைய வேண்டாம் என்றேன். ''நவரசம்'' ஆசிரியர் என் வீட்டுக்கு வர நான் பாக்கியம் செய்திருக்க வேண்டும்'' என்றாள் கனகா. அவள் முகத்தில் தோன்றிய உற்சாகத்தையும், மலர்ச்சியையும் கண்டு கொண்டார் சந்தானம். அவருடைய மனத்தில் அவளைப் பற்றி வேறு ஒரு கணிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. (தொடரும்)





திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்

13. வரிப் பணம் பறி போகிறது!

மத்திய அரசின் ஊழியர்கள் தங்களுடைய வியாதிகளையோ அல்லது தங்கள் மனைவி குழந்தைகள் ஆகியோரின் வியாதிகளையோ போக்கிக் கொள்ள டாக்டருக்கும், மருந்துக்கும் செலவழிக்கும் தொகையை அரசிடமிருந்தே பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உண்டு. சில ஊழியர்கள் வீட்டுக்கு வேண்டிய மேஜை நாற்காலிகள், சுவர்க் கடிகாரம், டிரான்ஸிஸ்டர் ரேடியோ, ஹார்லிக்ஸ், — ஓவல்டின் போன்றவைகளை வாங்கிக் கொண்டு அந்தத் தொகைக்கு மருந்து பில்லைத் தயாரித்துப் பணத்தை அரசிடமிருந்து பெற்றுக் கொள்வதும் உண்டு. இந்த வசதிக்காகச் சில மருந்துக் கடைக்காரர்கள், பர்னிச்சர் கடைகளையும், ரேடியோக் கடைகளையும் சேர்த்தே நடத்தி வந்தார்கள். கடிகாரத்தையோ, நாற்காலியையோ விற்றுவிட்டு அந்தத் தொகைக்குச் சமமாக, ஃபெரடால், பிகோஸூல், ஸஸ்டனான், பிஜிஃபாஸ், நியுரோபயான் என்று, விலை உயர்ந்த மருந்துகள், டானிக்குகள் ஆகியவற்றின் பெயர்களை எழுதிப் பில் கொடுத்துவிடுவார்கள். அந்தப் பில்லை அரசால் அங்கீகரிக்கப்பட்ட டாக்டரிடம் கொண்டு போய்க் கொடுத்தால் அவர், அந்த மருந்துகளுக்கும் டானிக்குகளுக்கும் ஏற்ற வியாதியை எழுதிக் கையெழுத்தும் போட்டுக் கொடுத்துவிடுவார். அதாவது, அந்த வியாதி அந்த ஊழியருக்கு வந்தது, அதற்காக அந்த மருந்துகளும், டானிக்குகளும் டாக்டரின் யோசனையின் பேரில் வாங்கப்பட்டன என்று அர்த்தம். இந்தப் பணிக்காக டாக்டருக்கு மத்திய அரசாங்கம், பதினான்கு ரூபாய் வரை கொடுக்கும்.

டாக்டர் ராஜகோபால் இந்த வியாபாரத்தில் சிறந்த நிபுணராகிவிட்டார். அவரிடம் சராசரி மாதம் இருபது ஊழியர்களாவது வருவார்கள். ஓர் ஊழியர், ஒரு வியாதிக்கு நான்கு முறை கன்ஸல்டேஷனுக்கு டாக்டரிடம் போகலாம். முதல் கன்ஸல்டேஷனுக்கு ஃபீஸ், ஐந்து ரூபாய். பின்னுள்ள கன்ஸல்டேஷன் ஒவ்வொன்றுக்கும் மூன்று ரூபாய். ஆகவே, ஓர் ஊழியரின் ஒரு வியாதிக்கான கன்ஸல்டேஷன்களுக்குப் பதினான்கு ரூபாய் வீதம் கிடைக்கும். ஆனால் ஓர் ஊழியருக்கு ஒரு வியாதி மட்டும்தான் வரும் என்பதில்லை. பல வியாதிகள் வரும். அத்தனை வியாதிகளுக்கும் அத்தனை தனித் தனி கன்ஸல்டேஷன்கள். ஊழியரின் மனைவிக்கோ அல்லது குழந்தைகளுக்கோ வரும் வியாதிகளுக்கும் தனித் தனி கன்ஸல்டேஷன்கள். மத்திய அரசாங்க ஊழியர்கள் ரேடியோவை வாங்கினால் என்ன, சுவர்க் கடிகாரம் வாங்கினால் என்ன? ராஜகோபாலுக்குக் கன்ஸல்டேஷன் பீஸ் வந்தால் சரிதான். அந்த வகையில் ராஜகோபால் ஏராளமாய்ப் பணம் சம்பாதித்து வந்தார்.

ஒரு மாதத்தில் குறைந்தது இருபது மத்திய அரசு ஊழியர்களாவது வருவார்கள். ஓர் ஊழியருக்குக் குறைந்தது இரண்டு வியாதிகளுக்கான கன்ஸல்டேஷன்கள் நடைபெறும். அந்த ஊழியரின் மனைவிக்கு, குழந்தைக்கு என்று சில கன்ஸல்டேஷன்கள். இப்படி எல்லோருக்கும் உடம்புக்கு வந்ததாகக் காட்டினால்தான் அந்த அரசு ஊழியர் ரேடியோவோ, சுவர்க்கடிகாரமோ வாங்க இயலும். ஒரு வியாதிக்கான கன்ஸல்டேஷன்களுக்கு அதிகபட்சம் பதினான்கு ரூபாய் பெறலாம். ஒரு குடும்பத்திலுள்ள நாலைந்து பேர்களிடமிருந்து எழுபது ரூபாய் கிடைக்க வழி உண்டு. அப்படியானால் இருபது அரசு ஊழியர்கள் தயாரிக்கும் வியாதிகளுக்கு 1400 ரூபாய் பெற முடியும். அத்தனையும் மக்கள் கொடுக்கும் வரிப் பணம். இதில், ஊசி போடுவதற்கான பில் சேர்க்கப்படவில்லை. அதையும் சேர்த்துக் கொண்டால் ராஜகோபாலின் வருமானக் கணக்கு இன்னும் கூடும். ஒரு வியாதிக்கு ஆறு ஊசிகள் போடலாம். ஓர் ஊசி குத்த, இரண்டு ரூபாய் ஃபீஸ். ஒரு குடும்பத்தில் ஐந்து கன்ஸல்டேஷன்கள் நடந்தால் ஊசி குத்த அறுபது ரூபாய். இருபது ஊழியர்களுக்கு என்ன கிடைக்கும் என்று கணக்குப் போட்டுக் கொள்ளுங்கள்! அவருடைய மாதச் சம்பளத்தைக் கொண்டு, அவர் கார், ரேடியோகிராம், பிரிஜிடேர், டேப் ரிகார்டர், காமிராக்கள், இன்னும் அவருடைய வீட்டில் தென்படும் பகட்டான படாடோபப் பொருள்கள் ஆகியவைகளை நிச்சயமாக வாங்கியிருக்க முடியாது. பொதுவாக, டாக்டர்களுடைய திறமை, எந்த வியாதிக்கு எந்த மருந்தைக்

கொடுக்க வேண்டும் என்னும் அறிவுதான். ராஜகோபாலின் திறமையோ எந்த மருந்துக்கு எந்த வியாதி என்பதைக் கண்டுபிடிப்பதுதான்.

அன்று மாலை நான்கு மணிக்கு ராஜகோபால் தம்முடைய கிளினிக்கில் மேஜை மீதிருந்த மருந்துக் கடை பில்லில் எழுதப்பட்டிருந்த மருந்துகளுக்குப் பொருத்தமான வியாதிகள் எவை என்பதைச் சிந்தித்துக் கொண்டிருந்த போது, அவரைப் பார்க்கக் கருணாகரன் வந்தார். கருணாகரனைக் கண்டதும், மேஜையின் மீதிருந்த தாள்களை மேஜை இழுப்பறைக்குள் தள்ளினார் ராஜகோபால்.

''டாக்டர், இன்று மத்தியானம் கார் விபத்தில் அடிபட்ட பையன், ஆஸ்பத்திரிக்கு வந்திருப்பானே, எப்படி இருக்கிறது?'' என்று கேட்டுக் கொண்டே நாற்காலியில் அமர்ந்தார் கருணாகரன்.

''கஜேந்திரா மில் ராகவனுடைய கார், வண்டியில் மோதிய விபத்துத்தானே ?.... முதுகுத் தண்டில் பலத்த அடி'' என்றார் ராஜகோபால்.

''பிழைப்பானா, போய்விடுவானா ?''

''பிழைக்கலாம். ஆனால் ஒன்றுக்கும் பயன் படமாட்டான்'' என்று ராஜகோபால் கூறியதும் கருணாகரனின் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது.

'' அப்படி என்றால் பலத்த அடியோ?'' என்று கேட்டார்.

''தலையிலும் பலத்த அடி விழுந்து மூளையைத் தாக்கி யிருக்கிறது. கையும் காலும் விளங்காமல் போய் விடலாம். இன்னும் மயக்கம் தெளியவில்லை'' என்றார் ராஜகோபால்.

''உயிர் போய்விடாதே !''

''இன்னும் நாற்பத்தெட்டு மணி நேரத்துக்கு எதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. பிழைத்துக் கொள்வான் என்றுதான் நம்புகிறேன்.''

'' எப்படியாவது பிழைக்க வைத்து விடுங்கள், டாக்டர்!''

''இன்றைக்கு நான் கோர்ட்டுக்கு வர வேண்டாம் என்று சொல்லி அனுப்பிவிட்டீர்களே, ஏன்?'' என்று கேட்டார் ராஜகோபால்.

''உங்களைத் திங்கட்கிழமை விசாரிப்பதாக முடிவு செய்தோம்'' என்றார் கருணாகரன்.

''ஏன், கூடிப் போனால், பதினைந்து நிமிஷங்கள் ஆகும்.''

''சொல்ல முடியாது. ஆவுடையப்பபிள்ளை குறுக்கு விசாரணையை ஆரம்பித்தால், இலேசில் முடியாது.''

''ஆமாம் சார்! அவரிடம் வேறு ஒரு வழக்கில் நான் மாட்டிக் கொண்டு திணறிப் போனேன். வைத்தியத் துறையில் எனக்குத் தெரியாத விஷயங்களை யெல்லாம் அவர் தெரிந்து வைத்திருக்கிறார், சார் ! அவரைக் கண்டாலே எனக்குப் பயந்தான்'' என்றார் ராஜகோபால்.

''மத்தியானம் கேஸ் நடக்கவில்லை. பாதியில் விட்டு விட்டு ஜட்ஜ் போய்விட்டார்.''

'' ஏன் சார் ?''





''இப்போதிருக்கிற ஜட்ஜ், ஒரு கிறுக்கு.''

''கெட்டிக்காரரர் என்கிருர்களே, இவரைப் போன்ற திறமை உள்ளவர்கள் அபூர்வம் என்றல்லவா பேசிக் கொள்கிருர்கள்?''

''என்ன திறமை? ஜட்ஜுக்கு ஒரு திறமையும் வேண்டாம். நாங்கள் சொல்வதைக் கேட்டு, எதையாவது எழுதி வைத்தால் போதும். சட்ட ஞானத்தில் மட்டும் மேதாவியாக இருந்தால் போதுமா? இன்று பாருங்களேன், வழக்கைப் பாதியில் நிறுத்திவிட்டு வீட்டுக்குப் போய்விட்டார்.''

''ஏனே ?''

'' வீட்டிலிருந்து போன் வந்ததாம். வீட்டில் ஏதோ விருந்தாம்.''

''வயதான காலத்தில் இரண்டாம் கல்யாணம் செய்திருக்கிருர். பாவம் என்ன அவசரமோ?''

'' சுத்தக் கிறுக்கு.''

''கிழட்டு வயதில் சிறு பெண்ணை மணந்தாலே இந்த மாதிரி கிறுக்குத்தனம் வரத்தான் செய்யும். அவருடைய மனைவி கதை எழுதுகிருளாமே?''

'' என்ன பிரமாதமாய் எழுதுகிருள் ? பார்ப்பதற்கு அழகாயிருக்கிருள்.''

''துணிச்சல்காரிதான் சார். நியூவேவ் கதைகளை அல்லவா எழுதுகிருள் !''

'' ஏன் எழுதமாட்டாள் ? கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டால், நியூவேவ்களைப் பற்றி எழுதித்தான் திருப்தி பெற வேண்டும்'' என்ருர் கருணுகரன் கொடூரமான புன்னகையுடன். ராஜகோபால் கலகலவென்று ஆபாசமாகச் சிரித்தார்.

''திங்கட்கிழமையாவது என்னை விசாரித்து முடித்து விடுவார்களா?'' என்று ராஜகோபால் கேட்டார்.

'' ஓ.... கட்டாயம் திங்கட்கிழமை முடித்துவிட லாம். நீங்கள் உங்கள் ரிப்போர்ட்டைப் படித்துவிட்டீர்களா?'' — கருணுகரன் கேட்டார்.

'' பப்ளிக் பிராஸிக்யூட்டர், ஒரு நகல் அனுப்பியிருந்தார். படித்துவிட்டேன்.''

''உங்களுடைய சாட்சியத்தைப் பொறுத்துத்தான் இந்த வழக்கே இருக்கிறது '' என்று குழைந்தபடி கூறிச் சிரித்தார் கருணுகரன்,

''நான் சோதனை செய்து எழுதிய குறிப்புப்படி சொல்லிவிடுகிறேன்'' என்ருர் ராஜகோபால்.

''இது விஷயமாகக் கட்சியின் மாவட்டச் செயலாளர் உங்களைப் பார்த்தாராமே?''

''தேன்மொழியனு ? நேற்று வந்தார். பப்ளிக் பிராசிக்யூட்டருக்குத் தகுந்தபடி சாட்சி சொல்லச் சொன்ஞர். அதெப்படி சார் முடியும்? நான் ஒரு சர்க்கார் சேவகன். நான் எழுதிய குறிப்பில் இல்லாததை எப்படிச் சொல்ல முடியும்?''

''குறிப்பில் இல்லாததைச் சொல்ல வேண்டாம். குறிப்பில் உள்ளதை வைத்துக் கொண்டே, உங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லலாமே?''

''அது சொல்லலாம்.''

''அவ்வளவு போதும்.''

'' என்னுடைய அபிப்பிராயம் என்ருல் எப்படிச் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?'' — ராஜகோபால், சந்தேகத்தோடு கேட்டார்.

''டாக்டர், இது கற்பழிப்பு வழக்கு. அந்தப் பெண்ணை அவன் கற்பழித்திருக்கிருன் என்பதை நீங்கள் கூறினுல் போதும்.'' இப்படிக் கருணுகரன் சொன்னவுடன் ராஜகோபால் குறுக்கிட்டு, ''அதெப்படி சார், நான் சொல்ல முடியும்?'' என்று கேட்டார்.

''ஏன் சார், முடியாது ? அந்தப் பெண்ணுக்கு ஓர் ஆணேடு தொடர்பு இருந்தது என்பது சோதனையில் நிரூபணமாகிவிட்டது அல்லவா ?''

''அது வாஸ்தவம்தான். ஆனுல் 'இந்தப் பையனுக்கும் அந்தப் பெண்ணுக்கும்தான் தொடர்பிருந்தது' என்று எப்படி உறுதியாகக் கூற முடியும்?''

'' டாக்டர்! இந்த வழக்கே அந்தப் பெண்ணை அவன் கற்பழித்துவிட்டான் என்பதுதான்'' என்ருர் கருணுகரன் எரிச்சலுடன்!

''இருக்கலாம். ஆனுல்....''

''அந்தத் தொடர்பு பலாத்காரத்தினுல் ஏற்பட்ட தொடர்பாயிருக்கலாம் அல்லவா?''

''அப்படித் தோன்றவில்லையே !''

''பின்னே ?'' — கருணுகரன் கோபத்தோடு கேட்டார்.

''பலாத்காரத் தொடர்புக்கான அறிகுறி ஏதும் இல்லையே !''

''டாக்டர்! நீங்கள் சொல்வதைப் பார்த்தால் அந்தப் பெண்ணும், அந்தப் பயலும் காதல் கொண்டு உறவாடினுர்கள் என்று கூடச் சொல்லிவிடுவீர்கள் போலிருக்கிறதே!'' என்ருர் கருணுகரன். டாக்டர் ராஜகோபால் சிரித்தார்.

''எப்படி உறவாடினுர்களோ, எனக்குத் தெரியாது. ஆனுல், பலாத்காரத்துக்கான அறிகுறி ஏதும் இல்லை. எதிர்ப்பு இருந்து பலாத்காரம் நடைபெற்றிருந்தால், பெண்ணினுடைய உடலில் காயங்கள், சிராய்ப்புகள் இருக்க வேண்டும். பெண் எதிர்த்துப் பிருண்டியிருந்தால், ஆணின் முகத்திலோ,



உடலிலோ நகக் குறிகள் இருக்க வேண்டும். எதுவுமே இல்லை.''

''உங்கள் முடிவுதான் என்ன டாக்டர் ?''— எரிச்சலோடு கேட்டார் கருணாகரன்.

''அந்தப் பெண்ணுக்கு ஓர் ஆணோடு உடல் உறவு இருந்திருக்கிறது. லாபரட்டரி டெஸ்டும் அதை உறுதிப்படுத்துகிறது. அவ்வளவுதான்'' என்று கூறிவிட்டுக் கருணாகரனை உற்றுப் பார்த்தார் ராஜகோபால். கருணாகரன் சிரித்தார்.

''டாக்டர்! இந்த வழக்கில் நீங்கள் எங்களுக்கு உதவி செய்தால், உங்களுக்கு நன்மை உண்டு. தேன்மொழியன் உங்களுக்காக எந்த உதவியையும் செய்யத் தயாராயிருக்கிறார்'' என்றார் கருணாகரன்.

''நான்தான் சொல்லிவிட்டேனே, என்னுடைய பரிசோதனைக் குறிப்புப்படி நான் சாட்சி சொல்லிவிடுகிறேன் என்று.''

''டாக்டர்! இதில் ஆளும்கட்சியே அக்கறை கொண்டிருக்கிறது'' என்றார் கருணாகரன்.

ராஜகோபால் யோசனையில் ஆழ்ந்தார். அவருடைய பயமெல்லாம் கருணாகரனைப் பற்றித்தான். புரட்சிக் கட்சிக்காரர்களைப் பற்றி டாக்டர் ராஜகோபாலுக்கு நன்கு தெரியும். எந்தச் சமயத்திலும் காலை வாரிவிட்டுவிடுவார்கள் என்பதை அவரே தம்முடைய அனுபவத்திலிருந்து அறிந்திருக்கிறார். ஒரு சமயம் கருணாகரனே ஒரு நபருக்காக 'டாக்டர் சர்டிபிகேட்'டுக்கு அவரிடம் சிபாரிசு செய்தார். ராஜகோபாலும் பணத்துக்கு ஆசைப்பட்டுச் சர்டிபிகேட் கொடுத்துவிட்டார். மறு வாரம் கருணாகரனின் தலைமையில் நடைபெற்ற புரட்சிக் கட்சியின் பொதுக் கூட்டத்தில், ஒரு புரட்சிக் கட்சிக்காரன் டாக்டர் ராஜகோபாலையே தாக்கிப் பேசினான்: ''பணத்துக்காகப் பொய் சர்டிபிகேட் கொடுப்பவர்'' என்றும், ''பாட்டாளிகளின் இரத்தத்தை உறிஞ்சும் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்'' என்றும் ஏசினான். இந்த விவரம் தெரிந்து ராஜகோபால் கோபத்தோடு கருணாகரனைப் பார்க்கச் சென்றிருந்த போது, ''அந்த முட்டாள் ஏதோ உளறியிருக்கிறான். நான் நேற்றே அவனைக் கண்டித்துவிட்டேன்'' என்று சமாதானம் சொன்னார் கருணாகரன். ஆனால் உண்மையில் கருணாகரனின் தூண்டுதலின் பேரில்தான் அந்தப் புரட்சிக் கட்சிக்காரன் அவ்விதம் பேசினான் என்பதை டாக்டர் புரிந்து கொண்டார். புரட்சிக்காரர்களிடம் பழகுவது, பாம்போடு பழகுவது மாதிரி என்பதைப் புரிந்து கொண்ட ராஜகோபால் இப்போது கருணாகரனின் ஆசை வார்த்தைகளில் மயங்கவில்லை.

''டாக்டர்! இதில் நீங்கள் பயப்பட ஒன்றுமே இல்லை. பிராஸிக்யூஷன் பக்கமாக உங்கள் அபிப்பிராயத்தைச் சொன்னாலே போதும்'' என்றார் கருணாகரன்.

''சார்! இதில் என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள். ரிப்போர்ட்டில் உள்ளபடியே ஒரு வார்த்தைகூடக் கூட்டிக் குறைக்காமல் சொல்லிவிட வேண்டும், அவ்வளவுதான். ஓர் அரசாங்க ஊழியன் என்கிற முறையில் நான் அதைத்தான் செய்ய முடியும்'' என்று கூறி எழுந்தார் ராஜகோபால்.

கருணாகரனுக்கு உள்ளூறக் கோபம் எழுந்தது. வெளிக் காட்டிக் கொள்ளாமல் எழுந்தார். ''சரி, உங்கள் இஷ்டம்'' என்று கூறிவிட்டுத் தம்முடைய காரை நோக்கி நடந்தார். கார்க் கதவைத் திறந்து உள்ளே உட்கார்ந்து சாத்திக்கொண்ட விதமே அவருடைய கோபத்தை வெளிக் காட்டியது.

தமக்குப் பிடிக்காதவர்களுக்கும், தம்முடைய விரோதிகளுக்கும் கருணாகரன் எவ்விதம் கெடுதி விளைவிப்பார் என்பது ராஜகோபாலுக்கு நன்கு தெரியும் — ஏதாவது ஓர் அரசியல் போராட்டத்தைக் காரணமாக வைத்துக் கொண்டு புரட்சிக் கட்சிக்காரர்களின் ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்வார் கருணாகரன். ஊர்வலத்தில் கட்சியைச் சேர்ந்த சில ரௌடிகளும் இருப்பார்கள். கருணாகரனுக்கு வேண்டாதவரின் வீட்டுப் பக்கமோ அல்லது வியாபார ஸ்தலத்தின் பக்கமோ ஊர்வலம் வரும்போது, வேண்டும் என்றே ஊர்வலத்தில் ரௌடிகள், குழப்பத்தை விளைவிப்பார்கள். குழப்பம் ஏற்பட்டிருக்கும் சமயத்தில் எதிரியின் மீதோ — எதிரி அகப்படவில்லை என்றால், எதிரியின் கட்டடத்தின் மீதோ கற்களையும், பெட்ரோலில் நனைக்கப்பட்ட தீப் பந்தங்களையும் வீசிச் சேதப்படுத்திவிடுவார்கள்.

கருணாகரனைப் பற்றி ராஜகோபால் நன்கு தெரிந்து வைத்திருந்ததால், அவருக்குக் கொஞ்சம் பயம் தோன்றியது. (தொடரும்)

திருடர்கள்

ரா. சு. நல்லபெருமாள்



14. பெண் மனம்

கருணாகரன் ஆஸ்பத்திரியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார். மத்தியானம் விபத்தில் அடிபட்ட பையனின் நிலையை நேரில் காண வேண்டும் என்னும் ஆவல். பையன் உயிரை விட்டுவிடாமல் கையும் காலும் விளங்காதவனாக மட்டும் ஆகிவிடுவானேயானால், கருணாகரனுக்கு நல்ல லாபம் கிடைக்க வழி இருக்கிறது. எவ்வளவு லாபம் கிடைக்கும் என்பது பற்றிய கணக்கைச் சிந்தித்தபடியே காரைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

தெருக்களில் ஏற்படும் கார் விபத்து, சிலருக்கு நல்ல வருவாயை அளிக்கின்றன. விபத்து நடைபெறாதா என்று ஏங்கித் தவித்தவாறு, தெருக்களில் நடைபெறும் விபத்துக்களைத் தேடிச் சில வழக்கறிஞர்கள் அலைந்து கொண்டிருப்பார்கள். அப்படி விபத்துக்களைத் தேடித் திரியும் வக்கீல்களை ஆங்கிலத்தில், ''ஆக்ஸிடெண்ட் பிக்கர்ஸ்'' என்று கூறுவதுண்டு. அவர்களில் கருணாகரனும் ஒருவர். இது ஒரு நல்ல வியாபாரம். மாதத்துக்கு ஒரு விபத்துக் கிடைத்தாலே போதும். அதிலேயே ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் கிடைத்துவிட வழி உண்டு.

கார், லாரி, பஸ் முதலியவை கட்டாயமாக இன்ஷ்யூர் செய்யப்பட்டிருக்கும். ஏதாவது ஒரு விபத்தைக் காரோ அல்லது லாரியோ ஏற்படுத்திவிட்டால், அந்த விபத்தில் அடிபட்டுவிடும் நபருக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டிய பொறுப்பு இன்ஷூரன்ஸ் கம்பெனியைச் சேர்ந்தது. விபத்தில் அடிபட்டுவிட்ட நபர், விபத்துக்குக் காரணமான காரின் சொந்தக்காரர் மீதும், அந்தக் காரை இன்ஷூர் செய்த கம்பெனி மீதும் நஷ்டஈடு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். நீதிமன்றம், விபத்துக்குள்ளான நபரின் அந்தஸ்து, தொழில், வருமானம், விபத்தினால் அவருடைய உடலுக்கு ஏற்பட்ட துன்பங்கள் ஆகியவைகளைப் பொறுத்து எவ்வளவு நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்பதை நிர்ணயித்துத் தீர்ப்புக் கூறும். இந்த விவரங்களைத் தெரிந்தவர்கள் நஷ்டஈட்டுக்காக வழக்குப் போட ஒரு வக்கீலைத் தாங்களாகவே அமர்த்திக் கொள்வார்கள். ஆனால் விவரம் தெரியாத பட்டிக்காட்டு ஆசாமியாயிருந்தால், வக்கீலுக்கு நல்ல யோகம். இது ஒரு நல்ல வியாபாரமாதலால், தெருவில் எங்கேயாவது விபத்து நடந்து விட்டது என்று தெரிந்தால் உடனே பல வக்கீல்கள் விபத்துக்குள்ளானவர்களையோ அல்லது அவனைச் சேர்ந்தவர்களையோ சந்திக்கப் போட்டி போட்டுக் கொண்டு ஓடுவார்கள். அந்தப் பந்தயத்தில் யார் முதலில் போய் ஆளைச் சந்திக்கிறாரோ, அவருக்குத் தான் வெற்றி. அந்த மாதிரியான வழக்குகளைக் கொண்டு வர, புரோக்கர்களும் உண்டு. வக்கீலுக்குக் கிடைக்கும் லாபத்தில் பத்து சதவீதம் புரோக்கர் பெற்றுக் கொள்வார்! மற்ற வழக்குகளைவிட விபத்து வழக்குகளில் தான் புரோக்கர்களுக்குக் கமிஷன் அதிகம். 'விபத்துக் காக்கும்' வக்கீல் ஒவ்வொருவரும் இதற்காக ஒன்றிரண்டு புரோக்கர்களை அமர்த்தியிருப்பார்கள்.

மத்தியானம் நடைபெற்ற விபத்தில் நல்ல வேளையாகப் புரோக்கர் யாரும் தலையிடவில்லை. விபத்து நடைபெற்ற இடத்துக்குச் சென்ற முதல் வக்கீல் கருணாகரன்தாம். ஆகையால் 'புரோக்கர் கமிஷன்' கொடுக்க வேண்டியதில்லை. வேறு வக்கீலும் போட்டிக்கு வரவில்லை. ஆகவே, கருணாகரன் மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டார்.

கருணாகரன் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது விபத்துக்குள்ளான சிறுவன் படுக்கையில் மயங்கியே கிடந்தான். கட்டிலுக்குப் பக்கத்தில் அவனுடைய வயோதிகத் தந்தையும் தாயும் கவலையோடு அமர்ந்திருந்தனர். கிழவருக்குக் கருணாகரன் ஆறுதல் சொன்னார்.

''உயிருக்கு ஆபத்து ஒன்றுமில்லை. பயப்பட வேண்டாம். அதிர்ச்சியால் மயங்கிக் கிடக்கிறான். டாக்டரிடம் விவரமாகக் கேட்டு விட்டேன்'' என்றார்.

''என்னமோ கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். எனக்கு இவன் ஒரே பிள்ளை'' என்றார் கிழவர்.

கண்களில் கண்ணீர் முட்டி நின்றது.

''வேறு யாராவது வந்து பார்த்தார்களா?'' என்று கருணாகரன் கேட்டார்.

''அந்தக் காரின் முதலாளி வந்து பார்த்தார்.''

''என்ன? ஏதாவது பணம் கொடுத்தாரா?'' பரபரப்புடன் கேட்டார் கருணாகரன்.

''கொடுக்க வந்தார். வாங்க மறுத்துவிட்டேன். என்ன செலவானாலும் தருவதாகச் சொன்னார். நீங்கள் மத்தியானமே என்னிடம் சொல்லியிருந்தீர்களே, அதனால் வாங்க மறுத்து விட்டேன்.''

''நல்ல வேளை. இல்லையென்றால் ஏதோ கொஞ்சம் பணத்தை முதலில் கொடுத்து

விட்டுப் பிறகு ஏமாற்றிவிடுவார்கள். இன்ஷூரன்ஸ் கம்பெனியைச் சேர்ந்த யாராவது உங்களிடம் பேச வருவார்கள். சமாதானமாகப் போய்விடுவோம், கோர்ட்டுக்கெல்லாம் அலைய வேண்டாம் என்று சொல்லி ஏமாற்றப் பார்ப்பார்கள். திருட்டுப் பயல்கள். நீங்கள் ஏமாந்துவிடாதீர்கள். இந்த விஷயத்தை வக்கீலிடம் ஒப்படைத்து விட்டதாகச் சொல்லி விடுங்கள்.''

''கோர்ட் மூலமாகவா பணம் வாங்க வேண்டும் ?''

''அதை நான் கவனித்துக் கொள்கிறேன். உங்களுக்கு எழுதப் படிக்கத் தெரியுமா?''

''எனக்கு என்ன தெரியும் ? இந்தப் பயலாவது படித்து முன்னுக்கு வருவான் என்று நினைத்தேன். இப்படி ஆகிவிட்டது'' என்று கூறிய கிழவர், கட்டிலில் மயங்கிக் கிடந்த மகனைப் பார்த்துப் பெருமூச்சு விட்டார்.

''வழக்குப் போட்டு உங்களுக்கு இரண்டாயிரத்துக்குக் குறையாமல் வாங்கித் தருகிறேன்'' என்றார் கருணாகரன்.

கிழவர் வியப்பினால் வாயைப் பிளந்தார். ''இரண்டாயிரம் கொடுப்பார்களா ?'' என்று மிகுந்த வியப்போடு கேட்டுவிட்டு, கருணாகரனை உற்றுப் பார்த்தார்.

கருணாகரன் மனத்திலேயே கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்.

'பையனுக்கு ஏற்பட்டிருக்கும் விபத்தின் தன்மையைப் பார்த்தால் நிரந்தரமான ஊனம் ஏதாவது நிச்சயம் ஏற்பட்டுவிடும். டாக்டர் ராஜகோபால்கூட அப்படித்தானே சொன்னார் ? மேலும் கிழவருக்கு இவன் ஒரே மகன். இவனை நம்பித்தான் குடும்பமே இருக்கிறது. பத்தாயிரம் ரூபாய்க்கு வழக்குப் போட்டால், நிச்சயம் ஏழாயிரமாவது கொடுக்கும்படி தீர்ப்புக் கிடைக்கும். கிழவருக்கு இரண்டாயிரம்போகப் பாக்கி ஐயாயிரம் எனக்கு. கிழவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. கோர்ட்டில் எவ்வளவு ரூபாய்க்குத் தீர்ப்பாகியது என்பது தெரியவா போகிறது? நான் சொன்னதை நம்பி, சொன்ன இடத்தில் விரல் ரேகை போட்டுக் கொடுப்பார்....'

''என்னங்க, வக்கீலையா, இரண்டாயிரம் கட்டாயம் கொடுப்பார்களா?'' என்ற குரலைக் கேட்டுக் கருணாகரன் சுய நினைவை அடைந்தார்.

''ஓ...., நான் நிச்சயமாக வாங்கித் தருகிறேன் '' என்றார்.

''கோர்ட்டுக்குச் செலவாகுமே !'' என்றார் கிழவர்.



''நீங்கள் ஒரு பைசாக்கூடச் செலவழிக்க வேண்டாம். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். உங்களைப் போன்ற ஏழைப் பாட்டாளிகளுக்கு உதவுவதுதான் என் கடமை. இல்லையென்றால் காரில் சுற்றும் முதலாளிகள் உங்களை ஏமாற்றி விடுவார்கள்.!''

''ஐயாவுக்கு வக்கீல் பீஸ்....?'' என்று கிழவர் தயங்கினார்.

''அதைப் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டாம். நான் கோர்ட்டில் ஜெயித்து இரண்டாயிரம் ரூபாய் வாங்கித் தருகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் எனக்குப் பீஸ் கொடுத்தால் போதும்.''

''ஐயா! உங்களைக் கடவுள்தான் எங்களிடம் அனுப்பி வைத்திருக்கிறார்....'' என்று கூறியபடியே கருணாகரனின் காலில் விழுந்து வணங்கினார் கிழவர்.

''பெரியவரெல்லாம் என் காலில் விழலாமா? தைரியமாயிருங்கள். அடிக்கடி நான் வந்து பார்த்துக் கொள்கிறேன். யாராவது எதிலாவது பணம் விஷயமாகக் கை எழுத்துப் போடச் சொன்னால் போட்டுவிடாதீர்கள்!'' என்றார் கருணாகரன்.

''எனக்குக் கையெழுத்துப் போடவே தெரியாது.''

''கையெழுத்து இல்லையென்றால் கைவிரல் ரேகையைப் பதிக்கச் சொல்வார்கள். யார் எது கேட்டாலும் வக்கீல் கருணாகரனிடம் கேட்டுக் கொள்ளும்படி சொல்லி விடுங்கள்'' என்று யோசனை கூறிவிட்டுக் கருணாகரன் தம்முடைய வீட்டை நோக்கி விரைந்தார்.



வீட்டில் அவருக்காக அவருடைய மனைவி மதுரம் காத்திருந்தாள். கருணாகரனைக் கண்டதும் உற்சாகத்துடன் வாசலுக்கு ஓடிவந்தாள்.

''ஏன் இவ்வளவு நேரம்?'' — அவளுடைய கேள்வியில் சிறிது கோபமும் தொனித்தது.

''நீ எங்கே புறப்பட்டிருக்கிறாய் ?''

''புத்தக வெளியீட்டு விழாவுக்குப் போக வேண்டாமா ?''

''நீயும் வரப் போகிறாயா?''

''பெண் எழுத்தாளருக்குப் பாராட்டு நடைபெறுகிறது. நான் வராமலா? சீக்கிரம் புறப்படுங்கள். இன்னும் அரை மணி நேரம் தான் இருக்கிறது'' என்றாள் மதுரம்.

அவளுடைய அழகும் அலங்காரமும் அவரை மயக்கின. அதே சமயம் அவருடைய மனத்தில் வலியும் எடுத்தது. அழைத்துக் கொண்டு போனால் விழாவுக்கு வந்திருப்பவர்களின் மனங்களையெல்லாம் அவளுடைய உருவம் மயக்குமே என்ற எண்ணம் அவருக்கு வேதனையைக் கொடுத்தது. அந்த மாதிரியான ஒருவித மனோவியாதி அவரிடம் வெகு காலமாகவே இருந்து வந்திருக்கிறது. தம்முடைய எண்ணத்தைக் காட்டிக் கொள்ளாமல் சிரிப்பை வலிய வரவழைத்துக் கொண்டே புறப்படத் தயாரானார். கால் மணி நேரத்தில் தம்மை அலங்கரித்துக் கொண்டு வாசலுக்கு வந்தார். காரின் முன் பக்கத்தில் மதுரம் அமர்ந்து கொண்டாள். அவளுக்கு அருகில் இருந்தபடி காரைச் செலுத்தினார் கருணாகரன்.

அவளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு காரில் செல்வதில் கருணாகரனுக்கு மகிழ்ச்சியும் உண்டு; வேதனையும் உண்டு. நல்ல உடற்கட்டுள்ள ஓர் இளம் பெண், தம்முடைய மனைவியாக இருக்கிறாள் என்பதைப் பலருக்குக் காட்டிக் கொள்வதில் அவருக்கு உள்ளூறப் பெருமை. அதே சமயம், தம்முடைய அவலட்சணத்தையும் அவளுடைய ஒய்யாரத்தையும் மற்றவர்கள் ஒப்பிட்டுப் பார்த்து ஏளனம் செய்கிறார்களோ என்னும் சந்தேக உணர்வு அவருடைய நெஞ்சை அரித்தது. தாம் எந்த வகையிலும் மதுரத்துக்குப் பொருத்தமானவர் அல்லர் என்பதை அவரே உணர்ந்திருந்தாலும், அவள் தமக்குச் சொந்தம் என்னும் உரிமை உணர்வால் சற்று உற்சாகம் அடைந்தார். எல்லாவற்றையும்விட மனத்தை மிகவும் பாதித்தது, மண வாழ்க்கையில் ஈடுபட அவர் லாயக்கற்றிருந்ததுதான். பள்ளியில் படித்துக் கொண்டிருந்த காலத்தில் சைக்கிளில் ஏற்பட்ட ஒரு விபத்தினால் அவருக்கு அந்த நிலை ஏற்பட்டு விட்டது.

ஊரில் யாரும் வம்பு பேசக்கூடாது என்பதற்காகத் திருமணம் செய்து கொண்டார். ஆனால் அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக வம்பு அதிகமாயிற்றே தவிரக் குறையவில்லை. அதிலிருந்துதான் அவருக்குச் சந்தேகம் என்னும் மன

நோயும் தோன்றிவிட்டது. அவருடைய இயலாத் தன்மை, மனைவியைச் சந்தேகிக்கும் கீழ்த்தரமான செயலுக்கு இழுத்துச் சென்றது.

மனைவியை எங்கும் தனியாக அனுப்பமாட்டார். யாருடனும் பேச அனுமதிக்கமாட்டார். வீட்டுச் சன்னல் வழியாக அவள் தெருவைப் பார்த்தால்கூட அவருக்குச் சந்தேகம் வந்துவிடும். இதற்காகவே காவலுக்கு ஓர் அல்சேஷன் நாயையும் வைத்தார்.

மதுரத்திடம் அவருடைய கெடுபிடிகள் செல்லவில்லை. அவள் எதிர்த்தாள். அவளுடைய பிடிவாத குணமும், தியாகச் சுட்டு விடும் நாக்கும் கருணாகரனைத் திணற வைத்தன. ஓரளவு அவளுடைய போக்குப்படியே போக வேண்டியிருந்தது.

பாவம், மதுரம் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்து வறுமையில் வாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய தந்தை புரட்சிக் கட்சியைச் சேர்ந்தவர். அப்போது அவள் பி. ஏ. படித்து முடித்துவிட்டு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள்.... தொடர்ந்து படிக்கப் பண வசதி இல்லை. பண உதவி கேட்டு அவளுடைய தந்தை, கருணாகரனிடம் வந்த போதுதான் அவளைச் சந்தித்தார், கருணாகரன். மதுரம் தமக்கு மனைவி ஸ்தானத்தை ஏற்றுக் கொள்வதாயிருந்தால், அவளுடைய குடும்பம் முழுவதையும் காப்பாற்றுவதாகப் பேரம் பேசினார். மதுரத்தின் இரண்டு சகோதரிகளுக்குக் கல்யாணம் ஆக வேண்டி யிருந்தது. இரண்டு சகோதரர்கள் கல்லூரியில் படிக்க வேண்டியிருந்தது. அந்தப் பேரத்துக்கு உடன்பட்டுக் கருணாகரனுக்கு மனைவியாக இருக்கச் சம்மதித்தாள் மதுரம். ஓர் இளம் பெண்ணினுடைய வாழ்வையும், சுகத்தையும் திருடுகிறோம் என்னும் உணர்வே இல்லாமல், அவளுக்குக் கணவராகி விட்டோம் என்ற பெருமையில் பூரித்துப் போனார் கருணாகரன்.

ஆசிரியர் பயிற்சி முடிந்ததும் மதுரம், உள்ளூரிலேயே ஒரு பள்ளியில் ஆசிரியையாக வேலைக்கு அமர்ந்தாள். அவளுக்கும் பொழுது போகவேண்டுமே என்பதற்காக வேலையில் சேர அனுமதித்தார், கருணாகரன். பள்ளியில் பணியாற்றிய இளம் ஆசிரியர்களோடு அவள் பழகவேண்டி யிருந்ததைக் கண்டதும் மனம் துணுக்குற்றார். பல சமயங்களில் மதுரத்தைப் பார்க்கச் சில இளம் ஆசிரியர்கள் தம்முடைய வீட்டுக்கு வந்தபோதெல்லாம் கருணாகரனின் மனம் எரிமலையாகக் குமுறியது. அந்த வேதனையை அவரால் தாங்க முடியாமற் போகவே மதுரத்தை வேலையை ராஜிநாமா செய்யச் சொன்னார். முதலில் மதுரம் மறுத்தாள். ஆனால் கருணாகரனின் கோபம் வெடித்துச் சிதறியபோது அதிர்ந்து விட்டாள்.

''பள்ளிக்கூடத்தில் எந்த வாத்தியார்ப் பயலோடு பழகுவதற்காகப் போகிறாய்?'' என்று அவர் இரக்கமற்றுக் கேட்ட அன்றே மதுரம் வேலையை ராஜிநாமா செய்து விட்டாள்.

மதுரம் குமுறினாள். தன்னை அவர் மணந்ததே ஓர் அநீதியான செயல் என்று எண்ணியிருந்த அவளுக்கு அவருடைய மனத்தின் அசிங்கங்கள் தெரிய வந்தபோது, அதிர்ச்சிக் குள்ளானாள். சமுதாயத்தில் சோஷலிஸத்தைப் புகுத்தி மனித வர்க்கத்தின் மேம்பாட்டுக்குப் பாடுபடுவதாகக் கூறிக் கொண்டிருக்கும் புரட்சிக் கட்சியின் தலைவர், ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பணத் திமிரால் களவாடிவிட்ட அநீதியை அவளால் பொறுக்க முடியவில்லை. அவருடைய சந்தேகப் பார்வையும், வெளிவேஷமும் அவளுக்குக் கோபத்தையும் வெறுப்பையும் உண்டு பண்ணின.

பெண் மனம் பேயாவதோ, தெய்வமாவதோ ஆணைப் பொறுத்துத்தான். ஆண் கோயிலாக இருந்தால் பெண், தெய்வமாக ஒளி விடுவாள்; சுடுகாடாக மாறினால், பேயாகக் கோரத் தாண்டவமாடுவாள்.

மதுரத்தின் மனத்தில் பழி வாங்கும் எண்ணம் தீவிரமாகியது. அந்தச் சமயத்தில்தான் கருணாகரனிடம் ஜூனியராக வந்து சேர்ந்தான், சிங்காரம். ஆறடி உயரமும், பயில்வானைப் போன்ற பரந்த உடலும் பெற்றிருந்த அவன் கருணாகரனிடம் ஜூனியராக வந்து சேர்ந்ததன் காரணமே மதுரத்தின் அழகுதான். அவரிடம் ஜூனியராகச் சேர்ந்து விட்டால் மதுரத்தை அடிக்கடி பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டும் என்ற ஆசை.

சிங்காரத்தின் உருவம் எவ்வளவு பெரிதோ அதற்கு நேர் எதிரிடையாக மூளை சிறிது. நினைத்ததை முடிக்க வேண்டும் என்ற அடாவடிப் புத்தி அவனுக்கு. எதையும் தீவிரமாகச் சிந்திக்க இயலாத மந்தமான மூளை.

கணவரின் ஜூனியர் என்ற முறையில் மதுரம் அவனோடு சகஜமாகப் பேசினாள், பழகி

What do seven different tyre companies have in common?

M		F		G		
A		I		O	P	
N	**I**	**R**	**C**	**O**	**R**	**D**
S	N	E	E	D	E	U
F	C	S	A	Y	M	N
I	H	T	T	E	I	L
E	E	O		A	E	O
L	K	N		R	R	P
D		E				

That's it. Nircord - India's first nylon tyre cord.
Nircord is the super-strengthener for all
better-grade tyres made in India today.

nircord®

® Regd. Trade Mark

Nirlon Synthetic Fibres & Chemicals Ltd.
Nirlon House, 254-B, Dr. Annie Besant Road, Bombay-400 025.

Interpub/NIR-C/46A/74

நவராத்திரி நகைப்பு!



எம்.எல்.ஏ.: ஒவ்வொரு படியாக எட்டு படி எண்ணு பார்க்கலாம். ஒரு ரூபாய் தரேன்!

"உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிதிக்காக உண்டியல் குலுக்கிச் சேர்த்த பணத்தை என்னசெய்வே?"
"கை கால் தலை இழந்த பொம் மைகளை ஒட்ட வைத்து மீண்டும் கொலுப்படியில் நிற்க வைப்பேன்!"





"எனக்குத் தொண்டை கட்டு. அதனால் பாட்டு வாத்தியாரைப் பின் னோடு அழைத்து வந்தேன் மாமி!"

"ரேஷன் கார்டைக் காட்டினால் தான் சுண்டல் தருவேன்!"



னாள். கருணாகரனின் சந்தேகப் பார்வை தன் மீது விழட் டும் என்பதற்காகவே சிங்காரத்துடன் நெருங்கிப் பழகி னாள். அப்படி ஒரு பழி வாங்கும் உணர்ச்சி அவளிடம் மேலிட்டு விட்டது. இதைக் கண்ட கருணாகரன், தம் அலுவலகத்தை வீட்டிலிருந்து வேறு ஒரு கட்டிடத்துக்கு மாற்றினார். அதன் பிறகும் கருணாகரனின் வீட்டுக்குப் போகும் வாய்ப்பைச் சிங்காரம் ஏற்படுத்திக் கொண்டான்.

மதுரத்துக்குக் கதைகள் படிப்பதில் மிகுந்த ஆர்வம் உண்டு. சிங்காரம் தன்னை ஓர் இலக்கியவாதியாக அவ ளிடம் காட்டிக் கொள்ளப் பல புத்தகங்களை எப்போதும் தன் கைப்பையில் சுமந்து கொண்டு திரிவான். அவளுக்காக நூல் நிலையங்களிலிருந்து புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுப்பான். கதைப் புத்தகங்களைக் கொடுக்கும் சாக்கில் அவளைச் சந்திக்க அடிக்கடி சென்றான். அந்தச் சமயங் களில் கருணாகரனே அவனை வாசலில் சந்தித்துப் புத்தகங் களைப் பெற்றுக் கொண்டு அனுப்பி விடுவார். சிங்காரம் மிகுந்த ஏமாற்றத்தோடு திரும்புவான்.

சிங்காரத்துடன் பேசிக் கொண்டிருப்பதில் மதுரத்துக்கு ரசனை இருந்தது. தன்னை ஒரு விமர்சகனாகக் காட்டிக் கொள்ள அவன் கையாளும் பாணி அவளுக்குப் பிரமிப்பூட் டும். கம்யூனிஸ நாட்டு நாவலாசிரியர்கள் சிலருடைய பெயர்களையும் மேலை நாட்டுத் தத்துவ ஞானிகள் சில ருடைய பெயர்களையும் அடிக்கடி சொல்லி, சில தத்துவ வார்த்தைகளையும் அவன் சொல்லும்போது மதுரத் துக்கு வியப்பா யிருக்கும். அவனைச் சிறந்த படிப்பாளி என்றே நம்பினாள். அவனை வீட்டுக்கு வர விடாமல் கருணாகரன் தடுத்தது அவளுடைய பழிவாங்கும் உணர்வை இன்னும் தூண்டியது. சிங்காரத்தைத் தம்முடைய வீட்டு வாசலில் கண்டபோதெல்லாம் கருணாகரன் பட்ட மன வேதனையைக் கண்டு மதுரம் ரசித்தாள். சில வேளைகளில் அவளே முந்திக்கொண்டு வாசலுக்கு வந்து சிங்காரத்தை வரவேற்று, புத்தகங்களை வாங்கிக் கொண்டபோது கருணா கரனின் கண்களில் தெரிந்த கலக்கத்தையும், குரோ தத்தையும் கண்டு உள்ளூறச் சிரித்தாள்.

அன்று புத்தக வெளியீட்டு விழாவுக்கு மதுரமும் புறப் பட்டு விட்டதைக் கண்டு கருணாகரன் முதலில் முகத்தைச் சுளித்தார். ஆனால் அவளுடைய பிடிவாதம் தளராது என்பதையும் புறப்படத் தயாராக இருப்பவளை இனித் தடுக்க முடியாது என்பதையும் அறிந்து கொண்டதால் வேறுவழி யின்றி அவளோடு புறப்பட்டார்.

வெளியீட்டு விழாப் பந்தலில் முன் வரிசையில் போடப் பட்டிருந்த நாற்காலிகளில் அவர்கள் இருவரும் அமர்ந் தார்கள். சற்று நேரத்துக்குப் பிறகு குபீரென ஒருவித நெடி வீசவே கருணாகரன் பக்கவாட்டில் திரும்பிப் பார்த் தார். சிங்காரம் அவனுடைய இயல்பான அசட்டுச் சிரிப்பை உதிர்த்தபடி அவர்களை நெருங்கி வந்தான். மரியா தைக்காக மதுரத்தைப் பார்த்துக் கைகூப்பி வணங்கினான். அவளும் சிரித்தபடியே பதிலுக்கு வணங்கினாள். கருணாகரன் கடைக்கண்ணால் கவனித்தார்.

"நீங்கள் இங்கே வருவதாகச் சொல்லவில்லையே?" என்று கருணாகரனைப் பார்த்துக் கேட்டான் சிங்காரம்.

"திடீரென்று தான் புறப்பட்டோம். அந்தப் பௌடரைப் போடாமல் வரக் கூடாதா? நெடி மூக்கை அரிக்கிறது" என்று வெறுப்புடன் முகத்தைச் சுளித்தபடி சொல்லி விட்டுப் பந்தலில் வேறு எங்கோ பார்ப்பதாக பாவனை செய் தார், கருணாகரன். விரைவில் தம் முன்னாலிருந்து அவன் விலகிப் போய்விட வேண்டும் என்று விரும்பினார்.

"உட்காருங்களேன்" என்று மதுரம் சிங்காரத்திடம் கூறியதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினார். அவள் சொன்னவுடனே அடுத்திருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டான் சிங்காரம். அதைக் கண்ட கருணாகரன் முள் மீது இருப்பவரைப் போல் பரிதவித்தார். அவருடைய பரிதவிப்பை ஓரக் கண்ணால் கவனித்து உள்ளூறச் சிரித்துக் கொண்டிருந்தாள், மதுரம். (தொடரும்)

திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்



15. வெளியீட்டு விழா

வெளியீட்டு விழாப் பந்தலுக்குள் சம்பத் சென்ற போது, முன் வரிசையில் அமர்ந்திருந்த நளினியைக் கண்டதும் உற்சாகம் அடைந்தான். அவளுக்கு அருகில் அமர்ந்திருந்த அவளுடைய தந்தை ராகவனுக்கு மரியாதையாக ஒரு வணக்கத்தைச் செலுத்தினான். அவனைத் தனக்குப் பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமரும்படி கண்களால் சைகை செய்தாள், நளினி. அவள் காட்டிய நாற்காலியில் ஒரு கைக்குட்டை கிடந்ததைக் கண்டு தயங்கினான் சம்பத். அதை நளினி எடுத்துக் கொண்டு அவனுக்கு மட்டும் கேட்கும்படியாக, ''நான்தான் போட்டேன்'' என்றாள். நாற்காலியில் அவன் அமர்ந்ததும், நளினி, ''ஏன் இவ்வளவு நேரம்? நான் வந்து அரை மணி நேரமாகிறது'' என்றாள்.

''ஸீனியரின் ஆபீஸிலிருந்து வருகிறேன். இவ்வளவு நேரம் வேலை வாங்கிவிட்டார்'' என்றான் அலுப்புடன்.

''அவர் வரவில்லையா?''

''அவரோடுதான் நானும் வந்தேன். வாசலில் யாருடனோ பேசிக் கொண்டிருக்கிறார்'' என்றான் சம்பத்.

அந்தச் சமயம் அங்கு கலெக்டர் வரவே, அவருடன் பேசுவதற்காக எழுந்த ராகவன், அவரோடு பேசியவாறே மேடையை நெருங்கியவர், அதன் பக்கத்திலிருந்த பெரிய சோபாவில் அவருடன் சேர்ந்து அமர்ந்து விட்டார்.

''நல்லவேளை உன் அப்பா அங்கே போய்விட்டார்'' என்றான் சம்பத்.

''ஏன்?'' — நளினி கேட்டாள்.

''அவர் இருந்தால் நீ பேசவே மாட்டாயே.''

''பேசுவதற்கா இங்கே வந்திருக்கிறோம்?''

''பின்னே, எல்லோரும் இங்கே எதற்காகக் கூடியிருக்கிறார்கள்? பாரேன், எல்லாரும் சளசளவென்றுதான் பேசிக் கொண்டிருக்கிறார்கள்'' என்றான் சம்பத்.

நளினி சிரித்தாள். ''கூட்டம் பிரமாதம்'' என்றாள்.

''பெண் எழுத்தாளர் இல்லையா?'' என்றான், சம்பத், அலட்சியமாக.

''ஓ...! ,பெண்ணுக்காகத்தான் இந்தக் கூட்டமோ? அவளுடைய எழுத்துக்காக இல்லையா?''

''நீதான் அவளுடைய கதைகளைப் படித்திருக்கிறாயே. அவளுடைய எழுத்துத் திறமையைப் பற்றி உனக்குத் தெரியுமே.''

''இன்று வெளியாகும் அவளுடைய புத்தகத்துக்கு ஒரு பிரபல எழுத்தாளர் மதிப்புரை எழுதியிருக்கிறார்.''

''பிரபல எழுத்தாளர்தானே? சிறந்த எழுத்தாளர் யாரும் எழுதவில்லையே?''

''சிறந்த எழுத்தாளராக இல்லையென்றால் பிரபலம் அடைய முடியுமா?''

''சிறந்த எழுத்தாளர்கள் பிரபலமடையும் அளவுக்கு இன்று நம்முடைய வாசகர்களின் தரம் அமையவில்லை. சமீப காலமாக இலக்கியத் தரம் ரொம்பக் குறைந்து போய் விட்டது. இந்தமாதிரி 'பாபுலர்' எழுத்தாளர்களுக்குத் தான் இன்று மார்க்கெட். பாவம், ஸ்டாண்டர்ட் எழுத்தாளர்கள் தமிழ் நாட்டில் பிறந்து விட்டுத் தவிக்கிறார்கள்'' என்றான் சம்பத்.

''கோமளத்தின் புத்தகத்துக்கு மதிப்புரை எழுதிக் கொடுத்தவர் தரமான எழுத்தாளரும்கூட.''

''யார்?''

நளினி அந்த எழுத்தாளரின் பெயரைச் சொன்னதும், சம்பத், வியப்புடன், ''அவர் எப்படி இவளுடைய புத்தகத்துக்கு முகவுரை எழுதினார்?'' என்று கேட்டான். பிறகு, ''கோமளத்தின் கவர்ச்சிக்காக இரக்கப்பட்டு எழுதிக் கொடுத்திருப்பார்'' என்றான்.

''இரக்கப்பட்டா? அல்லது மயங்கியா?'' என்று கேட்டு விட்டு நளினி குறும்பாகச் சிரித்தாள்.

அவளுடைய குறும்புத்தனத்தை ரசித்தான் சம்பத். அப்போது பந்தலுக்குள் நீதிபதி நாகசுந்தரமும், கோமளமும் வரவே, அவர்களுடைய கவனம் அந்தத் திசையில் திரும்பியது.

''மயங்கித்தான் எழுதியிருப்பார்'' என்று நளினியிடம் இரகசியமாகச் சம்பத் சொன்னதும், நளினி சிரித்தாள். ஒய்யாரமாக நடந்து வந்த கோமளத்தின் அழகைப் பொறுமையோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

விழாப்பந்தலில் கூடியிருந்த கூட்டத்தைப் பார்த்து நாகசுந்தரம் பிரமிப்படைந்தார். அவ்வளவு பெரிய கூட்டத்தை அவர் எதிர்பார்க்கவில்லை. கோமளம் எழுதுவதையே விரும்பாத நாகசுந்தரம், இப்போது தம்முடைய மனைவிக்குக் கிடைத்திருக்கும் புகழை எண்ணி வியந்தார். அவளுடைய 'நியூவேவ்' பாணிக் கதைகள் சிலவற்றைப் படித்துவிட்டு வெறுப்புடன் முகத்தைச் சுளித்திருக்கிறார். வெளியில் பிறர் முன்னிலையில் பேசவே வெட்கப்பட வேண்டிய விஷயங்களைக் கோமளம் சரளமாக எழுதுவதை எண்ணி எண்ணித் தம்முள்ளாகவே மனம் கசந்திருக்கிறார். அதுவும் ஒரு பெண்ணால் எப்படி இவ்வளவு அப்பட்டமாக எழுத முடிகிறது என்பது அவருக்குப் புரியவேயில்லை. அவளுடைய எழுத்தில் காணப்படும் அசிங்கங்களைப் போலவேதான் அவளுடைய மனமும் இருக்குமோ என்ற சந்தேகம் எழுந்தபோதெல்லாம் அவளை எழுத விடாமல் தடுக்க வேண்டும் என்னும் ஆவேசம் எழுந்ததுண்டு. ஆனால், அந்த ஆவேசம் எல்லாம் கோமளத்தின் கவர்ச்சியில் ஒரு நொடியில் அவிந்துவிடும்.

ஒருமுறை, பந்தல் முழுதும் பார்வையைச் செலுத்தினார் நாகசுந்தரம். ஊரில் உள்ள முக்கியமான பிரமுகர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் உண்மையில் கோமளத்தின் எழுத்தில் ஈடுபாடு கொண்டு வந்தவர்களா அல்லது நீதிபதியின் மனைவி என்ற கௌரவத்துக்காக வந்தவர்களா என்று புரியாமல் குழம்பினார்.

அவருக்கு அடுத்த நாற்காலியில் அமர்ந்திருந்த கருணாகரன், ''தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் உங்கள் மனைவி'' என்றார். நன்றி கலந்த புன்னகையுடன் கருணாகரனைப் பார்த்தார் நாகசுந்தரம்.



''நீங்கள் கதைகள் படிப்பதுண்டா?'' என்று கேட்டார்.

''கதைகள் அவ்வளவாகப் படிப்பதில்லை. ஆனால் இவர்களுடைய கதைகள் சிலவற்றைப் படித்திருக்கிறேன்'' என்று பொய் சொன்னார், கருணாகரன். பிறகு, ''என் மனைவி, உங்கள் மனைவியின் பரம ரசிகை'' என்றார்.

''ஓ...!'' என்று வியந்தபடியே கருணாகரனுக்கு அடுத்திருந்த மதுரத்தைப் பார்த்தார், நாகசுந்தரம்.

''நான் ஒன்று விடாமல் படித்திருக்கிறேன்'' என்றாள் மதுரம். ''இன்று இவர்களைப் போல் துணிந்து எழுதும் எழுத்தாளர் தமிழ்நாட்டில் வேறு யாரும் இல்லை என்றே சொல்லலாம்'' என்றாள்.

நாகசுந்தரம் குறுநகை புரிந்தார். ஏதோ 'நியூவேவ்' என்னும் பெயரில் எதை எழுதினாலும் படிப்பார்கள் போலிருக்கிறது என்று வியந்து கொண்டார். கோமளம் கதைகள் எழுத ஆரம்பித்த புதிதில் அவர் சொன்னவை நினைவில் வந்தன—

'நவரசம்' பத்திரிகையில் வெளியாகியிருந்த கோமளத்தின் கதையை ஒரு நாள் படித்துவிட்டு மிகுந்த அருவருப்போடு முகத்தைச் சுளித்தார்.

''இப்படி யெல்லாம் நீ கதை எழுதினால் எனக்குத்தான் கேவலம். ஒரு நீதிபதியினுடைய மனைவி தரக் குறைவாக எழுதுகிறாள் என்று ஊரில் பேசுவார்கள்'' என்றார்.

''ஊரில் இதைத்தானே விரும்பிப் படிக்கிறார்கள்?'' என்றாள் கோமளம்.

''விரும்புகிறார்கள் என்பதால் நீ இப்படி எழுதுவதா? இந்த மாதிரி எழுதுவதற்கென்றே வேறு எத்தனையோ பேர் இருப்பார்களே.''

''எடிட்டர் சந்தானம்தான் நியூவேவ் பாணியில் இருக்க வேண்டும் என்றார். கதையில் உள்ள சில பகுதிகள் நான் எழுதியவையல்ல; எடிட்டர்தான் சேர்த்திருக்கிறார்.''

''பத்திரிகை விற்பதற்காக அவர் என்ன வேண்டுமானாலும் செய்வார். ஆனால் உன்னுடைய கதையில் அசிங்கத்தைப் புகுத்தியிருக்க வேண்டாம்.''

''இன்றையப் பாணியின் தன்மை இப்படித்தான். இப்படி இருந்தால்தான் ரசிக்கிறார்கள். இல்லையென்றால் எனக்கு இவ்வளவு சீக்கிரத்தில் பெயர் வந்திருக்குமா?'' என்று கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டாள் கோமளம்.

''எழுத்தை இப்படி அம்மணமாக விட்டுவிடக் கூடாது. நிர்வாணம், ஓர் ஆபாசமான காட்சி. சிறிதுநேரம்தான் வெறியூட்டுமே தவிர, வெகுநேரம் பார்த்து ரசிக்க இயலுமா? ஒரு பெண்ணின் அழகு அவள் உடை உடுத்தும் பாணியில்தான் இருக்கிறது. அவளுடைய பெருமையும் அதில்தான். அதேபோல்தான், இலக்கியத்தையும் தகுந்த உடை உடுத்தித்தான் காட்ட வேண்டும். இப்படி நிர்வாணமாக விட்டுவிட்டால், முதலில் ஏதோ பரபரப்பாகத் தோன்றும்; போகப் போக அருவருப்பு ஏற்பட்டு விடும்.''

நாகசுந்தரம் இப்படிக் கூறியதைக் கோமளம் ஏற்றுக் கொண்டாலும், 'நவரசம்' பத்திரிகை, நியூவேவ் கதைகளையே விரும்பும்

போது அவள் என்ன செய்ய முடியும்? அந்த மாதிரியான கதைகள் அவளுக்கு விளம்பரத்தைக் கொடுத்தபோது பெருமையால் பூரித்துப் போனுள்.

இப்போது நாகசுந்தரம்கூட அந்தப் பந்தலில் நிரம்பி வழிந்த கூட்டத்தைக் கண்டு பூரிக்கத்தான் செய்தார்! தம்முடைய மனைவியின் எழுத்துக்கு அவ்வளவு மதிப்பும் புகழும் இருக்கும் என்றே அவர் நம்பவில்லை.

பந்தலில் அமைக்கப் பட்டிருந்த மேடையைப் பார்த்தார். மேடையில் விழாவுக்குத் தலைமை வகிக்க வந்திருந்த மாவட்டக் கலெக்டர் அமர்ந்திருந்தார். அவருக்கு அடுத்துக் கோமளம் அமர்ந்திருந்தாள். அந்த விழாவில் புத்தகத்தையும், கோமளத்தையும் புகழ்ந்து பேசுவதற்காகச் சில முக்கிய பிரமுகர்களும் வந்திருந்தார்கள்.

அந்த வெளியீட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்தவர், கோமளத்தின் கதைத் தொகுதியைப் புத்தகமாக அச்சிட்ட 'ரசிகர் பதிப்பக'த்தின் அதிபரான நமச்சிவாயம். வெளியீட்டு விழா நடத்த வேண்டும் என்று யோசனை கூறியவரும் அவரே. அதை ஆமோதித்தார் 'நவரசம்' பத்திரிகையின் ஆசிரியர், சந்தானம். வெளியீட்டு விழா நடத்தினுல் கோமளத்தின் புகழ் பரவும் என்பதையும் நல்ல விளம்பரம் கிடைக்கும் என்பதையும் நமச்சிவாயம் விவரித்தபோது கோமளம் மிகுந்த உற்சாகம் அடைந்தாள். ''நவரசம் பத்திரிகையில் விழாப் படங்களைப் பிரசுரித்து ஜமாய்த்து விடுகிறேன்'' என்று சந்தானம் கூறியதும் கோமளம் பெருமை தாங்காமல் திணறினுள்.

''விழாவுக்கு நிறையச் செலவாகுமே?'' என்றுள் கோமளம்.

''செலவை இப்போது நீங்கள் தரவேண்டாம். பின்னுல் பார்த்துக் கொள்ளலாம்'' என்று நமச்சிவாயம் சொன்னதும் நாகசுந்தரம் திடுக்கிட்டார்.

''வெளியீட்டு விழாச் செலவை நாங்கள் தான் ஏற்க வேண்டுமா?'' என்று கேட்டார்.

நமச்சிவாயம் குழைவாகச் சிரித்தபடி சொன்ஞர்: ''ஹி.... ஹி.... பொதுவாகப் புத்தகங்களுக்கு வெளியீட்டு விழாவே நடத்துவதில்லை. வெளியீட்டு விழாவினுல் புத்தகங்





ஒளிக்கப்பட்ட தேங்காய் !

ஒரிஸ்ஸாவில் ஸ்ரீ பஞ்சமி வந்துவிட்டால் மாணவர்களுக்கெல்லாம் கொண்டாட்டம். சரஸ்வதி தேவியின் வழிபாடாகத் திகழ்கிறது. ஆசிரியர் ஏழெட்டு மாணவ மாணவிகளைத் தேர்ந்தெடுப்பார். எல்லாம் எட்டுவயது, பத்து வயதுக் குழந்தைகள். ஸ்ரீபல் என்று அழைக்கப்படும் தேங்காயைக் குட்டையில் சேற்றில் யாருக்கும் தெரியாமல் புதைத்து விடுவார்கள். குழந்தைகள் சென்று, தேடித் தேங்காயை எடுத்து வர வேண்டும். முதலிலே தேங்காயை எடுக்கும் மாணவனுக்கோ, மாணவிக்கோ அன்று ஏகப்பட்ட பெருமை. - மயிலன்



மருதாணியிட்டால் ஆபத்து !

ராஜஸ்தானில் 'விஸ்ஸா' என்று ஓர் இனத்தவர் இருக்கிறார்கள். இவ்வினத்தைச் சேர்ந்த பெண்மணிகள் மருதாணி இட்டுக் கொள்வதில்லை. இவ்வினத்து மூதாட்டி ஒருத்தி தன் கணவனுடன் உடன் கட்டை ஏறியதாகவும், அப்பொழுது மருதாணி இட்டுக் கொண்டதாகவும் கூறுகிறார்கள். அவள் உத்தரவின்பேரில் பீகானேரில் ஒரே ஒரு குடும்பம் மட்டும் தான் இன்றும் மருதாணி இட்டுக் கொள்ளுகிறது. இவ்வழக்கத்தை மீறி 'விஸ்ஸா' இனத்து மக்கள் மருதாணி இட்டுக் கொண்டால் கைகளில் பெரிய பெரிய கொப்புளங்கள் ஏற்பட்டு விடுகின்றனவாம். அதனால் என்ன தீங்கு நேருமோ என்ற அச்சத்தில் இம் மக்கள் மருதாணியைத் தவிர்க்கிறார்கள். ரா,வீ.

களின் விற்பனை தமிழ் நாட்டில் கூடப் போவதுமில்லை. இந்த மாதிரியான விழாவெல்லாம் புத்தக ஆசிரியரின் விளம்பரத்துக்காகத்தான். நாம் வெளியீட்டு விழா நடத்தினால் அம்மாவின் புகழ் பரவும்.''

''செலவு அதிகம் ஆகுமோ ?'' — கோமளம் கவலையோடு கேட்டாள்.

''செலவைப் பற்றி என்ன கவலை? நீங்கள் பணம் தரவேண்டாம். முதலில் நானே பணம் போட்டுக் கொள்கிறேன். பிறகு உங்கள் ராயல்டியிலிருந்து சரிக்கட்டிக்கொண்டால் போகிறது.''

''ராயல்டி பணத்தை விட அதிகமாக ஆகுமோ என்னவோ?'' என்று நாகசுந்தரம் கேட்டார்.

''அதை நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் கவலையே படவேண்டாம். விழா முடிந்ததும் கணக்கை உங்களிடம் காட்டுகிறேன். ராயல்டி பணத்தை விட அதிகமாகப் போகாதபடி நான் கவனித்துக் கொள்வேன்'' என்று நமச்சிவாயம் தைரியம் சொன்னார்.

ஆனால் நாகசுந்தரத்துக்குத் திருப்தி ஏற்படவில்லை. நமச்சிவாயம்தரப்போகும்கணக்கு எப்படி இருக்கும் என்று தெரியும். ராயல்டி பணம் முழுவதற்கும் கணக்குக் காட்டிவிடுவார். இனி இந்தப் புத்தகத்திலிருந்து கோமளத்துக்கு ராயல்டியாக ஒரு பைசாக் கூடக் கிடைக்கப் போவதில்லை. இதை நினைத்து வெளியீட்டு விழாவுக்கு ஆட்சேபணை செய்த நாகசுந்தரம், விழாவினால் கோமளத்துக்குக் கிடைக்கப் போகும் விளம்பரத்தையும், புகழையும் எண்ணி, சம்மதித்தார்.

நமச்சிவாயமும், சந்தானமும் சேர்ந்து முயன்றதால்தான் வெளியீட்டு விழாவுக்கு இவ்வளவு கூட்டம் கூடியது என்பதை நாகசுந்தரம் புரிந்து கொண்டார். விழாவைப் பற்றி இரண்டு வாரங்களாக 'நவரசம்' பத்திரிகையில் பிரமாதமாக விளம்பரங்கள் வெளியாகி யிருந்தன. கூட்டத்தையும், பந்தல் அலங்காரத்தையும், மேடையில் கோமளம் அமர்ந்திருந்த ஒய்யாரத்தையும் பார்த்து மனம் பூரித்தார் நாகசுந்தரம்.

பந்தலுக்குள் வந்த ஆவுடையப்ப பிள்ளை, முன் வரிசையிலிருந்த நீதிபதியைப் பார்த்துக் கும்பிட்டார். பிறகு சற்றுத் தள்ளியிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

''நான் மிஸ்டர் பிள்ளையிடம் எவ்வளவோ சொன்னேன். பிடிவாதமாக இருக்கிறார்'' என்று கருணாகரன் மெதுவாகக் கூறியதும், நாகசுந்தரம் ஒன்றும் புரியாமல் கருணாகரனைப் பார்த்தார்.

''அதுதான் வக்கீல் சங்கத்தின் தீர்மானம் பற்றி...'' என்று குழைந்தார் கருணாகரன்.

நாகசுந்தரம் உடனே புரிந்து கொண்டார். அவருடைய முகத்திலிருந்த மகிழ்ச்சி மறைந்தது. சந்தோஷமான அந்த வேளையில் கருணாகரன் அந்தப் பேச்சை எடுத்தது விரசமாக இருந்தது. இருந்தாலும் விவரம் தெரிந்து கொள்ளும் ஆசையில் நாகசுந்தரம் பேசினார்.

''என்ன தீர்மானம்?'' — தெரியாதவரைப் போல் நடித்தார் நீதிபதி.

கருணாகரன் ஒரு கூழைச் சிரிப்பை உதிர்த்தார். ''உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைத்தேன். வக்கீல் சங்கத்துக்கு வேறு வேலை என்ன? உங்கள்மீது சிலருக்குக் கோபம், வேறென்ன...'' என்றார்.

''என்ன தீர்மானமோ?'' என்று அலட்சியமாகக் கேட்டார், நீதிபதி.

தீர்மானங்களைப் பற்றி விவரிக்கக் கருணாகரன் விரும்பவில்லை. ''முழு விவரமும் நான் பார்க்கவில்லை. மிஸ்டர் பிள்ளைதான் தீவிரமாக முயற்சி செய்கிறார்'' என்றார்.

நாகசுந்தரம் சற்றுத் தள்ளி அமர்ந்திருந்த ஆவுடையப்ப பிள்ளையைப் பார்த்தார். பிள்ளையின் மீது அவருக்குக் கடும் கோபம் எழுந்தது. பெருந்தன்மையானவர் என்று தாம் நம்பிய ஆவுடையப்ப பிள்ளை தமக்கு எதிராகத் தீர்மானம் போட முயல்கிறார் என்பதை எண்ணிப் பொருமினார்.

''ஓஹோ...'' என்று அலட்சியமாக முனகிவிட்டு, அதைப் பற்றித் தாம் அக்கறை கொள்ளவில்லை என்னும் பாவனையில் பார்வையை வேறு திசையில் செலுத்தினார்.

நீதிபதியிடம் தாம் சொல்ல நினைத்ததைச் சொல்லியாகி விட்டது என்று திருப்தியடைந்தார் கருணாகரன். (தொடரும்)

16, ஆணின் ஆணவம்

கருணாகரன் உற்சாகத்துடன் பந்தலில் நிரம்பியிருந்த கூட்டத்தில் பார்வையைச் செலுத்தினார். வக்கீல்களும், டாக்டர்களும், இன்ஜினீயர்களும், அரசாங்க அதிகாரிகளும் மாணவர்களும் நிரம்பி யிருந்தார்கள். பலருடைய பார்வை தம்முடைய பக்கமாக அடிக்கடி திரும்பியதை உணர்ந்த கருணாகரன், உள்ளூறக் கூசினார். அவரையும் மதுரத்தையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கேலியாகப் பேசுகிறார்களோ என்ற சந்தேகம் அவருடைய மனத்தைக் குடைந்தது. யாராவது அவர் இருந்த திசையைப் பார்த்துச் சிரித்தால்கூடத் தம்மைப் பார்த்துத்தான் சிரிக்கிறார்களோ என்று ஐயுற்றார்.

அவசரம் அவசரமாகக் கைக்குட்டையால் தம்முடைய முகத்தில் தோன்றியிருந்த எண்ணெய்ப் பசையைத் துடைத்துக் கொண்டார். எவ்வளவுதான் முகத்தை அழுத்தித் துடைத்தாலும் முகத்தை விகாரப்படுத்தி யிருந்த அம்மைத் தழும்புகளைப் போக்க முடியவில்லையே என்று வருந்தினார். பல இளைஞர்களுடைய கண்கள், மதுரத்தின்மீது படர்ந்ததைக் கண்டு மனம் கொதித்தார். அவளும் அப்படி யாரையாவது பார்க்கிறாளா என்பதை அறிய முயன்றபோது, அவள் சிங்காரத்தோடு தணிந்த குரலில் சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டார். அவர்கள் பேசிக் கொண்டது கருணாகரனின் காதில் விழவில்லை என்றாலும், அவர்கள் இருவரும் ஏதோ ஒரு ரசமான விஷயம் பற்றிப் பேசுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டார்.

''இது என்ன சென்ட்? மணமாயிருக்கிறதே!'' என்று மதுரம் கேட்டாள்.

''சென்ட் இல்லை, இது பௌடர். வெளிநாட்டிலிருந்து வந்தது'' என்றான் சிங்காரம், பெருமையுடன். மதுரம் அவனுடைய முகத்தைப் பார்த்தாள். கால் அங்குலக் கனத்துக்கு முகத்தில் பவுடரை அப்பியிருந்தான்.

''வாசனை பிரமாதம்'' என்றாள் மதுரம்.

''ஸீனியருக்கு இந்த வாசனை பிடிக்கவில்லை.''

''உங்களுடைய ஸீனியருக்கு எதையுமே ரசிக்கத் தெரியாது. எனக்கு இந்த வாசனை ரொம்பப் பிடித்திருக்கிறது'' என்று கூறியபடி மூச்சைப் பலமாக உள் இழுத்தாள். அவனுடைய முகத்திலிருந்த பவுடரை அவள் நாசியால் உறிஞ்சுவதாக அவனுக்குப் பிரமை. அந்த இனிய நிலையில் கிறங்கினான்.

''உங்களுக்கு ஒரு பௌடர் டின் தரட்டுமா?'' என்று ஆவலோடு கேட்டான்.

''இருக்கிறதா?''

''இரண்டு வந்தது. உங்களுக்கு ஒன்று.''

ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள், மதுரம். பிறகு, ''உங்களுக்கு நிறைய வேலை போலிருக்கிறது.. கதைப் புத்தகங்களை கொடுத்துவிட்டு உடனேயே போய்விடுகிறீர்களே!'' என்றாள். அவளுடைய கேள்வியில் தொனித்த அன்பும் அக்கறையும் சிங்காரத்தைக் கிறங்கவைத்தன.

''புத்தகங்களை ஸீனியரே வாங்கிக் கொண்டு விடுகிறார்'' என்றான். அவனுடைய குரலில் தெரிந்த ஏமாற்றம் அவளுக்குப் புரிந்தது.

''நீங்கள் முன்பு கொடுத்த இரண்டு சிறு கதைப் புத்தகங்களையும் படித்து முடித்து விட்டேன். அவற்றைத் திரும்பப் பெற நீங்கள் வரவில்லையே?'' என்றாள், மதுரம்.

''அதை ஸீனியர் என்னிடம் கொடுத்து விட்டாரே!''

''எப்போது?''

''இன்று காலையில் கோர்ட்டில் சந்தித்த போது கொடுத்தார். இனி கதைப் புத்தகங்கள் எதுவும் கொண்டு வர வேண்டாம் என்றும் சொன்னார்.''

''ஓ.....!'' மதுரத்தின் மனம் கோபத்தால் சீறியது. அவள், சிங்காரத்தைச் சந்தித்து விடக் கூடாது என்பதற்காகக் கருணாகரனே புத்தகங்களை எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டதும் வெறுப்பினால் முகத்தைச் சுளித்தாள். ஓரக்கண்ணால் கருணாகரனைப் பார்த்தாள். அவர், அவளைத்தான் கண்காணிக்கிறார் என்பது தெரிந்ததும், அவ



ளுடைய மனத்தில் வெறுப்பும் குரோதமும் கொந்தளித்தன.

'என்னைக் கண்காணிக்க இவருக்கு என்ன அருகதை இருக்கிறது?' — அவளுடைய பெண்மை வெகுண்டது. கருணாகரன், பார்த்துப் பொறும வேண்டும் என்ற எண்ணத்தில் இன்னும் சற்றுச் சரிந்து சிங்காரத்தை மிக நெருங்கித் தணிந்த குரலில் தான் படித்த புத்தகங்களைப் பற்றிப் பேசினாள். சிங்காரமும் கள் குடித்த குரங்கு போல் கிறங்கினான். அவனுடைய விகார உள்ளம் அவளுக்குப் புரியவில்லை. கருணாகரனிடம் ஒரு தவிப்பை ஏற்படுத்துவதில் தான் அவள் கருத்தா யிருந்தாள்.

''இந்தப் பயல் இங்கே ஏன் வந்தான்'' என்று முனகியபடியே உள்ளூற மனம் பொறுமிக்கொண்டிருந்தார் கருணாகரன்.

மாலை ஆறு மணிக்கு வெளியீட்டு விழா தொடங்கியது. புத்தகத்தைக் கலெக்டர் வெளியிட்டார். பலர் புத்தகத்தையும், புத்தகத்தின் ஆசிரியையான கோமளத்தையும் புகழ்ந்து பேசினார்கள். சந்தானம் வானளாவப் புகழ்ந்தார். ''தமிழ் இலக்கிய வானத்தில் கோமளம் சுடர் விடும் நட்சத்திரம்'' என்று அவர் கூறியதும் பந்தலே அதிரும்படியாகக் கரகோஷம் எழுந்தது.

சிலர் கோமளத்தின் எழுத்தில் உள்ள துணிச்சலைப் புகழ்ந்தார்கள். யாரோ ஒருவர், ''திருமதி கோமளம் அவர்கள் ஒரு பெண்ணாயிருந்தும் இவ்வளவு துணிவுடன் 'நியூவேவ்' பாணியைக் கையாண்டது மிகவும் வியக்கத் தகுந்தது'' என்று பேசியபோது மதுரம் கோபத்தால் கொதித்தாள். சிங்காரத்திடமிருந்து ஒரு தாளையும் பேனாவையும் வாங்கித் தான் பேச விரும்புவதாக எழுதி, விழாத் தலைவரிடம் கொடுக்கும்படி அவனை ஏவினாள். சிங்காரம் அவள் இட்ட வேலையை உற்சாகமாகச் செய்தான். அதைக் கவனித்த கருணாகரன், ''என்ன இதெல்லாம்?'' என்று தணிந்த குரலில் கடிந்தார்.

''நான் பேசப் போகிறேன். உங்கள் ஜூனியரிடம் தலைவருக்குச் சீட்டுக் கொடுத்து அனுப்பினேன்.''

''நீ ஒன்றும் பேச வேண்டாம்.''

''நீங்கள் சும்மா இருங்கள். நான் பேசத்தான் போகிறேன்'' என்று அவள் சொல்லிக் கொண்டு இருந்தபோது, கலெக்டர் அவளை மேடைக்கு வரும்படி சைகையினால் அழைக்கவே, அவள் உடனே எழுந்து மேடையை நோக்கி விரைந்தாள். கருணாகரன் செய்வதறியாமல் விழித்தார்.

மேடையில் மைக்கின் முன்னால் நின்ற மதுரம், முதலில் கோமளத்தின் கதைகளைப் புகழ்ந்து பேசினாள். பிறகு கோமளத்தைப் புகழ்ந்து பேசியவரின் பேச்சைத் தாக்கத் தொடங்கி விட்டாள். அவளுடைய உள்ளத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்த கோபம், வார்த்தைகளாகக் கொட்டத் தொடங்கி விட்டது. எல்லோரும் வியப்புடனும், பிரமிப்புடனும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆண்களிடம் இருக்கும் ஆணவத்தையும், அந்த ஆணவம், பெண்மையை எவ்வளவு




தூரம் அடிமைப்படுத்தி யிருக்கிறது என்பதையும் சொன்னாள். அவளுடைய பேச்சும் அவள் பேசிய பாணியும், பேசியபோது அவளது முகத்தில் தோன்றி மறைந்து கொண்டிருந்த உணர்ச்சிகளும் கருணாகரனை வதைத்தன.

அவள் பேசினாள்: ''ஆண் என்னும் ஆணவம், இன்று மட்டுமல்ல, புராண காலங்களிலிருந்தே தொடர்ந்து வருகிறது. சீதையைத் தீக்குளிக்க வைத்தானே, ராமன், அது பெண்ணை அடிமைப்படுத்தியிருந்த சமுதாயத்தின் செயலல்லாமல் வேறென்ன? அந்தச் செயலில் என்ன நியாயம் இருக்கிறது? சீதை மீது சந்தேகப்பட்டார்களே, அதே சந்தேகம் ஏன் ராமன் மீது தோன்றவில்லை? ராமனைப் பிரிந்திருந்த காலத்தில் சீதையின் கற்பைச் சந்தேகித்த சமுதாயம், சீதையைப் பிரிந்திருந்த காலத்தில் ராமனின் கற்பை ஏன் சந்தேகிக்கவில்லை? மனுநீதியையோ சமுதாயச் சட்டங்களையோ தள்ளி வைத்துவிட்டுத் தர்ம நியாயப்படி பார்த்தால், ராமன் முதலில் தீக்குளித்துத் தன்னைத் தூய்மையானவன் என்று மற்றவர்களுக்கு நிரூபித்து விட்டுப் பிறகு சீதையைத் தீயில் இறங்கச் சொல்லி யிருக்க வேண்டும். இல்லையென்றால் சீதை இறங்கி வெளியேறிய பிறகாவது அந்தத் தீயில் ராமன் இறங்கியிருக்க வேண்டும். இதுதான் தர்ம நியாயம். இதை ஏன் ராமன் செய்யவில்லை? ஒரு பெண்ணைச் சந்தேகிக்க ஆணுக்கு உரிமை உண்டென்றால், ஓர் ஆணைச் சந்தேகிக்க ஒரு பெண்ணுக்கும் உரிமை உண்டு.''

கூட்டத்தில் கரகோஷம் எழுந்தது. பெண்களிடமிருந்து உற்சாக ஆரவாரம் எழுந்தது. மதுரத்தின் பார்வை கருணாகரனைச் சாடியது. அவரைப் பார்க்கப் பார்க்க மதுரத்தின் கோபம் கிளர்ந்து கொண்டிருந்தது. தொடர்ந்து பேசினாள்: ''இந்த உரிமை ஏன் மறுக்கப்பட்டது? ராம ராஜ்யத்தில் ஓர் ஆண் என்னும் ஆணவம், பெண்மையை அடிமைப் படுத்தியிருந்ததுதான் காரணம். அதற்குப் பிறகும் ராமன் சீதையை ஏற்றானா? ராம ராஜ்யத்திலிருந்த எவனோ ஒருவன் அறியாமையால் ஏதோ சொன்னான் என்பதற்காகப் பூரண கர்ப்பிணியான சீதையைக் காட்டுக்கே துரத்தி விட்டானே, ராமன்? இது எந்த நீதியைச் சேர்ந்தது? உலகம் முழுவதையும் எந்தக் காலத்திலும் 'ஒத்தெல்லோ' மனப்பான்மைதான் ஆட்சி செலுத்தி யிருக்கிறது. அந்த மாதிரிப் பைத்தியக்காரர்கள் எந்தக் காலத்திலும் இருந்து கொண்டுதானிருக்கிறார்கள்'' என்று கூறிவிட்டு மின்னலெனப் பார்வையால் கருணாகரனை வெட்டினாள். அவருடைய முகம் அவமானத்தினால் சுருங்குவதைக் கண்டு உற்சாகம் அடைந்தாள். தொடர்ந்து சொன்னாள்: ''பிரஜையின் எண்ணத்துக்கு மன்னன் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்றிருந்தால், ராமன் என்ன செய்திருக்க வேண்டும்? சீதையின் கௌரவத்தைக் காப்பாற்றத் தான் ராஜயத்தைத் துறந்திருக்க வேண்டும். அரச பீடத்தில் தம்பியை அமர்த்திவிட்டு அவரும் சீதையுடன் கானகத்துக்கு மீண்டும் போயிருக்க வேண்டும். ஆனால் ராஜ்யத்துக்காகச் சீதையை அல்லவா பலி கொடுத்தான், ராமன். ஒரு பெண்ணின் கௌரவத்தைக் காப்பாற்றுவது பெரிய விஷயமல்ல என்னும் எண்ணம்தானே இதற்கெல்லாம் காரணம்? யுகம் யுகமாகப் பெண் இனம் அடிமைப்பட்டேதானிருக்கிறது. இப்போது ஒரு நண்பர் இங்கே பேசினாரே, 'கோமளம் ஒரு பெண்ணாயிருந்தும் 'நியூவேவ்' பாணியைக்கையாண்டது வியக்கத்தக்கது' என்று. அதன் அர்த்தம் என்ன? ஆண் என்னும் ஆணவத்தால் வந்த பேச்சு அது. துணிவு என்பது ஆண்களுக்குத்தான் உண்டு, பெண்களுக்கு இல்லை, இருக்கக்கூடாது. ஆகையால், கோமளம் அவர்கள் அப்படி எழுதியது வியப்புக்கு உரியது என்ற அர்த்தத்தில்தானே அவர் பேசினார். ஒரு பெண்ணாயிருந்தும் என்றாரே, 'இருந்தும்' என்பதற்கு வேறு என்ன அர்த்தம்? ஆண் என்னும் ஆணவம், பெண்ணைப் பற்றி அவ்விதம் வியப்புடன் நோக்கச் செய்திருக்கிறது. 'நியூவேவ்' பாணியைக் கையாளும் திறமையோ, அருகதையோ, துணிவோ ஆணுக்கு மட்டுமே சொந்தமானவையா? அப்படி எண்ணும் மனப்பான்மை இருக்கப் போய்த்தான் 'பெண்ணாக இருந்தும்' என்று அவர் பேசினார். இந்த மனப்பான்மை இந்தச் சமுதாயத்தோடேயே யுகம் யுகமாக ஒட்டிக் கொண்டு வருகிறது. இந்த நூற்றாண்டிலாவது இதற்கு முடிவு காண வேண்டும்....''

மதுரத்தின் ஆவேசமான பேச்சு கூட்டத்தினரை ஆட்கொண்டிருந்தது. அவள் பேசியது அந்தக் கூட்டத்தாருக்காகவோ அல்லது சொற்பொழிவாற்றுவதில் தன் திறமையை வெளிப்படுத்தவோ அல்ல. அவள் பேசியவை அனைத்தும் அவளுக்கு எதிரே இருந்து கேட்டுக்கொண்டிருந்த கருணாகரனுக்காகத்தான். அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவ









1. இந்தியா சிமெண்ட்ஸ் டி. எஸ். நாராண சாமி அவர்களின் இல்லத்தில் மாதாஜி யோக சக்தி சரஸ்வதியால், யோக சக்தி மிஷன் தொடங்கப்பட்டது. உலகம் நமது குடும்பம், ஞானம் நமது உயிர் மூச்சு, சேவை நமது வழி பாடு-என்ற உயர்ந்த லட்சியங்களைக் கொண்டது, இந்த மிஷன்.

2. சென்னை பரங்கிமலையில் செப்டம்பர் 3ந் தேதியிலிருந்து அக்டோபர் 7ந் தேதி வரை போலோ பந்தயங்கள் வெகு சிறப்பாக நடந் தன. ஜாம்பியாவிலிருந்து ஒரு போலோ குழு வும், பாரீஸ், பிரிட்டனிலிருந்து இரு சர்வதேச போலோ ஆட்டக்காரர்களும் கலந்து கொண்ட னர். கடைசி நாளன்று குதிரை 'ஸ்லோ ஜம்ப்' போட்டி மக்களை மிகவும் கவர்ந்தது. படத்தில் மேஜர் கலான், பிரிட்டனின் சர்வதேச ஆட்டக் காரர் ஜூலியன் ஹிப்வுட்டின் குதிரையை முந்த முயலும் காட்சியைக் காணலாம்.

3. மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்பின் இருபத்து மூன்றா வது ஆண்டு விழா தினத்தில், குமாரி பிரேமா சதுர்வேதியின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்ரீமதி கே. ஜே. சரஸா வின் நட்டுவாங்கமும், ஸ்ரீமதி கீதா சுப்பிரமணியத்தின் இனி மையான பதங்களும் எடுப்பாயிருந்தன. ''என்ன தவம் செய் தீனே'' என்ற காப்பி ராகப் பதத்துக்குப் பிரேமாவின் ஊன் அபிநயங்கள் ரசிகர்களின் கைஒலியைப் பெற்றன.

முடைய உச்சந் தலையில் ஓங்கி அடிப்பதுபோல் இருந்தது. பேசியபோது அவளுடைய கண்கள் கருணாகரனையே வட்டமிட்டன. அவளுடைய பேச்சைக் கேட்டுக் கூட்டத்தில் ஆரவாரம் எழுந்தபோதெல்லாம் அந்தக் கூட்டம் தம்மைத்தான் கேலி செய்கிறதோ என்று எண்ணிப் புழுங்கினார் கருணாகரன்.

அவள் பேசி முடித்ததும் கோமளம் எழுந்து அவளை அணைத்துக் கொண்டாள். மேடையிலிருந்து மதுரம் இறங்குவதற்குள் பல பெண்கள் அவளை வழிமறித்துப் புகழ்ந் தார்கள். சில இளைஞர்கள் அவளிடம் உற் சாகமாகப் பேசிப் புகழ்ந்ததைக் கருணாகரன் கண்டு பொறாமையால் வதங்கினார். தன்னைப் புகழ்ந்த இளைஞர்களிடம் முகம் மலரச் சிரித்து அவள் பேசிய காட்சி கருணாகரனின் நெஞ்சில் தீயாகத் தகித்தது. அந்தச் சமயங் களில் மதுரம் ஓரக் கண்ணால் அவரைக் கவ னிக்கத் தவறவில்லை. அவர் கவனிக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு அவள் இன்னும் உற்சாகத்துடன் இளைஞர்களை நெருங்கிப் பேசினாள்.

தன்னுடைய இருப்பிடத்துக்கு அவள் திரும்பியபோது சிங்காரம், ''பிரமாதமாகப் பேசினீர்கள்'' என்றான். கைக்குட்டையால் கழுத்திலும் நெற்றியிலும் வழிந்த வியர்வையைத் துடைத்தவாறே நாற்காலியில் அமர்ந் தாள். நீதிபதி, அவளைப் பார்த்து ''பேச்சு பிரமாதம்'' என்றார். கருணாகரன் புன்னகை புரிந்தார். தம்முடைய மனைவிக்குக் கிடைத் திருக்கும் புகழை எண்ணி மகிழவும் முடியா மல், வெறுக்கவும் முடியாமல் திணறினார். எல்லோருடைய கவனத்துக்கும் அவள் ஆளாகி விட்டாளே என்ற நினைவு மனத்தில் உளைச்சலைக் கொடுத்தது. கூட்டத்தில் சிலர் தம்மைச் சுட்டிக் காட்டிப் பேசுவதைப் பார்த் தார். அந்தச் சூழ்நிலையில் பெருமைப்படு வதற்குப் பதிலாக மனம் வெதும்பிக்கொண் டிருந்தார். அவருடைய உள்ளத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த கொந்தளிப்பை அவருடைய முகத்திலிருந்து தெரிந்து கொண்டாள், மது ரம். ஒரு கணம் அவளுடைய பார்வை கருணா கரனின் பார்வையோடு மோதியது. மனை விக்குக் கிடைத்திருக்கும் பெருமையை எண்ணி ஒரு கணவனின் மனம் இயல்பாகக் கொள்ள வேண்டிய மகிழ்ச்சியும், உற்சாக மும் அவருடைய பார்வையில் இல்லை என் பதைப் புரிந்து கொண்ட மதுரத்தின் உள்ளம் அழுதது. ஊமைத் துக்கத்தை வெளிக்காட் டாமல், சமாளித்தாள். புன்முறுவலை வலிய வரவழைத்துக் கொண்டாள். அவளுடைய இதயத்தில் பயங்கரப் பழி உணர்ச்சி கிளர்ந் தெழத் தொடங்கி விட்டது. (தொடரும்)

17. பழி உணர்வு

''விழா முடிந்ததும் நான் ஸீனியரோடு போக வேண்டும்'' என்றான் சம்பத்.

நளினி, அவன் பக்கம் திரும்பினாள். ''இன்னும் ஆபீஸில் வேலை இருக்கிறதா ?'' என்று கேட்டாள்.

''புதுக் கேஸ் ஒன்று வந்திருக்கிறது. சில தீர்ப்புகளைப் பார்த்துக் குறிப்பு எடுத்து வைக்க வேண்டுமாம். நீயும் வருகிறாயா ?''

''வெகுநேரம் ஆகி விடுமே!''

''ஆனால் என்ன? வாயேன். நீயும் வந்தால் கொஞ்சம் சுறுசுறுப்பாயிருக்கும்.''

''ஊஹூம். நானும் கூட இருந்தால் அரட்டைதான் அடிப்போம். உங்களால் குறிப்பு எடுக்க முடியாது'' என்று கூறி நளினி சிரித்தாள்.

''பிளீஸ்... வாயேன். எட்டு மணிக்கு வீட்டுக்குப் போய்விடலாம்'' என்றான்சம்பத். அவனுடைய வேண்டுகோளை அவளால் மறுக்க முடியவில்லை.

''விழா முடிந்தபிறகு யோசித்துக் கொள்வோமே !'' என்றாள்.

''வேறு வேலை ஏதாவது இருக்கிறதா ?''

''ஊஹூம்.''

''பின்னே என்ன?'' என்று கேட்டவன் அவளுடைய இடது கையில் கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்து வியந்தான்.

''இதென்ன புதிதா ?''

''சிங்கப்பூரிலிருந்து வந்தது'' என்று கூறியபடி, இடது மணிக்கட்டை அவனுடைய நாற்காலியின் கை மீது வைத்தாள். கடிகாரத்தைத் தொடுவதுபோல் பாசாங்கு செய்துகொண்டு மெதுவாக அவளுடைய மணிக்கட்டைத் தீண்டினான். ஒரு மலரைத் தொடுவது போல் மிக ஜாக்கிரதையாகத் தொட்டு மணிக்கட்டைத் திருப்பினான்.

''கடிகாரமும் ஸ்டிராப்பும் பிரமாதமாயிருக்கின்றன'' என்றான்.

அவனுடைய பிடியிலிருந்து கையை விடுவிக்க நளினி முயலவில்லை. அவனுடைய ஸ்பரிசம் இதமாயிருந்தது. வேறு யாரும் கவனித்துவிடக் கூடாதே என்ற பயத்தில் சுற்றுமுற்றும் பார்த்தாள். மேடையில் கலெக்டர் பேசிக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சில் எல்லோரும் லயித்திருந்தார்கள்.

''கடிகாரம் மட்டுமில்லை; உண்மையில் உன்னுடைய கையின் அழகும் பிரமாதம். இவ்வளவு அழகான அமைப்பு எல்லாருக்கும் கிடைத்து விடுவதில்லை. அதோ எதிரேமேடையில் இருக்கிறாளே கோமளம், அவளுக்கு முகம்தான் அழகாக அமைந்து விட்டதே தவிர, அவள் கையைப் பார். பலகை மாதிரி தட்டையாக இருக்கிறது.''



நளினி கோமளத்தைப் பார்த்தாள். கோமளத்தின் அழகை ஒப்பிடும்போது தான் ஓர் அவலட்சணம் என்று நினைத்தாள். கோமளத்தின் கையைப் பார்த்தாள். சம்பத் கூறியது போல் தட்டையாக இருந்தது. ஒவ்வொரு பெண்ணுக்கு ஒவ்வோர் அங்கத்தில் அழகு கொட்டிக் கிடக்கும். கோமளத்தின் முகத்தைப் பார்த்துவிட்டு அவளுடைய கையைப் பார்க்கும் போது எவ்வளவு அருவருப்பாயிருக்கிறது. அவளைவிடத் தன்னுடைய கரம் அழகாயிருப்பதை எண்ணி மனம் பூரித்தாள் நளினி. அந்த அழகைச் சம்பத் வாயாரப் புகழ்ந்தது அவளை இன்னும் உற்சாகப்படுத்தியது. மீண்டும் தன் மணிக்கட்டைப் பற்ற மாட்டானா என்று அவள் மனம் ஏங்கியது. மணிக்கட்டில் குறுகுறுப்புத் தோன்றியது.

''ஸ்டிராப்போடு சேர்த்து இரண்டாயிரம் ரூபாய் ஆகிறது'' என்றாள்.

''அடேயப்பா!''

''சிங்கப்பூரிலேயே இந்த விலை.''

''உனக்கு இரண்டாயிரம் என்பது இருநூறு ரூபாய் மாதிரி.''

''ஏன் அப்படி?''

''மில் முதலாளியின் பெண்ணாயிற்றே! என்னைப் போல் அன்னக்காவடியா?''

''உங்களுக்கு மட்டும் என்ன குறைவாம்?''

''மாதம் நானூறு ரூபாய்கூட வரும்படி இல்லை'' என்று கூறி நீண்ட பெருமூச்சு விட்டான் சம்பத்.

''ஏன் அவசரப்படுகிறீர்கள்? போகப் போக வருமானம் கூடும். வருங்காலத்தில் நீங்கள் பிரபல வக்கீல் ஆகிவிடுவீர்கள்'' என்றாள் நளினி.

''நீ நம்புகிறாயா?''

''ஓ..... நிச்சயமாக.''

''நாம் இருவரும் சேர்ந்து ஓர் ஆபீஸ் ஆரம்பிப்போமா?''

''ஐயோ, நாம் இருவருமா? ஆபீஸில் வக்கீல் வேலை நடைபெறாது. அரட்டைதான் நடக்கும். கட்சிக்காரன் ஓடியே போய்விடுவான்'' என்று கூறிச் சிரித்தாள் நளினி.

'நாம் இருவரும் வக்கீல் ஆபீஸ் ஆரம்பிப்பதைவிட வாழ்க்கை ஆபீஸ் ஆரம்பித்தால், இந்தக் கட்சிக்காரர்களை நம்பி வாழ வேண்டியதில்லை.' — இப்படிச் சம்பத் மனத்துக்குள் முனகிக் கொண்டான்.

வெளியீட்டு விழா முடிந்தபோது இரவு ஏழு மணியாகி விட்டது. ஆவுடையப்ப பிள்ளை, பந்தலின் வாசலுக்கு வந்தபோது அங்கே நளினியும் சம்பத்தும் நிற்பதைக் கண்டார். சற்றுத் தள்ளிக் கருணாகரனும், ராகவனும் பேசிக் கொண்டிருந்தார்கள். மதுரம், கருணாகரனுக்காக வாசலில் காத்துக் கொண்டிருந்தாள்.

''சம்பத்! காரில் ஏறேன். போகலாம்'' என்றார் ஆவுடையப்பபிள்ளை.

''நானும் ஆபீசுக்குத்தான் வருகிறேன். இவரை நான் அழைத்து வந்து விடுகிறேன்'' என்றாள் நளினி.

''உன் அப்பா?''

''அவர் வேறு காரில் வந்திருக்கிறார். அவர் மில்லுக்குப் போகிறார்.''

''சரி, சீக்கிரம் வந்து சேருங்கள். இங்கேயே அரட்டையில் இறங்கிவிடாதீர்கள்'' என்று கூறிவிட்டுத் தம் காரில் ஏறினார் ஆவுடையப்பபிள்ளை.

பந்தலின் வாசலுக்கு வந்த கருணாகரன், ''எனக்குக் கூட்டத்துக்குப் போக நேரமாகி விட்டதே, என்ன செய்யலாம்?'' என்று மதுரத்திடம் கேட்டார்.

''வீட்டுக்குப் போய்விட்டுப் போகலாமே?'' என்றாள் மதுரம்.

''நேரமாகிவிடும். ஏழு மணிக்குக் கட்சிக் கூட்டம். இப்போதே மணி ஏழேகால் ஆகி விட்டது. நீ வீட்டுக்குப் போக ஒரு கார் பார்க்க வேண்டும்'' என்று கூறியபடி சுற்றும் முற்றும் பார்த்தார்.

பத்திரிகை ஆசிரியர் சந்தானம் தம் காரில் ஏறிக் கொண்டிருந்தார். காரின் பின்பக்கத்தில் இரண்டு பெண்கள் அமர்ந்திருந்தார்கள். அதைக் கண்டதும் மதுரம், ''அதோ சந்தானம் புறப்படப் போகிறார். நம் வீட்டு வழியாகத்தானே அவர்போக வேண்டும். அவருடைய காரில் போய்விடுகிறேனே'' என்றாள்.

''சீச்சீ ... அவருடைய காரிலா?'' என்று கேட்டு விட்டு முறைத்தார் கருணாகரன்.

''துணைக்குப் பெண்கள் இருக்கிறார்கள்'' என்றாள் மதுரம்.

''அதெல்லாம் வேண்டாம்'' என்று கண்டிப்பாக மறுத்தார் கருணாகரன். மதுரத்துக்கு உள்ளூறக் கோபம் மூண்டது. தன் மீது அவருக்கு நம்பிக்கை இல்லாததால்தான் அப்படிச் சொல்கிறார் என்பதை உணர்ந்ததும் அவளுடைய மனம் கொந்தளித்தது. வெறுப்பையும் கோபத்தையும் உள்ளூற அடக்கியபடியே நின்றாள்.

''நளினி நம் வீட்டைத் தாண்டித்தான் போக வேண்டும். அவளோடு போய்விட்டா... என்ன?'' — கருணாகரன் சொன்னார். மதுரம் தலையை அசைத்தாள்.



'' நான் வீட்டுக்கு வர நேரமாகும் '' என்ருர்.

'' ஏன்?'' — மதுரம் சிரத்தையின்றிக் கேட்டாள்.

''கட்சிக் கூட்டம் முடியவே மணி பத்தாகும். அதற்குப் பிறகு ராகவனேப் பார்க்கப் போக வேண்டியிருக்கிறது. எப்படியும் பதிேைரு மணியாவது ஆகிவிடும். வீட்டை ஜாக்கிரதையாகப் பூட்டிக் கொள்'' என்ருர் கருணுகரன்.

''பூட்டிக் கொள்ளாமல் திறந்து வைத்துக் கொண்டா து, ங்குவேன் '' என்று மனத்துக்குள்ளே முனகினுள் மதுரம்.

திருப்தியுடன் தம்முடைய காரில் ஏறிச் சென்ருர் கருணுகரன். அவருடைய கார் மறைவதை மிகுந்த வெறுப்புடனும் குரோதத்துடனும் பார்த்துக் கொண்டிருந்தாள் மதுரம். மனத்திலே தகித்துக் கொண்டிருந்த உணர்வுகள் பெருமூச்சாகச் சீற்றத்துடன் வெளியேறின. அவளுடைய பார்வை, சற்றுத் தள்ளி நின்று கொண்டிருந்த சிங்காரத்தின் மீது விழுந்தது. சிறிது நேரம் அவனே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுடைய நெடிய கனத்த உருவம் அவளுடைய கொதித்த உள்ளத்துக்குக் குளிர்ச்சியூட்டுவதாக இருந்தது. அவனுடைய பார்வை தன் பக்கம் திரும்பாதா என்று காத்துக் கொண்டிருந்தாள்.

''கொஞ்சம் பொறுங்கள். நான் அப்பா விடம் சொல்லிவிட்டு வந்து விடுகிறேன் '' என்று கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டு விரைந்து சென்ருள் நளினி. அந்தச் சமயத்



வெளிநாட்டுப் பௌடரின் நெடி, அந்த இடத்திலும் வீசியது. கருணுகரன் சுற்றுமுற்றும் பார்த்தார். சற்றுத் தள்ளிச் சிங்காரம் யாருடனே பேசிக்கொண்டிருந்ததைக் கண்டார்.

''இந்தப் பயல் இன்னும் போகவில்லையா?'' என்று முனகிக் கொண்டார். பிறகு நளினியிடம் சென்று, ''மிஸ் நளினி! ஒரு சிறு உதவி'' என்ருர். நளினி வியப்புடன் அவரைப் பார்த்தாள்.

'' நீங்கள் போகும்போது என் மனேவியையும் அழைத்துச் சென்று எங்கள் வீட்டில் இறக்கிவிட வேண்டும்'' என்ருர்.

''ஓ.... நான் உங்கள் வீட்டைத் தாண்டித் தான் போகப் போகிறேன்'' என்ருள், நளினி, திரும்பி மதுரத்தைப் பார்த்தபடியே.

மதுரத்தை நளினியிடம் ஒப்படைத்து விட்ட

தில் சிங்காரத்தின் பார்வை, மதுரம் இருந்த திசையில் திரும்பியது. அவனைக் கூப்பிடும் பாவனையில் தலையைச் சற்று அசைத்தாள், மதுரம். அதைக் கவனித்த சிங்காரம், தான் பேசிக் கொண்டிருந்த நபரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு மதுரத்தை நெருங்கி வந்தான்.

''உங்கள் புத்தகம் ஒன்று என்னிடம் இருக்கிறதே!'' என்றாள் மதுரம்.

''இருக்கட்டுமே அவசரம் இல்லை. மெதுவாகப் படித்துவிட்டுக் கொடுங்கள்'' என்றான், சிங்காரம் பல்லெல்லாம் தெரியச் சிரித்தபடியே.

''படித்து முடித்துவிட்டேன். இப்போது வீட்டுக்கு வாருங்களேன். தந்து விடுகிறேன்.''

''இப்போது அவசரமில்லை. மெதுவாக வாங்கிக் கொள்கிறேன்'' என்றான் மரியாதை மிகுந்த குரலில்.

''கட்சிக் கூட்டம் என்று அவர் போய்விட்டார். திரும்பி வர வெகுநேரம் ஆகுமாம். நளினியின் காரில்தான் நான் போகப்போகிறேன்'' என்றாள் மதுரம். ''உங்கள் புத்தகத்தை இன்றே வாங்கிக் கொள்ளுங்கள்.''

நளினி அவளை நோக்கி வேகமாக வந்தாள். சம்பத்தும் உடன் வந்தான்.

''நாம் போவோமா ?'' என்று மதுரத்தைப் பார்த்துக் கேட்டாள் நளினி. மதுரம் தலையை அசைத்தாள். ''காரில் நிறையப் பேர் வருகிறார்களா ?'' என்று கேட்டாள்.

''இல்லை. நானும், மிஸ்டர் சம்பத்தும் தாம். வழியில் உங்களை இறக்கிவிடுகிறேன். நாங்கள் ஸீனியர் ஆபீஸுக்குப் போகிறோம். முன் பக்கத்தில் ஏறிக் கொள்ளுங்கள்'' என்றாள் நளினி.

''மிஸ்டர் சிங்காரம்! காரில் இடம் இருக்கிறது. வாருங்களேன். புத்தகத்தைத் தந்து விடுகிறேன்'' என்றாள் மதுரம்.

சிங்காரம் அவனுடைய வழக்கமான அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான். ''ஹி....ஹி... புத்தகத்துக்கு அவசரம் இல்லை'' என்றான், அடக்கமாகவும் மரியாதையாகவும்.

''காரில் இடம் இருக்கிறது. ஏறிக் கொள்ளுங்கள்'' என்றான் சம்பத்.

புத்தகத்தைத் திருப்பிக் கொடுப்பதில் இவளுக்கு இவ்வளவு அவசரம் ஏன் என்பது புரியாமல் குழம்பிய சிங்காரம் அசடு மாதிரி நின்றான். மதுரத்துக்குக் கோபமும் எரிச்சலும் தோன்றின. காரின் முன் பக்கத்தில் தான் ஏறி அமர்ந்து கொண்டதும், அவனைத் திரும்பிப் பார்த்துக் காரில் ஏறுமாறு தலையை அசைத்துச் சைகை செய்தாள். அவளுடைய கண்களில் தெரிந்த கோபத்தைக் கண்ட சிங்காரம் ஒரு கணம் திகைத்தான்.

'' ஏறிக் கொள்ளுங்கள்'' என்று சம்பத் காரின் கதவைத் திறந்தபடி நின்று கொண்டிருந்ததைக் கண்டதும், குழம்பியபடியே காருக்குள் ஏறி அமர்ந்தான். நளினி காரை ஓட்டிக் கொண்டு சென்றாள்.

சிங்காரத்துக்கு அப்போது நல்ல பசி. சாப்பிட வீட்டுக்குப் போக இருந்தவனை, மதுரம் கட்டாயப்படுத்தி அழைத்துச் சென்றது அவனுக்குப் பிடிக்கவில்லை. மதுரத்தின் வீட்டுக்குப் போய்விட்டுப் பிறகு தன்னுடைய வீட்டுக்குத் திரும்புவதற்குள் பசி அதிகமாகி விடுமே என்ற பயத்தினால்தான் மதுரத்தோடு செல்லத் தயங்கினான். அவனுக்குப் பசி வந்துவிட்டால் வேறு எதுவும் புரியாது; தேவையும் இல்லை.

மதுரத்தின் வீட்டின் முன்னால் சிங்காரத்தையும் மதுரத்தையும் இறக்கிவிட்டு நளினியின் கார் சென்றதும், மதுரம் சிங்காரத்தைப் பார்த்து இலேசாக முறுவலித்தாள்.

''இங்கே வருவதில் உங்களுக்கு என்ன சங்கடம்? அவ்வளவு தயங்கினீர்களே !''

''எனக்கு நல்ல பசி. சாப்பிடப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன்.''

''அவ்வளவுதானே ! இன்று என்னோடு சாப்பிடுங்கள்'' என்று கூறியபடி வாசற்படிகளில் ஏறிக் கதவில் தொங்கிக் கொண்டிருந்த பூட்டைத் திறந்தாள் மதுரம். வீட்டுக்குள் வராந்தாவில் படுத்திருந்த அல்சேஷன் நாயும் பொமரெனியன் நாயும் வால்களை ஆட்டியவாறு ஓடி வந்தன. வாஞ்சையுடன் அவள் மீது தொற்றிக் கொண்டன. பிறகு அவளுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த சிங்காரத்தைப் பார்த்து அல்சேஷன் நாய் முறைத்தது. நாயை அடக்கிச் சங்கிலியால் கட்டிப் போட்டு விட்டு, பொமரெனியன் குட்டி நாயைக் கையில் ஏந்தியவாறு வீட்டுக்குள் சென்றாள் மதுரம். அவளைத் தொடர்ந்து சிங்காரமும் சென்றான். முன் அறையின் மின்சார விளக்கை ஏற்றிய மதுரம் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

'' கட்சிக் கூட்டம் முடிந்தபிறகு, கஜேந்திரா மில்ஸ் ராகவனைப் பார்க்கப் போகிறாராம். திரும்பி வரப் பதினொரு மணியாவது ஆகும்'' என்று சொல்லிக் கொண்டே ஒருவித ஏக்கத்தோடு அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வை அவனது மந்த புத்திக்கும் ஏதோ உணர்த்துவதுபோல் இருந்தது. அவனுடைய அறிவில் திடீரென்று சலனம் தோன்றியது. எதையோ புரிந்து கொள்ள முயல்பவனைப் போல் அவளை உற்றுப் பார்த்தான்.

அந்தச் சமயத்தில் மதுரத்தின் மனத்தில் பழி வாங்கும் வெறி, கோரத் தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தது. கருணாகரனைப் பற்றிய எண்ணத்தினால் அவளுடைய மனத்தில் ஏற்பட்டிருந்த கொடிய கசப்பும், தீராத கோபமும் அவளைப் பூரணமாக ஆட்கொண்டிருந்தன. சிங்காரத்திடம், ''என்ன சாப்பிடுகிறீர்கள் ?'' என்று கேட்டவாறே பிரிஜிடைரைத் திறந்தாள்.

சிங்காரத்தின் உடல் வியர்த்துக் கொட்டியது. நெஞ்சு படபடத்தது. விழித்தபடியே நின்றான்.

மதுரம் அவனுக்காகப் பிரிஜிடைரிலிருந்து ரொட்டிகளையும், கேக்குகளையும், சாக்லேட்டுகளையும் எடுத்துக் கொண்டிருந்தாள். ''உங்களிடம் ஒரு விஷயம் பற்றிப் பேசி முடிவு செய்யவேண்டியிருக்கிறது'' என்று கூறி, அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள்.

(தொடரும்)

திருடர்கள்



ர.சு.நல்லபெருமாள்

18. தொழிற்சங்கத் தரகர்கள்

புரட்சிக் கட்சியின் கூட்டம் முடிந்து கருணாகரன் காரில் ஏறியபோது, இரவு மணி ஒன்பது. எதிர்பார்த்ததைவிடக் கூட்டம் சீக்கிரம் முடிந்துவிட்டதால், வீட்டுக்குப் போய் விட்டுப் பிறகு ராகவனைப் பார்க்கச் செல்லலாமா என்று நினைத்தார். ஆனால் ராகவனை விரைவில் காண வேண்டும் என்ற எண்ணம் எழவே, காரை ராகவனின் அலுவலகத்தை நோக்கிச் செலுத்தினார்.

கஜேந்திரா மில்லின் வாயிலை நெருங்கிய போது தொழிலாளர் பலர் கூடியிருந்ததைக் கண்டார். கருணாகரனின் காரைக் கண்டதும் தொழிலாளர்கள் உற்சாகத்துடன் காரைச் சூழ்ந்து கொண்டார்கள். கருணாகரன் புன்னகையுடன் காரிலிருந்து இறங்கினார்.

''எல்லோரும் அமைதியாக இருங்கள். உங்களுடைய பிரச்னையைப் பற்றிப் பேசி முடிவுசெய்துவிட்டு வருகிறேன்'' என்றார்.

கூட்டத்திலிருந்த ஒருவன், ''நம்முடைய கோரிக்கைகளை ஏற்காவிட்டால், வேலைநிறுத்தந்தான்'' என்று கத்தினான்.

''கட்டாயம் வேலைநிறுத்தந்தான். அதில் சந்தேகமேயில்லை. வெற்றி கிட்டும்வரையில் போராட்டம்தான்'' என்றார் கருணாகரன்.

''போனஸ் விஷயம் எப்படியோ? மில் நஷ்டத்தில் ஓடுவதாக முதலாளி சொல்கிறாரே!'' என்றான் மற்றொருவன்.

''நஷ்டமாவது மண்ணாவது. வருமான வரி ஆபீஸுக்குக் கொடுக்கும் கணக்கை நாம் நம்பத் தயாரில்லை. நம்முடைய எல்லாக் கோரிக்கைகளும் ஏற்கப்பட வேண்டும். அது வரை நான் ஓயமாட்டேன். இந்தப் போராட்டத்தில் என் உயிரையே பணயமாக வைக்கவும் தயார்'' என்று கருணாகரன் உணர்ச்சி பொங்கப் பேசியதும், தொழிலாளர்கள் கரகோஷம் செய்தார்கள். சிலர் உற்சாக மிகுதியால் சீட்டியடித்தார்கள்.

''தோழர் கருணாகரன்...''

''வாழ்க!''

''போராட்டம்...''

''நடத்தியே தீருவோம்''

''முதலாளி வர்க்கம்...''

''ஒழிக!''

''பாட்டாளிகளின் இரத்தத்தைச் சுரண்டும் பூர்ஷ்வா வர்க்கம்...''

''ஒழிக!''

''புரட்சிக் கட்சி...''

''ஒழிக!''

''ஏ, மடப் பசங்களா, வாழ்க சொல்லுங்க'' என்று ஒருவன் இரைந்துவிட்டு, ''புரட்சிக் கட்சி...'' என்று கத்தினான்.

''வாழ்க!''

உற்சாகத்துடனும், மிகுந்த நம்பிக்கையுடனும் கருணாகரனைக் கஜேந்திரா மில்லின் அலுவலகத்துக்கு அனுப்பி வைத்தார்கள், தொழிலாளர்கள்.

மில்லின் வாசலில் ஒலித்த கோஷங்கள் அலுவலக அறையில் அமர்ந்திருந்த ராகவனுக்கும் கேட்டன. அவருடைய முகத்தில் கவலையின் சாயல் படர்ந்திருந்தது. ஏற்கெனவே மில் நஷ்டமடைந்து கொண்டிருந்தது. உற்சாகத்தோடும், கட்டுப்பாட்டோடும் ஒழுங்காக வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள், கருணாகரனின் தூண்டுதலினால் மந்தமாக வேலை செய்யத் தொடங்கினர். வேலையில் சுறுசுறுப்பையும் உற்பத்தியில் பெருக்கத்தையும் காட்ட வேண்டுமானால் அவர்களுடைய மூன்று அம்சக் கோரிக்கைகளை ஏற்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பிறகு, அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்காவிடில் வேலைநிறுத்தம் செய்வதாகக் கருணாகரன் அறிக்கை விட்டார். அமைதியாகவும் சுபிட்சமாகவும் நடைபெற்றுக் கொண்டிருந்த கஜேந்திரா மில், புரட்சிக்



கட்சியின் தலையீட்டால் சங்கடத்துக்குள்ளாகியது. அந்தச் சிக்கலிலிருந்து மீள்வது எப்படி என்று தவித்துக் கொண்டிருந்தார், மில்லின் அதிபர் ராகவன்.

கருணாகரனோடு அந்த மில்லின் தொழிலாளியான முத்தையாவும் சென்றார். முத்தையா, கஜேந்திரா மில் தொழிலாளர் நலச் சங்கத்தின் காரியதரிசி. அவர்கள் இருவரும் ராகவனின் அறைக்குள் சென்றபோது ராகவன் முகமலர்ச்சியோடு வரவேற்றார். இருவரும் ராகவனுக்கு எதிரே யிருந்த நாற்காலிகளில் அமர்ந்தனர். இருவருக்கும் குளிர் பானம் வழங்கப்பட்டது. கருணாகரன் பானத்தை உறிஞ்சுவதில் லயித்திருந்தார். ராகவன், பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தார். பானத்தை அருந்தி முடித்ததும் கருணாகரன் கேட்டார்; ''என்ன முடிவு செய்தீர்கள்?''

''கோரிக்கைகளை இப்போதைய நிலையில் ஏற்க முடியாது என்றுதான்'' என்றார் ராகவன்.

''அப்படியானால், வேலைநிறுத்தந்தான்'' என்றார் கருணாகரன், கண்டிப்புடன். பக்கத்திலிருந்த முத்தையாவைப் பார்த்தார். முத்தையா ஆமோதிப்பது போல் தலையை அசைத்தார்.

''சமரசத்துக்கு வழியில்லையா?'' என்று கேட்டார் ராகவன்.

''நீங்கள்தான்இடம் கொடுக்கவில்லையே?'' என்றார் கருணாகரன்.

''மில் தற்போது நஷ்டத்தில் ஓடுகிறது. தொழிலாளர்கள் மந்தமாக வேலை செய்கிறார்கள். ஆறு மாதங்களுக்கு முன் என்ன உற்பத்தியாயிற்றோ, அதில் முக்கால் பங்குதான் இப்போது உற்பத்தியாகிறது. இந்த நிலையில் கோரிக்கையில் என்ன நியாயம் இருக்க முடியும்?''

''அதற்காகத் தொழிலாளர்கள் பட்டினி கிடக்க வேண்டும் என்கிறீர்களா?'' என்று கோபத்தோடு கேட்டார் கருணாகரன்.

''என்னுடைய மில்லில் வேலை செய்யும் யாரும் பட்டினி கிடக்கவில்லை. கிடக்கவும் முடியாது. இங்கு குறைந்த சம்பளம் வாங்குபவரே நூற்றைம்பது ரூபாய் வாங்குகிறார். பட்டினி என்பதற்கே அர்த்தமில்லை!''

''சோறு மட்டும் கிடைத்தால் போதுமா? வேறு வசதி வேண்டாமா? நீங்கள் மட்டும் காரில் சவாரி போக வேண்டும்; பாட்டாளிகளின் கால்கள் ஓடாகத் தேய வேண்டுமா, என்ன?''

இதைக் கேட்டதும் ராகவனுக்குக் கோபம் எழுந்தது. ''நானாவது ஒரு மில்லை ஏற்படுத்தி நூற்றுக் கணக்கான தொழிலாளர்களின் பிழைப்புக்கு வசதி செய்திருக்கிறேன். நீங்கள்எந்தத்தொழிலாளிக்கு வாழ்வளித்தீர்கள்; காரில் செல்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

கருணாகரனின் தன்மானம் கிளர்ந்தெழுந்தது. ''நான் தொழிலாளர்களின் தலைவன். தொழிலாளர்களைச் சுரண்டும் முதலாளிகளின் எதிரி நான்'' என்று இரைந்து கத்தினார்.

''சுரண்டும் முதலாளிகளைப் போய்ப் பாருங்கள். இங்கு நீங்கள் வந்திருக்க வேண்டியதில்லை. இடம் மாறி வந்துவிட்டீர்கள்'' என்றார் ராகவன் சிரித்தபடியே.

''இந்த மில்லின் பாட்டாளிகளின் சார்பில் வந்திருக்கிறேன். செய்கிற வேலைக்குத் தகுந்த ஊதியம் கோரி வந்திருக்கிறேன்.''

''இது உண்மையானால், தற்போது நான் கொடுக்கும் ஊதியத்தைக் குறைத்தாக வேண்டும். ஆறு மாதங்களுக்கு முன் உற்பத்தியான அளவில் முக்கால் பங்கைத்தான் இப்போது உற்பத்தி செய்கிறார்கள். ஆகையால் ஊதியத்தை முக்கால் பங்காகக் குறைக்க வேண்டியதுதான் நியாயம்.''

''நீங்கள் விதண்டாவாதம் பேசுகிறீர்கள். உங்களைப் போன்றவர்கள் ரஷ்யாவில் இப்படிப் பேசியிருந்தால், தண்டனை பெற்றிருப்பார்கள்.''

இதைக் கேட்டு ராகவன் கலகலவென்று சிரித்தார். ''மிஸ்டர் கருணாகரன்! ரஷ்யாவைக் காட்டி அப்பாவித் தொழிலாளர்களை ஏமாற்ற முடியும். ஆனால் என்னை ஏமாற்ற முடியாது. அதே ரஷ்யாவில் ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்களின் அசிரத்தையால் உற்பத்தி குறையுமேயானால், அந்தத் தொழிலாளர்களும் தண்டனைக்குள்ளாவார்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்குமே. ஸ்டாலினுடைய ஆட்சியில் துப்பாக்கி முனையில் அவ்விதம் மடிந்தவர்களுக்கு அளவே இல்லையே?'' என்றார்.

''சரி, இந்தப் பேச்செல்லாம் எதற்கு? எங்கள் மூன்று அம்சக் கோரிக்கைகள் பற்றி உங்கள் முடிவு தெரிய வேண்டும்'' என்றார், கருணாகரன், கோபமாக.

''உங்களுடைய முதல் கோரிக்கை, மூன்று மாத போனஸ். ஏற்கனவே ஒரு மாதம் கொடுத்துக் கொண்டு வருகிறேன். இப்போதைய நிலையில் இதுகூட முடியாது. இரண்டாவது கோரிக்கை, வாரத்தில் ஐந்து நாட்கள் வேலை. இது எப்படிச் சாத்தியமாகும்?'' என்றார் ராகவன்.

''ஏன் சாத்தியமாகாது? மேல் நாடுகளில் ஐந்து நாட்கள் வேலைதான். ஜப்பானிலும் ஐந்து நாட்கள் வேலைதான்.''

ராகவன் சிரித்தார். ''மிஸ்டர் கருணாகரன்! இந்த ஐந்து நாட்கள் வேலைக் கோரிக்கை இந்தியாவில் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளுக்குப் பிறகு கேட்க வேண்டிய ஒன்று. கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக்குப் பின்னடைந்து கிடக்கும் நம் நாட்டில் ஐந்து

நாள் வேலைக் கோரிக்கை இந்நாட்டுக்குத் துரோகம் செய்வதாகும். இன்றைய நிலையில் வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறையே இந் நாட்டைப் பொறுத்தவரை படாடோபமான விஷயம்தான். மேல்நாட்டுத் தொழிலாளர் களைப் போல் நம்மவர்களுக்கும் உழைக்கும் மனப்பான்மை வந்த பிறகல்லவா இதைப் பற்றிப் பேசலாம். நீங்கள் கேட்கும் இந்தக் கோரிக்கை, தொழில் துறையில் மிகுந்த முன்னேற்றம் அடைந்துவிட்ட நாடுகளில் கேட்கப்பட வேண்டிய ஒன்று. இந்தியா வாரத்துக்கு எட்டு நாட்கள் வேலை செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. அரசியல் முதல் சில்லறை வியாபாரம் வரை ஊழல் மிகுந்திருக்கும் இந்தச் சமயத்தில் ஐந்து நாட்கள் வேலை என்பது தற்கொலைக்குச் சமானம்தான்.''

''நீங்கள் மேடையில் பேச வேண்டியதை இங்கு பேசுகிறீர்கள். எந்த நாடாயிருந் தாலும் தொழிலாளர் ஒன்றுதான். ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தாம்'' என்றார் கருணாகரன். குரலில் கோபம் தொனித்தது.

''வர்க்கம் ஒன்றாயிருக்கலாம். ஆனால் தரம்?''

''இந்தியத் தொழி லாளர்களின் தரத் துக்குஎன்னகுறை?'' மேஜையின் மீதுஒரு குத்து விட்டபடி கேட்டார், கருணா கரன்.

''மேலை நாடுகளில் வேலைநிறுத்தம் என் றால், இயந்திரங்களைத் துடைத்து, கிரீஸ் போட்டு இயந்திரங்களைப் பத்திரமாக ஒப் படைத்துவிட்டுச் செல்கிறார்கள். இங்கே, தாங்கள் வேலை பார்க்கும் தொழிற்சாலையின் இயந்திரங்களையே உடைக்கிறார்களே! உற் பத்தியைப் பெருக்கிக் காட்டாமல் ஊதி யத்தை மட்டும் கூட்டிக் கேட்கும் வேடிக்கை இங்கே நடைபெறுகிறது.''

''ஊதியம் கூட்டப்பட்டால் உற்பத்தி தானே பெருகும்'' என்றார் கருணாகரன் அலட்சியமாக.

''அதற்குத் தாங்கள் பொறுப்பு ஏற்க முடியுமா? ஏற்பதா யிருந்தால், நாளையே உங்களுடைய மூன்றாவது கோரிக்கையான ஊதிய உயர்வை ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார், ராகவன்.

கருணாகரன் திகைத்தார். பதில் கூற முடியாமல் திணறினார். ராகவனின் இதழ் களில் அலட்சியப் புன்னகை தோன்றியது. முத்தையா இருவரையும் மாறி மாறிப் பார்த் துக்கொண்டிருந்தார்.

''பொறுப்பேற்கத் தயாரா?'' என்று ராகவன் மீண்டும் கேட்டார்.

''அதெப்படி சார்...'' என்று கருணாகரன் தயங்கினார்.

''நீங்கள் மட்டும் என்ன சார்... நாட்டை ஆளும் தலைவர்கள் கூடப் பொறுப்பேற்கத் தயாரில்லை. இந்த நாட்டின் தலைவிதி இது. யாரும் எந் தப் பொறுப்பையும் ஏற்கத் தயார்



நானும் இறங்க வேண்டும்!



அண்மையில் மதுரையில் டவுன் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன்.

ஒரு பெண் எழுந்து, ''சிந்தாமணி இறங்க வேண்டும்'' என்றாள்.

பஸ் நின்றது. அவள் இறங்கினாள்.

மீண்டும் புறப்பட்டுச் சிறிது தூரம் சென்றது. ஒரு கிராமவாசி எழுந்து, ''ராமசாமி இறங்க வேண்டும்'' என்றார்!

உடனே பஸ்ஸில் இருந்த அத்தனை பேரும் 'கொல்' என்று சிரித்துவிட்டார்கள்!

சிந்தாமணி என்பது அந்தப் பெண்ணின் பெயர் அல்ல; அவள் இறங்கின 'ஸ்டாப்'பின் பெயர் என்பது பாவம், அந்த ராமசாமிக்குத் தெரியாது போயிற்று! - என். எஸ். நாதன்.

இல்லை. ஆனால் லாபமும், பதவியும் மட்டும் அவர்களுக்கு வேண்டும். இது எவ்வளவு கேவலமான நிலை'' என்று கூறினார் ராகவன். அவருடைய குரலில் தொனித்த கசப்பு, கருணாகரனை உலுக்கி விட்டது.

''சார்! நாங்கள் கேட்பது உங்கள் லாபத்தில் ஒரு பகுதியைத்தானே?'' என்றார் கருணாகரன்.

''அப்படியானால், நஷ்டத்துக்கு யார் பொறுப்பு? அதுவும், தொழிலாளர்களின் அசிரத்தையால் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்துக்கு...?''

''நஷ்டமோ லாபமோ... தொழிலாளர்களின் இரத்தத்தை நாங்கள் உறிஞ்சவிட மாட்டோம்'' என்று கர்ஜித்தார் கருணாகரன்.

''இந்த மாதிரி வார்த்தைகளுக்கு உங்கள் கட்சியாரிடமிருந்து நீங்கள் கைதட்டலைப் பெறலாம். ஆனால், உண்மை நிலையை அறிந்த என்னிடம் நீங்கள் பாராட்டுப் பெற முடியாது.''

''உங்களுடைய பாராட்டு எனக்குத் தேவையில்லை, மிஸ்டர் ராகவன். பாட்டாளி தன் கரங்களை நம்பித்தான் இருக்கிறானே தவிர, பூர்ஷ்வாக்களின் புகழ்ச்சியை அல்ல'' என்று படபடத்தார் கருணாகரன்.

சற்று நேரம் அறையில் அமைதி நிலவியது. ராகவன் மீண்டும் பேசினார்: ''மிஸ்டர் கருணாகரன்! இப்படியே பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை. இந்த மில்லின் நிலையை உங்களிடம் சொல்லிவிட்டேன். வேண்டுமானால், மில்லின் கணக்கு வழக்குகளை நாளையே பாருங்கள். மில் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருப்பது தெரியும்.''

''வருமானவரி அலுவலகத்துக்கான கணக்கு எங்களுக்குத் தேவை இல்லை.''

''என்னிடம் ஒரே கணக்குத்தான் உண்டு. உங்களுடைய கோரிக்கையை வாபஸ் செய்து விட்டு, தொழிலாளர்களை வேலை செய்ய விடுங்கள்.''

''நானல்லவா தொழிலாளர்களைத் தடுத்து நிறுத்தியிருப்பது போல் பேசுகிறீர்கள்!''

''என்னுடைய தொழிலாளர்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். பொதுவாக எல்லாத் தொழிலாளர்களுமே நல்லவர்கள்தாம். நன்றி உள்ளவர்கள்தாம். ஆனால், தொழில் துறைக்கே சம்பந்தமில்லாதவர்கள் தலைவர்களாக இருந்து கொண்டு குழப்புகிறார்கள்.''

கருணாகரனின் கண்கள் கோபத்தால் சிவந்தன. ஏற்கெனவே குரூரமாயிருந்த அவருடைய முகம் அப்போது இன்னும் விகாரம் அடைந்தது. ''இது எங்கள் பிரச்னை. இதைப் பற்றி அபிப்பிராயம் சொல்ல உங்களுக்கு உரிமை இல்லை'' என்றார்.

''இது உங்கள் பிரச்னை இல்லை. தொழிலாளர் பிரச்னை. என்னுடைய பிரச்னை. நீங்கள் ஒரு தொழிலாளரும் இல்லை; தொழில் அதிபரும் இல்லை. எனக்கும் என் தொழிலாளர்களுக்கும் இடையே இருக்கும் பந்தமும் உறவும், உங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே இருக்கவே முடியாது. தொழிலாளர்களுடைய பிரச்னைகளை அவர்களே தொழில் அதிபர்களுடன் பேசித் தீர்க்க முனைந்தால் எவ்வளவோ நன்மைகள் விளையும். ஒரு தொழிற்சாலை ஒரு குடும்பத்தைப் போன்றது. குடும்பத்திலுள்ள பிரச்னைகளைக் குடும்பத்தில் உள்ளவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர, வெளிநபரைத் தலையிட அனுமதித்தால், குடும்பமே சிதறிவிடும். ஒரு குடும்பம் சிதறுவதைப் பற்றி அந்த வெளிநபருக்கு அக்கறையும் இருக்காது. தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் இடையே தரகர்கள் நுழையும்போதுதான்....''

''மிஸ்டர் ராகவன்! உங்கள் பேச்சை ஆட்சேபிக்கிறேன். என்னைத் தாக்கிப் பேசுவதை நான் பொறுக்க முடியாது'' என்று இரைந்து கத்திக் கொண்டு கோபத்துடன் எழுந்தார் கருணாகரன்.

''தனிப்பட்ட முறையில் யாரையும் தாக்கவில்லை. பொதுப்படையாகத்தான் பேசுகிறேன். தொழில் துறையில் நிலவும் அமைதியின்மையையும், உற்பத்திக் குறைவையும், அதற்கான காரணங்களையும் கண்டு மனம் வெதும்பிப் பேசுகிறேன். இன்றைய யதார்த்த நிலையைப் பற்றிச் சொல்கிறேன்'' என்றார் ராகவன் அமைதியுடன்.

முத்தையா, பதற்றத்துடன் கருணாகரனின் சட்டையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தார்.

''கடைசியில் தொழிலாளர்களின் கோரிக்கைக்கு உங்களுடைய முடிவான பதில் என்ன?'' என்று கருணாகரன் எரிச்சலோடு கேட்டார்.

''இன்றைய நிலையில் கோரிக்கை எதையும் ஏற்க இயலாது. நிலைமை அபிவிருத்தி அடைந்தால் பிறகு அதுபற்றிக் கவனிக்கிறேன்'' என்றார் ராகவன்.

''அப்படியானால், திட்டப்படி வேலை நிறுத்தம் நடைபெற்றே தீரும்!''

''வேலைநிறுத்தம் செய்ய நீங்கள் தூண்டுவது தொழிலாளர்களுக்கு நன்மை செய்வதாகாது. வேலைநிறுத்தத்தால் இந்த மில் மேலும் நஷ்டமடைந்தாலோ அல்லது மில்லே மூடப்பட்டாலோ அதனால் சங்கடப்படப்

போகிறவர்கள், நானும் என்னுடைய தொழிலாளர்களும்தாமே தவிர, உங்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. இந்தத் தொழிற் சங்கம் இல்லையென்றால், வேறொரு தொழிற் சங்கத்தில் உங்கள் பொழுது கழியும்'' என்று ராகவன் சொன்னதும் கருணாகரன், கோபத்துடன் ''பாட்டாளிகளுக்கு எது நன்மை என்று எனக்குத் தெரியும்'', என்றார்.

''இப்படித்தான் எல்லாத் தலைவர்களும் சொல்லிக் கொள்கிறார்கள். பாவம், தொழிலாளர்கள்!'' என்றார், ராகவன்.

கருணாகரன் கோபத்துடன் அறைக் கதவைத் திறந்து படாரென்று அறைந்து சாத்தி விட்டு வெளியேறினார். வராந்தாவுக்கு வந்த போது முத்தையா சொன்னார்: ''முதலாளி சொன்னதிலும் கொஞ்சம் நியாயம் இருக்கிறதே. கொஞ்சம் விட்டுப் பிடிப்போமே.''

''சீச்சீ, கூடவே கூடாது. இரக்கம் காட்டி விட்டால் நாம் தோல்வி அடைந்துவிடுவோம். முதலாளிகள் விஷப் பாம்புகள் மாதிரி. நாம் அஜாக்கிரதையாக இருந்துவிடக் கூடாது...'' என்று கூறிவிட்டுக் காரில் ஏறினார், கருணாகரன். காரைச் சுற்றி நின்ற தொழிலாளர்களில் ஒருவர், ''வெற்றி கிட்டியதா ?'' என்று கேட்டார்.

''பேச்சுவார்த்தை இன்னும் முடியவில்லை. மீண்டும் ராகவனை விரைவில் சந்திப்பேன்'' என்று சொல்லி விட்டுக் காரை ஓட்டத் தொடங்கினார், கருணாகரன். அவருடைய கார் மறைந்தபிறகுகூட ஒன்றிரண்டு தொழிலாளர்கள் தொண்டை கிழியும்படி அவருக்கு 'ஜே' போட்டுக் கொண்டிருந்தார்கள்.

ராகவனிடம் தமக்கு ஏற்பட்ட தோல்வியை எண்ணிக் குமைந்தபடியே காரைச் செலுத்திக் கொண்டிருந்தார் கருணாகரன். மீண்டும் ஒரு முறை ராகவனைத் தனியே சந்தித்துப் பேச வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார். அவருடைய மனத்தில் ஏதோ ஒரு கணிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது.


ஆவுடையப்பபிள்ளையின் அலுவலகத்தில் ஒன்பது மணிக்குப் பிறகும் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. வழக்குக்கு வேண்டிய சில தீர்ப்புக்களை சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்களிலிருந்து தேடிக் குறிப்பு எழுதிக் கொண்டிருந்தான், சம்பத். அவனுக்கு நளினி உதவியாக இருந்தாள். அவர்களுக்கு எதிரில் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த ஆவுடையப்ப பிள்ளை தம்முடைய கையிலிருந்த சட்டப் புத்தகத்தை மூடிக் கீழே வைத்துவிட்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். எதிரே கவனித்தார். சம்பத் எழுதிக் கொண்டிருந்தான். நளினி ஒரு பெரிய புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

''கருணாகரனின் மனைவிக்கு வந்த கோபத்தைப் பார்த்தாயா ?'' என்று நளினியைப் பார்த்துக் கேட்டார் பிள்ளை.

''ஆண்களையெல்லாம் தாக்கிவிட்டாளே!'' என்றாள் நளினி. கையிலிருந்த புத்தகத்தை மூடினாள்.

''கருணாகரனைத்தான் தாக்கினாள், ராமனைத் தாக்கும் சாக்கில்'' என்றார் பிள்ளை.

''அப்படியா?'' சம்பத் வியப்புடன் கேட்டான்.



விஷமக் கவிதை - 6

ஜனநாயகம் !

வாக்குகள் கேட்டோர்
வாழ்வில் வளர்ந்தார்,
வாக்குகள் போட்டோர்
யாவும் இழந்தார் !

- தமிழழகன்

''பின்னே என்ன, ராமன் மீதா அவளுக்குக் கோபம். கருணாகரன் ஒரு சந்தேகப் பேர்வழி. ஒருத்தியை மணந்து கொள்வானேன்? பிறகு இப்படிச் சந்தேகப்படுவானேன்?'' என்றார் பிள்ளை. ''சுத்தப் பைத்தியக்காரன்.''

''அவளுடைய பேச்சு பிரமாதம். ஒரு வேகத்தோடு உணர்ச்சி பொங்கப் பேசினாள்'' என்றாள் நளினி.

''எல்லோரும் கோமளத்தைப் புகழ்ந்து பேசினார்கள். இவள் மட்டும் பேச்சை வேறு திசையில் மாற்றிவிட்டாள். ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது, கருணாகரனைத் தாக்கிவிட்டாள். கருணாகரன் அவள் பேச்சைப் புரிந்து கொண்டு அசடு வழிய உட்கார்ந்திருந்தானே, நீ கவனிக்கவில்லையா ?'' என்று பிள்ளை கேட்டார்.

''இப்படி ஒரு சந்தேகப் பேர்வழியிடம் எப்படித்தான் காலம் கழிக்கிறாளோ, பாவம் !'' என்று அங்கலாய்த்தாள் நளினி. பிறகு, ''கோமளத்தை எல்லாரும் வானளாவப் புகழ்ந்துவிட்டார்கள்'' என்றாள்.

''பெரிய எழுத்தாளியாகி விட்டாள். புகழ்வதற்குக் கேட்பானேன்?'' என்றான் சம்பத்.

''அப்படி என்ன எழுதிவிட்டாள்?'' என்று அலட்சியமாகக் கேட்டார் ஆவுடையப்ப பிள்ளை. பிறகு சொன்னார்: '' நானும் ஒன்றிரண்டு கதைகளைப் படித்துப் பார்த்தேன். அசிங்கமாயிருக்கிறதே !''

''இது நியூவேவ் பாணி'' என்றான், சம்பத்.

''நியூவேவ் என்றால், எழுத்தில் ஆபாசத்தைப் புகுத்துவது என்று அர்த்தம்? பழைய முறையிலிருந்து விடுபட்டு எழுத்தில் புதுமையைப் புகுத்துவதுதான் நியூவேவ். எழுத்தின் நடையில், பாத்திரப் படைப்பில், கதையின் அமைப்பில், கருத்தில் புதுமை இருக்க வேண்டும். படுக்கை அறை நிகழ்ச்சிகளையும், பெண்ணின் உடல் அமைப்பையும், காம வக்கிரத்தையும் விளக்கமாக எழுதுவதா நியூவேவ் ? அரசியல்வாதிகள், தங்கள் சுயநல ஆசைகளுக்குச் சோஷலிஸம் என்று பெயரிட்டு நாட்டைக் குழப்புவது போல், நியூவேவ் என்ற பெயரில் எழுத்தாளர்கள் எழுத்துலகத்தைக் குழப்புகிறார்கள்.''

''இவைதாம் இன்றைய இலக்கியங்கள்'' என்றான் சம்பத். ஆவுடையப்ப பிள்ளை சோகத்தால் முகத்தைச் சுளித்தார்.

''இவைதாம் இன்றைய எழுத்துக்கள் என்று சொல். இலக்கியம் என்னும் புனிதச் சொல்லை அதோடு சேர்க்காதே'' என்றார்.

''கோமளம் அப்படி எழுதுவதை எப்படித்தான் ஜட்ஜ் அனுமதிக்கிறாரோ?'' என்றாள் நளினி.



மங்கள ஒளி படருக!

எங்கும் தீப ஒளிச் சுடரிலே
மங்களத்தின் ஒளி படருக!
சங்கு சக்கரக் கண்ணனால்
தரணியில் நலம் திண்ணமே!

தூய நல்லுடை வண்ணம்போல்
துலங்குக உயர் எண்ணமும்!
மாயன் கண்ணனின் பார்வையில்
மானிடக் குலம் உய்யவே!

வழங்கும் இன்சுவை அமுதமாய்
புழங்குக சொற்கள் இனிமையாய்!
முழங்கு வெடிகளின் தூசென
மூளும் குறைகளும் தீர்கவே!

நண்பரைக் கூட்டும் இந்தநாள்
நல்லதாய் நீள்க நாளுமே!
மண்ணிலே புது வாழ்வெழ
மாதவன் துணை வேண்டுவோம்!

- தம்பி சீனிவாசன்

மேலட்டை வண்ண ஓவியம்: மணியம் செல்வன்

"பாவம், அவர் என்ன செய்ய முடியும்? கிழடு தட்டிய பிறகு கல்யாணம் செய்து கொண்டால் கண்டிக்க முடியுமா?" என்று கூறிச் சிரித்தார் பிள்ளை.

சுவர்க் கடிகாரத்தில் மணி பத்தடித்த ஒலி கேட்டுத் திடுக்கிட்டாள் நளினி. "பத்தாகி விட்டது" என்று பரபரப்புடன் கூறிக் கொண்டே எழுந்தாள்.

"நேரமாகிவிட்டது. வீட்டுக்குப் போ. சம்பத்! நீயும்கூடச் சென்று அவளை வீட்டில் விட்டு விட்டுப் போயேன்" என்றார் பிள்ளை.

"சரி சார்!" என்று தலையை ஆட்டினான் சம்பத்.

"வேண்டாம் சார்! நான் தனியே காரை ஓட்டிக் கொண்டு போய்விடுவேன்" என்றாள் நளினி.

"நோ நோ.... மணி பத்தாகிவிட்டது. தனியே போகக் கூடாது. உன்னை வீட்டில் விட்டு விட்டு இவன் சிட்டி பஸ்ஸில் போய்க் கொள்வான்" என்றார் பிள்ளை.

சம்பத் காரில் ஏறிக் கொண்டான். நளினி காரைச் செலுத்தினாள். வெளியே நிலவு காய்ந்து கொண்டிருந்தது. ஊர் உறங்கிக் கிடந்தது. அந்தச் சூழ்நிலை அவர்கள் இருவருக்குமே ரம்மியமாக இருந்தது. அடிக்கடி இருவர் கண்களும் சந்தித்துக் கொண்டன. சம்பத்தின் கற்பனை, பலவிதமாகச் சுழன்று கொண்டிருந்தது —

அந்தக் காரும் அவளும் அவனுக்கே சொந்தமாயிருந்தால், எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்......

மனத்தில் கற்பனைக் கோட்டைகள் எழுந்தன. ஆனால் கற்பனைகள் அனைத்தும் நடைமுறையில் நிறைவேறுமா என்ற சந்தேகம் எழுந்ததும் அவனுடைய மனம் தவித்தது. ஒரு நீண்ட பெருமூச்சோடு ஆசை ததும்ப அவளைப் பார்த்தான். அவனுடைய பெருமூச்சின் சீறலைக் கேட்டு அவனைத் திரும்பிப் பார்த்தாள் நளினி.

ஓர் ஆணழகனுடன் ரம்மியமான நிலவொளியில் தனிமையில் பவனி வருவதை எண்ணி உள்ளூற அவள் மகிழ்ச்சி அடைந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அமைதியாகக் காரைச் செலுத்திக் கொண்டிருந்தாள். முனிசிபல் அலுவலகத்தின் திருப்பத்தில் கார் திரும்பியதும் எதிரே கருணாகரனின் கார் வந்ததைக் கண்டு தன்னுடைய காரின் வேகத்தைக் குறைத்தாள். கருணாகரன், தம்முடைய காரை அவளுடைய காருக்குப் பக்கவாட்டில் கொண்டு போய் நிறுத்தினார்.

"என்ன இவ்வளவு நேரம்?" என்று கருணாகரன் கேட்டார்.

"ஸீனியர் ஆபீஸில் வேலை" என்றாள் நளினி. அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த சம்பத்தை உற்றுப் பார்த்தார் கருணாகரன்.

அந்த நேரத்தில் ஓர் ஆணோடு காரில் தனிமையில்....

கருணாகரனின் மனத்தில் பல கற்பனைகள் அசிங்கமாகக் குழம்பின.

"உங்கள் மனைவியை வீட்டில் இறக்கி விட்டேன்" என்றாள் நளினி.

"தேங்க்ஸ்.... உங்களுக்குச் சிரமம்" என்றார் கருணாகரன்.

"இதில் என்ன சிரமம்? தோளிலா சுமக்கிறேன். கார்தானே! மிஸ்டர் சிங்காரமும் வந்தார். அந்த ஆறடி உருவத்தையே என் கார் சுமந்ததே!" என்று கூறி நளினி சிரித்தாள். கருணாகரன் பரபரப்படைந்தார்.

"யார்? சிங்காரமா?" — பரபரப்பை வெளிக் காட்டாமல் கேட்டார்.

"உங்கள் ஜூனியர்தான். ஏதோ புத்தகம் வாங்க வேண்டும் என்று அவரும் உங்கள் வீட்டில் இறங்கிக் கொண்டார்" என்றாள் நளினி.

கருணாகரனுக்கு உடல் முழுவதும் எரிவது போலிருந்தது. அந்த இடத்தைவிட்டு உடனே பாய்ந்து ஓட வேண்டும் என்ற வெறி ஏற்பட்டது.

"உங்கள் மனைவியின் பேச்சுப் பிரமாதம்" என்றாள் நளினி. அவளுடைய பேச்சு எதுவும் அவருடைய செவிகளில் ஏறவில்லை. மனம், அவருடைய படுக்கை அறையில் புகுந்து துளாவிக் கொண்டிருந்தது.

"தேங்க்ஸ்" என்று மட்டும் முனகினார். பிறகு, "சரி நேரமாகிவிட்டது, வரட்டுமா?" என்று விடைபெற்றுக் கொண்டு காரைச் செலுத்தினார்.

"குட்நைட்" என்று நளினியும் சம்பத்தும் சேர்ந்து சொன்னது அவருடைய காதுகளில் விழாதவாறு தடுத்துவிட்டது, அவருடைய காரின் இரைச்சல். அவருடைய மனத்தின் இரைச்சல் அதைவிட அதிகமாயிருந்தது. கார் கடும் வேகத்தில் ஓடியது. அதைவிட வேகமாக அவருடைய எண்ணங்கள் வீட்டை நோக்கிப் பறந்தன.

(தொடரும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



திருடர்கள்

ர. சு. நல்லபெருமாள்

19. சிலந்தி வலே பின்னுகிறது!

அன்று வெளியான 'நவரசம்' பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தார், நீதிபதி நாகசுந்தரம். பக்கத்தில் ஒரு சோபாவில் அமர்ந்திருந்த கோமளம், ஓர் ஆங்கிலப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

நவரசம் பத்திரிகையின் உள்ளே, ஒரு மடத்தின் அதிபரும், பக்தர்களின் மரியாதைக்குப் பாத்திரமானவருமான ஒரு மகானுடைய படம், முழு பக்க அளவில் இருந்ததைக் கண்டு நீதிபதியின் முகம் மலர்ந்தது. மடத்து சுவாமிகளின் முகத்தில் தெரிந்த அருள் தேஜஸும், ஆன்மீக உணர்வும், ஞான ஒளியும் நீதிபதியை மெய்சிலிர்க்க வைத்தன. ஒன்றிரண்டு நிமிடங்கள் படத்தைக் கண்கொட்டாமல் பார்த்தார். பிறகு மறு பக்கத்தைப் புரட்டினுர். தெருவின் ஓரத்தில் நடக்கும்போது திடீரென்று அசிங்கத்தை மிதித்துவிட்டால் ஏற்படுவது போன்ற அருவருப்பு தோன்றியது. முகத்தைச் சுளித்தார். ஒரு திரைப் படத் துணே நடிகையின் முக்கால் நிர்வாணப் படம் அந்தப் பக்கத்தில் இருந்தது.

" பெரிய மகான்களே இப்படி அவமதிக்க வேண்டாம்" என்று முனகினுர். கோமளம் தலே நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்.

"என்ன?"

"ஒரு சமயத் தலேவரை இப்படியா அவமதிப்பது?" என்று கூறிக் கொண்டே பத்திரிகையிலிருந்த மகானின் படத்தையும், மறு பக்கத்திலிருந்த சினிமா நடிகையின் படத்தையும் காட்டினுர், நாகசுந்தரம்.

கோமளம் பத்திரிகையை வாங்கிப் பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்தாள். அவளுடைய முகமும் அருவருப்பினுல் சுருங்கியது.

"ஒரு மகானின் படம் வரும் இதழையாவது கொஞ்சம் புனிதமாக அச்சிட்டிருக்கலாம்" என்ருர் நாகசுந்தரம்.

"பத்திரிகை விற்பனேயாக வேண்டாமா?" என்ருள் கோமளம்.

"அப்படியானுல் இந்த ஞானியின் படத்தைப் போடாமல் இருந்திருக்கலாமே? இந்த மகானின் படத்துக்காகவா பத்திரிகை விற்பனேயாகிறது?" என்று நாகசுந்தரம் கூறிக் கொண்டிருந்தபோது வாசலில் சந்தானத்தின் கார் வந்து நின்றது.

"அதோ எடிட்டரே வந்து விட்டார். நீங்களே அவரிடம் கேளுங்கள்" என்ருள் கோமளம்.

சந்தானம் உற்சாகத்துடன் சிரித்தவாறு காரிலிருந்து இறங்கி வந்தார். "நேற்று விழாவில் எடுத்த படங்கள் பிரமாதம்" என்று கூறியவாறு ஒரு பெரிய உறையை நீதிபதியிடம் கொடுத்தார். கோமளம் பரபரப்புடன் பாய்ந்து சென்று நீதிபதியின் பின்னுல் போய் நின்றுகொண்டு படங்களேப் பார்க்கத் தொடங்கினுள்.

அவளேப் பல கோணங்களில் பல சந்தர்ப்பங்களில் எடுக்கப்பட்ட முப்பது படங்கள் இருந்தன. படங்களேப் பார்த்துப் பூரித்தாள் கோமளம். ஆனந்தத்தால் மனம் துள்ளியது. பக்கத்துச் சோபாவில் அமர்ந்திருந்த சந்தானத்தை மிகுந்த நன்றிப் பெருக்கோடு பார்த்தாள். அவருடைய பார்வையும் அவள் மீதுதான் இருந்தது. அவளுடைய நன்றியை ஏற்றுக் கொள்வதுபோல் அவருடைய இதழ்களில் குறுநகை தோன்றியது. இருவருடைய பார்வையும் சில விநாடிகள் ஒன்றை ஒன்று எதிர்த்தன.

"அடுத்த இதழில் இதிலிருந்து ஐந்து படங்களேப் போடலாம் என்றிருக்கிறேன். ஒரு படத்தை அட்டைப் படமாகப் போடப் போகிறேன்" என்று கூறிவிட்டுச் சந்தானம் பார்வையை இன்னும் தீவிரமாக்கினுர்.

தன்னுடைய படம் அட்டைப்படமாக வரப் போகிறது என்ற நினேவில் ஏற்பட்ட ஆனந்தப் பரவசத்தைத் தாள முடியாமல் கோமளம் திணறினுள். அதை நன்கு புரிந்து கொண்டார் சந்தானம். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, தம் பார்வையை மிக அழுத்தமாக அவளுடைய விழிகளோடு கலந்தார். ஒரு கணம் கோமளம் தடுமாறினுள். பார்வையைத் திசை திருப்பிக் கொண்டாள்.

"படத்தை அட்டையில் போட வேண்டாம்" என்ருர் நாகசுந்தரம்.

''அட்டையில் போடுவதுதான் பெருமை'' என்று கூறிக் கடைக்கண்ணால் கோமளத்தைப் பார்த்தார் சந்தானம்.

''விழா நிகழ்ச்சிப் படங்களை உள் பக்கம் அச்சிடுங்கள். அட்டையில் எதற்கு?'' என்றார் நாகசுந்தரம் மீண்டும்.

''எடிட்டர் இஷ்டப்படி செய்து கொள்ளட்டுமே !'' என்றாள் கோமளம்.

நாகசுந்தரம் சோபாவிலிருந்து நிமிர்ந்து, தமக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த மனைவியைப் பார்த்தார். அவளுடைய பார்வையிலிருந்த கெஞ்சல், அவரை நெகிழ வைத்தது. அவளுடைய விருப்பத்தைத் தடுக்க மனம் இல்லாமல் தவித்தார். பதில் ஏதும் கூறாமல் கையிலிருந்த படங்களைப் பார்ப்பதில் ஈடுபட்டார். பிறகு, படங்களைக் கோமளத்திடம் கொடுத்தார். கோமளம் படங்களை வாங்கிக் கொண்டு சற்றுத் தள்ளியிருந்த சோபாவில் அமர்ந்தவாறு அவைகளைப் பார்த்து ரசிப்பதில் ஈடுபட்டாள்.

''இதென்ன பெரிய மகானின் படத்தைப் பத்திரிகையில் போட்டுக் கேவலப்படுத்தியிருக்கிறீர்கள் ?'' என்று கூறிய நீதிபதி, நவரசம் பத்திரிகையைச் சந்தானத்திடம் கொடுத்தார்.

''ஐயோ, அபசாரம், அபசாரம் ! அப்படிச் சொல்லாதீர்கள். சுவாமிகளுக்கு அவமானம் செய்வதாவது ? பக்திக் காணிக்கையாக அல்லவா சுவாமிகளின் திருஉருவத்தைப் போட்டிருக்கிறேன்! சுவாமிகளின் திருஉருவத்தைத் தாங்கி வர இந்தப் பத்திரிகை என்ன புண்ணியம் பண்ணியதோ?'' என்று சந்தானம், கைகள் இரண்டையும் கூப்பிக் கும்பிட்டவாறு சொன்னார்.

நாகசுந்தரத்துக்கு உள்ளூறக் கோபம் எழுந்தது. சந்தானத்தின் பேச்சும் அபிநயமும் எரிச்சலை ஊட்டின.

''சுவாமிகளின் மீது உண்மையிலேயே உங்களுக்குப் பக்தியும் மரியாதையும் இருக்குமானால், அவருடைய படத்தைப் பூஜை அறையில் வைத்துப் பூஜிக்க வேண்டுமே தவிர இப்படிப் பத்திரிகையில் போடுவது மரியாதை அல்ல'' என்றார்.

''நம்முடைய ஜனங்களுக்குப் பக்தி குறைந்து கொண்டு வருகிறது. இந்துக் கலாசாரத்தின் மீதே நம்பிக்கை இல்லை. ஆன்மீகத் துறையில் யாருக்கும் அக்கறை இல்லை. இந்த மாதிரி பெரிய ஞானிகளின் படங்களை அடிக்கடி பார்த்தாவது இந்த ஜனங்கள் உய்யட்டும் என்பதற்காகத்தான் பத்திரிகையில் போடுகிறோம்'' என்றார் சந்தானம் அடக்கமாக.

''ஓஹோ! பத்திரிகைக்காரர்களுக்கு நம்முடைய கலாசாரத்தின் மீதும், ஆன்மீகத் துறையிலும் அவ்வளவு அக்கறை இருக்கிறதா ? அப்படியானால் இந்தப் படமும் நம்முடைய கலாசாரத்தைக் காப்பாற்றத்தானோ ? இதையும் பார்த்து ஜனங்கள் உய்ய வேண்டுமோ ?'' என்று கேட்டவாறு சந்தானத்தின் கையிலிருந்த பத்திரிகையை வெடுக்கென்று பிடுங்கி, மகானின் படத்துக்கு மறு பக்கத்தில் இருந்த திரைப்பட நடிகையின் முக்கால் நிர்வாணப் படத்தைக் காட்டினார் நீதிபதி.

சந்தானம் அதிர்ந்துவிட்டார். முகத்தில் அசடு வழிந்தது. எல்லாம் ஒரு கணம்தான். மறுகணம் சமாளித்துக் கொண்டார். புன்முறுவல் பூத்தார்.

''நம்முடைய கலாசாரமே ஆன்மீகமும் லௌகீகமும் கலந்த ஒன்றுதானே! அதனால் தானே பெரியவர்கள் நம்முடைய கோயில்களில் தெய்வ உருவங்களோடு சேர்த்து ஆபாசமான சிலைகளையும் அனுமதித்தார்கள். அதே தத்துவத்தில்தான் இன்றைய பத்திரிகைகளும் இயங்குகின்றன. மகானின் திருஉருவத்துக்கு மறு பக்கத்தில் இப்படி ஒரு படம் இருப்பதில் தவறே இல்லை'' என்றார்.

சந்தானத்தின் சாமர்த்தியம் நீதிபதியைத் திகைக்க வைத்தது. சைத்தான் வேதம் ஓதுகிறது என்பார்களே அது போலல்லவா இவன் கோயில்களைப் பற்றிப் பேசுகிறான் ! கலாசாரத்தின் தர்மகர்த்தாவாகத் தன்னைப் பறைசாற்றிக் கொள்ளும் சந்தானத்தின் பாசாங்கையும், திருட்டுத்தனத்தையும் எண்ணி வருந்தினார். அந்த மாதிரிப் பத்திரிகையின் மூலமாகச் சமுதாயம் சீரழியும் போக்கை



எண்ணி மறுகினார். சினிமா போதாதா, கெடுக்க? இந்த மாதிரி பத்திரிகைகளுமா வரிந்து கட்டிக் கொண்டு சமுதாயத்தைப் பழி வாங்க வேண்டும் ?.....

அப்போது நீதிமன்றச் சுருக்கெழுத்தாளர் வரவே நீதிபதி தம்முடைய சோபாவிலிருந்து எழுந்தார். ''இரண்டு தீர்ப்புக்கள் எழுத வேண்டியிருக்கிறது'' என்று கூறியபடி தம் அலுவல் அறையை நோக்கி விரைந்து சென்றார்.

நீதிபதி சென்றதும் சந்தானம் எழுந்து கோமளத்தை அடுத்திருந்த சோபாவில் அமர்ந்தவாறு அவள் பார்த்துக் கொண்டிருந்த படங்களைத் தாமும் பார்த்தார்.

''எல்லாப் படங்களும் பிரமாதமாயிருக்கின்றன'' என்றாள் கோமளம்.

''இதற்கென்று பிரத்தியேகமாக ஒரு போட்டோகிராபரை நியமித்திருந்தேன்'' என்றார் சந்தானம். பிறகு சொன்னார்: ''இதிலிருந்து ஐந்து படங்களைப் பொறுக்கி எடுக்க வேண்டும். அட்டைப்படத்துக்கும் ஒரு படம் தேவை.''

''எந்த ஐந்து படங்களைப் போடப் போகிறீர்கள் ?''

''சாவதானமாகத்தான் பார்த்துப் பொறுக்க வேண்டும். நாம் இருவரும் சேர்ந்து பொறுக்கி எடுக்கலாம்!''

''அட்டைப் படத்துக்கு ஏற்றதாக எதுவும் இல்லையே!'' என்றாள் கோமளம்.



''ஒன்று செய்யலாம். திங்கட்கிழமை மத்தியானம் பத்திரிகை ஆபீஸுக்கு வருகிறீர்களா ? உங்களைத் தனியாக ஒரு போட்டோ எடுத்துவிடலாம்.''

''ஓ! கட்டாயம் வருகிறேன்!'' என்றாள் கோமளம் உற்சாகமாக. பிறகு, ''திங்கட்

வெற்றி இரகசியம் !

பாகிஸ்தான் ஒவ்வொரு சர்வதேச ஹாக்கிப் பந்தயத்துக்கு முன்பும் நாளைக்கு நூறு 'கார்னர் ஷாட்' அடித்துப் பழகிக்கொண்டு மைதானத்துக்குள் இறங்குகிறது. அதன் வெற்றிகளுள் பல இந்த 'கார்னர் ஷாட்'களால் கிடைப்பதன் இரகசியம் இதுதான்!

கிழமை உங்கள் பத்திரிகை ஆபீசுக்கு விடுமுறை ஆயிற்றே!'' என்றுள்.

''அதனால்தான் அன்று வரச் சொன்னேன். யாருடைய தொந்தரவும் இருக்காது. நாம் நிம்மதியாகச் சாவதானமாகப் படங்களைத் தேர்ந்தெடுக்கலாம். உங்களையும் தனியாகப் போட்டோ எடுத்து விடலாம்'' என்றார் சந்தானம்.

கோமளம் சம்மதம் தெரிவித்துத் தலையை ஆட்டினாள். சந்தானத்தின் மனம் உற்சாகத்தில் துள்ளியது. ''ஜட்ஜுக்கு உங்கள் படம் அட்டையில் வருவது பிடித்தமில்லை'' என்றார்.

''நான் சொன்னால் சம்மதித்துவிடுவார்.''

பக்கத்து அறையில் குறுக்கெழுத்தாளரிடம் நீதிபதி தீர்ப்பை 'டிக்டேட்' செய்தது கேட்டுக் கொண்டிருந்தது.

''நேற்று நீங்கள் என்னை வானளாவப் புகழ்ந்து விட்டீர்களே!'' என்றாள் கோமளம்.

''உள்ளதைத்தானே சொன்னேன். புகழ் பெற்ற எழுத்தாளரைப் பாராட்டுவது தவறா?'' என்று கேட்டுவிட்டுக் கனிவோடு அவளைப் பார்த்தார் சந்தானம்.

''இருந்தாலும் நீங்கள் என்னை ரொம்பப் புகழ்ந்து விட்டீர்கள். எனக்கு வெட்கமாகக் கூட இருந்தது'' என்று கூறிப் பற்கள் தெரியச் சிரித்தாள் கோமளம்.

அந்தச் சிரிப்பில் லயித்தார் சந்தானம்.

''உங்களைப் புகழ்வதில் எனக்கு ஓர் உற்சாகம். உண்மையைச் சொல்லட்டுமா? உங்களுடைய பெருமையெல்லாம் ஒரு நீதிபதியின் மனைவி என்பதால் அல்ல. சிறந்த எழுத்தாளர் என்பதால்தான். கோமளத்தின் கணவர் என்பதால் இன்று மிஸ்டர் நாகசுந்தரத்துக்குப் புகழ். அந்த அளவுக்கு உங்கள் புகழ் பரவிவிட்டது. என்னுடைய ஆசை என்ன தெரியுமா? உங்களுடைய புகழ், இந்தியா முழுவதும் பரவ வேண்டும் என்பதுதான்.''

கோமளம் கிறங்கினாள். நன்றிப் பெருக்குடன் அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

''உங்களுடைய கதைகளை ஹிந்தியில் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்யப் போகிறேன். இந்திப் பத்திரிகைகளிலும் உங்களுடைய பெயர் பிரபலம் அடையும்'' என்றார்.

''நேற்று என்னை எழுத்துலகில் ஒரு நட்சத்திரம் என்றே புகழ்ந்து விட்டீர்களே!''

''உண்மையில் அப்படித்தானே? எழுத்துலகில் மட்டுமா நீங்கள் நட்சத்திரம்....? அழகிலும் நீங்கள் ஒரு நட்சத்திரம்தான்!'' என்று சந்தானம் கூறியதும், கோமளத்தின் முகம் நாணத்தால் சிவந்தது. குறுநகை இதழ்களில் மின்ன, ஓரக் கண்களால் அவரைப் பார்த்தாள். அவளிடமிருந்து எதிர்ப்பு எதுவும் இல்லாததால் தைரியம் அடைந்த சந்தானம், ''அன்று வந்த பெண்களில் உங்களைவிட அழகுள்ள பெண் வேறு யார் இருந்தார்கள்? மேடையில் நீங்கள் இருந்தது அந்த விழாவுக்கே அழகைக் கொடுத்தது'' என்றார்.

சந்தானத்தின் சொற்களால் கோமளத்தின் மனம் பொங்கிப் பரவசம் அடைந்தது.

''நாழியாகிவிட்டது. நான் வரட்டுமா? திங்கட்கிழமை மத்தியானம் மூன்று மணிக்கு உங்களுக்காகக் காத்திருப்பேன்......''

''இந்தப் படங்கள்?''

''உங்களுக்காகத்தான் கொண்டு வந்தேன். உங்களிடமே இருக்கட்டும். வரட்டுமா?''

சந்தானம் விடைபெற்றபோது அவளுடைய கண்களை உற்றுப் பார்த்தார். அவளுடைய பார்வையில் தெரிந்த உற்சாகமும், சந்தோஷமும் அவருக்குத் தெம்பை அளித்தன.

காருக்குள் அமர்ந்தபோது கைக்குட்டையால் அழுத்தி முகத்தைத் துடைத்துக் கொண்டார். கைக்குட்டையிலிருந்து வீசிக் கொண்டிருந்த மணம், அவரைப் பரசவசப்படுத்தியது. கலெக்டரின் மனைவி கனகாவின் முகம் நினைவில் படர்ந்தது. அவள் கொடுத்த சிறுகதையொன்று காரின் டாஷ்போர்டில் கிடந்தது.

அன்று காலையில் அவரைத் தேடிக் கனகா வந்ததையும், கதையையும் ஸெண்டையும் கொடுத்ததையும், கதையைப் பிரசுரிப்பதாக அவர் கூறியதையும் அவளுடைய முகத்தில் தோன்றிய மலர்ச்சியையும் எண்ணியபடியே காரைச் செலுத்தினர்.


சந்தானத்தை அனுப்பிவிட்டுச் சோபாவில் சாய்ந்த கோமளம், கண்களை மூடிக் கொண்டாள். ஆனந்தமிகுதியினால் மனம் குறுகுறுத்தது. ஆசிரியரின் புகழ்ச்சி, அவளுடைய காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆரம்ப காலத்தில் அவருடைய புகழ்ச்சி அவளுக்கு விரசமாகத் தோன்றியது. இப்போது அதே வார்த்தைகள் தேனாக இனித்தன. ஒரு பெண்ணின் அழகை அவளிடமே ஓர் அந்நியன் புகழ்வதில் உள்ள விரசத்தைக் கூட உணர முடியாத அளவுக்குப் புகழ்ச்சிப் போதையில் கிறங்கியிருந்தாள். பிராந்தியோ விஸ்கியோ முதலில் பருகும் போது கசக்கும். தொண்டையில் தீயாக எரியும். ஆனால் பருகப் பருகக் கசப்பும் எரிச்சலும் மறைந்துவிடும். போதையில் அந்தக் கசப்பும் எரிச்சலும்கூட இதமாகத் தோன்றும். அதே போன்றுதான் புகழ்ச்சிப் போதையில் ஆழ்ந்து விட்ட கோமளம், சந்தானத்தின் சொற்களிலும், பார்வையிலும் பொதிந்திருந்த விரசத்தையும் திருட்டுத்தன்மையையும் உணரும் சக்தியை இழந்து விட்டாள்.

''கோமளத்தின் கணவர் என்பதால் இன்று மிஸ்டர் நாகசுந்தரத்துக்குப் புகழ்....''

இந்தச் சொற்களின் போதை, அறிவையும் மயக்கிக் கொண்டிருந்தது.

பக்கத்து அறையில் நாகசுந்தரம் தீர்ப்பை 'டிக்டேட்' செய்யும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

'நீதிபதி பதவியில் என்ன உயிர் இருக்கிறது? இன்று தமிழ் நாட்டில் என்னைத் தெரிந்த அளவுக்கு இவரைப் பற்றித் தெரியுமா.....?' கோமளத்தின் மனம் பல எண்ணங்களை அசை போட்டுக் கொண்டிருந்தது. பக்கத்து அறையில் நீதிபதி தம் கடமையில் மூழ்கியிருந்தார். (தொடரும்)



20. சங்கத்தின் தீர்மானம்

அன்றிரவு நளினிக்குத் துணையாகச்சென்ற சம்பத், அவளுடைய வீட்டையும் வீட்டைச் சுற்றியிருந்த தோட்டத்தையும், முன்னால் அமைந்திருந்த வெல்வெட் போன்ற புல் தரையையும் வீட்டின் அமைப்பையும் கண்டு பிரமித்தான். அன்றுதான் முதன் முதலாக அவளுடைய வீட்டுக்குச் சென்றான். அங்கு சென்ற பிறகுதான் பணத்தினால் ஒரு மனிதன் எந்த அளவுக்கு வசதியாகவும், படாடோபமாகவும், ரசனையாகவும் வாழ முடியும் என்பதே அவனுக்குப் புரியலாயிற்று. அவனை வீட்டுக்குள் அழைத்துச் சென்று முன் பக்கத்தில் இருந்த வரவேற்பு அறையில் சோபாவில் அவள் அமரச் செய்தபோது அவனுடைய பரபரப்பு அதிகமாயிற்று. அறையிலிருந்த ஸ்டீரியோகிராமைப் பாட வைத்துவிட்டு நளினி வீட்டுக்குள் சென்றதும் சம்பத் ஆவலோடு எழுந்து அந்த அறையைச் சுற்றிப் பார்த்தான். வாழ்ந்தால், அப்படி ஒரு மாளிகையில் அம்மாதிரி சுகபோகங்களுடன் வாழ வேண்டும். நானூறு ரூபாய் வரும்படியில் வாழ்வதைவிடச் செத்துத் தொலைக்கலாம் என்ற எண்ணம் எழுந்தது.

நளினி ஒரு டிரேயில் இரண்டு கண்ணாடித் தம்ளர்களில் பழரசம் கொண்டு வந்தாள். ஒரு தம்ளரைச் சம்பத்திடம் கொடுத்துவிட்டு மற்றொன்றைத் தான் எடுத்துக்கொண்டாள்.

''நீங்கள் எப்படிப் போவீர்கள்? பத்து மணிக்கு மேல் ஸிட்டி பஸ் இருக்குமா?'' என்று கேட்டாள்.

''ஸிட்டி பஸ் பதினொரு மணி வரை இருக்கும்'' என்று கூறியபடியே பழரசத்தை உறிஞ்சினான், சம்பத். அதன் குளுமையும் ருசியும் அவனைக் கவர்ந்தன. பானத்தின் ருசியிலிருந்து அது என்ன பழத்தின் ரசம் என்று அவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அதைப்பற்றிக் கேட்கவும் வெட்கமாக இருந்தது. முக்கால் அளவு குடித்துவிட்டுத் தம்ளரை டிரேயில் வைத்தான். முழுவதையும் குடிக்க வேண்டும் என்ற ஆசையில் தவித்தாலும், மீதம் வைப்பதுதான் நாகரிகம் என்று நினைத்தான்.

வாசலில் கார் சத்தம் கேட்டது. ''அப்பா வந்து விட்டார். கொஞ்சம் பொறுங்கள். காரிலேயே நீங்கள் போய்விடலாம்'' என்றாள் நளினி.

ராகவன், சோர்வுடன் வீட்டுக்குள் வந்தார். சம்பத்தை அவருக்கு அறிமுகப்படுத்தினாள், நளினி.

''உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன், ஆவுடையப்ப பிள்ளை சொல்லியிருக்கிறார்'' என்றார் ராகவன்.

சம்பத், பெருமையால் பூரித்தான்.

''டிரைவர் இருக்கிறாரா? இவர் போக வேண்டும். எனக்குத் துணையாக வந்தார்'' என்றாள் நளினி.

''ஓ.... இருக்கிறானே, காரில் கொண்டு போய் விட்டு வரச்சொல்'' என்றார் ராகவன்.

அந்த இடத்துச் சூழ்நிலையும், அவனுக்குக் கிடைத்த மரியாதைகளும் அவனைத் திணற அடித்தன. சற்று நேரத்துக்குப் பிறகு படகு போன்ற 'கேடிலக்' காரில் அவன் சென்று கொண்டிருந்தான். அந்த மாதிரியான விலை உயர்ந்த காரில் செல்வோம் என்று அவன் கனவுகூடக் கண்டதில்லை. கார் மெத்தையின் சுகமும், காருக்குள்ளேயே அமைந்திருந்த ஏர்கண்டிஷன் சாதனமும், ஸ்டீரியோ ரேடியோவும் அவனை மயக்கின.

அந்த மாதிரி அனுபவம் அவனுக்குச் சொந்தமாக வேண்டும். அதற்கு ஒரே வழி 'நளினியை மணந்து கொள்வதுதான்.

அவளுடைய கரிய நிறமும், சப்பை மூக்கும் அவனுடைய ஆசைகளுக்கு அணை போட முடியவில்லை. அவளுடைய இளமையும் பணமும் போதும் அவனுக்கு. ஆனால் அவனை

நளினி விரும்ப வேண்டுமே. அதுவரை அவள் வெளிப்படையாக எந்த அறிகுறியையும் காட்டிக்கொள்ளவில்லை. அவள் அவனை விரும்பினாலும் அவளுடைய தந்தை அவனை அவனுக்கு மணம் முடிக்கச் சம்மதிப்பாரா? கஜேந்திரா மில்லின் சொந்தக்காரர், நானூறு ரூபாய் வரும்படிக்கு நாயாக அலையும் சம்பத்தை மருமகனாக ஏற்க முடியுமா? அவர் வீட்டிலிருந்த ஸ்டீரியோகிராமை வாங்கும் அளவுக்குக்கூட அவனுக்குச் சொத்துக் கிடையாதே.

இரவு வெகுநேரம் யோசித்தான். யோசித்து யோசித்து மூளையே அவனுக்குக் கலங்கி விட்டது. கடைசியில், ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

அவனை நளினி ஏற்றுக் கொண்டே தீர வேண்டும். அவனுடைய திட்டத்தை நிறைவேற்ற ஒரு நல்ல சந்தர்ப்பம்தான் தேவை. அது ஆபத்தானது என்பதை அவன் உணர்ந்திருந்தாலும், ஆசை அவனை ஊக்குவித்தது. 'கேடிலக்' காருக்காகவும், அழகிய பங்களாவுக்காகவும், எந்த ஆபத்தையும் எதிர்நோக்கும் துணிவு அவனுள்ளே ஏற்பட்டு விட்டது.

மறுநாள் காலை பத்து மணிக்கு வக்கீல் சங்கத்தில் நளினியைச் சம்பத் சந்தித்தான். அப்போது அவனுடைய கண்களுக்கு அவள் அழகியாகவே தோற்றம் அளித்தாள். அவள் உடுத்தியிருந்த பாணியும், தலையலங்காரமும் அன்று அவனுக்குப் பிரமாதமாகத் தோற்றமளித்தன. இளமை தரும் கவர்ச்சி அவளிடம் இருப்பதை அப்போதுதான் உணரத் தொடங்கினான். அவள் தனக்குக் கிடைத்தே தீர வேண்டும் என்னும் வெறி அவனை ஆட்கொண்டு விட்டது.

வக்கீல் சங்கக் கூட்டம் ஆரம்பமாக இன்னும் சிறிது நேரமாகலாம் என்று தெரிந்ததும் நளினியும் அவனும் கஸ்தூரி ஹோட்டலுக்குச் சென்றார்கள். பில்லுக்கு வழக்கம் போல் நளினியே பணம் கொடுத்தாள். ஹோட்டலை விட்டு வெளியே வந்தபோது, சம்பத் சொன்னான்: ''தினமும் நீதான் உபசரிக்கிறாய். உன்னை உபசரித்து விருந்து நடத்த வேண்டும் என்று ஆசை.''

''ஒரு நாள் அதற்கு ஏற்பாடு செய்து விட்டால் போகிறது'' என்றாள், நளினி.

''அதற்கு இப்போது சந்தர்ப்பம் வந்திருக்கிறது.''



''என்ன?''

''நாளை எனக்குப் பிறந்த நாள்.''

''ஓ... விஷ் யூ ஹாப்பி பெர்த் டே...''

''தேங்க்ஸ்.. நீ கட்டாயம் வரவேண்டும்!'' சம்பத் குழைந்து கெஞ்சினான்.

''எப்போது வரவேண்டும்?''

''உனக்கு எப்போது சௌகரியப்படுமோ அப்போது.''

''என்னால் நாளைக்கு வர முடியாதே.. அப்பாவோடு பக்கத்து ஊருக்கு ஒரு கல்யாணத்துக்குப் போக வேண்டி யிருக்கிறதே'' என்றாள் நளினி.

''நீ இல்லை யென்றால், பிறந்த நாளைக் கொண்டாடவில்லை.''

'' ஐயோ, எனக்காக நிறுத்த வேண்டாம்.''

''நோ நோ... என்னுடைய பிறந்த நாளை எந்த வருடமும் நான் கொண்டாடியதேயில்லை. நீயும் வந்தால் நன்றாக இருக்குமே என்பதால் தான் இந்த வருஷம்...''

''சாயங்காலம் ஆறு மணிக்குத் திரும்பி விடுவேன். அதற்குப் பிறகு வரலாமா?''— நளினி கேட்டாள்.

''ஓ, ஏழு மணிக்குள் வந்தால் போதும்'' என்றான் சம்பத், உற்சாகமாக.

'' சரி '' என்று தலையை அசைத்தாள் நளினி.

''உனக்காகக் காத்திருப்பேன். நான் கொண்டாடுவதே உன்னை உத்தேசித்துத் தான்.''

''கட்டாயம் வந்து விடுவேன். வேறு யாரெல்லாம் வருகிறார்கள்?''

''ஒன்றிரண்டு நண்பர்களை அழைத்திருக்கிறேன்'' என்றுபொய் சொன்னான். ''நீதான் பிரதம விருந்தாளி'' என்றான். நளினி சம்மதத்தோடு தலையை அசைத்தாள். சம்பத் திருப்தியோடு பெருமூச்சு விட்டான். இருவரும் வக்கீல் சங்கக் கட்டடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தனர். ஒரு திருப்பத்தில் திடீரென்று ஒரு கார் உறுமிக் கொண்டு அவர்களைக் கடந்து சென்றபோது, இருவருமே திடுக்கிட்டனர். அது கருணாகரனுடைய கார்.

'' ஆள்மீது மோதுவது மாதிரியல்லவா கார் வந்தது '' என்றாள் நளினி பதற்றத்தோடு.

''புரட்சிக் கட்சித் தலைவர் ஆயிற்றே. கார் ஓட்டுவதிலேயும் புரட்சி செய்கிறார் போலிருக்கிறது'' என்றான் சம்பத்.

''இப்படி அஜாக்கிரதையாக ஓட்டி ஆளைக் கொல்வதா புரட்சி?''

''அவர்களுடைய பிரதான தலைவர் மா சே துங், அதிகாரம் என்பது துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் வெளிப்படும் என்று போதித்திருக்கிறார்.''

''இவரால் அப்பாவுக்குத் தலைவேதனை.''

''என்ன?''



''எங்கள் மில் தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டுகிறார்.''

''இந்தியாவின் அமைதியும் சுபிட்சமும் இந்த மாதிரி ஒருசிலருடைய பிடியில் சிக்கித் தவிக்கின்றன. ஜட்ஜ் மீது கண்டனத் தீர்மானம் போடுவதற்கும், இவர்தான் காரணம்'' என்றான் சம்பத், எரிச்சலுடன்.

''தீர்மானம் கொண்டு வருவதாகக் கொடுக்கப்பட்ட நோட்டீஸில் இவருடைய கையெழுத்து இல்லையே!'' என்று வியப்போடு கேட்டாள், நளினி.

''இவருடைய வேலையே இதுதானே. எதிலும் நேரடியாகத் தலையிட மாட்டார்.

மற்றவர்களைத் தாண்டி விட்டுப் பின்னால் இருந்து கொள்வார்'' என்றான் சம்பத்.

நளினி வெறுப்பினால் முகத்தைச் சுளித்தாள். சற்றுத் தூரத்திலிருந்த வக்கீல் சங்கக் கட்டடத்தின் அருகில் காரை நிறுத்தி விட்டுக் கருணாகரன் கட்டடத்தின் படிகளில் ஏறுவது தெரிந்தது. வழக்கமாக அவரிடம் காணப்படும் மிடுக்கான நடை இல்லை. சோர்வுடன் தளர்ந்து செல்வது போலிருந்தது.

நளினியும் சம்பத்தும் சங்கக் கட்டடத்துக்குச் சென்றபோது, பிரதான அறையில் கூட்டம் நிரம்பி யிருந்தது. சங்கத்தின் தலைவரான ஆவுடையப்ப பிள்ளை இன்னும் வரவில்லை. கூட்டம் ஆரம்பமாக இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருந்தன. அறைக்குள் வக்கீல்களின் இரைச்சல் நிரம்பியிருந்தது. கருணாகரன் ஒரு மூலையில் நாற்காலியில் கண்களை மூடியவாறு அமர்ந்திருந்தார். அவருடைய முகம் களையிழந்திருந்தது. கவலையும் சிந்தனையும் முகத்தில் அப்பியிருந்தன. முந்தின இரவு முழுதும் அவர் தூங்கவே இல்லை. இமைகள் கனத்துக் கிடந்தன. திடீரென்று வெளி நாட்டுப் பௌடரின் வாசனை வீசியது. கண்களைத் திறந்தார். அவருடைய ஜூனியர் சிங்காரம் அவரை நோக்கி வந்ததைப் பார்த்ததும் அவருடைய உள்ளத்தில் தீ மூண்டது.

(தொடரும்)

ருஷ்ய ராமர்

நமது கலாசாரத்தையும் பண்பையும் விளக்கும் ராமாயண காவியத்தை வேற்று நாட்டவரும் விரும்புவதில் வியப்பில்லை.

மாஸ்கோ மத்திய குழந்தைகள் நாடகக் குழுவினர் நம் ராமாயணத்தை மேடை நாடகமாகத் தயாரித்துக் கடந்த பதினான்கு ஆண்டுகளாக ரஷ்யாவில் நடத்தி வருகிறார்கள். இதைத் தயாரித்தவர் நதால்யா குஸேவா என்ற பெண்மணி. இந்தத் தயாரிப்புக்காக இவர் நேரு பரிசைப் பெற்றவர்.

ரஷ்யக் குழுவினர் ராமாயணத்தை மிகவும் பக்தி சிரத்தையுடன் தயாரித்திருக்கிறார்கள். உடைகள், காட்சி அமைப்புக்கள் ஆகியவைகளில் மிக்க கவனமும் ஆராய்ச்சியும் செய்திருக்கிறார்கள். மேடையிலே காட்ட முடியாத காட்சிகளைச் சூத்ரதாரி இடையிடையே விளக்கம் கொடுத்து நாடகத்தைத் தொடருவது கதைத் தொடர்ச்சிக்கு உதவுகிறது.

எளிமையான ஆனால் ஏற்றமிக்க காட்சி அமைப்புகள். மேடையில் விளக்குகளை அணைக்காமலேயே அரங்க நிர்மாணத் திரையை இருவர் திருப்பி வைக்கும்போது வேறு காட்சிக்கு உரிய சூழ்நிலை உருவாகி விடுகிறது. நம் கண்கள் வியப்பாலும் மகிழ்ச்சியாலும் விரிகின்றன.

மாரீசன், ஜடாயு, ஹனுமான், கூனி முதலிய பாத்திரங்களின் அமைப்பும் நடிப்பும் பொதுமக்களின் பலத்த கைதட்டல்களைப் பெறுகின்றன. குரங்குச் சேஷ்டைகளைத் தத்ரூபமாகக் காட்டுகிறார்கள். நாடகத்தின் சிரிப்புப் பகுதி அதுதான்.

எல்லாக் கதாபாத்திரங்களும் ரஷ்ய மொழியே பேசுகிறார்கள். மொழி புரியாது போனால் என்ன? மொழிக்கு அப்பாற்பட்ட நடிப்புத் திறனால் நம்மைக் கவர்கிறார்களே!

—கௌசிகன்





திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்

21. சந்தேக நோய்

முந்தின நாள் இரவு பத்து மணிவாக்கில் கருணாகரன் தமது வீட்டை அடைந்து கதவைத் தட்டியதும் மதுரம் வந்து கதவைத் திறந்தாள்.

உடனே வார்த்தைகள் வெடித்து வெளி வந்துவிட்டன.

''சிங்காரம் வந்தானா?'' என்று கேட்டு விட்டார்.

''வந்தாரே. ஒரு புத்தகம் வாங்க வந்தார்'' என்றாள் மதுரம், அமைதியாக. அவளுடைய பார்வை, வேறு திசையில் திரும்பியிருந்தது. அவரைப் பார்க்கத் தெம்பில்லாதவளைப் போல் தோன்றியது.

''இப்போதுஎன்னஅவசரமோ, புத்தகத்துக்கு?'' என்று முனகினார். ஓரக் கண்ணால் அவளைப் பார்த்தார்.

வெளிநாட்டுப் பௌடரின் நெடி வீசிக் கொண்டிருந்தது. கருணாகரனின் மனம் பற்றி எரிந்தது. ஒன்றும் பேசாமல் கட்டிலில் படுத்துவிட்டார். இரவு முழுதும் தூங்கவே இல்லை. மதுரம் நிம்மதியாகத் தூங்கினாள். நடுஜாமத்தில் கருணாகரன் படுக்கையிலிருந்து எழுந்து அறையை ஆராய்ந்தார். சொந்த வீட்டில் ஒரு திருடனைப் போல் பதுங்கிப் பதுங்கி ஒவ்வோர் இடத்தையும் ஆராய்ந்தார். படுக்கை, கொடியில் கிடந்த சேலை, குளியல் அறை, சோபா எல்லாவற்றையும் நுணுக்கமாக ஆராய்ந்தார். திடீரென்று ஏதோ சந்தேகப்பட்டவராய்க் குனிந்து மிக நெருங்கி அவளுடைய முகத்தை உற்றுப் பார்த்து ஆராய்ந்தார். ஏதோ சாட்சியங்கள் இருப்பது போலவும் தோன்றின, இல்லாதது போலவும் தோன்றின. ஏற்கவும் முடியாமல் தள்ளவும் முடியாமல் தத்தளித்தார். ஆனால் ஒன்றை மட்டும் அவரால் ஒதுக்கித் தள்ள முடியவில்லை.

வெளிநாட்டுப் பௌடரின் நெடி எப்படித் தலையணையில் வந்தது ?

தலையணையை எடுத்துப் பல முறை முகர்ந்து பார்த்தார். அதே நெடி ! மூக்கை அரிக்கும் நெடி !

கருணாகரன் ஒரு முறை தும்மினார். அந்தச் சத்தத்தில்கூட மதுரம் விழித்துக் கொள்ள வில்லை. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

காலையில் அவரையும் மீறிச் சொல்லிவிட்டார்: ''இனி சிங்காரத்திடம் புத்தகம் ஒன்றும் வாங்க வேண்டாம். அவன் இங்கு வரவேண்டியதில்லை.''

இதைக் கேட்டதும் மதுரம் ஒரு கணம் திகைத்தாள். பிறகு அவரை உற்றுப் பார்த்தாள். குளித்துவிட்டு வந்திருந்ததால் தலையை விரித்துப் போட்டிருந்தாள். ஒரு கையினால் முடியைக் கோதியபடி சொன்னாள், ''ஏன் வந்தால் என்னவாம்? புலியா? சிங்கமா ? கடித்தா தின்று விடுவார் ?''

அவளுடைய கேள்வியிலிருந்த அலட்சியமும், அகம்பாவமும் கருணாகரனைத் திகைக்க வைத்தன. கோபம் தலைதூக்கியது.

''படுக்கை அறையில் அவனுக்கு என்ன வேலை?'' என்று பற்களைக் கடித்தார்.

''இந்த அறைக்குள் அவர் வந்ததாக யார் சொன்னார்கள்?'' என்று பதிலுக்குக் கோபத்தில் இரைந்தாள் மதுரம்.

''இந்தத் தலையணையில் அவனுடைய பவுடரின் வாசனை எப்படி வந்தது ?''

''உங்களுக்குப் பைத்தியம்தான் பிடித்திருக்கிறது. இனி இந்தப் படுக்கையில் அவர் படுத்தார் என்றுகூடச் சொல்லிவிடுவீர்கள். இப்படிச் சந்தேகப்படுகிற பேர்வழி, கல்யாணம் செய்து கொள்வானேன் ?'' என்று இரைந்தாள் மதுரம்.

இந்தக் கேள்வி அவரை வதைத்தது.

''பௌடர் மணமாம் மணம். எங்கே வாசனை வீசுகிறது? பிரமைதான். மூளை குழம்பிப் போயிருக்கிறது. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' என்று கூறிக் கொண்டே அவருடைய கையில் இருந்த தலையணையை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டு, ''கமலம்.... ஏ, கமலம்'' என்று இரைந்து கத்தினாள். அடுக்களையில் இருந்த சமையல்காரி ஓடி வந்தாள். அவள் முகத்துக்கு நேராகத் தலையைத் தூக்கிப் பிடித்தபடி ''இதை முகர்ந்து பாருடி, ஏதாவது வீசுகிறதா? இவருக்கு ஏதோ வாசனை அடிக்கிறதாம்...... உனக்கு வீசுகிறதாடி ?'' என்று கத்தினாள்.

கமலம் இரண்டு மூன்று முறை முகர்ந்து பார்த்தாள்.

''சொல்லேண்டி, ஏதாவது வாசனை வீசவா செய்கிறது?'' என்று மதுரம் இரைந்தாள்.

''இல்லீங்க!'' என்றாள் கமலம் பயந்தபடி.

''சரி, போ !''

கமலம் அடுக்களைக்குள் ஓடிவிட்டாள்: மதுரம் கோபத்தோடு திரும்பினாள்.

''வாசனை வீசுகிறதாம். அவ்வளவு அவநம்பிக்கை இருந்தால், வராந்தாவில் கிடக்கும் நாயை விரட்டிவிட்டு வாசலில் உட்கார்ந்து காவல் காப்பதுதானே ?'' என்று கூறியபடி தலையணையைக் கட்டிலில் வீசி எறிந்து விட்டுக்

கோபத்துடன் அடுத்த அறைக்குப் போய் விட்டாள்,

கருணாகரன் திகைத்து வாய் அடைத்துப் போய் அமர்ந்திருந்தார். தம் மீதே அவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

பௌடர் வாசனை வீசுகிறதே! பிரமை தானோ? கமலத்துக்கு வாசனை தெரியவில்லையே......!

ஒன்றும் புரியாமல் தலையைப் பிய்த்துக் கொண்டார்.

தமக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்ற சந்தேகம்கூட எழுந்தது.

கலங்கிய மனத்தோடு குளித்துச் சாப்பிட்டு விட்டு வக்கீல் சங்கத்துக்குப் புறப்பட்டபோது வெளி வராந்தாவில் சோபாவில் சாய்ந்தபடி ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள் மதுரம். அவளுக்குப் பக்கத்தில் பொமேரேனியன் நாய் படுத்துக் கிடந்தது. தம்மை ஒரு நாய்க்கும் கேவலமாகப் பேசி விட்டாள் என்ற நினைவு வந்ததும் கோபம் கிளர்ந்தெழுந்தது. அவளைத் திரும்பிப் பாராமலேயே கோபத்தோடு காரில் ஏறினார்.

மதுரம் சொன்ன வார்த்தைகள் நினைவில் சுழன்று கொண்டிருந்தன.

''இப்படிச் சந்தேகப்படுகிற பேர்வழி கல்யாணம் செய்து கொள்வானேன்?''

இந்தக் கேள்வி அவரை மிகவும் பாதித்து விட்டது. அவள் மீது சந்தேகப்படுவதை அவள் அறியும்படியாக நடந்து கொண்டோமே என்றுதான் வருந்தினாரே தவிர தம்முடைய சந்தேகக் குணத்தை எண்ணி வருந்தவில்லை.

முட்டாள்தனமாகக் கேள்வி கேட்டதன் விளைவாகத்தான் அவள் விழித்துக் கொண்டாள். எடுத்த எடுப்பிலேயே சிங்காரம் வந்தானா என்று கேட்டிருந்திருக்கக் கூடாது.

'நளினியின் கார் வசதியாக இருந்ததா?' என்று கேட்டிருக்க வேண்டும்.

'காரில் கூட்டம் அதிகம் இல்லையே?' என்று இரண்டாவது கேள்வியைப் போட்டிருக்க வேண்டும்.

'நாலைந்து பேர் காரில் இருந்த மாதிரி தெரிந்ததே' என்று மூன்றாவது கேள்வியைக் கேட்டிருந்தால், அவள், காரில் யார் யார் வந்தார்கள் என்பதைச் சொல்லியிருப்பாள். சிங்காரம் வந்ததை மறைத்திருப்பாள்.

'சிங்காரம் காரில் வந்ததாகத் தெரிந்ததே' என்று நான்காவது கேள்வியைப் போடும் போது



அவள் திகைத்திருப்பாள். வழியில் எங்கே யாவது இறங்கி விட்டதாகக் கூறியிருப் பாள். அப்போது நளினி கூறியதை நான் சொல்லியிருந்தால் பதில் கூற முடியாமல் விழித்திருப்பாள்.

ஒரு வேளை, எனது சந்தேகம் அனைத்துமே ஆதாரமற்றவையா? என்னுடைய பலவீனம் தான் இதற்கெல்லாம் காரணமோ ? என்ன கேள்வி கேட்டு விட்டாள் ! நாயை விரட்டி விட்டு வாசலில் காவல் காக்கச் சொன்னாளே! என்ன திமிர்! எந்தத் தைரியத்தில் அப்படிப் பேசினாள்? ஒருவேளை எதற்கும் துணிந்து விட்டாளா ? நாய்க்கும் கேவலமாக வறுமை யில் பட்டினி கிடந்தவளுக்குப் பங்களா வாழ்க்கை கொடுத்திருக்கிறேன். இந்தக் கழுதை, என்னைப் பார்த்துக் காவல் காக்கச் சொல்கிறது.......

கோபமும் அவமானமும் நெஞ்சை அழுத்தக் கருணாகரன் தம்முடைய காரியாலயத்தை அடைந்தார். அங்கு ஏற்கனவே சிங்காரம் அமர்ந்திருந்தான். அவனைக் கண்டதும் பொறுமையால் பொசுங்கினார், கருணாகரன். அவனுடைய வாட்டசாட்டமான உருவத்தை யும், முறுக்கேறியிருந்த இளமையையும் பார்த்து உள்ளூறச் சங்கடப்பட்டார். அவ னுடைய முகத்தை உற்று நோக்கினார். அவன் உற்சாகமாக இருந்தான். அவனுடைய முகத் தில் வழக்கத்துக்கு மாறாக அப்போது இருந்த மலர்ச்சிக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்ற ஆராய்ச்சியில் அவர் மனம் இறங்கியது. எப்போதும் ஒருவித அசட்டுப் பார்வையும், அழுமூஞ்சியுமாகக் காட்சி அளிக்கும் சிங்காரத் தின் முகத்தில் அன்று தெரிந்த மலர்ச்சியும், பூரிப்பும் கருணாகரனை வாட்டின.



விஷமக் கவிதை-7

வாழத் தெரிந்தவர் !

உழைக்கத் தெரிந்தோர்
உரிமையை விட்டார்;
பிழைக்கத் தெரிந்தோர்
பெருமையே நட்டார்!

• தமிழழகன்

''நேற்று வீட்டுக்கு வந்தாயா?'' — கருணா கரன் கேட்டார். பிறகு நாக்கைக் கடித்துக் கொண்டார். ஐயோ, இரண்டாவது முறை யும் தவறு செய்துவிட்டோமே என்று வருந்தி னார். நாக்கு, அவரையும் மீறி முந்திக் கொண்டு அந்தக் கேள்வியைக் கக்கிவிட்டது.

''எப்போது.....? விழாவுக்குப் பிறகா?''

''ஆமாம், போகிற வழியில் புத்தகத்தை வாங்கிக் கொண்டு போவோமே என்று வந் தேன்... புத்தகத்தை வாங்கிக் கொண் டேன்....'' என்றான் சிங்காரம்.

கருணாகரனை நேருக்கு நேர் பார்க்காமல் பார்வையை அங்கும் இங்குமாக அலையவிட்டுக் கொண்டு பேசினான்.

இனி அவனைத் தம்முடைய ஜூனியராக வைத்துக் கொள்ளக் கூடாது என்று முடிவு செய்தார் கருணாகரன். என்ன காரணம் கூறி அவனை விரட்டலாம் என்று யோசிக்கத் தொடங்கினார்.

அங்கிருந்து வக்கீல் சங்கத்துக்கு அவர் புறப்பட்டதும் சிங்காரம் அவருடைய காரில் ஏறிக் கொண்டான். அவன் பூசியிருந்த பௌடரின் நெடி காருக்குள் வீசியது.

''இதென்ன, சனியன் பிடித்த பௌட ரைத் தினமும் பூசிக் கொண்டு வருகிறாய் ? சேச்சே, ஒரே நெடி. என் ஆபீசுக்கு வரும் போது இதைப் பூசித் தொலைக்காதே !'' என்றார் மிகுந்த எரிச்சலுடன். அவருடைய குரலில் தொனித்த வெறுப்பையும் கோபத் தையும் உணர்ந்த சிங்காரம் பயத்துடன் அவ ரைப் பார்த்தான். ஓர் அசட்டுச் சிரிப்பு அவ னுடைய இதழ்களில் நெளிந்தது.

''இது வெளிநாட்டுச் சரக்கு சார்!'' என்றான். அவனுடைய பேச்சை அவனோடு சேர்த்து அசட்டை செய்வது போல் பதில் பேசாமல் காரைச் செலுத்தினார் கருணாகரன். அப்போது அவருடைய மனத்தில் பயங்கரப் பழி உணர்ச்சி எழுந்தது. அந்தக் காரை எங்காவது கொண்டுபோய் மோதி நொறுக்கி, அவனைக் கொன்று விட்டால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. அதே சமயம், கார் மோதினால் காரைச் செலுத்தும் தமக்கும்ஆபத்து நேரிடும் என்பதை நல்ல வேளையாக அவருடைய அறிவு உணர்ந்தது.

(தொடரும்)



22. பொது உடைமைப் போலிகள்

வக்கீல் சங்கக் கட்டடத்தின் அறைக்குள் நாற்காலியில் சாய்ந்தவாறு கண்களை மூடிக் கிடந்த கருணாகரன், அறைக்குள் சலசலப்புத் தோன்றவே சுய நினைவடைந்தார். ஆவுடையப்ப பிள்ளை கூட்டத்துக்குத் தலைமை வகிப்பதற்காக நாற்காலியில் அமர்ந்தார். அறைக்குள் மௌனம் நிலவியது. ஆவுடையப்ப பிள்ளை பேசத் தொடங்கினார்.

''இந்த விசேஷக் கூட்டம் சிலருடைய வேண்டுகோளின்படி கூட்டப்பட்டிருக்கிறது. ஜட்ஜ் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்பது சிலருடைய விருப்பம்'' என்றார் பிள்ளை.

''அப்படியானால், உங்களுக்கு இதில் விருப்பம் இல்லையா?'' என்று குறுக்கிட்டுக் கேட்டான் சிங்காரம்.

''இந்தமாதிரி பைத்தியக்காரத்தனமான காரியங்களில் எனக்கு எப்போதுமே விருப்பம் ஏற்பட்டதில்லை'' என்று பிள்ளை கூறியதும் அறைக்குள் சிரிப்பொலி எழுந்தது.

''மற்ற வக்கீல்களைப் பைத்தியக்காரர்கள் என்று குறிப்பிட்டதை நான் ஆட்சேபிக்கிறேன்'' என்றார் கருணாகரன்.

''வக்கீல்களைப் பைத்தியக்காரர்கள் என்று கூறவில்லை. ஜட்ஜ்மீது கண்டனத் தீர்மானம் போடுவது போன்ற காரியத்தைத்தான் நான் பைத்தியக்காரத்தனம் என்றேன்.''

''தவறு செய்பவர்களைக் கண்டிப்பது பைத்தியக்காரத்தனமா?'' என்று கேட்டார் கருணாகரன்.

''செய்த தவறு என்ன என்பதைத் தவறு செய்தவரிடமே எடுத்துச் சொல்வதுதான் விவேகம்'' என்றார் பிள்ளை.

''இது பயங்கொள்ளித்தனம். ஜட்ஜுக்கு வால் பிடிப்பவர்களின் சிந்தனையில்தான் இந்த மாதிரி யோசனை தோன்றும்'' என்று கருணாகரன் கூறியதும் ஆவுடையப்பபிள்ளை கோபம் கொண்டார்.

''மிஸ்டர் கருணாகரன்! வார்த்தையை அளந்து பேசுங்கள். இங்கு யாரும் யாருக்கும் வால் பிடிக்க வேண்டிய அவசியமே இல்லை'' என்றார்.

''வீண் சண்டை எதற்கு? மேற்கொண்டு நடக்க வேண்டியதைக் கவனிப்போமே?'' என்றார் ஒரு வயோதிக வக்கீல்.

''ஜட்ஜ்மீது நிறைவேற்ற விரும்பும் கண்டனத் தீர்மானங்கள் என்ன; அதற்கான காரணங்கள் எவை என்பதை அங்கத்தினர்கள் விளக்கலாம்'' என்று பிள்ளை கூறியதும், அறையில் சற்று நேரம் மௌனம் நிலவியது. ஒருவரும் பேச எழவில்லை.

''தீர்மானத்தைக் கொண்டு வருபவர்கள் எழுந்து பேசலாமே?'' என்று பிள்ளை கூறினார்.

கருணாகரன் தமக்குப் பக்கத்தில் இருந்த சிங்காரத்தின் முழங்கையில் இடித்தார்.

அவன் எழுந்து நின்றான். தலைவரைப் பார்த்து, ''ஜட்ஜ் வக்கீல்களை மதிப்பதில்லை. நீதிமன்றத்திலேயே பலர் முன்னிலையில் வக்கீலை இழிவாகப் பேசுகிறார்'' என்றான்.

''எப்போது பேசினார், என்ன பேசினார்?'' என்று கேட்டார் தலைவர் ஆவுடையப்ப பிள்ளை.

''இரண்டு மாதங்களுக்குமுன் ஒரு கொலைக் கேசில் கைதிக்காகக் கோர்ட்டிலிருந்து நான் நியமிக்கப்பட்டிருந்தேன். அந்த வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த போது என்னை இழிவாகப் பேசிவிட்டார்.''

''என்ன பேசினார்?'' என்று வக்கீல் சர்மா கேட்டார்.

''கைதியைப் பார்த்து, 'இந்தாப்பா, உன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று எனக்கு விருப்பம்தான். பிராஸிக்யூடர்கூட உன்னை விடுதலை செய்துவிடலாம் என்றுதான் நினைக்கிறார். ஆனால் உனக்காக வாதாடும்



ர.சு.நல்லபெருமாள்

இவர், உன்னைத் தூக்கில் போட வேண்டும் என்றல்லவா முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது! இவருடைய குறுக்கு விசாரணையும் வாதமும் அப்படி அல்லவா இருக்கின்றன?' என்றார்.'' சிங்காரம் இவ்வாறு கூறியதும், அறைக்குள் பலத்த சிரிப்பொலி எழுந்தது. சிலர் வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தார்கள். சிங்காரத்துக்கு அவமானத்தால் அழுகை வந்துவிடும் போல் இருந்தது.

''என்ன சிரிப்பு வேண்டி யிருக்கிறது? ஒரு வக்கீலை நீதிமன்றத்தில் இப்படி ஒரு ஜட்ஜ் அவமானமாகப் பேசியிருக்கிறார். நீங்கள் சிரிக்கிறீர்கள்!'' என்று சிங்காரம் கத்தினன்.

''இது எப்படி அவமானமாகும்? உண்மையை ஒருவர் கூறியதை எப்படிக் குற்றமாகக் கொள்ள முடியும்?'' என்றான் சம்பத். மீண்டும் சிரிப்பொலி எழுந்தது. சிங்காரம் கோபத்துடன் சம்பத் இருந்த திசையை நோக்கினன்.

''இதில் என்ன சார் கேலி? எல்லா வக்கீல்களும் திறமைசாலிகளா ? சிங்காரம் தொழிலுக்கு வந்து இரண்டு வருடங்கள்தாம் ஆகின்றன. போகப் போகத்தானே அனுபவம் கிடைக்கும். ஆரம்பத்திலேயே திறமை வந்து விடுமா? ஜட்ஜ் அப்படிக் கூறியது அகம்பாவமான பேச்சுத்தான். ஏன், இங்கே சீனியர்களாக உள்ளவர்களுடைய கேஸெல்லாம் வெற்றிபெற்றுக் கொண்டா இருக்கு?'' என்று படபடப்புடன் பேசினர் கருணாகரன்.

ஓர் இளம் வக்கீல் எழுந்திருந்தார். ''வக்கீல்களை அவர்களுடைய போக்கில் வழக்கை நடத்த ஜட்ஜ் அனுமதிப்பதே யில்லை'' என்றார்.

''விவரமாகச் சொல்லுங்கள்'' என்றார் பிள்ளை.

''குறுக்கு விசாரணை செய்யும்போதெல்லாம் குறுக்கிடுகிறார்.''

'' எப்படி ?''

''சம்பந்தமில்லாத கேள்விகள் என்று தள்ளிவிடுகிறார்.''

''சம்பந்தமில்லாத கேள்விகளை ஏன் கேட்க வேண்டும்?'' என்றான் சம்பத்.

''ஜட்ஜினுடைய நினைப்பில் சம்பந்தமில்லாத கேள்வியாக இருக்கலாம். ஆனால் வழக்குக்கு மிகவும் அவசியமான கேள்வி என்று எனக்குத் தோன்றும் போது.....?''

''அப்படியானல் கேள்வியையும் மறுப்பையும் குறித்துக் கொள்ளும்படி ஜட்ஜிடம் சொல்லலாமே!'' என்றார் சர்மா.


''அதில் என்ன சார், பிரயோசனம்? அது அப்பீலுக்குத்தானே பயன்படும்? இப்படி ஒவ்வொரு வழக்கிலும் ஜட்ஜ் குறுக்கிட்டுக் கொண்டே இருந்தால், வழக்கை எப்படி நடத்த முடியும் ?''

இந்தச் சமயத்தில் கருணாகரன் குறுக்கிட்டார். ''குறுக்கு விசாரணை என்பதே ஒரு கலை. ஒவ்வொருவரும் அதை ஒவ்வொருவிதமாகக் கையாளுவார்கள். அவரவர்களுடைய போக்கில் போக அனுமதிப்பதுதான் ஜட்ஜின் கடமை. அதைவிட்டு விட்டுச் சதா குறுக்கிட்டுக் கொண்டே இருந்தால், வக்கீல்களுக்கு எரிச்சல்தான் வரும். கேஸ் நடத்துவதிலுள்ள ஆர்வமே குன்றிவிடும்'' என்றார்.

இதை எல்லாரும் ஆமோதிப்பது போல் மௌனமாயிருந்தனர்.

ஒரு வக்கீல் எழுந்து, ''ஜட்ஜ் சரியான நேரத்துக்கு நீதிமன்றத்துக்கு வருவதில்லை.... அவர் ஒழுங்காக வராதது மட்டுமின்றி வக்கீல்களைச் சரியான நேரத்துக்கு வரவில்லை என்று மிரட்டுகிறார்'' என்றார்.

''நேற்று மத்தியானம் வழக்கைப் பாதியில் நிறுத்திவிட்டு வீட்டுக்குப் போய்விட்டார் '' என்றார் கருணாகரன்.



''மிஸ்டர் கருணாகரன்! நேற்றைய வழக்கில் நீங்கள் வக்காலத்துப் போடவில்லை. அது என்னுடைய வழக்கு. ஜட்ஜ் வீட்டுக்குப் போனது பற்றி நானே பிராஸிக்யூடரோ குறைகூறவில்லை'' என்றார் பிள்ளை.

''பயங்கொள்ளிகள்'' என்றார் கருணாகரன்.

''டோன்ட் டாக், நான்சென்ஸ்'' என்றார் ஆவுடையப்பபிள்ளை.

''ஹியர், ஹியர்'' என்று கைதட்டினன் சம்பத்.

''ஜட்ஜ் நீதிமன்றத்திலேயே தூங்குகிறார்'' என்றான் சிங்காரம்.

''அவர் தூங்கும்படி வக்கீல்களின் வாதம் இருந்தால், தூங்காமல் என்ன செய்வார் ?'' என்றான் சம்பத். மீண்டும் சிரிப்பொலி அறைக்குள் அதிர்ந்தது.

''ஒரு ஜட்ஜ் நீதி மன்றத்திலேயே தூங்குவது கேவலமானது'' என்று இரைந்து கத்தினார் கருணாகரன்.

அறைக்குள் சலசலப்பு அதிகமாகியது. கருணாகரனால் தூண்டிவிடப்பட்டிருந்த இளம் வக்கீல்கள் எழுந்து நின்று ஒரே சமயத்தில் பேசத் தொடங்கினர். சிலர் மறுத்துப் பேசினார்கள். எவருடைய பேச்சும் தெளிவாகக் கேட்கவில்லை. ஆவுடையப்ப பிள்ளை மேஜையின் மீது பலமாகத் தட்டி அமைதியாக இருக்கும்படி வேண்டினார். சற்று நேரத்தில் அமைதி நிலவியது.

''இதுவரை இங்கு கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எதுவுமே கண்டனத் தீர்மானம் போடும் அளவு இல்லையே!'' என்றார் ஆவுடையப்பபிள்ளை.

''தீர்மானத்தை வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றலாம்'' என்றார் கருணாகரன்.

''தீர்மானம் என்னவென்பதே முடிவாகவில்லையே !''

இந்தச் சமயத்தில் கருணாகரன் எதிரே இருந்த ஓர் இளம் வக்கீலைச் சைகை காட்டவும், அவர் எழுந்தார்.

''மூன்று தீர்மானங்கள்'' என்றார்.

எல்லோரும் அவரைக் கவனித்தார்கள். அவர் தொடர்ந்து சொன்னார்:

''முதல் தீர்மானம், ஜட்ஜ் நீதிமன்றத்தில் வக்கீல்களைக் கேவலமாகப் பேசுவதைக் கண்டித்து. இரண்டாவது தீர்மானம், ஜட்ஜ், சரியான நேரத்தில் கோர்ட்டுக்கு வராமல் இருப்பதைப் பற்றியது. மூன்றாவது, ஜட்ஜ், கோர்ட்டில் தூங்குவது பற்றியது.''

''இவை உண்மையிலேயே நல்ல எண்ணத்தோடு வக்கீல்களின் நன்மைக்கெனக் கொண்டு வரப்படும் தீர்மானங்களா? அல்லது ஒரு நீதிபதியை வேண்டுமென்றே கேவலப்படுத்துவதற்காகப் போடப்படும் தீர்மானங்களா?'' என்று குறுக்கிட்டார் ஆவுடையப்பபிள்ளை.

''ஒரு ஜட்ஜைக் கண்டு நடுங்கிச் சாகிறீர்கள். உங்கள் வழக்குகளுக்கெல்லாம் எதிராகத் தீர்ப்பளித்துவிடுவாரோ என்ற பயம். உங்களைப் போன்றவர்கள்தான் நீதியின் துரோகிகள்.''

கருணாகரன் கோபத்தில் இரைந்தார். அவருடைய வார்த்தைகளால் ஆவுடையப்ப பிள்ளை தாக்குண்டார். திகைத்துப் போய் அமர்ந்திருந்தார். கூட்டத்தில் பலர் கருணாகரனின் சுடுசொற்களை ஆட்சேபித்து முகத்தைச் சுளித்தனர். சம்பத், கோபத்தால்



இது சரி, ஆனால்....

குத்துச்சண்டை வீரர் முகம்மது அலி தினமும் காலையில் மூன்று மைல் ஓடுகிறார்.

.... இது எதற்கு?

அவரைத் தொடர்ந்து அவரது ரோல்ஸ் ராய்ஸ் கார் வந்துகொண்டே யிருக்கும்!

ஸ்போர்ட்ஸ் வீக் - பாலி

கொதித்தான். கருணாகரனைப் பார்த்து, "நிறுத்துங்கள் சார்! உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஜட்ஜ்மீது கோபமென்றால் அதற்கு வக்கீல் சங்கத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த விடமாட்டோம். சங்கத் தலைவரைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசியதை நீங்கள் வாபஸ் பெற வேண்டும்" என்று இரைந்து கத்தினான்.

"மீண்டும் சொல்கிறேன். நம்முடைய தலைவர் கோழைதான். இல்லையென்றால், ஜட்ஜ் மீது தீர்மானம் கொண்டு வர இவ்வளவு தயங்குவாரா? சோஷலிஸ சமுதாயத்தில்...." என்று கருணாகரன் பேசியபோது சம்பத் குறுக்கிட்டுப் பேசினான்.

"சோஷலிஸத்தைப் பற்றிப் பேச உங்களுக்கு என்ன சார் அருகதை?" என்று கேட்டுவிட்டான்.

அந்தக் கேள்வி அறையில் எல்லாத் திசைகளிலும் பரவிப் பலரை உலுக்கியது.

"நான் புரட்சிக் கட்சியின் தலைவன்" என்று கர்ஜித்தார் கருணாகரன்.

"தெரியும். இதற்குமுன்பு நீங்கள் எந்தெந்தக் கட்சிகளில் இருந்தீர்கள் என்பதும் தெரியும். எதற்காக நீங்கள் ஒவ்வொரு கட்சியாக மாறினீர்கள் என்பதும் தெரியும். கம்யூனிஸம், சோஷலிஸம் என்றெல்லாம் பேச உங்களுக்கு அருகதையே இல்லை. பாட்டாளி, விவசாயி என்று பேசத் தெரிந்து கொண்டிருக்கிறீர்களே; வியர்வை சிந்த உழைத்திருக்கிறீர்களா? உடுத்தியிருக்கும் துணி அழுக்காகும்படி எந்த வேலையாவது செய்ததுண்டா? ரஷ்ய நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் சிலவற்றை மேம்போக்காகப் படித்துவிட்டுப் பாட்டாளிகளைப் பற்றிப் பேசுகிறீர்கள்! கம்யூனிஸம் பற்றிப் பேசி வேஷம் போடுகிறீர்கள். காரும், பங்களாவும் கோழிப் பிரியாணியும்தாம் உங்கள் வாழ்க்கை அனுபவம். ஒரு நாளாவது பட்டினி கிடந்த அனுபவம் உண்டா? வீட்டில் அமெரிக்க சுகபோகங்கள். பொமெரேனியன் ஜாதி நாயும், ஸயாமிஸ் பூனையும் பிரிஜிடேரும், ஏர்கண்டிஷனும், ஸ்டீரியோ ரேடியோகிராமும், டேப்ரிகார்டரும் — இதுவா ஒரு கம்யூனிஸ்டின் வாழ்க்கை? ஒரு ஜமீந்தாரைப் போல் வாழ்ந்து கொண்டு நீங்களும் உங்களைப் பாட்டாளிகளின் தோழன் என்றும், கம்யூனிஸ வாதி என்றும் கூறிக் கொள்கிறீர்கள்! பாவம், பாட்டாளிகள் உங்களை நம்பி மோசம் போய்க் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அமெரிக்க கோகோ கோலாவையும், ஸ்காட்ச் விஸ்கியையும் குடித்துக் கொண்டு திரிகிறீர்கள்..."

சம்பத்துக்கு மூச்சு வாங்கியது. முகம் வியர்த்தது. ஆவேசம் இன்னும் தணிந்தபாடில்லை. கருணாகரனை வெறிக்கப் பார்த்தான். கருணாகரனின் கண்கள் சிவந்திருந்தன. கோபத்தால் அவருடைய உடல் சற்று நடுங்கிக் கொண்டிருந்தது.

"என்னைப் பற்றிப் பேச உனக்கு அருகதை ஏது? நீ ஒரு பூர்ஷ்வாக் கூட்டத்தைச் சேர்ந்தவன். ஒருநாளாவது சிறைக்குச் சென்றிருப்பாயா?" என்றார்.

"ஆமாம். நான் ஒரு தடவைகூடச் சிறை சென்றதில்லை. ஆனால் நீங்கள் ஒரே ஒரு தடவை அரசியல் காரணத்துக்காகச் சிறைவாசம் அனுபவித்துவிட்டுப் பிறகு போராட்டம், சிறைவாசம் என்றாலே பயப்படுகிறீர்கள்! போன வாரம் நடந்த மாணவர் போராட்டத்தில்கூட மற்றக் கட்சித் தலைவர்களைத் தூண்டிவிட்டீர்கள். போலீஸ்காரர்கள் கைது செய்யத் தொடங்கியதும் எங்கோ ஓடிப் போய் ஒளிந்து கொண்டீர்கள்..."

"சம்பத், போதும் நிறுத்து" என்றார் ஆவுடையப்ப பிள்ளை. "உட்கார்" என்று கட்டளையிட்டார். அவருடைய குரலில் தொனித்த கடுமையை உணர்ந்த சம்பத் உட்கார்ந்தான். பெருமூச்சு வாங்கியது. முகத்தில் வியர்வை வழிந்தது. உட்கார்ந்த பிறகும் உணர்ச்சி அடங்காமல் தவித்தான். நளினி, அவன் கையைத் தொட்டுச் சாந்தப் படுத்தினாள்.

"மிஸ்டர் கருணாகரன்! சம்பத்துக்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று பிள்ளை சொன்னபோது சம்பத் எழுந்தான், வேகமாக. "தலைவரைப் பழித்துச் சொன்னதை மிஸ்டர் கருணாகரன் வாபஸ் வாங்க வேண்டும்" என்றான்.

"சம்பத்! உட்கார். என்னைப் பற்றிய பேச்சை நான் பொருட்படுத்தவில்லை. இந்தக் கூட்டம் சுமுகமாக முடிய வேண்டும். நாம் எல்லோரும் வழக்கறிஞர்கள். சமுதாயத்தில் மதிப்போடு நடக்கவேண்டியவர்கள். சண்டை போட்டுக் கொண்டு நம்முடைய பெருமையை இழந்துவிடக் கூடாது" என்றார் பிள்ளை.

பலர் உற்சாகத்துடன் கைதட்டினர். கருணாகரன், கோபம் தணியாமல் ஏதோ உறுமிக்கொண்டிருந்தார். அந்தக் கூட்டத்தில் இருக்கவே மனமில்லாது தவித்தார். பின் என்ன நினைத்தாரோ, கோபத்துடன் எழுந்து அந்த அறையை விட்டு வெளியேறி விட்டார். அவர் எழுந்து போனதும் அவரைச் சேர்ந்த சில வக்கீல்களும் சிங்காரமும் வெளியேறிவிட்டார்கள். கண்டனத் தீர்மானம் எதுவும் போடாமலேயே கூட்டம் முடிந்து விட்டது.

சங்கக் கட்டடத்தின் வராந்தாவுக்குச் சம்பத் வந்ததும் "உங்கள் பேச்சை நான் ரசித்தேன்" என்றாள் நளினி. "நன்றாகக் கருணாகரனின் மூக்கை அறுத்தீர்கள். அவருடைய கர்வமெல்லாம் பொடிப் பொடியாயிருக்கும்" என்றாள், உற்சாகத்துடன்.

நளினி காரில் ஏறியபோது, "நாளை என்னுடைய பிறந்த நாள்" என்றான் சம்பத்.

"மறக்க மாட்டேன். கட்டாயம் வருவேன்" எனக் கூறிச் சிரித்தாள், நளினி. அவள் கையை அசைத்து விடைபெற்றாள். அவள் காரை ஓட்டும் பாங்கை ரசித்தவாறு நின்றான் சம்பத். (தொடரும்)



திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்

23. திரவியம் தேடச் சில வழிகள்

தோளை யாரோ தொடுவதை உணர்ந்து திரும்பினான், சம்பத்.

''ஆபீசுக்குப் போவோம், வா'' என்று அழைத்தார், ஆவுடையப்ப பிள்ளை. அப்போது சம்பத்துக்கு எங்கும் போக மனமில்லை, நேரே தன்னுடைய அறையில் போய்ப் படுத்திருக்க வேண்டும் என்று எண்ணினான். நளினியை விருந்துக்கு அழைத்தாகி விட்டது. அவளும் சம்மதித்து விட்டாள். மாலை ஏழு மணி வசதியான நேரம்தான். அவனுடைய மனத்தில் உருவாகி யிருந்த திட்டம் ஒழுங்காக நடைபெறுமானால்....

நளினியிடம்தான் அவன் மனம் சென்றது. அவளோ கொஞ்சம்கூட அசைவதாகத் தெரியவில்லை. எனவே இப்போது ஒரு முடிவு செய்திருந்தான். அந்த முடிவு எவ்வளவு பயங்கரமானது என்பதையும், அதனால் தனக்கு நேரக்கூடிய ஆபத்தையும், அவமானத்தையும் அவன் உணர்ந்திருந்தாலும் நளினியை அடைந்தே தீரவேண்டும் என்ற வெறி அவன் அறிவை மறைத்து விட்டது.

அவனுக்குத் தேவையானது நளினியின் கணவன் என்ற அந்தஸ்து. அந்த அந்தஸ்துக்குக் குறைவின்றி அவனால் நடந்து கொள்ள முடியும். விதி வசத்தால் ஏழைக் குடும்பத்தில் பிறந்து விட்டானே தவிர ஒரு பணக்காரப் பையனுக்கு இருக்க வேண்டிய எல்லா இயல்புகளும் அவனிடம் அமைந்திருந்தன. செல்வச் சிறப்புடன் வாழ ஆசைப்பட்டான்.

மறுநாள் நடக்கவிருந்த நிகழ்ச்சியைச் சாவதானமாகக் கற்பனையில் ஒத்திகை பார்க்க வேண்டும்என்று நினைத்திருந்தவனை ஆவுடையப்ப பிள்ளை அலுவலகத்துக்கு அழைத்ததும் திகைத்தான். அவருடைய அழைப்பை மறுக்க முடியாமல் அவருடைய காரில் ஏறினான்.

''உனக்கென்ன இன்றைக்கு இப்படிக் கோபம் வந்து விட்டது!'' என்றார் ஆவுடையப்ப பிள்ளை.

''உங்களைத் திரும்பத் திரும்பக் கருணாகரன் குறை சொல்லிக் கொண்டே இருந்தார்'' என்றான் சம்பத்.

''இருந்தாலும் நீ அப்படிப் பேசியிருக்கக் கூடாது. அவர் பொல்லாதவர். புரட்சிக் கட்சியைச் சேர்ந்த ரௌடி. அவரிடம் அடியாட்கள் உண்டு. அவரிடம் ஜாக்கிரதையாகப் பழக வேண்டும். அவர் உனக்கு ஏதாவது கெடுதல் செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் மன்னிப்புக் கேட்டேன்'' என்றார் ஆவுடையப்ப பிள்ளை.

* * *

கருணாகரன் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தார். ஏற்கனவே மனச் சஞ்சலத்தில் ஆழ்ந்திருந்தவருக்குச் சம்பத்தின் பேச்சு மிகுந்த கோபத்தை உண்டுபண்ணியிருந்தது. ஒரு ஜூனியர், தொழிலுக்கு வந்து இரண்டு வருடங்கள்கூட ஆகவில்லை, தன்னைப் பார்த்து அப்படிக் கேட்டு விட்டானே என்று பொருமினார். வக்கீல் சங்கக் கட்டிடத்திலிருந்து வெளியேறியவர், காரில் ஏறித் தம்முடைய அலுவலகத்துக்குச் சென்றார். அங்கு பஞ்சாயத்து போர்டு தலைவர் காத்திருந்தார்.

''டாக்டர் விஷயம் என்ன ஆயிற்று?'' என்று ஆவலோடு கேட்டார், பஞ்சாயத்துத் தலைவர்.

''இன்னும் வழிக்கு வரவில்லையே. நிறையப்பணம் எதிர்பார்ப்பதுமாதிரி தெரிகிறது!''

',சார், இந்தக் கேஸுக்கு நிறையச் செலவு ஆகிவிட்டது.''

''ஆகத்தான் செய்யும். கேஸில் பலமில்லை. அவனைத் தண்டிக்க வேண்டுமானால் சங்கடப்பட்டுத்தான் ஆக வேண்டும். டாக்டரின் கையில்தான் இருக்கிறது.''

''ஏற்கனவே எழுநூறு ரூபாய் கொடுத்திருக்கிறேன்.''

''எனக்கா கொடுத்தீர்கள்? பப்ளிக் பிராசிக்யூட்டருக்குக் கொடுத்தீர்கள். நீங்கள் கொடுத்த பணத்தை உடனே அவரிடம் கொடுத்தேன். பணம் போதாதென்று கோபப்பட்டார். நான்தான் சமாதானப் படுத்தினேன். நான் எதற்காக இதில் சிரமப்படவேண்டும்? உங்களோடு பழகிய தோஷத்துக்காகத் தலையிட்டேன். அவ்வளவுதான்'' என்ற கருணாகரன் தொடர்ந்தார்: ''இந்த வழக்கினால் எனக்குப் பைசா லாபம் கிடையாது. போதாக் குறைக்கு இந்தத் தலையீட்டினால் என்னுடைய மற்ற கேஸ்கள் வேறு பாதிக்கப்படுகின்றன. நேற்றுக் காலை முழுவதும் இந்தக் கேஸுக்காகக் கோர்ட்டில் இருந்தேன்.''

''கோபப்படாதீர்கள், ஸார்! உங்களுக்கும் பீஸ் கொடுத்து விடுகிறேன்.''

''நோ நோ... நான் பணத்தைப் பற்றியே பேசவில்லை. இந்த வழக்குக்கு உங்களிடம் எப்போதாவது நான் பணம் கேட்டிருக்கிறேனா? நட்புதான் பெரிதே தவிர, பணம் பெரிதில்லை'' என்றார் கருணாகரன்.

''டாக்டர் எவ்வளவு கேட்கிறார்?''

''இரண்டாயிரம் ரூபாய் கேட்கிறார். நான் மறுத்து விட்டேன். கடைசியாக ஆயிரத்து ஐந்நூறு வேண்டுமானால் வாங்கித் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். தமது சாட்சி

யம்தான் முக்கியமானது என்று தெரிந்து கொண்டு ஆசாமி வளைந்து கொடுக்க மறுக்கிறார்.''

''சரி சார், எப்படியாவது ஆயிரம் ரூபாயில் முடித்து விடுங்கள்.''

''நாளை இரவு அவரைப் பார்க்கப் போகிறேன். கையில் பணத்தோடு போய்விட்டால் சரிக்கட்டிவிட முயலலாம்.''

''நாளைச் சாயங்காலம் ஐந்து மணிக்குப் பணத்தைத் தந்து விடுகிறேன். ஆயிரத்துக்குள் முடித்துவிடுங்கள். உங்களைத்தான் நம்பியிருக்கிறேன். ஒரு காரியத்தில் இறங்கியாகிவிட்டது. அவனை ஜெயிலுக்குள் தள்ளினால் தான் எனக்குத் தூக்கம் வரும்'' என்றார், பஞ்சாயத்துப் போர்டுத் தலைவர்.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. சற்று நேரத்தில் இன்ஷூரன்ஸ் இன்ஸ்பெக்டர் பூமிநாதன் அறைக்குள் வந்தார். அவரைக் கண்டதும் கருணாகரன், பஞ்சாயத்துத் தலைவரைப் பார்த்து, ''சரி, நாம் நாளை சந்திக்கலாம்'' என்றார்.

பஞ்சாயத்துத் தலைவர் விடைபெற்றுக் கொண்டு வெளியேறினார்.

''என்ன சார், விசேஷம்?'' என்றார் கருணாகரன்.

''நேற்று மிஸ்டர் ராகவனின் காரில் ஏற்பட்ட விபத்து விஷயமாகத்தான்'' என்றார் பூமிநாதன்.

''ஓ...?.உங்கள் கம்பெனியில்தானே இன்ஷூர் ஆகியிருக்கிறது?''

''ஆமாம். ஆஸ்பத்திரியில் பையனைப் பார்த்தேன். பையனுடைய தகப்பனார் என்ன பேசினாலும் உங்களிடம்தான் கேட்க வேண்டும் என்கிறார்'' என்றார் பூமிநாதன்.

''இல்லையென்றால், நீங்கள் ஆளையே விழுங்கி விடுவீர்களே!''

''ஓ....ஹோ...'' என்று உரக்கச் சிரித்தார் பூமிநாதன். ''சரி, விஷயத்துக்கு வருவோம். நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?''

கருணாகரன் சற்று யோசித்தார். ''பையனைப் பார்த்தீர்கள் அல்லவா?''

பூமிநாதன், தலையை ஆட்டினார். ''எவ்வளவு கொடுக்கலாம் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார், கருணாகரன்.

''டாக்டரிடம் கேட்டேன். உயிருக்கு ஆபத்தில்லை.''

''ஆனால் கை கால் விளங்காமல் போய் விடுமே?''

''சிறு பையன்தான்.''

''அந்தப் பையனை நம்பித்தான் அந்தக் குடும்பமே இருக்கிறது. அவன்தான் சம்பாதித்துப் போட வேண்டும்.''

''சரி, நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?''

''முதலில் நீங்கள் எவ்வளவு என்று சொல்லுங்கள்.''

''மூவாயிரம். உடனே செட்டில் பண்ணி விடலாம்.''

''சரி, நான் கோர்ட் மூலம் நஷ்ட ஈட்டை வாங்கிக் கொள்கிறேன்..''

''கோர்ட் கீர்ட் என்று ஒன்றும் வேண்டாம் என்பதற்காகத்தானே ஸார் உங்களை நேரில் வந்து பார்க்கிறேன்?''

''பதினையாயிரத்துக்கு வழக்குப் போட உத்தேசித்திருக்கிறேன்.''

''அடேயப்பா!''

''என்ன அடேயப்பா! உங்கள் பையிலிருந்தா பணத்தை எடுத்துக் கொடுக்கப் போகிறீர்கள்? இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிதானே கொடுக்கப் போகிறது?''

''அது சரி. கோர்ட் பதினையாயிரத்துக்குச் சம்மதிக்காதே.''



''ஏன் சம்மதிக்காது? அந்தக் குடும்பத்துக்கு அவன் ஒரே பையன். இது ஒன்றே போதுமே.''

''சரி, நான் கடைசியாக ஒன்று சொல்கிறேன், கேட்கிறீர்களா? கோர்ட்டுக்கெல்லாம் போக வேண்டாம். நாம் இரண்டு பேரும் ஒரு முடிவுக்கு வந்து விடுவோம்.''

''என்ன சொல்லுங்கள்.''

''பதினையிரத்துக்கு முடித்து விடலாம். எனக்கு மூவாயிரம்'' என்றுர் பூமிநாதன்.

கருணுகரன் யோசித்தார். பூமிநாதன் சொன்னுர்: ''நீங்கள் யோசிக்க வேண்டாம். கம்பெனிக்குச் சிபாரிசு செய்து பதினையிரத்துக்கு செட்டில் பண்ணச் சொல்கிறேன். கோர்ட் மூலமாகப் போனுல் எனக்கு லாபமில்லை.''

''உங்களுக்கு மூவாயிரம் கொடுத்துவிட்டால் பாக்கி ஏழாயிரம்தானே இருக்கிறது. பாவம், அந்தக் கிழவர் அதற்குச் சம்மதிக்க வேண்டுமே.''

''நீங்கள் நினைத்தால் அவரைச் சம்மதிக்க வைத்துவிடலாம். கோர்ட்டுக்குப் போனுல் இதுகூடக் கிடைக்காது என்று சொன்னுல், சம்மதிப்பார்.''

''அதுசரி. எனக்குத்தான் ஒன்றுமில்லை'' என்றுர், கருணுகரன்.

பூமிநாதன் சிரித்தார். ''உங்களுக்குத்தான் கிழவர் வக்கீல் பீஸ் கொடுப்பாரே'' என்று புகையை ஊதினுர், பூமிநாதன்.

''ப்பூ... வக்கீல் பீஸ் எவ்வளவு கொடுத்து விடப் போகிருர்?'' என்று உதட்டைப் பிதுக்கினுர், கருணுகரன்.

''நான் உங்களுக்கு ஐந்நூறு கொடுத்து விடுகிறேன். எனக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு போதும்'' என்றுர், பூமிநாதன்.

கருணுகரன் யோசனையில் ஆழ்ந்தார். பூமிநாதனை நோக்கி, ''கம்பெனிக்கு என்ன எழுதுவீர்கள்?'' என்று கேட்டார்.

''பையனுக்குப் பலத்த அடி. ஒரே பையன். கோர்ட் மூலமாக இருபதினையிரத்துக்கு வழக்குத் தொடர இருக்கிறது. எதிராளியின் வக்கீலுடன் கலந்து கொண்டு கோர்ட்டுக்குப் போகாமல் பதினையிரத்துக்கு செட்டில் பண்ணிவிடலாம் என்று எழுதுவேன். இந்த விபத்தில் நேர்ந்த நஷ்டத்துக்குப் பதினையிரம் குறைந்த தொகைதான் என்று எழுதுவேன்.''

''சரி! அப்படியே எழுதுங்கள்!''

பூமிநாதன் சென்றதும் கருணுகரன், ஆஸ்பத்திரியை நோக்கி விரைந்தார். கருணுகரனைக் கண்டதும் சிறுவனின் தந்தை மரியாதையுடன் எழுந்து நின்றுர்.

''காலையில் ஜட்ஜைப் பார்த்தேன். பேசிக் கொண்டிருந்தேன். இந்தப் பையனைப் பற்றியும் சொன்னேன். இரண்டாயிரம் ரூபாய்க்குகேஸ் போடப் போவதாகவும் சொன்னேன்.'' கருணுகரனின் பொய்யை நம்பிய கிழவர், கும்பிட்டுக் கொண்டே சொன்னுர்: ''ஜட்ஜ் ஐயா என்ன சொன்னுர்கள்? மூவாயிரம் தரும்படி நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டும்.''

''ஜட்ஜ் பொல்லாத ஆள். சிறு பையனுக்கெல்லாம் ஆயிரம் ரூபாயே அதிகம் என்கிருர். நான் எவ்வளவோ சொன்னேன். யோசிப்போம் என்கிருர். நாம் கேஸைப் போட்டால் ஜட்ஜ் ஆயிரத்துக்கு மேல் கொடுக்க மாட்டார் போலிருக்கிறது.''

''சாமி, நான் ஏழை...''

''அதற்கு நான் ஒரு வழி செய்து விட்டேன். கோர்ட்டுக்குப் போகாமல், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மூலமாக இரண்டாயிரம் ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்."

''நீங்கள் கடவுள் மாதிரி...''

''யாராவது வந்து பண விஷயமாகப் பேச ஆரம்பித்தால் நீங்கள் வாயைத் திறக்காதீர்கள். வக்கீல் கருணுகரன் இல்லாமல் எதுவும் பேச மாட்டேன் என்று சொல்லி விடுங்கள். உங்களை ஏமாற்றி விடுவார்கள்.''

''ஐயாவுக்கு ஃபீஸ்...?''

''சேச்சே... அந்தப் பணத்தில் ஒரு பைசா கூட நான் தொடக்கூடாது. அது இவன் பணம்'' என்று கூறி, படுக்கையிலிருந்த சிறுவனின் தலையைத் தடவினுர், கருணுகரன்.

''அதெல்லாம் இல்லை சாமி. நீங்கள் இல்லையென்றுல், இந்தப் பணம் ஏது? நீங்கள் தட்டக் கூடாது. ஐந்நூறு ரூபாய் எடுத்துக்கொள்ளுங்கள். ஆயிரத்து ஐந்நூறு எங்களுக்குக் கிடைத்தால் போதும்.''

''அதையெல்லாம் பிறகு பார்த்துக்கொள்வோம். முதலில் இவன் குணமாகி எழுந்திருக்க வேண்டும். ஆஸ்பத்திரிச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி ஐந்து ரூபாய் நோட்டுக்கள் இரண்டை நீட்டினுர்.

''எதற்கு சாமி, இது?''

''பரவாயில்லை. வாங்கிக் கொள்ளுங்கள். உங்களோடு பழகி விட்டேன். உதவி செய்ய வேண்டியது என் கடமை.''

கிழவர் பணத்தை வாங்கிக் கண்களில் ஒற்றிக்கொண்டார். ஆஸ்பத்திரியை விட்டுக் கருணுகரன் வெளியே வந்தபோது உற்சாகமாயிருந்தார். அவ் விபத்தின் லாபத்தை மனசில் கணக்குப் போட்டு பார்த்தார். (தொடரும்)



நமக்கினி பயமேது?

கீர்த்தனைக் கதை-6



''போன காரியம் என்ன ஆச்சு?'' என்று பிரேமா கேட்டுக் கொண்டே கணவன் கழற்றிக் கொடுத்த பூட்ஸை வாங்கிக் கொண்டாள்.

''பிடிக்கிறவனைப் பிடித்தால் எந்தப் புலிப் பால்தான் கறந்து கொண்டு வர முடியாது ? மூன்று டன் சிமிட்டிக்குத்தான் பெர்மிட். இன்னொரு கண்டிராக்டர் சிநேகிதரைப் பார்த்தேன். அவரிடம் ஒரு டன் சிமெண்ட் இருக்கிறதாம். அதையும் வாங்கிவிட்டேன். வீடு ஜாம், ஜாம் என்று முடிந்து கிருஹப்பிரவேசம் செய்யலாம்'' என்றான் நாராயணன்.

'' இதெல்லாம் சந்தோஷமாய்த்தான் இருக்கு. ஆனால் கூடவே எனக்கு ஒரு பயம் எப்பவும் இருந்து கொண்டே இருக்கிறது. உங்களிடம் எப்படிக் கேட்கிறது ? கேட்டால் 'புர்' என்று மூக்குக்கு மேலே கோபம் பொத்துக் கொண்டு வந்துவிடுகிறது '' என்றாள்.

''கோபிச்சுக்கலே. என்ன சொல்லேன் ?''

'' பத்திரிகையிலே ஒவ்வொரு நாளும் 'அங்கே கறுப்புப் பணம் பிடித்தார்கள். இங்கே தங்கத்தைக் கண்டெடுத்தார்கள்' என்று படிக்கும்போதெல்லாம், நீங்கள் இப்படிப் படாடோபமாக வீடும், வாசலுமாய் இருக்கிறீர்களே, யார் எதையாவது வயிற்றெரிச்சலிலே சொல்லிவிடப் போகிறார்களென்று எனக்குத் தூக்கமே வருகிறது கிடையாது'' என்று அவள் கவலையைத் தெரிவித்தாள்.

'' மாட்டிண்டா ஜெயில்தான் ; இல்லேன்னா குஷால்தான். வாழ்க்கையிலே, பிரேமா துணிவு இருக்கணும். நான் இருநூறு ரூபாய் வேலையை விட்டேன். அன்னிக்கும், 'இப்படி வேலையை விட்டுவிட்டேன் என்கிறீர்களே!' என்று பயந்தாய். இன்று வசதியோடு வீடு கட்டுகிறாய். எப்படி வந்தது ? துணிவுதான். வேலையை விடலேன்னா ஒண்டிக் குடித்தனம் பண்ணுவே. கார், நகை, ஏர்கண்டிஷன், சுற்றுலா இதெல்லாம் எப்படி வரும் ?'' என்று வாழ்க்கையில் முன்னுக்கு வரத்தேவையான துணிவைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தான்.

''இப்ப வந்துவிட்டது. மார் தட்டுகிறீர்கள். வியாபாரம் நசிந்து இருக்கட்டும்...''

''பயப்படுகிறவனுக்கு எல்லாம் பயம்தான். 'சாகப் போகிறவனுக்குச் சமுத்திரம் கணுக்கால் ஆழம்னு சொல்லுவா. அந்த மனப்பான்மை இருக்கிறவன்தான் சமுத்

திரத்தில் மூழ்காமல் கடக்கிறவன்'' என்று தன் சித்தாந்தத்தை எடுத்துக் கூறினான்.

வாசலில் ஏதோ சண்டை போடும் சத்தம் கேட்டது. பிரேமாவும் நாராயணனுமாய் ஜன்னல் வழியாகப் பார்த்தனர். எதிர் வீட்டுக்காரரை எவனோ ஒருவன் வாய் தீரத் திட்டிக் கொண்டிருந்தான்.

''எல்லாருக்கும் மேலே கடவுள் ஒருத்தன் இருக்கிறான்..... மறந்துவிடாதே... இன்னிக்கு நீ காரிலே போகலாம்.... மாடி வீடு கட்டிக்கலாம்.....ஏழை வயிற்றில் அடித்தால் அதற்கு அனுபவிப்பே..... உன் குழந்தை குட்டிங்க சௌக்கியமா இருக்குமா ? இன்னிக்கு இல்லேன்னா ஒரு நாள் அனுபவிப்பாய். இந்த ஜன்மத்திலே இல்லேன்னாலும் மறு பிறப்பிலே அனுபவிப்பே...''.

''என்னென்ன பேசறான் பார்த்தீங்களா?'' என்றாள் பிரேமா.

''உனக்குப் பயம் வந்துவிட்டது. அது தானே! எதிர்வீட்டவருக்குச் சாபம் கொடுத்தது போல் நமக்கும் எவனாவது சாபம் கொடுத்துவிடப் போறானே என்ற பயம். அதானே'' என்று அவளை நையாண்டி செய்தான்.

''உங்களுக்குத்தான் மனுஷ்யனிடத்திலும் பயமில்லை, தெய்வத்தினிடமும் பயமில்லை'' என்றாள்.

''எடுத்ததுக்கெல்லாம் அடுத்த ஜன்மம், பரலோகம்னு பார்த்துக் கொண்டே போனால் வாழ்க்கையே வாழ்ந்த மாதிரிதான். பரலோகத்திலே கஷ்டம் வரபோது பார்த்துக்கலாமே. அதுக்கு இப்பப்பிடித்து மூக்கைச் சிந்திப் போட்டுக் கொண்டிருப்பானேன் !''

''ஒரு தப்புக் காரியம் பண்ணிவிட்டேன்'' என்று மன்னிப்புக் கோரும் பாணியில் சொன்னாள்.

''என்ன தப்பு? பரலோகத்திலே கஷ்டப் படப் போறே?'' என்று கிண்டல் செய்தான்.

''எதிர் வீட்டு மாமிக்கு யாரோ சிங்கப்பூரிலேயிருந்து வந்தவா ஐந்தாறு நைலக்ஸ் புடவைகள் கொண்டு வந்தார்களாம். நம் ஆத்துக்கு வேணுமான்னு கேட்டுக்கொண்டு வந்து புடவைகளையும் காண்பித்தா. ரீடாவுக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. நாலு புடவைகள் எடுத்துண்டோம். ஐந்நூறு ரூபாய்தான்..... நன்னா இல்லே?'' என்று புடவைகளைப் பிரித்துக் காண்பித்தாள்.

''நன்னாய்த்தான் இருக்கு.''

''ரீடா ! அப்பாவே நன்னா இருக்குன்னு சொல்லிட்டார்'' என்று தாய் சொல்ல ரீடா ஓடி வந்து அப்பாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, வழுக்கைத் தலையைத் தடவி, ''அப்பா ! உனக்குத் தலை ரொம்பவும் வழுக்கையாய்ப் போச்சு !'' என்று கூறி இடி இடி என்று சிரித்தாள்.

''எல்லாம் உன்னாலேதான்'' என்று பெண்ணின் கன்னத்தைச் செல்லமாய்க் கிள்ளினார்.

காலிங் பெல் ஒலித்தது. கதவைத் திறந்தாள். பாட்டு வாத்தியார் ஹாலில் நுழைந்தார். விறுவிறு என்று போய்ப் பாயை விரித்து, தம்பூராவை எடுத்து வந்து வாத்தியாரிடம் கொடுத்து எதிரில் ரீடா அடக்கமாய் உட்கார்ந்தாள்.

''புதுப் பாட்டைப் பாடம் பண்ணிவிட்டாயா ?'' என்று வாத்தியார் கேட்டுக் கொண்டே தம்பூராவை மீட்டி முதலில் ஆரம்பித்தார். அதையொட்டி ரீடா மந்தாரி ராகத்தில் தியாகையர் கீர்த்தனையைப் பாடினாள்:

பல்லவி

பரலோக பயமுலேகநே பவபாச பத்துலையேரு

அனுபல்லவி

கரிவாஜி சிருங்காரா ராம சிபி
காதுலெல்ல மனகே கலிகேனனி

சரணம்

கொன்ன காந்தலனு கோண பிட்டலனு
வன்னே சீரலனுவான குடிஸெலனு
தின்னகா கனி தைவ லோகமனி
தன்னுகோள்ளலோ தியாகராஜனுத

(பரலோகத்தைப் பற்றிய பயமே இல்லாமல் இல்வாழ்க்கையில் பெருமையடைந்து சம்சாரத்தில் உழல்கின்றனர் மக்கள். வீடு, சொத்து, ஆடை, பெண்ணாசை இவைகளில் மகிழ்ச்சியடைந்து 'இதுவே தெய்வலோகம்' என்ற மயக்கத்தில் பரலோக பயமின்றி வாழ்கின்றனர்.)



பாட்டின் லட்சணங்கள்

'ஸொகஸுகா ம்ருதங்க தாளமு' என்ற கிருதியில் ஒருகிருதியின் லட்சணங்கள் என்னவென்று ஸ்ரீ தியாகையர் தெளிவு படுத்துகின்றார். உபநிஷதங்கள் கூறும் சத்தியமே பாட்டின் உட்பொருளாக இருக்க வேண்டும்; அதன் இசை வடிவத்தில் ஸ்வர சுத்தமே முதலிடம் கொள்ள வேண்டும்; கவி வடிவத்தில் அதன் போக்கு விச்ராந்தியானகதியில் இருத்தல் வேண்டும். தோல் உரிக்கவும் அவசியமின்றி அப்படியே வாயில் போட்டுக் கொள்ளும் திராட்சா ரசமாக ஒன்பது ரஸங்களும் வெளிப்பட வேண்டும். ஆயினும் இவை அனைத்தும் பக்தி என்பதிலேயே தோய்ந்திருக்க வேண்டும். அந்தப் பக்தி வெறும் உணர்ச்சி பரவசமாய் இராமல் வைராக்கியத்துடன் கூடியிருக்க வேண்டும்.



''நான் சொல்லி அந்த நாதஸ்வரக்காரரை வாசிக்கவச்சேன். வாசிச்சுட்டுப் பிரமாதம், பிரமாதம்னு சொன்னார்.''

''தம் வாசிப்பைத் தாமே பிரமாதம்னு சொல்லிண்டாரா?''

''நீங்க எதைச் சொல்றேள்? நான் எழுதிய நாவலை அவரை வாசிக்க வைத்தேனய்யா!''



சென்ற 27 ஆண்டுகளாகப் பெட்ரோலியம், மண்ணெண்ணெய் போன்ற பொருள்கள் வினியோகத்தின் பல்வேறு நிலைகளில் பரந்த அனுபவம்பெற்ற திரு T. குமாரன், இண்டியன் ஆயில் கார்ப்பரேஷனின் வினியோகத்துறை பிரிவுக்கு உயர் மானேஜராக நியமனம் பெற்றிருக்கிறார். இவ்வினியோகப் பணியை ஏற்பதற்கு முன்அவர் பம்பாயில் ஓர் தினப் பத்திரிகையின் உதவி ஆசிரியராகப் பணி புரிந்திருக்கிறார்.

திரு குமாரன், பெட்ரோலியம், மண்ணெண்ணெய் வினியோகத்துறையில் சாதாரண வியாபாரப் பிரதிநிதியாகச் சேர்ந்து தனது திறமையால் ஜெனரல் மானேஜர் பதவிக்கு வந்திருக்கிறார். அவர் திறமை செழிப்பதாக!



கரூர் *D. S. M.* பஸ் டிரான்ஸ்போர்ட்ஸ் உரிமையாளர் ஸ்ரீ *D.S.* மணி ஐயர் பேத்தியும் ஸ்ரீ *G.* கிருஷ்ணசாமி அவர்களின் புதல்வியுமான K. **லலிதா** B. Sc.க்கும், ஸ்ரீ *S. N.* வைத்தியநாதன் *(Retired Veterinary Officer)* அவர்கள் குமாரர் Dr. S. V. வெங்கட்டராமன் M. B. B. S.க்கும், கரூர் நாரதகான சபாவில் *21-11-74* அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கு உறவினர்களும், நண்பர்களும் ஏராளமாக வந்து மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க மணமக்கள்

—ராஜன்

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



24. காதல் விருந்து

ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணி. சம்பத் தன்னுடைய அறையில் மிகுந்த பரபரப்புடன்இருந்தான். எல்லாம் சரியாக இருக்கிறதா என்று அடிக்கடி கவனித்துக்கொண்டான். நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது. அடிக்கடி அறையை அடுத்திருந்த பால்கனிக்கு வந்து தெருவைப் பார்த்தான்.

சம்பத் தங்கியிருந்த மாடிப் பகுதியில் இரண்டு அறைகளும் ஒரு குளியலறையும் ஒரு வராந்தாவும் இருந்தன. அன்று வீட்டுக்காரர்கூட இல்லை. பக்கத்து ஊரில் ஏதோ ஒரு கல்யாணத்துக்காகக் குடும்பத்தோடு போயிருந்தார். ஆகவே வீட்டின் கீழ்ப் பகுதி பூட்டியிருந்தது. மனித நடமாட்டம் கிடையாது. அப்படி ஒரு சூழ்நிலை தானாக வந்து அமைந்ததை எண்ணி உற்சாகமடைந்திருந்தான் சம்பத். முன் ஜாக்கிரதையாக ஜன்னல்களின் திரைகளை இறக்கி விட்டிருந்தான்.

மாடியில் ஒரு படுக்கை அறை. அடுத்த அறையில் ஒரு மேஜையின் மீது விருந்துக்கான பதார்த்தங்கள் தயாராக இருந்தன. விருந்துக்காகக் கஸ்தூரி ஹோட்டலில் ஏற்பாடு செய்திருந்தான். ஹோட்டல் அதிபர் மூக்காண்டி ஐயர் மாலை ஆறு மணிக்கே பதார்த்தங்களை ஒரு வண்டியில் சம்பத்தின் அறைக்குக் கொண்டு வந்து விட்டார். பாதாம் அல்வா, விஜிடபிள் பிரியாணி, விஜிடபிள் குருமா, விஜிடபிள் கட்லெட், சர்க்கரைப் பொங்கல், தயிர்ச் சாதம் — இவைதாம் விருந்துக்கான பதார்த்தங்கள். நான்கு பேருக்கான அளவு தயார் செய்யச் சொல்லியிருந்தான். மூக்காண்டி ஐயர் நான்கு பெரிய இலைகளையும்கொண்டு வந்திருந்தார். பதார்த்தங்களை அறையில் இறக்கி வைத்ததும் சம்பத் ''என்ன ஆயிற்று?'' என்று கேட்டபடியே மேஜைக்குள்ளிருந்து பர்ஸை எடுத்தான்.

''இப்போது என்ன அவசரம்? விருந்து முடிந்து, பாத்திரங்களை எடுத்துப் போகும் போது வாங்கிக் கொள்கிறேன்'' என்றார் மூக்காண்டி ஐயர்.

''பாத்திரங்களைக் காலையில் எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் காத்திருக்க வேண்டாம்'' என்றான் சம்பத்.

மூக்காண்டி ஐயர் குழம்பினார். ''விருந்து பரிமாற வேண்டாமோ? நானே பரிமாறி விட்டுப் போகிறேன்'' என்றார்.

''வேண்டாம் ஐயர்வாள்! சிநேகிதர்கள் தானே. நாங்களே பரிமாறிக் கொள்வோம். இந்தாருங்கள். உங்களுக்கு எவ்வளவு தர வேண்டும் சொல்லுங்கள்'' என்றான் சம்பத்.

''இருபது'' என்றார் மூக்காண்டி ஐயர்.

சம்பத் இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை நீட்டினான். பணத்தை வாங்கியவாறே, ''பாத்திரங்களைக் காலையில் வந்து எடுத்துக் கொள்ளவா?'' என்று கேட்டார். சம்பத் தலையை ஆட்டினான்.

'பரிமாறக்கூடாது என்றால் அதற்கு என்ன அர்த்தம்? இது இரகசியமான ஒரு விருந்து. பிராந்தியோ விஸ்கியோ பரிமாறப் போகிறார்கள். நடக்கட்டும், நடக்கட்டும். ஜாலியாக இருக்கட்டும். சிறிசுகள்தானே'—மூக்காண்டி ஐயர் படி இறங்கிச் சென்றார்.

அறைக்குள் மேஜையைச் சாப்பாட்டுக்காகத் தயார் செய்தான் சம்பத். இரண்டு பேர் விருந்து சாப்பிட நான்கு பேருக்குத் தயாரித்திருப்பது வீண் என்று முனகிக்கொண்டான். நளினி சந்தேகப்படக் கூடாது என்பதற்காகத்தான் அந்த ஏற்பாடு. இருபது ரூபாய் செலவாகி விட்டது. இதுகூடச் செலவழிக்காமல் ஒரு பணக்காரியை வசப்படுத்துவதுதான் எப்படி?

ஏழு மணிக்கெல்லாம் நன்றாக இருட்டி விட்டது.. சம்பத்தின் பரபரப்பு அதிகரித்துக்

கொண்டே யிருந்தது. வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. சம்பத் துள்ளி எழுந்தான். வராந்தாவுக்கு ஓடிப் போய்ப் பார்த்தான். கீழே காரிலிருந்து நளினி இறங்கிக் கொண்டிருந்தது தெரிந்தது. காரை அவள் தனியாகத்தான் ஓட்டி வந்திருக்கிறாள். டிரைவர், துணை யாருமில்லை என்பதைத் தெரிந்து கொண்டதும் உற்சாக மடைந்தான். விரைந்து மாடிப் படிகளில் இறங்கி ஓடினான். நளினியை வாசலிலேயே சந்தித்து விட்டான். அவளுடைய அலங்காரத்தைக் கண்டு மலைத்துப் போனான்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?'' என்றாள் நளினி. அவள் முகத்தில் நாணம் படர்ந்தது.

''...உன்னுடைய முகத்துக்கு இந்தக் கொண்டை எவ்வளவு எடுப்பாயிருக்கிறது! அலங்காரமே ஒரு தனிக் கலைதான். சிலருக்குத்தான் அதில் தேர்ச்சி உண்டு. நீ அதில் எக்ஸ்பர்ட் என்பதை நிரூபித்துவிட்டாய்... ஓ, வாசலிலேயே நிற்க வைத்துப் பேசுகிறேனே, வா, மாடிக்குப் போகலாம்'' என்றான் சம்பத், உற்சாகத்துடன். அவளைப் படியேறவிட்டுப் பின்தொடர்ந்தான்.

''நீங்கள் வைத்திருக்கும் விருந்துக்குத் தடபுடலாக வரவேண்டாமா, அதற்காகத்தான் இந்த அலங்காரம்'' என்றாள், நளினி திரும்பிப் பார்த்து. படியேறியபோது, அவளுடைய உடலின் அசைவுகளைக் கண்டு ரசித்தபடியே பின்தொடர்ந்த சம்பத், ''நோ நோ, இது தடபுடலான அலங்காரம் இல்லை. எளிமையான அலங்காரம்தான். அதில்தான் கவர்ச்சியும் அழகும் உண்டு. என்னுடைய விருந்தும் எளிமையாகத்தான் இருக்கும்'' என்றான்.

''எனக்கு எளிமையான விருந்துதான் பிடிக்கும்'' என்ற நளினி மாடியை அடைந்ததும்,

''என்ன, உங்கள் நண்பர்கள் யாரும் வரவில்லையா?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''இன்னும் இரண்டு பேரை அழைத்திருந்தேன். இப்போதுதான் அவர்களிடமிருந்து போன் வந்தது'' என்று ஏற்கனவே கற்பனை செய்திருந்த பொய்யைச் சொன்னான், சம்பத். ''ஒருவன் திடீரென்று டவுனுக்குப் போக வேண்டி வந்து விட்டதாம். திரும்பி வர மணி பத்தாகுமாம். இன்னொருவனுடைய அம்மாவுக்கு உடல் சரியில்லையாம். ஆஸ்பத்திரிக்கு அவசரமாகக் அழைத்துப் போக வேண்டி யிருக்கிறதாம்.''

''ஐயோ.... அப்படியானால் சாப்பாடு வீணாகிப் போகுமே!''

''ஆமாம், நான்கு பேருக்குத் தயார் பண்ணச் சொல்லி யிருந்தேன்'' என்றான் சம்பத், ஏமாற்றமடைந்தவன் போல் நடித்து. கூடவே ''அதனால் என்ன? இந்த விருந்தே உனக்காகத்தான். நீ வராமல் போயிருந்தால்தான் ஏமாற்ற மடைந்திருப்பேன்'' என்றான்.

''இதோ உங்கள் பிறந்த நாள் பரிசு'' என்று கூறியபடியே கைப் பையைத் திறந்து ஒரு சிறு பொட்டலத்தை எடுத்துக் கொடுத்தாள் நளினி.

''இதெல்லாம் எதற்கு?'' என்றுக் கேட்டான் சம்பத், குழைவாக.

''பிறந்த நாளுக்குச் சும்மா போகக் கூடாது'' என்றாள் நளினி. அவளிடமிருந்து பொட்டலத்தை வாங்கி மேஜையின் மீது வைத்த சம்பத், ''நீ இங்கு வந்ததே எனக்குப் பரிசு கிடைத்த மாதிரிதான்'' என்றான்.

''பிரித்துப் பாருங்களேன்'' என்றாள் நளினி. சம்பத் ஆவலோடு பிரித்தான். உள்ளே அழகான ஒரு கைக்கடிகாரம் இருந்தது. அதைக் கண்டு திகைத்தான். கடிகாரத்தின் பெயரைப் பார்த்ததுமே, அதனுடைய மதிப்பையும், விலையையும் உணர்ந்து பரபரப்படைந்தான்.

''சிங்கப்பூரிலிருந்து அப்பாவின் நண்பர் வாங்கி வந்தார். அப்பாவிடம் ஏற்கனவே இரண்டு கடிகாரங்கள் இருக்கின்றன. எனவே நான் இதை உங்களுக்காகக் கொண்டு வந்தேன்!''

சம்பத், நன்றிப் பெருக்குடன் அவளைப் பார்த்தான். ''ரொம்ப விலை இருக்குமே?'' என்றான்.

''அப்படி ஒன்றும் அதிகம் இல்லை. சிங்கப்பூரில் விலை மலிவுதான்'' என்றாள் நளினி. அதனுடைய விலையைக் கேட்க ஆசைப்பட்டான். ஆனால் விலையைக் கேட்பது நாகரிகமில்லை என்ற உணர்வு அவனைத் தடுத்தது.

கிட்டத்தட்ட இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் இருக்கும். இரண்டாயிரம் ரூபாய், மலிவானது என்கிறாளே. இவளை மனைவியாக அடைந்து வாழ்வதற்கு இதைவிட வேறு காரணம் தேவை இல்லை...

''இதை உன் கையாலேயே கட்டி விடேன்'' என்றான் சம்பத்.

''ஓ...''

நளினி அவனிடமிருந்து கடிகாரத்தை வாங்கினாள். அவன் இடது கையில் ஏற்கனவே கட்டியிருந்த கடிகாரத்தை அவிழ்த்து மேஜையின்மீது வைத்துவிட்டுக் கையை நீட்டினான். அவனுடைய கையில் கடிகாரத்தைக் கட்டிய போது, அவளுடைய முகம் சிவந்ததையும், உடல் பரபரத்தையும் உணர்ந்து கொண்டான்.

''உங்கள் கைக்கு இந்தக் கடிகாரம் அழகாயிருக்கிறது'' என்றாள்.

''இது வெறும் உபசார வார்த்தை. உன் மணிக்கட்டைப் பற்றி நான் சொன்னதற்குப் பதில் இது'' என்றான் சம்பத்.

நளினி சிரித்தாள். சிரித்தபோது, அவள் கன்னங்களில் விழுந்த குழிகளை ரசித்தான்.

''மனப்பூர்வமாகத்தான் சொன்னேன்'' என்றாள் நளினி.

அவளைப் பக்கத்து அறைக்குச் சாப்பிட அழைத்துச் சென்றான்.

''பரிமாற ஆள் இல்லையா?'' என்று நளினி கேட்டாள்.

''மூக்காண்டி ஐயரும் ஏதோ அவசரம் என்று போய் விட்டார். நாமே பரிமாறிக் கொள்ளலாமே?'' என்றான் சம்பத்.

''அப்படியானால் நானே பரிமாறுகிறேன். எனக்குப் பரிமாறுவதில் ரொம்ப இஷ்டம்.''

''ஒன்று செய்யலாம். நீ எனக்குப் பரிமாறு. நான் உனக்குப் பரிமாறுகிறேன்.''

''ஓ — எஸ்....''

இருவரும் அடுத்தடுத்து ஒரே பெஞ்சில் அமர்ந்தார்கள். ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டு சாப்பிட்டார்கள். சம்பத் சொன்னான்: ''நல்லவேளை, மற்ற நண்பர்கள் வரவில்லை. வந்திருந்தால் நாம் விருந்தை இவ்வளவு ரசித்திருக்க முடியாது!''

நளினியும் ஆமோதிப்பது போல அவனைப் பார்த்தாள். பரிமாறும் போதும், சாப்பிடும் போதும் நெருக்கம் காரணமாக ஏற்பட்ட ஸ்பரிசங்களில் நளினிக்கு உண்டான பரபரப்பையும், சிலிர்ப்பையும் கவனித்துக் கொண்டிருந்தான் சம்பத்.

ஓரிரு முறை அவள் அவனுக்குப் பரிமாறிய போது, வேண்டாம் என்று தடுக்கும் பாவனையில் அவளுடைய கையை அவன் பற்றிய போது, அவள் உடல் முழுவதும் ஒருவித உணர்ச்சிப் பெருக்கால் நடுங்கியது. அந்த விருந்தில் பரிமாறப்பட்ட உணவின் ருசியைக் கூட உணர முடியாத அளவுக்கு அவள் உணர்ச்சி வசப்பட்டிருந்தாள்.

இருவரும் சாப்பிட்டு முடித்து விட்டுப் பக்கத்து அறைக்குள் வந்தார்கள். இரண்டு பேர் அமரக்கூடிய சோபா ஒன்றில் அவள் அமர்ந்தாள். எதிரே இருந்த ஒரு சோபாவில் அவன் அமர்ந்தான்.

''நளினி! இன்று மாதிரி நான் இவ்வளவு உற்சாகமாக ஒரு நாளும் இருந்ததில்லை'' என்றான் சம்பத்.

''நானும் அப்படித்தான்'' என்று பார்வையாலேயே சொன்னாள் நளினி. அதைப்புரிந்து கொண்ட சம்பத், மெதுவாக எழுந்து அவளிருந்த சோபாவில் அமர்ந்தான். மேஜை மீதிருந்த ஒரு பெரிய ஆல்பத்தை எடுத்து மடி மீது வைத்தவாறு விரித்தான்.

''என்னுடைய ஆல்பம்'' என்றான். அவள் ஆவலோடு படங்களைப் பார்க்கத் தொடங்கினாள்.

டென்னிஸ் பந்தயத்தில் சம்பத் பரிசுகள் வாங்கிய படங்கள் பல இருந்தன. அவன் ஒவ்வொரு பக்கமாகத் திருப்பினான். அவனுடைய படங்களை அவள் வெகுவாக ரசித்தாள்.

''உன்னுடைய படம் ஒன்று கொடேன் என் ஆல்பத்துக்கு'' என்றான்.

''ஐயோ ... என்னுடைய படம் ஒன்றும் நன்றாக இருக்காது'' என்றாள் நளினி.

''புகைப்படத்துக்கு ஏற்ற முகவெட்டு உனக்கு.''

''என்ன இருந்தாலும் நான் கறுப்புத் தானே?'' என்று நளினி கூறிய போது, அவளுடைய உள்ளத்தில் குமைந்து கொண்டிருந்த வருத்தம் வெளிப்பட்டது.

''கறுப்பு என்பது ஒரு குறையா? நளினி, அழகு என்பது நிறத்தில் இல்லை. கிளியோபாட்ரா கறுப்புதான். ஜூலியஸ் ஸீஸர்



மயங்கிக் கிடந்தானே! ஆண்டனி, ராஜ்யமே வேண்டாமென்று அவள் காலடியில் கிடந்தானே!'' என்ருன் சம்பத்.

நளினி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

''நளினி! உண்மையைச் சொல்கிறேன். உன்னுடைய முகத்திலிருக்கும் கவர்ச்சியை உன்னுடைய நிறம் ஒருபோதும் பாதிக்காது'' என்று கூறிவிட்டு சம்பத் அவளை இன்னும் நெருங்கிய போது, அவனுடைய புஜம், அவளுடைய புஜத்தில் பட்டது. அவனுடைய பார்வையின் கனிவிலும், பேச்சின் கவர்ச்சியிலும், ஸ்பரிசத்தின் இனிமையிலும் தன் வசமிழந்தாள். வராந்தாவிலிருந்து சன்னல் வழியாக நுழைந்த வாடைக் காற்று, அவர்களைச் சுற்றி வளைத்தது.

''காற்று பலமாயிருக்கிறது. சன்னலை அடைத்து விட்டு வருகிறேன்'' என்று எழுந்து சென்ற சம்பத், வராந்தாவுக்குச் சென்று சன்னலை மூடினுன். கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டு. வராந்தாவிலிருந்த மெயின் ஸ்விட்சில் கையை வைத்து, அதன் விசையை ஓசைப்படாமல் கீழே இழுத்தான். மறுகணம், மின்சார விளக்கு அனைத்தும் அணைந்து விட்டன.

''ஐயோ ...'' என்று பயத்திஞல் நளினி கூவியது கேட்டது.

''இந்த எலக்ட்ரிக் டிபார்ட்மெண்டே இப்படித்தான். அடிக்கடி கரண்ட் போய்விடும்'' என்று சொல்லிக் கொண்டே அறைக்குள் நுழைந்தான் சம்பத்.

இருட்டில் நளினியின் உருவம் தெரியவில்லை. எங்கும் நிசப்தம். தூரத்தில் யார் வீட்டு நாயோ ஊளையிட்டுக் கொண்டிருந்தது. நளினியை நோக்கி நடந்தான் சம்பத்.

25. சாட்சியத்தின் விலை

அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால் மாலையில் டாக்டர் ராஜகோபால், கிளினிக்குக்குப் போகவில்லை. அவருடைய மனைவியும் குழந்தைகளும் சினிமாவுக்குப் போயிருந்தனர். இரவு ஏழரை மணி சுமாருக்கு நிம்மதியாகச் செய்தித்தாளைப் பார்த்துக் கொண்டு இருந்தவர், ஒரு செய்தியைப் படித்ததும் அதிர்ந்து விட்டார். மோசடி செய்ததாகப் பல டாக்டர்கள் மதுரையில் கைது செய்யப்பட்டதாகச் செய்தி. அதைப் படிக்கும்போதே பயத்திஞல் அவர் உடல் நடுங்கியது. வியர்த்துக் கொட்டியது. செய்தி முழுவதையும் படித்துவிட்டுச் செய்தித் தாளை மடியில் போட்டவாறு சிந்தனையில் ஆழ்ந்தார். அந்தச் சமயத்தில் வாசலில் கார்ச் சத்தம் கேட்கவே வராந்தாவில் அமர்ந்திருந்த அவர் திரும்பிப் பார்த்தார். கருணுகரன், காரிலிருந்து இறங்கியது தெரிந்தது.

''சார்! என்னுடைய வாழ்த்துக்கள்'' என்று இரைந்து கூவினுர் ராஜகோபால்.

கருணுகரன் ஒன்றும் புரியாமல் விழித்தபடியே ஒரு சோபாவில் அமர்ந்தார்.

''உங்கள் மனைவி அன்று வெளியீட்டு விழாவில் பிரமாதமாகப் பேசினுள்'' என்ருர் ராஜகோபால்.

தம்முடைய மனைவியை டாக்டர் புகழ்ந்ததைக் கேட்டதும் கருணுகரனின் முகம் சுண்டியது. மதுரத்தைப் பற்றி அவர் பேசுவதே கருணுகரனுக்குப் பிடிக்கவில்லை. ''அதிருக்கட்டும். நான் சொன்னதைப் பற்றி யோசித்தீர்களா ?'' என்று கேட்டார்.

''அதில் யோசிக்க என்ன இருக்கிறது ?''

''டாக்டர், உங்களுடைய சாட்சியத்தைத்தான் எல்லோரும் நம்பியிருக்கிருேம்.''

''அதற்கு நான் என்ன செய்ய முடியும் ? பரிசோதனைக் குறிப்பிலுள்ளபடிதான் நான் சொல்ல முடியுமே தவிர, மாற்றிச் சொல்ல முடியுமா ?''

''மாற்றிச் சொல்ல வேண்டாம். உங்களுடைய அபிப்பிராயமாகச் சொல்வதில் சங்கடம் இருக்காதே !''

''எப்படி ?''

''அந்தப் பெண்ணை அவன் கற்பழித்திருக்கலாம் என்று சொன்னுல் போதும்.''

''அதை நான் கண்ணுல் பார்க்கவில்லை.''

''கண்ணுல் பார்க்க வேண்டும் என்ற அவசியமா ? மற்றச் சாட்சியங்களிலிருந்து யூகிக்க வேண்டியதுதானே ?''

''எப்படி யூகிக்க முடியும் ?''

''அவளை அவன் பலாத்காரம் செய்தபோது அவன் பிடிபட்டு இருக்கிருன். இது போதாதா, யூகிப்பதற்கு ?''

''போதும் என்ருல் ஜட்ஜ் அவ்விதமே யூகித்துக் கொள்ளட்டுமே, நான் ஏன் அது பற்றிச் சொல்ல வேண்டும் ?''

''டாக்டர்! இதில் மற்றச் சாட்சியங்கள் பலவீனமாயிருக்கின்றன. அவன் கற்பழித்ததாக அவள் சொல்கிருள். கண்ணுல் பார்த்தவர்கள் யாரும் இல்லை. அவள் சத்தம் போடவே அவன் ஓடியிருக்கிருன். அவன் ஓடியபோது பிடித்திருக்கிருர்கள். அவர்கள் இருவருக்கும் தொடர்பு இருந்த போது யாரும் பார்க்கவில்லை. அவள் சொல்லும் சாட்சி ஒன்றுதான் பலமாயிருக்கிறது.''

''அது போதாதா ?''

''போதாது. அவனைப் பிடித்த இருவருமே அவனுடைய குடும்பத்துக்கு வேண்டாதவர்கள். அவர்களுடைய சாட்சியம் எடுபடாது. உங்களுக்கு ஒரு சிரமமும் இருக்காது. பிராஸிக்யூட்டர் உங்களிடம் கடைசியில், 'உங்கள் பரிசோதனையிலிருந்து இவளை இவன் பலாத்காரம் செய்தான் என்று சொல்லலாமா?' என்று கேட்பார். நீங்கள் 'ஆம்' என்று சொன்னுல் போதும்.''

டாக்டர் யோசித்தார். கருணுகரன் தொடர்ந்து சொன்னுர்:

''டாக்டர்! வெளிப்படையாகச் சொல்லி விடுகிறேனே! உங்களுடைய பரிசோதனைக் குறிப்பில் பலாத்காரத்துக்கான அறிகுறிகள் எதுவும் இல்லை. அவள் உடலில் காயங்களோ அல்லது அவன் உடலில் காயங்களோ, அவள் எதிர்த்துப் போராடியதற்கான அறிகுறிகளோ எதுவும் இல்லை. இந்த நிலையில் அவளுடைய சாட்சியம் மட்டும் போதாது. நீங்களும் உதவி செய்தால்தான் பிராஸிக்யூஷன் பக்கம் வெற்றி கிடைக்கும்.''

''அப்படியானால், அவளோடு அவனுக்குத் தொடர்பு இல்லை என்கிறீர்களா?'' என்று டாக்டர் குழப்பத்தோடு கேட்டார்.

''அவளோடுதான் அவனுக்குத் தொடர்பு. ஆனால் அதில் பலாத்காரம் இல்லை.''

''அப்படியென்றால்?''

''சம்மதத்தின் பேரில் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.''

''ஐயோ! ஜட்ஜ் அந்த அபிப்பிராயத்துக்கு வந்துவிட்டாரா?''

''அப்படி வரவிடுவோமா? இது எங்களுக்கு மட்டும் தெரிந்த விஷயந்தானே! கடைசியில் அப்படி வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் உங்கள் உதவியை நாடுகிறோம்'' என்றார் கருணாகரன்.

டாக்டர் ராஜகோபால் யோசித்தார். பயமாயிருந்தது. கட்சித் தலைவரின் சொல்லைக் கேட்டுப் பின்னால் அவமானத்துக்கு உள்ளாகிவிடக் கூடாது என்று நினைத்தார். அருகில் கிடந்த செய்தித் தாள், காற்றில் படபடத்தது. அதில் வெளியாகியிருந்த செய்தி நினைவில் வந்து உறுத்தியது. பயம் சூழ்ந்து கொண்டது.

''அதை நான் சொல்ல முடியாது சார்! பரிசோதனையில் நான் கண்ட அறிகுறிகளை மட்டுந்தான் சொல்ல முடியும்'' என்றார் திடமாக.

''என்ன டாக்டர், திரும்பத் திரும்பச் சொல்கிறேன். ஒரே பிடிவாதமா யிருக்கிறீர்களே. இதில் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த கட்சித் தலைவர் அக்கறை கொண்டிருக்கிறார். நீங்கள் பிடிவாதம் பிடித்தால் பிறகு உங்களுக்குத்தான் கெடுதல்!''

''என்னை என்ன சார் செய்துவிட முடியும்?'' என்று இரைந்தார் டாக்டர்.

கருணாகரன் இலேசாகச் சிரித்தார். ''நீங்கள் இன்று மாலைச் செய்தித்தாளைப் பார்க்கவில்லையா?'' இதைக் கேட்டதும் டாக்டரின் உடல் சிலிர்த்தது.

''மதுரையில் பல டாக்டர்களைக் கைது செய்திருக்கிறார்கள். மத்திய அரசாங்க ஊழியர்களின் வைத்திய உதவி விஷயத்தில் அவர்கள் மோசடி செய்ததாக.''

''அதே மாதிரி நடவடிக்கையை இங்கும் எடுக்க ஏற்பாடு நடக்கிறது. 'மாவட்டத் தலைவரிடம் பல டாக்டர்களின் பெயர்கள் புகார்ப் பட்டியலில் இருக்கின்றன. அதில் உங்கள் பெயரும் இருக்கின்றன.''

''என்ன சார் மிரட்டுகிறீர்கள்?'' என்று டாக்டர் கோபத்தில் இரைந்தார்.

''நான் மிரட்டவில்லை. உண்மையைத் தான் சொல்கிறேன். மாவட்டத் தலைவரே லிஸ்டைக் காண்பித்து உங்கள் பெயரையும் காட்டினார்'' என்று கருணாகரன் கூறியதும் டாக்டரின் முகம் வெளுத்தது. பயத்தினால் உடல் நடுங்கியது.

''என்னுடைய பெயர் இருக்க முடியாதே'' என்றார். நாக்குக் குழறியது.

''உங்கள் பெயர், நீங்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்த பில்லின் நம்பர், மருந்துக் கடையின் பெயர் எல்லாமே அந்த லிஸ்டில் இருக்கின்றன. உங்களைப் போல் இன்னும் ஆறு அல்லது ஏழு டாக்டர்களின் பெயர்களும் இருக்கின்றன. ஸி. ஐ. டி. ரிப்போர்ட் சமர்ப்பித்திருக்கிறது. இப்போது நான் இங்கு வந்ததே மாவட்டத் தலைவர் அனுப்பித்தான். இந்தச் சமயத்தில் நீங்கள் அவருக்கு உதவி செய்யாவிட்டால் பிறகு அவர் உதவியை நீங்கள் பெற முடியாமல் போய்விடும்'' என்றார் கருணாகரன்.

''நான் உதவி செய்யமாட்டேன் என்று சொல்லவில்லையே? என் நிலைமையைச் சொன்னேன். நீங்கள் எப்படிச் சொல்ல வேண்டும் என்கிறீர்களோ அப்படிக் கோர்ட்டில் சாட்சியம் சொல்வதில் எனக்குச் சிரமம் ஒன்றுமில்லை. நான் பயப்படுவதெல்லாம் ஆவுடையப்பபிள்ளைக்குத்தான். என்னைக் குறுக்கு விசாரணை செய்கிறவர் என்னைப்

பிய்த்து எடுத்து விடுவார்'' என்றார் ராஜ கோபால், தணிந்த குரலில்.

''அந்தக் கவலையே வேண்டாம். நாளை அவர் கோர்ட்டுக்கு வரமாட்டார்.''

''ஏன்?''

''குளியல் அறையில் விழுந்து தொடை எலும்பு முறிந்து போய்க் கிடக்கிறார்.''

''ஐயோ.....எப்போது ?''

''கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான். வருகிற வழியில் அவரைப் பார்த்துவிட்டுத் தான் வருகிறேன்.''

''அப்படியானால், வழக்கை யார் நடத்து வார்கள் ?''

''அவருடைய ஜூனியர் சம்பத்!''

''அப்படியானால் எனக்குக் கவலையில்லை.''

''நாளை மத்தியானத்துக்கு மேல் உங்களை விசாரிப்பார்கள். அரை மணி நேரத்தில் விசாரணை முடிந்துவிடும்.''

''சரி. நான் கட்டாயம் வந்து விடுகிறேன்'' என்று டாக்டர் கூறியதும் கருணாகரன் திருப்தியோடு எழுந்தார்.

''நீங்கள் போகிற வழியில் மாவட்டத் தலைவரைப் பார்த்துவிட்டுப் போக வேண்டும்'' என்று வேண்டினார் டாக்டர்.

''நான் இப்போது நேரே அங்குதான் போகிறேன். நீங்கள் கவலையே படவேண்டாம். சி. ஐ. டி. லிஸ்டிலிருந்து உங்கள் பெயரை எடுக்கும்படி செய்து விடுகிறேன். யூ டோண்ட் ஒரி.....'' என்று கூறிவிட்டுக் காரில் ஏறினார் கருணாகரன். தம்முடைய சூழ்ச்சி பலித்துவிட்டதில் அவருக்குப் பரம திருப்தி. இந்த விஷயத்துக்கு மேலும் ஐந்நூறு ரூபாய் கொடுப்பதாகப் பேசநினைத்திருந்தார். ஆனால் டாக்டரை வேறுவிதத்தில் வீழ்த்தி விட்டதால் பஞ்சாயத்துப் போர்டு தலைவர் கொடுத்த ஆயிரம் ரூபாயை முழுசாகத் தாமே வைத்துக் கொள்ளலாம். தம்முடைய வலையில் டாக்டர் எவ்வளவு லகுவாக விழுந்து விட்டார் ! கருணாகரனுக்கு ஒரே உற்சாகம்.

காரைச் செலுத்திக் கொண்டு சம்பத் குடியிருந்த தெரு வழியாக வந்துகொண்டிருந்த போது, எதிரே 'ரெனால்ட்' கார் ஒன்று சீறிப் பாய்ந்தவாறு வருவதைக் கண்டதும் திடுக்கிட்டு ஓரமாகத் தம் காரை ஒதுக்கினார். எதிரே வந்த கார், கண்மண் தெரியாத வேகத்தில் அவரைக் கடந்து, தெரு முனையில் பலத்த சத்தத்துடன் திரும்பி மறைவதைக் கண்டார். கார் தம்மைக் கடந்தபோது காரைச் செலுத்திக் கொண்டு சென்றது நளினி என்பதை உணர்ந்தார்.

'என்ன அவசரம் ? ஏன் இப்படிக் கடும் வேகத்தில் ஓட்டிக் கொண்டு போகிறாள்.....?' என்று தமக்குள்ளேயே கேட்டுக் கொண்டார் கருணாகரன்.

(தொடரும்)

கலியுகக் கண்ணன்



தேங்காய் சீனிவாசனைப் பல படங்களில் 'காமெடி ரோல்'களில் பார்த்துப் பழகியவர்களுக்கு இப்படத்தில் அவர் ஏற்றிருக்கும் கதாநாயகன் பாத்திரம் வியப்பை அளிப்பதோடு களிப்பையும் அளிக்கும்.

கதையில், பிரமாதமான திருப்பம் எதுவும் இல்லாவிட்டாலும் கண்ணன் அவ்வப்போது சாம்புவின் கண்களுக்கு மட்டும் தோன்றி அறிவுரை கூறுவது, சாம்புவுடன் நேருக்கு நேர் வாதாடுவது, சாம்புவின் படகுக் காரை டிரைவர் இல்லாமல் ஓட்டிச் செல்வது ஆகியவைகளெல்லாம்படத்துக்குச்சுவையூட்டும்நிகழ்ச்சிகள்.

கதை, வசனம், பாடல்கள் ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றிருக்கும் வாலி பாராட்டுக்கு உரியவர். துவாபர யுகத்துக் கண்ணனைக் கலியுகத்தில் நம்முன் கொண்டுவந்து நிறுத்தி எல்லாம்இறைவன் செயல் என்னும் அரிய கருத்தை எளிய முறையில் காட்டியிருக்கிறார்.

சவுகார் ஜானகி சாம்புவின் மனைவி. நாத்திக வாதம் பேசும் கணவனை மடக்கிப் பேசும் திறமையோடு, வினயமும், குடும்பப் பாசமும் அவர் நடிப்பில் அற்புதமாக வெளிப்படுகின்றன. ஜெய சங்கர், ஜெயசித்ரா இருவரும் படத்தின் கவர்ச்சிக்கு உறுதுணையாயிருக்கின்றனர்.

நினைத்த இடத்தில் நினைத்தபோது தோன்றும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவுக்கும் சாம்புவுக்கும் இடையில் நடக்கும் வாக்குவாதங்களே படத்தின் ஜீவன். நீலகண்டன் கலியுகக் கண்ணன். அமைதியாக நடித்துத் தெளிவாகப் பேசிக் கையொலியைப் பெறுகிறார்.

புகழ்பெற்ற கிருஷ்ணன் பஞ்சு டைரக்ஷனில் வெளி வந்திருக்கும் ''கலியுகக் கண்ணன்'' அரிய கருத்துப் பொதிந்த வசனங்களையும் சுவையான நிகழ்ச்சிகளையும் கொண்ட நல்லதொரு பொழுதுபோக்குப் படம்.

—காந்தன்

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



26. ஏமாற்றம்

பெட்டியில் துணிமணிகளை அவசரமாக அடுக்கிக் கொண்டிருந்தான் சம்பத். அளவு மீறிய பீதியினால் அவனுடைய முகம் வெளுத்திருந்தது. இனி அவனால் அந்த ஊரில் வாழ முடியாது. ஆவுடையப்பபிள்ளையின் முகத்தில் இனி விழிக்க முடியுமா? அவனைப் பற்றி அவர் எவ்வளவு உயர்வாக எண்ணியிருந்தார்! எவ்வளவோ அன்பும் ஆதரவும் காட்டினாரே. சேச்சே, எவ்வளவு கேவலமாக நடந்து கொண்டான். அவனுடைய திட்டமே மிக்க கேவலமானதுதான். ஆனால் அது நிறைவேறியிருந்திருக்குமானால், அவனுடைய நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும். தன்னுடைய திட்டம் தோல்வியுற்றபோதுதான் அதனுடைய பயங்கரமும், ஆபத்தும் அவனுக்குப் புரியத் தொடங்கின.

அப்படி ஒரு திட்டம் தீட்டுவதற்குக் காரணம், அவனால் நளினியைப் புரிந்து கொள்ள முடியாமல் போனதுதான். அவனை அவள் விரும்புகிறாள் என்று தெரிந்திருந்தால், அந்தத் திட்டத்தைப் பற்றி அவன் சிந்திக்கக் கூட வேண்டியிருந்திருக்காது. ஆனால் அவள் அவனோடு மிக நெருங்கிப் பழகியும் அவனைக் காதலனாக ஏற்றதற்கான அறிகுறி எதையும் அவள் காட்டாததுதான் அவனை அந்தத் திட்டத்துக்குத் துணிய வைத்தது. எவ்விதத்திலாவது நளினியை அடைந்தே தீர வேண்டும் என்ற ஆசை வெறித்தனமாக அவனுள்ளே மாறியது.

எவ்விதம் அவளுக்குக் கணவனாவது ?— ஒன்று, அவளாக விரும்பி அவனைக் கணவனாக ஏற்க வேண்டும். அல்லது, அவள் அவனைக் கணவனாக ஏற்றுக் கொண்டு தீர வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையை உண்டாக்க வேண்டும்.

அவனை அவள் வலிய ஏற்பதற்கான அறிகுறியை அவன் காணவில்லை. அதனால்தான் சம்பத் திட்டமிட்டான். பலவந்தமாகவாவது கணவன் — மனைவி என்னும் உறவை ஏற்படுத்திவிட்டால், பிறகு அவனை வேறுவழியின்றி ஏற்றுத்தானே ஆகவேண்டும்?

தன்னுடைய திட்டம் நிறைவேறியபிறகு ஒரு சிறு நாடகமே நடித்துவிடவும் அவன் முடிவு செய்திருந்தான்.

அவள் காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுவான். அவள் கண்ணீர் சிந்தியபடி இருப்பாள். அல்லது கோபத்தால் அவனைச் சபித்துக் கொண்டிருப்பாள். ''நளினி, ஏதோ உணர்ச்சிவசப்பட்டுத் தவறு நடந்துவிட்டது. சந்தர்ப்பம் சதி செய்து நம் இருவரையுமே ஏய்த்து விட்டது. இருவருமே உணர்ச்சிவசப் பட்டுவிட்டோம். உன் மீது கொண்டுள்ள தீராத காதலை நெஞ்சில் சுமந்து கொண்டு இத்தனை நாட்கள் தவித்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு நளினி. இதற்காக நீ என்ன தண்டனை அளித்தாலும் நான் ஏற்கிறேன், நளினி'' என்பான். தேவையானால், இரண்டு சொட்டுக் கண்ணீரையும் வரவழைத்துக் கொள்ளலாம். அவளும் வேறு வழியில்லாமல் மன்னிக்கத்தான் வேண்டும். அதற்குப் பிறகு, அவனைத் தவிர வேறு எவனையும் கணவனாக ஏற்றுக் கொள்ள அவளால் முடியாது... ஆகவே, அவளே தன் பெற்றோரிடம் அவனைத் தான் மணக்க விரும்புவதாகக் கூறுவாள்....

இப்படித்தான் நடைபெறும் என்று நினைத்த சம்பத், திட்டம் படுதோல்வி அடைந்ததைக்கண்டதும் அதிர்ந்துவிட்டான். எவ்வளவு பெரிய ஏமாற்றம்......

மெயின் சுவிட்சை அணைத்துவிட்டு அறைக்குள் வந்ததும் இருட்டில் நளினியின் உருவம் தெரியவில்லை. வெளியே நிலவு காய்ந்து கொண்டிருந்தது என்றாலும், வராந்தா சன்னல் கதவுகளையும் வாசல் கதவுகளையும் சாத்தியிருந்ததால் வெளிச்சம் அறைக்குள் வர இல்லை. மேல் பக்கத்துச் சன்னல் திரையை ஊடுருவியபடி வந்த வெளிச்சம் மிகவும் கொஞ்சம்தான். ஆனால் அந்த வெளிச்சமே அவனுக்குப் போதுமானதாயிருந்தது. மெழுகுவத்தியை எடுக்கும் சாக்கில் அவளை நெருங்கி நின்றான்.

''இருட்டில் இவ்வளவு மங்கிய வெளிச்சத்தில் இருந்து பேசுவது ரசனையாகத்தான் இருக்கிறது இல்லையா?'' என்று கேட்டான் சம்பத்.

''மெழுகுவத்தி இல்லையா?'' என்று நளினி கேட்டாள்.

''மேஜையைத் திறந்து தேடுவதாகப் பாவனை செய்தான் சம்பத். பிறகு, ''வாயேன், வராந்தாவில் போய்ப் பேசிக் கொண்டிருக்கலாம். நிலவு இருக்கிறது'' என்று கூறியபடி மெல்ல அவளுடைய கரத்தைப் பற்றினான். நளினி திடுக்கிட்டுக் கையை உதறியதை உணர்ந்தான். மறுகணம் அவளுடைய தோளைப் பற்றினான். அவள் திகைப்புடன் ஏதோ சொன்னாள். அவளுக்கு ஏற்பட்டிருந்த திகைப்பு நீங்குவதற்குள் அவளை இறுக அணைத்தான். அதற்குப் பிறகுதான் அவன் எதிர்பாராத எதிர்ப்பு அவளிடமிருந்து வந்தது. அவள் திமிறினாள். ஆனால் சம்பத் விடவில்லை.

திட்டத்தின் கடைசிக் கட்டத்தை நெருங்கியாகி விட்டது. இனி பின்வாங்கினாலும் ஆபத்து. அவளைத் தப்ப விட்டு விட்டால் இனி அவனால் அந்த ஊரிலேயே வாழ முடியாது. துணிந்தாகி விட்டது. வெற்றி பெற்றே தீரவேண்டும் என்னும் வெறி அவனை ஆட்கொண்டது.

''என்ன இப்படி....சீ....'' என்று நளினி மறுத்தாள்.

''நளினி... ப்ளீஸ்... யாரும் வரமாட்டார்கள்.''

''விடுங்கள் என்னை.''

''உன்மீது எவ்வளவு காதலாயிருக்கிறேன் தெரியுமா?...''

''காதலாவது, மண்ணுவது...'' நளினி எதிர்த்தாள். ''விலகிப் போங்கள். இல்லை யென்றால் கூச்சல் போடுவேன்'' என்றாள். சம்பத் இலட்சியம் செய்யவில்லை.

''என்ன கூச்சல் போட்டாலும் இந்தக் காலனியில் யாரும் வரமாட்டார்கள்'' என்றான். தப்ப வழியில்லாமல் அகப்பட்டுக் கொண்ட மிருகம், தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நடத்தும் கடைசி எதிர்ப்பைப் போல் எதிர்த்தாள்; சீறினாள்; திமிறினாள். எதுவும் பயன்படவில்லை. அவனுடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டிருந்தது அவளுடைய தலை ஒன்றுதான். தலையைச் சட்டென்று தூக்கி நெற்றியினால் தன்னுடைய முகத்தை நெருங்கி வந்த அவனுடைய முகத்தில் வேகமாக மோதினாள். அவனுடைய மூக்கின் மீது பலமாய் அவள் தாக்கவே மிகுந்த வலியினால் அவனுடைய கண்கள் கலங்கின. தலைக்குள் விண்ணென்று இரைவது போல் இருந்தது. ஒரு கணம் அவனுடைய பலம் குறைந்து பிடி தளர்ந்தது. ஒரே உதறலில் அவனை உதறிவிட்டு விடுபட்டாள் நளினி. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து படிக்கட்டில் இறங்கத் தொடங்கி விட்டாள். அந்த இருட்டில் தட்டுத்தடுமாறியபடி இறங்கினாள். சம்பத் மூக்கிலிருந்து கொட்டிய ரத்தத்தைக் கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டு படிக்கட்டை நோக்கிப் பாய்ந்தபோது, அவள் படிக்கட்டின் கீழே இருந்த கதவைத் திறந்து கொண்டு காரை நோக்கி விரைந்ததைக் கண்டான். அவன் கீழே இறங்கி வருவதற்குள் நளினியின் கார் சீறிக்கொண்டு பாய்ந்து விட்டது. அப்போதுதான் சம்பத்துக்குத் தன்னுடைய நிலைமை புரியத் தொடங்கியது.



இன்னும் கொஞ்ச நேரத்தில் போலீஸ் வரும். அவனுடைய கையில் விலங்கை மாட்டுவார்கள். நாளைக் காலையில் எல்லாச் செய்தித் தாள்களிலும் அவனுடைய பெயர் அடிபடும். சே.... எவ்வளவு கேவலம். இனி இந்த ஊரில் அவன் தங்கினால் எந்த நிமிஷமும் ஆபத்துத்தான். என்ன செய்யலாம்...?

சம்பத் பரிதவித்தான். ஒன்றும் தோன்றாமல் வாசல் வராந்தாவிலேயே நின்றான். அங்கு தனியே நிற்கக்கூட அவனுக்குப் பயமாக இருந்தது. நேரே மொட்டை மாடிக்குப் போய் அங்கிருந்து தலைகீழாக விழுந்து செத்துப் போய்விட்டால் என்ன என்று நினைத்தான். போலீஸிடம் கைதாகி அவமானப் படுவதை விடச் செத்துப் போய்விடுவது நல்லது....

ஊரை விட்டே போய் விட்டால்...? கல்கத்தாவில் அவனுடைய மாமா ஒருவர் இருந்தார். கொஞ்ச காலம் அங்கு தலைமறைவாயிருந்து பிறகு பார்க்கலாமே. அப்படியே ஆபத்து நெருங்கினால், நக்ஸல்பாரி கம்யூனிஸ்டாக மாறிவிட்டால் போகிறது...

கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டரையாகிக் கொண்டிருந்தது. அது நளினி கொடுத்த கடிகாரம். அதன் அழகை ரசிக்கும் நிலையில் அப்போது அவன் இல்லை. பத்து மணிக்கு ஒரு ரயில் வண்டி புறப்படுகிறது. அதில் போய்ப் பிறகு, கல்கத்தாவுக்குச் சென்றுவிடலாம் என்று முடிவு செய்தான். பரபரப்புடன் மாடிப் படிக் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு மாடிக்குப் போய் மெயின் சுவிட்சைப் போட்டான். துணிமணிகளைப் பெட்டிக்குள் திணித்தான். நெஞ்சு படபடத்துக் கொண்டிருந்தது. எண்ணங்கள் சுழன்று கொண்டிருந்தன.

இதற்குள் வீட்டுக்குப் போயிருப்பாள். அப்பாவிடம் சொல்வாள். அவர் போலீஸுக்குப் போன் செய்வார். போலீஸ் இங்கு வந்து சேர எப்படியும் அரை மணி நேரமாவது ஆகும்....

கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டேமுக்கால். அந்தக் கடிகாரத்தை மேஜையின் மீது ஓங்கி அடித்து நொறுக்க வேண்டும் என்ற ஆத்திரம் வந்தது. எதிரே இருந்த கண்ணாடியைப் பார்த்தான். திடுக்கிட்டான். கிழிந்த சட்டை, அதில் மூக்கிலிருந்து கொட்டிய ரத்தக் கறை. தலை கலைந்து பைத்தியக்

காரனைப் போல் தோற்றமளித்த தன்னுடைய உருவத்தைப் பார்த்தே பயந்து போனான். அவசரமாகச் சட்டையைக் கழற்றிவிட்டு வேறு உடை மாற்றிக் கொண்டான். மேஜை மீது நளினி விட்டுச் சென்ற அவளுடைய கைப் பை இருந்தது. அதை எடுத்துத் தன்னுடைய பெட்டிக்குள் போட்டான்.

மணியைப் பார்த்தான். எட்டு ஐம்பது. மாடிப் படிக் கதவை யாரோ படபடவென்று தட்டுவது கேட்டுத் திடுக்கிட்டான்.

ஐயோ, அதற்குள் போலீஸ் வந்துவிட்டதே என்று பதறினான். உடல் வியர்த்தது. தட்டும் ஓசை தொடர்ந்து கேட்டது. பயத்தினால் இருதயம் மேலே கிளம்பித் தொண்டையில் அடைத்துக் கொள்வது போலிருந்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு படி இறங்கினான். கால்கள் தள்ளாடின. சுவரைப் பிடித்தவாறு இறங்கினான். கண்கள் இருளுவது போலிருந்தது.

''யாரது....?'' பயத்தினால் சத்தம் வாயிலிருந்து வெளிவரவில்லை. உதட்டோடு நின்றுவிட்டது. மீண்டும் முயற்சி செய்து இரைந்து கேட்டான். ''யாரது?''

''ஐயா.... சம்பத் ஐயா....'' — ஆவுடையப்ப பிள்ளையின் குமாஸ்தாவின் குரல் அது. சம்பத்தின் பயம் கொஞ்சம் குறைந்தது. ஆனால் அதற்குள் ஆவுடையப்ப பிள்ளைக்கு விஷயம் எப்படித் தெரிந்தது? நளினியின் அப்பா போன் செய்திருப்பார். எப்படியோ போலீஸ் வரவில்லை....

மாடிப் படிக் கதவைத் திறந்தான். வெளியே வக்கில் குமாஸ்தா நின்று கொண்டிருந்தார்.

''என்ன குமாஸ்தா பிள்ளை?'' — சம்பத் கேட்டான். குரலில் நடுக்கம் இருந்தது.

''நம்ம ஐயா கீழே விழுந்து எலும்பு முறிந்து விட்டது. உங்களை உடனே வரச் சொன்னார்கள்'' என்றார் குமாஸ்தா.

சம்பத் நிம்மதியாக ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். வேட்டியின் நுனியால் முகத்து வியர்வையைத் துடைத்தான்.

''எங்கே விழுந்தார்?''

''குளியலறையில். கட்டுப் போட்டாயிற்று. வீட்டில்தான் படுத்திருக்கிறார். உங்களை உடனே வரச் சொன்னார்கள்'' என்றார் குமாஸ்தா.

சம்பத் சற்று யோசித்தான். ரயில் வண்டி பத்து மணிக்குத்தானே? ஆவுடையப்ப பிள்ளையைப் பார்த்துவிட்டு அங்கிருந்தே அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் ரயிலடிக்குப் போய்விடலாம்.

''நீங்கள் எப்படி வந்தீர்கள்?''

''சைக்கிளில்'' என்றார் குமாஸ்தா.

''சரி, நீங்கள் போங்கள். நான் வருகிறேன். போகும்போது இந்தத் தெருத் திருப்பத்திலிருந்து ஒரு டாக்ஸியை இங்கே அனுப்பி விட்டுப் போங்கள்'' என்றான்.

சற்று நேரத்தில் வாசலில் டாக்ஸியின் ஓசை கேட்டது. சம்பத் பெட்டியுடன் கீழே இறங்கினான். மாடிக் கதவைப் பூட்டிவிட்டு டாக்ஸியில் ஏறினான். ஆவுடையப்ப பிள்ளையின் வீடு வந்ததும், ''கொஞ்சம் காத்திரு. ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக வேண்டும்'' என்று டிரைவரிடம் கூறிவிட்டு ஆவுடையப்ப பிள்ளையின் வீட்டுக்குள் சென்றான்.

வீட்டுக்குள் ஒரு கட்டிலில் பிள்ளை படுத்திருந்தார். இடுப்பிலிருந்து கால் முழுதும் ஒரு பெரிய கட்டு போட்டிருந்தது. சம்பத் அவர் பக்கத்தில் அமர்ந்தான்.

''குளியலறையில் வழுக்கி விழுந்து விட்டேன். தொடை எலும்பு முறிந்து விட்டது'' என்றார்.

சம்பத், அப்போதிருந்த நிலையில் அவருக்காக வருத்தப்படக்கூட முடியவில்லை. ஆனால் வலிய முகத்தில் சோகத்தை வரவழைக்க வேண்டிய சங்கடமும் இல்லை. ஏற்கனவே பீதியினாலும், பதற்றத்தினாலும் அவன் முகம் வெளிறியிருந்தது.

''நாளை அந்தக் கேஸை நீதான் நடத்த வேண்டும்'' என்றார் ஆவுடையப்ப பிள்ளை.

''ஐயோ நானா...!''

''வேறு வழியில்லை. நான் கோர்ட்டுக்குப் போக முடியாது. நீதான் நடத்த வேண்டும்.''



இந்தச் சமயத்தில் போன் மணி அடித்தது. அருகில் இருந்த குமாஸ்தா போனை எடுத்துக் கேட்டார். பிறகு போனைப் பிள்ளையிடம் நீட்டியபடி, ''நளினி!'' என்றார்.

அந்தப் பெயரைக் கேட்டதும் சம்பத் திடுக்கிட்டான். அந்த இடத்தை விட்டு ஒரே பாய்ச்சலில் வெளியே ஓடிவிட வேண்டும் என்னும் உணர்வு தோன்றியது. ஆனால் செயலிழந்து வெளிறிய முகத்துடன் ஆவுடையப்ப பிள்ளையை வெறிக்கப் பார்த்தான். கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. பிள்ளை போனில் பேசினார்.

''யார் நளினியா? குளியலறையில் விழுந்து விட்டேன். போன் செய்யும்போது நீ வீட்டில் இல்லை.... எங்கே? டின்னருக்கா? சம்பத்தின் பிறந்த நாள் டின்னரா?'' என்று வியப்புடன் கேட்டவர், போனின் வாயைப் பொத்திக் கொண்டு சம்பத்தைப் பார்த்தார். ''என்னிடம் நீ சொல்லவில்லையே? நீ டின்னருக்குக் கூப்பிட்டிருந்தால் நான் விழுந்திருக்கக் கூட மாட்டேன்'' என்று கூறிச் சிரித்தார். பிறகு, போனில் மீண்டும் பேசினார்.

''ஓஹோ... இப்போதுதான் வந்தாயா? டின்னரில் கூட்டம் அதிகமோ?... மொத்தமே நான்கு பேர்தானு?... சம்பத் சிக்கனக்காரன்தான்....''

சம்பத்தைப் பார்த்துச் சிரித்தார். சம்பத், வியப்புடன் அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தான். நளினி, நடந்ததை மறைத்து விட்டாள்; அவனைக் காட்டிக் கொடுக்கவில்லை என்று உணர்ந்ததும் அவன் முகத்தில் மலர்ச்சி தோன்றியது. பீதி மறைந்தது. நீண்ட பெரு மூச்சு விட்டான்.

''நாளைக்கு அவன்தான் கேஸை நடத்த வேண்டும். நான் கோர்ட்டுக்குப் போக முடியாது. நீயும் அவனோடு சேர்ந்து உதவி செய்... சரிசரி... என்னைப் பார்க்க இப்போதே வர வேண்டுமென்பதில்லை. நான் நன்ருகத்தான் இருக்கிறேன். காலையில் வா போதும். என்ன தலை வலியா? ஜுரமும் இருக்கிறதா? ஏன்? சம்பத் டின்னர் கொடுத்த பலனு?... ஓ.... ஹோ...ஹோ... சரி, நன்ருக ஓய்வு எடுத்துக்கொள்'' என்று சிரித்தபடியே போனைக் குமாஸ்தாவிடம் கொடுத்தார் ஆவுடையப்ப பிள்ளை. சம்பத்தைப் பார்த்து, ''என்னப்பா, நீ கொடுத்த டின்னரில் அவளுக்குத் தலை வலியும் ஜுரமும் வந்து விட்டதா என்ன?'' என்று கேட்டார். சம்பத் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான்.

''காலையில் சீக்கிரமாக வந்துவிடு. கேஸுக்கு வேண்டிய குறிப்புக்களைத் தருகிறேன். குறுக்கு விசாரணைக்கு வேண்டிய கேள்விகளையும் குறித்துத் தருகிறேன்.''

''சார்! இந்தக் கேஸில்...''

''ஒன்றும் பயப்படாதே. முடிகிற மட்டும் பார்ப்போம். வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாதே. காலையில் வா'' என்ருர், ஆவுடையப்ப பிள்ளை.

சம்பத், மன நிம்மதியோடு வாசலில் காத்திருந்த டாக்ஸியில் ஏறினுன்.

''வந்த இடத்துக்கே விடப்பா'' என்ருன்.

''சார்! ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக வேண்டும் என்றீர்களே?'' என்று கேட்டார் டாக்ஸி டிரைவர்.

''பயணம் ரத்தாகி விட்டது'' என்று கூறி விட்டு இருக்கையில் சாய்ந்து கொண்டான். அவனுள் ஏற்பட்டிருந்த தவிப்பு இன்னும் மாறவில்லை. அவனுல் எதையும் நம்பக்கூட முடியவில்லை. நளினி அவனைக்காட்டிக்கொடுக்காமல் ஆவுடையப்ப பிள்ளையிடம் பேசியதை நினைத்துப் பார்த்தான்.

இதை வெளியில் சொன்னுல் அவளுக்குத் தானே கேவலம்? அதனுல்தான் ஒன்றும் நடவாதது போல் மறைத்து விட்டாள். நல்ல வேளை பிழைத்தேன். என் மானமும் கப்பலேறவில்லை.

சம்பத்தின் கவலையும் பயமும் ஒரு நீண்ட பெருமூச்சாக அவனை விட்டு வெளியேறின. மறு கணமே மற்ருெரு கவலை அவனைச் சூழ்ந்து கொண்டது.

இனி நளினி அவனுக்குக் கிடைக்க மாட்டாள். அவனுடைய முகத்தில் கூட விழிக்க மாட்டாள். 'கெடிலாக்' காரையும், பங்களாவையும், சுக போக வாழ்வையும் கனவில் கண்டுகொள்ள வேண்டியதுதான். அவனுக்குக் கொடுத்து வைத்திருப்பதெல்லாம் நானூறு ரூபாய் வருமானம்தான்.... அது போதும். சிறைக்குப் போகாமல் தப்பித்தது போதாதா?

27. மயக்கம்

நவரசம் பத்திரிகைக் காரியாலயத்தில் ஆசிரியர் சந்தானம் உற்சாகத்தோடு தமது வேலையில் ஈடுபட்டிருந்தார். யாரோ ஒரு கதாசிரியனிடமிருந்து வந்திருந்த ஒரு நாவலைத் திருடுவது எப்படி என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அதில் அவர் திறமைசாலி. புகழ் பெருத கதாசிரியர்கள் அனுப்பும் கதைகளை ஆழ்ந்து படிப்பார். பிறகு, கதைகளின் கருத்துக்களைக் குறித்துக்கொண்டு கதைகளை அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்பி விடுவார். கதாநாயக நாயகிகளின் பெயர்களையும் ஓரிரு சம்பவங்களையும் மட்டும் மாற்றியமைத்து அதே கதைகளைத் தம்முடைய பெயரில் நவரசம் பத்திரிகையில் பிரசுரித்து விடுவார். ஒருவேளை கதையின் மூலகர்த்தா அதைத் தெரிந்துகொண்டாலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஏமாற்றத்தில் பொருமிக் கொள்ளலாம். பாவம், அந்த அப்பாவி எழுத்தாளர்கள் தங்களுடைய கையெழுத்துப் பிரதிகளை உரிமைப் பதிவு செய்ய முடியும் என்பதையோ அதற்கென்று தில்லியில் ஓர் அலுவலகம் உண்டு என்பதையோ உரிமைப் பதிவுக்கான கட்டணம் இரண்டே இரண்டு ரூபாய்தான் என்பதையோ அப்படிப் பதிவு செய்துகொண்டால், யாரும் அதைத் திருடமுடியாது என்பதையோ அப்படியே திருடிவிட்டாலும்கூடப் பதிவைச் சாட்சியமாகக் கொண்டு திருடியவர் மீது நஷ்டஈடு வழக்குத் தொடரலாம் என்பதையோ அறிய மாட்டார்கள். அந்தத் தைரியத்தில்தான் நவரசம் ஆசிரியர் சந்தானம் பல தொடர்கதைகளையும் தம்முடைய பெயரில் நவரசம் பத்திரிகையில் பிரசுரித்துப் புகழ் அடைந்தார். இப்போதும் அந்தத் தொழிலில்தான் ஈடுபட்டிருந்தார். ஆனுல் அன்றிருந்த உற்சாகத்தில் அவரால் அந்த நாவலைத் தொடர்ந்து படிக்க இயலவில்லை. கையெழுத்துப் பிரதியை எடுத்து மேஜைக்குள் போட்டார். மனம் பல சிந்தனைகளில் போதை யடைந்து கொண்டிருந்தது.

அன்று மத்தியானம் கனகாவின் வீட்டில் அவருக்கு விருந்து. அவள் வருந்தி அழைத்ததன் பேரில் விருந்துக்குப் போக ஒப்புக் கொண்டார். அப்படி அடிக்கடி அவருக்குப் பெரிய பணக்காரர்களின் வீடுகளில் விருந்து நடைபெறுவது உண்டு. அந்த வீட்டுப் பெண்களின் கதைகளை நவரசம் பத்திரிகையில் பிரசுரித்ததற்காக அவரைக் கௌரவப் படுத்த நடத்தப்படும் விருந்துகள் அவை. அந்த மாதிரி பெரிய தொழிலதிபர்கள், செல்வாக்கு மிகுந்த வியாபாரிகள் ஆகியோரின்

பழக்கமும் அவருக்குத் தேவைப்பட்டது. நவரசம் பத்திரிகையில் ஓரிரண்டு கதைகளைப் பிரசுரித்துவிட்டு அவருடைய தம்பிகளுக்கும், மைத்துனர்களுக்கும் பல பெரிய கம்பெனிகளிலும் தொழிற்சாலைகளிலும் உயர்ந்த பதவிகளை வாங்கிக் கொடுக்க முடிந்தது. அவர் ஒரு பெண்ணைக் கதாசிரியராக அறிமுகப்படுத்தினார் என்றால், ஏதாவது ஒரு விதத்தில் அவருக்கு லாபம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

விருந்து முடிந்து அவர் திரும்பியபோது குதூகலத்தால் அவர் மனம் விம்மியது. அவர் எந்த எண்ணத்தோடு கனகாவை அணுகினாரோ, அந்த எண்ணம் கைகூடுவதில் சங்கடமேதும் இல்லை என்பதை அந்த விருந்தின்போது கனகாவின் பேச்சாலும் பார்வையாலும் புரிந்து கொண்டார். தம் தூண்டிலில் அவளை எப்போது வேண்டுமானாலும் பிடித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் அவர் விடைபெற்றுக் கொண்டு வந்தார்.

நினைவுகளிலிருந்து விடுபட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி இரண்டரை. இன்னும் அரை மணி நேரத்தில் கோமளம் வந்துவிடுவாள் என்ற எண்ணம் அவருள் பரபரப்பை உண்டுபண்ணியது. காரியாலயத்தில் அப்போது யாரும் இல்லை. அன்று விடுமுறை நாள். காவலாளியான ஒரு கூர்க்காவைத் தவிர அங்கு வேறு யாரும் இல்லை. சந்தானத்தில் பரபரப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. அவருடைய நெடுநாளைய ஆசை அன்று எப்படியும் நிறைவேறிவிடும் என்று நம்பினார். எப்படியும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்னும் வெறி இருந்தது. நிறைவேற்றுவதில் மிகுந்த கஷ்டம் இருக்காது என்றும் நம்பினார். வாசலில் கூர்க்காவின் செருப்பொலி கேட்டது. கூர்க்கா அறைக் கதவைத் தட்டினான். சந்தானம் உள்ளே வரச் சொன்னதும் கூர்க்கா உள்ளே வந்து யாரோ ஓர் எழுத்தாளரின் பெயரைச் சொல்லி, வெளியே அவர் காத்திருப்பதாகக் கூறினான். சந்தானம் கடிகாரத்தைப் பார்த்தார். கோமளம் வருவதற்கு இன்னும் அரை மணிநேரம் இருந்தது. அதற்குள் அந்த ஆசிரியரிடம் பேசவிருந்த பேரத்தை முடித்துவிடலாம் என்று நினைத்தார். அவரை உள்ளே அனுப்பி வைக்கும்படி உத்தர விட்டார்.

அறைக்குள் வந்த எழுத்தாளரைக் கை கூப்பி வணங்கி வரவேற்றார்.

''நாவலைப் படித்தீர்களா?'' என்று எழுத்தாளர் கேட்டார்.

''ஓ...படித்தேன். நன்றாக இருக்கிறது'' என்று கூறிவிட்டு ஏதோ யோசிப்பது போல் இருந்தார், சந்தானம்.

எழுத்தாளர் மகிழ்ச்சிப் பெருக்கால் பூரித்துப் போனார். தம் நாவலை ஆசிரியர் ஏற்றுக் கொண்டார் என்பதனால் ஏற்பட்ட மகிழ்ச்சி.

''பொதுவாக இந்த அளவுள்ள தொடர் கதைகளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்போம்'' என்று சந்தானம் சொன்னதும், எழுத்தாளர் திகைத்தார். நவரசம் பத்திரிகையில் மூவாயிரத்துக்குக் குறையாமல் கொடுப்பதாகக் கேள்விப்பட்டிருந்தார்.

''ஆனால் இதில் ஒரு சிக்கல் இருக்கிறது'' என்று தொடர்ந்தார் சந்தானம்.

கௌரவக் குறைச்சல்!

எட்டு ஆண்டு காலம் (64 முதல் 72 வரை) ஜப்பான் நாட்டின் பிரதம மந்திரியாக இருந்த திரு ஸாட்டோவுக்குச் சமாதான நோபெல் பரிசு வழங்கப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடந்திருக்கிறது. அவர் சமாதான நோபெல் பரிசு பெறுகிறார் என்ற செய்தியை அக்டோபரில் முதல் தடவையாகக் கேள்விப்பட்டபோது பெரு வாரியான ஜப்பானிய மக்களே துணுக்குற்றனர். இதற்குக் காரணம் திரு ஸாட்டோ, உலகச் சமாதானத்துக்காக என்ன செய்தார் என்பது ஜப்பானிய மக்களுக்கே தெரியாதது தான். பின் எப்படி அவருக்கு இந்தப் பரிசு கிடைத்தது? எல்லாம் பணம் செய்யும் கூத்துத்தான்!



திரு ஸாட்டோ இப் பரிசு பெற வேண்டும் என்பதில் ஜப்பானில் ஒரு பெரும் பணக்காரத் தொழில் பிரமுகர் அக்கறை கொண்டாராம். ஐ. நா. சபையின் முன்னாளைய ஜப்பானிய பிரதிநிதி தொஷி கோஜுகாசே என்பவர் ஸ்விடன் நாட்டுக்குப் பறந்து வந்து, நோபல் பரிசு வழங்கும் குழுவினரிடம் ஸாட்டோவுக்கு இப்பரிசு வழங்க வேண்டும் என்று ரொம்பத் தூரம் பேசினாராம். இதை நோபல் பரிசுக் குழுவின் டைரக்டரே ஒப்புக் கொண்டிருக்கிறார். இத்தகைய பரிசு பெறுபவர் ஏதாகிலும் புத்தகம் எழுதியிருக்க வேண்டுமாம். ஆனால் ஸாட்டோ புத்தகமோ, கட்டுரையோ எழுதியவரல்ல. ஆனால் அந்த விதியைப் பூர்த்தி செய்ய அவசர அவசரமாக அவர் எவ்வெப்போதோ உலக சமாதானத்தைக் குறித்துப் பேசிய பேச்சுக்களைத் தொகுத்துப் புத்தகமாக 500 பிரதிகள் வெளியிட்டனராம்! எப்படியிருக்கிறது கதை?

நோபல் பரிசின் கௌரவம் உலக மக்களிடை எப்படியெல்லாம் குறைக்கப்பட்டு வருகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

எழுத்தாளர் பதறிப் போனார். அந்த ஆயிரம் ரூபாய்கூட வராமல் போய்விடுமோ என்று நினைத்தார். பீதியுடன் சந்தானத்தை வெறிக்கப் பார்த்தார்.

''பத்திரிகை அதிபர் செட்டியார் இருக்கிறாரே, வருமான வரி விஷயத்தில் கறார்ப் பேர்வழி. இந்தக் கதையைப் பற்றி அவரிடம் பேசினேன். ஆயிரமாவது கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தேன், சம்மதித்து விட்டார். ஆனால் வருமான வரிக் கணக்குக்காக ஒரு சிறு ஏற்பாடு'' என்று கூறிவிட்டு எழுத்தாளரை உற்றுப் பார்த்தார், ஆசிரியர். பிறகு சொன்னார்: ''வேறு ஒன்றுமில்லை.... மூவாயிரம் ரூபாய் நீங்கள் பெற்றுக் கொண்டதாக ரசீது கொடுத்தால் போதும். ஆயிரம் ரூபாயை நீங்கள் உடனே பெற்றுக் கொள்ளலாம். இதெல்லாம் வருமான வரிக்காக உள்ள ஏற்பாடுகள்.''

''ஓ, அதற்கென்ன, அப்படியே ரசீதில் கையெழுத்துப் போட்டுத் தருகிறேன்'' என்றார் எழுத்தாளர்.

''அப்படியானால் சங்கடமே இல்லை. நீங்கள் நாளைக் காலையில் வாருங்கள். எங்கள் பத்திரிகை அதிபரிடம் சொல்லிப் பணம் வாங்கிக் கொடுக்கிறேன்.''

''ரொம்ப நன்றி'' என்று விடைபெற்றுச் சென்றார் எழுத்தாளர்.

ஆசிரியர் சந்தானம் உற்சாக மடைந்தார். சிறு பேரத்தின் மூலம் தமக்கு இரண்டாயிரம்

ஜிகு ஜிகு ஜிகு ஜிகு...

'ஆராதனா'வின் தமிழ் வடிவமான 'சிவகாமியின் செல்வன்' படத்தில் இடம் பெறும் பாடல் - 'உள்ளம் ரெண்டு ஒன்றையொன்று'.

இப்பாட்டை மேடைகளில் எம். எஸ். விசுவநாதன் குழுவினர் பாடும்போது, ரயில் போகும் சத்தத்தைக் காட்டுவது எப்படித் தெரியுமா ?

உப்புத் தாள்கள் இரண்டை வைத்துத் தாளத்துக்கேற்ப, உரசி உரசி எழுப்பும் ஒலியே 'ஜிகு ஜிகு, ஜிகு ஜிகு!'

- ஏ. சுவாமிநாதன்

ரூபாய் கிடைத்து விட்ட குதூகலம். நாளை அந்த அப்பாவி எழுத்தாளனுக்கு ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டுப் பாக்கி இரண்டாயிரத்தை எடுத்துக் கொள்ளலாம். செட்டியாருக்கு மூவாயிரத்துக்கு ரசீது போய்விடும். இந்தமாதிரிப் பேரங்களை யெல்லாம் புகழ் பெற்ற எழுத்தாளர்களிடம் செய்ய முடியாதாகையால் நவரசம் பத்திரிகையில் ஆரம்ப கால எழுத்தாளர்களின் நாவல்கள் தாம் அடிக்கடி தொடராக வெளி வந்து கொண்டிருந்தன. "புதிய இளம் எழுத்தாளர்களை ஆதரிக்கும் ஒரே பத்திரிகை நவரசம்தான்; ஒரே ஆசிரியர் சந்தானம் தான்" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

மணி மூன்றாகியதும் சந்தானத்தின் பரபரப்பு அதிகமாகியது. அறையை விட்டு மாடி வராந்தாவுக்கு வந்து தெருவைப் பார்த்துக்கொண்டு நின்றார். பத்து நிமிடங்களில் கோமளத்தின் கார், காரியாலயத்தின் போர்டிகோவில் நுழைந்தது. சந்தானம் விரைந்து கீழே சென்று கோமளத்தை வரவேற்றார். அவளை இறக்கிவிட்டுக் கார் சென்றுவிட்டது.

"கொஞ்சம் நேரமாகிவிட்டது" என்று கூறி, படிகளில் ஏறினாள் கோமளம்.

"காரணத்தைப் புரிந்து கொண்டேன்" என்று கூறிப் புன்னகை புரிந்தார் ஆசிரியர்.

"எப்படி?" என்று கூறி ஏறிட்டுப் பார்த்தாள்.

"உங்கள் அலங்காரத்திலிருந்து. அதற்கே இரண்டு ம்ணி நேரமாகியிருக்கும்" என்றார். அவள் சிரித்தாள். அதன் கவர்ச்சியில் ஆசிரியரின் இரத்த அழுத்தம் கூடியது. அவளை அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றார்.

"போட்டோ எடுக்க வேண்டும் என்றீர்களே. அதற்காகத்தான் இந்த அலங்காரம்" என்று கூறியபடியே ஆசிரியரின் அறைக்குள் நுழைந்தாள் கோமளம்.

"தேவையே இல்லை. கடவுள் உங்களைப் படைக்கும்போதே அழகோடு படைத்துவிட்டார்" என்று அவர் கூறியதும் வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது.

"என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று சந்தானம் கேட்டார்.

அறையின் மூலையில் இருந்த ஒரு பிரிஜிடயரைத் திறந்து ஒரு ஃபாண்டா பாட்டிலையும், ஒரு கண்ணாடித் தம்ளரையும் எடுத்து மேஜை மீது வைத்தார். ஃபாண்டாவின் மூடியைத் திறந்து தம்ளரில் கொஞ்சம் ஊற்றிக் கோமளத்தின் முன் வைத்தார்.

"உங்களுக்கு?" கோமளம் கேட்டாள்.

"ஓ..... நானும் சாப்பிடப் போகிறேன்" என்று தட்டையான பாட்டிலையும் ஒரு தம்ளரையும் எடுத்து மேஜையின் மீது வைத்தார்.

"என் எழுத்தில் பாதிக்கு மேல் நீங்கள் எழுதிச்சேர்ப்பதுதான்" என்றாள் கோமளம்.

ஒரு சோடா பாட்டிலை எடுத்தார் சந்தானம்.

"அதனால் என்ன? உங்களுக்காகத்தான் அப்படிச் செய்கிறேன். கதையில் வரும் சில கட்டங்களைத் தத்ரூபமாக விவரிக்க நீங்கள் கூச்சப்படுகிறீர்கள். நான் அதை விவரித்து எழுதிக் கதையோடு சேர்க்கிறேன். எடிட்டிங் என்பது இதுதான்" என்று கூறியபடியே பாட்டிலைத் திறந்தார். குபீரென்று ஒரு நெடி பரவியது. கோமளம் முகத்தைச் சுளித்தாள்.

"இப்படி எடிட் செய்வதால்தான் கதையில் சுவை ஏறுகிறது. உங்களுக்குப் புகழ் கிடைக்கிறது. உங்கள் புகழ் ஒன்றுதான் என் லட்சியம்" என்று அவர் கூறியதும் கோமளம் நன்றிப் பெருக்கால் மெய்சிலிர்த்தாள்.

"நான் மது அருந்துவதில் உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே?" என்று அவளுடைய அனுமதியைக் கோரினார் கனவான் போல.

"நோ, நோ" என்றாள் மரியாதையுடன்.

"எழுதுவதற்கு மது மிகவும் அவசியம். உண்மையான எழுத்தாளன் ஒவ்வொருவனும் இதை ருசிக்கத்தான் வேண்டும். மதுவையும் அதன் இனிமையையும் உணர்ந்துகொள்ளாமல் எந்த ரசனையையும் பற்றி ஓர் எழுத்தாளன் பூரணமாக எழுதவே முடியாது. ஒரு முறை சாப்பிட்டுப் பாருங்கள். எவ்வளவு உற்சாகமாக இருக்கும் தெரியுமா?" என்றார் ஆசிரியர் சந்தானம்.

"வேண்டாம் வேண்டாம்" என்று கலவரமடைந்து கண்ணாடித் தம்ளரை மூடிக் கொண்டாள் கோமளம்.

"பாண்டாவோடு கலந்து சாப்பிடுங்கள். ருசியாயிருக்கும். கொஞ்சமாய் ஊற்றுகிறேன்!" என்று கூறியவாறே தம்ளரை மூடியிருந்த அவள் கையைப் பற்றி மெதுவாக விலக்கியபடி தம்ளரில் சிறிது விஸ்கியை ஊற்றினார்.

"பயப்படாமல் ருசி பாருங்கள். இன்று நீங்கள் வீட்டுக்குப் போனதும் உங்கள் மூட் பிரமாதமாயிருக்கும். ஒரு நாவலே உங்கள் கற்பனையில் தோன்றிவிடும். உங்கள் தொடர் கதைக்காக வாசகர்கள் ஏங்கிக் கிடக்கிறார்கள்" என்றார் ஆசிரியர்.

கோமளம் தம்ளரிலிருந்து கொஞ்சம் உறிஞ்சினாள். தொண்டையில் எரிவதுபோல் இருந்தது. முகத்தைச் சுளித்தாள்.

"முதலில் அப்படித்தான் இருக்கும். ஆரம்பத்தில் உறிஞ்சவே கூடாது. ஒரே மடக்காக விழுங்கிவிட வேண்டும். மடமடவென்று முழுவதையும் குடித்துவிடுங்கள். ஒன்றும் செய்யாது. உற்சாகமாகத்தான் இருக்கும்." ஆசிரியர் தூண்டினார்.

கோமளம், ஒரே மூச்சில் தம்ளரிலிருந்த பானம் முழுவதையும் கஷாயம் குடிப்பது போல் குடித்துவிட்டுத் தம்ளரை மேஜை மீது வைத்தாள். தொண்டை எரிவது போன்ற உணர்ச்சி தோன்றவே காறிக் கொண்டாள். வயிற்றுக்குள்ளும் எரிவது போல் இருந்தது. தலையை நிமிர்ந்து ஆசிரியரைப் பார்த்தாள். அவர் திருப்தியுடன் சிரித்தபடியே தம்ளரிலிருந்த பானத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சிக் கொண்டிருந்தார். (தொடரும்)



28. திருடனைக் கொட்டிய தேள்

மத்தியானம் இரண்டு மணிக்குக் கருணாகரன், கஜேந்திரா மில்லின் அதிபரைப் பார்க்கச் சென்று கொண்டிருந்தார். மில் தொழிலாளர்களின் கோரிக்கையைப் பற்றிக் கடைசி முறையாகப் பேச்சு நடத்த முடிவு செய்திருந்தார். இரகசியமாகப் பேச நினைத்ததால் தம்மோடு வேறு யாரையும் அழைத்துச் செல்லவில்லை. கருணாகரனின் பேச்சின் மூலமாக என்னமுடிவு எடுக்கப்படுகிறதோ, அதை ஏற்க மில் தொழிலாளர்கள் தயாராயிருந்தனர். மில் தொழிலாளர்களுக்கு வேலைநிறுத்தம் செய்வதில் விருப்பம் இல்லை. இருந்தாலும், தலைவர் கருணாகரனின் தூண்டுதலுக்கும், புரட்சிக் கட்சி ரௌடிகளின் பயமுறுத்தலுக்கும் பயந்து கிளர்ச்சி செய்ய முனைந்தனர்.

கஜேந்திரா மில்லில் தொழிலாளர்களுக்கு நல்ல ஊதியம் கொடுக்கப்பட்டு வந்தது, கருணாகரனுக்கு நன்கு தெரியும். ராகவனுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே நிலவி வந்த சுமுகமான உறவை முறிக்க வேண்டும் என்று திட்டமிட்டார். இரண்டு மூன்று முறை கருணாகரனை ராகவன் அலட்சியப் படுத்திவிடவே அவரைப் பழி வாங்க முடிவு செய்திருந்தார். கஜேந்திரா மில்லின் தொழிலாளர்களைத் தூண்டிவிட முனைந்தபோது முதலில் எதிர்ப்பு இருந்தது. திருப்தியோடு இருந்த தொழிலாளர்கள், ராகவனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யத் தயங்கினர். கஜேந்திரா மில்லின் லாபம் மிக அதிகம் என்றும், அதை ஒப்பிடும்போது தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ஊதியமும் போனஸும் மிகக் குறைவு என்றும் கருணாகரன் அடிக்கடி சொல்லவே, தொழிலாளர்களின் மனம் மாறியது.

தொழிலாளர்களைத் தம்முடைய பாதையில் திருப்புவதுதான் தலைவர்களுக்கு முதலில் சங்கடமான வேலை. ஒருமுறை பாட்டாளிகளைத் திருப்பி விட்டால் பிறகு, அவர்களைத் தங்கள் போக்கில் இட்டுச் செல்வதில் தலைவர்களுக்கு எவ்விதச் சங்கடமும் இல்லை. இந்தத் தந்திரத்தில் புரட்சிக் கட்சி கருணாகரனுக்கு மிகுந்த தேர்ச்சி உண்டு. வேலைநிறுத்தம் செய்யும் காலங்களில் தொழிலாளர்களின் குடும்பங்கள் வறுமையால் பட்டினி கிடக்கும் நிலைமை அடிக்கடி ஏற்படுவதுண்டு. அந்தச் சமயங்களில் தொழிலாளர்களின் மனைவிமாரும் குழந்தைகளும் வடிக்கும் கண்ணீரைப் பற்றி மார்க்ஸீயவாதம் பேசும் தலைவர்களுக்கு அக்கறை இல்லை. கொள்கைக்காக இரத்தம் சிந்துவதாகக் கோஷமிடுவார்கள். சிந்தப்படுவது பட்டினியால் வாடும் பாட்டாளிகள் இரத்தம்தான்.

ராகவனைப் பழி வாங்க வேண்டும்; அந்த முயற்சியில் தமக்கு ஏதாவது லாபம் கிடைத்தே ஆக வேண்டும் என்பதுதான் இப்போது கருணாகரனின் திட்டம். இந்த முறை ஐம்பதினாயிரம் ரூபாயாவது கிடைக்க வேண்டும் என்று கணக்கிட்டார். பெறுவோம் என்ற நம்பிக்கையும் இருந்தது.

ராகவனின் வீட்டை அடைந்ததும் கருணாகரனை முதலில் வரவேற்றவள், நளினிதான்.

''அப்பா மாடியில் இருக்கிறார்'' என்றாள்.

''நீ ஏன் இன்று கோர்ட்டுக்கு வரவில்லை? பாவம் சம்பத், தனியே கேஸை நடத்துகிறான்'' என்றார் கருணாகரன்.

''எனக்குக் கோர்ட்டுக்கு வரவே பிடிக்கவில்லை.''

''ஐயோ.... ஏன் அப்படி ?''

''அப்படித்தான்.... இனி கோர்ட்டுக்கு வரப் போவதில்லை.''

''தீர்மானித்துவிட்டாயா ?''

''ஓ..........''

''உனக்குக் கோர்ட்டுக்கு வந்துதான் சம்பாதிக்க வேண்டும் என்பதில்லை.''

''உங்களுக்கு மட்டும் என்னவாம்?''

''என்னுடைய பிழைப்பே அதுதானே ?''

''ஏன்? புரட்சிக் கட்சி என்னவாயிற்று ?''

''ஓஹோ.... கட்சி சோறு போடுமா?''

''இன்றைய அரசியல் மாதிரி சம்பாத்தியம் பண்ணக்கூடிய இலகுவான தொழில் வேறு என்ன இருக்கிறது?''

கருணாகரன் சிரித்துக் கொண்டே மாடிக்குச் சென்று விட்டார். மாடியில் ராகவன் அவரை வரவேற்றுச் சோபாவில் அமரச் செய்தார்.

பணியாள், கண்ணாடித் தம்ளரில் பழரசம் கொண்டு வந்து கருணாகரனிடம் நீட்டினான். தம்ளரை வாங்கி உறிஞ்சத் தொடங்கிய கருணாகரன், ''என்ன முடிவு செய்தீர்கள்?'' என்று கேட்டார்.

''ஏற்கெனவே நல்ல ஊதியம் கொடுத்து வருகிறேன். இதைவிட இன்னும் எதிர்பார்ப்பது நல்லதில்லை.''

''மில் நல்ல நிலையில் ஓடும்போது, ஊதிய உயர்வு கோருவது தவறில்லையே ?''

''ஊதியத்தை எவ்வளவுதான் உயர்த்த முடியும்? ஒரு தொழிலாளியின் வேலைக்

குத் தகுந்த ஊதியம்தானே கொடுக்க முடியும்?''

''தொழில் கூடங்களில் லாபம் அதிகம் வரும்போது ஊதியத்தையும் உயர்த்த வேண்டியதுதானே ?''

''இது பேராசை !''

''செய்யும் தொழிலுக்கு ஊதியம் கேட்பதா பேராசை ?''

''அதிகமாக ஊதியம் கேட்பது வேறு என்ன? ஒரு தொழிலாளி, தான் செய்யும் வேலைக்குத் தகுந்த ஊதியத்தை எதிர்பார்ப்பதுதான் நியாயம்.''

''உங்கள் லாபம் அதிகரிக்கும்போது....?''

''லாபம் அதிகரிக்கும் போதெல்லாம் ஊதியம் உயர வேண்டும் என்றால், அது நியாயமாகாது. லாபத்தில் பங்கு என்றாகி விடும்.''

''பங்குதான் கேட்கிறோம்.''

''முதல் என்ன போட்டீர்கள் ?''

''எங்களுடைய உழைப்புத்தான். பாட்டாளி இல்லையென்றால் உங்கள் மில் ஏது ?''

''மறு பக்கத்தை மறந்து விட்டீர்களே ! நான் இல்லையென்றால் கஜேந்திரா மில் ஏது? தொழில் துறை என்பது ஓர் இரட்டைக் காளை வண்டி. தொழிலதிபரும், தொழிலாளிகளும்தான் காளைகள். இருவரும் இணைந்து செயலாற்றினால்தான் வண்டி சீராகப் போகும். இந்த அடிப்படை விஷயத்தை உங்கள் கட்சி உணர மறுப்பதுதான் வேடிக்கை.''

''பாட்டாளியின் இரத்தத்தை உறிஞ்சினால்......''

''இது வீண் பேச்சு, மிஸ்டர் கருணாகரன்! ஒவ்வொரு தொழிலாளியும் தான் செய்யும் வேலைக்குத் தகுந்த ஊதியத்தைவிட அதிகமாகக் கேட்பது பேராசைதான். லாபத்தை மட்டுமே கருத்தில் கொண்டு ஊதியம் அளிப்பதாக இருந்தால், சில தொழிற்கூடங்கள், ஒரு காவலாளிக்கு மட்டுமே ஐந்நூறு ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும். இது பெரிய தவறு.''

''ஏன்? காவலாளி ஐந்நூறு ரூபாய் சம்பளம் வாங்குவது தவறா ?''

''அவனைவிடப் படித்தவன், தேர்ச்சியுள்ளவன் தாலூக்கா குமாஸ்தாவாக வேலை பார்த்தால் அவனுக்குச் சம்பளம் இருநூறு வரைதானே கிடைக்கிறது? தனக்கு மட்டும் சம்பள உயர்வு வேண்டும் என்று தொழிலாளி மட்டும் எண்ணுவது பேராசை இல்லாமல் வேறென்ன? ஒரு தொழிற்கூடத்தில் லாபம் அதிகம் இருக்கிறதென்றால், லாபத்தை முழுவதையும் தொழிலாளிகளுக்கு ஊதியமாகவும் போனஸாகவும் கொடுத்துவிட வேண்டும் என்று கேட்பதில் நியாயமே இல்லை. ஒரு வேளைச் சாப்பாடுகூட இல்லாமல் வேலை இன்றித் தவிக்கும் குடும்பங்கள் எத்தனையோ உண்டு. அந்தமாதிரி குடும்பங்களுக்கு உதவுவதற்காகத்தான் அரசு லாபத்தின் கணிசமான பகுதியை வரியாக வசூலித்துக் கொண்டு போகிறது'' என்றார் ராகவன்.

கருணாகரன் பதில் கூற முடியாமல் விழித்தார். தம்ளரில் இருந்த பானம் முழுவதையும் குடித்துவிட்டுத் தம்ளரை மேஜையின் மீது வைத்தார்.

''செய்கிற காரியத்துக்குச் சம்பந்தமில்லாமல் அபரிமிதமான ஊதிய உயர்வையும் சலுகைகளையும் பெறும் சாரார்கள் இந்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து ஏறத்தாழ அதே போன்ற வேலைகளைச் செய்யும் மற்றவர்கள் பொறாமைப்பட்டுப் புழுங்குகிறார்கள். உங்களுடைய சோஷலிஸ சம நீதி இது பற்றி ஏன் சிந்திக்கவில்லை?'' என்று ராகவன் கேட்டார்.

''மிஸ்டர் ராகவன்! இப்போது இந்தப் பேச்சு எதற்கு? நமக்குள் இப்போது அரசியல் வேண்டாம். நம்முடைய காரியத்தைப்



பார்ப்போம். உங்களுடைய முடிவைச் சொல் லுங்கள்'' என்ருர் கருணுகரன்.

'' அப்போதே சொல்லி விட்டேனே!'' என்ருர், ராகவன் அலுப்புடன்.

''மிஸ்டர் ராகவன்! நான் இப்போது வந் திருப்பது உங்களிடம் சுமுகமான முறையில் பேசி முடிவு காணத்தான். என்னேடு வேறு யாரையாவது அழைத்து வந்தால் பேச்சு வெற்றியடையாமல் போகலாம் என்பதனுல் தான் நான் தனியே வந்திருக்கிறேன்.''

''நானும் சுமுகமாக இந்தப் பிரச்னையைத் தீர்க்கத்தான் ஆசைப்படுகிறேன் சமீப கால மாக உங்கள் தலையீட்டால் தொழிலாளர் களின் வேலைத் திறன் குறைந்து மில் நஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே இப் போதைய நிலையில் எந்தக் கோரிக்கையையும் என்னுல் ஏற்க இயலாது. தொழிலாளர்களின் ஒத்துழைப்பை மீண்டும் பெற்றுத் தாருங்கள். மில் லாபத்தில் நடக்கச் செய்யுங்கள். பிறகு உங்கள் கோரிக்கையைக் கவனிக்கிறேன்.''

'' நன்ருகச் சிந்தியுங்கள். வேலைநிறுத்தம் செய்தால் உங்களுக்கு மேலும் நஷ்டந் தானே ?''

'' சந்தேகமில்லாமல்..... அதற் காக ?''

''மேலும் நஷ்டம் அடைவதிலிருந்து தப்ப ஓரளவு நீங்கள் விட்டுக் கொடுக் கலாமே?''

'' விட்டுக் கொடுப்பதற்கே வழி இல்லை. ஏற்கனவே நஷ்டம். இதில் எதை விட்டுக் கொடுப்பது ?''

''சரி, கடைசியாக நான் ஒரு முடிவு சொல்லட்டுமா ?'' என்று கேட்டார் கருணுகரன்.

ராகவன் அவரை உற்றுப் பார்த் தார். கருணுகரன் சொன்னுர்: ''தொழி லாளர் நலனுக்காக இரண்டு லட்ச ரூபாய் கொடுங்கள்.''

இதைக் கேட்டதும் ராகவன் திகைத் தார். வேறு எதையோ கருணுகரன் கேட்கப் போகிருர் என்று பயந்த ராக வன் வெறும் பணத்தை மட்டும் கருணு கரன் கேட்டதை எண்ணி வியந்தார்.

இரண்டு லட்சம் என்பது அவருக்கு மிகச் சொற்பமான தொகையே. தொழிலாளர்கள் கேட்கும் சம்பள உயர்வுக்கும், போனஸுக் கும் சம்மதித்தால், ஒவ்வோர் ஆண்டும் சராசரி இரண்டு லட்சத்துக்கு மேல் கொடுக்க வேண்டியிருக்கும். இப்போது கருணுகரன் கேட்பது மொத்தமே இரண்டு லட்சந்தான்... இதில் சதி ஏதும் இருக்குமோ....?

ராகவன் குழம்பினுர். இருந்தாலும் பேரம் பண்ணத் தொடங்கினுர்.

''அடேயப்பா ! அவ்வளவுக்கு நான் எங்கே போவேன்? அவ்வளவு தொகை இருந் தால் ஒரு புது மிஷின் வாங்கிவிடுவேனே !'' என்ருர்.

''இரண்டுலட்சம் பெரியதொகை இல்லை.''

''இப்போதைக்கு என்னுல் அவ்வளவு தர முடியாது.''

''இதற்குக்கூட நீங்கள் சம்மதிக்காவிட் டால், பிறகு நான் எப்படித் தொழிலாளர் களைச் சமாதானப்படுத்துவது? முன்பு ஒரு முறை புரட்சிக் கட்சிக்காக நன்கொடை கேட்டு வந்தேன். மறுத்துவிட்டீர்கள். அத ஞல் தொழிலாளர்களுக்கு உங்கள் மீது கோபம்.''

'' உங்கள் கட்சிக்கு வேண்டுமானுல் ஒரு தொகையைத் தந்து விடுகிறேன்.''

'' சரி, அதையாவது எவ்வளவு என்று சொல்லுங்கள்'' என்று கேட்டுவிட்டு ஆவ லுடன் ராகவனைப் பார்த்தார் கருணுகரன்.

அவருடைய பேரத்தின் போக்கைப் புரிந்து கொண்டார் ராகவன். இனி ராகவ னுக்குக் கவலை இல்லை. முகத்தில் மலர்ச்சி தோன்றியது. உற்சாகம் அடைந்தார்.

''உங்கள் கட்சிக்குப் பணம் கொடுத்துவிடு கிறேன். மில்லை மீண்டும் சுமுகமாக நடை பெற வைப்பது உங்கள் பொறுப்பு'' என்ருர்.

''அதற்கு நான் பொறுப்பு ஏற்றுக் கொள் கிறேன்..... கட்சிக்கு எவ்வளவு கொடுப் பீர்கள் ?''

''மிஸ்டர் கருணுகரன்! இப்போது நான் கஷ்டத்தில் இருக்கிறேன். எவ்வளவு கொடுத் தாலும் எனக்குச் சங்கடம்தான். ஆனுல் என்னுடைய மில் சுமுகமாக நடைபெறவேண்



டும் என்பதற்காக மேலும் நான் நஷ்டத்தை ஏற்கத் தயாராக இருக்கிறேன்.... ஐம்பதினு யிரம் கொடுத்து விடுகிறேன் '' என்ருர் ராகவன்.

'' ரொம்பக் குறைத்து விட்டீர்கள். ஒரு லட்சம் கொடுத்துவிடுங்கள்'' என்ருர் கருணு கரன்.

ராகவன் யோசித்தார். ''என்னுல் அவ் வளவு கொடுக்க முடியாது. எழுபத்தையா யிரம் வைத்துக் கொள்ளுங்கள். அதற்குமேல் என்னுல் தாங்க முடியாது'' என்ருர்.

''அப்படியானுல், நீங்கள் ரசீது கேட்கக் கூடாது '' என்ருர் கருணுகரன்.

ராகவன் மனத்துக்குள் சிரித்துக் கொண் டார். ''ரசீது வேண்டாம்'' என்ருர். பிறகு சொன்னுர் :

''இத்தனை நாட்களாக நான் யோக்கியப் பொறுப்புடன் கணக்கு வைத்துக் கொண் டிருந்தேன். இப்போது உங்களுக்குத் தருவ தற்காக நான் கணக்கில் வராத கறுப்புப் பணம் தேடியாக வேண்டும். நேர்மையுடன்

நடந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படு கிறவனைக்கூடக் கறுப்புப் பணப் பொருளா தாரம் கவிழ்த்துவிடுகிறது!''

கருணாகரன் சிரித்தார். ''ஆல் இந்தி கேம்! நான் வரட்டுமா ?''

ராகவனின் வீட்டிலிருந்து கருணாகரன் வெளியேறித் தமது வீட்டை அடைந்தபோது திகைத்தார். வாசலைத் தாண்டி வீட்டுக்குள் நுழைந்த உடனேயே அந்த வெளிநாட்டுப் பௌடரின் நெடி வீசியது. இரு முறை தும்மினார். பரபரப்புடன் வீட்டுக்குள் நுழைந்து எல்லா அறைகளையும் பார்த்தார். மதுரம் எந்த அறையிலும் இல்லை. அடுக்களைக்கு வந்தார். சமையல்காரி கமலம், ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

''அம்மா எங்கே ?'' என்று கருணாகரன் கேட்டார்.

'' உங்கள் சின்ன வக்கீலும், அம்மாவும் டாக்ஸியில் எங்கோ போயிருக்கிறார்கள் '' என்றாள் கமலம்.

''யார் ? சிங்காரமா ?''

கமலம் தலையை அசைத்தாள். கருணாகரன் பற்களைக் கடித்தார். படுக்கை அறைக்கு விரைந்தார். வெளிநாட்டுப் பௌடரின் நெடி, அங்கும் வீசியது. கோபத்தோடு கையிலிருந்த பணப் பையை மேஜையின் மீது வீசினார். அந்த வேகத்தில் மேஜையின் மீதிருந்த ஒரு கடிதம் கீழே விழுந்தது. பரபரப்புடன் பாய்ந்து எடுத்தார். மதுரம்தான் எழுதியிருந்தாள்:

'என்னைத் தேட வேண்டாம். தேடினாலும் நான் திரும்பி வரப் போவதில்லை. நான் விவாகரத்து செய்துவிட்டேன். தேவையானால், சட்ட ரீதியில், நீதிமன்றம் மூலமாக ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம். என்னுடைய வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்ள முடிவு செய்துவிட்டேன். இனி, வேறு எந்தப் பெண்ணின் வாழ்வையும் திருட வேண்டாம். -**மதுரம்**.'

கடிதத்தைப் படித்ததும் கருணாகரன் அதிர்ந்துவிட்டார். கோபத்தினால் முகம் சிவந்தது. பற்கள் கடிபட்டன. ''காலிப் பயல்....திருட்டுப் பயல்....'' என்ற வார்த்தைகள் அவர் வாயிலிருந்து தெறித்தன.

கையில் கடிதத்தைப் பிடித்தபடி மேஜையின் மீது கிடந்த எழுபத்தையாயிரம் ரூபாய் நிரம்பிய தோல் பையை வெறிக்கப் பார்த்தவாறு சிலையாக நின்றார். காலில் ஏதோ உணர்வு தோன்றவே திடுக்கிட்டுக் குனிந்தார். அவருடைய அல்சேஷன் நாய், அவருடைய காலை நக்கிக் கொண்டிருந்தது. மிகுந்த கோபத்துடன் நாயை உதைத்தார். அது வலியினால் 'வாள் வாள்' என்று கதறிக் கொண்டு ஓடியது. எஜமானின் கோபத்துக்கு என்ன காரணம் என்பது நாய்க்குத் தெரியவில்லை.

29. மயக்கம் தெளிந்தது!

கோமளத்தை அவளுடைய வீட்டில் கொண்டு போய் விட்டுவிட்டுச் சந்தானம் சென்ற போது, மாலை ஐந்து மணி இருக்கும். மிகுந்த பதற்றத்துடன் சோர்ந்து போய் வீட்டுக்குள் நுழைந்தபோது, கோமளத்தின் கால்கள் தள்ளாடின. வயிற்றுக்குள் ஏதோ புரள்வது போலிருந்தது. வாயிலிருந்து வீசிக் கொண்டிருந்த நெடி, குமட்டியது. நேரே குளியலறைக்குச் சென்றவள், வாந்தி எடுத்தாள். வயிற்றுக்குள் போயிருந்த நஞ்சு வெளியேறியது. ஆனால், நெஞ்சுக்குள்ளிருந்த அவமானத்தையும், வேதனையையும் ஒருங்கே வெளியேற்றுவது எப்படி ?

வாயையும் முகத்தையும் கழுவிக் கொண்டு படுக்கை அறைக்குள் சென்ற போது, சமையல்காரி ஓடி வந்தாள்.

''என்னம்மா? உடம்புக்கு என்ன?'' என்று சமையல்காரி பதறினாள்.

''ஒன்றுமில்லை. வயிற்றைப் புரட்டியது. குளியலறையை நன்றாகக் கழுவி விடு'' என்று கூறி படுக்கையில் விழுந்தாள் கோமளம். அவளால் நிதானமாகப் பேச முடியவில்லை. வாய் சற்றுக் குழறியது. தூங்க வேண்டும் போலிருந்தது. கண்களை மூடிக் கிடந்தாள். மனம் கனத்துக் கிடந்தது. எண்ணங்கள் சுழன்று அலைக்கழித்தன. கண் இமைகளைத் திறந்தாள். எதிரே சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கணவரின் புகைப்படத்தைப் பார்த்தாள். மனம் பொருமியது. வாய் விட்டுக் கதறி அழவேண்டும் போல் இருந்தது. ஆனால் அப்போது அவளால் அழக்கூட முடியவில்லை. கனத்துக் கிடந்த இமைகளைப் பாதித் திறந்தவாறு கணவரின் படத்தைப் பார்த்தபடி படுக்கையில் கிடந்தாள். பிறகு, பார்வை, மேஜையின் மீது கிடந்த நவரசம் பத்திரிகையின் மீது விழுந்தது. அட்டைப் படத்தில் அவளுடைய படம் கவர்ச்சியாகத் தோற்றம் அளித்தது.

இப்படிப் படம் போட்டு என்னைப் பிரபலப் படுத்தியதெல்லாம்.... சீச்சீ, எவ்வளவு தரம் கெட்ட மனிதர். எப்படி ஏமாந்துவிட்டேன்.. ஐயோ....... !

ஆசிரியர் சந்தானத்தோடு பழக்கம் ஏற்பட்ட நாளிலிருந்து பல சம்பவங்கள் நினைவில் தோன்றின. அவர் பழகிய விதமும், பேசிய தோரணையும், காட்டிய அக்கறையும் நினைவில் சுழன்றன.


சேச்சே, எவ்வளவு ஏமாளியாக இருந்திருக்கிறோம்.....

கோமளத்துக்குத் தன்மீதே கோபம் எழுந்தது —

'பிரமாதமாய் எழுதுகிறாள்' என்று ஊரில் பேர் வாங்கி என்ன பயன்? நெருங்கிப் பழகியவருடைய அந்தரங்க எண்ணத்தைப் புரிந்துகொள்ளாத நான் பேனா பிடிக்கவே அருகதை அற்றவள். உண்மையில் நான் என்ன எழுதிவிட்டேன்? நான் எழுதியவற்றில் முக்கால்வாசிக்கு மேல் சந்தானம் திருத்தியவைதாமே —

கோமளம் ஆயாசத்துடன் கண்களை மூடிக் கொண்டாள். சற்றுநேரத்துக்கு முன்னால் பத்திரிகை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நினைவில் படர்ந்தன —

அருளாசான் பிறந்த இருள்நீக்கி



மானுட வேடமிட்ட ராமபிரான் அன்னை வைதேகியை இழந்ததும் துயருற்றுத் தவித்ததை எல்லா ராமாயணங்களும் கூறும். ஆனால் 'ராமசரிதமானஸம்' என்கிற துளசிதாஸரின் ராமாயணத்திலேயே ஐயனின் துயர் இருள் நீங்கி அவர் மீளவும் ஆண்மை பெற்றதற்கு ஒரு புது வரலாறு கூறப்படுகிறது. ராகவன் தவிக்கிறானே என்று கைலைநாதனும் உமையன்னையும் பரிவு பொங்கி, சூரியனை அனுப்பி வைத்தனராம், சூரிய குலத் தோன்றலிடம். ஞான பானுவாக வந்த ஆதித்தன் ஸ்ரீ ராமனின் மன இருளை நீக்கி ஆண்மை ஒளியை ஊட்டினானாம். துளசி ராமாயணத்துக்கு அற்புதமான சான்று நம் தஞ்சை மாவட்ட மன்னார்குடி தாலுகாவில் உள்ளது. அங்கு ஆதித்தபுரம் என்ற ஊரை அடுத்துள்ள "இருள்நீக்கி" கிராமத்தில்தான் ராமபிரான் துயரிருள் நீங்கியதாகக் கருதப்படுகிறது. இருள் நீக்கியிலுள்ள கைலாசநாதர் ஆலயத்திலேயே ஸ்ரீராமர் நன்றி நெஞ்சுடன் வழிபாடு நடத்தினார் என்று ஐதிஹ்யம்.

இன்று வடபுலத்தில் அநாசார இருளை நீக்கித் திரும்பி வரும் ஆசாரியர்கள் ஸ்ரீ காமகோடி ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஜன்மஸ்தலமாக அமையும் பேறு இந்த இருள்நீக்கிக்கே கிடைத்திருக்கிறது. புதுப் பெரியவர்களின் ஆணைக்கிணங்க, இருள் நீக்கியில் தற்போது பாழுற்றுள்ள கைலாசநாதர் கோயிலுக்குத் திருப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவிலேயே பணி சிறப்புற நிறைவுற்று இவ்வாலயம் சைவ சாம்ராஜ்யத்தில் ஒரு சுடர்த் தீபமாக ஒளிவீச அன்பர்கள் அடியிற்காணும் முகவரிக்குப் பொருள் அனுப்ப வேணும்: ஸ்ரீ எஸ். வி. சந்தானராமன், பொருளாளர், இருள்நீக்கி திருப்பணிக் குழு, கமலா ஸ்டோர்ஸ், தெற்கு மெயின் வீதி, தஞ்சாவூர்.

சந்தானம் மிகுந்த பரிவோடும் அன்போடும் ஒருவித உரிமையோடும்கூட — விஸ்கியை அவளுடைய தம்ளரில் ஊற்றியபோது, அவளால் தடுக்க முடியவில்லையே! அவர் காட்டிய பரிவு, அக்கறை, அவரால் அவளுக்குக் கிடைத்திருந்த விளம்பரம், புகழ், பெருமை — எல்லாமே அவளைச் செயலற்றவளாக்கிவிட்டன. தம்ளரிலிருந்த பானம் முழுவதையும் ஒரே மூச்சில் குடித்துவிட்டுக் கீழே வைத்த போது, அவளுடைய அந்தராத்மா ஏதோ முணுமுணுத்ததே தவிர, அவளைக் கண்டித்துக் காக்கவில்லை!

வெளியீட்டு விழாப் படங்களிலிருந்து நாலைந்து படங்களை 'நவரசத்'தில் அச்சிடத் தேர்ந்தெடுக்க முயன்ற போது, ஒரு படத்தை உரிமையோடு அவளுடைய கையைத் தீண்டி வாங்கினார் சந்தானம். அப்போதுகூட அவளுடைய அறிவு விழித்துக் கொள்ளவில்லை. தனிமையும், தனிமையில் ஓர் அந்நியனோடு நெருங்கி இருந்த நிலையும்கூட அவளுடைய சிந்தையில் உரைக்காமல் போய்விட்டனவே! ஓ....எவ்வளவு தூரம் மயங்கிப் பாதையை விட்டு விலகிப் போயிருந்தாள்!

போட்டோ எடுக்கும் பாவனையில் சந்தானம் துணிவுடன் நடந்து கொண்டவிதந்தான் அவளை எச்சரித்தது!

ஒருமேஜையின் மீது ஒய்யாரமாகச் சாய்ந்து நிற்க வைத்த போது, ''இந்த மாதிரி எதற்கு? ஜவுளி விளம்பரத்துக்கா படம் எடுக்கப் போகிறீர்கள்?'' என்று கேலியாகக் கேட்டாள்.

சிரித்துக் கொண்டே அவளை மிக நெருங்கி நின்று அவளுடைய தோளைத் தொட்டு அழுத்தி, புடவையைச் சீராக்கியபோது கோமளம் பதறிப் போனாள். ஆனால் சந்தானம் எவ்வித பரபரப்பையும் காட்டிக் கொள்ளாமல் போட்டோவுக்காக ஒப்பனை செய்வதாகப் பாவனை செய்து கொண்டு அவளைத் தீண்டினார்.

கோமளத்தின் வயிற்றில் எரிவதுபோல் இருந்தது. கால்கள் தரையில் அழுந்தி ஊன்றாமல் காற்றில் மிதப்பது போன்ற உணர்வு தோன்றியது. மது போதை என்பதை உணர்ந்து கொண்டாள். அந்த அனுபவம் அவளுக்குப் புதுமையாகவும் இருந்தது; வேடிக்கையாகவும் இருந்தது. உள்ளூறப் பயத்தையும் கொடுத்தது. ''என்னவோ போல் இருக்கிறது!''

ஆசிரியர் சிரித்தார். ''போகப் போக இன்னும் நன்றாக இருக்கும். புதுப் புது உணர்வுகள் தோன்றும்'' என்று கூறிக் கொண்டே திடீரென்று அவளுடைய இடையைச் சுற்றிக் கையால் மெதுவாக வளைத்து, ''இவ்வளவு சாய்ந்து நிற்க வேண்டாம். கொஞ்சம் நிமிர்ந்து கொள். போட்டோவுக்கு இந்தப் போஸ் பிரமாதமாக இருக்கும்'' என்றார்.

அவருடைய துணிச்சல் அவளுக்குப் பயத்தைக் கொடுத்தது. பதற்றத்துடன் வேகமாக விலக முயன்றாள். ஆனால் சுற்றியிருந்த சந்தானத்தின் கை, அவளை இன்னும் வளைத்து இழுத்தது.

''என்ன இது? தள்ளி நில்லுங்கள்!'' என்று கோமளம் பதறினாள்.

''இன்று இங்கு விடுமுறை, பயப்படாதே. இங்கு யாரும் வரமாட்டார்கள்'' என்று குழைந்து கூறியபடி அவளை இன்னும் இறுக அணைக்க முயன்றார்.

''சீ, விடு என்னை! கூச்சல் போடுவேன். வாட்ச்மேன் வருவான்'' என்றாள் கோமளம்.

''கூச்சல் போட்டால் உனக்குத்தான் கேவலம். இந்த விஷயம் ஊர் முழுதும் பரவும்'' என்று எச்சரித்தார் ஆசிரியர்.

அவள் கூச்சல் போட்டிருந்தால், வாட்ச்மேன் வந்திருப்பான். அவள் தப்பியிருந்திருக்க முடியும். ஒரு பட்டிக்காட்டுப் படிக்காத பெண், அந்த மாதிரி சந்தர்ப்பத்தில் இரைந்து கூச்சலிட்டு ஊரைக் கூட்டியிருப்பாள். நாகரிகமும், அந்தஸ்தும் கோமளத்தின் வாயைக் கட்டிவிட்டன. தன்னுடைய அவமானம் மற்றவர்களுக்குத் தெரிந்துவிடுமே என்ற பயத்தினால் வாயை மூடிக் கொண்டாள். எப்படியும் அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றுவிட வேண்டும் என்ற தவிப்பு இருந்தது. ஆனால் எண்ணத்தைச் செயலாற்ற விடாமல் அவளுடைய உடல்,



சக்தியை இழந்து கொண்டிருந்தது. கண் இமைகள் கனத்தன. உடல் காற்றில் மிதப்பது போலிருந்தது. கால்கள் தரையில் அழுந்துவதாகவே தெரியவில்லை. சந்தானம் அவளைச் சோபாவுக்கு இழுத்தபோது, காற்றில் மிதந்தபடியே சோபாவை அடைந்த மாதிரிதான் உணர்ந்தாள்.

மாலை ஐந்து மணி அளவில் கோமளத்தைக் காரில் ஏற்றிக் கொண்டு அவளுடைய வீட்டை நோக்கிச் சந்தானம் சென்று கொண்டிருந்த போது அவர் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார் — அவளை அகில இந்தியப் புகழ்பெற்றவளாக ஆக்கப் போவதாகவும், அவளுடைய புகழுக்காக ஏதேதோ பல திட்டங்கள் போட்டிருப்பதாகவும், நவரசம் பத்திரிகையையே அவளுடைய முன்னேற்றத்துக்காக அர்ப்பணிக்கப் போவதாகவும் கூறினார். அவருடைய பேச்சு எதையும் உணர்ந்து கொள்ளும் நிலையில் கோமளம் இல்லை.

இனி, இனி.....? தன் எதிர்காலம் பற்றிய இந்தக் கேள்விதான் அவளுடைய உள்ளத்தில் பேரிரைச்சலாகக் கேட்டுக் கொண்டிருந்தது. அவளுடைய வீட்டு வாசலில் அவளை இறக்கிவிட்டுச் சந்தானம் போய்விட்டார்.

நல்ல வேளையாகக் கணவர் வீட்டில் இல்லை. அன்று மாலை அவர் வீட்டுக்கு வரவும் மாட்டார். நீதிமன்றத்திலிருந்து நேரே ஏதோ அலுவலாகப் பக்கத்து ஊருக்குப் போய்விட்டு மறு நாள் காலையில்தான் வருவார்.

கோமளத்தின் நெஞ்சம் வேதனை தாளாமல் துடித்துக் கொண்டிருந்தது. உடல் முழுவதிலும் ஏதோ ஓர் அசிங்கம் ஒட்டிக் கொண்டிருப்பது போன்ற அருவருப்பான உணர்வால் புழுங்கிக் கொண்டிருந்தாள். உள்ளூறக் கோபம் எழுந்தது. ஆரம்ப காலத்திலிருந்தே சந்தானம் தன்னிடம் பழகிய விதத்தை எண்ணிப் பார்த்தபோது, அவருடைய பேச்சு, செயல், அவர் காட்டிய அக்கறை எல்லாவற்றுக்கும் ஒரு தனிப்பட்ட அர்த்தமும், குறிக்கோளும் இருந்ததை இப்போது உணர்ந்தாள். காலம் கடந்து உணர்ந்து என்ன செய்ய? புகழ்ச்சியும், பெருமையும், விளம்பரமும் அவளுடைய அறிவை மயங்க வைத்துவிட்டன. ஆனால், மனைவியைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வை அவளுடைய கணவரிடமிருந்து பறித்தது எது?

கணவர் மீது அடங்காத கோபம் எழுந்தது. அவருடைய ஏலாத்தனம்தான் இதற்கெல்லாம் காரணம் என்று கொதித்தாள். ஆரம்ப காலத்திலேயே அவர் விழிப்புடன் இருந்திருந்தால், சந்தானம் அவ்வளவு நெருங்கிப் பழகியிருந்திருக்க முடியாது.

'காவலற்ற பழ மரமும், கிழவனின் இளம் மனைவியும் எந்தச் சமயத்திலும் திருடு போகலாம்' என்று சந்தானமே ஒரு சமயம் ஒரு கதையில் எழுதியிருந்தது அவளுடைய நினைவில் வந்தது. தான் பெற்ற புகழ், பெருமை எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தாள்.

ஓ......! அதில்தான் எவ்வளவு போதை, பரபரப்பு, ஆனந்தம், உற்சாகம், பெருமிதம்— இவ்வளவையும் பெறக் கடைசியில் அவள் கொடுத்த விலை.....! ஐயோ.....!

கோமளம் ஆயாசத்துடன் கண்களை மூடினாள். கணவரின் முகம் நினைவில் தோன்றியது. அவருக்கு ஒன்றும் தெரியப் போவதில்லை. அவருக்கு மட்டுமென்ன, யாருக்குமே தெரியாது. ஆனால், மனத்தை எப்படி ஏமாற்ற முடியும்? அது இப்போது தவிக்கும் தவிப்பையும், படும் வேதனையையும் அவளால் அடக்க முடியுமா? செத்தால்தான் மனம் அடங்கும்.

அலமாரியைப் பார்த்தாள். அங்கு மேல் தட்டில் தூக்க மாத்திரை பாட்டில் இருந்தது. நாகசுந்தரம் இரவு தூங்குவதற்காக, சில வேளைகளில் உபயோகப்படுத்தும் மருந்து!

அந்த மாத்திரையில் பத்து மாத்திரைகளை எடுத்து ஒரே சமயத்தில் விழுங்கிவிட்டால் போதும்; ஒரேயடியாகக் கலையாத நித்திரையில் ஆழ்ந்துவிடலாம்.

மது மயக்கம் இப்போது அவளை ஆட்கொண்டிருந்தது.. மிகுந்த சிரமத்துடன் கண் இமைகளைத் திறந்து மாத்திரைப் பாட்டிலை உற்றுப் பார்த்தாள். அதை எடுக்க வேண்டும் என்று உணர்வு உந்தியது. ஆனால் உடல் செயலிழந்து கட்டையாகப் படுக்கையில் கிடந்தது. எழுந்திருக்கத் தெம்பில்லை. கண்கள் செருகின. அகலிகை போல் உணர்வற்றுக் கல்லானாள்.

அவள் விழித்து எழும்போது, தூக்க மாத்திரைப் பாட்டில் அலமாரியிலேயேதான் இருக்கும். அவளுடைய உருவத்தை அட்டைப் படமாகக் கொண்ட நவரசம் பத்திரிகையும் எதிரே இருக்கும் மேஜை மீதேதான் கிடக்கும்! (தொடரும்)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

30. தீர்ப்பு

நவரசம் பத்திரிகாலயத்தில் கோமளம் மனம் வெதும்பிக் கொண்டிருந்த நேரத்தில், நீதிபதி நாகசுந்தரம், நீதிமன்றத்தில் கற்பழிப்பு வழக்கை விசாரித்துக் கொண்டிருந்தார். ஆவுடையப்ப பிள்ளை வர இயலாததால் சம்பத் மட்டுமே தனியாக வழக்கை நடத்த வேண்டியிருந்தது.

அவனுடைய ஆசைகள் வெறுங் கனவாகி விட்டன. அவன் திட்டமிட்டிருந்தபடி முந்தின நாள் அவனால் வெற்றி பெற இயலவில்லை. இனி நளினி தனக்குக் கிடைக்க மாட்டாள் என்று அவன் முடிவு செய்த பிறகு, தன்னுடைய வருங்காலத்தைப் பற்றி எண்ணினான். நல்லவேளையாகச் சிறைக்குப் போகாமல் தப்பியதை எண்ணி ஓரளவு மன நிம்மதியடைந்தான். அதற்காக நளினிக்கு மானசீகமாக நன்றி செலுத்தினான். இருந்தாலும் 'பென்ஸ்' காரும் பங்களாவும் அவன் எண்ணத்தை விட்டு அகல மறுத்துவிட்டன. இனி அவன் எதையும் சுய முயற்சியால்தான் பெற வேண்டும். நானூறு ரூபாய் வருமானத்தில் என்ன அனுபவித்துவிட முடியும்?

முந்தின நாள் நிகழ்ச்சியும், அதனால் ஏற்பட்ட மன அதிர்ச்சியும் அவனுடைய உள்ளத்திலும் உடலிலும் பலவீனத்தை ஏற்படுத்தியிருந்தன. வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது போன்ற உணர்வு ஆட்கொண்டிருந்தது.

காலையில் வக்கீல் குமாஸ்தா சொன்னது நினைவுக்கு வந்தது.

''சின்ன வக்கீல் இந்த வழக்கைத் தனியாக நடத்தப் போகிறார். இதில் வெற்றி கிடைத்து விட்டால் பேர் பிரபலமாகிவிடும்'' என்று குமாஸ்தா யாரிடமோ சொல்லிக்கொண்டிருந்தார். ''வெற்றி கிடைத்தால்தானே?'' என்று தனக்குள் முனகிக் கொண்டான். ஆவுடையப்ப பிள்ளைக்கே சிக்கலாகத் தோன்றிய இந்த வழக்கில் தன்னால் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை சம்பத்துக்கு இல்லை. ஆனால் காலையில் நீதிமன்றத்துக்குள் நுழைந்து அமர்ந்தபோது அவனைப் பார்த்து அரசாங்க வக்கீலும் கருணாகரனும் அலட்சியமாகச் சிரித்ததைக் கண்டதும் அவனுள்ளே கோபம் மூண்டது. ஆவுடையப்ப பிள்ளையே திணறக் கூடிய வழக்கை இவன் எங்கே நடத்தி வெற்றி பெறப் போகிறான் என்ற பாவனையில் இருந்த அவர்கள் சிரிப்பு, அவனுள் ஒரு வெறியை ஊட்டியது. அந்த வழக்கில் எப்படியும் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்னும் ஆவேசம் தோன்றியது. ஆனால் அதேசமயம் உள்ளூறப் பயமும் உண்டாயிற்று. சாட்சிகளும் சந்தேகச் சூழ்நிலையும் வழக்கில் மும்முரமா யிருக்கும்போது வெற்றி பெறுவது எப்படி?

நீதிபதி நாகசுந்தரம் வழக்கு ஆரம்பமாகிய போது சம்பத்தை உற்சாகப்படுத்தினார்.

''மிஸ்டர் சம்பத்! உங்கள் சீனியருக்கு ஏற்பட்ட விபத்துக்கு வருந்துகிறேன். அவர் ஜூனியரான நீங்கள் இந்த வழக்கைத் திறம்பட நடத்துவீர்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு'' என்று நீதிபதி கூறிய போது சம்பத் சிறிது தெம்படைந்தான்.



ஆனால் சாட்சிகள் விசாரிக்கப்பட்டபோது அவன் நம்பிக்கை குலைய ஆரம்பித்துவிட்டது.

தன்னைக் கற்பழித்து விட்டான் என்று முந்தின நாள் விசாரணையில் சாட்சி சொன்ன வேலம்மாள், தன்னை வைக்கோல் படப்பு மேல் தள்ளினான் என்று சொன்னதைப் பற்றிச் சம்பத் குறுக்கு விசாரணை செய்தான்.

''நீ என்ன தொழில் செய்கிறாய்?'' என்று சம்பத் கேட்டான்.

''சும்மாத்தான் இருக்கிறேன்'' என்றாள் வேலம்மாள்.

''சாப்பாட்டுக்கு வழி?''

''மலேயாவில் இருக்கும் என் புருஷனிடமிருந்து பணம் வருகிறது.''

''அதைத் தவிர வேறு வருமானம் உனக்கு இல்லை, அப்படித்தானே?''

சாட்சி பதில் சொல்லாமல் நின்றாள்.

''என்ன அப்படித்தானே?'' — மீண்டும் கேட்டான், சம்பத்.

''அதுதான் சொல்லி விட்டாளே புருஷனிடமிருந்து பணம் வருகிறது என்று!'' இவ்வாறு குறுக்கே பேசினார், அரசாங்க வக்கீல், முனுசாமி.

''அவளே சொல்லட்டுமே. இந்தாம்மா புருஷனிடமிருந்து வரும் பணம் தவிர வேறு வழியில் உனக்குச் சம்பாத்தியம் ஏதாவது உண்டா?'' — சம்பத் கேட்டான்.

''இதை நான் ஆட்சேபிக்கிறேன். யுவர் ஆனர். இது சாட்சியை அவமானப்படுத்துவது போலாகும்'' என்று குறுக்கிட்டார் முனுசாமி.

''இதிலென்ன அவமானம்?'' — சம்பத் கேட்டான்.

''வேறு வழியில் சம்பாத்தியம் உண்டா என்ற கேள்விக்கு என்ன அர்த்தம்?'' என்று கோபத்துடன் கேட்டார் முனுசாமி.

''வேறு ஏதாவது சொந்தத்தில் வியாபாரமோ, தொழிலோ செய்து சம்பாத்தியம் உண்டா என்று கேட்கிறேன். இதில் ஆட்சேபணைக்கு என்ன இருக்கிறது?'' என்று கூறி விட்டு வேலம்மாளைப் பார்த்து, ''சொல்லு, வேறு ஏதாவது சம்பாத்தியம் உண்டா? அதாவது வேறு வீடுகளில் சமையல் செய்வது, காய்கறித் தோட்டம் போட்டுக் காய்கறி விற்பது, மாடு வளர்த்துப் பால் விற்பது போன்ற சம்பாத்தியம் ஏதாவது உண்டா என்று கேட்கிறேன்.''


''இல்லை'' என்றாள் வேலம்மாள்.

சம்பத் திருப்தியோடு உட்கார்ந்தான். அந்தக் கேள்வியை அவன் ஏன் கேட்டான் என்பதை முனுசாமியோ கருணாகரனோ

புரிந்து கொள்ளவில்லை. ஆனால் நீதிபதி புரிந்து கொண்டு சம்பத்தைப் பார்த்துப் புன்னகை செய்தார். ஆவுடையப்ப பிள்ளையின் ஜூனியர் மக்காக இருக்க முடியாது என்ற பாவனை அந்தச் சிரிப்பில் இருந்தது.

மத்தியானம் இடைவேளையில் சம்பத் சீக்கிரமாகவே மூக்காண்டி ஐயர் கடையில் சாப்பிட்டுவிட்டு நீதிமன்றத்தில் போய் அமர்ந்து விட்டான். விசாரணை ஆரம்பமாக இன்னும் அரை மணி நேரம் இருந்ததால் நீதிமன்றத்துக்குள் வேறு யாரும் இல்லை. சம்பத் மட்டும் தனிமையில் பல நினைவுகளைப் பரவ விட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய நினைவில் முந்தின நாள் நடைபெற்ற சம்பவம் சுழன்று கொண்டிருந்தது.

ஒரு நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டோம் என்ற ஏமாற்றம்தான் அவனை மிகவும் வாட்டியது. நளினியைத் தப்ப விடாமலிருந்தால்... அவள் எனக்கேதான் சொந்தமாக வேண்டியிருந்திருக்கும். அவள் தலையையும் அசைக்க முடியாதவாறு அழுத்தியிருக்க வேண்டும். கவனக் குறைவாக இருந்ததால்தானே மூக்கில் மோதிவிட்டாள்! சேச்சே, ஒரு பெண்ணிடம் இப்படி ஒரு தோல்வியா? பெரிய விளையாட்டு வீரன் என்று கல்லூரியில் பெயர் பெற்று என்ன பயன்? ஒரு பெண்ணைப் பணிய வைக்க முடியவில்லையே! அவள் மூக்கில் மோதுவதற்கு முன்புகூட எந்த அளவுக்கு அவளைப் பணிய வைக்க முடிந்தது? என் முழு பலத்தையும் உபயோகித்தும் அவள் திமிறித் திமிறிப் புரண்டாளே. சேச்சே, இந்த விஷயத்தில் ஒரு பெண்ணின் ஒத்துழைப்பு இல்லையென்றால் வெற்றி பெறுவது சிரமம்தான் போலிருக்கிறது.....



திடீரென்று சம்பத்தின் சிந்தனையில் ஓர் அதிர்ச்சி! புரியாத, சிக்கலான ஒரு புதிருக்கு விடை கிடைத்துவிட்ட பரபரப்புத் தோன்றியது. நினைவில் குற்றவாளி குருசாமியின் ஒல்லி உடலும், வேலம்மாளின் கட்டுடலும் தோன்றின. கற்பழிப்பு வழக்கில் நிச்சயம் வெற்றி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை தோன்றியது.

நல்ல உடற்கட்டும் பலமும் பொருந்திய நானே நளினியிடம் தோற்றுப் போனேனே; எலும்பும் தோலுமாகச் சோகை பிடித்தவனைப் போலிருக்கும் இந்தக் குருசாமியா பயில்வானைப் போல் கட்டுடலோடு இருக்கும் வேலம்மாளைப் பலாத்காரம் செய்ய முடியும்? ஓ.....! இந்த வழக்கில் வெற்றி நிச்சயம்!

நளினி கிடைக்கவில்லை. பரவாயில்லை. பரபரப்பான இந்த வழக்கில் வெற்றி கிடைத்து விட்டால் போதும். இதில் வெற்றி கிடைத்து விட்டால், என் பெயர் பிரபலமாகி விடும். பெயர் பிரபலமாகி விட்டால் 'பென்ஸ்' காரும், பங்களாவும் வாங்குவதா கஷ்டம்?

இடைவேளைக்குப் பிறகு மத்தியானம் வழக்கு நடைபெறத் தொடங்கியதும் டாக்டர் ராஜகோபால் சாட்சி சொல்லக் கூண்டில் ஏறினார். கருணாகரன் இன்னும் வரவில்லை. முனுசாமி தவித்தார். அடிக்கடி வாசலையே பார்த்தார். அருகில் கருணாகரன் இல்லையென்றால் முனுசாமியின் மூளை வேலை செய்யாது. அந்த வழக்கில் டாக்டரின் சாட்சியம் மிகவும் முக்கியம். இந்தச் சமயத்தில் கருணாகரன் துணைக்கு இல்லாதது முனுசாமிக்குப் பெரும் கவலையாக இருந்தது.

டாக்டர் ராஜகோபால் தம்முடைய சோதனையில் கண்ட முடிவுகளைக் கூறி முடித்ததும் அரசாங்க வக்கீல் முனுசாமி கேட்டார்: ''டாக்டர், இந்த வழக்கில் உங்கள் அபிப்பிராயம் என்ன?''

ராஜகோபால் பதில் கூறாமல் சற்றுத் தயங்கினார். முனுசாமி வெறிக்கப் பார்த்தார். பக்கத்தில் இருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர், டாக்டரை முறைத்துப் பார்த்தார். ராஜகோபால் விழித்துக் கொண்டு நின்றார்.

''அதாவது டாக்டர், குற்றவாளிக்கும் அந்தப் பெண்ணுக்கும் தொடர்பு இருந்திருக்கிறது என்பது உங்கள் சோதனையில் இருந்து தெரிகிறதா இல்லையா?'' — முனுசாமி கேட்டார்.

சம்பத் பரபரப்புடன் எழுந்தான். ''இந்தக் கேள்வியை நான் ஆட்சேபிக்கிறேன். யுவர் ஆனர். இது டாக்டருக்குச் சம்பந்தமில்லாத கேள்வி. சம்பவம் நடைபெற்றபோது டாக்டர் பக்கத்திலேயா இருந்தார்?'' என்று கேட்டான், சம்பத்.

முனுசாமி கோபத்துடன் திரும்பினார். ''கண்கூடாகவே பார்த்துக் கையும் களவுமாய்க் குற்றவாளியைப் பிடித்தவர்கள், இங்கே இன்று காலையில் சாட்சி சொன்னார்களே'' என்றார்.

''அந்தச் சாட்சிகள் எல்லோரும் குற்றவாளிக்குவேண்டாதவர்கள்'' என்றான் சம்பத்.

''சரி, டாக்டர், உங்களுடைய சோதனையிலிருந்து பலாத்காரம் நடைபெற்றிருக்கிறது என்று சொல்ல முடியுமா?'' என்று கேட்டார் முனுசாமி.

டாக்டர் பதில் கூறத் தயங்கினர். முனுசாமி கோபத்துடன் முறைத்தார். டாக்டர் பயந்தபடியே விழித்துக் கொண்டு நின்றார்.

''சொல்லுங்கள் டாக்டர்!'' என்றார் முனுசாமி. மீண்டும் டாக்டர் தயங்கினபடியே ''ஆமாம்'' என்றார். முனுசாமி திருப்தியோடு அமர்ந்தார்.

சம்பத் குறுக்கு விசாரணை செய்ய எழுந்தான்.

''டாக்டர்! உங்கள் சோதனையிலிருந்து, அந்தப் பெண்ணுக்கு ஓர் ஆணுடனும், இந்தக் குற்றவாளி குருசாமிக்கு ஒரு பெண்ணுடனும் தொடர்பு இருந்திருக்கிறது என்பதுதான் தெரியுமே தவிர, அந்தப் பெண்ணுக்கு இந்தக் குருசாமியுடன்தான் தொடர்பு ஏற்பட்டிருந்தது என்பது தெரியாது அல்லவா?'' என்று கேட்டான்.

டாக்டர் திகைத்தார். முகமெல்லாம் வியர்த்தது. சற்றுத் தயங்கினர். பிறகு ''தெரியாது'' என்றார்.

''ஆக இந்தக் குருசாமிதான் அந்தப் பெண்ணைக் கெடுத்திருப்பான் என்பது உங்கள் சோதனையிலிருந்து தெரியாது?''

''தெரியாது.''

இந்தச் சமயத்தில் முனுசாமி பரபரப்புடன் எழுந்தார். ''என் நண்பர் வழக்கையே மாற்றுகிறார். வழக்கில் சம்பந்தப்பட்ட இருவருக்கும்வெவ்வேறு நபர்களுடன் தொடர்பு இருந்திருக்கிறது என்று கூறுவது விசித்திரந்தான். வேலம்மாளும் குருசாமியும் இப்படி ஒரு வழக்கில் மாட்டிக் கொள்ள வேண்டுமென்று வெவ்வேறு நபருடன் தொடர்பு கொண்டுவிட்டு, பிறகு வேலம்மாளுடைய தோட்டத்தில் சந்தித்துக் கொண்டார்கள் போலிருக்கிறது!'' என்றார்.

இதைக் கேட்டதும் நீதிமன்றத்தில் சிரிப்பொலி எழுந்தது. நீதிபதியும் சிரித்தார். சம்பத், கோபத்துடன் முனுசாமியைப் பார்த்து முறைத்தான். சற்றுக் குழம்பி நின்றான். கேள்வியை வேறு விதமாகக் கேட்டிருந்திருக்க வேண்டும் என்று உணர்ந்தான். டாக்டரை நிமிர்ந்து பார்த்தான்.

''டாக்டர்! இது பலாத்காரம்தான் என்பதற்குத் தங்கள் சோதனையில் என்ன நிரூபணம் இருக்கிறது?'' என்று கேட்டான்.

''அவளுக்கு ஓர் ஆணிடம் தொடர்பு இருந்திருக்கிறது



என்பது சோதனையிலிருந்து தெரியுமே'' என்றார் டாக்டர், அலட்சியமாக.

''உங்கள் சோதனையிலிருந்து தொடர்பு இருந்திருக்கிறது என்பது தெரியும். ஆனால் அந்தத் தொடர்பு பலாத்காரத்தினால் ஏற்பட்ட. தொடர்பு என்பதற்கு ஆதாரம் இருக்கிறதா?'' என்று சம்பத் கேட்டதும் டாக்டர் திடுக்கிட்டார். அவர் பயந்து எதிர்பார்த்த கேள்வியைச் சம்பத் கேட்டு விட்டான். டாக்டரின் உடல் சற்று நடுங்கியது. நினைவில் கருணாகரனின் முகம் தோன்றியது. அந்தச் சமயத்தில் முனுசாமி எழுந்தார்.

''ஓ....! நீங்கள் கேட்பதைப் பார்த்தால் குற்றவாளியும் அந்தப் பெண்ணும் மனம் ஒப்பிக் காதல் புரிந்தார்கள் என்றுகூடச் சொல்வீர்கள் போலிருக்கிறது'' என்றார்.

''ஏன் அப்படியும் இருக்கக் கூடாது?''— சம்பத் கேட்டான்.

''ஓ....ஹோ...!'' என்று சிரித்தார் முனுசாமி. பிறகு, ''அப்படியானால் இந்த வழக்கே இங்கு நடைபெறுவது அவசியமில்லையே!'' என்று கூறி மீண்டும் சிரித்தார்.

''அதையேதான் நானும் சுட்டிக் காட்டப் போகிறேன்'' என்ற சம்பத், டாக்டரை வெறிக்கப் பார்த்தபடி, ''சொல்லுங்கள் டாக்டர்'' என்றான்.

டாக்டர் கேள்வியை மறந்து விட்டவர் போல் நடித்து, ''என்ன?'' என்றார்.

சம்பத், கேள்வியை மீண்டும் கேட்டான்: ''அந்தப் பெண்ணுக்கு ஏற்பட்ட. தொடர்பு, பலாத்காரத்தினால்தான் ஏற்பட்டது என்பதற்கு ஆதாரம் உங்கள் சோதனையில் இருக்கிறதா?''

டாக்டர் ராஜகோபால் குழம்பினார். கருணாகரனின் முகம் நினைவில் தோன்றியது. திரும்பி முனுசாமியைப் பார்த்தார். முனுசாமி வெறிக்கப் பார்த்துக் கொண்டு இருந்தார். பக்கத்திலிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டரின் கோபப் பார்வை டாக்டரை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. கைக்குட்டையால் தம் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

''இருக்கிறது'' என்றார். வார்த்தைகள் தயக்கத்துடன் வெளிவந்தன. முனுசாமியின் முகமும் இன்ஸ்பெக்டரின் முகமும் மலர்ந்தன. சம்பத் திகைத்தான். டாக்டரை முறைத்துப் பார்த்தான்.

''டாக்டர்! பலாத்காரம்தான் என்பதை எதை ஆதாரமாகக் கொண்டு சொல்லுகிறீர்கள்?'' — சம்பத் கேட்டான்.

''மறைவிடங்களில் தோன்றியிருந்த மாறுபாடுகள், அறிகுறிகள் இவைகளை வைத்து'' என்றார் டாக்டர். வார்த்தைகள் குழறியபடி வெளிவந்தன.

சம்பத் முகத்தைச் சுளித்தான். தனக்கு எதிரான பதிலை டாக்டர் கூறிவிட்டாரே என்று உள்ளூறப் புழுங்கினான். தாற்காலிகமாகத் தனக்குக் கிடைத்த தோல்வியை விழுங்கிக் கொண்டான். இருப்பினும் துணிந்து ஒரு கேள்வியைக் கேட்டான்.

''டாக்டர்! உங்கள் சோதனை ரிப்போர்ட்டில் கண்டுள்ள அறிகுறிகள், ஓர் ஆணும், ஒரு பெண்ணும் மிகுந்த வெறியுடன் முரட்

ஆடல் பாடல்



''என்ன செகரட்டரிவாள்! பாட்டுக் கச்சேரியிலே ஏன் அபிநயம் பிடிக்கிறுங்க?''

''அவங்க டான்ஸ் நன்று ஆடறவங்கன்னு எல்லோருக்கும் தெரியணுமாம்!''

''அப்ப டான்ஸ் சான்ஸே கொடுக்கிறது தானே?''

''கொடுத்துப் பார்த்தாச்சு! சும்மா நின்னுண்டு பாடிண்டிருந்தாங்க! நன்னாப் பாடுவார்னு எல்லோருக்கும் தெரியணுமாம் !''

டுத்தனமாகக் காதல் புரிந்திருந்தாலும் ஏற்பட்டிருக்கலாம் அல்லவா?''

இந்தக் கேள்வியை டாக்டர் எதிர்பார்க்கவில்லை. குழப்பத்துடன் நின்றார். சம்பத்தின் சாமர்த்தியத்தைப் போற்றுவதுபோல் நீதிபதி இலேசாகச் சிரித்தார். நீதிமன்றத்தில் சற்றுநேரம் அமைதி நிலவியது.

''சொல்லுங்கள், டாக்டர்'' என்றான், சம்பத்.

''ஏற்பட்டிருக்கலாம்'' என்றார் டாக்டர்.

''டாக்டர்! இதோ குற்றவாளிக் கூண்டில் நிற்கிறானே, இவன் என்ன நிறை இருப்பான்?''

டாக்டர் திரும்பிக் கைதிக் கூண்டில் நின்றிருந்த குருசாமியைப் பார்த்தார்.

''சுமார் நூறு பவுண்டு இருப்பான்.''

''இவனுக்கு வயது என்ன இருக்கும்?''

''இருபது'' என்று குறுக்கிட்டுச் சொன்னார் முனுசாமி.

''அந்தப் பெண்ணுக்கு வயது என்ன?''— சம்பத் கேட்டான்.

''இருபத்தைந்து'' என்று மீண்டும் குறுக்கிட்டுச் சொன்னார் முனுசாமி.

''அவள்என்னநிறை இருப்பாள்டாக்டர்?''

''நூற்றி ஐம்பது பவுண்டு இருப்பாள்''— டாக்டர் கூறினார்.

அதோடு குறுக்கு விசாரணையை முடித்துக் கொண்டு அமர்ந்தான் சம்பத். அதற்குப் பிறகு, போலீஸ்காரர்களை விசாரித்து முடித்துவிட்டுத் தம் வாதத்தை ஆரம்பித்தார் முனுசாமி.

தீவிரமாக வாதாடினார். கற்பழித்த குற்றத்துக்குத் தகுந்த தண்டனை கொடுக்கும்படி வேண்டினார்.

சம்பத் பேச எழுந்தபோது, முனுசாமி, அலட்சியமாகச் சிரித்தார். அதை அவன் இலட்சியம் செய்யவில்லை. அவன் பேசத் தொடங்கியதும், நீதிபதி கவனத்துடன் கேட்கத் தொடங்கினார்.

பலாத்காரம் ஏதும் நடக்கவில்லை என்று வாதாடினான். பலாத்காரத்துக்கான அறிகுறிகள் எதுவும் இல்லை. அவளுடைய உடலிலோ அல்லது அவனுடைய உடலிலோ ஒரு சிராய்ப்புக் கூட இல்லை என்பதை எடுத்துச் சொன்னான். அப்போது முனுசாமி குறுக்கிட்டு, ''வைக்கோல் போரின் மீது சாய்ந்தால் எப்படிச் சிராய்ப்பு ஏற்படும்?'' என்று இரைந்தார்.

''வைக்கோல் போர் கதை ஒரு கற்பனை. அவள் வீட்டில் மாடு ஏதும் இல்லை. எந்தத் தொழிலும் அவள் செய்யவில்லை. அப்படியிருக்க வைக்கோல் போர் அவள் வீட்டில் எப்படி இருக்க முடியும்? இதைத் தெரிந்து கொள்ளத்தான் அவள் வேறு ஏதாவது தொழில் புரிந்து சம்பாதிக்கிறாளா எனக் கேட்டேன். இரண்டாவதாக, ஒரு பயில்வானைப் போலக் கட்டுடலும், நல்ல உயரமும் நூற்றைம்பது பவுண்டு நிறையும் கொண்ட ஒரு பெண்ணை, இவனைப் போன்ற ஒரு பலவீனமான நூறு பவுண்டு நோஞ்சான் பலாத்காரம் செய்தான் என்பதே கற்பனைதான். அவளைப்பயமுறுத்திச் சம்மதிக்க வைக்க இவனிடம் ஆயுதம் எதுவும் இல்லை என்று அவளே சொல்லியிருக்கிறாள். வந்தானாம்! திடீரென்று அவளைப் பிடித்துக் கீழே தள்ளிக் கற்பழித்து விட்டானாம்! அவள், இடது கையாலேயே இவனைத் தூக்கி எறிந்து விடுவாள். அவளைப் போய் இவன் பலாத்காரம் செய்தான் என்பதை எப்படி நம்புவது, யுவர் ஆனர்? இவனை அவள் பலாத்காரம் செய்தாள் என்று சொன்னாலாவது நம்ப வழியிருக்கிறது'' என்று சம்பத் கூறியதும், நீதிமன்றத்தில் குபீரென்று சிரிப்பொலி எழுந்தது. நீதிபதியும் சிரித்தார்.

''ஆல் ரைட், நான் இப்போதே தீர்ப்பை டிக்டேட் செய்து விடுகிறேன்'' என்று கூறிய நீதிபதி பெஞ்ச் கிளார்க்கைப் பார்த்து ஸ்டெனோவைக் கூப்பிடும்படி உத்தரவிட்டார். ஸ்டெனோ வந்ததும் நீதிபதி தீர்ப்பைச் சொல்லத் தொடங்கினார். தீர்ப்பின் முடிவில் குற்றவாளியை நிரபராதி என்று தீர்மானித்து விடுதலை செய்தார்.

சம்பத் உற்சாகத்தில் உடல் பூரித்து நின்றான். தீர்ப்பின் முடிவை ஆவுடையப்ப பிள்ளையிடம் போனில் தெரிவிக்க ஓடினான். அவன் சொன்னதைக் கேட்டுவிட்டு ஆவுடையப்ப பிள்ளை அவனைப் பாராட்டினார். பிறகு, ''நீ உடனே புறப்பட்டு வா'' என்றார்.

''ஏன் சார்?'' — ஆவலுடன் கேட்டான் சம்பத்.

''நளினியின் அப்பா மிஸ்டர் ராகவன் வந்திருக்கிறார்.''

இதைக் கேட்டதும் சம்பத் நடுங்கினான்.

''என்ன சம்பத், நான் சொன்னது புரிந்ததா? சீக்கிரம் வா'' என்றார், ஆவுடையப்ப பிள்ளை.


''ஏன் சார்?''என்றான் மீண்டும். பீதியினால் குரல் கரகரத்தது.

''உன்னை மாப்பிள்ளை பார்க்க வந்திருக்கிறார். நளினி அனுப்பித்தான் வந்திருக்கிறாராம். நீ இந்த விஷயத்தை என்னிடம் சொல்லவே இல்லையே? நளினி ஒரே பிடிவாதமாக இருக்கிறாளாம், உன்னைத்தான் மணப்பதென்று. நானும் மிஸ்டர் ராகவனிடம் உன்னைப் பற்றிப் பெருமையாகச் சொல்லியிருக்கிறேன்'' என்றார் ஆவுடையப்ப பிள்ளை.

சம்பத் தன்னுடைய காதுகளையே நம்ப முடியாமல் திணறினான். ''தேங்க்ஸ் சார்'' என்று போனில் முனகினான். ஆவுடையப்ப பிள்ளை தொடர்ந்து பேசுவது கேட்டது.

''நீயே நளினிக்குப் போன் செய்து வழக்கில் வெற்றி பெற்றதைக் கூறிவிடு. சீக்கிரம் இங்கே வந்து சேர். உனக்காக மிஸ்டர் ராகவன் காத்திருக்கிறார்'' என்று கூறிவிட்டு ஆவுடையப்ப பிள்ளை போனைக் கீழே வைத்த பிறகும் சம்பத் போனைக் காதில் வைத்தவாறு சிலையாக நின்றுகொண்டிருந்தான்.

அவனுடைய மனக் கண்ணில் 'பென்ஸ்' காரும் பங்களாவும் தோன்றின.



Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

∴ப்யூராடான் உபயோகித்தால் அதிக நெல் விளைச்சல்

டாடா ∴பைஸன் ராலீஸ் வழங்கும் புதிய ∴ப்யூராடான் 3ஜீ மருந்து

நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்லுகிறது. இது பயிர் முழுவதும் பரவி செயலாற்றுவதோடு, அதிக பச்சையான நெற்பயிரைத் தருகிறது; ஹெக்டேருக்கு மற்ற பூச்சிக் கொல்லிகள் தருவதை விட 3 மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக விளைச்சல் தருகிறது.

உலகெங்குமுள்ள நெற்பயிர் விளையும் பிரதேசங்களில் மிகச் சிறந்த பூச்சிக் கொல்லி என்று போற்றப் படுகிறது ∴ப்யூராடான் 3ஜீ. இது பயிர் முழுவதும் பரவும் நஞ்சியல்பு கொண்ட மருந்தாகும். இதை நிலத்திலும், நெல் வயலிலுள்ள நீரிலும் போட்டால் பயிர்கள் வேர்கள் மூலம் அதை உறிஞ்சி, பயிர் முழுவதும் பரப்புகின்றன. இதனால் பயிரைக் கடித்து மெல்லும், துளைக்கும் மற்றும் அதன் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப் படுத்து-கிறது.

உங்கள் நெற்பயிருக்கு சிக்கனமான புதியமுறை, அதாவது விதைகள் / நாற்றுக்களைத் தோய்த்து எடுக்கும் முறைப்பற்றி உங்கள் வியாபாரியைக் கேளுங்கள். அதை ஒரு முறை கையாண்டு பாருங்கள். வியப்பூட்டும் பலன்களைக் கண்டு நீங்கள் அதிசயிப்பீர்கள்.

வியாபார விவரங்களுக்கு எழுதுக:
ராலீஸ் இந்தியா லிமிடெட்
∴பெர்டிலைஸர்ஸ் & பெஸ்டிஸைட்ஸ் டிவிஷன், 21, ரேவலின் ஸ்ட்ரீட், பம்பாய் 1.

மற்ற இடங்கள்: சென்னை, கல்கத்தா, லக்னௌ.

விசேஷ சிறப்பம்சங்கள்
∴ப்யூராடான் 3ஜீ, மேலாகத் தூவப்படும் பூச்சிக்கொல்லிகளை விடச் சிறந்தது; மிகவும் பயனுள்ளது.

- நெற்பயிரைத்தாக்கும் தண்டு துளைப்பான், தத்துப் பூச்சி, ஆனைக்கொம்பன், அரிக்-கும் பேன் ஆகிய பெரும்பாலான பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது.
- விசேஷ கருவிகளின் உதவியின்றியே கையாலேயே இந்த மருந்தை எளிதில் பத்திரமாகப் போடலாம்.
- கடித்து மெல்லும் பூச்சிகளையும் சாற்றை உறிஞ்சும் பூச்சிகளையும் கட்டுப் படுத்து-கிறது.
- பூச்சிகளை விரைவில் தாக்குவதற்காக பயிர் முழுவதும் உடனடியாகப் பரவி விடுகிறது.
- இதை மழை அடித்துச்செல்ல முடியாது... தெளிப்பு மருந்தைவிட நீண்ட காலம் பாதுகாப்புத் தருகிறது.
- தானிய மணியில் மருந்து தங்கவோ, நாற்றமடிக்கவோ செய்யாது.
- இந்தப் பயிரை அழிக்கும் பூச்சிகளை மட்டுமே பாதிக்கும்; பயிருக்கு சாதகமான பூச்சிகளுக்கு ஆபத்தல்ல.




RALLIS
TATA FISON
PESTICIDES

fmc furadan®
IS A REGISTERED TRADEMARK OF FMC CORPORATION

PATENT NUMBER 97322 OF FMC CORPORATION

அதிக நெல் விளைச்சல் பெற... ∴ப்யூராடான் 3ஜீ

OBM-3134 TAM



மாணிக்கம் — அந்தத் தறுதலையின் பெயர்தான். அவன் பெரிய வீட்டுப் பையன், இருந்தாலும் கூட என்னுடன் சரிசமமாகப் பழகுவான். நான் யார்? குப்பத்திலே பிறந்த பக்கிரி. யாருக்குப் பிறந்தேனோ — எங்கே எப்படி வளர்ந்தேனோ — எனக்கே தெரியாது.

எப்படியோ நானும் மனுசனாக வளர்ந்து விட்டேன்.

என்னை யாரோ தூக்கிப் பள்ளிக்கூடத்திலே போட்டார்கள். அஞ்சாம் கிளாசில் எங்கள் சிநேகிதம் தொடங்கியது. அப்புறம் தான் ஸ்கூலை விட்டு நின்றபிறகு கூட அவன் என்னைத் தேடிக் கொண்டு வருவான். அவனைப் பார்க்க நான் போவேன் — அவன் வீட்டில் என்னை யாரும் விரும்பா



இன்றைக்குத்தான் வார்டர் சொன்னார்: ''டேய் பக்கிரி! உனக்குக் காலையில் விடுதலை'' என்று.

''ஒருநாளா? இரண்டு நாட்களா? இந்தக் கட்டடத்துக்குள் நான் பத்து வருஷங்களுக்கு மேல் கழித்து விட்டேன். என்னை அடைத்திருந்த அறையின் ஒவ்வோர் அங்குலமும் எனக்கு அத்துபடி. வெளியே போனால்கூட என்க்குப் பாந்தமாகத் தோன்றாது.

எத்தனை நாட்கள் நான் வெளியே இருக்கப் போகிறேன்? எதற்காக இத்தனை வருடங்கள் இந்த உடலில் உயிரைத் தக்க வைத்துக் கொண்டிருந்தேனோ, அந்தக் காரியம் மட்டும் நடக்கணும். அப்புறம் என்னைத் தூக்கிலே போட்டால்கூட மெய்யாலும் நான் கவலைப்பட மாட்டேன்.

நான் செய்யப் போகும் வேலை பயங்கரமான படுபாதகம் போல எவருக்கும் தோன்றலாம். என்னைப் பொறுத்த வரை அது செய்யப்பட வேண்டிய ஒரு வேலை. கடித்த மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல் ஒரு நல்ல காரியம்.

என்னை ஏமாற்றி விட்டதாக நினைத்துக் கொண்டு இந்த உலகத்தில் நடமாடிக் கொண்டிருக்கிறான். அவன் கதையைத் தான் நான் முடிக்கப் போகிறேன். இந்தப் பத்து வருஷங்களாக — இரவும் பகலும் — அவன் துடிதுடித்துச் சாகும் காட்சியைத் தான் நான் என் மனக்கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதே காரியத்தை இப்போது என் கைகளால் நிறைவேற்றி வைத்து ஆனந்தமாக ரசிக்கப் போகிறேன்.

விட்டாலும் பயலுக்கு என்னவெல்லாமோ ஆசைகள். பார்ப்பதற்கு நான் அவன் அடியாள் போல் இருந்தேன். ஆற்றங்கரைப் பக்கத்தில் ஒரு புறம்போக்கு நிலம். ஒரு கிழவி — அதில் குடியிருந்தாள். சுற்றிலும் கீரையைச் சாகுபடி செய்து அதை விற்றுத் தன் பிழைப்பை நடத்தி வந்தாள். ஊரில் அவள் பெயரே கீரைக்காரக் கிழவிதான்.

கிழவி மட்டும் தனியாக இருந்திருந்தால் வம்பே இல்லை. அவளுக்கு ஒரு பேத்தி. வளர்ந்த கீரைத் தண்டு போல் தளதள வென்று கண்களைப் பறிக்கிறாற் போல் இருந்தாள். மாணிக்கத்துக்கு அவள் மேல் ஒரு கண். நாலு காசு விட்டெறிந்தால் எதுவும் நடக்கும் என்ற தைரியம். ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு மேல் என்னைத் துணைக்குக் கூப்பிட்டான். வாலைக் குழைத்துக் கொண்டு ஓடும் நாயைப் போல அவன் பின்னால் போனேன்.

அந்தப் பெண் மட்டும் தனியாக இருந்தாள். பக்கத்தில் கூப்பிடு தூரத்தில் வீடு ஏதும் கிடையாது. கிழவியும் கூட இல்லை. எங்கள் இருவரையும் பார்த்தவுடன் அந்தப் பெண் முதலில் பயந்துதான் போனாள். எப்படியோ தன்னைச் சுதாரித்துக் கொண்டாள். ''ஆயா இல்லீங்களே!'' என்றாள் குடிசைக்குள் நுழையும் வழியை மறைத்துக்கொண்டு.

''ஆயா எதுக்கு? நான் உன்னையல்ல தேடிக்கிட்டு வந்தேன்?'' என்றான், அவளை உள்ளே தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த மாணிக்கம். ''டேய் பக்கிரி? நீ வெளியே இருடா. ஆள் அரவம் கேட்டால் குரல் கொடு!'' என்று என்னை அவன் எச்சரிக்க மறக்கவில்லை.

என் முகத்தில் — இந்த ஏழைப் பக்கிரியின் கண்களில் அவள் எதைக் கண்டாளோ, நான் அறியேன். என் கால்களில் விழுந்தாள். என் கைகளைப் பிடித்தாள். ''உன்னை என் கூடப் பிறந்த அண்ணனா நெனச்சுக் கேட்கிறேன். என் மானத்தைக் காப்பாத்து.. ஏழைக்கு ஏழை, உன் காலில் விழுகிறேன்!'' என்று கெஞ்சினாள்.

மாணிக்கத்தின் கண்களில் வெறி. அவள் கையைப் பற்றி இழுத்தான். நம்மை நம்பிய பெண்ணைக் கண்ணெதிரே ஒருவன் தொட்டு இழுப்பது எனக்கே தாளவில்லை. இறுகிப்போயிருந்தது என்று நான் நினைத்த என் நெஞ்சிலே கொஞ்சம் ஈரக் கசிவு இருந்திருக்க வேண்டும்.

''வாடா மாணிக்கம்... வேண்டாம்டா ....பாவம்டா... விட்டு விடு!'' என்றேன்.

''பாவமும் புண்ணியமும் பார்க்கிறவன் ஏண்டா என்கூட வரே?'' என்று அவன் அதட்டினான்.



எது தண்டனை?

அன்னம்

அவனுடைய முரட்டுப் பிடியிலிருந்து அவளை விடுவிக்க நான் முயன்றேன். பரிசாகக் கிடைத்தது ஓர் உதை. நான் என்னை மறந்தேன். இருவரும் அந்தக் குடிசை வாசலில் கட்டிப் புரண்டோம்.

அந்தச் சமயம் பார்த்துத்தானா அந்தக் கிழவி வர வேண்டும்? ''ஓடி வாருங்க ஐயா! வயசுப் பொண்ணு இருக்கிற வூட்டுக்குள்ளே புகுந்து அக்கிரமம் பண்ணறானுவளே ... மாரியாத்தா .. காளியாத்தா ... இவுகளை வாரிக்கினு போக!'' என உரத்த குரலில் ஒப்பாரி வைத்தாள்.

மாணிக்கத்துக்கு ஏகக் கோபம். தான் திட்டமிட்டது நடக்கவில்லை என்று ஆத்திரம். ''சீ கிழவி! வாயை மூடு!'' என்றவன் பக்கத்திலிருந்த மண் வெட்டியை

அத்தான் ஆசை!



அந்தப் பெண்ணுக்கு யாரோ ஒரு பாட்டி சொல்லி வைத்தாள்: "உன் அத்தானுக்கு நல்ல சமையல் என்றால் படுகுஷி. நன்றாகச் சமைத்துப் போட்டால் அவன் உள்ளத்தைக் கவர்ந்து விடலாம்!" என்று.

சமையல் அறையே கதி என்று அத்தானுக்கு ருசிருசியாக நள பாகங்களைச் சமைப்பதில் ஈடுபட்டாள் அந்தப் பெண்.

ஒரு நாள் அத்தான் அவளைச் சினிமாவுக்கு அழைக்கவே, "என் சகோதரியை அழைத்துச் செல்லுங்கள். நீங்கள் திரும்பியதும் சாப்பிடப் பிரமாதமாகச் சமையல் பண்ணி வைத்திருக்கிறேன்" என்றாள்.

"அப்படியா? சரி!" என்று அத்தான் அவள் சகோதரியைச் சினிமாவுக்கு அழைத்துச் சென்றான். அத்தானுக்கு அவள் சகோதரி மீது ஆசை விழுந்து விட்டது! வெளிப்படையாகத் தன் காதலைத் தெரிவித்தபோது, "என் அக்காவை யல்லவா நீங்கள் மணக்கப் போவதாகப் பெரியவர்கள் சொல்லி வருகிறார்கள்!" என்றாள் தங்கை.

"முதலில் உன் அக்காவைத்தான் மணக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் சமையல்காரி போல் அவள் வீட்டோடு அடைந்து கிடப்பது எனக்குப் பிடிக்கவில்லை!"

"நானும் உங்களுக்குத் தகுந்த மனைவியாக மாட்டேனே! எனக்குச் சமைக்கத் தெரியாதே!"

"கவலைப்படாதே! ஒரு சமையல்காரனைப் போட்டு விடுகிறேன்!" என்று கூறினான் அத்தான்!

- பி. எஸ். எம்.

எடுத்து அவள் மேல் வீசி விட்டான். கிழவி கீழே விழுந்தாள். அருகேயிருந்த என் உடை ரத்தத்தால் நனைந்தது.

அந்தப் பெண் பெரிதாக ஓலமிட ஆரம்பித்தாள். நாங்கள் இருவரும் திசைக்கொருவராக ஓடி அந்த இருளில் மறைந்தோம்.

மறுநாள் பகல் பன்னிரண்டு இருக்கும். நான் ஒளிந்திருந்த கொல்லைக்காட்டுக்குப் போலீஸ் நாய் வந்து விட்டது. என்னை உதைத்து ஸ்டேஷனுக்கு இழுத்துப் போனார்கள். அந்தப் பெண் அங்கு இருந்தாள். நான் என்ன தப்பு செய்தேன்? கொலை செய்தது மாணிக்கம் ... நடந்ததை அப்படியே சொன்னேன்.

அந்த இன்ஸ்பெக்டர் சிரித்தார். அந்தப் பெண் கொடுத்திருந்த வாக்குமூலத்தை எனக்குப் படித்துக் காட்டினார். நான் திடுக்கிட்டுப் போனேன். நான் ஒருவன் மட்டும் தான் குடித்து விட்டு அவள் குடிசைக்கு வந்தேனாம். தப்பா நடக்க ஆரம்பித்தேனாம். கிழவி கூச்சல் போட்ட போது நான்தான் மண் வெட்டியால் அடித்தேனாம்.

"ஸார்! இது அத்தனையும் பொய் ... மாணிக்கம்தான்..." என்று நான் ஆரம்பித்தேன்.

"சும்மா இரப்பா! ... மாணிக்கமாவது வைரமாவது! நீ சொல்ற ஆள் நேற்றுக் காலையிலிருந்து ஊரிலே இல்லை ... நம்பத் தகுந்த சாட்சி இருக்கு!" என்றார்.

மாணிக்கம் துரோகம் செய்து விட்டான். அவன் பணம் வேலை செய்து விட்டது.— உண்மை பொய்யாகிப் பொய் சட்ட பூர்வமாக மெய்யாக்கப்பட்டு விட்டது. மாணிக்கம் கூடப் பரவாயில்லை. தன் உயிருக்குப் பயந்து என்னை மாட்டி விட்டுத் தான் தப்பித்துக் கொண்டான். என்னை அண்ணன் என்று அழைத்த இந்தப் பெண் ஏன் இப்படி மாற வேண்டும்? எப்படிப் பயமுறுத்தினார்களோ? என்ன கொடுத்து வாங்கினார்களோ?

என்னைச் சிறையில் அடைத்தார்கள். நான் என்ன கதறியும் என் வாதம் எடுபடவில்லை. முதல்நாள் முதல் மாணிக்கம் மதுரையில் இருந்ததற்கு அடுக்கடுக்காகச் சாட்சிகள் கூண்டிலேறிச் சத்தியம் செய்து சொன்னார்கள். தொங்க வேண்டியதுதான் என்ற நிலை வந்தாகி விட்டது. குடிவெறியில் திட்டமிடாமல் செய்த குற்றம் என எண்ணி ஆயுள் தண்டனை வழங்கினார்கள்.

நல்ல பிள்ளையாகச் சிறையில் நடந்து கொண்ட காரணத்துக்காக எனக்குப் பத்து வருஷங்களில் விடுதலை கிடைத்து விட்டது. நானா நல்ல பிள்ளை? நான் எப்படிப்பட்டவன் என்று இன்னும் ஒரு வாரத்துக்குள் தெரியப் போகிறது.

வெளியில் வந்து விட்டேன். சொந்த ஊருக்கு டிக்கெட் எடுத்து இறங்கியும் விட்டேன்.

அந்த மாணிக்கம் பயலைப் பற்றி விசாரித்தேன். பூர்விகமான அந்தப் பெரிய வீட்டில் தான் இருக்கிறானாம். ஏதோ 'பிஸினஸ்' செய்து பிழைக்கிறானாம். எல்லா 'பிஸினஸூம்' இன்றுடன் முடிந்துவிடும்.

கையில் நான் எந்த ஆயுதமும் எடுத்துக் கொள்ளவில்லை. அவன் கழுத்தை நெரிக்க என் இரண்டு கைகள் மட்டும் போதும். என் சக்தியை எல்லாம் அந்த விரல்களில் கொண்டு வந்து எத்தனை நாட்கள் பழகி இருக்கிறேன்.

அவன் வீட்டுக்குப் பக்கத்தில் இருளடைந்த மூலையில் காத்திருந்தேன். இரவு ஒன்பது மணிக்கு மேல் அவன் வந்தான். சாய்த்துச் சாய்த்து நடக்கும் அந்தப் பழைய நடை இன்னும் மாறவில்லை.

என்னை அவன் கடந்து சென்றதும் சட்டென்று பாய்ந்து அவன் சட்டைக் காலரைப் பிடித்துப் பலமாக இழுத்தேன். மற்றொரு கையால் அவன் வாயை இறுகப் பொத்தினேன்.

"நான்தாண்டா பக்கிரி. உன் கணக்கைத் தீர்க்க வந்திருக்கும் எமன்!" என்று இருண்ட அந்த மூலைக்குள் அவனை இழுத்தேன்.

அவன் திமிறினான். என் கையைப் பிடித்து இழுத்து அப்புறப்படுத்த முயற்சி செய்தான். "கொஞ்சம் இரு! நீ வருவாய் என்று எனக்குத் தெரியும். நான் காத்துக் கொண்டு தான் இருந்தேன். என் வீட்டுக்குள் வா!" என்றான்.

'பரவாயில்லையே ... பயல் கோவையாக நான்கு வார்த்தை பேசக் கற்றுக் கொண்டு

விட்டானே' என நினைத்தேன். மறுபடியும் மாட்டி விடுவானோ?

என் தயக்கத்தை அவன் புரிந்து கொண்டான். ''பயப்படாமல் என்னுடன் வா... உன்னை யாரும் தடுக்க மாட்டார்கள். வீட்டுக்குள் யாரும் இல்லை...'' என்றான் அவன்.

யாருக்குப் பயம்? எனக்கா? இன்று பயல் என்னிடமிருந்து தப்பித்தாலும் இன்னொரு நாள் மாட்டாமலா போகிறான்?

உள்ளே நுழைந்த மாணிக்கம் விளக்கைப் போட்டான். அவன் முகத்தை நான் நன்றாகப் பார்த்தேன். தலையில் சொட்டை. கன்னங்களில் பயங்கரமான பள்ளங்கள். கண்களை வெளியே விழுந்து விடும் போல் துருத்திக் கொண்டிருந்தன. அப்பப்பா, ஒரே அருவருப்பு எனக்கு. ஜெயில் களி தின்ற நான் கூட நன்றாகத்தான் இருக்கிறேன்.

''என்னைக் கொன்று விட்டு நீ அந்தப் பெண்ணைத் தேடிப் போவாய், இல்லையா?'' என்று கேட்டான் அவன்.

''ஆமாம்!'' என்றேன் நான்.

''வேண்டாம். அவளை விட்டு விடு ... உனக்கும் அவளுக்கும் தொடர்பு இருந்தது என்று நம்ப வைக்கப் பல சாட்சிகளை உருவாக்கியிருந்தார் என் அப்பா. உண்மையைச் சொன்னால் அவளையும் உள்ளே அனுப்புவதாகச் சொல்லிப் பயமுறுத்தி அவளை அப்படிப் பேச வைத்து விட்டார்கள் ... பாவம், விட்டு விடு!'' என்றான்.

சைத்தான் வேதம் ஓதுகிறது. நான் அந்தப் பெண்ணை நினைத்துப் பரிதாபப்பட்டேன்.

''பக்கிரி! என்னிடம் பணம் இருந்தது. நான் ஆடாத ஆட்டம் இல்லை. சுவைக்காத இன்பம் இல்லை. ஆனால் இப்போது பார். வியாதிகளின் மொத்த உருவமாக நிற்கிறேன். என் பெண்டாட்டிக்குப் பைத்தியம். ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். இரண்டு குழந்தைகள். ஒருத்தனுக்கு இளம் பிள்ளைவாதம். மற்றொருவளுக்குப் பிறவியிலிருந்து கண் பார்வை கிடையாது. தாயாதி ஒருவனுடன் வழக்கு — ஐந்து வருஷங்களாக நடக்கிறது. வழக்கு முடிந்த பிறகு சொத்து ஏதும் மிச்சம் இராது. நான் தினமும் படும் நரகவேதனை எனக்குத்தான் தெரியும். நான் கோழையடா, பக்கிரி. சாகக் கூடத் துணிவு இல்லை. நீ என்னைக் கொன்றுவிடு. நான் உன்னைத் தடுக்க மாட்டேன்.'' கைகள் இரண்டையும் கட்டிக் கொண்டு அவன் என்னைப் பார்த்தபடியே நின்றான்.

நான் பல்லைக் கடித்தபடி அவனை நெருங்கினேன். என் கைகள் அகலமாக விரிந்தன. அத்தனை விரல்களும் துடித்தன. என் கைகள் அவன் கழுத்து முழுவதும் பரவின.

என்னுள் ஒரு பொறி தட்டியது. ''டேய் பக்கிரி! மாணிக்கத்தைக் கொல்வதால் அவனுக்கு என்ன நஷ்டம்? சாவில்தான் அவன் நிம்மதி அடங்கியிருக்கிறது. அவனைக் கவலைகளிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் விடுவித்து விட்டு, அதற்காக நீ தூக்கில் தொங்குவதா?''

என் கைகளை நான் விலக்கிக் கொண்டேன். மாணிக்கத்துக்குச் சாவு தண்டனையல்ல. வாழ்க்கைதான் அவனுக்கு நரகம்.

வேகமாக வெளியே நடந்தேன்!



ஆறு வயதுச் சிறுவன் பள்ளிக்கூடத்தில் கரும் பலகையைப் பார்க்க முடியவில்லை என்று பெற்றோரிடம் கூறினான். உடனே அவனைக் கண் வைத்தியரிடம் அழைத்துச் சென்றனர் பெற்றோர்.

''ஏன் கரும் பலகையைப் பார்க்க முடியவில்லை?'' என்று கண் டாக்டர் வினவினர்.

''ஏனென்றால் ஒரு தடிப் பையன் என் முன்னால் உட்கார்ந்துகொண்டு மறைக்கிறான்!'' என்று பதில் சொன்னான் சிறுவன். - பி. எஸ்.

O O O O

பதவியில் கழுதை!



ஆப்ரஹாம் லிங்கன் ஒரு குட்டிக் கதையை அடிக்கடி தம் நண்பர்களிடம் சொல்வது வழக்கம். அது இதுதான்:

''ஒரு மன்னன் தன் மந்திரியிடம், ''இன்று மழை பெய்யுமா?'' என்று கேட்டபின்பே வேட்டைக்குச் செல்லும் வழக்கம் உடையவன்.

ஒரு நாள் மந்திரியை அழைத்து ''இன்று மழை வருமா?'' என்று கேட்டான். மந்திரியும் ''வராது'' என்று கூறவே இருவரும் வேட்டைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

போகும் வழியில் குடியானவன் ஒருவன் தன் கழுதையுடன் வந்து கொண்டிருந்தான். மன்னனைக் கண்டதும் அவன், ''மகாராஜா! கொஞ்ச நேரத்தில் மழை வரும்'' என்று எச்சரித்துவிட்டுப் போனான்.

சிறிது நேரத்தில் குடியானவன் சொன்ன மாதிரியே பலமான மழை பெய்ய ஆரம்பித்தது. அரசனும் மந்திரியும் நன்றாக நனைந்து விட்டனர். வேட்டை முடிந்து திரும்பும் வழியில் அந்தக் குடியானவனை அரசன் கண்டுபிடித்து ''உனக்கு எப்படித் தெரியும் மழை வரும் என்று?'' என்று கேட்டான்

அதற்குக் குடியானவன், ''எனக்குத் தெரியாது ராஜா! ஆனால் என் அதிசயக் கழுதைக்குத் தெரியும். அது மழை வரும் நேரங்களில் தன் காதுகளை முன்னுக்கு நீட்டிக் கொள்ளும். உடனே மழை வரும் என்று தெரிந்து கொள்வேன்'' என்று சொன்னான்.

இதைக் கேட்டதும் அரசன் தன் மந்திரியைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டுக் குடியானவனின் கழுதையைத் தன் மந்திரியாக நியமித்துக் கொண்டான்.''

இப்படிக் கதையை முடித்த லிங்கன் மேற்கொண்டு சொன்னர்: ''அதில்தான் அந்த மன்னன் மாபெரும் தவறு செய்து விட்டான் என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் அது முதற்கொண்டு எல்லாக் கழுதைகளுமே ஏதாவது பதவி வேண்டுமென்று அலைகின்றன!''-கண்ணன்

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran


பவுடரினால் துலக்கிய
இடத்திலே கீறல்
விழுந்ததுதான் மிச்சமா?
மாசில்லாத பளபளப்பை வீசிட
வைப்பது விம்.
கசடு இல்லை!
பிசுக்கு இல்லை!
கீறல் இல்லை!
Vim

மகாத்மாவின் உபவாசங்கள்



மகாத்மா காந்தியடிகள் தம் வாழ்நாட்களில் அநேகஉபவாசம் இருந்திருக்கிருர். நாட்டின் நலனுக்காகவும் மக்களின் முன்னேற்றத்துக்காகவுமே உபவாசம் இருந்திருக்கிருர். ஆத்மீகத் தூண்டுதல் ஏற்படும் பொழுதெல்லாம் உபவாசம் இருந்திருக்கிருர்.

உபவாசத்தைப் பற்றிய காந்திஜியின் கருத்து :

''சொந்த லாபத்துக்காக உபவாசம் இருக்கக் கூடாது. அது பிறரைப் பய முறுத்துவதற்கு ஒப்பாகும். என்னிடம் யார் யார் அன்பு கொள்கிருர்களோ. அவர் களைச் சீர்திருத்தவே நான் உபவாசம் இருந்து வருகிறேன்.''

மகாத்மா காந்திஜியின் உபவாசங்களாவன :

14– 4–1919	3 நாட்கள்	முதல் உபவாசம். அஹமதாபாத் ஆலைத் தொழிலாளர் களின் சம்பள உயர்வுக்காக.
– 9–1921	5 நாட்கள்	வேல்ஸ் இளவரசரின் இந்திய விஜயத்தை எதிர்த்து மக்கள் செய்த கலவரம் அடங்க.
8– 2–1921	5 நாட்கள்	தம்மைத் தாமே தூய்மை செய்து கொள்வதற்காக.
18– 9–1924	21 நாட்கள்	ஹிந்து முஸ்லிம் சகோதரத்துவம் ஏற்பட.
–11–1925	5 நாட்கள்	ஆத்மீகத் தூண்டுதலின் பேரில்.
20– 9–1932	6 நாட்கள்	ஏர்வாடா சிறையில் – ஹிந்துக்கள் – ஹரிஜனங்கள் ஒற்றுமைக்காக – தீண்டாமை விலக.
8– 5–1933	21 நாட்கள்	ஆத்மீகத் தூய்மை கொள்ள.
16– 8–1933	8 நாட்கள்	புனு சிறையில்.
– 7–1934	7 நாட்கள்	ஹரிஜன இயக்கத்துக்கு விரோதமாக நடந்த செயல்களின் பிராயச்சித்தத்துக்காக.
– 3–1939		ராஜ்கோட் மக்களின் பிரஜா உரிமைக்காக.
10– 2–1943	21 நாட்கள்	ஆயுட்காலமெல்லாம் அஹிம்சைக்காகவே காந்திஜி பாடு பட்டிருக்க நாட்டில் நடந்த கலவரத்துக்குக் காந்தியே பொறுப்பாளி என்று லின்லித்கோ பிரபு கூறினர். அதைக் கேட்டு வேதனையுற்ருர் காந்தி அடிகள். அவ்வேதனைக்குச் சாந்தி வேண்டுமென உபவாசம்.
15– 8–1947	1 நாள்	சுதந்திர நாள்—கல்கத்தாவில் நடந்த கலவரங்களை அடக்க.
1– 9–1947	3 நாட்கள்	கல்கத்தாவுக்கு நல்ல அறிவு திரும்ப வேண்டுமென.
13– 1–1948	6 நாட்கள்	இதுவே மகாத்மாவின் கடைசி உபவாஸம்: தில்லியில் ஒரு மதத்தினர் மற்ற மதத்தினரைக் கொடுமைப்படுத்துவதை நிறுத்த.

மகாத்மாவின் உபவாசத்துக்கான விதிகள்:

1. முதலிலிருந்தே மன ஆற்றலைச் சேமித்து வையுங்கள். 2. உபவாச காலத்தில் உபவாசத்தை மறந்து வேறு எதையாவது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருங்கள். 3. முக்கியமாக உணவைப்பற்றி நினைக்காதீர்கள். 4. தண்ணீரை நிறையக் குடியுங்கள். 5. காலை இளம் காற்றை அவசியம் பெற வேண்டும். 6. வெதுவெதுப்பான நீரில் ஒத்தடம் கொடுத்துக் கொள்ளுங்கள். 7. திறந்தவெளியிலேயே தூங்குங்கள். 8. ஆண்டவனைப் பற்றி நிறைய சிந்தியுங்கள். அநேக உண்மைகள் புலப்படும்.

– சி. ஆர். திருவேங்கடத்தான்

படம்: 1924ல் 21 நாள் உண்ணுவிரதம் இருந்தபோது மகாத்மா காந்தி ஆறு வயதான இந்திராவைப் புன்னகையுடன் வரவேற்கிருர்.

தமிழர்களுக்கு உள்ள ஆங்கில மொழி அறிவு, அந்தப் பாஷையில் பேசுகிற சாமர்த்தியம் வேறு எந்த மாநிலத்தாருக்கும் கிடையாது என்று சொல்லுவதுண்டு.

தற்போது தமிழ்நாட்டில் ஆங்கிலமொழி பகிரங்கமாகக் கொலை செய்யப்படுகிறது. பஸ்களிலிருந்து சர்வகலாசாலைக் கூடங்கள் வரை, எல்லா இடங்களிலும் ஆங்கில மொழியின் கழுத்தை நெரித்துக் கொல்லுகிறார்கள்.

போன ஏப்ரல் அல்லது மே மாதம் கல்லூரி மாணவர்கள்இருவர் பஸ்ஸில்பேசிக் கொண்டு வந்தார்கள்.


''நான் எழுதினதுதான் Correct!''

''No நீ Correct இல்லே.''

''என்ன Bet?''

"I will treat you!"

"O K. If I loose I will treat you!"



மாபெரும் சொத்து. ஒரு ஷேக்ஸ்பியரையும், மில்டனையும், ஒரு சர்ச்சிலையும் ஷாவையும் நமக்கு அந்யோன்யமாகத் தெரியப் படுத்திய மொழி. காந்திஜியும் ராஜாஜியும் நேருவும் எழுதிப் பேசி உலகத்தையே ஆட்கொள்ளக் காரணமாக இருந்த மொழி. இந்த மொழியைத் தங்களுடைய பேச்சுக்களினாலும், எழுத்துக்களினாலும் சித்திரவதை செய்பவர்களை எப்படி மன்னிப்பது?

களின் உச்சரிப்புக்களும் எளிமையாக இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் அங்கேயும் ஆங்கிலம் கொலை செய்யப்படுகிறது. ஓர் உதாரணம் [எங்கேயோ எப்போதோ படித்தது:]

ஒரு சிறந்த ஆட்டக்காரனுக்கு ஒரு கல்லூரியில் இடம் கொடுக்க மறுத்து விட்டார் பிரின்ஸிபால். கல்லூரி மாணவர்கள் அவரை முற்றுகையிட்டுக் கெஞ்சினார்கள். அவனில்லாவிட்டால் வெற்றிக் கோப்பைகள் வராது என்று மன்றாடினார்கள். ஒரு சிறு பரீட்சையில் அவன் தேறினால் ஏற்றுக் கொள்வதாக முதல்வர் சொல்லிப் பரீட்சை நடத்தினார். அதாவது Coffee என்கிற வார்த்தையில் உள்ள எழுத்துக்களைச் சரியாகச் சொல்ல வேண்டும். ஓர் எழுத்து சரியாகச் சொன்னால்கூடப் போதும்!

மொழியின் குரல் வளை

பி. வி. ஆர்.

இந்த "I will treat you!" என்ற வாக்கியம் மூன்று நான்கு தடவைகள் என் காதை அறுத்தன. 'Correct' என்கிற ஆங்கில வார்த்தையை எந்த இடத்தில் எப்படி உபயோகிக்க வேண்டும் என்று தெரியாமலிருந்த மாணவர்களைக் கண்டு அநுதாபம்தான் பிறந்தது.

ஒரு காலத்தில் மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களைமேற்கொள்ளுவது ஒரு நாகரிகமாக இருந்தது. சமூகத்தில் ஓர் அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுப்பதாக இருந்தது. இப்போது இந்தியாவே ஒரு 'மேனு'டாகி விட்ட நிலையில், மேனுட்டு மொழியான ஆங்கிலத்தைப் பற்றி நாம் பேசாமல் இருக்க முடியாது. வெள்ளைக்காரன் கொடுத்து விட்டுப் போன பல சொத்துக்களில் ஆங்கில மொழி



ஒரு பணக்கார வியாபாரி ஆங்கில வார்த்தைகளை உபயோகிக்க ஆசைப்படுவார். அவர் நாலாவது வகுப்புக்கு மேலே படிக்கவில்லை,

அவர் ஒருநாள் ஆறு வயது பேரப் பிள்ளையிடம் சொன்னார்:

''முருகா! Plantainஐத் துன்னுட்டு, Leatherஐ வெளியே போடு.''

இதற்கு அர்த்தம் பழத்தைத் தின்றுவிட்டுத் தோலை எறிந்துவிடு!

நம் நாட்டில்தான் இங்கிலீஷை இப்படிச் சின்னா பின்னப்படுத்துகிறார்கள் என்று நாம் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டாம். பெர்னாட்ஷாவே ஆங்கில மொழி எவ்வளவு மட்டமாக இங்கிலாந்திலேயே பேசப்படுகிறது என்பதை ஒரு புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்கர்கள் ஆங்கில மொழிக்காகத் தங்களை வளைத்துக் கொள்ளவில்லை. தங்கள் சௌகரியத்துக்காக மொழியை வளைத்துக்கொண்டார்கள். எளிமையான நடை போலவே, வார்த்தை



'K' என்று ஆரம்பித்தான் ஆட்டக்காரன். கூடியிருந்தவர்கள் மண்டையில் அடித்துக்கொண்டார்கள். 'A' என்றுதொடர்ந்தான் அவன். யார் முகத்திலும் ஈயாடவில்லை. பிறகு மெதுவாக 'U' என்றான்!

Coffeeயில், Kau வந்தாகி விட்டது. அடுத்த எழுத்து?

திடீரென்று ஆட்டக்காரனுக்குப் பௌதிக ஞானம் வந்தது. 'Physics' என்கிற வார்த்தையில் இருக்கும் 'Ph'ன் உச்சரிப்பு நினைவுக்கு வந்தது.

Kauph...

எல்லாரும் கண்களை மூடிக் கொண்டு தியானம் செய்தார்கள். இன்னும் ஓர் எழுத்து இருக்கிறது. அந்த எழுத்தாவது Coffeeல் இருக்கிற ஓர் எழுத்தாக இருக்க வேண்டுமே என்று!

ஆட்டக்காரன் மூச்சைப் பிடித்துக் கொண்டு முடித்தான்: Kauphi!



தலைவலியா?

சக்தி வாய்ந்த, நம்பகமான அனாஸின்

விரைவில் குணமளிக்கிறது



"தலைவலியைப் போக்க நான் எப்பொழுதும் அனாஸின் சாப்பிடுகிறேன்" என்கிறார், பம்பாயிலுள்ள ஒரு கப்பல் கம்பெனி அதிகாரி திரு. பரமசிவம்.

சக்தி வாய்ந்தது— ஏனெனில், உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது— திரு. பரமசிவம் போன்று லட்சக்கணக்கானவர்கள் அனாஸினை நம்புகிறார்கள். டாக்டரின் நம்பகமான மருந்தைப்போல பல மருந்துகளின் கலவையே அனாஸின்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவினால் ஏற்படும் வலிகள் மற்றும் நோய்கள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்


இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி



Regd. User of TM : Geoffrey Manners & Co. Ltd.

சிவத்தின் சக்தி நாராயண சகோதரி

8



ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி
காமகோடி சங்கராசாரிய
ஸ்ரீ ஸ்ரீ சுவாமிகள் ஸ்ரீ ஸ்ரீ

பரமேசுவரனும் ஸ்ரீமன் நாராயணனும் ஒரே வஸ்து; இரண்டல்ல. பெயர் வேறு, உருவம் வேறு, வேலை வேறு. ஆனால் உள்ளேயிருக்கப்பட்ட வஸ்து ஒன்றேதான். ஸ்ரீ சங்கர பகவத் பாதர்களின் அபிப்பிராயம் இதுதான். கேள்வியும் பதிலுமாக 'ப்ரச்னோத்தர ரத்னமாலிகா' என்று அவர் ஒரு கிரந்தம் செய்திருக்கிறார்.

அதில் ஒரு கேள்வி: 'பகவான் யார்?'

அதற்குப் பதில்: 'சங்கரனாகவும் நாராயணனாகவும் இருக்கிற ஒருவன் — சங்கர நாராயண: ஏக:'

இதிலிருந்து ஆசாரியாள் மனசில் சிவன், விஷ்ணு என்ற பேதபாவம் கொஞ்சம்கூட இல்லை என்றாகிறது.

இதே மனோபாவத்தில்தான் ஸ்மார்த்தர்கள் எல்லோரும், ஒவ்வொரு காரியத்தையும் 'பரமேசுவரப் பிரீதிக்காக' என்ற சங்கல்பத்துடன் ஆரம்பித்து, முடிவில் 'கிருஷ்ணார்ப்பணம்' என்று பூர்த்தி பண்ணுகிறோம்.

தீவிர வைஷ்ணவர்களைக் கேட்டால், விஷ்ணுதான் கடவுள்; சிவன் மற்ற ஜீவராசிகளைப்போல் என்பார்கள். இதே மாதிரி வீர சைவர்களைக் கேட்டால் சிவன்தான் முழுமுதல் தெய்வம்; விஷ்ணு ஜீவகோடியைச் சேர்ந்தவர்தான் என்பார்கள். இவர்கள் ஒவ்வொருவரது சித்தாந்தப்படியும் சிவன் அல்லது விஷ்ணுதான் எல்லா ஜீவராசிகளின் இருதயத்துக்குள்ளும் அந்தர்யாமியாக இருக்கிறார். இப்படி வைத்துக் கொண்டாலும் ஒன்று, சிவன் விஷ்ணுவின் இருதயத்தில் இருக்கிறார்; அல்லது விஷ்ணு சிவனின் இருதயத்தில் இருக்கிறார்.


சித்தாந்தம் என்று கட்சி பேசாமல் நடுநிலையிலிருந்து பேசக்கூடிய மகா கவிகளான காளிதாஸன், பாணன் முதலியவர்களுடைய வாக்கைப் பார்த்தால் ஒரே வஸ்துதான் பல தேவதைகளாக வந்திருக்கிறது என்று ஸ்பஷ்டமாகத் தெரியும். அநுபவ சிகரத்திலிருந்து பேசிய மகான்கள் தங்களுக்கென்று ஓர் இஷ்ட தெய்வம் இருந்தாலும் கூட, மற்ற தேவதைகளும் அதுவேதான் என்று தெளிந்து கூறியிருக்கிறார்கள். 'மகேசுவரனுக்கும் ஜனார்த்தனனுக்குமிடையே வஸ்துபேதம் துளிக்கூட இல்லாவிட்டாலும், என் மனசு என்னவோ சந்திரனைச் சிரசில் சூடிய பெருமானிடம்தான் விசேஷமாக ஈடுபடுகிறது' என்று ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் கூறுகிறார். 'நான் சைவன்தான்; சிவ பஞ்சாட்சர ஜபம் செய்கிறவன்தான். இருந்தாலும் காயாம்பூ நிறத்துக் கோபிகா ரமணனிடமே என் சித்தம் லயிக்கிறது' என்கிறார், 'கிருஷ்ண கர்ணாம்ருத'த்தில் லீலாசுகர்.

இஷ்ட தெய்வம் என்று ஒன்று இருக்கலாம். ஆனால் அதுதான் எல்லாமாகியிருக்கிறது என்பதால் அதுவேதான் மற்ற தெய்வங்களுமாகியிருக்கிறது என்ற எண்ணம் இருக்கவேண்டும். ஒன்றைப் பிடித்துக் கொண்டதற்காக இன்னொன்றை நிந்திக்கக் கூடாது. விஷ்ணுதான் கடவுள், சிவன் ஒரு ஜீவன் — அல்லது சிவன்தான் கடவுள், விஷ்ணு ஒரு ஜீவன் — என்றால் கூட ஒரு மூர்த்தியிடம் துவேஷம் பாராட்ட இடமில்லை.

ஒரு புராணத்தில் சிவன் விஷ்ணுவை நமஸ்கரிக்கிறார், இன்னொரு புராணத்தில் விஷ்ணு சிவனை நமஸ்கரிக்கிறார் என்பதால் இவர்கள் சின்னவர்களாகிவிடவில்லை. அவர்கள் பெரிய பக்தர்கள் என்ற தினுசிலாவது அவர்களை நமஸ்கரிக்கத்தான் வேண்டும். சிவனை நமஸ்காரம் பண்ணு என்று சிவனே சொல்லாமல் விஷ்ணு அதை நமக்குக் காரியத்தில் உபதேசிக்கிறார்; இப்படியே நமக்கு விஷ்ணு பக்தி உண்டாக்கச் சிவன் விஷ்ணுவைப்பூஜிக்கிறார்.

முன்னே சொன்ன 'ப்ரச்னோத்தர ரத்னமாலிகை'யில் இன்னோரிடத்தில், 'மேலான தெய்வம், பரதேவதை, எது?' என்ற கேள்வியை எழுப்பிக் கொண்டு அதற்கு 'சித்சக்தி' என்று பதில் சொல்கிறார் ஸ்ரீ ஆசார்யாள். சித்சக்தி என்பதுதான் பரப்பிரம்மத்தின் பேரறிவு. அதுதான் அத்தனை தேவதைகளுமாயிற்று. அதுவே நமக்கு நல்லறிவு தரும் ஞானாம்பிகை. அந்த ஞானாம்பிகைதான் நமக்கு எல்லா விதமான பேத புத்தியும் போவதற்கு அநுக்கிரகிக்க வேண்டும்.





□ லக்ஷ்மி நாராயணர் கோவில்.
□ ஜந்தர் மந்தர்.
□ டில்லி பஜார்.
□ தான் நிறுவ விரும்பும் ராஜ்யத்தைப் பற்றிக் கனவு காணும் இடைப் பையன். — பின்னல் சந்திரகுப்த மௌரியன். பாராளுமன்றக் கட்டிடத்தின் முன் உள்ளது இச் சிலை.

தலைநகரிலே ஒரு தமிழன்!

ஒவ்வொரு மனிதனுக்கும் தனித் தன்மை இருப்பது போல் ஒவ்வொரு நகரத்துக்கும் தனித் தன்மை உண்டு. அதை நகர்வலம் வரும் ஒவ்வொருவரும் அவரவர் உள்ளத்தில் உணரலாம்.

தில்லிப் பட்டணம் மகாபாரத காலத்திலிருந்து வழி வழியாக, பலப் பல சாம்ராஜ்யங்களைக் கண்டும், இன்றும் புதுமையும் உற்சாகமும் கொண்டு மிளிரும் நகரமாகும்.

புது தில்லியின் தனித்துவத்தை நான் சென்று கொண்டிருந்த ஜி. டி. எக்ஸ்பிரஸ் ஆக்ராவை அடைந்தபோதே நுகரத் தொடங்கி விட்டேன். ஆக்ராவைக் காலை 8 மணி அளவில் ரயில் அடைந்தது. என் பெட்டிக்குள் திபுதிபு என்று 35 முதல் 40 வயதுக்குள் மதிக்கத் தகுந்த நால்வர் ஏறினார்கள். நன்கு சலவை செய்த வெள்ளை பைஜாமா ஜிப்பா அணிந்தவர்கள். ஒரே உற்சாகமாக ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு ஹிந்தியில் கேளிக்கையும் நகைச் சுவையுமாகப் பேசிக் கொண்டு வந்தார்கள். வண்டியில் நெடுந்தூரப் பயணிகள் பெஞ்சுகளில் அமர்ந்திருந்ததால் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. மேல் பலகையில் ஓர் எம்பு எம்பி உட்கார்ந்து விட்டார்கள் — சப்ளாங்கால்' போட்டுக் கொண்டு. அட்டகாசப் பேச்சுத் தொடர்ந்தது. காலை ஆகாரம் வேண்டுமா என்று சிப்பந்தி வந்தான். இன்னொரு சிப்பந்தி தட்டு நிறைய ஆம்லெட் கொண்டு வந்தான். முதல் சிப்பந்தியிடம் உப்புமா வாங்கினார்கள். ஆம்லெட்டும் வாங்கினார்கள். மற்றொரு சிப்பந்தி காப்பி கொண்டு வந்தான். எல்லாரிடம் இந்நால்வரும் வேண்டிய அளவு வாங்கிக் கொண்டார்கள். வாங்கிய வேகத்தில், செய்த அமர்க்களத்தில் அந்த ரயில்வேத் தொண்டர்களுக்கு எவ்வளவு உப்புமாப் பொட்டலம் கொடுத்தோம்? எத்தனை ஆம்லெட் கொடுத்தோம்? எத்தனை கப் காப்பி கொடுத்தோம்? என்ற கணக்கே மறந்து விட்டது. இல்லை, அவர்களால் கணக்கு வைத்துக் கொள்ள முடியவில்லை! ஆனால் அந்நால்வரும் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு 'நீ உப்புமாவுக்குக் கொடு! நான் காப்பிக்குத் தருகிறேன்' என்று பேசி முடிவெடுத்துப் பணம் தந்தார்கள். சிப்பந்திகள் முகத்தில் நிறைவிருந்தது. கணக்குப் புரியாது போனாலும் பணம் தாராளமாகவே கிடைத்திருக்க வேண்டும்!

வண்டி நகர்ந்தது. பெட்டியினுள் ஒரு பிச்சைக்காரி பாடும் குரல் கேட்டது. பதினெட்டு வயது மதிக்கத் தகுந்த பெண் உருதுப் பாடலைப் பாடிக் கொண்டு வந்தாள். அவள் பார்க்கவும் அழகாக இல்லை. பாடிய முறையும் நன்றாயில்லை. எனினும் நமது நண்பர்கள் பிரமாதமாகத் தலையை அசைத்து உடலையே அசைத்து ரசித்தார்கள். திடீர் என்று அவர்களில் ஒருவர் ''இந்தப் பிச்சைக்காரிக்கு நீ ஒரு ரூபாய் தந்தால் நான் இரண்டு ரூபாய் தருகிறேன்!'' என்று சவால் விட்டார்.

''நான் இரண்டு ரூபாய் கொடுத்தால் நீ நாலு ரூபாய் தருவாயா?'' என்றார் பக்கத்திலிருந்த நண்பர்.

''சரி!'' என்றார் முதலில் பேசியவர்.

இருவருமே பிச்சைக்காரிக்குக் கொடுத்தார்கள். வாங்கிக்கொண்ட பிச்சைக்காரி தொடர்ந்து பாடிக் கொண்டே யிருந்தாள்.



நகர்வலம்

இரண்டாம் நபர் மீண்டும் ஐந்து ரூபாய் நோட்டை எடுத்தார். ''நீ பத்து ரூபாய் தருவாயா?'' என்று கேட்டார்.

''நீ கொடுத்துவிட்டால் நான் நிச்சயம் பத்து ரூபாய் தருகிறேன்'' என்றார் முதல் நண்பர்.

அப்படியே இருவரும் போட்டி போட்டுக் கொண்டு அந்தப் பிச்சைக்காரிக்குக் கொடுத்தார்கள். கிட்டத்தட்ட 32 ரூபாய் சேர்ந்தது. ஐந்து நிமிஷங்களில் சம்பாதித்து விட்டாள்! பிறகு எல்லாருமாகச் சேர்ந்து பிச்சைக்காரியை அனுப்பி வைத்தார்கள்.


பிச்சைக்காரி போனாளோ இல்லையோ, முதல் நண்பர் தாமே பாட ஆரம்பித்து விட்டார். அதை ஒருவர் பாராட்டினார். மற்ற இருவர் கேலி செய்தனர். ஆனால் அதை அவர் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. பாடிக் கொண்டே யிருந்தார், ராகத்துக்கு ஏற்ப உடலை நெளித்து வளைத்து.

''நீங்கள் ஆக்ராவைச் சேர்ந்தவர்களா? தில்லியைச் சேர்ந்தவர்களா?'' என்று இதுகாறும் சும்மா இருந்த நான் என்னுடைய ஓட்டை உடைசல் ஹிந்தியில் கேட்டேன்.

தாம் உண்மையில் ஹரித்வாரைச் சேர்ந்தவர் என்றும், கையில் இரண்டு ரூபாயுடன் தில்லிக்கு வந்தவர் என்றும், இங்கு சாந்தினி சௌக்கில் மருந்துக் கடை வைத்து நடத்தி வருவதாகவும் கூறினார். தாம் இப்போது எவ்வளவோ சௌகரியமாக இருந்த போதிலும் ஏழைகளை மறப்பதில்லை என்றும் ஒவ்வொரு சனிக்கிழமையும் சுமார் நூறு பேருக்கு அன்னதானம் செய்து வருவதாகவும் சொன்னார். பகவத்கீதையில் தமக்கு அளவுகடந்த ஈடுபாடு என்றும், அதனை உருது மொழியில் அகவற்பா முறையில் மொழிபெயர்த்திருப்பதாகவும் தெரிவித்தார். கூறுவதோடு அவர் சும்மா இருந்தால் தேவலையே! தில்லி சென்றடையும்வரை தமது உருது பகவத்கீதையை எனக்குப் பாடிக் காட்டி, ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் அந்தப் பாடல்களின் கருத்தை விளக்கி வந்தார். எனக்குப் போரடித்தது என்பது உண்மையானாலும் அவருடைய பகவத்கீதை பக்தியையும் உருது மொழிப் பற்றையும் வியந்து கொண்டே யிருந்தேன்! இதுதான் தில்லி!

* * *

புது தில்லி ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும் திடுக்கிட்டேன். 'எப்படி நாம் சென்னைக்குத் திரும்பி விட்டோம்!' என்று. ஏனெனில் புது தில்லி ஸ்டேஷனுக்கு வெளியே நின்றிருந்த டோங்கா வண்டிகளின் குதிரைகள் சென்னை ஜட்கா வண்டிக் குதிரைகளை விட மோசமாக இருந்தன! ஒரு காலத்தில் உடற் புஷ்டியான குதிரைகள் கம்பீரமான அழகுடன்



டது தில்லியின் தார் ரோடுகளில் 'டக் புக்' என்று குளம்புச் சத்தம் செய்து கொண்டு டோங்காவை இழுத்துச் சென்றன. அது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அதில் சவாரி செய்வதே ஓர் அரிய அநுபவம். டாக்ஸிகளும், ஆட்டோ ரிக்ஷாக்களும், பட்படிகளும் தில்லிக் குதிரைகளைத் தெனாலி ராமன் கழுதைகளை விட மோசமான நிலைக்குக் கொண்டு வந்து விட்டன. இந்தப் பரிதாப நிலையைக் கண்டபோது உள்ளம் அழுதது! 'எத்தனையோ சாம்ராஜ்யங்களின் அழிவைப் பார்த்த தில்லியே! குதிரை வளர்ப்பு என்னும் அரிய கலையையும் அழித்துவிட்டு என்ன மிதப்பில் இருக்கிறாய்' என்று கடிந்து கொள்ளத் தான் தோன்றியது.

* * *

பாரத நாட்டின் தலைநகரமாதலால் பல தேச மக்கள் சர்வ சாதாரணமாகப் போய்க் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். பல்வேறு மொழி பேசும் ராஜ்யங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றிக் கலந்து உறவாடுவதைப் பார்க்கலாம். ஏன், சமயத்தில் ஆண் பெண் வித்தியாசம் கூடத் தெரியாமல் பழகுவதைப் பார்க்கலாம் — முக்கியமாகத் தில்லி பஸ்களில்.

தில்லி பஸ்களைப் போன்ற மட்டமான பஸ்கள் உலகில் எங்கேயுமே இராதோ என்று தோன்றுகிறது. ஏறுவதற்கும் இறங்குவதற்கும் ஒரே வழி.

ஒரு பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தேன். ஒரு பெண் முண்டியடித்துக் கொண்டு எனக்கு முன் ஏறப் பார்த்தாள். நான் பெண்ணாயிற்றே என்று சற்றுப் பின்னுக்கு ஒதுங்கி அவள் ஏற வழி விட்டேன். அப்போது என்னைப் பின்னாலிருந்து யாரோ வன்மையாக முட்டித் தள்ளிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பெண் வசதியாக ஏற வழி செய்தபின் என்னை அவ்வளவு பலமாகப் பின்னாலிருந்து தள்ளியது யார் என்று பார்த்தால் அங்கு நின்றதும் ஒரு பெண்!

இந்தச் சந்தர்ப்பத்தில் புதுதில்லியில் சகஜமாக வழங்கும் ஒரு நகைச்சுவை நினைவுக்கு வருகிறது.

''இந்தப் பாரத நாட்டில் ஒரே ஒரு ஆண் தான் இருக்கிறார் — அவர்தான் இந்திரா காந்தி!''

* * *

தில்லி யமுனை நதிக் கரையில் உள்ளது. அதன் எதிர்க் கரையில் உள்ளது ஷஹாதரா என்ற ஊர். அங்கு மகாத்மா—ராஜாஜி இவர்களின் பேரரான திரு ராஜ்மோகன் காந்தி, திரு சண்டிராம் என்பவரின் மகளான சௌபாக்கியவதி உஷாவைத் திருமணம் செய்துகொண்டார். திரு சண்டிராம் ஸிந்திக்காரர். அவர்கள் ஹிந்துக்களானாலும் 'கிரந்த சாகேப்' என்ற சீக்கிய மத நூலை வைத்துத் தான் திருமணம் நடத்துவார்கள். ஆனால் ராஜ்மோகன் — உஷா திருமணத்தை ஆரிய சமாஜ முறைப்படி நடத்த ஏற்பாடாகி இருந்தது.


ராஜ்மோகன் — உஷா திருமணத்தை மிகச் சிறப்பாக நடத்தித் தந்த புரோகிதர் அக்னி வளர்த்து ஹோமம் செய்வித்ததுடன் நகைச் சுவையும் கௌரவமும் கம்பீரமும் தொனிக்க ஸப்தபதியின் பொருள் விளக்கி ஏழு அடிகளை எடுத்து வைக்கச் செய்தார். மன நிறைவை ஏற்படுத்திய இந்த வைபவத்துக்கு ஜப்பானிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும், லாவோஸிலிருந்தும் மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தும் கூட ராஜ்மோகன் காந்தியின் நண்பர்கள் வந்து பங்கு கொண்டனர். ராஜ்மோகனின் மாமா திரு ஸி. ஆர். நரசிம்மன், பெரியம்மாள் நாமகிரியம்மாள், அன்னை லட்சுமி தேவதாஸ் காந்தி ஆகியோர் சென்னையிலிருந்து வந்திருந்தனர். ஸ்ரீ ராஜ்மோகனின் பெரியப்பாவின் புதல்வி ஸ்ரீமதி சுமித்ரா குல்கர்னி (எம்.பி.) அவர்கள் வீட்டிலிருந்து பிள்ளை வீட்டார் கல்யாணம் நடக்கும் பெண் வீட்டுக்குப் பெரும் கோஷ்டியாகச் சென்றனர். மொரார்ஜி தேசாய், ஸ்ரீமன் நாராயண், பியாரேலால், பெர்னாண்டஸ், டாக்டர் சுசீலா நய்யார், மணிபென் பட்டேல் முதலிய காந்தி பக்தர்களையும் காந்தி குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் ஒருமிக்கக் காண நேர்ந்தபோது மெய்சிலிர்த்தது. உண்மையும் நேர்மையும் கரம் கோத்துக் கொண்டு ராஜ்மோகன் திரு



"இருபது வருஷங்களுக்குப் பிறகு உன்னைப் பார்க்கிறேன். ஆளே மாறிட்டியே வசந்தா !''
"நான் வசந்தா இல்லை ; வத்சலா !''
"அடிப் பாவி! பெயரைக் கூடவா மாற்றிக்கிட்டே ?''



"அப்பெண்டிஸைடிஸ் ஆபரேஷன் பண்ணினேனே. ஏதாவது தொந்தரவு இருக்கிறதா ?''
"ஒரே ஒரு தொல்லைதாங்க. அந்தப் பேரைச் சரியா உச்சரிக்க வரமாட்டேங்குது.''



"டேய், மரத்துமேலே என்னடா பண்ணறே?''
"கீழே விழுந்த மாங்காயை மறுபடியும் ஒட்ட வைக்கிறேன்!''

மணத்துக்கு வந்து ஆசி கூறியது போல் தோன்றியது.

மாலை புது தில்லி பட்டேல் ஹவுஸில் ஒரு வரவேற்பு நிகழ்ந்தது. ஸ்ரீ சி. சுப்பிரமணியம், வி. கே. ஆர். வி. ராவ், இன்னும் பல பத்திரிகையாளர்கள், நண்பர்கள், பிரமுகர்கள் எல்லோரும் வந்து சிறப்பித்தனர். மணிலா போகும் வழியில், ஸ்ரீமதி எம். எஸ்ஸும் ஸ்ரீ சதாசிவம் அவர்களும் இரவு எட்டேகால் மணிக்கு வந்து மணமக்களுக்கு ஆசி கூறினர்.

*　　*　　*

தில்லிக்குப் போனால் நம் பிரதிநிதிகள் கூடிப் பேசும் மக்கள் சபை (லோக் சபா)க்கு விஜயம் செய்யாமல் திரும்பலாமா?

நான் சென்ற அன்றுதான் லைசென்ஸ் ஊழல் விவகாரம், பொய்க் கையெழுத்து விஷயம் பேசப்பட்டது. பார்லிமெண்டில் சோஷலிஸ்ட் அங்கத்தினர் மது லிமயே மிக ஆக்ரோஷத்தோடு பேசிக் கொண்டிருந்தார். அதையொட்டிப் பழைய காங்கிரஸ் மிச்ரா பேசினார். ஜனசங்க அங்கத்தினர் வாஜ்பாய் பேசினார். இடை இடையே ஆளும் கட்சியினரின் குறுக்கீடுகள் இருந்தன. சபா நாயகர் தில்லான் சபையைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தப் படாத பாடு படவேண்டியிருந்தது. ஊழல் புகார்கள் பற்றி ஹிந்தியில் தான் மேற்குறிப்பிட்ட அத்தனை பேரும் பேசினர். திரு மாவ்லங்கர் ஆங்கிலத்தில் தெளிவாகப் பேசினார். பிறகு கையெழுத்துப் போட்ட அங்கத்தினர்கள் சிலர் தங்களுக்கும் இந்த லைசென்சு ஊழலுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்றும், தாங்கள் எந்த மகஜரிலும் கையெழுத்துப் போடவில்லை என்றும் எழுதி வைத்துப் படித்தனர்.

ஒருவருக்குப் பின் ஒருவராக அவர்கள் படித்த வாசகம் ஒரே மாதிரியிருக்கவே, சபையிலிருந்த பிலூ மோடி "இவர்கள் அத்தனை பேரும் ஒரே வக்கீலை ஏற்பாடு செய்து கொண்டிருப்பார்கள் போலிருக்கிறதே!'' என்றார். சபையில் 'கொல்' என்ற சிரிப்பு எழுந்தது.

ஒட்டுமொத்தத்தில் சபையைப் பற்றி ஓர் அபிப்பிராயம் கேட்டால், "ஐயோ கடவுளே! இவர்களா நம் பிரதிநிதிகள்! எந்த விஷயமும் புரிந்து கொள்ளக் கூடிய திராணி யில்லாதவர்கள் ஐம்பது கோடி மக்களின் அன்றுட வாழ்க்கையைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்கும் பொறுப்பில் இருக்கிறார்களே ! மோதிலால் நேரு, விட்டல்பாய் பட்டேல், புலாபாய் தேசாய், சத்தியமூர்த்தி போன்ற அறிவு ஜோதிகள் ஒளிவீசிக் கொண்டிருந்த சபையில் வெறும் மின்மினிப் பூச்சிகள் உட்கார்ந்திருக்கின்றனவே!'' என்ற சோர்வுதான் ஏற்பட்டது!

*　　*　　*

"மலாய் மந்திர்! மலாய் மந்திர்!'' என்று பஸ் கண்டக்டர் சொன்னார்.

மலாய் என்றால் ஹிந்தியில் பாலாடை என்று எனக்குத் தெரியும். மந்திர் என்றால் கோவில் என்பதும் எனக்குத் தெரியும். அதனால் "பாலாடைக் கோயில்'' என்று அர்த்தம் செய்துகொண்டு அது என்ன கோவிலாக இருக்கும் என்று வியந்தேன்.

பக்கத்தில் இருந்த நண்பர் "ஆர். கே. புரத்தில் உள்ள உத்தரசுவாமி மலைக் கோயிலைச் சொல்கிறான். மலை—மலாய் ஆயிற்று; கோயில் மந்திர் ஆயிற்று. இரண்டும் சேர்ந்து 'மலாய் மந்திர்' ஆயிற்று'' என்று விளக்கினார்.

தமிழ்க் கடவுள் முருகன் தில்லியில் குடியேறியது மட்டுமல்ல; வேங்கடமுடையானும் தில்லியில் ஜாகை பிடித்து விட்டார்.

பொதுவாக வட நாட்டில் தமிழ் நாட்டில் வழங்கும் புரம் "புர்'' ஆகும். ஆனால் தில்லியில் உள்ள **ராமகிருஷ்ணபுரம்** மட்டும் சுருக்கப்படாமல் எல்லா மொழி பேசும் மக்களின் நாவிலும் புரம் என்றே வழங்கப்படுவதைக் கேட்டபோது தமிழ்நாட்டிலிருந்து சென்ற எனக்குத் தேனகத்தான் இனித்தது. குறைகளும் இந்தப் பயணத்தில் தோன்றுமலில்லை. அவற்றில் முக்கியமானது பட்டேல் சிலையும் மற்ற பல தலைவர்கள் சிலைகளும் உள்ள புது தில்லியில் 'ராஜாஜியின் சிலை இல்லையே' என்ற ஏக்கம்தான். தமிழகத்திலிருந்து தலைநகர் செல்லும் யாருக்குத்தான் இது மனத்தை உறுத்தாது? — **எஸ்.வி.எஸ்.**

சீகானுபவமும் சாவகாசப்பாணியும்!

பத்திரிகையாளனுக்குப் பல சந்தர்ப்பங்களில் பிறர் எழுதியதைக் குறைக்கவோ கூட்டவோ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். சில தருணங்களில் இரண்டு பெரிய 'பாரா'க்களை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக நாலு வரிகளில் விஷயத்தை எழுத நேரும். பின்னல் அதைப் படிக்கும் அந்த எழுத்தாளர், ''இரண்டுவரிகள் எழுதிச் சேர்த்தாலும் அதை என் பாணியிலேயே எழுதியிருக்கிறீர்கள்'' என்று சொன்னல் பத்திரிகையாளனுக்குச் சந்தோஷம் தாங்காது. மற்றெருவரது நடையைக் கையாண்டு வெற்றி பெற்றதில் உண்டாகும் அளவுக்கு மகிழ்ச்சி அந்தப் பத்திரிகையாளரது எழுத்தையே யாராவது புகழ்ந்துரைத்தால்கூட ஏற்படாது.




நவரசாவின் ஓர் அங்கமாக 'கானரசா', கணபதி ஹோமம், ஆலோசனைக் குழு சகிதம் கனஜோராக விநயகசதுர்த்தியன்று ஆரம்பமாகியது. தொடங்கி வைத்தவர் நீதிபதி கே. எஸ். வேங்கடராமன். முதல் கச்சேரி செம்மங்குடி. கச்சேரி சிறப்பு தவிர அனைவர் கவனத்தையும் கவர்ந்தவை இரு விஷயங்கள். ஒன்று சேஷாத்திரியின் அடக்கமானதும் அபாரமான அழகுடன் கூடியதுமான மேடை அலங்காரம். இரண்டாவது, 'ஹிந்து'ப் பத்திரிகையில் வயலின் பற்றிய சர்ச்சை ஒருவழியாக ஓய்ந்திருக்கும்போது புதிதாக மிருதங்கம் பற்றிய சர்ச்சை கிளம்புவதானுலும் சரி என்பது போல் சிவராமனுக்கு வைக்கப்பட்டிருந்த மைக்! கலைஞர்களுக்கும் நீதிபதிக்கும் படத்தில் மாலையிடுபவர் ஒய். ஜி. பி.



விருந்தா



நேதுனூரி



அருண் பரத் ராம். டி.ஸி.எம். நிறுவனத்தின் டைரக்டர்களுள் ஒருவரான இவர் பல அலுவல்களுக்கிடையில் கலை பயில ஆர்வம் காட்டுவது மெச்சத் தகுந்ததல்லவா? ரவிசங்கரின் சிஷ்யரான இவரது ஸிதார் கச்சேரி பாலசுப்பிரமணிய சங்கீத சபா ஆதரவில் ஸ்ரீநிவாச சாஸ்திரி கூடத்தில் நடந்தது. அடக்கமான இந்த அவைக்கு மைக் இல்லாதிருந்திருந்தால் இனிமை கூடியிருக்கும்.

இதுபோன்று பிறருடைய பாணியைப் பின்பற்ற வேண்டிய சந்தர்ப்பங்கள் வயலின் வித்வான்களுக்கு அடிக்கடி நேரும். சிலர் இதைப் புரிந்து கொள்ளாமல் தம் போக்கிலேயே ஏதோ வாசித்துக் கொண்டு போவார்கள். பாட்டும் வயலினும் சேராமல் சிரமப்படுத்தும். ஆனல் இந்த விஷயமெல்லாம் லால்குடி ஜெயராமனுக்குச் சொல்லித் தரவா வேண்டும்? அண்மையில் நேதுனூரி கிருஷ்ணமூர்த்திக்கு அனுசரணையாக அவர் வாசித்தது மிகுந்த மன நிறைவைக் கொடுத்தது.

இந்தக் கச்சேரி கேட்கக் குரோம்பேட்டை கல்சரல் அகாடமிக்குப் போயிருந்தபோது, ''செருப்பு ஜாக்கிரதை, செருப்பு ஜாக்கிரதை! பக்கத்திலேயே வைத்துக் கொள்ளுங்கள்'' என்று நிர்வாகிகள் திரும்பத் திரும்பச் சொன்ஞர்கள். 'அட ஆண்டவனே! குரோம்பேட்டையிலேயே செருப்புக்கு ஆபத்தா, கிராக்கியா?' என்று எண்ணிக் கொண்டேன். இருந்தாலும் செருப்பை மடியில் கட்டிக் கொள்ள இஷ்டமின்றி ஓர் ஓரமாகவே நடப்பது நடக்கட்டும் என்று கழற்றிப் போட்டுவிட்டு ஜமக்காளத்தின் மையத்தில் போய் உட்கார்ந்தேன்.

ஒரு பக்கம் அறிஞர் அண்ணு கம்பீரமாகக் காட்சி தர, மறுபுறம் கலைஞர் கருணுநிதி மாருப் புன்னகையுடன் திகழ, சில குழந்தைகள் அங்குமிங்கும் ஆனந்தக் கூச்சலிட்டு ஓடி விளையாடிக் கொண்டிருக்க, வேறு சில குழந்தைகள் அழுகுரல் எழுப்ப, போக்குவரவு அரங்கத்தில் நேதுனூரி கிருஷ்ணமூர்த்தியின் கச்சேரி ஆரம்பமாயிற்று!

திகைப்பும் கவலையுமாகக் கேள்விக் குறிகளைத் தேக்கி என் மனைவி என்னை ஏறிட்டுப் பார்த்தபோது, ''கவலைப் படாதே. எட்டு மணிக்கெல்லாம் களைப்பு மேலிட்டுக் குழந்தைகள் தூங்கி விடும்'' என்று தைரியம் சொன்னேன். அதன்படியே சந்தடி அடங்கவும் காம்போதி ராக ஆலாபனை



கிருஷ்ண கான சபா பிற்பகல் கச்சேரியில் சிறப்பாகப் பாடி, பலரது பாராட்டுதல்களைப் பெற்ற ஷோபன ரங்காச்சாரி



"ஆபீசில் என் பெயரைக் கடைநிலை ஊழியர் என்று மாற்றிட்டாங்க."

"ஆபீஸ் டயத்தில், வெற்றிலைபாக்குக் கடை, பொடிக் கடை, சோடாக் கடை என்று போய் வருகிற நிலையில் இருப்பதால் கடை நிலை என்கிறார்களோ!"

ஆரம்பமாகவும் மணி எட்டு அடிக்கவும் சரியாக இருந்தது!

ஒருவர் கச்சேரியை வர்ணிக்கும்போது 'ஆனந்தமா யிருந்தது' என்போம். இன்னொருவர் பாட்டு 'இனிமையா யிருந்தது' என்போம். வேறொருவர் கச்சேரியை 'விருவிருப்பா யிருந்தது' எனக் கூறுவோம். நேதுனூரி கச்சேரியைச் 'சுகமாயிருந்தது' என்று வர்ணிக்கத் தோன்றுகிறது. கேட்பவருக்கு மட்டுமல்ல, பாடுகிறவரே சுகானுபவத்துடன் பாடுவதை உணர்கிறோம். ராக ஆலாபனைகளின்போதும் சரி, ஸ்வரப் பிரஸ்தாரங்களின் போதும் சரி, பார்ப்பதற்கு மிக இலகுவாகப் பாடுவது போன்ற பிரமையை ஏற்படுத்துகிறார். அதற்காக அவர் எடுத்துக்கொள்ளும் பிரயாசை முயற்சிகளெல்லாம் அவருக்கு மட்டுமே தெரியும்!

ஸ்வரப் பிரஸ்தாரங்களின்போது கணக்கு வழக்குக்குக் குறைவில்லை. என்றாலும் சுகானுபவத்துக்கே இங்கும் முக்கியத்துவம் தந்து பாடுகிறார். உருட்டல் புரட்டல் ஏதுமின்றி உதிரிப் புஷ்பங்களாகச் சொரிகிறார்.

ஆங்கிலத்தில் அச்சான அவர் பெயரை நாளிதழில் பார்த்து விட்டு நேதனூரியா, நேதுனூரியா, நெடுனூரியா எப்படி உச்சரிப்பது என்று புரியாமல் நான் ஆரம்பத்தில் குழம்பியதுண்டு. அதேபோல்தான் அவரும் தமிழ்ப் பாடல்களைப் பாடும்போது சிறிதளவு சிரமப்படுகிறார். அதுவும் இப்போதெல்லாம் ரொம்ப முன்னேற்றம்தான். சுந்தரத் தெலுங்கோ அவர் உச்சரிப்பில் அழகு கூடிப் பொலிகிறது.

ராமபத்திரனின் மிருதங்க வாசிப்புக்கும் முத்தாய்ப்புக்கும் எத்தனை சபாஷ் வேண்டுமானாலும் போடலாம்தான். என்றாலும் நேதுனூரி ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் கண்டிப்பாகத் தாமே சபாஷ் போடுவது என்ற பழக்கத்தைக் குறைத்துக் கொள்ளலாம். அதேபோல் மைக்கில் ஃபீட் பாக் ஏற்படுகிற அளவுக்கு ஓங்கி அறைந்து தாளம் போடுவதையும் விட்டுவிடலாம். சின்ன விஷயங்கள் தாம், ஆனால் ரசிகர்களை நெருடுகிறவை. அன்று ஒரு மெர்க்குரி விளக்கின் 'நொய்' சத்தம் பாடகருக்குக் காதை உறுத்த அவர் அதை அணைக்கச் சொல்லவில்லையா?

குரோம்பேட்டை கல்சரல் அகாடமி குறைந்த வசதிகளுடன் அடக்கமாக நடத்தப்பட்டாலும் அங்கத்தினர்கள் அடக்கம் காட்டவில்லை - ரசிப்பதிலும், அப்ளாஸ் கொடுத்துக் கலைஞரை உற்சாகப்படுத்துவதிலும். இந்த அடக்கமின்மை ரொம்ப மகிழ்ச்சி அளித்தது!

மகிழ்ச்சி அளித்த மற்றொரு விஷயம், செருப்பு கடைசிவரையில் காணாமல் போகாமலே இருந்து குரோம்பேட்டையின் நற்பெயரைக் காப்பாற்றியதுதான்!

* * *

மணிக்கு ஐந்நூறு மைல் வேகத்தில் பறக்கும் ஜெட் விமானத்தில் ஏறி அமெரிக்கா சென்று திரும்பியவர்தாம் ஸ்ரீமதி பிருந்தா என்றாலும், பாட்டு விஷயத்தில் 'என்ன அவசரம்? எதுக்கு இறக்கையைக் கட்டிக்கிட்டுப் பறக்கணும்?' என்று கேட்பது போலிருக்கும் அவர் சங்கீத பாணி. சாவகாசமாகப் பாடலின் ஒவ்வொரு சொல்லையும் அந்தச் சொல்லின் ஒவ்வொரு எழுத்தையும் அந்த எழுத்தின் ஒவ்வொரு அசைவையும் தனித்தனியே நாம் கேட்டு ரசிக்கும்படி பாடுவார்.

வயதுக்கேற்ற அனுபவத்துடனும் அதையொட்டிய நம்பிக்கையுடனும் அவர் கிருஷ்ண கான சபையில் பாடியபோது அமைதியான கம்பீரத்துடன் பாயும் ஒரு நதி தீரம் நம் முன் நின்றது. மெருகேறிய சாரீரம் ராக பாவங்களை அழுத்தமாகப் புலப்படுத்தியது. தானத்தில் சிறந்தது நிதானம் என்பது சங்கீத உபயத்துக்கும் பொருந்தும் என்று கருதுபவர்களுக்கு அவர் கச்சேரி பெருஞ் செல்வம்தான்.

உடன் பாடிய வேகவாகினி தாயாரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்ததில் தம்மைப் பற்றிய கவலையைச் சற்றுப் புலப்படுத்தினாலும் அவர் அச்சமின்றிப் பாடலாமே என்றுதான் நமக்குத் தோன்றியது. பாடுவதற்கு அவர் பயப்பட வேண்டியதேயில்லை; பாடியபடியே கச்சேரியை டேப் ரிகார்டரில் பதிவு செய்வதற்குத்தான் அஞ்ச வேண்டும்! ரொம்ப நாசூக்காக அதைச் செய்தார் என்றாலும் அது மேடைப் பண்பாகாது.

பிருந்தாவின் ரசிகர்கள் அவர் எப்போது ராகமாலிகை பாடப் போகிறார் என்று காத்துக்கொண்டிருப்பார்கள். அன்று அவரது வராளியும் நீலாம்பரியும் அப்படி காத்திருந்தவர்களுக்குக் கர்ணாமிர்தமாய் ஒலித்தது.

—குட்டி கிருஷ்ணன்

ஊற்று

வையவன்

இயந்திரங்கள் வேலை செய்து கொண்டிருந்தன. ராடுகள் சுழன்று பாறைகளின் கல் மனத்தைக் குடைந்து குடைந்து குறிகள் போட்டுக் கொண்டிருந்தன.

அந்த யந்திரம் செய்த சித்து வேலைகளை இமைகொட்டாமல் பார்த்தான் நாச்சிமுத்து.

இப்படி ஒரு யந்திரம் மூன்று தலைமுறைகளுக்கு முன் இருந்திருந்தால் நம் வம்சம் இவ்வளவு சீர்குலைந்து போயிருக்காது என்று அவனுக்குப் பட்டது.

அதற்குள் கிணற்றுக்கு மேலே யாரோ வந்து நிற்பது நிழலாக விழுந்தது. அவர் காலில் இடறிக்கொண்டு ஒரு கல் புரண்டு கொண்டு வந்தது.

''யார்ராவன் அறிவு கெட்டவன். ஆளுங்க கண்ணுத் தெரியலே'' என்று யந்திர இரைச்சலை மீறிக் கத்திக் கொண்டு நிமிர்ந்து பார்த்தான் நாச்சிமுத்து.

அவன் பார்வை எழுபதடி உயரத்துக்கு மேல் பாறையும் முரம்பு மண்ணுமாகத் தாண்டிக்கொண்டு மேலே சென்றது.

அவனுடைய எட்டு வயதுப் பேரன் நின்று கொண்டிருந்தான்.

''டேய், கண்ணு, ஓரமாப் போடா... விழுந்துடப் போறே'' என்று கத்தினான். கிணற்றின் ஆழத்திலிருந்து பேசியதால் எதிரொலியும்கூட இரைந்தது.

அவனுக்குச் சட்டென்று ராமலிங்கத்தின் தகப்பனான தனது மகன் சுந்தரத்தின் கவனம் வந்தது.

'காலையிலிருந்து இந்த மிசின் வேலை செஞ்சுக்கிட்டிருக்கு.... அவ ஏன் என்னான்னு கூட வந்து பாக்கலியே... வீட்டிலே இருந்து எல்லாரும் வந்தாங்க. பொண்ணுங்களெல்லாம் வந்து கெணத்தைச் சுத்திக்கிட்டு நிக்குதுங்க. அவன் பொண்டாட்டி கூட ஒரு சொல் வரப் போகுதுன்னு வந்து தலையைக் காட்டிட்டுப் போயிட்டா. இவன் வரவேயில்லையே.'

குனிந்து நாச்சிமுத்து இயந்திரம் போட்ட குழிகளைப் பார்க்கத் தொடங்கினான். மேலே நிமிர்ந்து பார்ப்பதற்கு முன்னிருந்த தெம்பு இப்போது போய் விட்டது. ஒவ்வொரு குழிக்கும் பத்துப் பத்து ரூபாய் கடன் ஏறுவது போல் ஒரு நுட்பமான கணக்குப் புத்தி அவன் மகிழ்ச்சியைச் சீர் குலைத்தது.


'அவனுக்கு என்ன இதையெல்லாம் வந்து பார்க்க வேணும்னு. அவனைப் பொறுத்த வரை இந்த இயந்திரம் கூட அப்பன் ஆடும் இன்னொரு சூதாட்டம் போலத்தான் படும். மூணு வருஷமா கிணறு வெட்டுண்ணு காதிலே விழுந்தாக்கூட அவனுக்கு உடம்பெல்லாம் பத்தி எரியுது.

'எரியாதா பின்னே... ஒரு தலைமுறையா இரண்டு தலைமுறையா... என்னோட இது மூணாவது தலைமுறை. கிணறு கிணறுன்னு தண்ணித் தாகத்துக்காக இந்த அஞ்சு ஏக்கராவிலேயும் கொத்திக் கொதறிப் பார்க்காத இடமில்லை... இந்த வம்சம் தண்ணி தேடி அலைஞ்ச வம்சம்னு ஊருக்கே தெரியுமே... இதோ இப்பக் கரண்ட் வெடி வெச்சிப் பாக்கறாங்களாம்னு ஊரு எப்படிக் காத்துக்கிட்டிருக்கு. என்னமோ எலெக்ஷன்லே முடிவு சொல்றதுக்கு முன்னாடி ஜனங்க ஆவல்படறமாதிரி முப்பது நாப்பது பேர் கெணத்தைச் சுத்தி வேடிக்கை பாத்துக்கிட்டிருக்காங்க.'

தன் பிள்ளை வராததற்காக அவன் சார்பில் நியாயம் கற்பித்துக் கொண்டு போன நாச்சிமுத்துவின் மனம் ஊர் கூடிநின்று தண்ணீரைக் காணப் புதையல் எடுப்பது மாதிரி அவன் படுகிற பிரயாசையை வேடிக்கை பார்க்கும் உணர்வு வந்ததும் மீண்டும் அங்கலாய்த்தது.

'ஒன் தலைக்குக் கடனை வச்சுட்டு நான் சாக மாட்டேண்டா சுந்தரம்னு எத்தனை தடவை அவங்கிட்டே தைரியம் சொல்லியிருப்பேன். பாவிப் பையன் மூணு மாசமா பேச்சுவார்த்தையையே நிறுத்திப்பிட்டானே. யாருக்காக இனிமே இந்தக் கெணத்தை





ஐம்பதாண்டுகளுக்கு முன்பிருந்த துணிச்சல்!

இந்தியாவிலே 1924ம் வருடம் அக்டோபர் மாதத்தில் ரயில் கட்டணங்கள் குறைக்கப்பட்டன! அப்போதிருந்த ஜி. ஐ. பி. ரயில்வே நிர்வாகம் இத்துணிகரச் செயலைப் புரிந்திருக்கிறது. முதல் முந்நூறு மைல்களுக்கு முதல் வகுப்புக் கட்டணம் மைலுக்கு முப்பது பைசாக்கள் (பழைய பைசா, 3 பைசா = காலணு என்றிருந்தபோது) என்றிருந்ததை ஒரு மைலுக்கு 24 பைசாக்கள் என்று குறைத்தது! இரண்டாம் வகுப்புப் பிரயாணத்தில் முதல் முந்நூறு மைல்களுக்கு மைலுக்கு 15 பைசாக்கள் என்றிருந்ததை 12 பைசாக்களாக மாற்றியது! தகவல் : சுதாகரன்
ஆதாரம்: ஹிந்து

வெட்டறேன். அவனுக்காகத் தானே அவன் ஒருத்தனுக்காகத்தானே இந்தத் தள்ளாத வயசிலே எனக்கு இத்தனை பாடு! இது வெறும் பாடு மட்டுமா? இந்த மோட்டுப் பூமியிலே கெணறு வெட்டிப் பம்பு செட்டுப் போட்டு, தென்னையும், வாழையும் கரும்புமா குளுகுளுண்ணு கண்ணுக்குப் பச்சுணு ஒரு தரம் பார்த்துடணும்னு பாட்டனுரு ஆனமட்டும் பார்த்தாரு... அதே ஏக்கத்திலே செத்துப் போனுரு... அப்பா சாகறப்பவும் 'நாச்சிமுத்து... ஆனவரைக்கும் பாத்தேண்டா. மோட்டு நெலமும் வறட்டுக் கெணறுமா அஞ்சு பிள்ளைங்களோடே விட்டுட்டுப் போறேனே'ன்னு கையைப் பிடிச்சுக் கிட்டுக் கதறினுரு. நானும் அப்பிடியேவா ஏங்கிக்கிட்டுச் சாவட்டும்?

'கடன் கடன்னு அஞ்சி நடுங்கருனே படுபாவி... அஞ்சு ஏக்கராவிலேயும் தண்ணி மட்டும் விழுந்துட்டா ரெண்டு வருஷத்திலே கடன் தூசாய்ப் பறந்துடுமே... அது புரியலியே இந்தப் படிச்ச மடையனுக்கு!

'இந்த பூமிக்குப் பயந்துக்கிட்டு சைக்கிளிலே ஏறி இஸ்கூலுக்கு ஓடிப்பிட்டானே இவன் என்ன வெள்ளாளன்? பத்துத் தரம் தோப்புக்கரணம் போட்டு அதிகாரிக்கு சலாம் பண்ணி மாசச் சம்பளம் வாங்கவா இவனைப் படிக்க வச்சேன்? இந்த மண்ணோடே இவன் படிப்பை ஒட்டினு பூமியிலே தண்ணி பாய வைப்பான்னு நெனைச்சுப் படிக்க வைச்சா இவன் மண்ணை ஒதறிட்டு ஓடருனே...எங்கே போயி வேர் புடிச்சு நிப்பான்?..'

''நாச்சிமுத்து, இந்த ராடைக் கொஞ்சம் புடி'' என்று ஆபரேட்டர் கத்தினுர். சிந்தனை குலைய நாச்சிமுத்து எழுந்து போனுன்.

பிசாசு வேகத்தோடு அந்த ஆக்கர்போடும் ராட் அவன் பிடியை அதிர வைத்தது. அதன் உதைப்பை அனுபவிக்கும்போது அவனுக்குள் உரம் ஏறிற்று.

'மோது, மோது. வாழ்க்கையோட மோது. உனக்கு வயசாகிப் போனு என்ன, ஒனக்குப் பிள்ளை துணை வராட்டா என்ன, இந்த மண்ணிலே தண்ணி பாயணும்னு ஓங்க பாட்டன் நெஞ்சிலே ரத்தம் சொட்டியிருக்கு. ஓங்கப்பன் கண்ணிலே தண்ணி கொட்டியிருக்கு. தெய்வத்தின் காதிலே விழலேன்னுலும் இந்த பாறை மனசுக்குள்ளே விழும். மோது மோது'

ராடுகள் உலுக்கியெடுத்தவாறு சுழலும் வலிமையைத் தன் வைராக்கியத்தால் தாங்கிப் பிடித்தான் நாச்சிமுத்து. அவன் முகம் யந்திரத்தின் வலிமைக் கெதிராகப் போராடுவதிலிருந்த வெறியில் பிரகாசித்து நிமிர்ந்து ஆபரேட்டரைப் பார்த்தான்.

ஆபரேட்டர் அந்தக் காட்சியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

''முத்தண்ணு, நீங்க விடுங்க. ஓங்க கை ஒதறுது. உங்க பிள்ளை வாத்தியாரு எங்கே, ஸ்கூலுக்குப் போயிட்டாரா?'' என்று அவன் பற்றியிருந்த ராடைப் பிடிக்க முன்வந்தான் கேசவன். அவன் ஊர்க் குடியானவன். நாச்சிமுத்துவின் கிணற்றில் இந்த முறையாவது தண்ணீர் வந்துவிட வேண்டுமென்ற கிராமத்து அபிலாஷையின் பிரதிநிதி.

நாச்சிமுத்து நகர்ந்து கொண்டான். பிள்ளையைப் பற்றிச் சொல்ல ஒன்றுமில்லை. ஆனுலும் கேள்வியின் கூர்மை மனசைக் கீறிவிட்டது.

'ஊர்க்காரங்களே கேட்டுட்டாங்க. மூணு தலைமுறையா கெணறு வெட்டின குடும்பத்திலே பொறந்த பிள்ளை வீட்டுக்குள்ளே தூங்கிக்கிட்டிருக்கு. பாக்கறவங்க ஏதாவது நெனப்பாங்கன்னு ஊருக்குப் பயந்தாவது வந்து தலையைக் காட்டப்படாது!'

நாச்சிமுத்துவுக்கு அந்த விஷயம் சட்டென்று ஆவேசம் வந்த மாதிரி உலுப்பிற்று. படிகளின் மீது அழுந்தக் கால்வைத்தவாறு வேகமாகக் கிணற்றுக்கு மேலே போனுன்.

கிணற்றின் ஓரமாக நின்று கொண்டிருந்த பேரன் ராமலிங்கத்தைப் பார்த்து, ''ஓங்கப்பன் வீட்டிலே படுத்துக்கிட்டிருப்பான். கெணத்துக்கு வெடி வைக்கிறுங்கன்னு கூப்பிட்டுக்கிட்டு ஓடியா!'' என்று அவனை முடுக்கினுன்.

''போ தாத்தா. நான் மாட்டேன்'' என்று முழங்காலில் கையை ஊன்றியவாறு குனிந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ராமலிங்கம் ஆழ்ந்து போயிருக்கும் மனசைக் கலைத்துக் கொள்ள விருப்பமின்றிச் சொன்னுன்.

''போடா கண்ணு. உனக்குப் பம்பரம் வாங்கித் தர்றேன்.

பம்பரம் என்ற வார்த்தையைக் கேட்டதும் ராமலிங்கத்துக்குக் கண்கள் விரிந்தன. இருந்தாலும் முன்னெச்சரிக்கையாக ''எப்போ?'' என்று கேட்டுக் கொண்டான்.

''இன்னிக்குச் சாயங்காலம்!''

''நெஜம்மா? அப்புறம் ஏமாத்தக்கூடாது!''

''இல்லே. போய்க் கூட்டிக்கிட்டு வா.''

வயல் வரப்புக்களில் பேரன் ஓடினுன். அவன் ஓடும் வேகத்தையும் சாயலையும் பார்த்துக்கொண்டிருந்த நாச்சிமுத்துவின் கண்களுக்குக் கொல்லை கொல்லையாகக் கிணறு வெட்டித் தோற்ற சின்னங்களாக முரம்புத் திட்டுக்கள் குன்று குன்ருய் நிற்கும் காட்சி தெரிந்தது.

'இந்த வருஷம் எல்லா மண்ணையும் தள்ளி நெலத்துக்கு அடிச்சுடணும். மொரம்பு மண்ணு பூமிக்கு நல்ல வலுவான உரமாகும். கரும்பு போட்ட கை திடத்துக்குப் பன்னெண்டு மொழம் வரும்.'

தனது மனக் கோட்டையை நினைத்துச் சிரித்தான் நாச்சிமுத்து.

'அடியே'ங்கறதுக்குப் பெண்டாட்டியைக் காணோம். அதுக்குள்ளே புள்ள உத்தியோகம் பார்க்குமான்னு ஜோசியம் பார்த்த கதை... தண்ணி எங்கே இருக்கு கரும்பு முழம் போட்டு நிக்க?

அவனது பார்வை வம்ச வம்சமாக வானம் திறந்தால் தவிர தண்ணீருக்கு வக்கற்ற அந்தப் பூமியை ஏக்கத்தோடு பார்த்தன.

வானத்தை நாச்சிமுத்து அண்ணாந்து பார்த்தான். மனித முயற்சிகளை எள்ளிச் சிரிப்பது போல் சூரியன் காய்ந்தான். அந்தத் தகிப்பைப் பார்த்தபோது கீழே கிணற்றில் நடந்து கொண்டிருக்கும் வேலை குறித்துப் பயமாக இருந்தது.

'இதுவும் ஒரு கடனாப் போனா.. ஐந்நூற்றி என்பது ரூபா. வீட்டை அடமானம்போட்டு வாங்கிய பணம். இதோ வேட்டுக்கு ஆயத்தம் பண்ணிக்கிட்டிருக்காங்க. ஒரு வேட்டு அவுட்டாயிடும். அப்பவும் தண்ணி வரலேன்னா?'

அவன் நெஞ்சு அதிர்ந்தது. 'சீ இதென்ன அல்ப புத்தி. அப்படி நடக்காது. அதை மொதல்லே நான் நம்பணும். அந்த நம்பிக்கை இருந்ததனாலேதானே இஸ்டாம்பு மேலே கையை நாட்டிப் பணத்தை வாங்கினேன். ஏதோ ஒரு நம்பிக்கை இருக்கிறதனாலெதானே இந்தப் பாறுங்கல்லைப் பொளந்துக்கிட்டிருக்கேன். என்னை நானே நம்பாட்டி... அடிடா செருப்பாலே' என்று தன்னை உறுதி செய்து கொண்டான்.

தூரத்திலே வீட்டுக்குப் போன பேரன் திரும்பி ஓடி வந்து கொண்டிருந்தான்.

''என்னடா சொன்னான்?''

''அவுங்க வரலியாம் தாத்தா. அவங்களுக்கு வேலை இருக்காம்!'' என்று முகத்தில் அறைந்த மாதிரி ஆகிவிட்டது நாச்சிமுத்துவுக்கு. முகத்தில் பரவிய அவமானம் பேரனுக்குத் தெரிய வேண்டாம் என்று துண்டினால் முகத்தைத் துடைத்தவாறே ''சரி...'' என்று கீழே இறங்கினான் நாச்சிமுத்து.

''வெடி வைக்கப் போறாங்க, தூரப் போங்க, தூரப் போங்க'' என்று கத்தினார் ஆபரேட்டர்.

''தூரப் போங்க... ஓடுங்க... இன்னும் தூரமா!'' என்று விரட்டினான் நாச்சிமுத்து.

கிணற்றைச் சுற்றிக் குழுமியிருந்த கூட்டம் அந்தக்கரம்பு நிலத்தில் ஓடும் காட்சி எதற்கோ அஞ்சி மக்கள் ஓடுவது போல் வேடிக்கையாகத் தோன்றியது.

''டொம்'' என்று அமுக்கலான தொனியில் பேரிரைச்சல் கேட்டது. பூமி அதிர்ந்தது. பாறையும் கற்களும் புகையுமாகப் பூவாணத்துப் பொறிகள் உதைத்துக் கிளம்பிய மாதிரி கிணற்றுக்கு வெளியே பறந்தன.

ஒரு நிமிஷம் மௌனம்.

விஷமக் கவிதை - 1



பலன்

தொண்டுக் குழைத்தோர்
தொலைவில் இருந்தார் - அதைக்
கொண்டு பிழைத்தோர்
கொலுவில் சிறந்தார்! - தமிழழகன்

''ஓடியாங்கடா பார்க்கலாம்'' என்ற குரல்கள். திமுதிமுவென்று ஆட்கள் ஓடிவரும் ஓசை.

''முத்தண்ணா... டேய் முத்தண்ணா விழுந்திட்டிருக்காருடா. ஐயையோ! கல் தாக்கிடுச்சே... வாத்தியாரைக் கூப்பிடு... சுந்தரம்... சுந்தரம்...'' என்று கிலியோடு கூவினான் ஒருவன்.

நாச்சிமுத்துவின் மண்டையில் ஒரு கல் விழுந்து ரத்தம் ஊற்றுக் கிளம்பி வழிந்தது. மண்டையில்... நெற்றியில்... கண் மீது.. நாச்சிமுத்து சட்டென்று தலையில் வலித்த பாகத்தைக் கைகளால் அழுத்திக் கொண்டான். கூட்டம் அவரைச் சுற்றிக் கூடிற்று.

''கெணத்தை யாராவது போய்ப்பாருங்க'' என்று கமறிய குரலில் கூறினான் நாச்சிமுத்து. யாரோ போனவர்கள் கத்தினார்கள்.

''ஒரே பொகையா இருக்கு... பொகை அடங்கல்லே...''

அதற்குள் சுந்தரம் எழுந்து ஓடி வந்தான். தூரத்திலேயே தலையிலும் நெற்றியிலும் ரத்தத்துடன் தந்தை அமர்ந்திருப்பது அவன் கண்ணில் பட்டு நெஞ்சில் ஈட்டி எறிந்தது.

''அப்பா, அப்பா!'' என்று கதறியவாறே அவன் ஓடிவந்தான்.

கிணற்று ஓரமாக ஒரு குரல் கூவிற்று.

''முத்தண்ணே! ஊத்து வந்திடுச்சி...பீச்சியடிக்குது. ஒரு கை தெப்பம் தண்ணி வந்துடுச்சி... தண்ணி வந்துடுச்சி...''

ஜிவ்வென்று ரத்தம் துள்ளிற்று நாச்சிமுத்துவுக்கு.

ஒரு வம்சத்து இருட்டில் பளிச்சென்று வாள் மாதிரி வெளிச்சம் பாய்ந்த பரவசம்.

''தம்பி, ஊத்து வந்திருச்சாண்டா ஊத்து வந்துடுச்சாம்'' என்று கத்தியவாறே கூடியிருந்தவர்களின் கையை உதறிக்கொண்டு நாச்சிமுத்து கிணற்றை நோக்கி ஓடினான். கை இன்னும் தலையைப் பிடித்துக்கொண்டிருந்தது.

பிரமித்து நின்றான் சுந்தரம். அந்த ஊற்றும், அதற்கு அவன் அப்பா உழைத்த உழைப்பும் காட்டிய பிடிவாதமும் எப்பேர்ப்பட்ட விஷயங்கள்! தன்னை மறந்து ஓடிய ஓட்டத்தில் தரையில் சிந்திக் கிடந்த ரத்தத் துளிகள் பேசுவது போலிருந்தது. அவனுக்கு மெய்சிலிர்த்தது.

''அப்பா!'' என்று கூவிக் கொண்டே நாச்சிமுத்துவின் பின்னால் ஓடினான் சுந்தரம்.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

என் மகன்





சுஜாதாவின் என் மகன் என்ற இப் படத்துக்குப் பெயர்ப் பொருத்தம் சரியில்லை. திருடன், திருடனுக்குத் திருடன்,பக்காத் திருடன் என்று இப்படிப் பலதரப்பட்ட திருடர்களின் வாழ்க்கையை விவரிக்கிறது இப் படம்.

திருடனை நேர்மையாளராக வாழ்ந்துவரும் ஒருவர் தம் மகனாக ஸ்வீகாரம் செய்து கொள்கிறார். அவர் அன்பிலே அந்தத் திருடன் நல்லவனாக விரும்புகிறான். ஆனால் சூழ்நிலை அவனை அதற்கு அனுமதிக்கவில்லை.

கதை தமிழ் நாட்டுச் சரக்குமல்ல. பேஈமான் என்ற இந்திப் படக் கதையின் தழுவல். தங்கப் பதக்கத்தில் இன்ஸ்பெக்டர் சௌதிரி கடமையே மூச்சாக வாழும் பாத்திரம். இதில் ஏட் ராமையாத் தேவர் கடமைக்காகவே உயிர் விடும் கான்ஸ்டபிள். அவர் தத்து எடுத்துக் கொள்ளும் திருடன் ராஜாவாகவும் சிவாஜி கணேசனே நடிக்கிறார். ஆனால் 'ஏட்' ராமையாத் தேவர் பாத்திரத்தின் அழுத்தமும் அழகும் கம்பீரமும் கனிவும் ஏனோ ராஜா பாத்திரத்தில் காண முடியவில்லை.கடமை, பாசம், கண்டிப்பு போன்ற கஷ்டமான பாவங்களை வெகு சரளமாக, அனாயாசமாகச் சித்திரித்துக் காட்ட சிவாஜியால்தான் முடியும். அந்த மாதிரி அழுத்தமான பாத்திரங்களில்தான் அவர் சோபிக்கவும் செய்கிறார்.

மஞ்சுளாவின் நடிப்பில் மெருகேறி யிருக்கிறது.

படத்தில் நகைச்சுவைக்கு இடமில்லை. ஒட்ட வைக்கப்பட்டுள்ள மனோரமா, வி. கே. ராமசாமி காட்சிகள் எடுபடாவிட்டாலும் அவர்கள் தோன்றும்போது கலகலப்பு ஏற்படுகிறது. சண்டைக் காட்சிகளையும் தாராளமாகவே சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சுந்தரராஜன், வி.எஸ். ராகவன், பாலாஜி, மனோஹர் வழக்கம் போல .... ஒலி, ஒளிப்பதிவும், வண்ணங்களும், பாராட்டுப் பெறுகின்றன.

ஏட் ராமையாத் தேவரின் பாத்திரமும் சிவாஜியின் இரட்டை வேடமும் ரசிகர்களைக் கவரும். —கௌசிகன்

36 மணி நேரம்

திகிலில் தொடங்கித் திகிலில் வளர்ந்து திகிலில் முடியும் கதை "முப்பத்தாறு மணி நேரம்". முப்பத்தாறு மணி நேரமும் இரண்டரை மணிக்குள் முடிகிறது.

திகிலை உண்டுபண்ணுபவர்கள் ஒரு பாங்கைச் சூறையாடிவிட்டுத் தலைமறைவாகிவிட்ட மூன்று பெரும் கொள்ளையர்கள். பத்திரிகை ஆசிரியர் ஒருவரின் வீட்டில் ஒளிந்துகொண்டு அவர்கள் அந்த வீட்டுச் சிறுவன் முதற்கொண்டு பெரியவர்கள் வரை அனைவரையும் படுத்தி வைக்கும் பாடு! எந்த நேரம் என்ன நேருமோ என்று அஞ்ச வைக்கிறது. ஆனால் வசனங்கள் அஞ்சேல் என்று அபயம் அளித்து அத்தனை அச்சத்தையும் போக்கித் திகிலைத் தணித்து விடுகின்றன.

இந்தப் படத்தைப் பற்றி இன்னொரு திகில் தரும் செய்தி: கதை ஒரு 'டெஸ்பரேட்' திருட்டு! ஆம், 'தி டெஸ்பரேட் அவர்ஸ்' என்ற ஆங்கிலப் படத்தின் தழுவல். ஆங்கிலக் கதையில் இல்லாத குடும்பப் பாசம், காதல் உணர்வு ஆகியவற்றைக் கோத்திருக்கிறார்கள். அதனால் எஸ்ப்ரஸோ காப்பி சாதா காப்பியாகி விட்டது.



வழக்கத்துக்கு மாறாக விரசம் குறைவுதான். ராஜ்குமாரும் மாலா சின்ஹாவும் தாங்கள் ஏற்ற பாத்திரத்தைத் திறம்பட வகித்திருக்கிறார்கள். சுநீல் தத்தும் ரஞ்ஜித்தும் தங்களுக்கு நல்ல பெயர் தேடிக்கொள்ள முயன்றிருக்கிறார்கள். ஆனால் டானி அசட்டுச் சிரிப்பு, சிரித்து, நடிப்பை மறந்து தாம் ஏற்ற பாத்திரத்தை அச்சுப் பிச்சுவாக்கி விடுகிறார். - ரா. வீ.

அண்ணாமலைக்கு அரோஹரா!



அரி அயன் அடிமுடி தேட அவர்களுக்கு அகப்படாத அருட்சோதிப் பிழம்பாக அரனார் நின்று, பிறகு அண்ணாமலையாகக் குளிர்ந்துறைந்தார் என்ற விருத்தாந்தத்தை அறியாதார் இல்லை. லக்ஷ்மீபதியான திருமால் செல்வப் பெருமையைக் குறிக்கிறார்; சரஸ்வதீ காந்தனான பிரம்மா கல்விப் பெருமையைக் காட்டுகிறார். இறைத் தத்துவத்தைப் பணத்தாலோ புத்தியாலோ பிடிக்க முடியாது, அது அன்பெனும் பிடிக்குள் அடங்கும் மலை என்பதையே அண்ணாமலையார் நிரூபிக்கிறார்.

இருபத்தைந்து ஏக்கர் நிலப் பரப்பில், இந்தியாவிலேயே உயரமாகக் கருதப்படும் 217 அடி ராஜகோபுரம் உள்பட ஒன்பது கோபுரங்கள் கொண்ட விஸ்தாரமான ஆலயத்தில் அண்ணாமலையார், அனைவரும் அணுகும் அண்ணும்மலையாக, அன்னை அபீதகுசாம்பிகையுடன் எழுந்தருளியிருக்கிறார்.

அருணகிரிநாதர் பிறந்தது இந்த அருணாசலத்தில்தான். ரமண பகவான், சேஷாத்திரி ஸ்வாமிகள், தெய்வசிகாமணி தேசிகர், குரு நமசிவாயர், குகை நமசிவாயர், ஈசான்ய ஞான தேசிகர், ஈசுவர ஸ்வாமிகள், சிவப்பிரகாச ஸ்வாமிகள் போன்ற பல ''ஞானத் தபோதனரை வாவென்று அழைத்த மலை'' இவ்வண்ணாமலை. திரு ஆரூரில் பிறந்தாலும், காசியில் இறந்தாலும், தில்லையில் தரிசித்தாலும், அண்ணாமலையை நினைத்தாலும் முக்தி என்பது ஆன்றோர் வழக்கு. இவற்றுள் அண்ணாமலையை நினைப்பதே மிக மிக எளிய வழி அல்லவா? ஆனால் அது உள் நினைப்பாக இருந்துவிட்டாலோ, அது ஒன்றே அதன்பின் சதாகால ஸ்மரணையாகிவிடும்.

பைம்பொனே, பவளக்குன்றே,
பரமனே,பால் வெண்ணீற்றாய்
செம்பொனே, மலர்செய்பாதா,
சீர்தருமணியே, மிக்க
அம்பொனே கொழித்து
வீழும் அணி அண்ணாமலையுளானே !
என்பொனே, உன்னையல்லால்
ஏது நான் நினைவிலேனே !

என்று அப்பர் பாடியபடி அவன் நினைப்பிலேயே அடியாரை ஊறச் செய்துவிடுவார் அருணாசலேசுவரர்.

தமிழகத்தின் பக்தி எத்தனை பெரியது, கலைத் திறன் எத்தனை பெரியது என்று உலகறியக் காட்டும் மாபெரும் இத்திருக்கோயிலுக்கு இப்போது திருப்பணி நடந்து வருகிறது. விரிந்து வானோங்கி நிற்கும் இவ்வாலயத்தை முற்றிலும் பழுது பார்த்துச் செப்பனிட்டுக் கும்பாபிஷேகம் செய்ய ஐம்பது லட்சம் ரூபாய் செலவாகும். அரைக் கோடியா என்று மலைக்க வேண்டியதில்லை, பக்த கோடிகள் உள்ளமட்டும். ''ஏழைக்கு இரங்கு மலை, ஏதேது கேட்டாலும் கோழைபடாமல் கொடுக்குமலை'' என்று புகழ்பெற்ற அண்ணாமலைக்கு இன்று ஏழையிலிருந்து ஒவ்வொருவனும் தன் சக்தியானுசாரம் கொடுக்கிற பெரும் பேறு கிட்டியிருக்கிறது. பொருளாளர், அருள்மிகு அருணாசலேசுவரர் தேவஸ்தானத் திருப்பணிக் குழு, திருவண்ணாமலை, வடார்க்காடு மாவட்டம் என்ற முகவரிக்கு அன்பர்கள் தமது திரவிய காணிக்கையை அனுப்பக் கோருகிறோம்.

திருப்பணிக்கு உதவ காந்தி ஜயந்தியான அக்டோபர் 2ந் தேதியன்று திருவண்ணாமலையில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் இன்னிசை நடக்கிறது. இதில் கலந்து கொண்டால் அண்ணாமலையாரின் புகழைக் கேட்டு உருகிக் கொண்டே அவர் தம் பணிக்குக் கைங்கரியமும் செய்து இரட்டிப்பு லாபம் பெறலாம்.

அண்ணாமலையெம் அண்ணா போற்றி !
கண்ணார் அமுதக் கடலே போற்றி !

எங்கப்பா ஒரு எக்ஸெண்ட்ரிக்!

ஜானகிமணாளன்



சம்பளத்தை வாங்கிக் கொண்டு ஆபீஸை விட்டு வெளியே வந்த நான், நேராக எதிர்ச் சாரியில் உள்ள பஸ் ஸ்டாப்பை அடைந்தேன். வழக்கமாகச் சம்பளத் தினத்தன்று எனக்கு முன்பே அங்கு வந்து காத்துக் கொண்டிருக்கும் என் அப்பா இன்று ஏன் இன்னும் வரவில்லை?

சென்ற மாதம் இதே சம்பளத் தேதியன்று தான் அவரிடத்தில் அந்த விஷயத்தைப் பிரஸ்தாபித்தேன். அதற்குப் பின் வரிசையாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் எல்லாம் என் மனத் திரையில் ஓடத் தொடங்கின. இடையிடையே 'ஃப்ளாஷ் பாக்' ஆக என் குடும்பத்தின் ஆரம்ப காலக் கட்டங்களும் தோன்றத் தவறவில்லை.

எங்கப்பா ஒரு எக்ஸென்ட்ரிக்!

ஒருவரிடம் பேசியது போல் அடுத்தவரிடம் பேச மாட்டார். இப்போது இருப்பதுபோல் அடுத்த நிமிடம் இருக்க மாட்டார். க்ஷண சித்தம், கண பித்தம். அவரோடு இருந்து குடும்பம் நடத்துவதே கடினம். தொட்டதற்கெல்லாம் பிடிவாதம்; வாக்குவாதம்.

அம்மா ஒரு 'ஸாஃப்ட்' டைப்பாக இருப்பதால் ஓரளவு குடும்பம் நடக்கிறது. அவருடைய சம்பளம் குடும்பம் நடத்துவதற்கே



போருது. இந்த நிலையில் கொஞ்சம் 'ஷோக்' பேர்வழி வேறு.

'ரிடையர்' ஆவதற்கு இன்னும் ஒருசில ஆண்டுகளே இருக்கும் இந்த நிலையில்கூட, அவருடைய நடையுடை பாவனைகள் வயதுக்குப் பொருந்தாததாகவே இருக்கும். டைட் பேண்ட், லூஸ் ஷர்ட், லாங் ஹேர் ஸ்டைல். இதுதான் அவருடைய தற்போதைய கோலம்.

ஒரு சினிமா, நாடகம் பாக்கி கிடையாது. அத்தனைக்கும் முதல் ஷோவுக்கே ஆஜராகி விடுவார். சமுதாயத்தால் 'கெட்ட பழக்கங்கள்' எனக் கூறப்படும் அத்தனையும் அவரிடம் உண்டு. பெண்கள் விஷயத்தில் கொஞ்சம் 'பச்சை'. அம்மாவிடம் எப்படி எரிந்து விழுகிறாரோ, அதற்கு நேர் விரோதம் மற்றப் பெண்களிடம். இவருடைய 'பர்ஸனலிடி'க்கு எந்தப் பெண்ணும் இரண்டாம் முறை இவரைத் திரும்பிப் பார்க்காமல் போக மாட்டாள். இதைச் சாதகமாக்கிக் கொண்டு சிலரைத் தம் வலையில் இழுத்துக் கொள்ளத் தவற மாட்டார். தமக்கு ஒத்து வராத பெண்களைத் தூற்றுவதிலும் இவர் சமர்த்தர்.

மாலை நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் 'டீக்'காக டிரஸ் செய்துகொண்டு 'ஈவினிங் வாக்' என்றபெயரில் பஸ் ஸ்டாண்ட், கடைத் தெரு, தியேட்டர், பெண்கள் பள்ளி போன்ற இடங்களுக்கெல்லாம் சென்று வருவது இவரது பொழுதுபோக்கு.

மிகவும் நெருங்கியவர்களிடம் இது பற்றி இவர் சொல்லுவாராம்:

'வாழ்க்கை அநித்தியம் தானே? இருக்கும் வரையில் 'ஜாலி'யாக இருந்து விட்டுப் போக வேண்டியதுதானே... அழகைப் பார்த்து ரசிப்பதில் என்ன ஸார் தப்பு? தவிரவும் இன்று நாட்டில் எந்தப் பெண் 'தன் கணவனுக்கர்க மட்டும்' என்று தன்னை அழகுபடுத்திக் கொள்கிறாள்? அப்படிச் செய்து கொண்டால் அவள்வீட்டுக்குஉள்ளேஅல்லவாசெய்து கொள்ள வேண்டும்! அரையும் குறையுமாக இப்படி டிரஸ் செய்து கொண்டு — அதுவும் கணவனுடனேயே வெளியில் பவனி வந்தால் அதற்கு என்ன ஸார் பொருள்? 'மற்றவர் தன் அழகைப் பார்க்க வேண்டும்' என்பதற்காகத்தானே ஸார் இருக்க வேண்டும்? அந்த மற்றவர்களில் ஏன் நாமும் ஒருவராக இருக்கக் கூடாது? இதில் என்ன ஸார் தப்பு இருக்கிறது?' — என்று பிரசங்கமே செய்வாராம்.

மற்றவரில் அவர் ஒருவராக இருக்கட்டும். ஆனால் அதற்கு ஒரு வயதுவரம்பு கிடையாதா? மலையைப் போல் கல்யாண வயதைத் தாண்டிய பெண் நான் ஒருத்தி இருக்கும்போது, ஊரில் உள்ள சிறுசுகளை 'சைட்' அடித்துக் கொண்டிருந்தால் அது நன்றாகவா இருக்கிறது? ஊரில் எல்லோரும் இவரைப் பற்றி இப்படித்தான் பேசிக் கொள்ளுகிறார்கள்... அதோடு இவருக்கு மற்றொரு விதத்தில் கெட்ட பெயரும் உண்டு. காலம் கடந்த காலத்தில் 'குஷி'யாக இருப்பதற்குக் காலத்தோடு செய்து வைக்க வேண்டிய மகளின் திருமணத்தைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல் இருக்கிறாரே! அதுமட்டுமின்றி அவளுடைய உழைப்பை உறிஞ்சி, அந்த ஆதாயத்தில் தன் ஆடம்பர வாழ்க்கையை நடத்துவதாக எல்லோரும் பேசிக் கொள்வது என் காதில் விழுகிறது.

என் அப்பாவின் காதிலும் அது விழுந்திருக்கலாம். அதைப் பற்றி அவருக்கு அக்கறை இல்லை. அதைப் பற்றி அவரிடம் நேரில் போய் யாரும் எதையும் சொல்ல மாட்டார்கள். ஏன்? அவரிடம் பயம்.

ஏனெனில் எங்கப்பா ஒரு எக்ஸென்ட்ரிக்!

தாறுமாறுகப் பேசி வந்தவரைப் பகைத்துக் கொண்டு விடுவார். ஆகவே இவரது பகைமையை விரும்பாத எல்லோரும், 'இவர் சொல்வது சரி, செய்வது சரி' என்று தலையாட்டிவிட்டுப் போய்விடுவார்கள். இவர் இன்னும் குஷியடைந்து விடுவார்.



நடுத்தரக் குடும்பப் பெண்கள் படித்து விட்டு வேலைக்குப் போவது ஏன்? வேலைக்குப் போய்க் கொஞ்சம் பணத்தைச் சேர்த்துக் கொண்டு ஒரு நல்ல கணவனை அடையத் தானே?

சம்பாதிக்கும் பெண்ணாக இருந்தால்கூட, வாங்கும் 'எதிர் ஜாமீன்' தொகையை வாங் காமல் விட்டுவிடும் பிள்ளை வீட்டுக்காரர் எத்தனை பேர் இருக்கிறார்கள் இன்று இந்த நாட்டிலே?

ஆனால் என் அப்பாவுக்கு அந்தக் கவலை யெல்லாம் கிடையாது. ஏனெனில் தனக்குத் திருமண வயதைத் தாண்டிய ஒரு பெண் இருப்பதாகவே அவருக்கு நினைவு கிடையாது.

விலையாக வேண்டிய காலத்தில் விலையாகா மல், உழைத்து உழைத்து ஓடாகிப் பொலி விழந்து நிற்கும் எனக்குத் திருமணம் செய்து வைப்பது யார்? நான் சிந்திக்கத் தொடங் கினேன்.

என் அப்பாவை நம்பினால் இனி இந்த ஜன்மத்தில் எனக்குத் திருமணமில்லை. அதற் காகப் பெற்றோரை உதறிவிட்டுத் தனியே ஒருவரைத் திருமணம் செய்து கொண்டு ஓடி விட முடியுமா? அது உணர்ச்சிக் கொந்தளிப் பில் இருப்பவர் செய்யும் செயலல்லவா? என்னுடைய மனப்பாங்கு அதற்கு இடம் தரவில்லை.

என் வாழ்க்கையும் நன்கு அமைய வேண் டும். அதே நேரத்தில் என் அப்பாவுக்கும் அதில் பங்கு இருக்க வேண்டும். அதைச் செய்வது எப்படி? நானே சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தேன்.

என்னுடைய ஆபீஸ் மானேஜர் மனைவியை இழந்தவர். பாவம்... இரண்டு பெண் குழந் தைகளை வைத்துக் கொண்டு மிகவும் திண் டாடிக் கொண்டிருப்பவர்.

எனக்குத் திடீரென்று ஒரு விபரீதமான யோசனை தோன்றியது. 'அவரை நாம் மணந்தால் என்ன? நமக்கு உற்ற துணை கிடைப்பதோடு, அந்தத் தாயில்லாப் பெண் களுக்கும் ஒரு தாயாக நாம் இருக்கலாமே!'

ஆனால் 'ஏகபத்தினி' விரதனாக இருக்கும் அவர் மனத்தை எப்படி மாற்றுவது? அவர் சம்மதிப்பாரா?

ஒரு பெண், ஓர் ஆணை அணுகி, 'என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள் — அதிலும் பணம் காசு இன்றி' — என்று எப்படிக் கேட்பது?

பெற்றோர் இனி நமக்குத் திருமணம் செய்து வைக்க மாட்டார்கள் என்ற நிலையில் யாரோ ஒருவனுடன் ஓடித் தனக்கும் பெற்றோருக்கும் கெட்ட பெயரை உண்டாக்கிக் கொண்டு, ஊரார் முன் அவமானப்படுவதை விட, ஓர் ஆணிடம் உண்மை நிலையை ஒளிக்காமல் எடுத்துக் கூறி, கெஞ்சிக் கேட்டு, அப்படியும் அவர் மறுத்துக் கூறி, அவரிடம் அவமானப் படுவது எவ்வளவோ மேல் இல்லையா?

இந்த முடிவோடு ஒரு நாள் — ஞாயிற்றுக் கிழமை — நானே வலிய அவர் வீட்டுக்குச் சென்றேன். பெண் குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடினேன்.

ஆபீஸ் விஷயங்களில் பேச்சை ஆரம்பித்து அவருடைய குடும்ப நிலையை விசாரித்தேன். குழந்தைகளின் நிலையை எடுத்துக் கூறி யோசனை கூறுவது போல் 'திருமணம் செய்து கொண்டால் என்ன?' என்றேன்.

'குழந்தைகளை உள்ளன்போடு வளர்க்கும் மாற்றாந் தாயைத் தேடி அலைந்து ஏமாந்து போவதை விடத் தம்முடைய தற்போதைய நிலை எவ்வளவோ மேல்' எனக் கூறினார்.

இந்த நிலையில் பேச்சை என் பக்கமாகத் திருப்பி என்னுடைய குடும்ப நிலையையும் என்னுடைய தனிப்பட்ட துயரச் சூழ்நிலை யையும் எடுத்துக் கூறினேன். அவர் நிலை யோடு என் நிலையை ஒப்பிட்டுப் பேசினேன். 'என்னை மணப்பது தவறு அல்ல' என எடுத்துக் கூறினேன். ஆனால் அவர் மசிவதாக இல்லை.

மீண்டும் மீண்டும் போனேன்.

பேசியதையே திரும்பத் திரும்பப் பேசி னேன்.

இதற்குள் குழந்தைகளுக்கு என்னிடம் ஒரு பிடிப்பை ஏற்படுத்திக் கொண்டேன். முடிவில் அவர் என்னை மணக்கச் சம்ம தித்தார்.

திருமணத்துக்கு என் தந்தையிடம் பணஉதவி ஏதும் எதிர்பார்க்கக் கூடாது என்பதோடு எனது திருமணத்துக்குப் பிறகும் என்னை வேலை பார்க்க அனுமதித்து அதன் மூலம் எனக்குக் கிடைக்கும் சம்பளப் பணத்தை என் அப்பா விடம் கொடுக்க அனுமதிக்க வேண்டும். இது என் நிபந்தனை. அவர் ஏற்றுக் கொண்டார்.

கல்யாணத்தை மிக மிக எளிய முறையில் நடத்த வேண்டும். தம்முடைய இரண்டு

பெண் குழந்தைகளைத் தாயினும் மேலாக இருந்து வளர்த்து ஆளாக்க வேண்டும். இது அவர் நிபந்தனை. நான் ஏற்றுக் கொண்டேன்.

இப்படியாக என்னுடைய திருமணத்தை நானே நிச்சயித்துக் கொண்டேன். இதனுல் என் அப்பாவுக்கு எந்தக் கஷ்டமும் ஏற்படப் போவதில்லை. ஏனெனில் திருமணத்துக்குப் பிறகும் அவருக்குத் தேவையான என்னுடைய பணம் கிடைத்துக் கொண்டிருக்கும் இல்லையா?

இதை என் அப்பா ஏற்றுக் கொள்ள வேண்டுமே?.... அவர் ஒரு எக்ஸென்ட்ரிக் ஆயிற்றே.

சென்ற சம்பளத் தேதியன்று வீடு திரும்பும் போது மெதுவாகத் தயங்கித் தயங்கிப் பேச்சை ஆரம்பித்தேன். 'தாட் பூட்' என்று தாண்டிக் குதிப்பார் அவர் என்று நான் எண்ணினேன். ஆனுல் வழக்கத்துக்கு மாருகப் பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டார். சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லி விட்டேன்.

'திருமணத்துக்குப் பிறகும் சம்பளப் பணத்தைத் தந்து கொண்டிருக்கிறேன்' என்று மட்டும் கூறவில்லை. ஏனெனில் தம்மைக் கையால் ஆகாதவன் என்று குத்திக் காட்டுவதாக எண்ணி விட்டால்....! காரியமே கெட்டு விடுமே!

பலத்த யோசனைக்குப் பிறகு சொன்னுர்:

''யூ நாட்டி கேர்ல்... ஐ அக்ஸெப்ட் வாட் யூ ஸே...கேரி ஆன்...'' என்று தமக்கே உரிய பாணியில் கூறினுர். நான் நினைத்தது வேறு. ஆனுல் அவர் நடந்து கொண்ட விதம் வேறு. ஏனெனில் அவர் ஒரு எக்ஸென்ட்ரிக்!

திருமண ஏற்பாடுகள் விரைவாக நடக்கத் தொடங்கின. ஒரு கோயிலில், ஒருசிலர் முன்னிலையில் திருமணம் நடந்தது.

இன்று சம்பள நாள். பல்லாண்டுகளாகச் சம்பளத்தை வாங்கிக் கொள்ள பஸ் ஸ்டாப் பிற்கே வந்துவிடும் என் தந்தை இன்று வருவாரா, மாட்டாரா?


காலையிலிருந்தே என்னை வாட்டிக் கொண்டிருந்த கேள்வி இது. வருவார் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனுல் அவர் வரவில்லை. இது எனக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

சிந்தனையில் மூழ்கியபடி நடந்து சென்ற நான், என் அப்பாவின் வீட்டை அடைந்தேன். உள்ளே சென்ற நான் என் சம்பளப் பணத்தை எடுத்து அம்மாவிடம் தந்து, 'அப்பாவிடம் கொடுத்துவிடு' என்றேன். அதை வாங்கிய அவள் உள்ளே பூஜை அலமாரியில் கொண்டு வைத்தாள். இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தோம். இரவு ஏழரை மணி. அப்பா வந்தார்.

முன் ஹாலில் இருந்தபடியே அம்மாவைக் கூப்பிட்டு, ''இந்தா, இம்மாத 'ஜாப்' ஒர்க்' பணத்தில் உன் சங்கிலியை மீட்டுவிட்டேன்'' என்று கூறிக் கொண்டே அம்மாவிடம் சங்கிலியைக் கொடுத்தார்.

எனக்கு விஷயம் புரிந்தது.

என்னுடைய திருமணத்துக்காக வாங்கிய சொற்பக் கடனை அவரால் தாங்கமுடியவில்லை.



ராக்கபெல்லரின் மகிழ்ச்சி!

அமெரிக்க உதவி ஜனுதிபதி தமது மனைவியைப் பொறுத்த மட்டில் சந்தோஷமாக இருப்பார். காரணம் — அவர் மனைவி பெயர் திருமதி ஹாப்பி ராக்கபெல்லர்! (Mrs. Happy) —டைம்

—பாலி

அம்மாவின் நகைகளை அடகு வைத்திருக்கிறார். அவற்றை மீட்க இப்போது கடினமாக உழைக்கத் தொடங்கியுள்ளார்.

அம்மா சொன்னுள், நான் வந்திருப்பதாக. உடனே உற்சாகத்துடன் கூவிக்கொண்டே உள்ளே வந்தார். நலம் விசாரித்தார்.

அப்போது பூஜை அலமாரியிலிருந்து நான் கொடுத்த என் சம்பளப் பணத்தைக் கவரோடு அவரிடம் கொடுத்தாள், அம்மா. 'என்ன!' என்ற பாவத்தோடு வாங்கிக் கொண்டார். அம்மாதான் சொன்னுள் 'நான் கொடுத்தது' என்று.

திடீரென்று பணத்தைக் கவரோடு பக்கத்தில் இருந்த டீப்பாயில் வீசி எறிந்தார்.

''அந்த அளவுக்கு உனக்குத் திமிர் ஏறி விட்டதா? நான்ஸென்ஸ்... என்னை என்ன, பிச்சைக்காரன் என்று நினைத்தாயா? என் வயிற்றுப் பாட்டை என்னுலேயே கவனித்துக் கொள்ள முடியும்...'' என்று கத்தினுர்.

நான் நடுங்கிக் கொண்டே, ''இல்லை... அப்பா... வந்து....'' என்றேன்.

''ஐ டோன்ட் வான்ட் எனி எக்ஸ்பிளநேஷன்.. டேக் இட்... அண்டு கெட் அவுட்'' என்று அப்பா கத்தினுர்.

நான் பணத்தை எடுத்துக் கொண்டு வாயிற்புறம் நகர்ந்தேன். அம்மா ஓடிவந்து என் கையைப் பிடித்து இழுத்தாள். இதை அப்பா பார்த்து விட்டார்.

ஆவேசத்தோடு ஓடிவந்து அம்மாவைப் பிடித்து உள்ளே தள்ளினுர். 'கெட் இன்' என அலறினுர்.

இனி நாம் நின்றுல் நம்மையும் வெளியில் தள்ளத் தயங்க மாட்டார் என்று நான் உணர்ந்தேன். மெதுவாக வாயிற்புறம் நகர்ந்தேன். 'கெட் அவுட்' என்று சீறினுர்.

வெளி கேட் அருகில் வந்து நின்று உள்ளே பார்த்தேன். உள்ளே 'பளார், பளார்' என்று சத்தம் கேட்டது. பாவம் அம்மா!


மீண்டும் நான் உள்ளே போனுல் அம்மாவுக்கு நடப்பது நமக்கும் நடக்கும் என்பது எனக்குத் தெரிந்ததுதான்.

ஆனுல் என் உள் மனம் மட்டும் என் அப்பாவை நாளை என் வீட்டில் எதிர்பார்க்கிறது!

அவருக்கு நாளைக் காலை 'பிரேக்ஃபாஸ்ட்.' என்னுடைய வீட்டில்தான்!

ஏனெனில் எங்கப்பா ஒரு எக்ஸென்ட்ரிக்!

உன்னைத்தான் தம்பி!



கதாநாயகனை ஆரம்பத்தில் கெட்டவனுகக் காட்டி விட்டுப் பிறகு நல்லவனுக மாற்றிக் காட்டுவது புதுமை! பெரிய தொழிலதிபர் ஒருவரை நன்றாய் ஏமாற்றி ஒரு கும்பலே பிழைக்கிறது. அவரது சொந்த சகோதரியின் மகன் ரவி அந்தக் கும்பலுக்குத் தலைமை தாங்குகிறுன். இவர்களுடைய அட்டகாசம் அடங்கி எல்லாரும் நல்வழிப்படுதல் திரைக் கதையின் அடிப்படைக் கருத்து.

குடும்பத் தலைவராக வரும் அசோகன், பதற்றம் காட்டாமல் மிகவும் பதவிசாக நடித்திருக்கிறுர். கண் பார்வை திரும்பியும், பார்வை இழந்தவர் போலவே நடித்த கட்டங்கள் பாராட்டுக்குரியவை; கூடவே, தேங்காய் சீனிவாசன், மனோரமா முதலியவர்களுக்கும் தனித்தனியே சபாஷ் போடுகிறேன்.

ஜெய்சங்கர் மிகவும் லாகவமாக நடித்திருக்கிறுர். குழந்தை செல்வியின் கால் ஊனமுற்றதற்குத் தானே காரணமாயிருந்து விட்டதை நினைத்துக் கண்ணீர் விட்டுக் கலங்கியபோது மனமாற்றம் ஏற்படுகிறது; கூடவே அவர் நடிப்பிலும் ஒரு 'ஸீரியஸான' மாற்றம் ஏற்படுகிறது.

ஆரம்பத்தில் 'டிஸ்கொத்தே', ஆண்களுடன் நடனம் என்று சுற்றிக் கொண்டிருந்த கதாநாயகி, வில்லனுல் தன் பெண்மைக்கே பங்கம் ஏற்பட இருந்த நிலையில் கதாநாயகனுல் காப்பாற்றப்பட்டபோது மனம் திருந்துகிறுள். ஜெயசித்ரா இரு சந்தர்ப்பங்களிலும் நன்ருக நடித்திருக்கிறுர்.

வில்லன் ஸ்ரீகாந்த் வழக்கம்போல்....

ஏ. சகுந்தலா பெயரிலேயே 'ஏ' இருக்கிறது. இன்னும் சொல்வானேன்?

காலில் ஊனம் ஏற்பட்டுவிட்ட ஒரு சிரமமான பாத்திரத்தை ஏற்று, பேபி சுமதி அருமையாக நடித்திருக்கிருள். சிறந்த நடிப்புக்கு முதல் இடம் பெற்றிருப்பது ஒரு குரங்கு. படத்தைச் சிக்கல் இல்லாமல் முடித்து வைக்கிறது!

திரைக்கதையில் புதுமையாக எதையோ சொல்ல முயன்றிருக்கிருர்கள். ஆர். விட்டலின் டைரக்‌ஷனில் விசை இருக்கிறது. ஆயின் இசையில் பசையில்லை.

இதயம் பார்க்கிறது



கவர்ச்சி, காதல், திகில் ஊட்டும் சம்பவங்கள், டிஷ்யூம் டிஷ்யூம் சண்டைகள், இவற்றுடன் கதையும் இருக்கிறது! அதிசயம்தான்! ஆரம்பத்திலிருந்து கடைசிவரையில் குருடனுகவே தத்ரூபமாக நடிக்கிருர் ஜெய்சங்கர். அத்துடன் வலது கை சுவாதீனம் இல்லாத பாத்திரம். அவ்வாறிருந்தும் வில்லன்களுடன் சண்டையிட்டிருப்பதைப் பாராட்டாமல் எப்படி இருப்பது? சினிமாவில் இப்படி நடக்கவில்லை என்றுல் பிறகு எங்குதான் நடக்கும்? படத்தில் ஒரு புதுமை, ஜெய்சங்கருக்குக் கடைசி வரையில் பார்வை திரும்பவில்லை! "காதல் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் (யுத்தக் காட்சி உள்பட) கைகொடுத்து"ப் படத்தை நல்லபடியாக முடித்து வைப்பவர் ஜெயசித்ரா. இளமைப் பொலிவோடு நீச்சல் உடையில் கவர்ச்சியையும் காட்டியிருக்கிருர். இந்தக் கவர்ச்சி போதாது என்று நினைப்பவர்களுக்கு ஜெய்குமாரி வேறு இருக்கிருர்! கவர்ச்சி என்பது ரொம்பப் பழைய சமாசாரம் என்றுலும் காதலி மேல்படிப்புக்காக அயல் நாடு போயிருக்கும்போது, கதாநாயகன் குருடன் என்பதைப் பயன்படுத்தி ஜெய்குமாரியை அவளாக நடிக்கச் செய்து வில்லன்கள் ஏமாற்றப் பார்ப்பது சற்றுப் புதுமையான விஷயம்தான்.

பெரிய பிரபுவான ஜெய்சங்கர் வீட்டில் அவருக்கு உதவியாக ஓர் ஆள்கூடக் கிடையாதா? காப்பி முதற்கொண்டு தட்டுத்தடுமாறித் தாமேதான் தயாரித்துக்கொள்ள வேண்டுமா? ஒருவேளை குருட்டு நடிப்பை உயர்த்திக் காட்டவோ, என்னவோ டைரக்‌ஷன் குருடாகிவிட்டது இங்கே!

கவிஞர் கண்ணதாசனின் "யானையின் பலம் எதிலே? தும்பிக்கையிலே!" என்ற கருத்துள்ள பாடல் காதுக்கு இனிமையாக இருக்கிறது.

பேபி இந்திரா, திரைக் கதையின் மர்ம முடிச்சுக்களை அவிழ்ப்பதில் பெரிதும் உதவியிருக்கிருள். ஏ. ஜகந்நாதன் டைரக்‌ஷன். கதை வசனம் பத்து. படம் என்றுல் எதையும் பார்ப்பவர்கள் இதையும் பார்க்கலாம்.

-காந்தன்

கொதிக்கும் உள்ளத்தில் சூடேறிய டீ!

ரா. வீழிநாதன்



நான் என்ன தவறு செய்தேன்? எனக்கு எதற்காக இந்தத் தாற்காலிக வேலை நீக்க உத்தரவு? எத்தனையோ மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளுகிறேன், விளங்கவில்லை. உங்களுக்கு விளங்கினால் சொல்லுங்கள், இல்லையேல் நீங்களும் உங்கள் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ளுங்கள்!

எதற்காகப் பொய் சொல்ல வேண்டும்? இதோ, ஒரு கப் தேநீர் தயார் செய்வதற்காக, இந்தக் காகிதங்கள் பற்றி எரிகின்றனவே, இதேபோல் ஒரு நாள் என் உள்ளமும் பற்றி எரிந்தது!

பொய் இல்லை, தபாலில் சேர வேண்டிய சில பல கடிதங்களை நான் கொளுத்துகிறேன் என்று புகார். புகார் உண்மைதான். ஆனால் நான் செய்தது தவறு என்கிறார்களே, அதைத் தான் என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

முழுக் கதையையும் கேட்டால்தான் உங்களுக்கு விளங்கும்.

என் பெயர் தம்பித்துரை. தபால்காரத் தம்பித்துரை என்றால் தெருக் குழந்தைகளுக்கு ஏகக் கொண்டாட்டம். 'மாமா! எனக்குக் கடிதாசு! மாமா, எனக்குக் கடிதாசு!' என்று சிட்டுக்களெனக் கலகல ஒலி எழுப்பிக் கொண்டு என்னைச் சூழ்ந்து கொள்ளும்.

'எப்போ வருவாரோ?' என்று வழிமேல் விழி வைத்திருக்கும் காதலிக்குக் காதலனின் வருகையை அறிவிக்கும் மகிழ்ச்சிக் கடிதம்; உத்தியோக நிமித்தம் வெளியூர் சென்று பிரிவுத் துயரை அநுபவிக்கும் அன்பனின் உள்ளக் கிடக்கையை ஏந்தி வரும் கடிதம்; பிள்ளையிடமிருந்து பணத்தோடு பாசத்தையும் கூட்டி வரும் கடிதம்; தாயின் உடல் நிலையை அறியத் துடிக்கும் மகளின் கடிதம்; 'உத்தியோக உத்தரவு வராதா?' என்று ஒற்றைக் காலில் நிற்பவனுக்கு நம்பிக்கை, அவநம்பிக்கை அளிக்கும் கடிதம்; ஏன்? சதையும் நகமுமாக இருந்தவர்கள் இறந்துபோன துயரச் செய்தியைத் தாங்கி வரும் கடிதம்—என்று இப்படியாக எத்தனை எத்தனையோ கடிதங்களை 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று எடுத்துப் போய்ப் பட்டுவாடா செய்பவன் நான்.

இருந்தாலும் சின்னஞ் சிறிசுகளிடம் பாசத்தை வளர்த்துக் கொண்டேன். காரணம், கல்யாணம் ஆகிப் பல ஆண்டுகள் ஆகியும் குழந்தைச் செல்வம் இல்லாமற் போகவே, தெருக் குழந்தைகளிடம் ஒரு பாசம் ஊறியது. அவர்களை மகிழ்விப்பதற்காக ஒரு காரியம் செய்தேன். ஆம், தெருவிலே வீசி எறியப்பட்ட உதவாக்கரைக் கார்டுகளுக்கும் கவர்களுக்கும் ஓர் உபயோகம் கண்டுபிடித்தேன். அவற்றைப் பொறுக்கிச் சென்று 'ஆனா, ஆவன்னா'கூடப் படிக்காத குழந்தைகளுக்கு, 'இந்தா, உனக்குக் கடிதாசு! உங்க மாமா எழுதியிருக்கிறார்!' 'இந்தா, உனக்குக் கடிதாசு! உங்க தாத்தா எழுதியிருக்கிறார்' என்று கூறிக் கொடுப்பேன். குழந்தைகளுக்கு என் அந்த நாடகம் பிடித்துப் போகவே, அவை என்னிடம் ஒட்டிக் கொண்டு விட்டன.

அவற்றிடம் நான் காட்டும் அன்பைக் கண்டு ஆண்டவன் நெகிழ்ந்து விட்டான். எனக்கு என்று ஒரு செல்வத்தைத் தந்தான். அவளுக்கு நான் என்ன பெயர் வைத்திருப்பேன், நீங்களே சொல்லுங்களேன்! செல்லம் பள்ளி செல்லும் அளவுக்கு வளர்ந்ததும், அவளிடமும் இதே விளையாட்டை விளையாடலானேன். 'இந்தா, உனக்கு ஒரு கடிதாசு!' என்றேன். ஒரு நாள் அவள் கேட்டாள்: 'எனக்கு இந்தக் கடிதாசு யாரு எழுதியிருக்காங்க?' 'உன்னைக் கல்யாணம் கட்டிக் கொள்ளப் போகிற பொடிசு!' என்றேன், விளையாட்டாக!

இரண்டொரு நாட்கள் கழித்து, ஒரு கார்டை என்னிடம் கொடுத்து, 'இதை அவருக்குத் தபாலில் சேர்த்துவிடு!' என்றாள்.

'யாருக்கு?'

'வேறு யாருக்கு? என்னைக் கண்ணாலம் கட்டிக்கப் போகிற அவருக்கு!'

எனக்கும் அவள் அம்மாவுக்கும் வாய் எல்லாம் பல்! 'என்ன சூடிகை!' என்று அகமகிழ்ந்து போனோம். அவள் அம்மா முட்டி நெரித்துத் திருஷ்டியே கழித்தாள்!

பாராட்டிச் சீராட்டி வளர்த்த அவளைக் கல்லூரி புகுமுக வகுப்பில் சேர்த்தபொழுது, எனக்கு நானே சொல்லிக் கொண்டேன், நாம் பத்து ரூபாய்ப் பணம் கட்டி நாலெழுத்துப் பரீட்சைகூடப் பாஸ் பண்ணவில்லை. இவளையாவது பட்டப் படிப்பு படிக்க வைக்க வேண்டும் என்று!

அன்று நான் வேலைக்குப் போகவில்லை. செல்லம் எங்கோ வெளியே போயிருந்தாள். அவள் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது. 'இவளுக்கு யார் கடிதம் எழுத இருக்கிறார்கள்? யாராவது வகுப்பு மாணவியாக இருக்கலாம்!' என்று எண்ணினேன். 'அப்படி என்ன எழுதியிருக்கப் போகிறாள்?' இந்தக் கேள்வி அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்க்கச் செய்து விட்டது. பிரித்துப் பார்த்தவனுக்குத் தலையைச் சுற்றியது.

இந்தக் காலத்துக் கல்லூரிகள் கல்வி புகட்டு வதைக் காட்டிலும் காதலை அல்லவா அதிகமாகப் புகட்டுகின்றன?

ஆமாம், அது செல்லத்துக்கு வந்த ஒரு காதல் கடிதம். அப்படியே தன் உள்ளத்தை விண்டு வைத்திருந்தான்; காவியம் சமைத்து அதை ஓவியமாக்கியும் காட்டியிருந்தான் அதை எழுதியவன்.

முதலில் அந்தக் கடிதம் நெருஞ்சி முள்ளாக இடறினாலும், யோசித்துப் பார்த்தபொழுது, 'இதில் என்ன தவறு? வயதுவந்த குழந்தைகள் இந்தக் காலத்தில் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே வளமாக்கிக் கொள்ள வழி தேடிக் கொள்ளுகின்றன. இதற்குப் பெற்றோராகிய நாம் குறுக்கே நிற்கக் கூடாது. பையன் நல்லவனாயிருந்து விட்டால், இருவரையும் இணைத்து முடிபோட்டுவிட வேண்டும்!' என்ற முடிவுக்கே வந்தேன்.

கடிதங்களில் காதலை வளர விட்டவாறே, பையனைப் பற்றிப் புலனாய்வில் இறங்கினேன். நான் அறிந்த விவரங்கள் பையனைப் பற்றி நல்ல முடிவுக்கு வர விடவில்லை. அவனிடம் வேண்டாத பல தீய குணங்கள் படிந்திருப்பது தெரிந்தது. னேவே, தொடர்பை மேலும் வளர விடாமல் துண்டிக்க முனைந் எதன். அவன் கடிதங்களை அமுக்கினேன். அப்படியும் அவர்கள் காதல் குன்றிமணி அளவுகூடக் குறையவில்லை என்பது தெரிந்தது. எனவே, பெண்ணிடமே நேருக்கு நேர் மோதினேன்; அவன் தீய குணங்களையெல்லாம் எடுத்து உரைத்துத் தொடர்பைக் கத்திரித்துக் கொண்டு விடுமாறு கூறினேன். பலன் தரவில்லை. காதலுக்குத்தான் கண் இல்லையே! அவள் பிடிவாதமாக இருக்கவே, நான் கண்காணிப்பை வலுப்படுத்தினேன். இத்தனைக்கும் 'டேக்கா' கொடுத்துவிட்டு

கடிதத்தில் கொதித்த 'சிங்கிள் டீ'

லூதியானா, செப் 8— பஞ்சாபில் லூதியானா நகரில் உள்ள தபால் நிலையத்தின் பியூன் ஒருவர் தினசரி ...ில் சிங்கிள் டீ



அவள் ஒரு நாள் அவனேடு ஓடிவிட்டாள். அந்தத் துயரத்தில் என் மனைவி படுத்த படுக்கையாகி ஒரு நாள் கண்களையும் மூடிவிட்டாள்! எனக்கு • உலகமே அஸ்தமித்துவிட்டாற் போல் ஆயிற்று! ஆயினும் உள்ளத்தின் ஒரு மூலையில், என் பெண்ணின் அதிருஷ்டம், அந்தப் பையன் திருந்தி நல்லவனுகிவிடக் கூடாதா என்று ஒரு நைப்பாசை! அதே உள்ளம், நான் அயர்ந்திருக்கும் வேளையில் இப்படியும் என்னைக் குத்தியது:

'வினை விதைத்தவன் நீதானே ? குழந்தைகளுக்கு இப்படிக் கடிதங்கள் வழங்கி ஆசையைக் காட்டினுயே ! இது போல் எத்தனை குடும்பங்களில் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்திருக்குமோ ?'

'இது தொட்டில் பழக்கம்; தபால்காரனுயிருக்கும் வரை நம்மை விட்டுப் போகாது!' என்று எண்ணம் ஏற்படவே, நாற்பத்து மூன்ருவது வயதில் முனைந்து படித்தேன். பதினைந்து ரூபாய் கட்டி நாலெழுத்துப் பரீட்சையைப் பாஸ் செய்தேன். அப்புறம் அதிகாரிகளை வேண்டி இந்த 'ஸார்ட்டர்' வேலையைப் பெற்றேன்.

இந்த 'ஸார்ட்டர்' வேலை இருக்கிறதே, இதில் அனுபவம் ஏற ஏறக் கைகளுக்குக் கனம் தெரியும்; கனத்துக்கு ஏற்பத் தபால் பில்லைகள் ஒட்டியிருக்கின்றனவா, இல்லையா என்பதும் தெரிந்துவிடும். பெரும்பாலும் தவறுவதில்லை. அதே போலத்தான் இந்தக் கண்களும்? உறைக்குள் என்ன வைத்திருப்பார்கள் என்பதையும் ஊடுருவி நோக்கி அறிந்து கொண்டு விடும் !

என் அநுபவப்பட்ட கண்கள் இன்னெரு வகையிலும் தீட்சண்யம் பெற்றிருந்தன. இதற்குள் காதல் கடிதம் இருக்கும் என்று நான் தீர்மானித்தால் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது சதவிகிதம் தவறுவதில்லை. என் பெண்ணின் கதி மற்றவர்களுக்கும் வந்துவிடக் கூடாதே என்ற எண்ணத்தில் அவற்றைத் தனியாக 'ஸார்ட்' செய்து வைத்துவிடுவேன்; அன்றையக் கட்டில் சேர்க்க மாட்டேன்! டீ தயாரிக்க எரித்துவிடுவேன். அதில் காதல் கடிதம் அல்லாத வேறு சில கடிதங்களும் சில சமயம் சேர்ந்துவிடும்தான்.... போனுல் போகட்டுமே! ஒரு பெண்ணின் வாழ்வு பலியாகாமல் காக்க ஏழெட்டு வர்த்தகத் தொடர்புள்ள கடிதங்களோ அல்லது வேறு செய்திகளைத் தாங்கிய எட்டுப் பத்துக் கடிதங்களோ பாழானுல் என்ன, குடியா முழுகிவிடும் ?

என் பெண்ணின் கதி என்ன என்றுதானே கேட்கிறீர்கள் ? நான் போட்ட கணக்குப்படி அந்தப் பிள்ளையாண்டான் அவளை இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக்கி விட்டு, 'அம்போ' என்று விட்டுவிட்டுப் போய்விட்டான். ஆறு வருஷங்கள் கழித்து எனக்கு இது தெரிய வரவே, அவளை அழைத்து வரப் போனேன். அவள் என்ன சொன்னுள், தெரியுமா ? 'அன்று உங்கள் சொல்லைக் கேட்காமல் வந்தவள்; இன்று உங்கள் சொல்லைக் கேட்டு வந்தால் எனக்கு ஏது மரியாதை? அவர்தான் அறிவு கெட்டுப் போனுர் என்ருல், நானுமா போக வேண்டும் ? இந்த இரண்டு சிறிசுகளையும் ஆளாக்கி அவர் குடும்பத்தை விளங்க வைக்கும் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்வேன்! என் கவலையை விட்டொழியுங்கள்!' என்ருள்.

நான் சந்தேகப்பட்டுக் கட்டில் சேர்க்காமல் விட்ட கடிதங்களை எடுத்து வந்து, சிலவற்றை எரித்துத் தேநீர் தயாரிப்பேன். சிலவற்றை நீராவியில் காட்டிப் பிரிப்பேன். உள்ளுறை விஷயங்களில் ஒரு கண்ணேட்டம் விடுவேன். பெரும்பாலும் என் குறி தப்புவதில்லை. இளம் உள்ளத் துடிப்பு அவற்றில் தலைதூக்கி நிற்கும். சூடு கண்ட நான் அவற்றை இலேசில் தபாலில் சேர்க்கமாட்டேன். டீ கொதிப்பது நெருப்பினுல் அல்ல, என் உள்ளக் கொதிப்பினுல் அது சூடேறுகிறது என்று எனக்குத் தோன்றும்.

இப்படிப்பட்ட கடிதங்களில் யாருடைய கடிதமோ போய்ச் சேராமற் போகவே, இத்துறை அதிகாரிக்குப் புகார் செய்திருக்கிருர்கள். அவரும் சோதனையை மேற்கொண்டிருக்கிருர். நான் தினமும் அலுவலகத்தில் தேநீர் தயாரித்து அருந்துவதைக் காணச் சகிக்காத சிலர் இதை மேலதிகாரிக்குத் தெரிவித்திருக்கிருர்கள். அவரும் என்னைக் கையும் மெய்யுமாகப் பிடித்துவிட்டதாக அகமகிழ்ந்து போகிருர். நான் கொளுத்தியவை குப்பைக் காகிதம்தான் என்று என்னுல் நிரூபிக்க முடியாது. என் பெண்ணின் வாழ்க்கை பாழானதால் என் அறிவு பாதிக்கப்பட்டிருப்பதாகவும் எனக்கு மனத்தத்துவ ரீதியில் சிகிச்சை தேவை என்றும்கூடப் பேசப்படுகிறது.

அவ்வளவு ஏன்? நான் குற்றவாளிதான். ஒப்புக் கொள்கிறேன். ஆயினும் எனக்கு ஒரு மகிழ்ச்சி. விசாரணையின் போது நான் அமுக்கிய பல கடிதங்களையும் எடுத்து அவர்கள் முன் போடப் போகிறேன். அப்பொழுது ஒரு ரகசியம் அம்பலமாகப் போகிறது! என்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் போகிருரே, அந்த அதிகாரியின் மகளையுமே பொய்க் காதலிலிருந்து நான் தப்புவித்திருக்கிறேன் என்று ! சட்டத்தின் பிடியில் சிக்க வைத்து எனக்குத் தண்டனை வாங்கி அளித்தாலும் அவர் உள்ளூற என்னை வாழ்த்துவார்!

'எப்படி அவ்வளவு நிச்சயமாய்க் கூறுகிருய்?' என்றுதானே கேட்கிறீர்கள்?

அவர் பெண்ணுக்குக் காதல் கடிதம் எழுதி மயக்கியவனே என் பெண்ணின் கணவன்தான் ஐயா !

சிவத்தின் சக்தி; நாராயண சகோதரி

7

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய
சுவாமிகள்

மகாவிஷ்ணு மீனாக்ஷியைச் சுந்தரேசுவரருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கிறார். மதுரையில் இந்த ஐதிஹ்யம் சிற்பத்தில் வெகு அழகாக இருக்கிறது. அம்பாள் நாராயண சகோதரியாகவும், சிவத்தின் சக்தியாகவும் இருப்பதை அப்படியே கண்ணுக்கு முன்னால் கொண்டு வந்து காட்டுகிறது இந்தச் சிற்பம். இதைப் பார்த்துக் கொண்டேயிருந்தால் நம் மனசில் சைவ வைஷ்ணவ பேத பாவம் போய்விடும்.

பிரம்மத்தில்தான் ஸர்வ சக்தியும் இருக்கிறது. அந்த சக்தியால்தான் சகல பிரபஞ்ச காரியங்களும் நடக்கின்றன. பிரம்மம் பரமேசுவரன், சக்தி அம்பாள், ஜகத்தை எல்லாம் நடத்துவது மகாவிஷ்ணு என்றால், இவர்களும் கடைசியில் ஒருவருக்கொருவர் துளிக்கூட வித்தியாசமே இல்லாதவர்கள் தான் என்று தெரிகிறது. பிரம்மம், அதன் சக்தி, அந்தச் சக்தி செய்கிற காரியம் எல்லாம் வேறு வேறு இல்லை அல்லவா?

சாந்தமாக இருக்கிற பிரம்மம் சிவன், காரியங்கள் செய்து பரிபாலிக்கிறவர் மகாவிஷ்ணு என்று சொன்னாலும், இப்படிப்பட்ட வித்தியாசம் கற்பிப்பதுகூட முழுக்கச் சரியில்லை என்று உணர்த்துகிற வகையில் இரண்டு ராஜாக்களைப் பார்க்கிறோம். ஒருத்தர் ரங்கராஜா, மற்றவர் நடராஜா. ரங்கராஜா இருக்கும் ஸ்ரீரங்கத்தைத்தான் வைஷ்ணவர்கள் 'கோயில்' 'கோயில்' என்று சொல்கிறார்கள். அதே மாதிரி சைவர்கள் ''கோயில்'' என்றால் அது நடராஜா இருக்கிற சிதம்பரம்தான். இந்த இரண்டு மகா க்ஷேத்திரங்களில் உள்ள ரங்கராஜா, நடராஜா இரண்டு பேரும் தென் திசையையே பார்த்துக் கொண்டிருப்பது விசேஷம். தெற்கு யமனின் திக்கு. நமக்கு மரண பயமில்லாமல் நம்மை அமரமாக்குகிற மூர்த்திகளாதலால் யமனுக்கு எதிர் முகம் காட்டுகிறார்கள்.

ரங்கம், அல்லது அரங்கம் என்றால் சபை. சிதம்பரத்தில் நடராஜா இருக்கிற சந்நதியைச் சபை என்றுதான் சொல்கிறோம்.

சபையில் நர்த்தனம் செய்வதுதான் பொருத்தம். ஆனால் இந்த இரண்டு சபைகளில் ஒருத்தர்தான் நர்த்தனம் செய்கிறார். சாந்த நிலையில் பிரம்மமாக இருக்கப்பட்டவர் என்று நாம் சொல்கிற நடராஜா தான் ஆனந்தக் கூத்தாடுகிறார். ஜகத் பரிபாலகரான மகாவிஷ்ணுவோ திரு அரங்கத்தில் பரம சாந்தமாக உறங்குகிறார். சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் நாம் பங்கிட்டு செய்கிற தொழில்களின்படி பார்த்தால் இது தலைகீழாக இருக்க வேண்டும் அல்லவா? இதிலிருந்து என்ன தெரிகிறது? முத்தொழில், ஐந்தொழில் என்றெல்லாம் பிரித்து, நாம் ஒவ்வொன்றுக்கும் ஒரு மூர்த்தியைச் சொன்னாலும்கூட இதுவும் நம் சிற்றறிவுக்கு எட்டுவதற்காகப் பராசக்தி எடுத்துக் கொண்ட பல தோற்றங்கள்தான். அம்மூர்த்திகள் அடியோடு பிரிந்து பிரிந்து இருப்பதாக நினைக்கக் கூடாது. இதைத்தான் இரண்டு ராஜாக்களும் நமக்கு உணர்த்துகிறார்கள் — இவருடைய காரியத்தை அவரும் அவருடைய காரியத்தை இவரும் செய்கிற மாதிரி இரண்டு சபைகளில் நடிக்கிறார்கள்.

தெற்கே பார்த்துக் கொண்டிருக்கிற இன்னொருத்தர் தட்சிணாமூர்த்தி. இவர் பரம ஞானமூர்த்தி. அவருடைய சித் சக்திதான் அம்பாள். அந்த சைதன்யம்தான் சிவ—விஷ்ணுவாக, மும்மூர்த்திகளாக, முப்பத்து முக்கோடி தேவதைகளாக, ஏன், புல் பூண்டு பசு பட்சி மநுஷ்யர்கள் உட்பட சகலமாகவும் ஆகியிருக்கிறது. இவற்றிலே குறிப்பாகப் பாரத தேசம் முழுவதும் சிவபெருமான், திருமால் இவர்களை முழுமுதல் கடவுளாக வழிபடுவதால் நாம் பேத புத்தி இல்லாமல் இருப்பதற்காக மனசில் எந்நாளும் மறவாமல் இருக்க வேண்டியது என்னவென்றால்:

பராசக்தியின் மற்றொரு உருவமே திருமால். பராசக்தியை விட்டுப் பிரிக்க முடியாத பொருளே சிவம்.

எல்லாவற்றுக்கும் உள்நின்று இயக்குகிற அந்தச் சக்தியை நாம் பக்தி செய்தால் தாயாக வந்து ஞானப்பால் கொடுத்து நம்மை ரட்சிக்கிற அம்பாளாகிறாள்.

அவளது அநுக்கிரகம் இல்லாவிட்டால், நாம் சவத்துக்குச் சமம்தான். நாம் செய்கிறதாக நினைக்கிற சகல காரியங்களுக்கும் எண்ணங்களுக்கும் அவள் தருகிற சக்திதான் காரணம். எவருக்குமே நம் சக்தியினாலேயே காரியங்களைச் செய்து கொள்கிறோம் என்று அகம்பாவப்படக் கொஞ்சம்கூட நியாயம் இல்லை. நம்மை நடத்தி வைக்கும் அந்தப் பராசக்தியை நினைத்து, நாள்தோறும் ஒரு நிமிஷமாவது, 'என் சிறு சக்தி உன்னிடமிருந்து தெறித்த ஒரு திவலை; இதை உன் சித்தப்படியே நடத்தி வையம்மா' என்று அர்ப்பணம் பண்ணுவோம்.

இதுவே மனுஷ்ய குணங்களில் முதலாவதாகச் சொல்லப்படுகிற நன்றி;

இதே பூஜை;

இதே ஸ்நானம் — அகம்பாவ அழுக்கைத் துடைத்து நம் உயிரைச் சுத்தமாக்குகிற ஸ்நானம்.



பல்லவன் விபத்துக்கள்: பலமுனைப் பிரச்னைகள்!

திரு எஸ். கோபாலன், குரோம்பேட்டை: தினசரிப் பிரயாணி :

இந்த டிரைவர்களுக்குச் சில தோஸ்துக்கள். 'பீக்' அவரில், இரண்டு பஸ்ஸுக்கான பயணிகளுடன் ஒரே பஸ் போகும்போது டிரைவரின் முதுகில் சாய்ந்தாற்போல் நின்று அவருடன் கதை பேசுகிறார்கள். அப்புறம் அந்த டிரைவரின் கவனம் என்ன ஆவது ? அவர் கவனம் பிசகினால் பாசஞ்சர்கள் கதிதான் என்ன ஆவது ?

ஒரு கண்டக்டர் (பெயர் சொல்ல விரும்பவில்லை):

பொதுஜனங்கள் இருக்காங்களே ! அவங்க 'இடம் இல்லை' என்று கையைக் காட்டி, 'டபுள் விசில்' கொடுத்த காலத்திலேயும் ஏசினாங்க ! பேசினாங்க. இப்போ நிறுத்தி நிதானமாக எல்லாரையும் ஏற்றிக் கொண்டாலும், 'என்னப்பா, இப்படித் திணிக்கிறீங்க ! நாங்க மூச்சு விடணுமா, வேண்டாமா?'ன்னு கேட்கிறாங்க! அவங்களே வண்டியிலே இருக்கிற 'லோடை'ப் பார்த்து அனுசரிச்சு முன் பஸ்ஸிலேயோ, பின் பஸ்ஸிலேயோ போகலாமே !

ஆனால் ஒண்ணு! 'ஓவர்லோடிங்கி'னாலே இதுவரை என் பஸ் விபத்துக்களை ஏற்படுத்தலே ! இன்ஸெண்டிவ்வுக்கும் ஆக்ஸிடெண்டுக்கும் சம்பந்தமில்லை என்பது என் அபிப்பிராயம் !

மற்றொரு கண்டக்டர் (இவரும் பெயர் சொல்ல விரும்பவில்லை):

இந்த 'ஸ்டூடன்ஸ்' ரகத்தை ஏதாவது சொல்லிட்டா உடனே கலாட்டா! அவங்க செய்ற ஃபுட்போர்ட் டிராவல் ஆக்ஸிடெண்டுகளுக்கு அஸ்திவாரமாக இருக்கு. அவங்க அவங்க வீட்டிலே இருக்கிற பெரியவங்க கண்டிச்சு இதைத் தடுக்கணும். எங்களாலே என்ன செய்ய முடியும்?

''ஏறாதே''ன்னா, ''ஏனையா! உனக்குத்தான் இன்செண்டிவ் கொடுக்கிறாங்களே ?''ன்னு கூச்சல் வருது. 'இன்செண்டிவ்' தேவைதான். 'ஆக்ஸிடெண்ட்' வேண்டாம் சாமி !

ஒரு டிரைவர் (இவரும் தம் பெயரைத் தெரிவிக்க விரும்பவில்லை):

'இன்ஸெண்டிவ்' அடிப்படையிலே போட்டி, பொறாமை இதுகளும் கூடவே வளர்ந்துகிட்டு வருகிறது. அடுத்த ஸ்டாப்பில் முன்னால் போய் நின்று பாசஞ்சர்களை ஏற்றிக் கொள்ள 'ஓவர்டேக்' பண்ணுவது சகஜமாய் போச்சு ! ஓவர்லோடிங்காலே ஆக்ஸிடெண்டுகள் ரொம்பக் குறைச்சல். 'ஓவர்டேக்கிங்லே' ஆக்ஸிடெண்டுகள் ஜாஸ்தி.

மற்றொரு டிரைவர் (இவரும் தம் பெயரை வெளியிடவில்லை):

எங்களுக்குக் கொஞ்ச நாள் முன் வரை ஒரு கெட்ட பெயர். 'தண்ணி போட்டுட்டு வண்டியை எடுக்கிறாங்க'ன்னு! ஆதாரமில்லாத விஷயம். டியூட்டி முடிஞ்சு போனப்புறம் சில பேர் மது சாப்பிட்டது உண்மை! ஆனால் வேலை நேரத்திலே மூச்சு விடப்படாது. ரோடுகளிலே ஓரமா நடக்க நம்ப ஜனங்கள் இன்னும் கத்துக்கலே. அவங்க அவங்க வீட்டு முற்றத்திலே நடக்கிற மாதிரி நடக்கிறாங்க. அவங்க துரதிர்ஷ்டமும் எதிர்பாராமல் வண்டிகளிலே ஏற்படற



'மெக்கானிக்கல் டிபெக்ட்'டும் சேர்ந்துக்கிட்டா விபத்து வந்துடுது. பல விபத்துக்களிலே டிரைவர்களும் மாட்டிக்கிறாங்கங்கறதை மறந்துடக் கூடாது.



ஒரு டைம்கீப்பர் (பெயர் சொல்லவில்லை):

எங்களுக்கு ஊக்கப் பணம் கிடையாது. அதை நாங்கள் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால் ஒரு வதந்தியை நாங்கள் மறுத்தாக வேண்டும். பஸ் கண்டக்டர்களும், டிரைவர்களும் எங்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு டிரிப் டயத்தைவிட அதிகமாக, வசூலை எதிர்பார்த்து எடுத்துக் கொண்டு, நேரத்தை 'அட்ஜஸ்ட்' செய்கிறார்கள் என்பதுதான் அந்த வதந்தி. அவர்கள் இடைஇடையே கூட்டத்தைச் சமாளித்து டிக்கட் கொடுக்க வண்டிகளை நிறுத்தினாலும் எப்படியோ டயத்தை மேக்கப் செய்துவிடுகிறார்கள். ஒரு வேளை, இந்த நீண்ட காலதாமதமும் அதை ஈடு கட்ட எடுத்துக் கொள்ளும் அதிக வேகமும் விபத்துக்களைத் தோற்றுவிக்கலாம். இந்த 'இன்ஸெண்டிவ்' வந்த பிறகு சீரான ஓட்டத்தை டிரைவர்கள் கடைப்பிடிக்கிறார்களா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்தான்!

போலீஸ் போக்குவரவு புலனாய்வுத் துறை அதிகாரி திரு ஜே. எம். ரஞ்சிதம்:

ஒரு விபத்து நடந்தால், பொதுமக்கள் மற்றும் அந்தப் பஸ்ஸில் பிரயாணம் செய்பவர்கள், ஒழுங்காகச் சாட்சியம் சொல்ல வருவதில்லை. 'நமக்கு எதற்கு வம்பு' என்று ஒதுங்கிக் கொள்ளும் சுபாவம் தவறு செய்யும் டிரைவர்களுக்குச் சாதகமாகப் போய்விடுகிறது. பொது மக்கள் கோபத்துக்குப் பயந்து ஓடி ஒளிந்து பிறகு போலீஸில் சரணடையும். இந்த டிரைவர்களை யார்தான் ஜாமீன் கொடுத்து அழைத்துச் செல்வது என்ற நியதி இல்லை. ஒரு டெம்பரரி கண்டக்டர்கூட ஜாமீன் கொடுக்கலாம்! அப்புறம் கேஸ் நடக்கும்போதெல்லாம் அந்த டிரைவர் சிக் ரிப்போர்ட் செய்துவிடுவார். ஜாமீன் கொடுத்த கண்டக்டர் வேலையைவிட்டே போயிருப்பார்! கேஸ் இழுத்துக் கொண்டே போகிறது. பொறுப்பான, போதிய பயிற்சி உள்ள டிரைவர்களை அமர்த்தினால் விபத்துக்களைத் தவிர்க்கலாம்.


திரு தில்லைநாயகம், மானேஜிங் டைரக்டர், பல்லவன் டிரான்ஸ்போர்ட்:

போக்குவரத்து விபத்துக்களுக்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம். 1. வேகமாக வளர்ந்து வரும் போக்குவரத்து நெரிசல், 2. டிரைவர்களில் சிலபேரிடம் தோன்றியிருக்கும் வேகமனப்பான்மை. முதல் காரணம் இன்றியமையாதது. இரண்டாவது காரணத்துக்கான சூழ்நிலைகளைப் பற்றி நாங்கள் ஓர் ஆராய்ச்சியே செய்து வருகிறோம். வேலை நாட்களில், அதாவது ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில், 45 சத விபத்துக்கள் காலை 9லிருந்து 12 வரையிலும் மாலை 4லிருந்து 7 வரையிலும் நிகழ்கின்றன. ஞாயிற்றுக் கிழமைகளில் விபத்துக்கள் குறைவு. வருடத்தின் இரண்டாவது பகுதியில்—அதாவது ஜூலையிலிருந்து டிசம்பர் வரையில் முன் பகுதியைக் காட்டிலும் விபத்து விகிதம் அதிகம்.

இதில் ஒரு விசேடம் என்னவென்றால் நாற்பது சதவிகித விபத்துக்கள், பஸ்கள் ஓடும்போது ஏறுவதிலும் இறங்குவதிலும் நிகழ்கின்றன. இதற்குப் பிரயாணிகள்தானே பொறுப்பு? ஃபுட்போர்டில் தொத்திக் கொண்டு போவதால் ஏற்படும் விபத்துக்கள் பத்து சதவிகிதம். இதற்கும் பிரயாணிகள் தானே பொறுப்பு?

இப்போது டிரைவர்களின் ஆரோக்கிய நிலையைப் பரிசோதிக்க ஆறுஆண்டுகளுக்கு ஒரு முறை என்ற கணக்கில், ஏற்பாடு செய்திருக்கிறோம். மேலும் கனரக வண்டிகளை ஓட்டி லைசென்ஸ் பெற்றவர்களைத்தான் டிரைவர்களாகத் தேர்ந்தெடுக்கிறோம். அவர்களுக்கு நகரப் போக்குவரத்துக்கான விசேஷப் பயிற்சிகளும் கொடுக்கிறோம்.

தொடர்ச்சியாக நாலு விபத்துக்களில் சம்பந்தப்படும் டிரைவர்களை, வண்டி ஓட்டும் பொறுப்பிலிருந்து எடுத்து 'டிப்போ' வேலைகளுக்கு அனுப்புகிறோம். அவர்களுடைய அன்றாட 'பாட்டா' நஷ்டம். அதுவே அவர்களுக்குத் தண்டனையாகவும் ஆகிவிடுகிறது.



விபத்தில் சம்பந்தப்படும் டிரைவர்கள் உடனடியாக 'சஸ்பெண்ட்' செய்யப்படுகிறார்கள். விசாரணைக்குப் பிறகு அவர்கள் மேல் குற்றம் ருசுவாகாவிட்டால்தான் மீண்டும் வேலைக்கு அனுமதிக்கப்படுவார்கள். கோர்ட்டுக்குப் போகும் வழக்குகளுக்கு அவர்களுக்கு உதவச் சட்ட ஆலோசகர்களும் இந்த நிறுவனத்தில் இருக்கிறார்கள்.

பொதுவாக ஒரு விபத்து நிகழ்ந்தவுடன் அதற்கு 'மெக்கானிக்கல் டிஃபெக்ட்'தான் காரணம் என்று சாதிக்கும் டிரைவர்கள் அதிகம் பேர். யந்திர சாதனக் கோளாறால் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பம் மிகக் குறைவு. காரணம் விலையைப் பார்க்காமல் உபரிப் பகுதிகளை வாங்கி அவ்வப்போது பொருத்திக் கொண்டேயிருக்கிறோம். இதற்காக டிப்போக்களில் 'மெயின்டினன்ஸ்' ஊழியர்களுக்கும் 'இன்ஸெண்டிவ்' தொகை உண்டு.

பொதுவாக மனித அஜாக்கிரதையால்தான் விபத்துக்கள் நிகழ்கின்றன. டிரைவரும் சைக்கிள் ஓட்டிகளும் சாலையை எக்கச்சக்கமான இடங்களில் கடப்பவர்களும் எல்லோருமே மனிதர்கள்தாமே!

இப்போது பத்திரமாக பஸ்களை ஓட்டிச் செல்பவர்களுக்கு விசேஷ 'அவார்டு' கொடுக்கலாமா என்ற யோசனையும் பரிசீலனையில் இருக்கிறது.

பல்லவன் போக்குவரத்து நிறுவனம் கொடுக்கும் விவரங்கள்:

தொங்கிக்கொண்டு ஃபுட்போர்ட் பிரயாணத்தால் ஏற்படும் விபத்துக்கள் 10 சதம்.

அதிகப்படியான விபத்துக்கள் ஏற்படும் இடங்கள்: நேதாஜி போஸ் சாலை, பேசின் பிரிட்ஜ் சாலை, அண்ணா சாலை, திருவல்லிக்கேணி ஹைரோட்.

முடிவுரை

எந்த நேரத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவு பிரயாணிகள்தான் அதிகப்பட்சம் ஏறலாம் என்ற நியதியைப் பஸ் போக்குவரத்து நிர்வாகம் கொண்டுவர வேண்டும். இதனால், ஊக்க போனஸ் பற்றிய போட்டி உணர்ச்சி குறையும்; பஸ்களின் தேய்மானம் குறையும்; பிரயாணிகள் ஏறுவது, இறங்குவதில் கண்டக்டர், டிரைவர் கவனம் அதிகமாகும்; விபத்துக்கான சந்தர்ப்பங்கள் குறையும்.

இந்த நிலையை அவ்வப்போது சோதனை செய்யவும், இடைவழியே அதிகாரிகள் இருக்க வேண்டும்.

எழும்பூர் ரயில் நிலையம், அண்ணா சாலை போன்ற இடங்களிலிருந்து காலை மாலை நேரங்களில் தேவையான 'ஷட்டில் சர்வீஸ்' பஸ்கள் விட்டுக் குறுகிய தூரப் பிரயாணிகளுக்கு முன்போல உதவ வேண்டும். 'இன்ஸெண்டிவ்' திட்டம் வந்தபிறகு இந்தப் பஸ்கள் ஓடுவதில்லை.

உயிர்ச் சேதம் விளைவிக்கும் விபத்துக்குக் காரணமாக இருக்கும் டிரைவர்கள் லைசென்ஸ்களை நிரந்தரமாக ரத்து செய்ய வேண்டும்.

அதிகரித்து வரும் பிரயாணிகளின் எண்ணிக்கையை ஈடுகட்ட அதிக பஸ்களை விட ஏற்பாடு செய்ய வேண்டும்.

– கோமதி சுவாமிநாதன்

வண்ண நூலில் கண்கவர் கோலம்!

கடைகளில் 'ஸ்பைரோகிராப்' என்று பற்களைக் கொண்ட சக்கர செட் விற்கப்படுகிறது. இதைக் கொண்டு விதம் விதமான டிசைன்கள் போடலாம். அது போலவே வண்ண நூல்களில் விதம் விதமான டிசைன்கள் தயாரிக்கத் தேவைப்படுவது மின் உபகரணமான ரீப்பர் கட்டைகள், வண்ண நூல்கள், ஆணிகள், கறுப்புத் துணி ஆகியவை. வெளியே சதுரமாகவும் உட்புறம் வட்டமாகவும் ரீப்பர் கட்டைகளை அமைத்து அவற்றின்மீது கறுப்புத் துணி பரப்பிக் குறிப்பிட்ட இடைவெளிகளில் நிறைய ஆணிகளை அடிக்க வேண்டும். பிறகு பல்வேறு வண்ண நூல்களைக் கொண்டு பல்வேறு முறைகளில் ஓர் ஆணியிலிருந்து மற்றோர் ஆணிக்குப் பின்னிக்கொண்டு போவதன் வாயிலாக விதம் விதமான வண்ண டிசைன்களைத் தயாரிக்கலாம். இந்த யோசனை சொன்னவர்கள்: டி. வி. எஸ். லூகாஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு அமலோரும் திரு கோபியும்,

மேலட்டை வண்ணப்படம்: பரணிநாதன்

ஒரு ரஷ்யக் கதை



போலீஸ் நாய்

· தமிலன்.

ஜெர்மய்யா பாப்கின் என்பவரது கம்பளிக் கோட்டை யாரோ அவர் வீட்டிலிருந்து திருடிக் கொண்டு போய்விட்டார்கள். அதற்காக அவர் பெரிதும் வருந்தினர்.

எப்படியும் அந்தக் கோட்டைத் திருடியவனைக் கண்டு பிடித்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார்.

திருடனைக் கண்டுபிடிக்கப் போலீஸ் நாய் தருவிக்க ஏற்பாடு செய்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு போலீஸ்காரர் ஒரு பெரிய நாயை அழைத்துக் கொண்டு வந்தார். அது பழுப்பு நிறத்ததாயும், மிகவும் கூர்மையான மூக்குள்ளதாயும் இருந்தது.

அவர் நாயைப் பாப்கின் வீட்டு வாசற் கதவுப் பக்கம் நிறுத்தி, தரையில் உள்ள பாத ரேகைகளை மோப்பம் பிடிக்கத் தூண்டினர். நாய் காற்றைச் சுவாசித்தது.

அதை வேடிக்கை பார்க்கக் கூட்டம் கூடியிருந்தது. கூட்டத்தினர் ஒழுங்காக, வரிசையாக நின்றிருந்தனர். நாய் அவர்கள் பக்கம் திரும்பியது.

வரிசையில் ஐந்தாவதாகப் பெக்கா என்ற ஸ்திரீ நின்று கொண்டிருந்தாள். நாய் அவளது பாவாடையை முகர்ந்து பார்க்க முயன்ற போது அவள் சற்று நகர்ந்தாள். ஆனால் நாய் அவள் பின்னலேயே போய் அவள் பாவாடையைக் கவ்விக் கொண்டது. அவள் தப்பித்துக் கொண்டு ஓடப் பார்த்தாள். ஆனால் நாய் அவளை விடவில்லை.

அந்த ஸ்திரீ போலீஸ்காரர் முன்னல் சென்று மண்டியிட்டாள்.

''நான் அகப்பட்டுக் கொண்டுவிட்டேன். காடி மாத்திரை மருந்து பாட்டில்கள் திருடியது நான்தான். அவற்றை என் வீட்டு ஸ்நானஅறையில் ஒளித்துவைத்திருக்கிறேன்'' என்று குற்றத்தை ஒப்புக்கொண்டாள்.

''கம்பளிக் கோட்டை எங்கே வைத்திருக்கிறாய்?'' என்று கூட்டத்தினர் கேட்டனர்.

''அதைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. அதை நான் பார்த்ததுகூட இல்லை'' என்று கண்ணீர் ததும்பக் கூறினாள்.

அவள் மருந்துப் பாட்டில் திருடிய குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டாள்.

போலீஸ்காரர் நாயை மறுபடியும் பாப்கின் வீட்டுப் பக்கம் தரையை மோப்பம் பிடிக்கச் செய்தார். அது பத்தாவதாக நின்றிருந்தவரின் நிஜாரைப் பிடித்து இழுத்தது. அவர் வீடு நிர்மாண அதிகாரி.

அவர் திகில்பட்டு டிராயரைத் தூக்கிப் பிடித்துக் கொள்ள முயன்றார். ஆனால் நாய் மேலும் பலமாக இழுத்தது. அவர் போலீஸ்காரரைப் பார்த்துச் சொன்னார் :

'' நான் என் குற்றத்தை ஒப்புக் கொண்டு விடுகிறேன். ஸிமெண்டில் வெள்ளைக் களிமண் கலந்து உபயோகித்தேன்.''

அவரும் கைது செய்யப்பட்டார்.

நாய் மூன்றாவது முறையாக மோப்பம் பிடித்துப் பார்த்தது. உடனே அது 'விர்' என்று முதலில் நின்று கொண்டிருந்தவரிடம் வந்து அவர் நிஜாரைக் கவ்விற்று. அவர் போலீஸ்காரரைப் பார்த்து, ''நான் யாருடைய சொத்தையும் திருடவில்லை. நான் வேலைக்கு எடுக்கப்பட்ட போது என் வயதை மூன்று வருடங்கள் குறைத்துச் சொன்னேன். அதனால் கட்டாய ராணுவ சேவையிலிருந்து தப்பினேன்'' என்றார்.

ஏதேதோ திருட்டுப் போனது தெரிய வந்ததேயன்றி ஜெர்மய்யா பாப்கினது கம்பளிக் கோட்டு காணமற் போனதைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை. அவர் போலீஸ்காரரிடம், மோப்ப நாயை அழைத்து வந்ததற்கான கட்டணத்தைக் கொடுத்ததை நாய் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தது. அது திடீரென்று போலீஸ்காரரின் கணுக்காலைக் கவ்விற்று. மறுகணம் போலீஸ்காரர் அந்த நாய் முன்னல் மண்டியிட்டார்.

''என்னை விட்டுவிடு. நான் என் குற்றத்தை ஒப்புக் கொண்டுவிடுகிறேன். உனக்குத் தீனி போடுவதற்காகக் கொடுக்கும் பணத்தில் பாதியை என் சொந்த காரியத்துக்கு உபயோகப் படுத்தி வந்திருக்கிறேன்!''

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

அன்னபூரணி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்



நம் தேசத்தில் மட்டும் என்றில்லை; லோகம் முழுக்க துர்ப்பிக்ஷம் அதிகமாகி வருகிறது. மெஷின்கள் நிறையச் செய்து விடலாம். பாக்டரிகள் நிறைய வைத்து விடலாம். ஆனால் பயிர் பச்சைகள் வளர்வது நம் கையில் இல்லாமல் இருக்கிறது. தானிய ஸம்ருத்தி (செழிப்பு) இருந்தாலொழிய, வயிறு நிரம்பினால் அன்றி, பாக்கி என்ன சுபிட்சம் செய்து கொண்டாலும் மொத்தத்தில் துர்ப்பிட்சமாகத்தான் இருக்கிறது. இப்போது லோகத்தில் இந்த நிலைமை தான் இருக்கிறது. பயிர் பச்சை விளைச்சலுக்கு நம்முடைய அகட விகட சாமர்த்தியங்களால் பிரயோஜனமில்லை. என்ஜினியர் அணை கட்டலாம். ஆனால் மழையைப் பெய்விக்க அவரால் முடியாது. ஜகன்மாதாவான அன்னபூரணேசுவரியை எல்லாரும் மனசாரப் பிரார்த்தித்துக் கொண்டால் தான் விமோசனம் உண்டு. அவளே நாம் செய்கிற மகா பாபங்களை க்ஷமித்துத் தானிய ஸம்ருத்தியை அநுக்கிரகிப்பாள். துர்பிட்சம் போக அவளே பிச்சை போடுவாள்.

நம்முடைய ஆசார்யாள், ஸ்ரீ சங்கர பகவத்பாதர் காசியில் இருந்த போது அன்னபூரணேசுவரிமீது ஒரு ஸ்தோத்திரம் பாடியருளினார்.

அதில் சுலோகத்துக்குச் சுலோகம் முடிவிலே, 'கருணையின் பற்றுக் கொம்பாக இருக்கிற அம்மாவே, அன்னபூரணேசுவரியே, எனக்குப் பிச்சை போடு' என்று உருக்கமாக வேண்டுகிறார்.

பிக்ஷாம் தேஹி க்ருபாவலம்பனகரீ
மாதா அன்னபூர்ணேச்வரீ

'எனக்கு' என்றால் அவருக்கில்லை. அவருக்கு பிக்ஷை ஜாம் ஜாம் என்று நடந்து கொண்டிருக்கும்! தவிரவும் நம் ஆசாரியாளுக்குத் தான் என்கிற எண்ணம் லவலேசம் கூடக் கிடையாது. கிரகசன் என்ற காபாலிகன் அவரிடம், ''ஒரு சக்கரவர்த்தி அல்லது சந்நியாசியின் தலையைப் பலி கொடுத்தால் எனக்குக் கபாலியின் தரிசனம் கிடைக்கும்'' என்றான். உடனே ஆசார்யாள், ''சக்கரவர்த்தியின் தலைக்கு ஆசைப்பட்டால் உன் தலையே போய் விடும். சந்நியாசியின் தலை வேண்டுமானால் இதோ இந்தத் தலையை எடுத்துக் கொள்'' என்று தமது சிரஸையே தொட்டுக் காட்டினார். அப்புறம் ஈசுவர சங்கல்பத்தால் கதை மாறிப் போயிற்று. அது வேறு விஷயம். இப்போது நான் அந்தக் கதையைச் சொல்ல வரவில்லை. ஆசாரியாளுக்குக் கொஞ்சம்கூட அகங்கார, மமகாரமே கிடையாது என்பதற்காக இதைச் சொன்னேன். அப்படிப் பட்டவர் ''எனக்கு பிக்ஷை போடு'' என்றால் என்ன அர்த்தம்?

இந்த ஸ்தோத்திரத்தின் கடைசி சுலோகத்தைப் பார்த்தால் அர்த்தம் புரியும். அதில் 'எனக்குப் பார்வதியே அம்மா; பரமேசுவரனே அப்பா; சிவபக்தர்கள் எல்லாம் பந்துக்கள்; மூவுலகமும் வீடு' என்கிறார். எனவே எனக்குப் பிச்சை போடு என்று இவர் கேட்கிற போது, திரிலோகங்களுக்கும் பிச்சை போடு என்றே அர்த்தமாகிறது.

அதோடு, தனக்கு என்றே வேண்டிக் கொள்கிற நம் மாதிரி இருக்கப்பட்டவர்கள் பாராயணம் செய்வதற்கும் பொருத்தமாக இப்படி ஸ்துதி செய்திருக்கிறார்.

அன்ன பிக்ஷை மட்டும் பிரயோஜனமில்லை. முடிவில் ஞானமில்லாமல் வெறுமே தின்று தின்று ஊனை வளர்த்துப் பிரயோஜனமில்லை. கையில் க்ஷீரான்ன (பால்சோற்று)ப் பாத்திரமும், கரண்டியும் வைத்துக் கொண்டு அன்புருவாக உணவு போடும் அன்னபூரணி இந்த ஞானத்தையும் விசேஷமாக அநுக்கிரகிக்கிறாள். ஞான வைராக்கியப் பிச்சையைத் தான் ஆதிசங்கரரும் முடிவாகக் கேட்கிறார்.

காஞ்சி காமாக்ஷியில் அன்னபூர்ணேசுவரியும் அடக்கம். காமாக்ஷி இரு நாழி நெல் கொண்டு முப்பத்திரண்டு அறங்களை வளர்த்தாள். அதில் அன்னதானம் ஒன்று. காமகோட்டத்தில் அன்னபூரணி சந்நிதி இருக்கிறது. காஞ்சியில் ஓண காந்தன் தளியில் இருக்கும் ஸ்வாமியைப் பாடும் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள் 'காமகோட்டத்தில் அன்னபூரணியே இருக்கும் போது நீர் ஏன் பிக்ஷாண்டியாக அலைகிறீர்?' என்று கேட்கிறார்.

வாரிரும் குழல் வாள்நெடுங்கண்
மலைமகள் மதுவிம்மு கொன்றைத்
தாரிருந்தட மார்பு நீங்காத் தையலாள்
உலகுய்ய வைத்த
காரிரும் பொழில் கச்சி மூதூர்க்
காமகோட்டம் உண்டாக நீர் போய்
ஊரிடும் பிச்சை கொள்வதென்னே
ஓண காந்தன் றளியுளீரே!

சரீரம், ஆத்மா இரண்டுக்கும் உணவூட்டி வளர்க்கிற அன்னபூரணேசுவரியை துதித்து சமஸ்த ஜீவர்களுக்கும் துர்பிட்சம் நீங்கப் பிரார்த்திப்போம்.



நவராத்திரியின்போது அஞ்ஞான உருவான அவுணரைச் சம்ஹரித்து ஞானஒளி புலரச் செய்த துர்க்காதேவியேதான் காமாட்சி. நவராத்திரியை யொட்டி வெளிவரும் இந்த இதழில் காமாட்சி சுப்ரபாதத்தின் நயமான பகுதிகளைத் தமிழாக் கித் தருகிறோம். -- ஆ-ர்.

ஞான இரவும் கான

குழந்தை தூங்கும், தாய் விழித்துக் கொண்டே யிருப்பாள்; குழந்தையையும் விழிப்புறச் செய்வாள். இதுவே உலக வழக் கம். ஆனால் மூவுலக மாதாவோ குழந்தைகள் அழைக்க, அழைக்க் விழிக்காமலே இருக் கிறாளே! 'மதலையர் எழுப்பவும் தாய்துயில் வாளோ' என்று பாரதி பாரத மாதாவான பராசக்தியிடம் கேட்ட இதே கேள்வியைக் கவி லக்ஷ்மிகாந்த சர்மா ஸ்ரீ காஞ்சி காமாக்ஷியிடம் கேட்கிறார்.

பாரதியாரின் திருப்பள்ளி எழுச்சி போல வும், சர்மாவின் காமாக்ஷி ஸுப்ரபாதம் போலவும் ஒரு துதி, தன்னைத் துயிலெழுப்ப வேண்டியே பிறக்கும் எனில், பரம ரசிகை யான அம்பாள் எழுந்திருந்து வரவே மாட் டாள்; பொய்த் தூக்கத்தில் துதி கேட்டுக் கொண்டே தான் இருப்பாள் என்று தோன்று கிறது!

சம்ஸ்கிருத மொழியில் ஸ்ரீ பாலாஜி வேங்கடரமணனுக்கும், மற்றும் பல தெய்வங் களுக்கும் உள்ள உத்தமமான ஸுப்ரபாதங்க ளோடு, தமிழில் சிவபெருமான் மீது மாணிக்கவாசகரும், அரங்கநாதன் மீது தொண்டரடிப் பொடியும், பராசக்தி மீது பாரதியும் பாடியுள்ள திருப்பள்ளி எழுச்சி களோடு வைத்து மதிக்கத் தக்கதாக அமைந் துள்ளது ஸ்ரீ காமாக்ஷி ஸுப்ரபாதம். ஸ்ரீ காஞ்சி ஆசாரியாளின் அநுக்கிரக விசேஷம்!


இதில் நேராகவும், மறைமுகமாகவும் மிளிரும் கவி நயங்களில் சிறிது சுவைக்கலாம்:

அம்பிகையின் வதனத்தை நினைத்துக் கொண்டு தண் மதியத்துக்கு வெட்கம் வந்து அஸ்தமித்து விட்டதாம். தன் பொன்னுரு அவள் முகம் போலிருக்குமோ என்று ஒப்பு வமை காண ஆதவன் உதித்து விட்டானும்! இரவு முடிந்து வைகறை விரிவதை இப்படிச் சொல்கிறார் கவி!

ஆனால் சூரியனின் வெம்மையின்றிக் குளிர்ந் திருப்பினும் சந்திரனிலும் ஒளி சிறந்து விளங் குவது அம்மையின் முகம். 'சயனக் கிருகத் தில் தனது மூடிய கண்ணுக்கு மேலாகப் படிந்துள்ள இந்தஒளிப் போர்வை மதியத்தினுடை யதேஎனமகாதேவன்நினைத்து விட்டானு? அதனால் தான் விழிப்புறாமல் உன் மடியி லேயே படுத்துறங்கிக் கொண்டு, உன்னை யும் அந்தப்புரத்தி லிருந்து வெளியே வரவொட்டா மல் செய்கி றானு?' எனக் கேட்கிறார் கவி.

'நீ விழித்துக் கொண்டு விட்டாய் என் பதை உள்ளே உன் அணிகள் கலகலக்கும் ஜல் ஜல் ஒலி தெரிவிக்கிறது. உன் பதிதான் நீ எங்கள் முன்வந்து எங்களுக்கு நன்னாளை விடிவிக்காமல் செய்கிறார். உண்மையிலோ உங்களுக்குள் ஊடல் தகராறு. எனவே பொழுது விடிந்ததைத் தெரிந்து கொள்ளா தது போல் ஊடலிலும் உன் மடியிலேயே தூங்கிவிட்ட பாவனையில் கிடக்கிறான்! ஆனால் உனக்கா தெரியாது? எனவே இள நகை புரிகிறாய்! அவன் புன்னகை செய்த போது திரிபுரம் எரிந்தது. திரிபுர சுந்தரியான நீ புன் முறுவல் செய்கையிலோ அவனுடைய ஊடல் கோபம் சாம்பராகப் பறக்கிறது. அப்புறம் என்ன? நீ நன்றாகவே வாய் விட்டுச் சிரிக் கிறாய். நாங்கள் மானசிகமாகக் காணும் இந்த இள நகையையும், கலீர்ச் சிரிப்பையும் ஸ்தூலமாகக் காட்டுவதற்கு வா! மர்மத்தை நாங்கள் புரிந்து கொண்டு விட்டதால் ஐயன் எழுந்திருந்து விட்டான். தான் வெறும் சிருங்கார சேஷ்டைக்காரனாகத் தோன்றக் கூடாது என்பதால் கங்காதரனான அவன் இதோ கங்கையில் ஆசார நியதியுடன் நீரா டக் கிளம்பி விட்டான். ஆனாலும், அவனால் போக முடிகிறதா? உன்னை எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறான். நீ 'சேஷம்' வைத் துள்ள ஊடலைத் தள்ளிவிட்டு வெளியே வா!

'உன்னை வெறும் சிருங்கார பேடகமாகச் சொன்னால் போதாதா? சொல்லாமலே நீ பரம ஞான மாதா தான். உன் க்ஷீரத்தைப் பருகி ஒரு தமிழ்க் குழந்தை ஞான சம்பந்தன்













வைகறையும்

பாரதத்தின் பல்வேறு முக்கிய நகரங்களிலும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி பாடியுள்ள காமாட்சி சுப்ரபாதம் இசைத்தட்டு வெளியீட்டு விழாக்கள் நடைபெற்றதைப் புகைப் படங்களில் காண்கிறீர்கள். 1. காஞ்சியில் ஸ்ரீ வி. ஆர். பட்டாபிராமன் வெளியிட்டார். 2. சென்னையில் ஜஸ்டிஸ் மகராஜன் தலைமையில் ஸ்ரீ ஏ. வி. எம். வெளியிட்ட இசைத்தட்டைப் பெற்றுக் கொண்டவர் ஸ்ரீமதி மதுரம் கோபால கிருஷ்ணு. 3. பெங்களூர் விழா ஸ்ரீ எச். வி. ஆர். ஐயங்கார் தலைமையில் நடைபெற்றது. 4. பம்பாயில் ஸ்ரீ பால்கிவாலாவும் ஸ்ரீ டி. வி. ராமானுஜமும் விழாவைச் சிறப்பித்தனர். 5. கல்கத்தாவில் ஸ்ரீ முகர்ஜி பேசுகிறுர். அருகில் அமர்ந்திருப்பவர் ஸ்ரீ ஜி. எல். மேத்தா. 6. புதுதில்லி காமகோடி ஸேவா ஸமிதி தலைவர் ஸ்ரீ சுப்பிரமணியம் மத்திய அமைச்சர் டாக்டர் கரன்சிங்கிடமிருந்து இசைத்தட்டைப் பெற்றுக்கொண்டார். 7. வாரணுசியில் ஸ்ரீ கௌதம் பேசுகிறுர்.

என்றே பேர் பெற்று, அற்புதத் தமிழில் ஞானக் கவிகளைக் கொட்டியதே! நீ பாலூட்டிய விசேஷத்தால் இன்னெரு குழந்தையோ தகப்பனுக்கே ஞானேபதேசம் செய்யும் மகிமை எய்தியதே! உன்னை ஸ்துதி பாடுகிறவர், தாளவாத்தியக்காரர், உன் தரிசனத்துக்குக் காத்திருக்கும் லக்ஷ்மி, சரஸ்வதி உள்ளிட்ட தேவியர், தேவர், உன் ஞானக் குழந்தைகள் எல்லோரும் வெளியில் ஸுப்ர பாதக் காட்சிக்கு ஆர்வமுற்று நிற்பதைச் சொல்லியாயிற்று. அப்படியும் நீ எழுந்திருந்து வரக் காணேம். சரி, இதோ யார், பார்? சாக்ஷாத் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் சந்திரசேகர பகவத் குருவாக்கும் நிற்கிறுர். ஆதிசங்கரரின் காலம் தொடங்கிக் காமகோடி பீடத்தில் வழிவழி உன்னை ஆராதித்து வரும் வரிசையில் வந்துள்ள அப் பெம்மான் புஷ்பங்களும், பழங்களும் கையுறையாகக் கொண்டு உனைக் காண வந்து நிற்கிறுர்!'

இந்தப் பிரம்மாஸ்திரத்தைப் பிரயோகித்தவுடன் கவிக்கு அம்பிகை நிச்சயம் வெளி வந்து விடுவாள் என்ற உறுதி பிறக்கிறது. பாபத்தைப் போக்கி, அமர நிலை நல்கி, இகத்திலும் பரத்திலும் அபயம், வரம் தரும் திரு உருவ தரிசனம் இதோ கிடைத்துவிடும் என்ற நிச்சயம் உண்டாகிறது. கவித்வ சாதுரியங்களும், மாதுரியங்களும் மறைய, 'உன்னையன்றி வேறு கதி இல்லை' என்ற முறையீடே பீறிக் கொண்டு கிளம்புகிறது. மங்கள வைகறையில் ஏன் இதற்குக்கூடப் புலம்ப வேண்டும்? வாரி வழங்க அவளே அறிவாள். 'இதோ அம்பாள் வந்து விட்டாள். இந்த க்ஷணமே துக்கம் பறந்தது; சுகம் மலர்ந்தது' என்று துதியைப் பூர்த்தி செய்கிறுர் கவி.

மற்ற ஸுப்ரபாதங்களைப் போல் உனக்கு நல்விடிவு' என்று சொல்லாமல் 'உன்னுல் எமக்கு நல்விடிவாகட்டும்' என்றே கூறி வந்துள்ள கவி அந்த விடிவுதந்த நிறைவை நம் நெஞ்சிலும் உண்டாக்கி விடுகிறுர்.

முகம் எரிந்தது; மனம் குளிர்ந்தது!

ரா. வீழிநாதன்

தினமும் பொழுது விடிந்து பூமி தெரிவதற்குள்ளாக அவளை அந்தப் பேட்டையில் காணலாம். 'விசுக், விசுக்'கென்று தலையில் கீரைக் கூடையுடன் அவள் வருவதே தனி அழகு.

அவளுக்கு வயது இருபதுகூட இருக்காது. அவள் கொண்டுவரும் பசுமையான கீரை போலவே. தளிர் மேனி. இளமை இழையோடி என்னென்னவோ அபூர்வ வேலைப்பாட்டைச் செய்திருந்தது. இளவட்டங்களென்ன, முதுவட்டங்களுமே இமையாது எழில் பருகும் என்றால், அவள் அழகை வர்ணிக்க யாரால் ஆகும்? பெயர் வேல்விழி. பெயருக்கேற்ப அவளது வேல் விழிகளும் ஆளைத் தராதரம் கண்டு கொள்ளும் அபார ஆற்றல் படைத்தவை.

வெங்காச்சத்துக்கு வெகு நாட்களாகவே அவள்மீது ஒரு கண். தருணம் வாய்க்கும் பொழுதெல்லாம் அவளைத் தனியாகப் பின்தொடருவான். அவன் பின் கழுத்தைத் தடவிக்கொண்டு தன்னைத் தொடருவதைக் கண்ட அவளது கண்கள் அவன் எண்ணத்தை எடை போட்டு விட்டன. ஆனால் அவன் கண்கள் தான் அவளைப் பற்றித் தப்புக் கணக்குப் போட்டு விட்டன.

அன்று பொறுமை இழந்து, தலையைச் சொறிந்து கொண்டே துணிச்சலாகச் சீண்டி விட்டான்; வாங்கியும் கட்டிக்கொண்டான்.

''சுத்தக் சுகுமாலங்க! கீரைக்காரின்னா இளப்பமாப் போயிடுச்சோ? வெறுங் கிள்ளுக் கீரையாயில்லே நெனைக்கிறானுவ!'' என்று அவன் காதுபடக் கூறிக்கொண்டே, கீரை கொடுக்கும் சாக்கில் அவள் ஒருவீட்டில் நுழைந்து விட்டாள்.

''என்னம்மே! இந்தவெங்காச்சத்துக் கிட்டேயா வாலாட்டறே? ஒட்ட நறுக்கி உன்னைக் கண்ணாலம் கட்டிக்கிட்டு கண்ணிலே விரலை விட்டு ஆட்டலேன்னா என் பேரை மாத்திவை!''

தனக்குள் முணு முணுத்துக் கொண்டானே ஒழிய, வேல்விழியின் காதில் விழும் படி குரல் கொடுக்கும் நெஞ்சுரம் அவனுக்கு இல்லை.

வேல்விழி குரல் கொடுத்துவிட்டுக் கூடையை இறக்கி நிமிர்ந்தாள். எதிரே நின்றவனைப் பார்த்தபொழுது அவள் விழிகள் படபடத்தன. பேச்சற்று நின்றவளிடம் அவனுக்குமே பேச்சுக் கொடுக்கத் தோன்றவில்லை. இருவருடைய விழிகளும் என்றோ நடந்த நிகழ்ச்சியைநினைவுப்படமாகக் காணலுற்றன.

ஏறக் குறைய ஒரு மாதம் இருக்கும். பகல் பன்னிரண்டு மணி இருக்கலாம். ஓட்டேரிப் பகுதியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தாள் வேல்விழி. வந்த பஸ்ஸில் கூட்டம் அதிகம் இல்லை; அவள் காத்து நின்ற இடத்திலும் அதிகமாக ஆட்கள் கிடையாது.

அவளை இடித்துத் தள்ளிக் கொண்டு ஏறினான் பின்னால் வந்த வெங்காச்சம். கழுத்தைத் திருப்பிய வேல்விழி பார்வையாலேயே அவனைச் சுட்டாள்.

''என்னம்மே முறைக்கிறே? பஸ்ஸுன்னா இப்படித்தான்! ஆம்பிள்ளை வாடையே மேலே வீசக் கூடாதுன்னு நீ நினைச்சா, ஒண்ணு டாக்சி பிடிச்சுக்கிட்டுப் போயிருக்கணும்; இல்லே, நடந்து போயிருக்கணும்!'' என்றான் அவன்.

''ஏன் ஐயா! தெரியாமல்தான் நானும் கேட்கிறேன். இப்போ பஸ்ஸிலே கூட்டமா வாய்யா இருக்குது? எதுக்காக ஐயா தள்ளிக்கிட்டு ஏறுறே?''

''ஆமா, நீ பெரிய ரதி! உன் மேலே ஆசைப்பட்டு இடிச்சுப்பிட்டேன்! உன்னைப் போல் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கேன். பேசாமப் போவியா?'' — அவன் தன் குணத்தைக் காட்டினான்.



பஸ்ஸில் இருந்தவர்களோ தங்கள் குணத்தைக் காட்டினர், நமக்கு ஏன் வீண் வம்பு என்று! ஆனால் ஒரே ஒருவனுக்குத்தான் ரத்தம் கொதித்தது. அவன்தான் வடிவேலு!

''ஏன் ஐயா, வீணா வார்த்தையைக் கொட்டறே? நானும் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கேன். இந்தப் பொண்ணு என்ன ஐயா தப்பாச் சொல்லிடுச்சு?'' என்று கேட்டான்.

''பெரிசா வக்காலத்து வாங்கிக்கிட்டு வந்துட்டாரு இவரு! பேசாம உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போவியா...?''

''உனக்குக் கூடப் பிறந்த அக்கா—தங்கச்சி கிடையாதா? நாக்கிலே நரம்பில்லாமல் பேசாதே ஐயா!''

''நியாயம் பேச வந்துட்டாரு, நியாயம்! எங்கிட்டே உன் வேலையை வச்சுக்காதே! ஒட்ட நறுக்கிடுவேன் வாலை!''

வெங்காச்சம் வலுச் சண்டைக்கு இழுக்க, வடிவேலுவின் புதுச் சட்டை கிழிந்தது. இருவரையும் இறக்கிவிட்டுப் பஸ் ஓடிவிட்டது.

பஸ்ஸில் உட்கார்ந்திருந்த வேல்விழிக்குப் பெருங் கவலை, முன்பின் தெரியாத ஆள் நமக்காக வீண் சண்டையை விலைக்கு வாங்கிக் கொண்டாரே, என்று! அந்த வடிவேலுவை இங்கே எதேச்சையாகக் கண்ட பொழுது!...

''ஏண்டா, வடிவேலு! இரண்டு கட்டுக் கீரை வாங்கிக்கிட்டு வர்றதுக்கு இத்தனை நேரமா?'' உள்ளிருந்து குரல் வந்தபொழுது தான் இருவரும் தங்கள் நினைவுக்கு வந்தனர். அவள் இரண்டு கட்டுக் கீரையைக் கொடுத்துவிட்டு நகர்ந்தாள். அவன் அதற்கான விலையைக் கொடுக்க மறந்து உள்ளே போனான்!

வெங்காச்சம் சும்மா இருக்கவில்லை. திட்டம் தீட்டினான். விளைவு, வேல்விழியின் அண்ணன் பேச்சிமுத்து அவனுக்குப் பல வகைகளில் கடன்பட்டுவிட்டான்; கடமைப்பட்டும் விட்டான். சகவாச தோஷத்தில் அவன் வெங்காச்சத்திடம் விளையாடிய பணத்தைக் கண்டான்; அதைக் கொண்டு அவன் நடத்தும் உல்லாச வாழ்க்கையைக் கண்டான். அவனோடு இணைந்து வாழ்ந்தால் அப்படித் தானும் வாழ முடியும் என்ற ருசியையும் கண்டான்.

இப்படி அவனை அசைக்க முடியாது ஆட்கொண்டபின் ஒரு நாள் வெங்காச்சம் வார்த்தையைவிட்டான்: ''ஏன், பேச்சிமுத்து! உனக்கு ஒரு தங்கை இருக்கிறாளாமே, வேல்விழின்னு! அவளை எனக்குக் கண்ணாலம் கட்டித் தருவியா?''

பழம் நழுவிப் பாலில் விழுவதாகவே தோன்றியது பேச்சிமுத்துவுக்கு. வேல்விழியை வெங்காச்சத்துக்குக் கட்டிக் கொடுத்து விட்

திராவகம் வீசி, முகம் வெந்த நிலையிலும்
ஆஸ்பத்திரியில் அதிசய திருமணம்: மணமக்கள் ஆனந்தம்



டால் அவளும் நன்ருக இருக்கலாம்; நாமும் வளமாக வாழலாம்' என்று படவே, வெங் காச்சுக்குக் கையடித்தே கொடுத்துவிட்டான்.

"அம்மா! நம்ம வேல்விழி பலேஅதிர்ஷ் டக்காரி. அவளுக்குப் பசையான இடத்தி லிருந்து பரிசம் போட ஆள் வரேங்கிருங்க!'' என்ருன் பேச்சிமுத்து.

'' வரட்டுமே! யாரு அவங்க?'' என்று கேட்டாள் தாயார்.

''வெங்காச்சம்னு எனக்கு ஒரு சிநேகிதன். அவன் கண்ணுலம் கட்டிக்கிறேன்னு சொல் ருன்!'' என்ருன் பேச்சிமுத்து.

'' அண்ணு! நான் ஒண்ணு சொன்னல் கோவிச்சுக்க மாட்டியே!''

'' என்ன?''

''நீ சொல்ற வெங்காச்சத்தைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். அவன் ஒரு காவாலி. நீ அவனேடு சேர்ந்து கெட்டுப் போறேங்கிறதும் எனக்குத் தெரியும். நான் சொல்றதைக் கேளு! நமக்கு அவன் சங்காத் தமே வேண்டாம்!'' என்ருள் வேல்விழி.

பொங்கிய கோபத்தை அடக்கிக் கொண்டு பேச்சிமுத்து பேசினன். காரியம் ஆக வேண் டுமே! ''வெங்காச்சம் என்ன இருந்தாலும் பிழைக்கத் தெரிஞ்ச பிள்ளே. உன்னேக் கண்ணு லம் கட்டிக்கிட்டாப் பெட்டிப் பாம்பாக அடங்கிவிடுவான். நானும் அவனுக்குச் சம்ம தம் சொல்லிவிட்டேன். சொல்றதைக்கேளு!''

''அண்ணு! தப்பா நினேச்சுக்காதே! சொல்றதைக் கேட்கிற நிலே தாண்டிப் போச்சு!''

'' என்ன?''

''ஆத்திரப்படாதே! நான் ஒருத்தருக்கு என் மனத்தைப் பறிகொடுத்திட்டேன்!''

''ஓகோ! அவ்வளவு தூரத்துக்கு வந் திடிச்சா? யாரோ அவரு?''

''என் பேரில் உள்ள 'விழி'யை நீக்கித் தொடக்கத்திலே 'வடி'வைச் சேர்த்தால் அவர் பெயர் வரும்!''

''போடுடா, தகடிகேன்னுனும். பேரைக் கூடச் சொல்லக் கூடாத அளவுக்கு உறவு வளர்ந்திடிச்சோ? — சீ! வெட்கமா யில்லே, உனக்கு? வீட்டிலே இத்தனே பெரியவங்க

இழுக்கலாமா ?

திருவாங்கூர் மன்னர்களது குலதெய்வம் பத்ம நுப ஸ்வாமி. திருவாங்கூர் நாடே பத்மனுபன் தங்களுக்கு அறக் கட்டளேயாக அளித்த ஒரு தர்மச் சொத்து என்றுதான் அவர்கள் எண்ணி வந் தார்கள்.

அந்தக் கோயிலில் சுவாமியின் உபயோகத்துக்காகப் பொன்னுலும் வெள்ளியாலுமான பல பாத் திரங்கள் உள்ளன. ஒரு பெரிய தங்க அண்டா மட்டும் இன்றைய விலேயில் மூன்று லட்சம் ரூபாய் என்று மதிப்பிடப் படுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்னுல் மூலம் திருநாள் என்ற அரசர் மன்னரா யிருக்கையில் கோவில் சிப்பந்தி ஒருவன் ஸ்வாமி சந்நிதியில் பாத்திரங் களேத் தூக்கி வைக்காமல் தரதரவென்று இழுப் பதைக் கண்டார். உடனே அவனேத் தனியாகக் கூப்பிட்டு, ''உன் கைவிரலில் அணிந்துகொண் டிருக்கிருயே மோதிரம், அதை இங்கே கொண்டா'' என்று கேட்டு வாங்கி ''பத்மனுப ஸ்வாமி சன்னிதி யில் தொண்டு செய்வதற்காக நான் கொடுக்கும் சம்பளத்தில் வாங்கிய மோதிரம்தானே இது?'' என்று வினவினர். சிப்பந்தி ''ஆம்'' என்ருன்.

உடனே அரசர் அம்மோதிரத்தைத் தரையில் நான்கு தரம் தேய்த்து ''இப்போது எப்படி இருக் கிறது?'' என்று கேட்டவண்ணம் திருப்பிக் கொடுத் தார். அன்றிலிருந்து அவன் பாத்திரங்களேத் தரதரவென்று இழுக்கும் பழக்கத்தை விட் டொழித்தான். -ஏ. வி. ரங்கராஜன்.





வோட்டுப் பெறும் சிரமம் வேட்பாளருக்குத் தெரியும்!

அமெரிக்காவில் முன்னெரு நாள் ஓர் உதவி ஜனதிபதி மீண்டும் தேர்தலுக்கு நின்ருர். அப் பொழுது அவருக்கு எதிராக வாக்களிக்கப் போவ தாக ஒருவர் கூறினர்.

''உங்களுடைய பெண்ணுக்குக் கல்லூரியில் படிக்க இடம் பெற்றுத் தரவில்லேயா நான்?''

''ஆமாம்!''

''உங்கள் பையனுக்கு வேலே வாங்கித் தர வில்லேயா?''

''உண்மைதான்!''

''உங்களுக்கும் பெரிய உத்தியோகம் பெற்றுத் தரவில்லேயா?''

''மறுக்க வில்லே!''


''அப்படி யிருந்தும் எனக்குச் சாதகமாக நீங்கள் ஏன் இருக்க விரும்பவில்லே?''

''நீங்கள் சமீபகாலமாக எந்த விதமான ஒத் தாசையும் எனக்குச் செய்யவில்லேயே!'' -பி எஸ் எம்.

பொன்மொழிகள்

மனிதன் ஒருவனேத் தவிர மற்ற மிருகங்களுக்கு வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள் சந்தோஷமாக இருப்பதுதான். -சாமுவேல் பட்லர்

கடுமையான வேலே மூன்று பெரிய கொடுமை களே -- 'போர்' என்ற வார்த்தை, தீய பழக்கங்கள், ஏழைமை ஆகிய மூன்றையும்--அடித்து விரட்டுகிறது. -- வால்டேர்

1. தி. மு. கழகம் சென்னையில் அலங்கார விளக்குகள் போட்டு, மாபெரும் ஊர்வலம் நடத்தி இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை முப்பெரும் விழாவாகக் கொண்டாடியது.
2. காந்தி மண்டபத்தில் இந்த வருஷம் காந்தி ஜயந்தியைப் பெரு விழாவாகக் கொண்டாடத் தமிழக ஆளுனர் திரு ஷா ஏற்பாடு செய்திருந்தார். கர்நாடக, பாண்டிச்சேரி ஆளுனர்களும், மத்திய சர்க்கார் மந்திரி உமா சங்கர் தீக்ஷித்தும், தமிழக முதல்வரும், மந்திரிகளும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்ட இந்த வைபவத்தில் பல கருத்தரங்குகளும் இடம் பெற்றன. காந்திஜியின் காரியதரிசி பியாரேலால் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்து கொண்டார். இதுவரை திறந்தவெளி அரங்கமாக இருந்த காந்தி மண்டபத்துக்குக் கூரை போடும் பணி முற்றுப் பெற்று, இதன் திறப்பு விழாவும் நடந்தது. ஜோதி ஊர்வலம் மரீனாவிலிருந்து காந்தி மண்டபத்துக்குச் சென்றது. காந்தி மண்டபத்தில் தமிழக முதல்வர் ஜோதியைப் பெற்றுக் கொள்கிறார். அருகே தமிழக ஆளுனரும் உள்ளார்.

இருக்கிறபோது, காதல் பண்ணப் போயிட்டியோ, காதல்!''

எரிந்து விழுந்த பேச்சிமுத்து, ''அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் சொல்ற நேரத்திலே, சொல்ற இடத்திலே நீ கழுத்தை நீட்டணும், தாலியைக் கட்டிக்கணும். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்!'' என்று முத்தாய்ப்பு வைத்தாற்போல முடித்தான்.

பேச்சிமுத்துவின் பேச்சுக்குப் பயந்து காதல் தன் உறவை முறித்துக் கொள்ளவில்லை. அது நேரம் – பொழுது கிடைத்த போதெல்லாம் வளர்ந்தது. அதைக் கண்டு அரண்டவன் வெங்காச்சம்தான்!

''மயிலே, மயிலேன்னு இறகு போடாது, பேச்சிமுத்து! உன் தங்கச்சியை அடக்கி வைக்கணும்; வடிவேலுவை மிரட்டி வைக்கணும்!'' என்று முடுக்கிவிட்டான். அதற்கு அச்சாரமாக அவனிடம் ஒரு சீசாவையும் கொடுத்து வைத்தான்.

அன்று முதற் காட்சி சினிமாப் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த வடிவேலுவையும் வேல்விழியையும் பார்த்த பொழுது பேச்சிமுத்துவுக்குப் பற்றிக்கொண்டு வந்தது. ''இதோ பாரு, வடிவேலு! என் தங்கச்சியை மறந்து நல்ல பிள்ளையாயிரு. அவளை நான் வெங்காச்சத்துக்குக் கட்டிக் கொடுக்கிறதாத் தீர்மானிச்சுட்டேன். எவனாவது குறுக்கிட்டா எனக்குக் கெட்ட கோபம் வந்துவிடும்!'' என்றான்.

''அண்ணே! இரண்டு கைகொட்டினால்தான் சத்தம் வரும்பாங்க. அதுபோல இரண்டு பேர் மனமும் ஒத்துப் போனால்தான் மண வாழ்க்கை மணம் பெறும்!'' பேசியது வேல்விழி. ஆனால் பேச்சிமுத்துவுக்கு ஆத்திரம் வந்தது வடிவேலுவின் பேரில்தான்.

''இவரு பெரிய பாடம் உருவேத்தி வச்சிருக்காராக்கும்!'' என்று வடிவேலுவைப் பிடித்துத் தள்ளினான்.

''உன் தங்கச்சிக்கு இஷ்டம்னா அவனுக்கே அவளைக் கொடேன், ஐயா! என்னிடம் எதற்கு வீண் வம்புக்கு வர்றே?'' வடிவேலு விலகித்தான் போனான், துஷ்டர்களைக் கண்டால் தூர விலகு என்ற பழமொழியைக் கடைப்பிடித்து.

''உன் முகரக்கட்டையைப் பார்த்துத்தான் ஐயா, அவ கெட்டுப் போனா! அதை எப்படி ஆக்கி வைக்கிறேன், பார்!'' என்று வீறுப்புப் பேசி வீசிவிட்டான் பேச்சிமுத்து, வெங்காச்சம் கொடுத்த சீசாவை!

''ஐயோ!''

அக்கினித் திராவகம் பட்ட எரிச்சலில் அலறிவிட்டான் வடிவேலு! அவன் முகம் போன போக்கைப் பார்க்க முடியவில்லை. அப்படியே தரையில் விழுந்து புழுவெனத் துடித்தான்.

''என்ன காரியம் செய்துவிட்டாய், அண்ணா!'' என்று துடித்தாள் வேல்விழி. அவளைக் கரகரவென்று இழுத்துக் கொண்டு அங்கிருந்து ஓடிவிடத் திட்டமிட்டான் பேச்சிமுத்து. ஆனால் அப்பொழுது அந்தப் பக்கம் வந்த பீட் கான்ஸ்டபிள் அவனைப் பிடித்துக் கொண்டான். அதோடு டாக்ஸியைத் தருவித்து வடிவேலுவை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றான்.

அக்கினித் திராவகத்தின் எரிச்சலில் வடிவேலுவின் உடல் என்ன பாடுபட்டதோ? அதைக் காட்டிலும் அவன் உள்ளம் அனலில் இட்ட புழுவாகத் துடித்தது. வடிவேலு என்ற பெயர் தனக்கு இனி பொருந்தாது என்பதை உணர்ந்தான். ''வேல்விழி! என்னை மறந்துவிடு!'' என்று முணுமுணுத்தான்.

''அத்தான்! உங்களை இந்த ஜன்மத்தில் என்ன, ஏழேழு ஜன்மத்திலும் மறக்க முடியாது! மறக்கவும் மாட்டேன். காதல் வெறும் கிள்ளுக் கீரை இல்லை. நினைத்தபொழுது உள்ளத்தில் பயிர் செய்து, வேண்டியபோது கிள்ளி விற்பதற்கு! உங்கள் உள்ளம்தான் எனக்கு வேண்டும்!'' என்று பந்தம் கொண்டாடி அங்கேயே அவன் கரம் பற்றினாள் வேல்விழி. வடிவேலு அந்த எரிச்சலிலும் ஒரு குளிர்ச்சியைக் கண்டான். ''உன் அண்ணன் அந்த வெங்காச்சத்தின் பேச்சைக் கேட்டுக் கெட்டான். அவனை நீ மன்னிச்சிடு!'' என்றான்.

"நான் வரமாட்டேன்.... நான் வர மாட்டேன்'' என்ருள் சுந்தரி தீர்மானமாக.

''அதுதான் ஏன் என்கிறேன்?'' எரிச்சலுடன் கேட்டான் கல்யாணம்.

''என்னைப் பாருங்கள். எப்படி இருக்கிறேன்?'' என்று கேட்டுக் கொண்டே எதிரில் வந்து நின்ருள் சுந்தரி.

''ஏன்? அழகாகத்தான் இருக்கிருய். முப்பத்தாறு வயது என்று சொன்னுல் யாரும் நம்பவே மாட்டார்கள்'' என்று 'விட்' அடித்தான் கல்யாணம்.

உண்மை வயதை அப்பட்டமாகச் சொன்னதும் சுந்தரியின் முகம் கடுகடுத்தது. ''அதைக் கேட்கவில்லை. காதில் மூக்கில் கழுத்தில் பளிச்சென்று ஏதாவது நகை இருக்கிறதா ?''

''இல்லை. எல்லாம் கல்யாணத்தின்போது உன் பிறந்தகத்தில் செய்ததுதான். எண்ணெய் இறங்கி மெருகு குறைந்துதான் இருக்கிறது.''

''ஒப்புக் கொள்கிறீர்கள், இல்லையா? உங்களுடைய நண்பர் நரசிம்மன் உங்கள் அளவுதான் சம்பாதிக்கிருர். அவர் மனைவி பாகீரதியைப் பாருங்கள். வைரத் தோடு, வைர மூக்குத்தி, பட்டுப் புடவை என்று என்னமாக ஜொலிக்கிருள். இத்தனைக்கும் இரண்டு குழந்தைகள் வேறு அவர்களுக்கு.''

''அதற்கென்ன இப்போது ? நான் ஊதாரிதான். சேர்க்கத் தெரியாதவன்தான். அதற்கும் இப்போது நரசிம்மன் குழந்தை ஆண்டு நிறைவுக்குப் போவதற்கும் என்ன சம்பந்தம்?'' — புரியாமல் கேட்டான் கல்யாணம்.

''ஆண்டுநிறைவுக்கு என்னைக் கூப்பிடுகிறீர்கள். நானும் வருகிறேன் என்றே வைத்துக் கொள்ளுங்கள். பாகீரதி என்னைப் பார்த்துவிட்டு என்ன கேட்பாள் தெரியுமா ?'

''என்ன கேட்பாள்? 'நீ எப்போது உன் குழந்தை ஆண்டு நிறைவுக்கு என்னைக் கூப்பிடப் போகிருய்' என்று கேட்பாள். அவ்வளவுதானே ! 'சரியாக ஒரு வருடம் ஏழு மாதங்கள் பொறுத்துக் கொள்' என்று சொல்லேன்'' என்று அவள் கன்னத்தைத் தட்டினுன் கல்யாணம். திருமணமாகிப் பதினன்கு வருடங்கள் கழித்து அப்போதுதான் முதன் முறையாகக் கருவுற்றிருந்தாள் சுந்தரி.

அவள் முகம் இலேசாகச் சிவந்தது. ''போதுமே, இப்படிக் குழையக் குழையப் பேசி விடுவதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. பாகீரதி என்னைப் பார்த்து, 'உன் கணவருக்கும் என் கணவருக்கும் ஒரே சம்பளம்தானே! இரண்டு குழந்தைகள் இருந்தும்கூட நாங்கள் சிக்கனமாகச் செலவு செய்து நகையெல்லாம் வாங்கியிருக்கிறேம். நீ ஒன்றுமில்லாமல் நிற்கிருயே. இத்தனைக்கும் நீங்கள் இரண்டே பேர்தானே!' என்று கேட்பாள்....'' என்று மூச்சு விடாமல் பேசி நிறுத்தினுள்.

''நீயாக எதற்குக் கற்பனை பண்ணிக் கொள்கிருய்? அதெல்லாம் கேட்கமாட்டாள்'' என்று சமாளிக்கப் பார்த்தான் கல்யாணம்.

சுந்தரி மசியவில்லை. ''நீங்கள் என்ன சொன்னுலும் சரி. ஒரு நகையும் இல்லாமல் அவள் வீட்டுக்குப் போக எனக்கு அவமானமாக இருக்கிறது'' என்று சொல்லிவிட்டுத் திரும்பியவள், ''கேவலம், ஒரு வைரத் தோடாவது வேண்டாமா?'' என்று முணு முணுத்தாள்.

பளிச்சென்று யோசனை வந்தது கல்யாணத்துக்கு. ''அவ்வளவுதானே ? வைரத்தோடு இருந்தால் வருவா யல்லவா ?'' அவன் எழுந்து சட்டையை மாட்டிக் கொண்டான்.

''திடீரென்று வருமா என்ன, வைரத் தோடு, நீங்கள் கேட்ட உடனேயே ?'' என்று இகழ்ச்சியாகக் கேட்டாள் சுந்தரி.

''வருகிறதா இல்லையா பாரேன். எவளிடமாவது இரவல் வாங்கிக் கொண்டு வந்தால் போச்சு.'' கல்யாணம் செருப்பை மாட்டிக் கொண்டு தெருவில் இறங்கினுன்.

கல்யாணத்துக்குக் காரைக்காலில் எண்ணெய் — நிலவாயுக் கமிஷன் அலுவலகத்தில் நல்ல வேலை. எழுநூற்றுக்குமேல் சம்பளம். கணவன் மனைவி இரண்டே பேர்கள்தான். காரைக்காலில் தெருவுக்கு ஒரு 'பார்' இருந்தும்கூட மது என்ருல் முகத்தைச் சுளிப்பவன் அவன். வாங்கும் சம்பளத்தில் பாதிக்கு மேல் கரைவது அவனுடைய நண்பர்கள் கூட்டத்தால்தான். யாருக்கு எத்தனை கடன் கொடுத்தோம் என்பதையே நினைவு வைத்துக்



கொள்ள மாட்டான். ஒவ்வொரு சனிக்கிழமையும் திருநள்ளார் போகும்போது கூடவே பத்துப் பேர்களை அழைத்துப் போவான். பஸ் செலவோடு அன்றைய டிபன் செலவும் அவனுடையதுதான். சினிமாவுக்குப் போனுலும் இதே கதிதான். இப்படி இருக்கும் போது கல்யாணத்தின் சம்பளத்தில் பாதி அளவாவது சுந்தரியின் கைக்குக் கிடைப்பது அரிதுதான். சுந்தரிக்கு ஆத்திரம் பொங்கும். எத்தனையோ முறைகள் கெஞ்சியும், கடிந்தும் பார்த்துவிட்டாள். கல்யாணம் எதையும் காதில் போட்டுக் கொள்ளவேமாட்டான்.

"இந்தா, சுந்தரி !''

கல்யாணம் சின்னஞ்சிறு வெல்வெட் பெட்டியைத் திறந்தான். ஒரு ஜோடி வைரத்

தோடுகள் சொகுசாக உட்கார்ந்து பளிச் பளிச்சென்று கண்ணைச் சிமிட்டின.

''அட்டா ! என்ன ஜொலிப்பு! இப்படி ஒரு ஜோடி வாங்க வேண்டும் என்று ரொம்ப நாளாக எனக்கு ஆசை....'' என்று பெரு மூச்சுடன் கையில் வாங்கிப் பார்த்தாள்.

''பணம் சேர்ந்தா வாங்கிக்கிட்டா போச்சு!'' என்றான் உற்சாகமாக.

''நீங்களா, பணம் சேர்க்கிறதா ?'' என்று இகழ்ச்சியுடன் கேட்டாள் சுந்தரி.

தகுந்த பதில் அகப்படாததால் அவனுக்குக் கோபம்தான் வந்தது. ''சரி, சரி. பசி பிராணன் போகிறது. 'சோறு உண்டா இல்லையா ? உனக்கு வைரத் தோட்டைப் பார்த்துக் கொண்டே இருந்தால் பசிக்கவே பசிக்காது. எனக்கும் அப்படியா?'' என்று எரிந்து விழுந்தான்.

''எல்லாம் தயார். வாருங்கள்'' என்று சமையல் அறைப் பக்கம் திரும்பினாள் சுந்தரி.

''அக்கா, அக்கா !'' என்று கூப்பிட்டபடி வேகமாக வந்தான் கோபு. ''சின்னக்காவுக்கு வலி எடுத்திருக்காம். பிரசவ ஆஸ்பத்திரிக்கு அழைத்துக் கொண்டு போயிருக்கிறார்களாம். போன் வந்தது. உன்னிடமும் சொல்லச் சொன்னார் அப்பா. ஆபீசிலிருந்து நேரே இங்கேதான் வரேன்'' என்றான் அவள் தம்பி.

கோபுவுக்குக் கல்வி இலாகாவில் வேலை. அம்பகரத்தூரிலிருந்து பஸ்ஸில் காரைக்கால் வந்துவிட்டுப் போவான். இரண்டில் மூன்றில் சுந்தரியை எட்டிப் பார்த்துவிட்டுப்போவான்.

''இருடா, பிரசவ ஆஸ்பத்திரிக்குத்தானே போறே ? நானும் வரேன்'' என்றவள் கணவனிடம், ''இதோ பாருங்கள். சாப்பிட்டு வீட்டை ஜாக்கிரதையாகப் பூட்டிக் கொண்டு ஆபீசுக்குப் போய் வாருங்கள். நான் சாயங்காலம் வந்துவிடுவேன். அப்படி அம்மா ஒத்தாசைக்கு இரண்டு நாட்கள் இருக்கச் சொன்னால் இருந்துவிட்டு வரவா?'' என்று அனுமதி கேட்டாள்.

''எத்தனை நாட்கள் வேணும்னாலும் இருந்து விட்டு வா. வீட்டை நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்று விடைகொடுத்து அனுப்பினான்.

மைத்துனிக்கு ஆண் குழந்தை பிறந்ததாக ஆபீசுக்கே தகவல் வந்தது. மாலையில் ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்த்தான். ரோஜா மலர் போல் சின்னக் குழந்தையை அணைத்தபடி படுத்திருந்தாள் மைத்துனி. இன்னும் ஏழு மாதங்களில் சுந்தரியும் இப்படித்தான் படுத்திருப்பாள் என்பதை நினைக்க மகிழ்ச்சி பொங்கியது அவனுக்கு.



வி. பானுமதி

விஷமக் கவிதை - 3



பண பலம் !

பணமிலா வரைஅவர்
இதயம் வளர்ந்தது
பணமெலாம் வரஅவர்
கதையும் வளர்ந்தது!

தமிழழகன்

அம்பகரத்தூரில் நடந்த புண்ணியாகவசனத்தில் கலந்து கொண்டு அன்று மாலையே சுந்தரியையும் அழைத்துக் கொண்டு காரைக்கால் வந்தான் கல்யாணம்.

''அப்பாடி ! என்ன குப்பை! வீட்டைப் பெருக்கவே இல்லையா முனியம்மா ?'' என்றாள் சுந்தரி வீட்டைத் திறந்ததும்.

''நீ இருந்தா ஒரு மாதிரி, இல்லாட்டா ஒரு மாதிரிதான்'' என்றான் கல்யாணம்.

சுந்தரி வீட்டை ஒரு முறை சுற்றி வந்து சாமான்கள் பத்திரமாக இருக்கின்றனவா என்று சோதனை செய்தாள். திடீரென்று நினைத்துக் கொண்டவள், ''ஆமாம், அந்த வைரத் தோடு பத்திரமாக வைத்திருக்கிறீர்கள், இல்லையா? அது வந்த வேளை நான் போட்டுக் கொள்ளாவிட்டாலும் என் தங்கைக்கு நல்ல விதமாக ஆண் குழந்தையே பிறந்துவிட்டது, மூன்று பெண்களுக்குப் பிறகு....'' என்றாள்.

கல்யாணத்துக்குத் திக்கென்றது. வைரத் தோடு இரவல் வாங்கின விஷயமே அப்போது தான் அவனுக்கு நினைவு வந்தது. ''வைரத் தோட்டை உன்னிடம் கொடுத்த போது தானே கோபு வந்தான். நீ பீரோவில் வைக்கவில்லை ?''

''நானாவது பீரோவில் வைப்பதாவது ? கோபு வந்து சொன்னதும் அலறி அடித்துக் கொண்டு ஓடியிருக்கிறேன். நான் எங்கே பீரோவில் வைத்தேன் ?''

இருவரும் பீரோவைப் புரட்டிப் பார்த்தார்கள். மேஜை டிராயர், புத்தக ஷெல்ப், சமையல் அறை அலமாரி, வலை பீரோ.... ஓர் இடம் பாக்கி இல்லை. ஊஹஹூம்... வைரத் தோட்டைக் காணவில்லை.

''மேஜையின் மேல் வைத்துவிட்டுப் போனதாக ஞாபகம்'' என்றாள் சுந்தரி மெதுவாக.

''என்னிடம் கொடுக்க வேண்டியதுதானே நீ? எப்படி மேஜையில் வைக்கலாம்?'' என்று கேட்ட கணவன் ''நம் போறாத காலம். நம்முடையதென்றால் கவலைப்படுவதோடு விட்டு விடலாம். இரவல் ஆயிற்றே! எப்படி நாம் திருப்பிக் கொடுப்பது?'' என்றான் வேதனையுடன்.

''யாரிடம் வாங்கினீர்கள்?'' என்றாள்.

''அப்துல்லாதான் கொடுத்தான். அவன் மனைவியுடையது. சிங்கப்பூர் போயிருக்கிறாளாம், அப்பா அம்மாவைப் பார்க்க. வர ஆறு மாதங்கள் ஆகுமாம். 'நல்லவேளை, இந்த ஜோடியை இங்கே வைத்து விட்டுப் போயிருக்கிறாள்' என்று கூறிக் கேட்டதும் தூக்கிக் கொடுத்து விட்டான் அப்துல்லா'' என்றான்.

பளிச்சென்று யோசனை வந்தது சுந்தரிக்கு. ''என்ன சொன்னீர்கள்? அவர் மனைவி வர ஆறு மாதங்கள் ஆகுமா? அது வரை தோடு அவளுக்குத் தேவை இல்லையே? அவர் மனைவி வந்ததும் தருகிறேன் என்றால் சம்மதிப் பாரா?'' என்று கேட்டாள்.

''அநேகமாகக் கேட்பான் என்றே நினைக்கிறேன். இதைப் போல் நாலைந்து வைரத் தோடுகள் இருக்கின்றன, அவளிடம். மேலும் என்னிடமும் நல்ல நம்பிக்கை அவனுக்கு. நானும் அவனும் ஸ்கூலில் ஒன்றாகத்தானே படித்தோம்? அப்போதே அவனுடைய அயல் நாட்டுக் கடிகாரம், பேனா எல்லாவற்றையும் என்னிடம்தான் கொடுத்துப் பத்திரமாக வைத்துக் கொள்ளச் சொல்வான்'' என்றான் கல்யாணம்.

'பின்னே என்ன? ஆறு மாதங்கள் நம்மிடமே வைரத்தோடு இருக்கட்டும் என்று சொல்லுங்கள். சம்மதித்துவிடுவார் உங்கள் நண்பர்'' என்றாள் சுந்தரி நிம்மதியாக.

கல்யாணத்துக்கு எரிச்சலாக இருந்தது, அவள் பேச்சு. ''ஆறு மாதங்கள் கழித்துத் திருப்பிக் கொடுக்கணுமே. எங்கே இருக்கு? அப்போ மட்டும் திடீர்னு வந்து குதிக்குமா?'' என்று கேட்டான் கோபத்துடன்.

''குதிக்கிறதா இல்லையா என்று பாருங்களேன். ஆனால் அதற்கு உங்கள் ஒத்துழைப்பு பரிபூர்ணமாக வேண்டும்'' என்று புதிர் போட்டாள் சுந்தரி.

''புரியும்படி சொல்லு'' என்று பொறுமையின்றிக் கேட்டான் கல்யாணம்.

''இதோ பாருங்கள். உங்கள் சம்பளம் இந்த மாதத்திலிருந்து எண்ணூறாக ஏறியிருக்கிறதல்லவா? அதிலே ஐந்நூறை என் பெயரில் பேங்கில் போடுங்கள். மிச்சம் முந்நூறில்தான் குடித்தனம் செய்ய வேண்டும்.''

''ஐயையோ! அதெப்படி முடியும்?'' என்று பதறினான் அவன்.

''வேறே வழி?'' என்று கேட்ட சுந்தரி, பேப்பரும் பென்சிலுமாக உட்கார்ந்து சிக்கனப் பட்டியல் தயாரித்துக் கல்யாணத்திடம் நீட்டினாள். சினிமா, ஹோட்டல், நண்பர்களுடன் உல்லாசப் பயணம், புதுத் துணிமணிவாங்குவது எல்லாமே பட்ஜட்டிலிருந்து அடி பட்டிருந்தன. பல்லைக் கடித்தான் கல்யாணம்.

ஆரம்பத்தில் தொல்லையாக இருந்தாலும் கல்யாணத்துக்கு இந்தச் சிக்கனக் குடித்தனம் நாளடைவில் பழகியே விட்டது. ஓட்டல் பக்கம் தலைவைத்தே படுக்கவில்லை.

ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. சுந்தரி சீமந்தம் ஆனகையோடு அம்பகரத்தூருக்குப் பிறந்தகத்துக்குப் போய்விட்டாள். வாராவாரம் வந்து பார்த்தான் கல்யாணம்.

அந்த முறை ''சுந்தரி, உன் திட்டப்படி மூவாயிரம் சேர்ந்து விட்டது. காரைக்காலில் ஒரு செட்டியார் நகைக் கடையில் சொல்லி வைத்திருந்தேன். நல்ல ஜதை வந்திருக்கிறதாம். செட்டியார் சொன்னார். நீயும் வா. போய் வாங்கி வந்துவிடலாம். அப்துல்லாவின் மனைவியும் திரும்பி விட்டாளாம் சிங்கப்

பூரிலிருந்து. நேற்றே இலேசாக ஞாபகப் படுத்தி விட்டான்'' என்றான். ஒரு விநாடி யோசித்த சுந்தரி சட்டென்று உள்ளே போனாள். அம்மாவிடம் ஏதோ பொய்ச் சாக்கு சொல்லி அனுமதி வாங்கிக் கொண்டு அவனுடன் நகைக் கடைக்குப் புறப்பட்டாள்.

வைரத் தோட்டுக்கு விலை தீர்த்து 'செக்' எழுதிக் கொடுத்துவிட்டு டாக்சியில் ஏறி னார்கள். டாக்ஸி திருநள்ளார் தெரு பக்கம் திரும்பும்போது ''கொஞ்சம் இரு டிரைவர்'' என்று தடுத்து நிறுத்திய சுந்தரி, ''நம்ம வீட் டுக்குப் போய்விட்டுப் பிறகு அம்பகரத்தூர் போகலாமே?'' என்றாள் கல்யாணத்திடம்.

கல்யாணம் சரியென்று தலையாட்டினான். டாக்சி நேராகப் போய் மார்க்கெட் தெருவில் திரும்பி அவர்கள் வீட்டெதிரே நின்றது.

கல்யாணம் பூட்டைத் திறந்தான். சுந்தரி சுவாமி படத்தின் முன் விளக்கேற்றினாள். காதிலிருந்த ஸ்டட்டைக் கழற்றிவிட்டு, புதிய வைரத் தோட்டை அணிந்து கொண்டு சுவாமிக்கும் கல்யாணத்துக்கும் நமஸ்காரம் செய்து, ''ஆசீர்வாதம் பண்ணுங்களேன்'' என்றாள்.

கல்யாணத்துக்கு எல்லாம் புதிராக இருந் தது. ''சுந்தரி! வைரத் தோடு உனக்கு அழ காகத்தான் இருக்கிறது. இதுவே உனக்குன்னு வாங்கியிருந்தால் மேலும் மேலும் நகை சேர ணும்னு ஆசீர்வாதம் பண்ணுவேன். ஆனால் இது அப்துல்லாகிட்டே திருப்பிக் கொடுக்க வாங்கினதாச்சே'' என்றான் வேதனையுடன்.

''இது உங்க சம்பாத்தியத்திலே மிச்சம் பிடிச்சு வாங்கினதாலே எனக்கேதான் சொந் தம். உங்க சிநேகிதருக்கு அவர் கொடுத்த தோட்டையே திருப்பிக் கொடுத்துடுங்க!'' என்றாள் சுந்தரி புன்னகையுடன்.

''அதுதான் தொலைஞ்சு போச்சே!'' திகைத்தான் கல்யாணம்.

சுந்தரி நிதானமாக எழுந்து, ''இப்படி வாருங்கள்'' என்று அழைத்துப் போய் ஸ்டீல் பீரோவைத் திறந்தாள். மேல் தட்டில் அதே வெல்வேட் பெட்டியில் ஒளி உமிழும் வைரத் தோடுகள்.

''எப்போ அகப்பட்டது சுந்தரி?''

''தொலைந்து போனால்தானே அகப்பட? புரியும்படி சொல்கிறேன். அன்றைக்குக் கோபு வந்து கூப்பிட்டானே, அப்போது இந்தத் தோடு என் கையில்தான் இருந்தது. அப்போது இருந்த பரபரப்பில் அப்படியே ஆஸ்பத்திரிக்குப் போய் விட்டேன். அம்மா தான் பார்த்துவிட்டு, 'ஏதுடி, வைரத் தோடு?' என்று கேட்டதும்தான் கையில் வெல்வெட் பெட்டி இருப்பதே நினைவுக்கு வந்தது. இரவல் என்று சொல்ல வெட்கப் பட்டுக் கொண்டு, 'உன் மாப்பிள்ளைதான் வாங்கியிருக்கார். உன்னிடம் காட்ட எடுத்து வந்தேன்' என்று சொல்லிச் சமாளித்தேன். அம்மாவுக்குக் கொள்ளைச் சந்தோஷம், ஊதாரி மாப்பிள்ளைகூடப் பொறுப்பாக மனைவிக்கு நகை வாங்குகிறாரே என்று. 'நீ நல்லவிதமாகப் பெற்றுப் பிழைத்தா யானால், உன் அப்பாவிடம் சொல்லி வைர பேசரியும் வாங்கிப் போடச் சொல்கிறேன்' என்றாள். எனக்கு மனம் நெகிழ்ந்து விட்டது. அப்போதே தீர்மானம் செய்து விட்டேன், எப்படியும் வைரத் தோடு வாங்கி விட வேண் டும் என்று. எனக்கு என்று சொன்னால் இத் தனை அக்கறையுடன் நீங்கள் பணம் சேர்ப்பீர் களா? எத்தனையோ முறைதான் கேட்டு அலுத்து விட்டேனே. எனவேதான் இரவல் தோடு காணமல் போய்விட்டதென்று நாட கம் ஆடினேன். அதனால்தான் வைரத் தோடு கிடைத்தது எனக்கு. என் நல்ல காலம், இது வரையில் நீங்கள் பீரோவில் என் நகைப் பெட்டியைத் திறந்து பார்க்கவில்லை'' என்று கூறி நிறுத்தினாள்.

கல்யாணம் ஒன்றும் பேசாமல் அவளை உறுத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

''ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்? உங்களை ஏமாற்றி வைரத் தோடு வாங்கிவிட்டேனே என்று கோபமா?'' என்று இலேசான பயத் துடன் கேட்டாள் சுந்தரி.

''சே! சே!'' என்றான் கல்யாணம். ''இப்படி ஒரு சமர்த்து மனைவி இருந்துட்டாப் போதுமே. வைரச் சுரங்கத்தையே நான் வாங்கிட மாட்டேனா?'' என்று ஆசையுடன் அவள் கன்னத்தைத் தட்டினான்.



காஞ்சிப் பெரியவர்களின் கல்கத்தா விஜயம்

உலகம் உய்ய அவதரித்த ஆதி சங்கர பகவத்பாதர் பாரதம் முழுவதும் கால்நடையாகப் பிரயாணம் செய்து அத்வைத தத்து வத்தைப் பரப்பினார்கள். அவருடைய வழி வழி வந்த பரம்பரை யில் இன்று நாம் கண்ணாரக் கண்டு வழிபட நடமாடும் தெய்வமாக நமக்கு அருள் பாலித்து வரும் காஞ்சி முனிவர் 1935ல் கல்கத்தா வுக்கு வருகை தந்து அருள் பாலித்தார்கள்.

காஞ்சி பீடத்தை அலங்கரிக்கும் ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி அவர்கள் 12-10-74 அன்று கல்கத்தாவுக்கு விஜயம் செய்கிறார்கள். நவம்பர் மூன்றும் தேதி வரை தங்கி வங்க மக்களுக்கு அருள் பாலிக்க இசைந்துள்ளார்கள். வங்கத்தில் தேசிய விழாவாகக் கொண்டாடப் பெறும் துர்க்கா பூஜையின்போது பெரியவர்கள் கல்கத்தா வருவது வங்க மக்களின் பாக்கியம், பெரியவர்களின் நவராத்திரி கவிசேஷ பூஜையுடன், சத சண்டி ஹோமம், கன்யா பூஜை. சுவாஸினி பூஜை வேதத்தின் பல் இனை மாநாடு, ஷண்மத மகாநாடு ஆகியவையும் நடை பெற இருக்கின்றன. அனைவரும் இந்த நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு பெரியவர்களின் பரிபூரண அநுக்கிரகத்துக்குப் பாத்திரமாக வேண்டுகிறோம்.

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பநவீனமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைந்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது ஸெல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால்; 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—
தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

Sobhagya GR 74-2-Tam.

தபன் சின்ஹா வங்காள மொழியில் 'அதிதி', 'பாலிகா பதூ' போன்ற படங்களை எடுத்துப் புகழ் பெற்றவர்! இங்கு ஆச்சரியக் குறி எதற்கு என்றால், அவர் 'ஸகீனு' படம் எடுக்கக் கையாண்ட முறைக்காக.

ஸகீனு



சுதந்திரத்துக்கு முந்திய சூழ்நிலையில் ஆங்கிலேய முதலாளிகளிடம் இந்தியத் தொழிலாளிகள் பட்ட அல்லல்களைப் படம் எடுக்க முனைந்திருக்கிறார்! ஆனால், சுதந்திரத்துக்குப் பின் வங்காளம் நக்ஸலைட்டுகளிடம் சிக்கி அவதியுற்ற கதையைப் படமாக்கியிருக்கிறார்! ஏனெனில் சுதந்திரத்துக்கு முன், சுதந்திரத்துக்காகப் போராடிய பாரதத்தில், படத்தில் காட்டியது போல் தொழிற்சங்கங்கள் இயங்கியிருக்க முடியாது.

புகழ் மட்டும் போதாது. பணமும் வேண்டும் என்பதற்காக எடுக்கப்பட்ட இந்தப் படத்தின் கதாநாயகன் சகீனு மஹாதோ. படிக்காத மேதை; தொழிலாளர் நண்பன்; மனிதாபிமானம் மிக்கவன். இப்பாத்திரத்தை ஏற்றிருப்பவர் திலீப் குமார். தொழிற்சங்கத் தலைவர் அநுரோத் அவனோடு கூடிக் குடிகெடுக்க வந்த பாத்திரம்! ஸாய்ராபானுவோ கூடிக் குலவிப் பண வசூலுக்கு வழிசெய்ய வந்த பாத்திரம்! தொழிற்சங்கத்தில் சொந்தம் கொண்டாடி வந்த கண்ணுடிப் பாத்திரம் அபர்ணு சென்!

படத்தில் பெரும் பகுதியை நிறைத்துத் தம் நடிப்பால் உயர முயல்பவர் திலீப்குமார்.

வசனம் எழுதிய ராஹீ மாஸூம் ரஜா, கொச்சை மொழி வசனம் தந்த பண்டித ராமமூர்த்தி சதுர்வேதி இருவரும் தங்களது சிறப்பான வசனங்களால், டைரக்டர் தபன் சின்ஹாவின் வேலையைக் குறைத்து விட்டார்கள்! 'ஸகீனு' படம் பேசிப் பேசித் தள்ளுகிறது. அத்துடன் எஸ்.டி. பர்மனின் இசை அமைப்பு, பிமல் முகர்ஜியின் காமிரா எல்லாமாகச் சேர்ந்து இயக்குனப் புகழ்பெற்ற தபன் சின்ஹாவை விழுங்கி விட்டன!



துனியா கா மேலா


புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்ட கதையாக, ஏதோ ஒரு படம் எப்படியோ வெற்றி கண்டது என்பதற்காக ஆட்டு மந்தையாகச் சாயும் சுபாவம் படைத்த இந்தச் சினிமாச் சந்தையிலே, எங்கேயோ குழந்தைகளைப் பிரித்து விட்டு, எப்படியோ மூன்று மணி நேரம் கதை பண்ணி விட்டுக் கடைசியில் சேர்த்து வைத்து மங்களம் பாடுவது என்பது புதிதல்ல.

ரேகா, சஞ்சய், மகமூது, ஜீவன், அஜித் என்று நடிகர்களை மாற்றியிருக்கிறார்களே ஒழியக் கதையை மாற்றவில்லை; அடி - தடியைக் குறைக்கவில்லை. இதுபோன்ற பாத்திரங்களில் நடித்து நடித்து அலுத்துப் போன நடிகர்களும் எப்படி நடித்தால் என்ன என்று தங்கள் நடிப்புக் கலையைப் பல ஆண்டுகளுக்குப் பின் தள்ளியிருக்கிறார்கள். இசைகூடத் தன் பங்கைச் சரியாகச் செய்திருக்கிறது சந்தை இரைச்சலாக! 'துனியா கா மேலா' அல்லவா? காதை மட்டும் பொத்திக் கொள்ளவாவது, கண்ணையும் பொத்திக் கொள்ளுங்கள்! —ரா. வீ.



தீராத பிரச்னை

பி. வி. ஆர்.



அண்மையில் ஒரு கல்யாணத்துக்குப் போயிருந்தேன். மணமகனுக்கு வயது முப்பத்தெட்டு அல்லது முப்பத்தொன்பது இருக்கும். மணப்பெண் அவனைவிட நான்கு வயது சிறியவள். அவளுடைய தகப்பனாரை எனக்குத் தெரியும். செம்புதாஸ் தெருவில் ஓர் இரும்புக் கடையில் நாற்பது வருடங்களாகக் கணக்கு எழுதி வருகிறார். கல்யாணத்தை மிகவும் சிரமப்பட்டு ஏற்பாடு செய்து நடத்தி விட்டார்.

ஆனால் இத்துடன் அவருடைய பிரச்னையோ தொல்லையோ தீரவில்லை. முதல் பெண்ணின் கல்யாணம்தான் முடிந்திருக்கிறது. இருபத்தொன்பது வயதில் ஒரு பெண் — கார்ப்பரேஷன் பள்ளிக்கூட ஆசிரியை, இருபத்தாறு வயதில் மூன்றாவது பெண் — டெலிபோன் ஆபரேட்டர், இருபத்தி நாலு வயதில் ஒரு பெண் — சங்கீதம் சொல்லிக் கொடுக்கிறாள். இந்த மூன்று பெண்களையும் அவர் கரை சேர்த்தாக வேண்டும். இவர்களும் அவருமாக மொத்தம் ஆயிரம் ரூபாய் வரையில் சம்பாதிக்கிறார்கள். ஆனால் அந்த ஆயிரத்தில் ஒரு ஐந்து ரூபாய் கூட அடுத்த மாதம் முதல் தேதி வரை நிற்பதில்லை.

காலா காலத்தில் பெண்களைக் கல்யாணம் செய்து கொடுக்க முடியாமலிருப்பது நம் சமூகத்தின் சாபக்கேடு. முன்பெல்லாம் பெண்ணைக் கல்யாணம் செய்துகொடுத்து அழிந்தான் என்று சரித்திரம் பேசவில்லை.


இப்போது? நடுத்தர வகுப்பினரும் சரி, அவர்களைவிட ஒருபடி கீழே இருப்பவர்களும் சரி, பெற்ற பெண்களைப் பற்றிக் கவலைப்பட்டுப் பயனில்லை என்று இருந்து விடுகிறார்கள்.

பெண் பதினைந்து வயதில் எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்கிறது. அப்புறம் பி. யூ. ஸி.க்குப் போகிறது. அது இரண்டுங்கெட்டான் படிப்பு என்பதை உணர்ந்து, பி. ஏ., பி.எஸ்ஸி. என்று தாவுகிறது.

கல்யாணப் பிரச்னைகளிலிருந்து பெற்றோர்கள் தப்ப ஒரு நல்ல வசதி கிடைத்து விடுகிறது. பிரச்னைகளிலிருந்து ஓடத்தான் அவர்கள் நினைக்கிறார்களே தவிர, பிரச்னையைத் தீர்க்க யோசனை செய்வதில்லை.


பி. ஏ. படித்து முடித்ததும் பெண்ணின் கல்யாணம் நடந்து விடுகிறதா? அவள் உத்தியோகத்துக்குப் போகிறாள். இப்போது அவளைப் பெற்றவர் ஒரு சங்கற்பம் செய்து கொள்ளுகிறார்: பெண் கொண்டு வருகிற முந்நூறு ரூபாயில் இருநூற்றைம்பதை மாதா மாதம் பாங்கியில் போட வேண்டியது. ஒரு வருஷத்தில் மூவாயிரம், இரண்டு வருஷங்களில் ஆறாயிரம். (வட்டியைத் தவிர) அவள் சம்பாதிக்கிற பணத்திலேயே அவளுக்குக் கல்யாணம் செய்து விடலாம்.

ஆனால் அவருடைய சங்கற்பம் இரண்டு மாதங்களிலேயே தூள் தூளாகி விடுகிறது. திடீரென்று செலவுகள் முளைக்கின்றன. குடும்பத் தலைவர் ஓய்வுபெறுகிறார். அல்லது ஒருபையனை என்ஜினீயர் அல்லது டாக்டருக்குப் படிக்க வைக்கும்படியாகிறது. வீட்டுக்காரர் வாடகையை அதிகமாக்குகிறார். பால் விலை ஏறுகிறது. உத்தியோகம் பார்க்கச் செல்லும் பி.ஏ. படித்த பெண் கோடம்பாக்கம் நூல் புடவையிலோ சின்னாளப்பட்டுப் புடவையிலோ செல்லுவாளா? நைலான், நைலக்ஸ், டூ பை டூ என்றெல்லாம் உடல் அலைகிறது. புடவை நிறத்துக்கு ஏற்ற செருப்புக்கள், ஹாண்ட் பாக், நெற்றிப் பொட்டு, காதணிகள் என்று புதுப் புதுச் செலவுகள். மொத்தத்தில் பெற்றவரால் பெண் கல்யாணத்தை அவளுக்குப் பதினைந்து பதினாறு வயது நடந்த போதும் செய்ய முடியவில்லை. இப்போது அவள் சம்பாதிக்கும் போதும் முடியவில்லை.



இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், ஒரு பெண்ணின் கல்யாணத்துக்கு வேண்டிய பணம்தான். தவணை முறையில் யார் வரதட்சிணையை வாங்கிக் கொள்ள முன் வருகிறார்கள்? எதிர் ஜாமீன், பையனின் படிப்புக்கும் உத்தியோகத்துக்கும் ஏற்ப ஏறுகிறது. பத்துப் பவுன் நகை, ஆயிரம் ரூபாய்க்கு வெள்ளிப் பாத்திரம், ஆயிரத்துக்கு எவர்ஸில்வர், பையனின் டிரஸ்ஸுக்கு ஆயிரம் என்று ஆயிரம் ஆயிரமாகப் போகிறது.

வரதட்சிணை இல்லாமல், ஆர்ப்பாட்டம் இல்லாமல், ஆரவாரம் இல்லாமல் ஒரு தம்பதியின் அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே செலவு என்ற ஓர் உறுதியுடன் கல்யாணம் நடக்குமானால் அது பெண்ணின் பெற்றோருக்கு மட்டுமா பூரிப்பைக் கொடுக்கும்? வளர்கின்ற சமூகமே அல்லவா பூரித்துப் போகும்?



கொழும்பு வழக்கறிஞர் திரு ஆர். நமச்சிவாயம் அவர்களின் குமாரத்தி செல்வி **சகுந்தலாவுக்கும்**, திரு எஸ். பி. ரகுநாதன் அவர்களின் குமாரன் செல்வன் **ஸ்ரீஸ்கந்தா** வுக்கும் வெள்ளவெத்தை நியூ கதிரேசன் கோவில் ஹாலில், அண்மையில் திருமணம் அதிவிமரிசையாக நடந்தேறியது. நியூகதிரேசன் கோவில் ஹால், சமீபத்தில் ஆலய நிதியிலிருந்து ரூபாய் பத்து லட்சம் செலவில் அதன் டிரஸ்டிக ளான செட்டிநாடு கார்ப்பரேஷனுல் கட்டப்பட்டது. செல்வி சகுந்தலா - ஸ்ரீஸ்கந்தாவின் திருமணம் தான் இப் புதுக் கல்யாண மண்டபத்தில் நடந்த முதல் திருமணம். இத்திருமணத்துக்கு ஏராள மான உறவினர்களும், நண்பர்களும், பிரமுகர் களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

ஆபீஸிலிருந்து உள்ளே நுழையும்போதே, சோர்வாகக் காணப்பட்டான் சந்தானம்.

''ஏன், என்னவோ போலிருக்கிறீர்கள்? புதிய வேலையில் பொறுப்பு அதிகம். அப்படித்தானே?'' என்றபடி, அவன் கழற்றிக் கொடுத்த கோட்டை வாங்கிக்கொண்டு, அவன் கையில் காப்பித் தம்ளரைக்கொடுத்தபடி கேட்டாள் அம்புஜம்.

''பெரிய உத்தியோகத்துக்கு வந்துவிட்டு, பொறுப்பைப் பார்த்துப் பயப்படுவானா எவனாவது? அதெல்லாம் ஒன்று மில்லை. அதிக வேலையை விடப் பெரிய வேதனை ஒன்று என் மனத்தைப் பாதிக்கிறது இப்போது'' என்று சொல்லிச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டான்.


புதிய வேலையைப் பாதிக்கும்படியாய் ஏதாவது நடந்து விட்டிருக்கப் போகிறதே என்கிற பதைப்புடன், ''ஏன், என்ன சமாசாரம்?'' என்று கவலையுடன் கேட்டாள் அம்புஜம்.

''என்னத்தைச் சொல்வேன் அம்புஜம்? இன்னும் இரண்டு நாட்களில் நான் 'காம்ப்'புக்குக் கிளம்பிப் போய், பதினைந்து, இருபது நாட்களுக்குப் பிறகுதான் திரும்பி வருவேன். குழந்தைகளுக்கெல்லாம் இப்போது பரீட்சை சமயமாயிற்றே, நீ அவர்களின் படிப்பையும் கவனித்துக் கொண்டு, ஒண்டியாக வீட்டையும் நிர்வகிக்க வேண்டுமே என்பதை நினைக்கும் போதுதான்...''

தன்னையும் மீறிப் 'பக்'கென்று சிரித்துவிட்டாள் அம்புஜம்.

''ஏன்... ஏன் சிரிக்கிறே?'' என்று எதுவும்புரியாமல் கேட்டான் சந்தானம்.

ஆணிவேர்



கஸ்தூரி பஞ்சு

''நீங்கள் கவலைப்படுவது நியாயம்தான் என்று நினைத்தேன். சிரிப்பு வந்து விட்டது.பாவம், நீங்கள் குழந்தைகளையெல்லாம் உட்கார வைத்துப் பாடம் சொல்லிக் கொடுப்பதும், ஓயாமல் கடைக்குப் போய், வீட்டுக்கு வேண்டிய சாமான்களையும், காய்கறிகளையும் வாங்கி வருவதுமாக உங்களுக்குத்தான் வீட்டில் எத்தனை வேலை? அத்தனையையும் இருபது நாட்களுக்கு நானே கவனிக்க வேண்டுமென்றால், தவித்துத் திண்டாடித்தான் போய் விடுவேன்'' என்று அவள் பரிகாசமாகச் சொன்னதும், ''ஏய் கழுதே! கேலியா பண்ணறே?'' என்று கேட்டு அவள் கன்னத்தைத் தட்டினான் சந்தானம்.

''பின்னே என்ன, நிஜமாகத்தான் கேட்கிறேன். உங்கள் மூன்று குழந்தைகளும் எந்தெந்த வகுப்பில் படிக்கிறார்கள் என்பதை மட்டுமாவது 'கரெக்டா'கச் சொல்லி விடுங்கள், போதும். நான் உங்களைப் பரிகாசம் செய்தது தப்பு என்று கன்னத்தில் போட்டுக் கொண்டு தோப்புக்கரணம் போடுகிறேன்'' என்றாள் அம்புஜம்.

அவள் சொன்னதில் மிகை எதுவுமில்லைதான். வீட்டு விவகாரங்களுக்கும் அவனுக்கும் ரொம்பத் தூரம். அவன் சுபாவம் அந்த மாதிரி. வீட்டுக்குத் தேவையான பணத்தைத் தருவதைத் தவிர, மீதிப் பொறுப்பெல்லாம் அம்புஜத்தையே சார்ந்திருந்தது. அதுவும் குழந்தைகளின் படிப்பு விஷயத்தைப் பற்றி அக்ஷரம்கூட அவனுக்குத் தெரியாது. 'அட்மிஷனுக்கென்ன அத்தனை சிரமமா?' என்றுதான் கேட்பான். எப்போதாவது குழந்தைகள் அவனிடம் பாடப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு போய், ஏதாவது விளக்கம் கேட்டால், ''போடா, போ. உங்கம்மாவையே போய்க் கேளு'' என்று உள் பக்கமாகக் கையைக் காட்டி அனுப்பி விடுவான்.

ஆகவே, குழந்தைகளும் அதே ரீதியில் வளர்ந்தார்கள். ''அம்மா! நாளைக்கு நாங்கள் எல்லோரும் 'எக்ஸ்கர்ஷன்' போகிறோம். அப்பாவிடம் கேட்டு ஐந்து ரூபாய் வாங்கி வைத்து விடம்மா'' என்பான் பெரிய பிள்ளை.

''கணக்குநோட்டு தீர்ந்து போய் நாலு நாட்களாகின்றன. இன்னும் நீ அப்பாகிட்டே சொல்லவேயில்

போட்டிக்கதை-9

லையா?'' என்று முன்னறையில் சந்தானம் இருக்க, சமையலறைக்குள் வந்து அம்புஜத்தைச் சுற்றிச் சுற்றி வந்து நச்சரிப்பான் இரண்டாவது பிள்ளை.

''நீலப் பாவாடையும் வெள்ளைச் சோளியும் வேணும்னு எத்தனை தடவைம்மா கேட்பது? அப்பா ஆபீசுக்குப் புறப்படுவதற்கு முன் சீக்கிரமாகப் போய் அப்பாகிட்டே சொல்லேன்'' என்று அவள் முந்தானையைப் பிடித்துக்கொண்டு மூக்கைச் சிந்துவாள் மூன்றாவது பெண்.

இத்தனைக்கும் அவள் சந்தானத்துக்கு மகா செல்லம். பத்து வயது நிரம்பும் தன் ஒரே அருமை மகளை, பத்து மாதத்துப் பச்சைக் குழந்தையாக நினைத்து, ஏகமாகக் கொஞ்சுவான் சந்தானம். அவள் எது கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பான். ஆனால் அவளோ அத்தனையையும் வாங்கிக் கொண்டு, அவனிடம் எதுவும் நேராகக் கேட்காமல் அம்புஜத்திடம்தான் வந்து ஒண்டிக் கொள்வாள்.

''நான் என்ன உங்களுக்கெல்லாம் வக்கீலா? நீங்களெல்லாம் உங்க அப்பாகிட்டே பேசவே மாட்டீர்களா?'' என்று வேடிக்

கையாகக் கேட்பாள் அம்புஜம்.

''பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது'' என்று சொல்லிச் சிரிப்பான் சந்தானம்.

''நீங்கள் நடந்து கொள்வதில் அவர்கள் அப்படி நினைத்து விடுகிறார்கள்'' என்று சாடுவாள் அம்புஜம்.

ஒரு தடவை அம்புஜத்துக்குக் கொஞ்சம் காய்ச்சலும், உடம்பு ஓய்ச்சலுமாக இருந்த போது ஆபீஸுக்குக் கிளம்பிக் கொண்டிருந்த சந்தானத்திடம் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்து, ''இன்று மத்தியானத்துக்குள் நம் பிரபுவுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கட்டியாக வேண்டும். இன்றுதான் கடைசி நாள். என்னால் போக முடியாது போலிருக்கிறது. மறக்காமல் கட்டிவிடுங்கள்'' என்று ஒரு தடவைக்கு நூறு தடவையாகச் சொல்லி அனுப்பினாள்.

சாயங்காலம் அவன் ஆபீஸிலிருந்து நுழையும் போதே, ''கட்டி விட்டீர்களா?'' என்று கேட்டுக் கொண்டுதான் வரவேற்றாள்.

''ஆமாம். உன் ஒருத்திக்குத்தான் பொறுப்பு. மற்றவனுக்கு ஒன்றுமே இல்லை என்று உனக்கு நினைப்பு. 'க்யூ'வில் நின்று கட்டிவிட்டு, ஒன்றரை மணி நேரம் 'லேட்'டாக ஆபீசுக்குப் போனேன், போதுமா?'' என்று சொன்னதும்தான் அவளுக்கு நிம்மதியாயிற்று.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, ஒரு மத்தியானம், ''அம்மா!.. அம்மா! ஏம்மா இன்னும் எனக்கு 'பீஸ்' கட்டலே? என் பெயரை அடிச்சுடுவேன்னு சொல்றா டீச்சர்'', என்று கண்ணைக் கசக்கிக் கொண்டே ஓடி வந்தான் பிரபு.

அம்புஜத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது. சந்தானத்துக்கு மறதி உண்டே ஒழிய எதையும் மறைத்துப் பேசும் சுபாவம் இல்லை. இப்போது புதிதாக வந்து விட்டிருக்கிறதோ! 'வரட்டும்' என்று கறுவிக்கொண்டவள், அன்று மாலை அவன் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக 'மொலு மொலு' வென்று பிடித்துக் கொண்டாள்.

''என்ன, பீஸ் கட்டினவன் நான் இருக்கக் கட்டவில்லை என்று சொல்வதாவது?'' என்று கோபத்துடன் கூவிவிட்டு உள்ளே போனவன், மேஜை டிராயரை 'மடே'ரென்று இழுத்து, அதில் மடித்து வைத்திருந்த ரசீதை எடுத்து அம்புஜத்தின் முன்னால் தூக்கிப் போட்டான்.

அதைப் பிரித்துப் பார்த்த அம்புஜத்தின் விழிகள் ஒரு வினாடி வியப்பில் விரிய உடனேயே விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்.

''ஏய் பைத்தியம்! எதுக்குச் சிரிக்கிறே? இப்போது சொல்லு, எந்த மடையன் சொன்னாலும் நான் 'பீஸ்' கட்டவில்லை என்று?'' என்றான்.

''சொன்னவன் மடையன் இல்லை. புத்திசாலிதான். கட்டினவர்தான்....'' என்று இழுத்தவள், ரசீதை அவன் முகத்துக்கு எதிராகப் பிடித்துக் கொண்டு, அதில் பையனின் பெயர் இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டி, ''வெட்கக் கேடு! பெற்றவருக்குப் பிள்ளையின் பெயர் தெரியவில்லை என்றால், கேட்பவர்கள் கைகொட்டித்தான் சிரிப்பார்கள். நீங்கள் பிரபுவுக்கு 'பீஸ்' கட்டிவிட்டு வந்திருக்கிறீர்கள். அவர்கள் ஸ்ரீராமுக்குச் சம்பளம் கேட்டு அனுப்பி யிருக்கிறார்கள்'' என்று சொல்லி, மறுபடியும் சிரித்ததும், சந்தானத்தின் முகத்தில் லிட்டர் லிட்டராக அசடு வழிந்தது. பாவம் அவன்! வீட்டில் கூப்பிடும் பிரபு என்கிற பெயரிலேயே பணத்தைக் கட்டிவிட்டு வந்து விட்டான். பள்ளிக்கூடத்தில் பையனுக்கு ஸ்ரீராம் என்கிற பெயர் என்பது அவனுக்கு மறந்து விட்டது. என்றைக்காவது அவன் பள்ளிக்கூடம் போய், 'பீஸ்' கட்டுவதோ, இல்லை, பிள்ளைகளின் பாடப் புத்தகத்தைப் பிரித்துப் பார்ப்பதோ இருந்திருந்தால் அல்லவா அவனுக்கு அந்தப் பெயர் என்பது நினைவிருந்திருக்கும்? அதன் பிறகு ரொம்ப நாட்களுக்கு அந்த நிகழ்ச்சியைச் சொல்லிச் சொல்லிச் சந்தானத்தைக் கேலி செய்து கொண்டிருந்தாள் அம்புஜம்.

அப்படிப்பட்டவன் 'பிள்ளைகளின் பரீட்சை சமயத்தில் ஊருக்குப் போகிறேனே' என்று வருந்தினதும், அம்புஜம் சிரித்ததில் வியப்பு என்ன இருக்கிறது?

''எங்களைப் பற்றி அநாவசியமாகக் கவலைப்படாமல், உங்கள் வேலைகளைக் கவனியுங்கள். அதுபோதும்'' என்று 'காம்ப்' கிளம்பின கணவருக்கு விடை கொடுத்தாள்.

அன்று மாலை ஏழு மணிக்கு, உள் வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டு, முன்னறைக்கு வந்து உட்கார்ந்த அம்புஜம், பெரிய பிள்ளை ஆங்கில நாவல் ஒன்றை வைத்துப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, ''என்னடா இது, பரீட்சை வந்துடுத்து. பாடத்தைப் படிக்காமல், நாவல் படிக்கிறாயே! எழுந்திருடா.



கில்லாடிக்குக் கில்லாடி !



என் நண்பன் ஒருவன் ஓர் ஓட்டலுக்குச் சென்றிருந்தான். ''சூடா என்ன இருக்கு?'' என்று கேட்டதும் நன்கு பழக்கப்பட்ட அந்தச் சர்வர் ''சூடா நெருப்பு இருக்கு'' என்று பழைய ஜோக்கைத் தமாஷாகச் சொல்லியிருக்கிறார். உடனே இவன் ஒரு பிளேட் கொண்டு வரச் சொல்லி ஆர்டர் கொடுத்திருக்கிறான். சர்வரும் விட்டுக் கொடுக்காமல் ஒரு தட்டில் இரண்டு நெருப்புத் துண்டுகளை வைத்து எடுத்து வந்திருக்கிறார். என் நண்பன் நிதானமாகப் பாக்கெட்டில் கையை விட்டு ஒரு சிகரெட்டை எடுத்து அந்த நெருப்பில் கொளுத்திக் கொண்டு பேசாமல் எழுந்து வந்திருக்கிறான். அசந்து நின்ற அந்தச் சர்வர் முகத்தில் அசடு வழியாதிருக்குமா? -ஏ.வி.

போய்ப் பர்டப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வா'' என்றாள்.

''என்னம்மா இது? அப்பாதான் ஊரிலேயில்லையே! இன்றைக்கும் எதற்காகத் தினம் மாதிரி ஏழு மணிக்குப் படிக்க வேண்டும்?'' என்றான்.

''அழகாயிருக்குடா. அப்படின்னு இத்தனை நாட்கள் உங்கப்பாவுக்காகத்தான் படிச்சியா நீ?'' என்று படபடப்புடன் கேட்டாள் அம்புஜம்.

''பின்னே யாருக்காகப் படிச்சேனும்? பாடம் படிக்கா விட்டால் அப்பாவுக்குக் கோபம் வரும். விளக்கு வைத்த பிறகு வெளியில் இருந்தால் காலை ஒடித்து விடுவார் என்கிறதெல்லாம் எனக்குத் தெரியாதா? அந்தப் பயத்தில்தான் பதறிக்கொண்டு வீட்டுக்கு வருவதும், புத்தகத்தைப் படிப்பதுமாக இருந்தேன். அம்மா! ப்ளீஸ்! இன்னும் இருபது நாட்களுக்கு என் இஷ்டப்படி விட்டுவிடு. அனாவசியமாகத் தொந்தரவு செய்யாதே!'' என்று சொல்லிவிட்டு மீண்டும் நாவல் படிப்பதில் முனைந்து விட்டான்.

அப்படியே விக்கித்துப் போய் உட்கார்ந்து விட்டாள் அம்புஜம். அவன் மட்டுமில்லை. அவனுக்கு அடுத்தவனும் அதே மாதிரிதான் நடந்து கொண்டான்.

ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு ''மாட்சுக்குப் போயிட்டு வரேம்மா'' என்று கிரிக்கெட் மட்டையுடன் அவன் கிளம்பினதும், ''என்னடா பிரபு, என்றைக்குமில்லாமல், இன்று மட்டும் மாட்சு!'' என்று அவள் கோபத்துடன் இரைந்ததும், ''அப்பாவுக்கு அதெல்லாம் பிடிக்காது. அதனால்தான் அந்தப் பேச்சைப் பற்றி மூச்சுக்கூட விடாமல் இருந்தேன். இன்றைக்குத்தான் அப்பா ஊரில் இல்லையேம்மா. போயிட்டு இரண்டு மூன்று மணிக்குத்தான் வருவேன்'' என்று சொன்னவன், அவள் பதிலுக்குக் கூடக் காத்திராமல், ஓடியே போய்விட்டான்.

அம்புஜத்தின் பெண், சந்தானம் கெஞ்சிக் கெஞ்சிக் கூப்பிட்டாலும் கூட அவனருகே போகாமல், முரண்டு செய்பவள், அவன் ஊருக்குப் போன மூன்றாவது நாள் காலையில் கண்விழித்து எழுந்திருக்கும்போதே, ''அம்மா! அப்பா ஊருக்குப் போய் எத்தனை நாட்களாயிடுத்து. அப்பாவைப் பார்க்காமல் எனக்கு என்னவோ போலிருக்கு. எப்போ வருவார் அப்பா?'' என்று கேட்டு அழவே ஆரம்பித்து விட்டாள்.

அம்புஜத்தின் உணர்வுகள் விழித்தெழுந்தன. அவள் உள்ளத்தில் மின்னலாக ஓர் ஒளி தோன்றி, அந்த வெளிச்சத்தில் மத்தாப்புப் பொறிகளாகப் பல உண்மைகள்புலப்பட்டன.


அறை முழுவதும் கவிந்து நிற்கும் கரிய இருளை, இருந்த இடத்திலிருந்து விரட்டியடிக்கும் சின்னஞ் சிறு விளக்கின் மகத்துவம் இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது.

ஓங்கி உயர்ந்து, கப்பும் கிளையுமாகப் பரவி நிற்கும் பிரும்மாண்டமான ஆலமரத்தை, விழாமல் பாதுகாப்பது, கண்ணுக்குத் தெரியாத அதன் ஆணி வேர்கள்தாம் என்பது இன்று தான் அவளுக்குத் தெரிந்தது.

பரீட்சை எல்லாம் முடிந்த பிறகு, 'பிராக்ரஸ் ரிப்போர்ட்'களில் கையெழுத்துப் போடுவதற்காக, அவற்றைப் பார்த்த சந்தானம், ''என்ன இது, ஏன் இந்தத் தடவை குழந்தைகள் இத்தனை குறைச்சலாக மார்க் வாங்கியிருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

''நீங்கள் ஊரில் இல்லையல்லவா? அதுதான். இனிமேல் அவர்களின் பரீட்சை சமயத்தில் எங்கும் போகாதீர்கள்'' என்று அம்புஜம் சொன்னதைப் பரிகாசம் என்று நினைத்துக் கொண்டான் சந்தானம்.

ஒளிப் பிழம்புக்கு அதன் வெளிச்சம் எப்படித் தெரிய முடியும்?



அக்கரைப் பச்சை

'எப்படியோ ஆரம்பித்த படம் எப்படியோ முடிந்து விடுகிறது. ஓர் ஏழை எழுத்தாளனை விரும்பி, அவன் எழுத்தைப் பூசித்து வந்த ஒரு பெண் அவனையே மணந்து கொண்டு அதைப் பெறற்கரும் பாக்கியமாகக் கருதி வந்தவள், தங்கைக்குப் பணக்காரக் கணவன் கிடைத்ததும் அவனைக் கண்டு பொறுமைப்பட்டுக் கொண்ட கணவனையும், அவன் எழுத்தையும் தூற்ற ஆரம்பித்து விட்டாளாம்! அக்காளும் தங்கையும், வறுமையையும் வளத்தையும் மாற்றிக் கொள்கிறார்களாம்! இருவரும் கணவன்மார்களை வெறுத்துப் பிறந்த வீட்டுக்கு வந்து விடுகிறார்களாம்! அத்துடன் கதையை விடுங்கள்!

பாத்திரப் படைப்பில் கவனம் செலுத்தாத காரணத்தால், திரைக் கதை தற்கொலை செய்து கொண்டு விட்டது!

அக்காளாக வரும் லட்சுமி அற்புதமாக நடித்திருக்கிறார். கணவன் கதை சொல்லச் சொல்ல எழுதிக் கொண்டே வரும்பொழுது மனைவியின் முகத்தில்தான் எத்தனைமகிழ்ச்சி! எத்தனை நெகிழ்ச்சி! பிறகு கோபத்திலும், சோகத்திலும் எத்தகைய தத்ரூபமான நடிப்பு!

ஜெயசித்ராவின் 'கிளாமர் ரோல்' படத்தில் எடுப்பாகத்தான் இருக்கிறது. பிஸினஸ் நினைவாகவே இருக்கும் கணவனைத் தன் வழிக்குத் திருப்ப முடியாமல் பட்ட வேதனையில் ஜெயசித்ராவின் நடிப்பு சிறப்பாயிருக்கிறது.

பத்திரிகை நடத்துபவராக வரும் நாகேஷின் நடிப்பு அருமையானது. ஆனால், நடிப்பில் நல்ல அனுபவம் உள்ள அவர் ஏன் அப்படி இரைந்து பேசுகிறார்? பொதுக் கூட்டத்தில் பேசுவதாக நினைப்போ!

ஜெய்சங்கரின் துள்ளலும் துடிப்பும் மிக்க நடிப்பு படத்தின் சுவையான பகுதி. ரவிச்சந்திரன், எழுத்தாளக் கணவன். ஏன் சோர்ந்து போய் நடிக்கிறார் என்று தெரியவில்லை! அவரது வாளிப்பான உருவம், வளமான உடை, பாவனை எதிலுமே வறுமையைக் காணோமே!

படத்தின் கவர்ச்சிக்கு ராஜஸ்ரீ வந்து ரவிச்சந்திரனுடன் மிக நெருக்கமாக நடிக்கிறார்.

பேராசிரியர் ஏ. எஸ். பிரகாசம் வசனம் நன்றாக எழுதியிருக்கிறார். பல இடங்களில் பாராட்டுப் பெறுகிறது. ஆனால் கதை...? அது அக்கரைப் பச்சை ! அவ்வளவுதான்.

அவலை நினைத்து கொண்டு உரலை இடித்திருக்கிறார்கள்!

பாத பூஜை

தான் தாய் தந்தையற்ற அநாதை என்று தெரிந்து போனதும், மூத்தவள் இத்தனை காலமும் தன்னை வளர்த்து ஆளாக்கியவர்களிடம் சொல்லிக் கொள்ளக் கூடப் பிடிக்காமல் இரவோடு இரவாக, வீட்டை விட்டு வெளியேறி விடுகிறாளாம்! பொழுது விடிந்து பெற்றோர்கள் தன்னைத் தேடிக் கண்டு பிடிக்க வசதியாக வெகு சமீபத்தில் தான் போய்க் கொண்டிருக்கிறாள்! இதற்கு மேல் தான் அக்காளுக்கு வாழ்வளிக்கத் தங்கை செய்யும் தியாக வரலாறு ஆரம்பமாகிறது!



ஜெயா, ஜெயசித்ரா இருவருமே நன்றாய் நடிக்கின்றனர், என்றாலும், ஜெயசித்ரா ஏற்ற பாத்திரப் படைப்பின் வசதியால் உணர்ச்சி பொங்க நடிக்க முடிகிறது. துயரத்தில் பொங்கி ஜெயா நம் மனத்தை உருக்கினால், தியாகத்தில் நெகிழ்ந்து ஜெயசித்ரா நம்மை நெகிழ்விக்கிறார். இருவருக்குமே சபாஷ் போட்டு விட வேண்டியதுதான்!

சிவகுமார், ஜெயசித்ராவின் காதலன். கைகூடாமல் போன காதலினால் துயரத்தில் ஆழ்ந்தபோது அவர் நடிப்பு நன்கு சோபிக்கிறது.

வி. கே. ராமசாமி, நீலு, மனோரமா, 'அச்சச்சோ' சித்ரா ஆகியவர்கள் வந்து நகைச்சுவை விருந்தளிக்கின்றனர். ஆனால் நகைச்சுவைக்காகப் புனையப்பட்ட இணைக் கதையில் என்னத்தை யெல்லாமோ கலப்பு மணம், அது இது என்று சேர்த்துத் தொலைத்து விட்டார்கள். அதனால் அது கொஞ்சம் அசடு வழிந்திருக்கிறது!

மேஜர் சுந்தரராஜன் இல்லா விட்டால் ''பாத பூஜை'' இலேசில் முடிந்திருக்காது. அவர் போடும் பைத்தியக்கார வேஷம் தான் திரைக்கதையின் கருவைத் தாங்கி நிற்கும் 'ஸேஃப்டி லாக்கர்!' மேஜர் தம் பாகத்தைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

அநுபவம் முதிர்ந்த திரைப் பட டைரக்டர் ஏ. பீம்சிங் தம் பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார். பாவம், திரைக்கதையும் அவர் எழுதியதுதான்!

படத்துடன் தலைப்பைப் பொருத்த வேண்டும் என்பதற்காக, சும்மாச் சொல்லக் கூடாது! — அரும்பாடு பட்டிருக்கிறார்கள்! — காந்தன்

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



ஒருமைப் படுத்தும் அன்னபூரணி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி சங்கராசாரிய சுவாமிகள்


பாபம் செய்ததற்குத் தண்டனையாகத் தரித்திரத்தில் கஷ்டப்படுகிறவர்களுக்கும் ஸ்ரீ காமாக்ஷியேயான அன்னபூரணி கருணை பாலிக்கிறாள். பசி என்பது பாபிக்கும் வரக் கூடாது. கேரளத்தில் செருக்குன்னம் என்று அன்னபூர்ணா க்ஷேத்திரம் இருக்கிறது. அங்கே சேவார்த்திகளுக்கெல்லாம் சாப்பாடு போடுகிறார்கள். அதுமட்டுமில்லை; கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு மரத்தில் ஒரு சோற்று மூட்டையை இரவு கட்டி வைக்கிறார்கள். இராக்காலத்தில் அந்தப் பக்கமாகப் பசியோடு போகிற திருடர்களும் கூடப் பசியாற வேண்டும் என்று இந்த ஏற்பாடு.

இத்தனை கருணையோடு ஓர் அம்மா இருக்கிறபோது இன்றைக்கு லோகத்தில் இவ்வளவு துர்ப்பிக்ஷம் இருக்கிறது என்றால், அதிலிருந்து நாம் எத்தனை பாபம் செய்திருக்கிறோம் என்பதைத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். 'சரக ஸம்ஹிதை'யில் ஆத்ரேயர் சொல்வதாக வருகிறது: 'ஒரு தேசத்திலோ நகரத்திலோ, கிராமத்திலோ ஆட்சியில் இருக்கப்பட்டவர்கள் தர்மத்தில் தவறி நடந்தால் அவர்களைச் சேர்ந்த ஜனங்களும் இதே போக்கை அநுசரிக்க வேண்டியதாகிறது. இப்படி அதர்மம் ரொம்பவும் பரவுகிற போது தேவர்கள் இவர்களைக் கைவிட எண்ணுகிறார்கள். (தேவர்கள் என்றால் இயற்கைச் சக்திகளை நடத்துகிற ஈசுவரனின் அதிகாரிகள்). உடனே ருதுக்கள் மாறுகின்றன. மழை சரியாகப் பெய்வதில்லை. பெய்தாலும் காலம் தவறி, இடம் தவறி, அளவு தவறிப் பெய்யும். பருவக் காற்று முறைப்படி வீசுவதில்லை. வியாதிக் கிருமிகள் அதிகமாகின்றன. பயிர் பச்சைகளின் செழிப்புப் போகிறது. உணவுப் பதார்த்தங்களில் துர்ப்பிக்ஷம், கிடைக்கிற கொஞ்சத்திலும் தோஷங்கள், கெட்ட காற்று, வியாதி இவற்றால் தேசம் பாழாகிறது.'

உலகத்தின் கஷ்டத்திலிருந்து நம்முடைய தப்பையே புரிந்துகொண்டு திருந்தப் பிரயாசை எடுத்தோமாயின், அன்னபூரணியே அன்ன பிக்ஷை, ஞானப் பிக்ஷை எல்லாம் போடுவாள். அவள் சரீரமே ஞான மயமானது. 'அ'விலிருந்து 'க்ஷ' வரையிலான எல்லா அட்சரங்களுமே உருவான மந்திர மாத்ருகா ரூபிணி அவள் என்கிறார் ஆசாரியாள் (ஆதி க்ஷாந்த ஸமஸ்த வர்ணனகரீ.) இப்படிப்பட்ட சரீரம் படைத்தவளாதலால், நம் சரீரத்தை மட்டுமின்றி அறிவையும் வளர்க்கப் பிக்ஷை போட்டு ஞானம் தருவாள்.

அது எப்படிப்பட்ட ஞானம் என்பதைத்தான் ஆசாரியாள், அன்னபூர்ணி ஸ்துதியின் கடைசியில் சொல்கிறார். அந்த நிலையில் பரமேசுவரனே தகப்பனாராகவும், அம்பாளே தாயாராகவும் தெரிவார்கள். உடனே சகல ஜீவராசிகளும் சகோதரர்களாகி விடுவார்கள்; மூவுலகமும் சொந்த வீடாகிவிடும். இது இப்போது நிறையப் பேசப்படுகிற தேச ஐக்கியப் பாட்டைவிட எத்தனையோ படி மேலே! மூன்றுலக ஐக்கியப்பாடு! பக்தி இருந்தால், பராசக்தி ஒருத்தி இருக்கிறாள் என்ற பயம், பக்தி இருந்து விட்டால், எல்லோரும் அவள் குழந்தைகள்தான் என்கிற சகோதர பாவம் தானாகவே வந்துவிடும். இதற்குப் பிரசங்கம் வேண்டாம், திட்டம் வேண்டாம், பிரசாரம் வேண்டாம். அநாதி காலமாக இப்படித்தான் பிரத்தியட்சத்தில் ஐக்கியம் இருந்திருக்கிறது. ஸ்வாமிக்காகத் தெற்கத்திக்காரன் காசிக்குப் போனான்; ஸ்வாமிக்காக வடக்கத்திக்காரன் ராமேசுவரத்துக்கு வந்தான். ஐக்கியப்பாடு என்கிற பேச்சு இல்லாமலே, 'சகோதர சகோதரிகளே' என்ற பிரசங்கம் இல்லாமலே மத உணர்ச்சியால் ஐக்கியமாக, ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகளாக இருந்து வந்தோம். இதோடுகூட அறிவாளிகளின் மட்டத்திலோ சகல சாஸ்திரங்களுக்கும் பொது பாஷையாக இருந்த சம்ஸ்கிருதம் தேசத்தின் நாலு கோடிகளையும் ஒன்றாகச் சேர்த்து வைத்திருந்தது. இப்போது 'ஸெக்யூலர்' நாகரிகத்தில் மதத்தை விட்டாயிற்று. சம்ஸ்கிருதத்தையும் ஒரு மாதிரி தீர்த்துக்கட்டிவிட சகல யத்தனங்களும் நடக்கின்றன — நான் இங்கேயுள்ள நம்மவர்களை மட்டும் சொல்லவில்லை. ஹிந்திக்காரர்களும் இந்தக் கைங்கரியத்தை நன்றாகவே காரிய ரீதியில் செய்து வருகிறார்கள். இடைக்காலத்தில் ஒரு பொது இணைப்பாக (*link*) வந்த இங்கிலீஷையும் விரட்டிவிடப் பார்க்கிறார்கள்.

பாஷை விஷயம்கூட இரண்டாம்பட்சம்தான். பக்தியை வளர்த்துவிட்டால் போதும். அப்புறம் என் மாகாணம், என் ஜாதி, என் பாஷை என்று நமக்குள்ளேயே சண்டைகள் ஒருகாலும் வராது. ஐக்கியப் பிரசங்கம் அதிகமான இப்போதுதான் நமக்குள்ளேயே ஒரு சீமைக்காரன் இன்னொரு சீமைக்காரனுக்குத் தண்ணீர் தரமாட்டேன், தானியம் தரமாட்டேன் என்று பிரிந்து பிரிந்து நிற்கிறான். மாகாணத்துக்கு மாகாணம் எல்லைச் சண்டை வந்திருக்கிறது. பாஷையின் பேரால், ஜாதியின் பேரால் ஏற்கெனவே கொடுமை நடந்ததாக இப்போது கிளப்பி விட்டிருக்கிற பிற்பாடுதான் வாஸ்தவத்தில் பாஷைச் சண்டை, ஜாதிச் சண்டை எல்லாம் வந்திருக்கின்றன. இத்தனைக்கும் காரணம், மத உணர்ச்சி, பக்தி போனதுதான். எனவே இப்போது சர்வ ரோக நிவாரணியும் பக்திதான். உண்மையான ஈசுவர பக்தியானது, அவன் குழந்தைகளான சகலரிடமும் அன்பாகத்தான் பரிணமிக்கும். அப்புறம் பரஸ்பர சகாயத்தைத் தவிர வேறெதற்கும் இடமே இராது. 'அன்பே சிவம்' என்கிறார் திருமூலர். அதுவே அறிவு. 'அறிவான தெய்வமே' என்றார் தாயுமானவர். இந்த அன்பையும் அறிவையும் அன்னபூரணி நமக்கெல்லாம் பிட்சை போடப் பிரார்த்திப்போம்.



காசிக்குச் செல்வோம்

எம். பக்தவத்ஸலம்

சுதந்திரப் போராட்டத்தில் காந்தீய சகாப்தம் தொடங்குவதற்கு முன்பு, பாலகங்காதர திலகர், டாக்டர் அன்னிபெஸண்ட் போன்றவர்களின் தலைமையில் ஹோம்ரூல் இயக்கம் தீவிரமாக நடைபெற்றது. அப்பொழுது, அந்த இயக்கத்தை முறியடிக்கும் நோக்கத்தோடு, ஆட்சியாளர்கள் 'பல மொழிகள் பேசுகின்றவர்களும் பல சமயங்களைச் சேர்ந்தவர்களும் எப்படி ஒரு நாட்டினராக இருக்க முடியும்?' என்று கேட்டு மக்களைப் பிரிக்க முயன்றார்கள். அவ்வமயம் டாக்டர் அன்னிபெஸண்ட் 'இந்தியா ஒரு நாடா?' என்ற ஒரு சிறிய ஆங்கில நூலை வெளியிட்டார். அது லண்டனில் பிரசுரிக்கப்பட்டது. அதில் புள்ளிவிவரங்களுடன் ஆணித்தரமாக இந்தியா ஒரு நாடுதான் என்று நிரூபிக்கப்பட்டது. அந்த நூல் பிரதியின் விலை நாலணாதான். அதைச் சென்னையில் என்னைப் போன்ற மாணவர்கள் எல்லாம் வாங்கிப் படித்துக் கையில் வைத்துக் கொண்டோம். ஆனால் ஆட்சியாளர்களுக்கு அது பொறுக்க வில்லை. இந்த நூல் ஆட்சேபகரமானது என்று, விற்பதற்கோ வாங்கி வைத்துக் கொள்வதற்கோ தடை விதிக்கப்பட்டது. ஆனால் அந்தத் தடையை யாரும் பொருட்படுத்தவில்லை.

அசோகனும், அக்பரும், சிவாஜியும் நம் நாட்டின் ஒருமைப்பாட்டை உணர்ந்து அதை நிலைநாட்டப் பார்த்தார்கள். நம் ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஆசாரியார்களும் இமயம் முதல் குமரி வரையில் சஞ்சாரம் செய்து அதுதான் நம் நாடு என்று நமக்கு உணர்த்தினார்கள்.


ஆதிசங்கரர் காஷ்மீரத்தில் ஸ்ரீநகரிலுள்ள மலையின் உச்சியின் மீது ஒரு கோயிலை ஸ்தாபித்தார். ஆழ்வார்களும் நாயன்மார்களும் மங்களாசாஸனம் செய்த திருக்கோயில்கள் வடகோடியிலிருந்து தென் கோடி வரையில் பாரதம் முழுதும் பரவியிருக்கின்றன.

நம் நாட்டின் ஒருமைப்பாட்டை வற்புறுத்துவது நம் கலாசாரமே. ஸ்ரீராம நவமியோ அல்லது நவராத்திரியோ அல்லது தீபாவளியோ அல்லது பொங்கல் பண்டிகையோ பாரதம் எங்கும் கொண்டாடப்படுவதை நாம் காண்கிறோம்.

பொங்கல் பண்டிகை தமிழ் மக்களின் ஏகபோக உரிமை என்று சிலர் நினைக்கிறார்கள். நான் ஒரு முறை சங்கராந்தி அன்று காலையில் உதயபுரியில் ரயில் ஏறி அகமதாபாத் செல்ல வேண்டியிருந்தது. அன்று முற்பகலில் ஒவ்வொரு ரயில்வே நிலையத்திலும் நான் கண்டது கையில் ஒரு கரும்புக் கோலோடு ரயிலுக்கு வருகின்றவர்களையும் போகிறவர்களையும் நான் கண்டேன்.



ராமேசுவரத்துக்கு அழைப்போம்!



மராட்டியர்கள் விநாயக சதுர்த்தியை ஒரு தேசிய விழாவாக, கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள். கார்த்திகைப் பண்டிகை அன்று ஒரு முறை நான் தில்லியில் இருந்தேன். தீபம் வைப்பதற்கு மண் அகல்களை ஹிந்திக்காரர்கள் அதிகமாக வாங்குவதை நான் பார்த்தேன். காசி க்ஷேத்திரமும் ராமேசுவரமுமே நம் நாட்டின் ஒருமைப்பாட்டைச் சித்திரிக்கின்றன. வடநாட்டினர் ராமேசுவரம் வந்து போவதும் தென்னாட்டினர் காசிக்குப் போய் வருவதும் தொன்றுதொட்டு நடைபெற்றுக் கொண்டு வருவன. டாக்டர் ராஜேந்திர பிரசாத் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, அவரை அழைத்துக் கொண்டு திருநெல்வேலி சென்றிருந்தேன். திருநெல்வேலியிலிருந்து கன்யாகுமரிக்குப் போகத் திட்டமிடப்பட்டிருந்தது. அவர் என்னிடம் கவலையோடு கேட்டார்: 'தோத்தாத்திரி ஸ்வாமி ஸ்தலம் அருகில் இருக்கிறதா?' என்று! அது நாங்குநேரி திருக்கோயிலைத்தான் குறிப்பிடுகிறது என்பது எனக்குத் தெரியும். 'கன்யாகுமரி போகிறவழியில் நாம் அந்தத் திருக் கோயிலுக்கும் செல்வோம்' என்று நான் அவருக்கு உறுதி கூறினேன். அந்தக் கோயிலில் காட்சி அளிக்கும் பெருமாள் தங்கள் குலதெய்வம் என்றும் தம்முடைய சுற்றுப் பயணத்தில் அந்தக் கோயிலுக்குத் தவறாமல் போய் வர வேண்டும் என்று தம் அன்னை கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

ராமாயணம், மகாபாரதம் போன்ற நமது இதிகாசங்கள் பாரதத்தின் பொது பொக்கிஷங்களாக விளங்குகின்றன. இவைகளை அநுபவிக்காதவர்கள் பாரதத்தில் இல்லை என்று சொல்லலாம்.

அந்நிய ஆட்சியை அகற்றக் காங்கிரஸ் தோன்றியபொழுது, அந்தத் தேசிய ஸ்தாபனம் மக்களுடைய ஒற்றுமை உணர்ச்சியை மேலும் வளர்த்தது. அந்த ஒருமைப்பாட்டின் அடிப்படையில்தான் எல்லோரும் சேர்ந்து, காங்கிரஸ் குடையின் கீழ் நின்று போராட்டம் நடத்தி வெற்றி பெற்றோம். காங்கிரஸ் வியவகாரங்களை நம் தாய் மொழியில் நடத்த வேண்டும் என்ற சீரிய வழியைக் காட்டியவர் காந்தி அடிகள், காந்தி அடிகள் தலைமைக்கு முன்பு காங்கிரஸ் சாதாரணமாக ஆங்கிலத்தில்தான் நடைபெறும். மொழிவாரிப் பிரதேசங்களும் தமிழ் நாடு காங்கிரஸ் போன்றவையும் காந்தி அடிகளின் வழியைப் பின்பற்றித்தான் ஏற்பட்டன. இது பின்னால் வந்த மொழிவாரி ராஜ்யங்களுக்கு முன்னோடியாக இருந்தது. மொழிகள் பல பேசப்பட்டாலும், வேறு வேறு சமயங்களைச் சார்ந்தவராயினும், அதுவே நம் ஒருமைப்பாட்டுக்குச் சிறப்பை அளிக்கிறது என்று ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு ஒரு முறை கூறினார். நம் அரசியல் சாஸனத்தைச் செய்த அறிஞர்கள் மத்திய அரசு பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையை வற்புறுத்தினார்கள். பரந்த இந்த நாட்டுக்கு மத்திய அரசு என்றும் மாநில ஆட்சி என்றும் இரு கோணங்களில் மக்கள் நலன் கவனிக்கப்பட வேண்டும் என்ற வகையில் ஏற்பட்டிருக்கும் அமைப்பின் தன்மையை நாம் உணர வேண்டும். இரு அரசுகளும் ஆட்சி செலுத்துவது அதே மக்களின் மீதுதான். ஆனால் இந்த ஜனநாயகத்தில் மக்கள் தங்களையே ஆண்டு கொள்ளும் தன்மையை நாம் உணருகின்றோம். மொழியால் நாம் தமிழர்கள் என்றாலும் தேசிய வகையில் நாம் பாரதப் புதல்வர்கள் என்பதை உணருகிறோம். சோவியத் யூனியனில் பிரதேசங்கள் ஒவ்வொன்றும் குடியரசு என்றே அழைக்கப்படுகிறது. எனினும், தாஷ்கண்டிலுள்ளவர்களோ, கீவ் நகரத்தில் உள்ளவர்களோ தாங்கள் ருஷ்ய மக்கள் என்பதை உணரத் தவறுவதேயில்லை. அவ்வாறே இந்நாட்டின் பல்வேறு மாநில மக்களும் தாங்கள் இந்தியர் என்பதை உணரத் தவறுவதில்லை என்றாலும் சிறு சக்திகள் இங்கும் அங்கும் நடமாடுகிற நிலையில் நாம் அப்போதைக்கப்போது நம் ஒருமைப்பாட்டு உணர்ச்சியை வற்புறுத்துவது அவசியம் ஆகும்.



அரும்பெரும் புதிய ஃபாஷன்.



லக்மே லிப்ஸ்டிக்ஸ் மற்றும் நெய்ல் இனாமல்.

ஆழ்ந்து, பளிச்சிடும் லிப்ஸ்டிக் எங்கே என்ற ஆர்வம் எங்கும். புதிய லக்மே அல்ட்ரா-க்ரீம், அல்ட்ரா-ஃப்ராஸ்ட், அல்ட்ரா-க்ளோ, லிப்ஸ்டிக்ஸ் வருகின்றன, வசீகர ஃபாஷன்களில், சிவப்பு, ஸ்கார்லட், மற்றும் பழுப்பு நிறங்களில்.

அழகுச் சிகரமாக்கும் லக்மே இனாமல்— இதைக் கண்டு மயங்குவீர்.



ஸ்பானிஷ் போர்ட்

மனம் மயக்கும் ரோஜா நிற லிப்ஸ்டிக், அதோடு ஸ்பானிஷ் போர்ட் நெய்ல் இனாமல் வேண்டுமெனக் கேளுங்கள்.

பர்கண்டி ரெட்

இந்த உற்சாகமூட்டும் ரெட் லிப்ஸ்டிக் தடவி, ஃபாஷன் உலகில் கிளர்ச்சியூட்டுங்கள். அதற்குப் பொருந்தும் பர்கண்டி ரெட் நெய்ல் இனாமலும் தடவுங்கள்.

கோன்யாக் ப்ரௌன்

இந் நிறம் உங்கள் உதடுகளையும், நகங்களையும் பிறர் போற்றச் செய்யும்.

க்ளாரெட் ரெட்


தூங்கிவழியாமல், விழிப்பூட்டித் துடிப்பூட்டும் இந் நிறத்தில், உதடுகளும், நகங்களும் துறுதுறுவென்றிருக்கும்.

லக்மே லிப்ஸ்டிக்ஸ், ஐரோப்பா, அமெரிக்கா, இன்னும் பல நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின்றன.

RADEUS/L-122

கலைகள் வளரட்டும்; ஒருமைப்பாடு கனியட்டும்!

ருக்மிணி தேவி.



இதை எழுதத் தொடங்கும் போது என் மனத்தில் முதலில் எழும் எண்ணம் பகவான் எப்பொழுது அவதாரம் எடுத்து இந்நாட்டை உய்விக்கப் போகிறுன் என்பதுதான். தேசத்தில் இன்று காண்பது போன்ற சீரழிவை நான் என்றுமே கண்டதில்லை.

பாரதப் பண்பாடு புகழ் பெற்றது. அதன் ஆன்மீகச் செல்வம் மட்டுமின்றிப் பொருளாதாரச் செல்வமும் மிகப் பிரசித்தம். மேற்கத்திய நாடுகள் நம் பொருட் செல்வத்தைப் பறித்துக் கொண்டு சென்றன. கிழக்கத்திய நாடுகள் நமது பண்பாடு, கலை, நாகரிகம், ஆன்மீகச் செல்வம், நமது ரிஷிகளின் போதனைகள் முக்கியமாகப் பகவான் புத்தரின் அருளுபதேசம் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டன. பகவான் புத்தர் தமது உடலை விடும்போது, ''இதுவும் அழியும்'' என்ருர். ''இதுவும்'' என்று அவர் குறிப்பிட்டது தமது உடலை மட்டுமல்ல, நமது கலை, பண்பாடு, சமயம் ஆகிய எல்லாவற்றையுமே குறிப்பிட்டாரோ என்று எனக்குத் தோன்றுகிறது.

எனினும், நாம் பெற்றுள்ள அறச் செல்வம் அவ்வளவு சுலபமாக அழியக் கூடியதல்ல. ஏதோ ஒரு தலைமுறையினர் அதை அலட்சியப்படுத்தினுலும் அது நம்மைவிட்டு நீங்காது என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்தியாவை முஸ்லிம்கள் ஆண்டார்கள்; பின்னர் கிறிஸ்தவர்கள் ஆண்டார்கள். மேல்நாட்டு நாகரிகம் நம்மை ஆட்கொண்டது. இருப்பினும் ஹிந்து சமயம் இவற்றில் உள்ள நல்ல அம்சங்களையெல்லாம் தனதாக்கிக் கொண்டு பட்டை தீட்டிய வைரமாக ஜொலிக்கிறது!

இன்று நமது விரோதிகள் வெளியே இருந்து வரவேண்டியதில்லை. உள்நாட்டிலேயே அவர்கள் இருக்கிருர்கள்!

என்னைப் பொறுத்தவரை மதமும் கலையும் ஒன்றே. மதம், இறைப் பற்று என்பன ஒருவனைத் தனக்குள்ளே பார்க்கச் செய்கிறது. கலை என்பது உள்ளே அவன் கண்ட தெய்விகத்தின் — வெளிப்படையான தோற்றமாகிறது. இது மெய் சிலிர்ப்பை ஏற்படுத்துகிற உண்மையாகும். இதை நாம் சரிவரப் புரிந்து கொண்டுவிட்டால் நமது கலைகளைச் சரியான முறையில் அப்பியசிக்கலாம்.

நமது பண்பாட்டுக்குப் பெரும் விரோதி அரசியல். உண்மையில் அரசியல் என்பது நம் நாட்டுக் கோடானுகோடி பாமர மக்களுக்கு இன்பத்தையும் நல்வாழ்வையும் நல்குவதாக இருக்க வேண்டும். ஆனுல் நாம் நம் சுயநலன்களைப் பெருக்கிக்கொள்வதில் மிகுந்த அக்கறை காட்டத் தொடங்கிவிட்டோம். விளைவு ஹிந்து சமயம் — எல்லாச் சமய நெறிகளுக்கும் — தாயான ஆன்மீக எண்ணம் சீரழிந்து கிடக்கிறது. அத்துடன் நமது பண்பாடும் நிலைகுலைந்து போய்விட்டது.

சுதந்திரம் அடைந்ததும் நமது அரசியல் நிர்ணயச் சட்டம் நம் நாடு 'சமயச் சார்பற்ற நாடாக இருக்கும் என்று அறிவித்தது. நமக்குச் சமயமே இருக்கக் கூடாது என்பது இதன் பொருளா? அல்லது ஹிந்து சமயம் மட்டும் ஒதுக்கப்பட வேண்டும் என்பது அர்த்தமா? ஓர் அரசியல் கட்சியின் சார்பில் தேர்தலில் நின்று வெற்றி பெற்று மந்திரியான ஒருவர் கோயில்களையும் அதை ஒட்டிய தர்ம ஸ்தாபனங்களையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஏன் ஏற்க வேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. ஏழைகளை ஏமாற்றுவது பற்றிப் பேசுகிருேம். சமயச் சார்புள்ள விஷயங்களில் எளியோர்கள் அடையும் ஏமாற்றம்கொஞ்ச நஞ்சம் அல்ல. லட்சக்கணக்கான மக்கள் — முக்கியமாக ஏழைகள் — வெய்யிலிலும் மழையிலும், பசி, பட்டினி பாராமல் குழந்தையையும் சுமந்து கொண்டு ஏழுமலையானைத் தரிசிக்க வருகிருர்கள். இந்த ஏழை மக்கள் செலுத்தும் காணிக்கைகள் மொத்தத்தில் லட்சக்கணக்கில் இருக்கின்றன. அதைக் கொண்டு ஒரு தொழிற்சாலையோ கல்லூரியோ தொடங்கப்படுகிறது. அக் கல்லூரியில் மருந்துக்குக்கூட ஹிந்து மத போதனை செய்யப்படுவதில்லை. ஏனெனில், நம் ஆட்சி மதச் சார்பற்றது!

வழிவழியாக வந்துள்ள நமது உன்னதமான கொள்கைகளில், தீவிரப் பிடிப்பும், அவற்றை நிறைவேற்றத் தைரியமும் உள்ள மக்கள் தேவை. அப்போதுதான் நாம் உண்மையான சுதந்திரம் பெற்றவர்களாவோம்.

('சுயராஜ்யா' கட்டுரையின் சுருக்கம். தமிழாக்கம்: எஸ். வி. எஸ்.)



''போதும், இனி ஒரு பிடி அவல் உண்டால் ஆபத்து!'' குசேலோபாக்யானம் — கலா க்ஷேத்திரா தயாரிப்பில் ஒரு காட்சி.

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்-கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லா-வற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பநவீனமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைந்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது ஸெல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ள-தோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—

தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)

ஒருமைப்பாட்டுக்கு அடிப்படைத் தேவைகள்:

உணவு, அழகு, புரட்சி!

கே. ஏ. அப்பாஸ்

படிப்பறிவுள்ள சராசரி இந்தியனுக்குக் கூட காளிதாசனைவிட அதிகமாக ஷேக்ஸ்பியரைப் பற்றித் தெரியும். துளசிதாஸரைவிட அதிகமாக டென்னிஸன் பற்றித் தெரியும். பிரெஞ்சு ஓவியங்களைப் பற்றித் தெரியும், ஆனல் அஜந்தா ஓவியங்களைப் பற்றி அதிகம் தெரியாது. எப்ஷ்டைன் பற்றித் தெரியும், எல்லோரா சிற்பங்களை அறியார்கள். கதகளி, பரதநாட்டியத்தை விட அதிகமாக வால்ட்ஸ், டாங்கோ பற்றித் தெரிந்து வைத்திருப்



பார்கள். இந்த ஒப்பற்ற நிலைமைக்கு நாம் ஆங்கிலக் கல்விக்கு நன்றி செலுத்தவேண்டும்!

மிக உயர்ந்த கல்வி அறிவு பெற்றுள்ள ஆயிரக் கணக்கான வட இந்தியர்கள் கதக்களி — பரதநாட்டியம் பற்றியோ, வள்ளத்தோல்—பாரதி குறித்தோ, மதுரை — மகாபலிபுரம் கோவில் சிற்பங்கள் பற்றியோ அடிப்படை விஷயங்களைக்கூட அறியார்கள்.

அதேபோல் கல்வி அறிவு பெற்றுள்ள ஆயிரம் ஆயிரம் தென் இந்தியர்களுக்கு காலிபும் இக்பாலும், மோஹன் சிங்கும், அமிர்தா பிரீதமும், பிரேம்சந்தும், சுமித்ராநந்தன் பந்தும் கேள்விப்படாத பெயர்களாயிருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

மாஸ்கோ, லெனின்கிராட் பல்கலைக் கழகங்களில்; ஏன், அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில்கூட யுவர்களும் யுவதிகளும் இந்திய மொழிகளைக் கற்கிருர்கள். ஹிந்தி, பஞ்சாபி, தமிழ், வங்க இலக்கியங்களைப் பயிலுகிருர்கள்.

ஆனல் நமது நாட்டின் பல்கலைக் கழகங்களிலே பிற மாநில மொழிகள், கலைகளைப் பற்றிச் சொல்லிக் கொடுக்கும் பிரிவுகள் எத்தனை இருக்கின்றன?

இது ஒரு குற்றச்சாட்டோ அல்லது விமர்சனமோ அல்ல. வடக்குக்கும் தெற்குக்கும் இடையே பரவலானதும் நெருக்கமானதுமான கலாசாரத் தொடர்புகள் நிலவ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவே இதைக் கூறுகிறேன்.

சர்வதேச கலாசாரத் தொடர்புகளை வளர்க்கும் உன்னத நோக்கத்துடன் பல நிறுவனங்கள் நம்மிடையே உள்ளன. இந்திய—சோவியத் கலாசாரக் கழகம், இந்திய—அராபிய நட்புறவுச் சங்கம் எல்லாம் உள்ளன. ஏன் ஒரு 'வடக்குத் தெற்கு கலாசாரக் கழகம்' அமையக் கூடாது?

வடக்குக்கும் தெற்குக்கும் ஒரு தொடர்பற்ற நிலை முன் காலத்தில் இருந்ததை நாம் புரிந்து கொள்ள முடியும். விந்திய மலைகள் இடையில் குறுக்குச் சுவராய் நின்றன. ஆனல் சாலைகளும் ரயில் பாதைகளும் வடக்கையும் தெற்கையும் இணைத்தன. சுதந்திர இயக்கம் ஓர் அரசியல் பிணைப்பையும் ஏற்படுத்தியது. அதன் உருவகமாக தென் இந்திய ராஜாஜி சுதந்திர பாரதத்தின் முதல் கவர்னர் ஜெனரலானர்; வட இந்திய நேருஜி முதல் பிரதமரானர். இன்று விந்திய மலைகள் மீதாக விமானங்கள் பறக்கின்றன. காலையில் காப்பி அருந்திவிட்டு டில்லியிலிருந்து புறப்பட்டால் காலை ஆகாரத்துக்குச் சென்னை வந்துவிடலாம். புதிய பொருளாதார சூழல் வடக்கும் தெற்கும் அடிக்கடி சந்திக்க வழி வகுத்துள்ளது. பஞ்சாப், பக்ரா — நங்கல் திட்டத்தில் நூற்றுக் கணக்கான தென்னிந்தியர்கள் வேலை பார்த்தார்கள். தெற்கே திருவனந்தபுரம் வரையில் பஞ்சாபிகள் சென்று வேலை பார்த்து வாழ்கிருர்கள்.

ஆயினும் இன்னமும் விந்திய மலைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவை பௌதிக



ரீதியில் மட்டும் குறுக்குச் சுவராக இல்லை. நட்புறவுக்கும், கலாசாரத் தொடர்புக்கும் தடுப்புச் சுவராய் உள்ளன. வடக்கையும் தெற்கையும் தனிமைப்படுத்தும் விந்திய மலைகளைக் கடந்து நாம் ஒருவரையொருவர்

புரிந்து கொள்ள வேண்டும். இதில் மதமதர்ப்போ, அறியாமையோ, துவேஷமோ காட்டக் கூடாது.

யாதும் ஊரே ...

'நான்கு கடல்களுக்குள் வாழும் அனைவரும் சகோதரர்களே' என்று பண்டைக் காலச் சீனத்தின் அறிவு கூறியது. இதையே எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ் அறிஞர் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று எடுத்துரைத்தார்.

ஆனால்இன்றையக் காலத்தின் கோலம், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நாம், பழங்காலக் கலாசாரங்களின் பெருந்தன்மை மிக்க மனிதாபிமானக் கொள்கைகளை மறந்து விட்டோம். இவ்விஷயத்தில் யாரும் இன்னொருவரைக் குற்றம் சொல்ல முடியாது. தவறே இல்லாதவன் முதலில் கல்லெறியத் துணியட்டும்!



கே. ஏ. அப்பாஸ்


பஞ்சாபிகள் வாரிஸ் ஷாவின்ஹீர் கூறியுள்ள அன்புச் செய்தியை விட்டு விட்டார்கள்; சீக்கியர்கள் குருநானக் கூறிய சகிப்புத் தன்மையை அலட்சியம் செய்தார்கள்; முஸ்லிம்கள் இஸ்லாமியத்தின் மனிதாபிமானத்தையும், உலக நோக்கையும் ஏறிட்டும் பார்ப்பதில்லை; வாரணாசி பண்டிதர்கள் கபீர்தாஸரின் நுட்பமான தத்துவங்களை மறந்தே போனார்கள்; தாகூரின் எழிலும் நயமும் மிக்க கவிதைகள் எத்தனை வங்காளிகளின் உள்ளங்களில் இன்று எதிரொலியை ஏற்படுத்துகின்றன?

இப்படியே நான் எவ்வளவோ கூறிக் கொண்டு போகலாம். நான் வலியுறுத்த விரும்பும் விஷயம் என்னவென்றால் எங்கு பார்த்தாலும், உண்மையின் குரல், அன்பின் குரல், மனிதாபிமானத்தின் குரல் ஆகியன மொழி வெறி, பிரதேசப் பித்து இவற்றின் கர்ஜனைகளில் இருக்குமிடம் தெரியாமல் மூழ்கிப் போய்விட்டன.

இந்தச் சூழலில் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு இவற்றின் தாய்மையகத்திலும் கூட 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சொற்றொடர் வெறும் கோஷமாக, தபால் தலையில் அச்சாக வேண்டிய விஷயமாக ஆகிவிட்டதில் வியப்பென்ன?

கடவுள் நம்பிக்கையும் தெய்வ பக்தியும் மாபெரும் ஆலயங்களை எழுப்பியுள்ள தமிழகத்தில், தேசத்தின் எல்லாத் திசைகளிலிருந்தும் இந்தக் கோயில்களுக்குப் பக்தர்கள்


'கல்கி' அன்பர்கள் இருவர்



அமரர் கல்கியின் நூல்களை ஜெர்மன், ரஷ்யன் போன்ற உலக மொழிகளிலும் உள்நாட்டுப் பாஷைகளிலும் மொழி பெயர்த்து அளித்தவர்கள் பலர் உள்ளனர். இன்றைக்கும் இப்பணி தொடர்கிறது.

வடக்கே பிறந்து, தமிழ் கற்று அமரர் கல்கியின் இலக்கிய நூல்களைத் தற்போது குஜராத்தியிலும் ஹிந்தியிலும் மொழிபெயர்த்து வரும் இருவரை இங்கு நேயர்களுக்கு அறிமுகப்படுத்துகிறோம்.

ஹிந்தி பேசும் பிரதேசங்களில் வசிப்பவர்களுள் தமிழ், ஹிந்தி இலக்கியங்களை ஒப்பு நோக்கி எழுதிய முதல் நபர் ராமேஷ்வர் தயாள் அக்ரவால். மீரட்டில் வசிக்கும் இவர் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவும் நோக்குடன் கம்ப ராமாயணத்தையும் துளசி ராமாயணத்தையும் ஒப்பு நோக்கி ஆராய்ச்சி நூல் எழுதி டாக்டர் பட்டமும் பெற்றிருக்கிறார். 'கம்பனின் காவியக் கொள்கை' என்ற தலைப்பில் கலைமகளில் இவர் வரைந்த கட்டுரை இலக்கிய வட்டாரங்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது. தற்போது 'சிவகாமியின் சபத'த்தை ஹிந்தியில் மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.



ஆமதாபாத்தில் வாழும் 'நவநீத் மதராஸி' 'கல்கி'யின் கள்வனின் காதலி நாவலைக் குஜராத்தியில் மொழிபெயர்க்கும் பணியை ஏற்றுச் சமீபத்தில் முடித்து விட்டார். ஏற்கெனவே சாகித்திய அகாதெமி கேட்டுக் கொண்டதன் பேரில் 'பார்த்திபன் கனவு' நூலைக் குஜராத்தியில் மொழிபெயர்த்திருக்கிறார். ''கல்கியின் எல்லா நாவல்களையும் குஜராத்தியில் மொழிபெயர்க்க வேண்டும் என்பதே என் ஆசை'' என்று கூறும் நவநீத் மதராஸி — பிறந்தது சென்னையில். ''குழந்தைப் பருவத்தை அங்கு ஆனந்தமாகக் கழித்ததன் நினைவாக 'மதராஸி' என்று பெயர் சூட்டிக்கொள்ளவில்லை; நமது நாட்டிலிருந்து குறுகிய பிரதேசப் பித்து ஒழிய வேண்டும் என்பதற்கு அடையாளமாகவும் அப்படிப் பெயர் வைத்துக் கொண்டேன்'' என்கிறார் நவநீத் மதராஸி.

விஜயம் செய்யும்போது, குறுகிய நோக்கில் மொழிப்பற்றை வளர்த்துக் கொண்டிருக்கும் துவேஷப் பிரசாரகர்களின் சிந்தனையற்ற வார்த்தைகளும் ஆவேசக்காரர்களின் சிறுபிள்ளைத்தனமான காரியங்களும் மேற்சொன்ன சொற்றொடரையே அர்த்தமற்றதாகச் செய்துவிட முயலுகின்றன.

மனிதர்களுக்கிடையே நிலவ வேண்டிய உறவுப் பான்மையை—ஒரு சர்வதேச உண்மையை — விவரிக்கும் அந்த எளிய அழகிய சொற்றொடர் வெறும் தத்துவமோ அல்லது வார்த்தை ஜாலமோ அல்ல. மக்கள் குலத்தின் ஓர் அங்கமாக இந்தியக் குடும்பம் விளங்க வேண்டியதை அற்புதமாகக் கூறுகிறது.

இதையேதான் கௌதம புத்தரின் அடிச்சுவடுகளும் அவரது சீடர்களின் அடிச்சுவடுகளும் உணர்த்துகின்றன. இந்தியாவின் ஆன்மா ராஜ்ய எல்லைகள், மாநிலங்களின் எல்லைகளுக்குள் அடங்குவதல்ல. அது உலகமெல்லாம் பரவி வியாபிப்பது.

இதையேதான் கேரளத்திலிருந்து புறப்பட்ட சங்கரரும் வலியுறுத்துகிறார். தெற்கே ராமேசுவரம், வடக்கே பத்ரிநாத், கிழக்கே பூரி ஜகந்நாத், மேற்கே துவாரகை என்று அவரது தீர்க்க தரிசனத்தில் நாலு புண்ணிய க்ஷேத்திரங்களும் அமைந்தன.







அடுத்த இதழில்

★ பாரத ஒருமைப்பாடுக்கு மட்டுமின்றி உலக ஒருமைப்பாட்டுக்கே உதவி வரும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கிழக்காசிய சுற்றுப் பயணம் பற்றிய சிறப்புக்கட்டுரை.

○

★ கிஸ்ஸிஞ்ஜர் விஜயத்தையொட்டி அவரது வாக்குச் சாதுர்யம், நகைச்சுவை குறித்த விசேஷக் கட்டுரை.

○

★ கள்ளக் கடத்தலின் மையக் கேந்திரமான பம்பாயிலிருந்து கடத்தல் மன்னர்களின் சாகஸங்கள் குறித்துக் கல்கிக்கு வந்துள்ள பிரத்தியேகக் கட்டுரை.

மூன்று எளிய வார்த்தைகள்

எனக்குத் தெரிந்த அளவில் பாரத ஒருமைப்பாடு மூன்று எளிய வார்த்தைகளில் அடங்குவதாகப் படுகிறது. இவை மனித வாழ்வின் அடிப்படை அம்சங்களை உணர்த்துவன. இந்திய ஒருமைப்பாட்டின் அடிக்கல்லே இம்மூன்றும்தாம். அவை யாவன:

உணவு — அன்றாட உணவுக்காக மனிதன் உழைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வார்த்தை.

அழகு — வாழ்க்கையைக் கலாரசனையோடு நடத்துவதிலும் கலைகளை வாழ்வோடு பிணைப்பதிலும் மனிதன் காட்டவேண்டிய அக்கறை.

புரட்சி — இன்று நிலவும் அரசியல், சமூக, பொருளாதாரச் சூழலை மாற்றி அமைக்க மனிதனுக்கு உள்ள உரிமை.

இம்மூன்று வார்த்தைகளும் இந்திய மக்களைப் பொருளாதார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஒன்று படுத்துவன.

இம்மூன்று வார்த்தைகளும் எல்லாப் பாரத மொழிகளுக்கும் பொதுவானவையும் கூட! அன்ன அல்லது அன்னம்; சௌந்தர்யம் அல்லது சுந்தரம் - இவை எல்லா மொழிகளுக்கும் பொது. மூன்றாவதான புரட்சி அல்லது இன்குவிலாப் பகத்சிங் காரணமாக நாடெங்கும் எதிரொலித்துப் பொதுச் சொல்லாகி விட்டது!


இந்திய மக்களுக்கு இன்றுள்ள பசி மூன்று வகை. உடல் பசிக்குத் தேவை உணவு. ஆன்மீகப் பசிக்குத் தேவை அழகு, உண்மை, கலாசாரம், இலக்கியம், கலைகள். மூன்றாவது பசியை ஓமார் கய்யாம் புரட்சிக்கான சூழ்ச்சியாக வர்ணிக்கிறார்:

அன்பே யானும் நீயும் இசைந்து
அயலில் எவரும் அறியாமல்
வன்பே உருவாம் விதியினையும்
வளைத்துள்ளாக்கி முயல்வோமேல்
துன்பே தொடரும் இவ்வுலகைத்
துண்டு துண்டாய் உடைத்துப் பின்
இன்பே பெருகி வளர்ந்திடுமோர்
இடமாய்ச் செய்ய இயலாதோ?

(கவிமணி மொழிபெயர்ப்பு)

(ஆங்கிலக்கட்டுரையின் தமிழாக்கம்: குட்டிகிருஷ்ணன்)


நேற்றுவரை குழந்தைகளுக்குக் கிட்டாதது
இன்று உங்கள் குழந்தைக்கு—
புதிய
டெண்டெர் கேர்
பேபி பவுடர் மென்மையான சருமத்திற்கென சரியாக பஃப்பர் செய்யப்பட்டது
மென்மையான சருமத்திற்கென சரியாக ப
செய்யப்பட்டது. உங்கள் அன்பும், ஆதரவும்
உங்கள் குழந்தைக்குக் கிட்டும் பெறும் பேறு.
எதிலுமே மிகச் சிறந்தவற்றைத்தானே உங்கள்
குழந்தைக்குத்தருகிறீர்கள்.
இதோ, உங்கள் அன்புக்கு ஒரு புதிய சின்ன
டெண்டெர் கேர். புதிய பேபி பவுடர் இன்றை
விஞ்ஞான வளர்ச்சி தரும் பரிசு. நேற்று வரை
பஃப்பர் செய்யப்படாத பவுடர்கள் குழந்தையி
மேனியைப் புண்படுத்தக் கூடும். ஆனல் புதிய
டெண்டெர் கேர் சரியாக பஃப்பர் செய்யப்
பட்டது. குழந்தையின் சருமம் சிவந்து போய்
நேரங்களில் லேசாக புண்படுவது கூட
உண்டல்லவா? இதெல்லாம் நேராமல் உங்கள்
குழந்தையை டெண்டெர் கேர் பாதுகாக்கிறது.
அதன் நிகரற்ற வியர்வை உறிஞ்சும் சக்தி உங்
குழந்தையை எப்போதும் வசதியாக, மகிழ்ச்சியு
இருக்கச் செய்கிறது.
பட்டுப் போன்ற டால்க், மிதமான நறு மணம்
எல்லாமே அதில் கவனமாக சேர்க்கப் பட்டுள்ள
உங்கள் குழந்தைக்காக. அதை 'டெண்டெர் கே
என்று அழைப்பதே அதனல்தானே.
NEW
COLGATE
tender
care
BABY POWDER
For comfort & protection
MADE IN INDIA
உங்கள் குழந்தைக்கு அன்பும், ஆதரவும்— டெண்டெர் கேர்!
CTC.G.I.TM





இனியொரு பிரிவுமில்லை; இழைநிலைப் பிழையும் இல்லை!



அந்தியில் செம்மை காட்டும்
ஆயினும் நீலம் காட்டும்
சந்தியில் வெண்மை காட்டும்
தடமழை பொழிந்த பின்னர்
சிந்திய வண்ணம் ஏழில்
வானவிற் சிறப்புக் காட்டும்
இந்தியப் பரந்த வானம்
இத்தனை எழிலும் காட்டும்!

பிரிவினில் உறவு என்றும்
பேதத்தில் ஒருமை என்றும்
கருவினில் ஒன்று என்றும்
காட்சிதான் வேறும் என்றும்
ஒரு பெரும் நாட்டின் கூறே
ஒன்பதின் மேலாம் என்றும்
திருவுலாம் பரத நாட்டை
செப்புவர் உலக மாந்தர்!

சரித்திர காலந் தொட்டு
சமயத்தால் ஒருமை கண்டும்
விரித்ததோர் தத்துவத்தின்
விதையெலாம் ஒன்றே என்றும்
பிரித்திட முடியா தாகப்
பிறந்ததோர் பரத நாட்டை
திரித்தனர்; பிளந்துவைத் தோர்
தீமைக்கே விதைவிதைத் தார்!

இனியொரு பிரிவு மில்லை
இழைநிலைப் பிழையும் இல்லை
தனியொரு நாடே எங்கள்
தாயகம் என்று வாழ்வோம்
இனமொரு இனமே என்றும்
இயல்பொரு இயல்பே என்றும்
மனமொரு மனமே என்றும்
வாழ்க்கையைத் தொடரு வோமே!

— கண்ணதாசன்



அலீஸ் ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்ருள்: 'நான் எப்படி இங்கே வந்தேன்?' நினைவுகளின் கயிற்றில் அவள் ஒரு மிதவை போன்று நகர்ந்து கொண்டிருந்தாள். பின் கட்டிலிருந்து அப்பொழுதும் சத்தம் வந்து கொண்டிருந்தது, திருமணத்துக்கு வந்திருந்த சமையல்காரர்களின் பேச்சுக் குரல்கள்.... பெரிய பெரிய பாத்திரங்களில் வெந்துகொண்டிருந்த பற்பல 'பொருள்களின்' வாசனை மூக்கைத் துளைத்தது. காஸ் விளக்கின் வெளிச்சம் கண்களைக் கூச வைத்தது.


நாளைய தினம் தங்கையின் திருமணம் நடைபெறவிருக்கிறது. அவளுக்குப் பிறகு பிறந்தவள்! அவளுக்கு எதிரில் தவழ்ந்து, தத்தித் தத்தி நடந்து பெரியவளானவள். அலீஸை விட ஸாரா ஏழு வயது இளையவள். நாளைய தினம் அவள் மணமகள்!

அவள் ஸாராவைவிட ஏழு வயது பெரியவளாக இருந்தும் என்ன பிரயோஜனம்? அவளை

•மலையாளக் கதை•

மயக்கம்

டாட்டாபுரம் சுகுமாரன்



யாரும் மணம் புரிந்துகொள்ள முன்வரமாட்டார்கள். அந்த எண்ணம் மனத்தில் உதித்தபோது அலீஸ் திடுக்கிட்டாள். அவளைப் பார்ப்பவர்கள் அனைவரும் கூறுவதுண்டு:

''தங்கையைவிட அக்கா பார்ப்பதற்கு லட்சணமாக மூக்கும் விழியுமாக இருக்கிருள்!''

''அலீஸ் முகத்தில்தான் என்ன களை!''

''இந்த அக்காவின் தங்கையா அந்த ஸாரா? அவள் மட்டும் ஏன் அழகில்லாமல் போய்விட்டாள்?''

அழகில்லாத தங்கையைத் திருமணம் செய்து கொள்ள ஒருவன் முன்வந்தான். ஆனல் அழகியான அவள் மட்டும் யாருக்கும் வேண்டாம். என்ன முரண்பாடு! அது மட்டுமா?

தங்கைக்கு வேலை இல்லை. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு இரண்டு தடவைகள் எழுதிவிட்டு அவள் வீட்டோடு இருக்கிருள்.

''பெண் வேலைக்குப் போகிருளா?'' என்று ஸாராவைப் பெண் பார்க்க வந்தவர்கள் கேட்டார்கள். வேலை இல்லை என்று தெரிய வந்ததும் முதலில் வந்த பல வரன்களும் நழுவி விட்டன.

ஆனல் அலீஸுக்கு வேலை இருந்தது. இருபதாவது வயதில் அவள் பி. ஏ. பாஸானுள். அரசாங்க அலுவலகம் ஒன்றில் வேலையும் கிடைத்தது. எட்டு ஆண்டுகளாக அவள் வேலைக்குப் போகிருள். பி. ஏ. படித்திருந்தும், அரசாங்க வேலை இருந்தும் அலீஸைத் திருமணம் செய்து கொள்ள எவருமே முன்வரவில்லை.

'தன்னை எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்' என்ற எண்ணம் எழவே, அலீஸின் விழிகளில் நீர் நிரம்பியது... பின் கட்டிலிருந்து சமையல்காரர்களின் பேச்சுக் குரல் மறுபடியும் ஒலித்தது.

வெகுநாட்களுக்கு முன்னுல் எங்கோ நடந்த ஒரு விருந்தின் வரிசைகளை வருணித்துக் கொண்டிருந்தார், சமையல்கார மாத்யு அண்ணன். கேட்பதற்கு யாராவது கிடைத்தால் போதும், அவர் வாய் ஓயாது. வெற்றிலை பாக்குப் பொட்டலத்தைத்திறந்து வைத்தபடி எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் பேசிக் கொண்டே யிருப்பார். அலீஸ் காது கொடுத்துக் கேட்டாள். கோட்டயத்தில் எங்கோ எப்போதோ நடந்த ஒரு திருமண விருந்தைப் பற்றித்தான் பேச்சு. இதனை எத்தனை முறைகள் அவள் கேட்டிருப்பாள்? கேட்டுக் கேட்டுக் காது புளித்துப் போய்விட்டது. ஒருவரிடம் சொன்ன விஷயத்தை அவரிடமே திரும்பத் திரும்பச் சலிக்காமல் பன்முறை சொல்வார், மாத்யு அண்ணன். அதுதான் அவரிடம் உள்ள பெருங்குறை.

சுவையற்ற அந்தக் கதையைக் கேட்க அவள் விரும்பவில்லை. பந்தலில் குழந்தைகள் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். நான்கைந்து வருடங்களுக்குப் பிறகு தங்கை

யின் குழந்தைகளும் இப்படி ஓடியாடி விளையாட மாட்டார்களா? ஆனால் அவளுக்கு மட்டும்தான் அந்த அதிர்ஷ்டமில்லை. திருமண யோகம் இல்லாதவள் எதற்காகக் குழந்தைகளைப் பற்றி எண்ணவேண்டும்?



சமையல்கட்டிலிருந்துபெண்களின் சிரிப்பொலி எழுந்தது. மேரிப் பாட்டியின் சிரிப்பொலியை வேறாக அவளால் பகுத்தறிய முடியும். கிலுகிலுப்பையின் சத்தம் போன்றதொரு நகைப்பு! மேரி பாட்டி ஏன் சிரிக்கக் கூடாது? வாழ்க்கையைப் பற்றின எந்தக் கவலையும் அவளுக்கு இல்லை. பேரன் பேத்திகள் எடுத்தாயிற்று. இருப்பினும் அந்தச் சிரிப்பொலியைக் கேட்டாலே அவளுக்கு ஓர் அருவருப்பு! பாட்டியின் பேச்சிலும் நடத்தையிலும் ஏதோ இந்த உலகையே வென்று வெற்றி வாகை சூடியது போன்ற பாவனை!

'....வாழ்க்கையில் பெருமைப்பட்டுக் கொள்ளும்படி அப்படி ஏதாவது என்னிடம் உண்டா?' என்று அலீஸ் எண்ணிப் பார்த்தாள். அவள் காத்திருந்த இன்ப வாழ்வு அவள் தங்கைக்குக் கிடைக்கப் போகிறது!

''அக்காவுக்குக் கல்யாணம் பண்ணாமல் தங்கைக்குக் கல்யாணமா?'' என்று திருமணம் நிச்சயமானபோது யாரோ கேட்க, அம்மா சிரித்துக் கொண்டே சொன்ன பதில் அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

''அவள் ஒரு நிரந்தர நோயாளி. என்ன செய்கிறது?''

'நோயாளியா? அவளுக்கு என்ன நோய்? பார்ப்பதற்கு ஆரோக்கியமாகத்தானே இருக்கிறாள்! என்ன சாப்பிட்டாலும் ஜெரிக்கிறது. எல்லோரையும் போல் அவளால் நடக்க முடிகிறது. அவளுக்கா நோய்? அப்படிச் சொல்கிறவர்களுக்குத்தான் நோய்!' — எண்ணினாள் அலீஸ் மனத்துள்.

இருப்பினும் அவள் ஒரு நோயாளி என்று எல்லோருமே சொல்கிறார்கள். ஆனால், அவளுக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது. அலுவலகத்தில்... பாதையில்... வீட்டில்.... எப்போதாவது சில போது அந்த வியாதி வருவது உண்டு என்றும் கூறுகிறார்கள்.... அவளைப் பொறுத்தமட்டில் எல்லாமே ஒரு கனவுதான். நினைவு திரும்பும்போது அவளைச் சுற்றிலும் ஆட்கள் நிற்பது அவளுக்குத் தெரியும். அவளது நோயின் இலட்சணம் அவர்கள் சொல்லித்தான் அவளுக்குத் தெரிய வந்தது.

''அலீஸ்! நாங்கள் ரொம்பப் பயந்து போனோம்! உன் கை நடுங்கியது. பிறகு உடல் முழுவதுமே நடுநடுங்கியது. தடால் என்று நீ கீழே விழுந்தாய். வாயிலிருந்து நுரை நுரையாக வந்தது. மூச்சு நின்று விட்டது போல் கண்கள் பிதுங்கின.....''

டாட்டாபுரம் சுகுமாரன்



இப்போதெல்லாம் அவர்கள் யாரும் அப்படிச் சொல்வதில்லை. அலீஸின் கை நடுங்க வேண்டியதுதான் தாமதம், அவளைத் தாங்கியெடுப்பதற்குக் கிளார்க்குகளுக்கிடையே பலத்த போட்டி. வெண்ணெய் போன்ற மென்மையான அவளுடைய கைகளைத் தொடுவதற்குக் கிடைக்கும் அந்த வாய்ப்பினை...

ஆக, அலீஸ் சக ஊழியர்களிடமிருந்து ஒரு செல்லப் பெயரைப் பெற்றாள்: 'மயக்க மோகினி'. இப்படித்தான் அவள் தனக்கு வலிப்பு வியாதி என்பதைத் தெரிந்து கொண்டாள். இது என்ன வியாதியோ? நோயாளிக்கு நோயைப் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் அதைப் பார்த்து நிற்பவர்கள் சகிக்க முடியாமல் தவியாய்த் தவிப்பார்கள்....

இந்த வியாதிக்குப் பயந்துதான் அவளைத்திருமணம் செய்துகொள்ள வந்தவர்கள் எல்லாம் திரும்பிப் போனார்கள்.... ஏனெனில், அவளுக்கு மயக்கம் வருவது ஊரில் அனைவருக்கும் தெரிந்திருந்தது. எத்தனையோ பெண்கள் தாங்கள் உடுத்தியிருக்கும் ஆடைகளுக்குள்ளேயும் உடலுக்குள்ளேயும்வியாதியைச் சுமக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் கணவர்கள் வாய்க்கிறார்கள். ஆனால், இருபத்தெட்டு வயதாகியும் அலீஸ் ஒரு கன்னிப் பெண்.

ஒருமைப்பாடு தீவு!

அமெரிக்காவைச் சேர்ந்த தீவு ஹவாய். அந்த மாநில கவர்னர் ஐரிஷ்காரர். மேயர் ஹவாய் இனத்தவர். பிரதம நீதிபதி ஹவாய்க் காரர். சட்டமன்றத் தலைவர் போர்ச்சுகீஸியர். முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் ஜப்பான் இனத்தவர். தொழில் இலாகாத் தலைவர் பிலிப்பைன்ஸ்காரர். ஹவாயிலுள்ள பெரும்பா லான மாணவர்கள் இந்தியர்கள். பல இனங்கள் இணக்கமாக வாழ முடியும் என்பதை ஹவாய் எடுத்துக் காட்டுகிறது. மேலை நாட்டு மக்களின் சொர்க்கமாகக் கருதப்படும் ஹவாயில் காண முடியா தவை: பாம்புகள் - பிரிவினைப் பாம்புகள் உள்படத்தான்!

— மனசை ப. சிதம்பரம் (ஆதாரம்: யூத் டைம்ஸ்)



இதயத்தின் சுமைகளைக் கீழே இறக்கி வைப்பதற்காக அவள் சிலுவையில் அறைந்த உருவத்துக்கு முன்னால் பல மணி நேரம் மண்டியிட்டு நின்றதுண்டு. அப்போது அவள் நினைவுக்கு வருவது அந்த நிகழ்ச்சிதான். பன்னிரண்டு ஆண்டுகள் இரத்த அழிவு வியாதியால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த பெண்ணொருத்தி, 'நான் அவர் வஸ்திரத்தை யாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்' என்று தனக்குள் எண்ணிக் கொண்டு, அவர் பின் வந்து அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். இயேசு திரும்பி அவளைப் பார்த்து: "மகளே! தைரியமாயிரு. உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியது" என்றார். அந்தநேரம் அந்தப் பெண் குணம் அடைந்தாள்.

அதைப் போலவே அவளும் குணமடைய மாட்டாளா? ஊமைக்குப் பேசும் திறனை யும் குருடனுக்கு விழியையும் கொடுத்து அவர் குணப்படுத்தினாரே!....

"அலீஸ்! அலீஸ்!"

யாரோ அவளைக் கூப்பிடுவது காதில் விழுந்தது

"அலீஸ்!"

"அலீஸ்!"

இப்போது ஒருவரல்ல, பலர் கூப்பிடுவது அவள் காதில் விழுந்தது

"இதோ, நான் இங்கே இருக்கிறேன்!"

"நீ அங்கே என்ன செய்கிறே?"

"மாட்டுக்குத் தண்ணி காட்டறேன்"

தோட்டத்துக்கருகில் உட்கார்ந்துகொண்டு ஏதேதோ எண்ண ஆரம்பித்து எவ்வளவு நேரமாயிற்று! இதனிடையே மாட்டுக்குத் தண்ணி காட்டவே மறந்து போனாள். கழுத்தையும் தலையையும் ஆட்டியவாறு மாடுகள் அவளையே பார்த்துக் கொண்டிருந் தன. அவள் தண்ணீர்த் தொட்டியைத் தள்ளி வைத்தாள்.....

'இந்தத் திருமண வீட்டில் அவள் யாரோ ஒருத்தி! யாருக்கும் வேண்டாதவள்' என்று அலீஸுக்குத் தோன்றியது. இருப்பினும், அவர்கள் அவளைத் தேடுகிறார்கள். ஆனால் யாரும் அவளுக்கு இன்பத்தின் சாளரங்களைத் திறந்து விடவில்லை. அவர்கள் காட்டும் நேசம் உதட்டளவே.

குளிர்ந்த காற்று வீசியது. மழை வரப் போகிறதா? ஐப்பசியில் இதைப் போல் எப்போதும் அடை மழை பெய்ததில்லை. தோட்டத்துக் குளம் நிரம்பியுள்ளது. எங்கும் தண்ணீர். குளத்தின் படிக்கட்டுக்கள் நீரில் மூழ்கிக் கிடக்கின்றன. தரையையும் நீரையும் பிரித்தறிவது கடினம். பாசி படிந்த நீரும் புல் மூடிய தரையும்!

'சர்க்கரைப் பந்தலில் தேன் மழை பொழிந்தபடி'.... பந்தலிலிருந்து இசை ஒலித்தது. யாரோ கிராமபோன் கொண்டு வந்திருக்கிறார்போல் இருக்கிறது. சிறுவர்களும் சிறுமியரும் அதைச் சுற்றி வட்டமிட்டு நிற்பதை அவள் கண்டாள்.

அலீஸ் இசையை வெறுத்தாள். அவள் தோட்டத்தினூடே நடந்தாள். சங்கீதத்தின் சில் வண்டுகள் அவளைப் பின்தொடர்ந்தன. இந்த மகிழ்ச்சி ஆரவார உலகிலிருந்து ஓடிப் போய்விட வேண்டும் போல் இருந்தது. அவளுக்கு மூச்சுத் திணறியது.

பளிச்சென்று மின்னல் மின்னவே அவள் வானத்தில் ஒளிக்கோடொன்றைக் கண்டாள். அப்போது அவளுக்கு மணமகளின் வெண்மை யான ஆடை நினைவுக்கு வந்தது. 'நாளைய தினம் தூய வெள்ளை ஆடைகளை அணிந்து ஸாரா மாதா கோயிலுக்குப் போவாள். மெல்லிய மஸ்லின் ஜிப்பாவும் எட்டு முழ ஜரிகை வேஷ்டியும் உடுத்திய தாமஸ் ஸாரா வின் கழுத்தில் தாலி கட்டுவார். 'தங்காய்! நீ வாழ்க!' ஆனால் என்ன காரணமோ அவள் அந்தக் காட்சியைப் பார்க்க விரும்பவில்லை. தங்கையை அவள் உளமார நேசிக்கிறாள் என்பது உண்மைதான்.... இருந்தும்...


திருமண வீடு ஒரு தேன் கூடாக மாறி இருந்தது. அந்தக் கூட்டில் அவள் இருப்பாளே யானால் அவளுக்கு மூச்சுத் திணறும் என்பது திண்ணம். விடுதலை எங்கே? இசை ஒலிப்பது நின்றபோது அவள் திரும்பவும் தொழுவத்

ஒருமைப்பாடா? ஒற்றுமைக் குலைவா?




"உறவுக்குக் கைகொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம்!"

சிவசேனு தலைவர் பால் தாகர்ஸே.





மாநில சுயாட்சி பற்றி விளக்க நூல் எழுதியுள்ள மாறன்.



1953க்கு முற்பட்ட நிலைக்குக் காஷ்மீரம் திரும்ப வேண்டும் என்று பிடிவாதம் செய்யும் ஷேக் அப்துல்லா.

தமிழர் படைத் தலைவர் மதுரை முத்து.





கன்னடியர்களின் நலனைக் காப்பதாகக் கூறிக் கொண்டு புறப்பட்டிருக்கும் திரு வட்டல் நாகராஜ்.

தின் வராந்தாவின் மீது ஏறி நின்ருள். பிறகு அங்கே இருந்த சிமிட்டித் தொட்டியின் மீது வெகுநேரம் உட்கார்ந்திருந்தாள். அங்கிருந்து பார்த்தால் நிரம்பி வழியும் குளத்தைக் காண முடியும். பாசி படிந்த நீரும் புல் மூடின தரையும். நிலவொளியில்லாத இரவுகளில் அந்தக் குளம் ஒரு பிசாசின் வாயைப் போல.....

அலீஸின் கண்கள் பிரகாசித்தன. 'அந்தக் குளத்தில் நாலு ஆட்கள் உயரத்துக்காவது நீர் இருக்கும். அதன் அரவணைப்பில் அழிவில்லாத நிம்மதி கிடைக்கும். நாளைய தினம் தங்கையின் திருமணத்தைப் பார்க்கவேண்டியிராது. எல்லாத் துயரங்களும் அந்த நீர்ப் பரப்பில் கரைந்து போகும்!

அலீஸ் பெருமூச்சுவிட்டாள். திருமண வீட்டு ஆரவாரம் அப்போதும் ஓயவில்லை. அவள் கடைசி முறையாகப் பிரியாவிடை பெறுவதைப்போல் அந்தத் திசையை நோக்கினுள்.

பிறகு, நிரம்பி வழிகின்ற அந்த நீர்ப் பரப்பை நோக்கி, ஒரு முடிவுக்கு வந்தவள் போல் அவள் உறுதியுடன் நடந்தாள்.

திடீரென்று.... அவள் கை நடுங்கியது. உடல் முழுதும் நடுங்கியது. வெட்டுண்டு சாய்ந்த மரம் போல் அலீஸ் தரையின் மீது தடாலென்று விழுந்தாள். வாயிலிருந்து எச்சிலும் நுரையும் வெளிவந்தன.... மூச்சே நின்றது போல்... கண்கள் பிதுங்கின....

அக்காவைத் தேடித் தொழுவத்துக்கு வந்த ஸாரா கூச்சலிடவே எல்லோரும் ஓடி அணைந்தார்கள். யாரோ அலீஸைத் தூக்கி எடுத்துப் போய்க் கட்டிலில் படுக்க வைத்தார்.

கண்கள் திறந்தபோது துயரம் தோய்ந்த முகத்துடன் தங்கை நின்று கொண்டிருப்பதை அலீஸ் கண்டாள். அவளுக்கு எல்லாம் தெள்ளத் தெளிவாக விளங்கியது. அவள் உயிருடன் இருக்கிறுள்; தங்கையின் திருமணத்தைக் காண்பதற்கு. தன்னைக் காப்பாற்றிய நோயிடம் அவளுக்கு அளவுகடந்த பாசம் தோன்றியது.

வெளியே பலத்த காற்று வீசியது. ஆனுல் அலீஸின் உள்ளத்தில் வீசிய புயல் ஓய்ந்திருந்தது.

தமிழாக்கம்: கே. நாராயண


பவுடரினுல் துலக்கிய பாத்திரத்தின்மீது
துலக்கிய பின்னும் பிசுக்கு
ஒட்டியிருக்கிறதா?
மாசில்லாத பளபளப்பை
வீசிட வைப்பது விம்.
பிசுக்கு இல்லை!
கசடு இல்லை!
கீறல் இல்லை!
Vim
Cleans

கட்டிக் கலைத்த கூடுகள்

கமல்ஜோஷி

''நீங்கள் விவாக ரத்து வேண்டுகிறீர்களா?'' என்று கேட்டான் விக்கிரமன்.

''ஆமாம்!''

அழகி யொருத்தி சொன்னாள், தலையைக் குனிந்து கொண்டு. அவளுக்கு வயது முப்பது—முப்பத்திரண்டு இருக்கலாம். ஆனால் மிகவும் சங்கோசமுள்ளவளாகத் தோன்றினாள்.

''கணவருக்கெதிராக ஏதாவது 'ஸ்பெசிஃபிக் சார்ஜ்' — குறிப்பான குறைபாடு?''

அழகி கண்களை அகல விரித்துப் பார்த்தாள். புதிய சாட்சி நீதிமன்றத்துச் சாட்சிக் கூண்டில் ஏறினால் பதற்றமுறுவானே, அப்படி இருந்தது அவள் பார்வை.

விக்கிரமன் மீண்டும் சொன்னான்: ''கணவனுக்கெதிராக ஆறு வகைக் குற்றங்கள் நீங்கள் சுமத்தலாம். என்ன குற்றம் சுமத்த விரும்புகிறீர்கள்? நடத்தைப் பிசகா? மந்த மூளையா? மத மாற்றமா? அல்லது...?''

''நான் எந்த வகைக் குற்றமும் சுமத்த விரும்பவில்லை. என் கணவர் நேர்மையானவர், நல்லவர்!''

''அப்படியானால் நீங்கள் ஏன் விவாக ரத்து விரும்புகிறீர்கள்? ஏதாவது 'மேனரிஸம்' உண்டா? இரவில் தூங்கும்போது பெரும் குறட்டை விடுகிறாரா? உங்களைப் பொருட்படுத்துவதில்லையா? வெறுக்கிறாரா? அல்லது தம் சிந்தனையில் மட்டுமே திளைத்திருக்கிறாரா?''

''இல்லை. அப்படியும் இல்லை. இப்பொழுது தான் இரண்டு மாதங்களுக்கு முன்பு, என்னையும் குழந்தைகளையும் ஜகந்நாதபுரிக்கு அழைத்துச்சென்று சுற்றிக் காட்டி வந்தார்.''

''குழந்தைகளா? உங்களுக்குக் குழந்தைகள் இருக்கின்றனவா?''

''ஆம், ஒரு பெண்ணும் பையனும் இருக்கிறார்கள். பள்ளியில் படிக்கிறார்கள்.''

''அப்படியானால் இந்த விவாகரத்து எதற்கு? நீங்கள் வேறு யாரையாவது காதலிக்கிறீர்களா? உங்கள் வாழ்வில் உங்களுக்கு இன்பமே கிட்டுவதில்லை போல் தோன்றுகிறதா?''

''ஆம், அப்படித்தான். நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். எனக்கு என் கணவரிடம் அன்பு உண்டு. ஆனால் அவரைக் காட்டிலும் இன்னொருவரிடம் அதிக அன்பு கொண்டிருக்கிறேன். தவறாக எண்ணாதீர்கள். நான் நிலையைத் தெளிவாக விளக்கி விடுகிறேன். அந்த இன்னொருவர் என் கணவருடைய மாணக்கர். வயதில் என்னைக் காட்டிலும் சிறியவர். ஆனால் அன்புக்கும் வயதுக்கும் என்ன சம்பந்தம்?''

''நீங்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது!'' — விக்கிரமன் கூறினான்: ''அன்பு என்பது மனத்தின் ஒரு நிலை. 'ஸ்டேட் ஆஃப் மைண்ட்'. யாருக்கு எது எப்போது பிடிக்கும் என்று யாராலும் சொல்ல முடியாது. காதல் ஒரு பச்சோந்தி. அது அடிக்கடி நிறம் மாறும் என்பதே என் கருத்தும்கூட. நீங்கள் மிகவும் 'போல்ட்' — துணிச்சல்காரர்!''

ஒரு கணம் மௌனம் சாதித்த விக்கிரமன் மீண்டும் தொடர்ந்தான்: ''தங்கள் கணவரிடமோ மனைவியிடமோ அன்பு இல்லை என்னும் உண்மையை ஒப்புக்கொள்ளச் சிலர் சங்கோசப்படுகிறார்கள். நீங்கள் அதற்கு விதிவிலக்கு. நான் உங்கள் கேஸை எடுத்துக் கொள்ளுகிறேன்!''

''ஆனால் குற்றம்...? என்ன சுமத்துவது என்றுதான் எனக்கு விளங்கவில்லை.''

''எனக்கு யோசிக்க அவகாசம் கொடுங்கள். அதோ சின்னப் புஸ்தகம் ஒன்று இருக்கிறது, பாருங்கள். 'தி ஹிந்து மாரியேஜ் ஆக்ட் 1955' அதற்கு அபார ஆற்றல் உண்டு. ஏதாவது ஒரு 'சார்ஜ்' — குற்றம் சுமத்த அது வழி கூறும். விவாக ரத்துக் கிடைத்து விட்டதாகவே நீங்கள் நம்பலாம். அதற்கு முன் ஜுடீஷியல் ஸெபரேஷன் — 'நீதிபூர்வமான பிரிவு' பெற்றுக் கொண்டு விடுங்கள். மனத்தில் விரிசல் ஏற்பட்டு விட்டால் அதை மெழுகி மூடி மறைக்க முயலாமல் இருப்பதே நல்லது. வாழ்வில் புதுத் தொடக்கத்தைப் புது முறையில் ஆரம்பித்து விட்டுப் போங்கள்!'' என்றான் விக்கிரமன்.

* * *

ஒரே ஒரு ஆசாமிக்கு மட்டும் விக்கிரமனால் இவ்விஷயங்களை விளங்க வைக்க முடியவில்லை. அவள்தான் அவன் மனைவி நீரு. பிராக்டிஸ் தொடங்கிய பொழுதே விக்கிரமனுக்குத் திருமணம் ஆகிவிட்டது. 'திருமணம் செய்து கொள்வது நல்லது. ஏனென்றால் இந்த வழக்கறிஞர் தொழில் இருக்கிறதே, இது மிகவும் 'இன்டிவிஜுவலிஸ்ட்' தனித்தன்மை வாய்ந்தது. தனித்திருந்தால் 'போர்' அடித்துப் போய்விடும். மனைவி இருந்தால் அவள் ஊக்கிக் கொண்டே இருப்பாள். துடுப்பு இல்லாமல் படகு ஓடுமா?'' என்று அவன் சீனியர் அடிக்கடி சொல்வார்.



இப்படி ஒரு தூண்டுதல் இல்லாவிட்டாலும் விக்கிரமன் திருமணம் செய்து கொள்ளுகிறவன்தான்! அதுவும் காதல் கல்யாணம். கல்லூரியில் படித்து வந்தபோதே காதல் சுழலில் சிக்கிக் கொண்டான் அவன். சட்டப் பரீட்சை தேறும்வரைகூட இந்தக் காதலுக்குப் பொறுமை இருக்கும் என்று தோன்றவில்லை. கல்யாணம் செய்துகொள்ளத் துடித்தது. 'பாரி'ல் சேரும்வரை எப்படியோ அதன் துடிப்பை அடக்கினான். அப்புறம் அது அவனை அடக்கிக் கல்யாண புருஷனாக்கி வைத்தது.

'பானை பிடித்தவள் பாக்கியம்! அவள் காரணமாகத்தான் உனக்குப் பொருளும் புகழும் கிடைக்கின்றன' என்று அவன் நண்பர்கள் பார்க்கும் போதெல்லாம் கூறுவார்கள்.

ஆனால் நீனாவின் முகத்தில்தான் சிரிப்பையே பார்க்க முடியவில்லை. "கட்டிய கூட்டைக் கலைப்பதுதான் உங்கள் வேலையா? இன்று எத்தனை கூட்டை அழித்தீர்கள்?" என்று அவன் நீதிமன்றத்திலிருந்து திரும்பி வந்ததும் வராததுமாகக் கடிவாள்.

விக்கிரமன், "நான் எதற்குக் கட்டிய கூட்டைக் கலைக்கிறேன்? புதிய கூடு கட்டுவதற்காகத்தானே?" என்று சிரித்து மழுப்புவான்.

"ஆமாம், மனிதர்களின் மனம் வெறும் களிமண்ணா, என்ன? ஒரு பொருளைச் செய்துவிட்டு அதை உடைத்து, மீண்டும் தட்டிக் கொட்டிப் பிசைந்து சரிசெய்வதற்கு?"

"மண் இல்லை யென்றால் என்ன அசைக்க முடியாத உறுதிமிகு கல்லோ? மனசு ஒரு 'டைனமிக்'—அதாவது சலன-யந்திரம். மனிதன் உயிர் வாழ்கிறான் என்பதற்கு இதுவே சான்று. உயிர் இருப்பதனால்தான் ஒரு பொருள் அசைந்து கொடுக்கிறது. ஓட்டம் தடைப்பட்டால் நீர் குட்டை ஆகி விடுகிறது. அதனால் அன்பின் ஓட்டத்திலும் மாற்றம் நிகழலாம்."

"அன்பு என்பது காய்கறி, கீரையா? அழுகிப் பழசாவதற்கு? உண்மையான அன்புக்கு மாற்றமே கிடையாது."

"முதற் பிறைச் சந்திரன் முழுப் பிறையின்போது பழசாகி விடுகிறானா?" என்பான் விக்கிரமன்.

"இதெல்லாம் கட்சிக்காரர்களைத் திசை திருப்பி விடுகிற விஷயம்."

"ஆனாலும் உண்மைதானே? மனம் முறியும் — முறிய வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனால் முறிந்தால் அதை நாம் ஏன் இயல்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றுதான் கேட்கிறேன். பழைய இயந்திரங்களை மாற்றுவது போலத் தேய்ந்து போன பழைய காதலையும் மாற்றலாம். மாற்ற முடியாது என்று கூறுவது வெறும் வெளி வேஷம். ஏமாற்றுச் சொல். இதை நீ ஏற்கவில்லையா?"

"முடியாது, ஏற்க முடியாது!"

விக்கிரமனின் கட்சிக்காரர்கள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருந்தார்கள். அவன் உடலும் அதற்கேற்ப வளர்ந்து வந்தது. பணமும் கூடத்தான். விக்கிரமன் தன் பீஸை எவ்வளவோ உயர்த்தி விட்டான். அப்படியும் கட்சிக்காரர்களின் வருகை குறையவில்லை.

முன்பெல்லாம், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை கொண்டாடுவான் விக்கிரமன். நீனாவை எங்காவது அழைத்துச் செல்வான். சினிமா, அது இது என்று! இப்பொழுது அதுவும் நின்று விட்டது. ஞாயிற்றுக் கிழமையிலும் கூடக் கட்சிக்காரர்கள் வரத் தொடங்கியதுதான் காரணம்.

இத்தனை மனிதர்களா விவாகரத்துக் கோருகிறார்கள்?

எப்பொழுதாவது முந்திய சீனியரை விக்கிரமன் சந்திப்பது உண்டு. "பிராக்டிஸ் நன்றாக நடக்கிறதல்லவா? நீ எப்படி இருக்கிறாய்? உன் வீட்டுக்காரி எப்படி இருக்கிறாள்? அவள் பலே அதிர்ஷ்டக்காரியப்பா!" என்பார் அவர்.

விக்கிரமனுக்கு அது ஆறுதலாகப் படும். "ஆனால், சார்! நீனா ஒப்புக்கொள்ளவேமாட்டேன் என்கிறாள். அவளுக்கு இது கட்டிய கூட்டைக் கலைப்பதாகத்தான் படுகிறது. விவாக ரத்திலும் ஒரு தத்துவம் இருக்கிறது என்பதை அவள் ஏனோ ஏற்கவில்லை!" என்பான்.


"வக்கீல் தொழில் என்பது காகங்களின் வாழ்க்கைக்கு ஒப்பானது. காக்கைகள் இருப்பதனால்தான் உலகில் அசுத்தங்கள் குறைகின்றன. அதற்காக யாராவது காகங்களைப் பாராட்டுகிறார்களா?" என்பார் சீனியர். விக்கிரமனுக்கு உச்சி குளிர்ந்து விடும்.

அந்தப் பெண்மணி மீண்டும் வந்தாள்.

"நான் உங்கள் கேஸை நன்றாக 'ஸ்டடி' செய்து விட்டேன். சட்டத்தின் பத்தாவது 'பி' பிரிவைப் படிக்கிறேன், கேளுங்கள். 'எனி பர்ஸன் ஹூ ஹேஸ் ட்ரீடட் தி பெடிஷனர் வித் ஸச் க்ரூயல்டி ஸோ ஆஸ் டு காஸ் எ ரீஸனபள் அப்ரஹென்ஷன் இன் தி மைண்ட்...'

"நீங்கள் இந்தக் 'குரூயல்டி'யை மீண்டும் ஏன் இழுக்கிறீர்கள்? 'குரூயல்டி' என்றால் கொடுமை அல்லவா?"

"கொடுமைதான்!" என்றான் விக்கிரமன். "அடிப்பதும் உதைப்பதும் மட்டும் கொடுமை யல்ல. மனத்தைத் துன்புறுத்துவதும்கூடக் கொடுமைதான். இரவு பகல் எப்பொழுதும் உங்கள் கணவர் புத்தகங்களிலேயே மூழ்கி





பிரும்மச்சாரி முருகன் !

பூனாவில் பார்வதி மலை என்று ஒரு குன்று இருக்கிறது. அங்கே முருகன் கோயில் கொண்டிருக்கிறான், கார்த்திகேயன் என்ற பெயரில். கோயிலுக்குள் பெண்களை அனுமதிப்பதில்லை. அதற்கு அந்த ஊர்க்காரர்கள் சொல்லுகிற காரணம் விசித்திரம். அவர்கள் கருத்துப்படி முருகன் திருமணம் ஆகாத பிரம்மச்சாரிக் கடவுள். அவர் பெண்களைப் பார்ப்பதும் பெண்கள் அவரைப் பார்ப்பதும் வேண்டாத காரியம் !



மாமிச நிவேதனம் !

பூரி ஜகந்நாதர் கோயிலில் விமலாதேவி என்னும் தெய்வத்துக்கு ஒரு கோயில் இருக்கிறது. இத்தெய்வத்துக்கு ஆண்டிலே மூன்று நாட்களுக்கு மட்டும் மாமிச ஆகாரத்தை நிவேதனமாகப் படைக்கிறார்கள். துர்க்கா பூஜையின்போது இந்த நிவேதனம் நடக்கிறது. ஆடு, மீன், இவற்றை அர்ப்பணிக்கிறார்கள். நைவேத்தியமாக வரும் மீனை நரேந்திர குளம் என்கிற குளத்திலிருந்துதான் பிடித்து வர வேண்டும். அந்தக் குளத்தில் வேறு யாரும் மீன் பிடிக்கக் கூடாது.

- மயிலன்

யிருக்கிறார் என்று நீங்கள்தானே சொன்னீர்கள்? குடும்ப விஷயங்களில் அக்கறை காட்டுவதில்லை. குழந்தைகளைக் கொஞ்சுவதில்லை என்றெல்லாம் சொன்னீர்களே! இந்த 'அபெதி' — அதாவது அலட்சியமும் கூட ஒரு வகையில் பெருங் கொடுமைதான். திருமண விலக்கு மட்டும் என்ன, அதற்கான செலவும்கூட அவர் தரவேண்டும்!''

''செலவை வாங்கிக்கொள்வதால் என்ன பலன்? அவருடன் இணைந்து வாழ்வதில்லை என்று தீர்மானித்த பின் அது எதற்கு? அன்பின் மதிப்புத் தெரியாதவரிடம் பணத்தை அதற்கு விலையாகப் பெறுவதில் என்ன பெருமை? எனக்குப் பணம் காசில் ஆசையில்லை. விபினுடைய அன்பே எனக்கு லட்சம் ரூபாயைக் காட்டிலும் பெரிசு; மேலானது. அரசாங்கக் கல்லூரியில் அவருக்கு வேலை கிடைத்து விட்டது. எங்கள் வாழ்க்கை மகிழ்ச்சியுடன் கழிந்துவிடும்.'' என்றாள் அவள்.

''அது சரி, அதற்காக உங்களுக்குக் கிடைக்கக்கூடிய உரிமைத் தொகையை வேண்டாம் என்று விடுவானேன்?'' என்றான் விக்கிரமன்.

அப்பெண்மணியின் கணவர் எதிர் வழக்காடவில்லை. இம்முறையும் விக்கிரமனுக்கே வெற்றி கிட்டியது.

இப்பொழுது ஜுடிஷியல் ஸெபரேஷன். குழந்தைகளைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பும் செலவும் அவள் கணவர் கிரிதாரியைச் சேர்ந்தது. பெண்மணி ஜீவனாம்சத் தொகை கேட்கவில்லை.

இதுவரை விக்கிரமனுக்கு வெற்றியே கிட்டி வந்திருக்கிறது. ஒரு வழக்கிலாவது அவன் தோல்வியை எதிர் கொள்ளவில்லை. எல்லா வழக்குகளிலும் ஒருதலைப்பட்சத் தீர்ப்பே அவனுக்குக் கிட்டி வந்திருக்கிறது. சட்டம் என்பது ஒரு கூரிய அம்பு.—அதன் குறி சரியாக இருக்க வேண்டும். சரியாக எய்து விட்டால் வெற்றி உறுதி!

பீஸாக அவனுக்குக் கனத்த தொகை கிடைத்துவிட்டது. இளம் பேராசிரியர் விபினும் அப்பெண்மணியும் அவனைக் காரில் கொண்டு வந்து விட்டுப் போனார்கள். விபினுக்கு ஏக மகிழ்ச்சி !

இன்று விடுமுறைதான்; இனி இளைப்பாற வேண்டியதுதான். வெகுநாட்களாக அவனுக்கு ஓய்வே கிடைக்கவில்லை. வழக்குகளைப் பற்றிப் படித்துக் குறிப்பெடுப்பதிலேயே தினமும் இரவு ஒன்று — இரண்டு என்றுகூட மணி அடித்துவிடுவதுண்டு.

விக்கிரமன் மேலே போய் நாற்புறமும் பார்த்தான். நீனாவை எங்குமே காணோம். அவனுக்கு வியப்பாயிருந்தது. நீனாவுக்குப் பதில் வேலைக்காரன் கஜாதரன் வந்தான்.

'' அம்மா எங்கே ?''

'' டாக்ஸி கொண்டு வரச் சொன்னாங்க. கொண்டு வந்தேன். ஒரு சூட்கேஸை எடுத்துக் கொண்டு அதிலே போனாங்க !''

''ஏதாவது சொல்லிவிட்டுப் போனாங்களா? சூட்கேஸ் எடுத்துண்டு போனாங்கன்னா, எங்கே போயிருப்பாங்க ?''

''தெரியலைங்க. என்னிடம் சொல்லிவிட்டுப் போகவில்லை. ஆனால்....'' கஜாதரனுக்கு நினைவு வந்தது : ''ஒரு கடிதம் கொடுத்துட்டுப் போனாங்க !'' என்றான்.

ஒவ்வொரு சமயம் நீனா இப்படிப் போவதுண்டு. தனியாகச் சினிமாவுக்குப் போவாள். கடைகண்ணிக்குப் போவாள். அத்தை வீட்டுக்குப் போவாள். விக்கிரமன் தடை சொன்னதில்லை. இதிலே தடை சொல்ல என்ன இருக்கிறது ? தன் பொழுதை எப்படியோ போக்கிக் கொள்ளுகிறாள் அவள். விக்கிரமன்தான் அவளை எங்கும் அழைத்துப் போவதில்லை. கட்சிக்காரர்களை விட்டுவிட்டு அவனால்எங்கேவெளியே போய்வர முடிகிறது?

இந்த உலகத்தில் எந்த வேலைக்குமே ஒரு லயம் உண்டு. எதிலும் மனம் லயிக்கவில்லை என்றால், அதன் பொருள் தாளம் தவறுவ

தாகும். வேறு கவலே என்றல், சுரம் பிசகிப் போகும். ஊர்வசி எவ்வளவு அழகு! தாளம் தவறி ஆடியதனல் அவளேத் தேவர்கள் சொர்க்கத்திலிருந்து, வெளியேற்றிவிட வில்லேயா ?

ஆரம்பத்தில் நீனு விக்கிரமனேத் தன்னேடு வரவேண்டும் என்று வற்புறுத்துவாள். இப்பொழுதெல்லாம் அப்படிச் செய்வதில்லே. அவன் நடந்து கொள்வது அவளுக்குத் தவருகப் படுகிறதா, இல்லேயா என்பது விக்கிரமனுக்குத் தெரியாது. அவன் அவ்வளவு 'செண்டிமெண்டல்' ஆகிவிட்டால், அப்புறம் வக்கீல் தொழில் நடத்துவது எப்படி ?

எது எப்படிப் போனுலும் சரி, விக்கிரமனுக்கு ஒரு நம்பிக்கை, நீனு சிறந்த கற்புக்கரசி என்று ! முடியுமானல் பண்டைய காலத்து ஹிந்துப் பெண்மணிகளேப் போல் அவள் கணவனே வழிபடவே செய்வாள். இத்தனே படித்த பின்னும் நீனு விவாகரத்தில் நம்பிக்கை கொள்ளவில்லே. குடும்பம் அழிவது-அதாவது கட்டிய கூட்டைக் கலேப்பது அவளுக்குச் சற்றும் பிடிக்காத விஷயம். விக்கிரமனுடைய தர்க்கங்களில் எல்லாம் நீனு மயங்கியதில்லே; மயங்கவும் மாட்டாள்.

ஆனல் இன்று கடிதம் கொடுத்துப் போயிருக்கிருளாமே, எதற்கு? எங்கேயாவது வெளியே போய்வருவதென்றல், கடிதம் எழுதத் தேவை ? விக்கிரமன் நீனுவை முழுசாக நம்பினன்.

ஆனல் கடிதத்தைப் படித்ததும் விக்கிரமனின் விழிகள் விரிந்தது விரிந்தபடி நிலேத்து விட்டன. 'அம்மாவுடன் வேறு யாராவது இருந்தார்களா ?' என்று கஜாதரனேக் கேட்டான்.

''ஒருத்தர் இருந்தாரு ! முப்பது–முப்பத்தைந்து வயது இருக்கும். 'ஹர்பன்ஸ் ! சற்று இரு! ஒரு நிமிஷத்திலே வந்துவிடுகிறேன்!' என்றுங்க அம்மா அவரிடம்.''

''ஹர்பன்ஸ் ? என்ன பெயர் சொன்னே ? ஹர்பன்ஸா ? பார்க்கிறதற்கு எப்படி இருந்தார் ?''

''நல்ல கட்டான உடல், சிவப்பு நிறம். கண்ணுடி போட்டுக்கிட்டிருந்தாரு !''

விக்கிரமன் மறுபடியும் ஒருமுறை கடிதத்தைப் படித்தான். அதில் எழுதியிருந்தது : ''மிகுந்த யோசனேக்குப் பிறகு இந்த முடிவுக்கு வந்துள்ளேன். நான் செய்த தவற்றைத் திருத்திக் கொள்ளக் காலம் கடந்துவிடவில்லே என்பதை உணர்ந்தேன். ஹர்பன்ஸும் என்னேப் போல் முன்பு யாரையோ காதலித்தவர்தான். ஆனல் கிடைத்தது...? இருவரும் ஒரே மாதிரியான துயரத்தில் உழல்பவர்கள் என்பதைக் கண்டோம். எனவே, நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் காதலிப்பது என்ற முடிவுக்கு வந்தோம்.

'' தவருக நினேக்காதீர்கள். 'காதலில் மாற்றம் ஏற்படுவதுண்டு. காதல் நிறம் மாறுவதுண்டு' என்று நீங்கள்தானே சொல்லியிருக்கிறீர்கள்! 'காதல் முறிந்தபின், அல்லது முடிந்தபின், பிறர் உண்மை அன்பு என்று நினேக்கும்படி நடந்து கொள்ளுவது வெளிவேஷம், குசும்புத்தனம்' என்றும் கூறியிருக்கிறீர்களே! உங்கள் பேச்சுக்கு இன்று மதிப்புக் கொடுப்பதாகத் தீர்மானித்து விட்டேன் !''

மரண தண்டனேயைச் செவிமடுக்கும் பொழுது; எந்த நிலே ஏற்படுமோ அந்த நிலே விக்கிரமனே ஆட்கொண்டது. நீனு! நீனுவும் கடைசியில் அவன் பேச்சை நம்பிவிட்டாளே! நீனுகூட அல்லவா காதல் மாறக் கூடும், பச்சோந்தியென நிறம் கொள்ளக்கூடும் என்று இன்று முடிவுக்கு வந்துவிட்டாள் ! தனது வாதங்கள் இதுபோன்ற பேரழிவில் கொண்டுவிடும் என்று விக்கிரமன் மனத்தால் கூட எண்ணிப் பார்த்ததில்லே.


நீதி மன்றத்தில் நீனு ஜுடீஷியல் ஸெபரேஷனுக்கு வழக்குத் தொடர்ந்தாள். அவள் தாக்கல் செய்த காரணம் கணவன் கொடுமைப்படுத்துகிறன் என்பது. விக்கிரமன் யோசித்தான். தனக்குத் தானே வக்கீலாகிக் கட்சி ஆடலாமா என்றும் எண்ணினன்.

ஆனல் விக்கிரமன் எதிர்வழக்காடவில்லே, எந்த முகத்தைத் தூக்கிக் கொண்டு அவன் நீதி மன்றத்தில் போய் நிற்க முடியும் ? சட்டத்தைச் சட்டத்தால் எதிர்க்கலாம். வெற்றி பெறவும் செய்யலாம். ஆனல் வெறுப்பாக மாறிய அன்பு மீண்டும் தன்மை மாறுமா ?

அந்தக் கணத்தில், இத்தனே நாட்களுக்குப் பிறகு விக்கிரமன் ஓர் உண்மையை உணர்ந்தான். இது வரை வழக்குகளில் அவனுக்குத் தோல்விதான் கிட்டியிருக்கிறது என்று ஊர்ஜிதமாகி விட்டது. நம்பிக்கைக்கு எதிராகப் போர் தொடுத்து அவன் பலமுறை வெற்றி கண்டிருக்கிறன். நம்பிக்கைகளே அழித்து அவநம்பிக்கைகளே வளர்ந்திருக்கிறன்.

அதனல்தான் அவனுக்கு இதுவரை வழக்குகளில் எல்லாம் சாதகமான தீர்ப்பே கிடைத்து வந்திருக்கிறது. ஆனல் உண்மையில் அப்பொழுதெல்லாம் விக்கிரமன் தோல்வியைத் தான் தழுவியிருக்கிறன் !

ஹிந்தியிலிருந்து தமிழாக்கம்: ரா. வீழிநாதன்



பேசாத தம்பிக்கு ஒரு கோயில் !

ராமாயணப் பாத்திரங்களிலே பேசாத தம்பி என்று சத்ருக்னனேப் புலவர்கள் வியப்போடு குறிப்பிடுவர்.

பேசாத இந்த அருமைத் தம்பிக்கு நம் தேசத்தில் கோயில் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லே. ஆனுலும், ஒரிஸ்ஸா மாநிலத்தில் சத்ருக்னமூர்த்திக்கு ஒரு காலத்தில் கோயில் எடுத்துச் சிறப்புச் செய்திருக்கிருர்கள்.

லட்சுமணன், பரதன், சத்ருக்னன் இம்மூன்று சகோதரர்களுக்குமே ஒரிஸ்ஸாவில் கோயில்கள் உண்டு. இவற்றில் பரதாழ்வார் கோயில் மட்டும் அதிகமாக அழிந்து போகாமல் இன்றைக்கும் இருக்கின்றது. மற்றக் கோயில்கள் காலவெள்ளத்தால் சிதிலமாகிவிட்டன.

- மயிலன்

நாலா திசையிலிருந்தும் நாடோடிக் கதைகள்

ராஜஸ்தான்

அந்தப் பையனுக்குத் தந்தை யில்லை ; தாய் தான். தாய் சிரமப்பட்டு ஆளாக்கி அவனைச் சம்பாதித்து வர அனுப்பினாள். அன்னையின் ஆணைப்படி புறப்பட்டவன் ஒரு குளக்கரையிலே லக்ஷ்மி தேவியும் மகா விஷ்ணுவும் சொக்கட்டான் ஆடிக்கொண்டு அமர்ந்திருப்பதைக் கண்டான். அருகில் அமர்ந்து வேடிக்கை பார்க்கலானான். விளையாட்டு முடிந்ததும் விஷ்ணுபகவான், பையனைப் பார்த்து, "ஆட்டத்தில் யார் ஜெயித்தார்கள், யார் தோற்றார்கள், சொல்லு!" என்றார்.

"வெற்றி லக்ஷ்மிக்குத்தான்!" என்று 'டக்'கென்று பதில் சொன்னான் பையன்.



லக்ஷ்மி தேவி மகிழ்ந்து போய் அவனுக்குத் தன் மோதிரத்தையே கழற்றிக் கொடுத்தாள்.

அதைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பிய பையனை வழியில் ஒரு கிழவன் சந்தித்தான். ஒரு தடவை பார்த்துவிட்டுத் தருவதாக மோதிரத்தை வாங்கிக் கொண்டு, பையனுக்குக் கடுக்காய் கொடுத்துவிட்டு எங்கோ ஓடி மறைந்தான் கிழவன்.

பையனுக்கு வருத்தம்தான் என்றாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் மறுநாளும் சம்பாதித்து வரப் புறப்பட்டான். அதே மரத்தடியில் விஷ்ணுவும் லக்ஷ்மியும் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தார்கள். இந்தத் தடவையும் விஷ்ணு அதே கேள்வியைக் கேட்டார். பையனும் அதே பதிலைச் சொன்னான். லக்ஷ்மிக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. விலைமதிப்பற்ற முத்துமாலை ஒன்றைப் பரிசாக அளித்தாள்.

அதை எடுத்துக்கொண்டு வீடு திரும்பியவனுக்கு வழியில் முதல் நாள் நேர்ந்த கதியே நேர்ந்தது. கிழவன் முத்து மாலையைப் பறித்துக் கொண்டு போய்விட்டான்.

சோர்ந்துபோன பையன் அன்னையிடம் போய் நடந்த விஷயத்தை நடந்தபடியே கூறினான். அவள் சொன்னாள்: "இரண்டு நாட்களும் நீ தவறு செய்து விட்டாய். நாளை நான் சொல்கிறபடி செய்!" என்றாள்.

மூன்றாம் நாள் வந்த பையனை விஷ்ணு பகவான் கேட்டார், யாருக்கு வெற்றி என்று! "தங்களுக்குத்தான்!" என்றான் அவன். "தவறாகச் சொல்கிறாய், குழந்தாய்!" என்றார் விஷ்ணு பகவான்.

"இல்லை, சென்ற இரண்டு நாட்கள்தான் தவறாகச் சொன்னேன். இன்றும் தவறு இழைக்க மாட்டேன்! கிழவனாக வந்து தட்டிப் பறித்துச் சென்றது..."

"தாங்கள்தான்!" என்று அவன் குட்டை உடைத்து விடாமல் இருக்க வேண்டுமே என்று விஷ்ணு பகவான், அவனைத் தனியாக அழைத்துக்கொண்டு போய், வேண்டியதைக் கொடுத்தார். விஷ்ணு பகவானின் பொல்லாத்தனத்தை உணர்ந்த லக்ஷ்மியும் பையனின் கெட்டிக்காரத்தனத்தை மெச்சி, அவனுக்கு லக்ஷ்மி கடாட்சம் பெருகச் செய்தாள்.

கட்வால்

பேச்சை வளர்ப்பதும், மோரை நீர் ஊற்றிப் பெருக்குவதும் பெண்களுக்குக் கைவந்த கலை.

ஒருத்தி அப்படித்தான் ஆய்ந்து ஓய்ந்து வீடு திரும்பும் தன் கணவனிடம், அவன் வாழ்க்கையில் அன்று நடந்ததைத் தோண்டித் தோண்டிக் கேட்பாள். மறுநாள் நீர்த் துறைக்குப் போகும்போது தன் தோழிகளிடம் ஒன்றுக்குப் பத்தாகக் கூட்டிச் சொல்வாள். அது கணவனின் காதுகளில் விழும்போது சிரமமாக இருக்கும். அவளது இந்தப் பழக்கத்தை எப்படிப் போக்குவது என்று தெரியாமல் திண்டாடினான் அவன்.

ஒரு நாள் ஒரு பெரிய பெட்டியுடன் வீட்டுக்குள் நுழைந்தவனை, அதில் என்ன இருக்கிறது என்று கேட்டாள். அவன் கூற மறுக்கவே, அவள் பிடிவாதம் அதிகமாயிற்று. "யாருக்கும் சொல்லக் கூடிய விஷயம் இல்லை. இருந்தாலும் உனக்கு மட்டும் காதோடு சொல்லி வைக்கிறேன்!" என்றான் கணவன்.

அவன் சொன்னதைக் கேட்டவள், வாயைத் திறக்கக் கூடாது என்று எத்தனையோ தன்னை அடக்கிக் கொண்டாள். ஆயினும் தனது அந்தரங்கத் தோழியை மறுநாள் தண்ணீர்த் துறையில் சந்தித்தபோது, 'யாரிடமும் கூறாதே!' என்று எச்சரிக்கை விடுத்துக் காதோடு காதாகச் சொல்லி வைத்தாள்.

அவள் தோழியால் அதை ஜீரணிக்க முடியவில்லை. வீடு வந்ததும் தன் கணவனுக்கு மட்டும் சொல்லி வைத்தாள். இப்படியாக அவள் சொன்னவிஷயம் சந்தி சிரிக்கலாயிற்று.

அவள் கணவன் அடுத்த ஊர்ப் பெருந்தனக்காரர் ஒருவரைக் கொன்று பெட்டியில் மூடிப்



பணத்தோடு தன் வீட்டுக்கு எடுத்து வந்திருக்கிறான் என்பதுதான் அந்தச் செய்தி.

அரசனின் காதுக்கு அந்தச் செய்தி எட்டவே, அவள் கணவனை உடனே சிறைப்படுத்தி வர உத்தரவிட்டான். காவல் துறையினரைக் கண்டவள் கதிகலங்கி ஒப்பாரி வைக்கத் தொடங்கி விட்டாள்.

''இனி அழுது என்ன பயன்? பிறரிடம் சொல்லாதே என்று உன் காதோடு சொல்லி வைத்த விஷயத்தை இப்படி ஊர றியச்செய்து விட்டாயே! படு, நன்றாக அவஸ்தைப்படு!'' என்று கூறிவிட்டுக் காவல் துறையினருடன் அரச அவைக்குச் சென்றான் அவள் கணவன். அவன் முகத்தில் துளிக்கூடக் கலக்கம் இல்லை. மகிழ்ச்சியே தாண்டவமாடியது.

அரசனுக்கு ஆத்திரம், செய்கிற காரியத்தையும் செய்துவிட்டுச் சந்தோஷம் ஒருகேடா என்று!

''அரசே! பெண்களின் வயிற்றில் எந்த ரகசியமும் சரிப்பதில்லை. எத்தனையோ கூறியும் கேளாத என் மனைவிக்குப் புத்தி புகட்ட விரும்பி அப்படிக் கூறினேனே ஒழிய நான் தவறு ஏதும் செய்யவில்லை. வேண்டுமானால் அந்தப் பெட்டியையே சோதனை போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றான்.

அவன் சொன்னது உண்மையாக இருக்கவே, அவனை விடுதலை செய்து விட்டான் அரசன். ஆனால் தன் அரசியிடம் படிந்துள்ள இதே சுபாவத்தை எப்படிப் போக்குவது என்று தலையைப் பிடித்துக் கொண்டான்.

குஜராத்

குஜராத்தில் சம்பானேர் என்னும் கோட்டையை மகம்மது ஷா பேகடா என்பவன் ஆண்டு வந்தான். அவன் அவையில் வியாஸ் என்று ஓர் அந்தணன் இருந்தான். மன்னனுக்கு அவனிடம் அபாரப் பிரியம். அதைக் காணப் பொறுக்காத மற்ற அவையோர்கள், ''விடியற்காலையில் அந்தணனின் முகத்தில் விழிப்பவர்கள் நரகத்துக்குப் போவார்கள். எனவே, வியாஸை வெளியேற்றிவிடுங்கள்!'' என்றார்கள்.



மனம் இல்லை என்றாலும் மாறு சொல்லாமல் மன்னன் வியாஸைக் கடி கிராமம் என்ற சிற்றூருக்கு அனுப்பி வைத்தான். அவன் போனபின் மன்னனுக்குப் பொழுதே போகவில்லை. பொறாமையால்தான் அவையோர்கள் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்று தீர்மானித்தான். அவையோர்களை அசடர்களாக்கி வியாஸை மீண்டும் அழைத்து வந்து விடுவது என்று திட்டமிட்டு நான்கு கேள்விகள் கேட்டான்: ''அனைத்துக்கும் வித்து எது? அனைத்துக்கும் சுவை கூட்டுவது எது? நன்றி உணர்வு, நன்றிகெட்ட தன்மை என்றால் என்ன?''

அவையில் உள்ள முல்லாக்களால் பதில் கூற முடியாமற்போகவே வியாஸை வரவழைத்தான். அதே கேள்விகளைக் கேட்டான். நீர், உப்பு, நாய், புது மாப்பிள்ளை ஆகியவற்றோடு வந்தான் வியாஸ்.

''என்ன கேலியா செய்கிறாய்?'' என்று மன்னன் கடிந்தான்.

''இல்லை அரசே! அனைத்துக்கும் வித்து நீர்! நீரின் உதவியின்றி ஒரு விதையும் முளைப்பதில்லை. உயிரினமும் வாழ்வதில்லை. 'உப்பு இல்லாப் பண்டம் குப்பையிலே' என்று வேறு சொல்லுவார்களே, தெரியுமா? எந்தச் சுவையையும் தூக்கிக் காட்டுவது உப்பு! அதனால் எல்லாச் சுவைகளுக்கும் ஆதாரச் சுவை உப்பு என்று கூறலாம். நன்றி உணர்வுக்கு நாயைக் காட்டிலும் நல்ல உதாரணம் காட்ட முடியாது. ஒருவன் விட்டெறியும் எச்சிற் கலத்தைத் தின்றாலும், அது அவனிடம் எவ்வளவு நன்றி விசுவாசம் பாராட்டுகிறது? மாப்பிள்ளைகள் கோபித்துக் கொள்ளக் கூடாது. நன்றி கெட்டவர்கள் இந்த மாப்பிள்ளைகள்தாம். கண்ணைப் போன்ற பெண்ணையும் கொடுத்துச் சீர் வரிசைகள் பல செய்தாலும் அவர்களுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை. கன்யா ராசியில் பத்தாம் இடத்தில் உட்கார்ந்துகொண்டு ஒரு நிமிடம் மகிழ்வதும் மறு நிமிடம் கோபிப்பதுமாக இருக்கிறார்களே, இவர்களைக் காட்டிலும் நன்றி கெட்ட ஜன்மம் உண்டா?'' என்று கேட்டான் வியாஸ்.

''நாளைய நரகத்துக்குப் பயந்து இன்றைய மகிழ்ச்சியை என்னால் துறக்க முடியாது!'' என்று கூறி, முன்னைக் காட்டிலும் ஒரு படி மேலான மதிப்புடன் அவனைத் தன்னிடமே வைத்துக் கொண்டான் மகம்மது ஷா பேகடா.

தமிழ்நாடு

''கங்கையில் நீராடுவதனால் பாபங்கள் தொலைகின்றன. காசியில் வசிப்பதனால் முக்தி கிடைக்கிறது என்கிறார்களே! உங்களுக்கு இதில் நம்பிக்கை உண்டா?'' என்று கேட்டாள் பார்வதி தேவி.

''உண்டு. இதில் உனக்குச் சந்தேகம் எழக் காரணம்....?'' பரமசிவன் கேட்டார்.

''இத்தனை மக்கள் அன்றாடம் நீராடுகிறார்களே! இவர்களுக்கெல்லாமே மோட்சம் கிடைக்கும் என்றால் மோட்ச லோகத்தில் இடம் வேண்டாமா?''

''நீராடுபவர்கள் அனைவருக்குமே மோட்சம் என்றால், நரகமாகிவிடும் மோட்ச லோகம். நீராடுபவர்களுக்கு நம்பிக்கையிருந்தால்தான் இந்த விதி பொருந்தும்!'' என்றார் பரமசிவன்.

''அவர்கள் நம்பிக்கை உள்ளவர்களா, இல்லையா என்பது எப்படித் தெரியும்?''

''வா, காட்டுகிறேன்'' என்று கூறிய பரமசிவன் வயது முதிர்ந்த கிழவர் வேடம் பூண்டார்; பார்வதியைப் பாட்டி வேடம் பூண வைத்தார்.

ஸ்நான கட்டத்துக்குச் சென்றவர், கால் தடுமாறவே, நீரில் விழுந்து விட்டார். வெள்



ளம் அவரை அடித்துக் கொண்டு போக லாயிற்று.

''கிழவரைக் காப்பாற்றுங்கள்!'' என்று பார்வதி கூச்சலிட்டாள். பலர் ஓடினர், காப்பாற்ற. ஆனால் கிழவி அவர்களைத் தடுத்து, ''யார் பாவமே செய்யவில்லையோ, அவர்தான் கிழவரைத் தொடலாம். பாவிகள் தொட்டால் அவர் நீரில் மூழ்கிவிடுவார். தொட்டவர்களும்கூட மூழ்கிவிடக் கூடும்!'' என்றாள்.

ஓடினவர்கள் எல்லோரும் நின்று விட்டார்கள். தங்கள் மனத்தைத் தாங்களே தொட்டுப் பார்த்துக் கொண்டார்கள். ஏதாவது பாவம் செய்திருந்து, ஆறு தங்களையும் அடித்துக் கொண்டு போய் விட்டால்?—மோட்சம் விரும்பிகளின் மனம் இப்படிச் செயல் படவே செயலற்று நின்று விட்டனர்.

அப்பொழுது ஓர் இளைஞன் அங்குவந்தான். அவன் முகத்தில் சரியான அசட்டுக் களை தாண்டவமாடிக் கொண்டிருந்தது. விவரம் கேட்டறிந்தவன் சட்டென்று கங்கையில் குதித்தான். ''பாட்டி! கவலைப்படாதே! கங்கையில் குளித்தால் பாவங்கள் கரைந்து விடுகின்றனவாம். நான் குளித்து விட்டேன். என் பாவங்கள் தொலைந்து விட்டன. உங்கள் கணவரைப் போய் மீட்டு வந்து விடுகிறேன்'' என்று இரட்டைக் கை நீச்சல் போட்டுக் கிழவரை அணுகிக் கரையும் சேர்த்தான்.

கிழவி பொருள் பொதியச் சிரித்தாள். பார்வதி—பரமேசுவரனாக உருமாறிய பின், ''மோட்ச லோகத்தில் அவ்வளவு சுலபமாக மக்கட் பெருக்கம் ஏற்பட்டு விடாது என்று நம்புகிறேன்'' என்றாள் பார்வதி.

''சுற்றி வளைப்பானேன்? மண்ணுலகத்தில் மக்கட் பெருக்கத்தைத் தடுக்க முடியாது என்று கூறிவிட்டுப் போயேன்!'' என்றார் பரமசிவன் விஷமமாக.

காஷ்மீர்


ஆதிகாலத்தில் காதலுக்குக் கண் உண்டு; அழகுக்கு வாய் உண்டு. இரண்டுமே இணைபிரியாத நண்பர்கள். காதல் அழகைப் பார்த்துப் பிரமித்து ரசிக்கும். அழகோ காதலின் குணத்தை மெச்சி மகிழும். ஒருநாள் இரண்டும் வான வீதியில் உலவிக்கொண்டிருந்தன.

அப்பொழுது பௌர்ணமிச் சந்திரன் உதயமானான். காதலின் கண்கள் சந்திரனில் சொக்கின; அதன் அழகைக் கண்டு வியந்தன.

அழகுக்குப் பொறுமையாகி விட்டது. இத்தனை நாளும் தன்னைப் பருகிக்கொண்டிருந்த காதல் சந்திரனைக் கண்டு மனத்தைப் பறிகொடுப்பதாவது என்று!

'வாய் உள்ள பிள்ளை பிழைக்கும்' என்ற பழமொழியை நம்பித் தன் அழகைத் தானே புகழ்ந்து கொண்டது; சந்திரனை மட்டம் தட்டிப் பேசியது.

காதலுக்குப் பெருங் கோபம் வந்து விட்டது. 'எது அழகோ, அதை நான் ரசிப்பேன். தடுக்க நீ




யார்?' என்றது. வாய்ச் சண்டையாகத் தொடங்கிக் கைகலப்பில் போய் முடிந்தது. அழகு ஆத்திரத்தில் காதலின் கண்களை நோண்டிவிட்டது, சந்திரனை ரசிப்பதாவது என்று! 'கண் இருந்தால்தானே நீ பிற அழகுகளை ரசிப்பாய்? கண் போன பின் என்ன செய்வாய்?' என்று கேட்டது.

'இந்த நாக்கு இருப்பதால்தானே நீ பேசுகிறாய்? உன்னைப் பற்றியே பெருமை அடித்துக் கொள்ளுகிறாய்?' என்று அழகின் நாக்கைப் பிடுங்கி வெளியே போட்டுவிட்டது காதல்.

அன்று முதல் காதல் குருடாகி விட்டது; அழகு ஊமையாகி விட்டது. இரண்டுக்கும் இடையே பகைமை உணர்வு இன்றும் தொடர்வதற்கு இதுவே காரணம்.

தொகுப்பு: அக்ஷயம்

பொழுது போக்கு



பொழுதுபோக்குக்காகச் சிலர் ஸ்டாம்பு சேகரிப்பார்கள். வேறு சிலர் ஓவியம் வரைவார்கள். இப்படி ஒவ்வொருவருக்கும் ஒரு 'ஹாபி' இருப்பது இயல்பு. உங்களிடம் அல்லது உங்கள் நண்பர்களிடம் விநோதமான ஹாபி ஏதாவது இருக்கிறதா? 'பொழுது போக்கு' என்று ஆரம்பித்துப் பின்னர் அதுவே சிலருக்குப் பயன் தருவதாக அமைந்துவிடும். அப்படி யாரையேனும் நீங்கள் அறிவீர்களா? இவை பற்றிச் சுருக்கமாக எழுதி அனுப்புங்கள். பிரசுரமாகும் குட்டிக் கட்டுரைகளுக்குப் பரிசு உண்டு. முடிவு தேதி அக்டோபர் 26உ. உறையின் மீது ''பொழுதுபோக்கு'' என்று குறிப்பிடவும். பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திருப்பி அனுப்ப இயலாது. கடிதப் போக்குவரத்துக் கிடையாது.

ஆசிரியர், கல்கி, சென்னை



சரஸ்வதி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

சரஸ்வதி பூஜையானது சரத்காலத்தில் வருகிறது. 'சரத்'காலத்தில் நிகழ்வதால்தான் இந்த நவராத்திரிக்கே 'சாரத' நவராத்திரி என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. சாரதா என்ற பெயர் சரஸ்வதி தேவிக்கும் ஏற்பட்டிருக்கிறது.

காச்மீரத்தில் பண்டிதர்கள் அதிகம், 'பண்டிட்' என்றே ஒரு ஜாதியாகச் சொல்வார்கள். மோதிலால் நேரு, ஜவாஹர்லால் நேரு எல்லாரும்கூட இப்படிப்பட்ட 'பண்டிட்'கள்தாம். அங்கே இப்படி வித்வத் கோஷ்டி நிறைய இருந்ததற்குக் காரணம் வாக் தேவியான (வாக்குத் தேவதையான) சரஸ்வதி ஆராதனை காச்மீர மண்டபத்தில் மிக அதிகமாக இருந்ததுதான். அங்கே 'சாரதா பீடம்' என்றே ஒன்று இருந்தது. பாரத தேசத்தின் மகா பண்டிதர்களும் அந்த சாரதா பீடத்தில் ஏறினாலே தங்கள் வித்வத்துக்குப் பட்டாபிஷேகம் செய்தது போல் என்று கருதினார்கள்.

நம் தமிழ்நாட்டில், தொண்டை மண்டலத்தில் இருக்கிற காஞ்சிப் பகுதிக்கும் காச்மீர மண்டலம் என்று ஒரு பெயர் இருந்திருக்கிறது. வடக்கே கிருஷ்ணன் அவதரித்த மதுரை இருந்தால், தெற்கே மீனாக்ஷி அவதரித்த மதுரை இருக்கிறது. அங்கே ஒரு பாடலிபுத்திரம் இருப்பது போலவே இங்கேயும் நடு நாட்டிலே ஒரு பாடலிபுத்திரம் உண்டு; அதுதான் திருப்பாதிரிப்புலியூர். வடக்கே காசியிருப்பது போல் இங்கும் திருநெல்வேலியில் தென்காசி இருக்கிறது. இம்மாதிரி காஞ்சி மண்டலமே தட்சிண காச்மீரம். இங்கே சரஸ்வதியின் அருள் விசேஷமாக சாந்நித்தியம் பெற்றிருக்கிறது என்பதை மூகரும் ''ஸாரஸ்வத புருஷகார ஸாம்ராஜ்யே'' என்கிறார். இந்த் மூகருக்கு சாக்ஷாத் காமாட்சியே வாக் தேவியாக வந்து அநுக்கிரகித்த விசேஷத்தால்தான் ஊமையாக இருந்த அவர் மகா கவியானார். காமாக்ஷி ஆலயத்தில் எட்டுக் கைகளோடு கூடிய பரம சுந்தரமான ஒரு சரஸ்வதி தேவிக்குச் சந்நிதி இருக்கிறது. ஆதி ஆசார்யாள் காஞ்சீபுரத்தில் சகல கலைகளிலும் தம் ஞானத்தைக் காட்டி ஸர்வக்ஞ பீடம் ஏறியது, இங்கே ஸ்தாபித்த (காமகோடி பீட) மடத்துக்கு 'சாரதா மடம்' என்றே பெயரிட்டது எல்லாம் காஞ்சிபுரத்துக்கும் சரஸ்வதிக்கும் இருக்கப்பட்ட விசேஷமான சம்பந்தத்தைக் காட்டுகின்றன.

ஆதியிலிருந்தே காஞ்சியில் 'கடிகாஸ்தானம்' என்கிற வித்தியாசாலைகள் நிறைய இருந்திருக்கின்றன. வடக்கே இருந்த நாலந்தா, தக்ஷசீலம் இவைபோல் இந்தக் கடிகா ஸ்தானங்களும் யூனிவர்சிடி போலப் பெரிதாக இருந்திருக்கின்றன. திருவல்லத்துக்கு அருகே உள்ள ஒரு கல்வெட்டில் ''கடிகை ஏழாயிரவர்'' என்று காண்பதிலிருந்து ஏழாயிரம் வித்யார்த்திகள் இங்கு கல்வி பயின்றதைத் தெரிந்துகொள்ளலாம். மைசூரில் ஷிமோகா ஜில்லாவில் ஷிகார்பூர் என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கே பிரணவேச்வரஸ்வாமி ஆலயத்தில் ஒரு மிகப் பழைய கல்வெட்டு இருக்கிறது. அதில் கி. பி. நாலாம் நூற்றாண்டில் கர்நாடகத்தை ஆண்ட மயூரவர்மன் தன் குருவான வீரசர்மனுடன் 'பல்லவேந்திரபுரி'யான காஞ்சி கடிகையில் படிக்க வந்த விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அரக்கோணத்தருகே வேலூர்பாளையத்தில் உள்ள ஒரு சம்ஸ்கிருதக் கல்வெட்டு, இன்று லோகப் பிரசித்தமாயிருக்கிற கைலாசநாதர் கோயிலை நரசிம்ம வர்மா என்கிற ராஜசிம்ம பல்லவன் கட்டினான் என்று சொல்வதற்கு முன்பாக அவன் காஞ்சிபுரத்திலிருந்த பழைய கடிகையை மீண்டும் நிறுவியதை முக்கிய விஷயமாகச் சொல்கிறது. அப்பர் சுவாமிகளும் ''கல்வியில் கரையிலாத காஞ்சி'' என்கிறார்.

மூக பஞ்சசதியின் ஆர்யா சதக சுலோகமொன்று காமாக்ஷியை சரஸ்வதியாகவே பாவிக்கிறது. 'விமலபட' என்று அது ஆரம்பமாகிறது. அதாவது மாசு மறுவே இல்லாத தூய வெள்ளைக் கலை உடுத்தியிருக்கிறாள் என்கிறார். காச்மீரம் முழுதுமே இப்படித்தான் வெண்பனி மலைகளால் மூடப்பட்டு சரஸ்வதிமயமாக இருக்கிறது. சரத்காலத்தின் விசேஷமும் இதுதான். 'சரத் சந்திரன்' என்று கவிகள் விசேஷித்துச் சொல்கிற நிலவு இந்தக் காலத்தில்தான் மிகவும் தாவள்யமாக லோகம் முழுவதற்கும் தூய சந்திரிகையை ஆடை மாதிரி போர்த்துகிறது. இந்த சரத் காலத்தில்தான் ஆகாசத்துக்கும் வெள்ளாடை போர்த்தினது போல் எங்கே பார்த்தாலும் வெண் முகில்கள் சஞ்சரிக்கின்றன. 'வித்யை'யும் அவற்றைப் போல் தாப சாந்தியாக, தூய்மையாக இருக்கும்.





• கண்கவரும் நகர்
• பண்புடைய மக்கள்
• மாண்புமிகு தலைமை

"காஞ்சிப் பெரியவாள் அநுக்கிரகத்தால் எல்லாம் மங்களகரமாக முடிந்தது. இப்போது எண்ணிப் பார்த்தால் எல்லாம் ஒரு கனவு போலிருக்கிறது. நீண்ட நாள் நினைவிருக்க வேண்டிய இனிய கனவு."

கிழக்காசியச் சுற்றுப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு திரும்பிய ஸ்ரீமதி எம். எஸ். அவர்களுக்கு பிரும்மகான சபை, கலாக்ஷேத்திரம், பாரதீய வித்யா பவன், சங்கீத வித்வத் சபை ஆகியன இணைந்து அளித்த ஒரு வரவேற்பு உபசாரத்துக்குப் பதிலளிக்கையில் ஸ்ரீ சதாசிவம் மேற்சொன்னவாறு குறிப்பிட்டார்.

அந்த இனிய கனவைக் கல்கி நேயர்களும் ஓரளவேனும் உணர்ந்து அநுபவிக்க வேண்டும் என்ற ஆவலில் ஸ்ரீமதி ராதா விசுவநாதன் அவர்களைப் பேட்டி கண்டோம். "கல்கி 15–9–74 இதழில், ஆசிய அபிவிருத்தி வங்கியில் பணியாற்றும் திரு சீனிவாசன் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார் அல்லவா? அதற்கு அதிகமாக மணிலா வைபவம் பற்றி நீங்கள் ஏதும் குறிப்பிட விரும்புகிறீர்களா?" என்று கேட்டோம்.

1. ராமான் மக்ஸைஸாய்

2. ஸ்ரீமதி மார்கோஸ், தமது ஞாபகார்த்தமாக ஸ்ரீமதி எம். எஸ்.ஸுக்கு அளிப்பதற்காக ஒரு வண்ணப்படத்தில் கையெழுத்துப் போட்டுத் தருகிறார்.

3. கிழக்காசியச் சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு புதுதில்லி சேர்ந்ததும் எடுக்கப்பட்ட படம். விமான நிலைய பஸ்ஸை விட்டு இரு பெட்டிகளுடன் இறங்கிக் கொண்டிருப்பவர் கல்கி நிறுவனத்தின் பம்பாய் பிரதிநிதி திரு கண்ணன். சதாசிவம் தம்பதி, ஸ்ரீமதி ராதாவுக்குப் பின்னால் நிற்பது காரைக்குடி மணி.

4. சென்னை சங்கீத வித்வத் சபை அரங்கில் நடைபெற்ற பாராட்டு வைபவத்தின்போது திருப்பதி தேவஸ்தானத்தின் மலர் மாலையை ஸ்ரீமதி மணி கிருஷ்ணசாமி ஸ்ரீமதி எம். எஸ். ஸுக்குச் சூட்டுகிறார்.

5. ஸ்ரீமதி இமெல்டா மார்கோஸ் கையெழுத்துப் போட்டுத் தந்த படம்.

"ஓ! பேஷாகச் சொல்லலாம்!" என்று உற்சாகமாக ஆரம்பித்தார் ஸ்ரீமதி ராதா விசுவநாதன். "முதலில் சீனிவாசன் பற்றியே கூறலாம். அவருடன் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தால் 'இவருக்குத் தெரியாத விஷயமே உலகில் இராதோ?' என்ற எண்ணம் யாருக்கும் ஏற்படும். கர்நாடக சங்கீதம் முதல் காம்பியா நாட்டின் அபிவிருத்தித் திட்டம் வரை அவர் எதைப் பற்றியும் விஷய ஞானத்துடன் பேசக்கூடியவரா யிருக்கிறார்."

"இல்லாமலா ஆசிய அபிவிருத்தி பாங்கியில் பிடித்துப் போட்டிருக்கிறார்கள்? சரி, நீங்கள் இந்தியாவிலிருந்து கிளம்பியதிலிருந்து ஆரம்பியுங்கள்" என்றோம்.

"கிளம்பியபோது ஒரே கவலை" என்றார் ஸ்ரீமதி ராதா. "ஒன்றா, இரண்டா? பல விதக் கவலைகள்! குழந்தைகளை விட்டுப் பிரிந்து வந்ததில் கவலை, பெட்டியில் உள்ள மிளகுக் குழம்பு கொட்டிக் கவிழாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை, விருது பெறும் போதும் மற்றக் கச்சேரிகளின்போதும் அம்மாவும் நானும் முத்துச் செட்டியார் கொடுத்த எந்தப் புடவையை எந்தெந்தச் சந்தர்ப்பத்துக்கு உடுத்துவது என்ற கவலை, எல்லா நிகழ்ச்சிகளும் விக்கினமின்றி நடக்க வேண்டுமே என்ற கவலை, அப்பாவுக்கோ பரிசுத் தொகையை எப்படி எந்தெந்த நிறுவனங்களுக்குப் பங்கிட்டுத் தருவது என்ற கவலை!"

இந்தக் கவலைகளெல்லாம் மணிலாவில் விமானம் தரைதட்டும் வரைதான்; அதன் பின்னர் அவர்களுக்குக் கவலைப்பட அவகாசமும் இல்லை, அதற்கு அவசியமும் இருக்கவில்லை!





மணிலாவில் எடுத்த எடுப்பிலேயே ஸ்ரீமதி ராதாவின் கவனத்தைக் கவர்ந்தது அதன் சூழ்நிலை. கிட்டத்தட்ட கேரள மாநிலம் போன்று வாழை, தென்னை செழித்து வளர்ந்திருந்தன. நகரை விட்டு வெளியே சென்ற சந்தர்ப்பங்களில் கரும்பு, பைன் ஆப்பிள், நெல் வயல்கள் முதலியனவும் கண்களுக்குக் குளிர்ச்சியாக இருந்தன.

"மக்கள் எல்லோரும் முகத்தில் ஒரு குத்து வாங்கிக் கொண்டவர்கள் போல் மூக்கு சப்பையாகக் காட்சி தருகிறார்கள். குள்ளமாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மனம் ரொம்ப உயர்ந்தது" என்றார் ஸ்ரீமதி ராதா.

விமானத்தை விட்டு இறங்கியதுமே அதை உணர முடிந்தது. தங்களது முன்னாள் ஜனாதிபதி மக்ஸய்ஸாய் பெயரால் அமைந்த விருதைப் பெறுகிறவர்களுக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொடுத்தார்கள். விருது பெறுகிறவர் எங்கு போனாலும் மெட்ரோகாம் என்னும் போலீஸ் வண்டி ஸைரன் ஊதிக் கொண்டே முன்னால் சென்றது. விருது பெறும் ஒவ்வொருவருக்கும் ஒரு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன்படி எல்லாம் நடக்குமாறு கவனித்துக்கொண்டு தேவையான உதவிகளையும் செய்ய ஒவ்வொருவருக்கும் ஒரு காரியதரிசி நியமிக்கப்பட்டிருந்தார்.

பிலிப்பைன் நாட்டவரின் பெருந்தன்மைக்குப் பெரிய உதாரணமாக விருது வழங்கும் விழாவையே குறிப்பிடலாம். ஜப்பானியரால் பிலிப்பைன் நாட்டவர் உலக யுத்தத்தின்போது அடைந்த துன்பம் கொஞ்ச



Sept. 1974

To Smt M.S. Subbulakshmi,
Hearing you sing will always be a beautiful uplifting experience for me, both mentally & spiritually. To me & I know of multitudes by others. You will be a great inspiration!

Imelda Marcos

வரசித்தி விநாயகர் கும்பாபிஷேகம்

மீனம்பாக்கம் ''ஹிந்து'' காலனியில் உள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நவக்கிரகங்களுக்கு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 28-10-74 சோமவாரம் காலை ஐந்து மணிக்கு மேல் ஏழரை மணிக்குள்ளாகத் துலா லக்னத்தில் நடைபெற இருக்கிறது. அக்டோபர் 26, 27, 28 ஆகிய மூன்று தினங்களும் நவக்கிரக ஹோமம், வாஸ்து ஹோமம் முதலிய மகா கும்பாபிஷேக வைபவங்கள் நடக்கின்றன. பக்தகோடிகள் கலந்துகொண்டு நவக்கிரகத் தேவதைகளின் அநுக்கிரகத்தைப் பெறலாம். இந்தத் தெய்விக நற்பணிக்குக் கைங்கரியம் செய்ய விரும்புவோருக்கு விலாசம் கீழே தரப்படுகிறது:

நிர்வாகிகள், ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயம், ''ஹிந்து'' காலனி, சென்னை-61.

நஞ்சமல்ல. ஆனல் ஜப்பானிய நாட்டு மாதரசி ஒருவருக்கே இவ்வாண்டு சமூகத் தலைமைக்காக மக்ஸெய்ஸாய் விருது வழங்கிக் கௌரவித்தனர்!

அம்மாதரசி மிஸ் இசிகாவா விருது பெற்றுக்கொண்டு நன்றி தெரிவிக்கையில் ஜப்பானியர் பிலிப்பைன் நாட்டவருக்கு இழைத்த கொடுமைகளை மனம் விட்டுக் கூறினர். அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மற்றொரு ஜப்பானியப் பெண்மணி அழுதேவிட்டார்!

''இந்த விதமாக விருது வழங்கும் விழாவில் மனிதாபிமானம் போட்டி போட்டுக்கொண்டு பொலிந்ததைப் பார்க்க மெய் சிலிர்த்தது'' என்ற ராதா மேலும் தொடர்ந்தார்:

''அம்மாவும் மற்றவர்களும் எந்த வழியாக வரவேண்டும், எப்படி மேடை ஏறவேண்டும், எங்கு அமர வேண்டும் என்றெல்லாம் ஒத்திகை பார்த்தார்கள். அதைத் தவிர அப்பாவும் ஜாகைக்குத் திரும்பியதும் மறுபடியும் ஒத்திகை நடத்தினர். அம்மா கூறவேண்டிய நன்றியுரையைப் படிக்கச் சொல்லிக் கேட்டார். ஆனல் ஒத்திகை ஏதும் நடத்தாமலே ஒரு விஷயம் ஆச்சரியமளிக்கும் விதமாக நடந்தது!''

வியப்பளித்த அந்த விஷயம் இதுதான்: விழாவுக்கு முன்னதாக மேடையில் பிலிப்பைன் நாட்டுக் கொடிகள் பலவற்றையும் விருது பெறுவோரின் நாட்டுக் கொடிகளையும் வீரர்கள் கொண்டு போய் வைத்தார்கள். யதேச்சையாக ஸ்ரீமதி எம். எஸ். அமரும் நாற்காலிக்கு நேர் பின்னல் நமது தேசியக் கொடி அமைந்தது!

''இதுவும் விருது வழங்கும் மக்ஸெய்ஸாய் அறக் கட்டளையின் தலைவரே (ஸ்ரீ மான்யுவல் வி. மனஹன்) அம்மாவை அவையோருக்கு அறிமுகப்படுத்தியதும் மிகுந்த மன நிறைவைத் தந்தன'' என்றார் ராதா.

மனம் நெகிழச் செய்த நிகழ்ச்சி விருது பெற்றவர்களை மணிலா நகரப் பள்ளி மாணவ மாணவிகள் பாடி மகிழ்வித்ததாகும். அந்நாட்டில் மாணவ மாணவியர் பள்ளி நாட்களிலேயே கலை ஆர்வம் மிக்கவர்களாய்த் திகழ்கிறார்கள். கல்வி தவிர ஏதேனும் ஒரு கலையிலேனும் அவர்கள் தேர்ச்சி பெறுகிறார்கள். அவர்களில் பன்னிரண்டு பேர் இந்தச் சந்தர்ப்பத்துக்கென்றே மிகுந்த பிரயாசைப்பட்டு 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா' என்ற பாரதியின் பாடலைக் கற்றுக் கோஷ்டி கானமாக ஆதி தாளம் போட்டுக் கொண்டு பாடினார்கள்!

''அம்மா நெக்குருகிப் போனள். அவள் கண்களில் நீர் பனித்து விட்டது'' என்றார் ஸ்ரீமதி ராதா. ''அதற்கு முன்னல் பட்சிகளின் கானம் என்று ஒரு பிலிப்பைன் தேசப் பாடலையே பாடினார்கள். பட்சிகள் சப்திப்பது போலவே தொனிக்கும் வார்த்தைகளைக் கொண்டிருந்த அந்தப் பாட்டு புதுமையான அனுபவமாக, ரொம்ப ரசிக்கும்படியாக இருந்தது.''

''பிலிப்பைன் மக்களைப் பற்றி ஓரளவு புரிந்து கொண்டோம்; மணிலா நகரைப் பற்றிச் சொல்லுங்கள்'' என்று ஸ்ரீமதி ராதாவிடம் கேட்டோம்.

''ரொம்ப அழகான நகரம், மிக சுத்தமான நகரம். கடற்கரையோரமாக நடைபாதைக்கருகே நீளப் புல்தரை மரகதப் பச்சையில் கம்பளம் விரித்தாற் போலிருக்கிறது. டாக்ஸிகளும் ஆட்டோ ரிக்‌ஷாக்களும் பெரிய பஸ்கள் தவிர எட்டுப் பேர் அமர்ந்து செல்லும் ஜிட்னி பஸ்களும் உண்டு. அவையெல்லாம் விதம் விதமான வர்ணங்கள் பூசப்பட்டு ஒரு கோலாகல உணர்வைச் சதா ஏற்படுத்துகின்றன. மக்களின் உற்சாக மனப்பான்மையைப் பிரதிபலிப்பதாக இது இருக்கிறது. நம்பினல் நம்புங்கள், நம்பாவிட்டால் போங்கள். இத்தகைய அழகிய ஆனந்த நகரத்தின் மேயர் ஓர் இந்தியர்!''

''அடேடே அப்படியா!'' என்று வியப்பும் பெருமையுமாகக் குரல் எழுப்பினோம்.

''ஆமாம். நாற்பது வருஷங்களாகப் பிலிப்பைன் நாட்டில் வாழ்பவர் பகத்சிங். இன்று மணிலா நகர மேயராக விளங்குகிறார். மணிலாவில் வேறு பல இந்தியர்களும் வசிக்கிறார்கள். நாங்கள் ஹரிஹரனின் விருந்தினராகத் தங்கி யிருந்தோம். அவரும் ஆசிய அபிவிருத்தி பாங்கில் பணியாற்றுபவர். எங்களிடம் ஹரிஹரன் குடும்பத்தினர் காட்டிய அன்பை மறக்கவே முடியாது. அதிலும் அவர்கள் வீட்டில் பணியாற்றும் பிலிபினோ பெண்மணி ஸ்னீதா தயாரித்தளித்த தமிழக உணவு வகைகளின் ருசி ரொம்ப நாளைக்கு நினைவிருக்கும்'' என்ற ஸ்ரீமதி ராதா மற்றொரு விநோதச் செய்தியும் தெரிவித்தார்: நாம் கோயிலுக்குப் போய்த் தேங்காய் உடைப்பது போல் பிலிபினோ மக்களும் கோயிலுக்குப் போய் அவர்களுடைய பெண் தெய்வத்துக்கு உடைக்கிறார்கள் — முட்டையை! தமிழகத்துக்கும் பிலிப்பைன்ஸுக்கும் உள்ள இன்னோர் ஒற்றுமை: புஷ்பங்கள்.

''கச்சேரிக்குக் கிளம்பும் முன்னர் அம்மா தலைக்குப் புஷ்பம் வேண்டுமே என்று நினைத்தேன். எள் என்பதற்கு முன்னர் எண்ணெயாய் நிற்கும் கண்ணன் பந்து மல்லிப் பூவுடன் எதிரே நின்றான்.

'' 'எங்கே மதுரைக்குப் பறந்து போய் வந்தாயா?' என்று கேட்டேன்.

'' 'இல்லை, இல்லை. இங்கே இதற்குப் பஞ்சமே கிடையாது. பிலிப்பைன் நாட்டின் தேசிய புஷ்பமே மல்லிதான். சம்பகீதா என்று இங்கு இதற்குப் பெயர்' என்றான்.

''உன்னை நினைத்துத்தான் பாரதியார் 'கண்ணன் என் சேவகன்' என்று பாடியிருக்க வேண்டும், போ' என்றேன்.''

ஸ்ரீமதி ராதா வேடிக்கையாக இப்படிக் கூறியிருக்கவே மாட்டார். ஏனெனில் அதில் ரொம்ப உண்மையும் இருக்கிறது. ஸ்ரீ கண்ணன் சிறுவனாயிருந்தபோது கல்கி நிறுவனத்தில் வந்து சேர்ந்து தகுதியால், திறமையால் படிப்படியாக உயர்ந்து இன்று இதன் பம்பாய் பிரதிநிதியாய் விளங்குகிறார். இந்த ஸ்தாபனத்தில் ஒரு டைரக்டரும் கூட. ஆனால் அந்தப் பெருமைகளையெல்லாம் விட ஸ்ரீ சதாசிவம் தம்பதிக்குச் சின்னச் சின்ன ஒத்தாசைகளைச் செய்வதையே இன்றும் பெரும் கௌரவமாகக் கருதுகிறவர்!

''மணிலாக் கச்சேரி பற்றிக் கூறுங்கள்'' என்று ஸ்ரீமதி ராதாவிடம் கேட்டபோது அவர் மௌனத்தில் ஆழ்ந்து போனார். மீண்டும் ஞாபகப்படுத்தியபோது, ''அந்த அற்புதத்தை எப்படி வர்ணிப்பது என்று புரியாமல்தான் வாயடைத்துப் போயிருக்கிறேன். தமது நண்பர்கள் சிலருக்கு அப்பா ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதைப் பார்த்துக் கொள்ளுங்கள், கல்கி நேயர்கள் எல்லாருமே அப்பாவின் நண்பர்கள்தாமே'' என்று கூறி மேற்படி கடிதத்தின் நகல் ஒன்றை எடுத்துத் தந்தார். அதில் ஸ்ரீ சதாசிவம் எழுதுகிறார்:

''....பிலிப்பைன் நாட்டின் முதல் பெண்மணியும் ஜனாதிபதியின் மனைவியுமான ஸ்ரீமதி இமல்டா மார்கோஸ் கச்சேரிக்கு வந்திருந்தது மிகப் பெரிய கௌரவம் என்று கூறினார்கள். ஸ்ரீமதி இமல்டா அழகும் பண்பும் ஒருருவாகி வந்தது போல் விளங்குகிறார். அவர் முன் வரிசையில் உட்காராமல் வெகு தொலைவில் அமர்ந்திருந்தார். எனவே அவர் இடைவேளையின்போது வேறு அலுவல்களைக் கவனிக்கப் போய் விடுவார் என்று அனைவரும் எண்ணினார்கள். மும்மூர்த்திகளின் மூன்று சாகித்யங்களைப் பாடி முடித்ததும் சுப்புலக்ஷ்மி வேங்கடாசலபதி பற்றிய ஒரு பாடலையும் நான்கு மீரா பஜன்களையும் பாடினாள். இதன் பிறகு ராதா பத்து நிமிஷங்கள் இடைவேளை அறிவித்தாள். ஆனால் சபையில் யாருமே இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. சுப்புலக்ஷ்மியின் கச்சேரி, ஆரம்பித்த கணத்திலிருந்து இடைவெளியற்ற இறையுணர்ச்சி மிக்க இசைப் பிரவாகமாக அமைந்து சபையினரைச் சொர்க்கத்துக்கே தூக்கிக் கொண்டு போய் விட்டது!

''ராதாவையும் அவள் தாயாரையும் பார்த்தபடி நான் முன் வரிசையில் அமர்ந்திருந்தேன். ராதா இடைவேளையை அறிவித்ததும் நான் ஸ்ரீமதி மார்கோஸுக்கு அறிமுகப்படுத்தப்பட்டேன். அவர் என்னை வரவேற்று நலம் விசாரித்துவிட்டு சுப்புலக்ஷ்மியின் இசையைக் கேட்டது தமது வாழ்நாளின் மகத்தான நேரம் என மொழிந்தார். ஒன்றரை மணி நேரம் என அறிவிக்கப்பட்ட கச்சேரி அதற்கு மேலும் ஒரு மணி நேரம் நீடித்தது. சுப்புலக்ஷ்மியும் ராதாவும் மேடையை விட்டு இறங்கியபோது ஸ்ரீமதி மார்கோஸ் அவர்களை எதிர்கொள்வது போல் முன்னால் மேடையை நோக்கி வந்தார். 'ஆன்மீக ரீதியில் என்னை உயர்த்தி விட்டீர்கள். உங்கள் பாட்டை முடிவில்லாமல் நான் கேட்டுக் கொண்டே இருக்கத் தயார்' என்றார். தொடர்ந்து அவர் தமது இதய ஆழத்திலிருந்து அன்பையும் பாராட்டுக்களையும் கொட்டிக் கொண்டேயிருந்தார். மறுநாள் பகலுணவுக்கு ஜனாதிபதியின் குடியிருப்புக்கு வரச் சொன்னார். ஸ்பானிய பாணியில் அமைந்த அரண்மனை அது. திரும்பிய பக்கமெல்லாம் அழகும் வண்ண அற்புதங்களும் உடையது.

''பகல் 12—30க்கு அரண்மனையில் இருந்தோம். ஸ்ரீமதி மார்கோஸுக்கு இடப்புறத்தில் நான் அமர்ந்திருந்தேன். சுப்புலக்ஷ்மியும் ராதாவும் அவருக்கு எதிரே இருந்தார்கள். நம்முடைய கண்ணனும் அழகர்சாமியும் காரைக்குடி மணியும் விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். ஸ்ரீமதி மார்க்கோஸினால் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அந்தராத்மாவிலிருந்து பெருக்கெடுக்கும் ஊற்றாக அவர் கச்சேரி பற்றி மூன்று மணி நேரம் வார்த்தைகளைக் கொட்டித் தீர்த்தார். மறுபடியும் மணிலாவுக்கு வந்து அரண்மனையில் தமது விருந்தினராக நாங்கள் தங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.''

கடிதத்தைப் படித்துவிட்டு, ''அம்மா ஸ்ரீமதி மார்கோஸிடம் என்ன கூறி விடை பெற்றார்?'' என்று வினவினோம்.

'' 'உங்கள் அன்புக்கு என்ன சொல்லி நன்றி தெரிவிக்க முடியும்?' என்று அம்மா கேட்டாள். அதற்கு ஸ்ரீமதி மார்கோஸ், 'நீ என்ன சொல்ல வேண்டும்? நீ என் இதயத்தில் இருக்கிறாய். அது போதாதா?' என்று கூறிவிட்டாள்.


''அந்தப் பெருந்தன்மையை எண்ணியபடியே நாங்கள் டோக்கியோவுக்கு விமானமேறினோம்'' என்றார் ஸ்ரீமதி ராதா.

(அடுத்த இதழில்: டோக்கியோ, பாங்காக், ஹாங்காங் அனுபவங்கள்.)

வருமான வழி !

அமெரிக்காவில் வருமான வரிக் கமிஷனருக்குக் கடிதம் ஒன்று வந்தது. ஐந்நூறு டாலருக்கான செக்கை அனுப்பியிருந்த அவர், ''எனது வருமான வரிக் கணக்கில் உங்களை நான் ஏமாற்றிவிட்டபடியால் எனக்குத் தூக்கமே வரவில்லை. ஐந்நூறு டாலரை என் கணக்கில் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று குறிப்பிட்டிருந்தார். கடிதத்தின் பின் குறிப்பில் கீழ்க் கண்டவாறு எழுதப்பட்டிருந்தது: ''இதற்குப் பிறகும் எனக்குத் தூக்கம் வராது போனால், மீதி ஏமாற்றிய பணத்தையும், விவரங்களையும் அனுப்புவேன்!''

ஆதாரம்: பிளேபாய் தகவல்: அம்பா மூர்த்தி




குதூகலமான தீபாவளிக்கு
சாரதாஸின்
பிரமிப்பூட்டும் டிசைன்கள்
ரஜனிபாலா
மனோரஞ்ஜனி
பவிஷ்யராணி
சாரதா'ஸ்
பட்டுப் புடவைகளுக்கு
நம்பிக்கையான இடம்
தன் பில்டிங்ஸ்,
மவுண்ட் ரோடு, சென்னை-600002.
போன் : 87177
N. S. B. ரோடு,
திருச்சி-620002,
போன் : 7077
தீபாவளி முடிய ஞாயிற்றுக் கிழமைகளிலும்
விடுமுறை நாட்களிலும் விற்பனை உண்டு.



எங்கள் குல தெய்வம்

"பால நாகம்மா" காலத்திலிருந்து "வெள்ளிக்கிழமை விரதம்" வரையில் வந்த நாகத்தைப் பற்றிய படங்களில் இதுவும் ஒன்று. முத்துராமன், கே. ஆர். விஜயா, ஜெயசித்ரா, எஸ். வி. சுப்பையா ஆகியவர்கள் இதில் நடித்திருக்கின்றனர்.

நாகத்துக்குத் தீங்கிழைத்துவிட்ட கணவனின் உயிரைக் காக்க நாகத்துடன் போராடி மீட்ட ஒரு பெண்ணின் கதை. கே. ஆர். விஜயா அந்தப் பாத்திரத்தை ஏற்றுத் தம் நடிப்பினுல் அனைவரையும் நெகிழ வைத்து விடுகிறுர். பாராட்டுக்குரிய நடிப்பு.

ஜெயசித்ரா பாம்பாட்டியின் மகளாக வந்து நாகத்தின் வஞ்சம் தீர்க்கும் பணியில் தீவிரமாக நிற்கிறுர். நல்ல நடிப்பினுல் நமக்கு நிறைவையும் அளிக்கிறுர். பாம்பாட்டி வேடம் எஸ். வி. சுப்பையாவுக்கு நன்கு பொருந்தியிருக்கிறது. தமது அனுபவம் மிக்க நடிப்பினுல் தம் பாத்திரத்துக்குத் தனியொரு மதிப்பை அளித்து விடுகிறுர்.

முத்துராமன், கதாநாயகன் - ஆனுல் வழக்கமான தவறே செய்யாத கதாநாயகனல்ல. தவறு செய்துவிட்டு அவர் துடிக்கும் துடிப்புத்தான் அவர் நடிப்பில் தனிப் பிடிப்பைத் தந்திருக்கிறது. தன்னை வஞ்சம் தீர்க்கச் சதா சுற்றிவரும் நாகத்தைக் கண்டு அவன் நடுங்குவதன் மூலமே அவனது பாவத்துக்குப் பரிகாரம் செய்யப்பட்டு விடுகிறது. முத்துராமனின் நடிப்பு மிக மிக இயற்கையானது.

ஒளிப்பதிவு டைரக்டர் எம். கிருஷ்ணசாமி பாராட்டுக்குரியவர். காமிரா அதியற்புதமாக இயக்கப்பட்டிருக்கிறது.

திரைக்கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஏற்று, பி. ஆர். சோமு தம் பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறுர். வசனத்துக்கு நம் தனிப் பாராட்டு. படத்தின் முக்கிய அம்சம், நாக தேவதையின் மகிமையாதலால் திரைக் கதையைப் பிடித்து அலசுவதில் பயனில்லை.

இந்தப் படம் எடுத்தவர்களைப் பாராட்டுவதற்கென்று ஒன்றும் இல்லாவிட்டாலும், அவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு காட்சிக்குக் காட்சி படம் எடுத்து அற்புதமாக நடித்திருக்கும் பாம்பை எத்தனை பாராட்டினுலும் தகும்! ஒரு காட்சிகூட விடாமல் பாம்பு வருகிறது. மாடிப் படியில் நெளிகிறது, படுக்கையறையில் படம் எடுக்கிறது, ரயிலுடன் போட்டி போட்டுக் கொண்டு ஓடுகிறது. இந்த நாகப் பாம்புக்கு ஒரு சபாஷ் போடுவதுடன், அதற்குச் சிரமப்பட்டுப் பயிற்சி அளித்திருக்கும் சையத் அமீருக்கும் ஒரு சபாஷ் போடுகிறேன்!

"எங்கள் குல தெய்வம்" சனிக்கிழமையன்று வந்த "வெள்ளிக்கிழமை விரதம்!"

ஏற்கெனவே நாடக மேடையில் இருந்து நடித்துத் திரை உலகத்துக்கு வந்தவர் மனேரமா. இப்பொழுது மீண்டும் ஒரு நாடகக் குழுவைத் தொடங்கி இச்சுவையான நாடகத்தை ரசிகப் பெருமக்களின் பேராதரவுடன் வெற்றிகரமாக நடத்தி வருகிறுர். இந்த நாடகத்தில் இவருக்கு இரட்டை வேடம். 'கமர்கட்டு' காத்தாயியாக வந்து சேரிப்புறங்களில் மிட்டாய் விற்கிறுர். பணக்காரரான புண்ணியகோடியின் வீட்டு வேலைக்காரியாகவும் வந்து கடைசியில் அவரையே கையில் போட்டுக்கொண்டு ஆட்டிப் படைக்கிறுர். இரண்டு மூன்று வித வேடங்களிலும் மனேரமாவின் நடிப்பு 'ஏ ஒன்!' இவரது சிரிப்பும், நொடிப்பும், வெடிப்புமாகச் சேர்ந்து மேடையையே களை கட்டச் செய்கின்றன.

மனேரமாவின் நகைச்சுவை நடிப்புக்கு ராமாராவின் நடிப்பு பக்கவாத்தியமாக அமைந்து நாடகத்துக்கு மேலும் சுவை கூட்டியது.

காத்தாயிக்குத் துணை நின்று நாடகத்தை நல்லபடியாக முடித்து வைக்கும் ராமு, நல்ல பாத்திரம். கண்ணன் அந்தப் பாத்திரத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறுர்.


புண்ணியகோடியாக வந்த டி. வி. எஸ். கோபால், ராமுவின் அண்ணன் சோமுவாக நடித்த ராமமூர்த்தி, அவர்களது தந்தை வேலாயுதமாக நடித்த சௌந்தரராஜன், மல்லிகாவாக வந்த ஐயப்பிரியா ஆகியவர்கள் நாடகத்தைத் தங்கள் நடிப்பினுல் உயர்த்தி விட்டனர்.


காந்தன்

இந்த நாடகத்தைப் பலமான 'சஸ்பென்ஸ்' வைத்துத் தயாரித்திருக்கிறுர்கள். ஏனே அந்த 'சஸ்பென்ஸ்' பாராட்டும் விதத்தில் உருவாகவில்லை. ஆனுலும் நாடகம் சுவாரஸ்யமாக இருக்கிறது. நாடகத்தின் தலைப்பு? தலைப்பு என்று ஒன்று வேண்டுமே! அதற்காகக் கொடுக்கப்பட்டது அவ்வளவுதான்.

கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஏற்றிருப்பவர் எம். எஸ். சோலைமலை. விறுவிறுப்பான நாடகத்துக்கும் வசனத்தின் சிறப்புக்கும் அவரைப் பாராட்டலாம்.

கோல்டன் ஸிடி





தங்கத்தைப் போலவே, ஸ்விட்சர்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து, கடிகாரங்கள், அழகு சாதனங்கள், டேப் ரிகார்டர், டிரான்ஸிஸ்டர், காமிரா போன்ற பல் வகைப் பொருள்கள் துபாயி, பேருத், குவைத் முதலிய நாடுகளுக்கு அன்றாடம் செல்கின்றன.

கள்ளக் கடத்தல் வெள்ளம்!

—ரவீந்திர ஸ்ரீவாஸ்தவ்—

துபாயி அல்லது இதுபோன்ற ஃப்ரீபோர்ட் பகுதிகளில் இந்தப் பொருள்கள் சட்டரீதியாகவே வருகின்றன. அங்குள்ள கடைகளில் தங்கக் கட்டிகளோ, பிஸ்கட்டுகளோ வெளிப்படையாகவே விற்கப்படுகின்றன, வெற்றிலை பாக்கு, சிகரெட், பீடி விற்பது போல!

துபாயிலிருந்து இந்தியாவுக்கு இந்தத் தங்கக் கட்டிகள் விநியோகிக்கப்படும் கதை மிகவும் விந்தையானதுதான். அங்குள்ள கடத்தல்காரர்கள் இந்தியக் கடத்தல்காரர்களுடன் சங்கேத மொழியில் தொடர்பு கொள்ளுகிறார்கள். பம்பாயில் ஊர் பெயர் அற்ற தொலைபேசிகள் எத்தனையோ இருக்கின்றன. இப்பொழுது கடத்தல்காரர்களை வேட்டையாடும் மும்முரத்தில் பத்தாயிரம் 'பேனமி' தொலைபேசிகள் பம்பாயில் இருப்பதாகக் கூறப்படுகிறது. பொய்ப் பெயரில் அவர்கள் 'டிரங்கால்' செய்வார்கள். கடத்தல்காரர்கள் பிரமுகர்வாழ் பகுதியில் பல தளங்களை வாடகைக்கு எடுத்து வைத்திருக்கிறார்கள். அவைகளில் அவர்களுடைய கையாட்களே வாழ்கிறார்கள்.

பம்பாய்க் கடத்தல்காரர்களிடமிருந்து ஆர்டர் வந்ததும் பொருள் 'தாவு'களில் ஏற்றப்படுகின்றன. 'தாவு' என்பது விசைப் படகு ஆகும். இவை ஐம்பது அறுபது 'நாட்' வேகத்தில் செல்லக்கூடியவை. தாவுகளில் பல இரகசிய அறைகள் உண்டு. இரண்டு இணைப்புக்கள் உள்ள பகுதிகளில், கீழேயும் மேலேயும் கிடைத்த இடங்களில் எல்லாம் இரகசிய அறைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கும். மரமும், இரும்பும் இணைத்து இவற்றுக்குள்ளே தங்கப் பாளங்கள், கட்டிகள், கம்பிகள், பிஸ்கட்டுகள் ஆகியவை, யாரும் இலேசில் கண்டுபிடிக்க முடியாதபடி வைத்து மூடப் படுகின்றன.

எல்லாப் பொருள்களையும் தனித் தனி பாலித்தீன் பைகளில் நன்றாக 'பாக்' செய்து, சணல் சாக்கு மூட்டைகளில் வைத்துவிடுகிறார்கள். துணி முதலியவற்றைத் 'தாவு'களில் ஏற்றிக் கொள்ளுகிறார்கள். தாவு இந்தியாவுக்குப் புறப்பட்டதும், தங்கப்பாளங்களைப் பிரித்து, இதற்கென்று பிரத்தியேகமாகத் தைக்கப்பட்ட ஜாக்கெட்டுகளில் வைத்துத் தைத்து விடுகிறார்கள். தங்கப் பிஸ்கட் ஒவ்வொன்றின் நிறையும் பத்துப் பத்துத் தோலா ஆகும். ஸ்விட்சர்லாந்து, லண்டன், பிரான்ஸ் முத்திரைகூட இவற்றின் மீது பதிக்கப்பட்டிருக்கும். ஜாக்கெட்டுகள் பார்ப்பதற்கு நேரு கோட்டுப் போன்றிருக்கும். இவற்றைக் கடத்தல்காரர்கள் வெற்று உடம்பில் அணிந்து கொள்ளுகிறார்கள். அப்புறம் பனியன், சட்டை, கோட்டு ஏதாவது அணிந்து கொள்ளுகிறார்கள். தங்கம் வைத்துத் தைத்த ஜாக்கெட் என்ற எண்ணமோ ஐயமோ யாருக்குமே ஏற்படாது. சமீபத்தில் ஒரு புதிய பட்டை தயாரிக்கப்பட்டிருக்கிறது, இடுப்பில் அணிந்துகொள்வது போல. ஒரு ஜாக்கெட்டுக்குள் நூறு பிஸ்கட்டுகள் வைக்கக்கூடிய அளவுக்கு இடம் உண்டு. பம்பாய் கறுப்பு மார்க்கெட்டிலும், வெளுப்பு மார்க்கெட்டிலும் கூடத்தான் தோலா நானூறு, ஐந்நூறு என்று விலை போகிறது. அதாவது ஒரு ஜாக்கெட்டுக்குள் நான்கைந்து லட்சம் பெறுமானமுள்ள தங்கம் வைத்துத் தைக்கப்படுகிறது. இது போன்ற ஜாக்கெட்டுகள் பல டஜன்கள் ஒரு 'தாவு'வில் வருகின்றன. தங்கப்பாளங்களோ, கட்டிகளோ கம்பிகளோ வருவதென்றால் சாக்குப் பைகளில் அவற்றைப் போட்டுக் கட்டி விடுகிறார்கள். அந்தச் சாக்குப் பைகளுக்குக் காற்று வெளியேறாத படிக்குக் காப்பு அளித்து ஆக்ஸிஜனால் நிரப்பி, தாவுகளில் கட்டித்





முன் பக்கம்: சுங்க அதிகாரிகள் முன்னிலையில் கடத்தல் தங்கம்.

இந்தப் பக்கம்: கடத்தல் மன்னர்கள்.

1. யூசுப் படேல்.
2. மஸ்தான்.
3. பாகியா.

கீழே: கடத்தல் பொருள்கள்.— தங்கக் கட்டிகள்; தங்க நாணயங்கள்.

தண்ணீரில் இறக்கி விடுகிறார்கள். ஆக்ஸிஜன் நிறைந்திருப்பதினால் சாக்குப் பைகள் தண்ணீருக்குள் மூழ்குவதில்லை. 'தாவு'களுக்கும் சுமையாயிருப்பதில்லை. இதுபோல் லண்டன், பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வரும் தங்கம்; ஜப்பானிலிருந்து வரும் அழகுசாதனங்கள், டேப்ரிகார்டர், ரேடியோ, துணிமணிகள், சிகரெட், காமிராக்கள்; சீனாவிலிருந்து வரும் சிகரெட் லைட்டர்கள், பேனாக்கள், வாய் ஆர்மோனியம், காமிரா, வாசனைத் திரவியங்கள் ஆகியவை ஒன்று குவைத், துபாயி, மஸ்கர் வழியாகக் குஜராத், பம்பாய், கேரளம் முதலிய இடங்களுக்கு வருகின்றன. அல்லது மகாவோ, ஹாங்காங் வழியாகக் கல்கத்தா, சென்னை, கொச்சின் ஆகிய இடங்களுக்கு வருகின்றன. அதிர்ஷ்டவசமாகப் பிடிபடவில்லை என்றால் வெகு எளிதில் நாட்டின் கடைத்தெருக்களில் எல்லாம் இவை வியாபாரத்துக்கு வந்து விடுகின்றன. இது கடல் மார்க்கம். தரை மார்க்கம்கூட உண்டு. கடத்தல் சாமான்களில் பல, பாகிஸ்தான் வழியாக மேற்கு எல்லையில் தரை மார்க்கமாக வந்து சேரவும் செய்கின்றன. வரும் வழிகள் ஆவன: படான்கோட், அமிருதசர், கேமகரண், ஹுஸைனிவாலா, வாகா, ஜைஸல்மேர், வாட்மேர், கச் பகுதி ஆகியவை. மேற்குப் பகுதியிலிருந்து ஆப்பிள் திராட்சை போன்ற பழங்கள் ஏராளமாக வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. கடத்தல்காரர்கள் இந்தப் பழக் கூடைகளிலும் பெட்டிகளிலும் தங்கத்தை வைத்து அனுப்புகிறார்கள். இன்னொரு தரை மார்க்கம் கிழ் எல்லைப் பகுதி ஆகும். இப்பகுதி வழியாக அதிகம் வருபவை சீன — ஜப்பானியப் பொருள்கள் — தங்கமும் உண்டு. நேப்பாளத்திலிருந்து கௌநாடி திரிபுரா, கல்கத்தா, ஸில்சர், சிக்கிம், தார்ஜிலிங், ஹிமாசலப் பிரதேசம், காங்கடா, நேப்பால் கஞ்ஜ், கோரக்பூர், பஸ்தி, பட்னா ஆகியவற்றுக்கு வருகின்றன. இப்படியாக இந்தியாவின் தெற்கு, மேற்கு, கிழக்கு ஆகிய மூன்று எல்லைகளும் கடத்தல்காரர்கள் சுலபமாக வரக்கூடிய பகுதிகளாக விளங்குகின்றன. ஆனால் கடல் மார்க்கம்தான் அதிகச் சௌகரியம் உள்ளதாகத் தெரிகிறது. எவ்வளவு முடியுமோ, அவ்வளவு அதிகம் கொண்டு வர உதவுகிறது.

கடத்தல் பொருள்கள் ஏற்றி வரும் தாவுக்களோ, கப்பல்களோ, பம்பாய், குஜராத், மதராஸ், கேரளக் கடற்கரைகளுக்கு வந்தாலும் கரைக்கு அருகில் வருவதில்லை. அனைத்துலக நீர் எல்லைக்குள்ளேயே நின்று விடுகின்றன. ஏனென்றால், பதினான்கு பதினைந்து மைல்களுக்கு அப்பால் இருக்கும் அனைத்துலக நீர் எல்லைக்குள் நுழைந்து இந்தியச் சுங்க அதிகாரிகள் அவர்களைச் சிறைப் பிடிக்க முடியாது என்பது அவர்களுக்குத் தெரிந்த விஷயம். எனவே, இந்தியக் கடத்தல்காரர்கள் தான் அங்கு சென்று பொருள்களை எடுத்து வருகிறார்கள்.

இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், துபாயியிலிருந்து புறப்படுவதற்கு முன்னால் எல்லா 'தாவு'களும் இன்ஷ்யூர் செய்யப்படுகின்றன. கடத்தல்காரர்களுக்கென்று ஒரு சிண்டிகேட் இருக்கிறது. இந்தியாவில் இந்தக் கடத்தல் பொருள்கள் அரசால் பறிமுதல் செய்யப்படுமானால், இந்த சிண்டிகேட் நஷ்டஈடு தருகிறது. அதனால் கடத்தல்காரர்களுக்குச் சாமான்கள் பிடிபட்டுவிட்டால் என்ன செய்வது என்ற கவலை இல்லை. அவர்களுடைய ஆட்கள் சிக்கிச் சிறைப்படக் கூடாது என்னும் விஷயத்தில் மட்டும் கருத்தாக இருக்கிறார்கள். அதாடு ஒரு 'தாவு'வில் பல கடத்தல்காரர்களின் பொருள் ஏற்றப்பட்டிருக்கும். பம்பாய் போன்ற நகரங்களுக்குக் கடத்தல்காரர்கள் தங்கள் ஆர்டருக்கேற்பப் பொருள்கள் வந்துவிட்டால், சங்கேத எழுத்துக்களில் செய்தி அனுப்பி விடுகிறார்கள். பொருள்கள் பிடிபட்டுவிட்டன என்றால் செய்தித் தாள்களில் வரும் செய்தியைக் கொண்டு தெரிந்து கொள்கிறார்கள். பிறகு பம்பாய் கடத்தல்காரர்கள் அதை ஊர்ஜிதப்படுத்திக் கொள்கிறார்கள்.

அடுத்துச் சுங்க இலாக்கா, சென்டிரல் எக்ஸைஸ், சிற்சில ராஜ்யங்களில் நிறுவப்பட்டுள்ள ஆன்டி கரப்ஷன், ஆன்டி ஸ்மக்லிங் ப்யூரோ ஆகியவை எப்படி இயங்குகின்றன என்பதைக் கவனிப்போம்.

அன்றாடம் கடல் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் வரும் கடத்தல் பொருள்கள் ஒன்றரை அல்லது இரண்டு கோடிக்கு இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.




இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முந்தியக் கணக்கு இது. இப்பொழுது இன்னும் பெருகியிருக்கிறது. ஆனால் பிடிபடும் பொருள்கள் பத்து சதவிகிதம்கூட இராது.

உண்மையில் சுங்க இலாக்காவோ, சென்டிரல் எக்ஸைஸ் துறையோ கடத்தலைத் தடுக்கும் விஷயத்தில் ஒருநாளும் கவனம் செலுத்தியதில்லை, ஏதோ 'எங்கள் வீட்டுக்காரரும் கச்சேரிக்குப் போய் வந்தார்' என்று பெயர் பண்ணியதைத் தவிர. தெளிவாகச் சொல்லப் போனால் சென்ற பத்து ஆண்டுகளில் கடத்தல் வியாபாரம் வெகுவாகப் பெருகியிருப்பதற்கு முக்கிய காரணம் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் நமது தலைவர்கள், ஆட்சி புரியும் கட்சி, சுங்கத் துறையினர், சென்டிரல் எக்ஸைஸ் அதிகாரிகள் — ஆகியவர்களைத் தான் கூற வேண்டும். இவர்கள் வாயை மூடக் கடத்தல்காரர்கள் வாரமும் வாய்க்கரிசியும் போட்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால், சாதாரண அன்றாடங்காய்ச்சிகளும், வயிற்றைக் கழுவ வழி தெரியாதவர்களும் கடத்தல் மூலம் பத்தாண்டுகளுக்குள் நாட்டின் பெருந் தனவந்தர்களில் ஒருவராகப் பவனி வர முடியுமா? இந்திய நாணயங்களின் மதிப்புக் குறைந்து, பண வீக்கம் பெருத்து ஓர் இக்கட்டான நிலையை ஏற்படுத்தவில்லை என்றால் மத்திய அரசு எந்த நிபந்தனையின் பேரிலும் கள்ளக் கடத்தல்காரர்களைச் சிறை செய்யத் துணிந்திராது.

சுங்க இலாகா எப்படி இயங்குகிறது? கடத்தல்காரர்களுக்கு வரும் தகவல்களை அறிவதில் ஆர்வம் உள்ளவர்கள் சிலர் இருக்கிறார்கள். இவர்கள் சுங்க இலாக்காவுக்குத் தகவல் தருகின்றனர். இவர்களை 'இன்ஃபார்மர்' என்கிறார்கள். இவர்கள் அறிவிப்பின் மூலம் பிடிக்கப்படும் பொருள்களில் பத்து சதவீதம் இவர்களுக்குத் தரப்படுகிறது. இந்த அறிவிப்பாளர்கள் பெரும்பாலும் பழைய கடத்தல்காரர்களாகவேதான் இருப்பார்கள். தங்கள் கோஷ்டியினிடம் ஏற்படும் அதிருப்தியினால் இவர்கள் மாறியவர்களாக இருப்பார்கள். இவர்களுக்குச் சங்கேத மொழி தெரிந்திருக்கும்; செயல் முறையும் அத்துபடி ஆகியிருக்கும்.

அறிவிப்பவர்களிடமிருந்து தகவல் கிடைத்ததும், சுங்கத் துறையினர் கூடி ஆலோசித்துப் பிடிக்கத் திட்டம் தீட்டுவார்கள். 'எந்தப் பகுதியில் 'தாவு'விலிருந்து பொருள்கள் இறங்கும்?' என்பதை அறிந்து அந்தப் பகுதியை முற்றுகையிட வரைபடம் வரைந்து கொள்வார்கள். 'இதுவரை காரில் போவோம், இங்கிருந்து கால்நடையாகப் போவோம், இன்ன இன்ன வழியே ஒளிந்து மறைந்து கடற்கரைக்குச் செல்வோம்' என்றெல்லாம் முடிவு எடுப்பார்கள். இருட்டில் கடத்தல்காரர்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக மண் நிற ஆடை அணிவார்கள். நாய்கள்கூடப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குக் காலோசை இன்றியே நடந்து செல்வார்கள். படகுகள் கடத்தல் பொருள்களுடன் கடற்கரைக்கு வருவதை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். கரையில் உள்ள ஆட்கள் கடத்தல் பொருள்களை இறக்க ஆரம்பித்ததும் அவர்கள் மீது ஒளிவெள்ளத்

தப் பாய்ச்சுவார்கள். கண் கூசும் அந்த ளியில் அவர்களால் பொருள்களை எடுத்துக் காண்டு ஓட முடியாது. நாற்புறமும் சூழ்ந்து டகைப் பிடித்துக் கொண்டுவிடுவார்கள்.

சுங்க அதிகாரிகள் கடத்தல் பொருள்களைப் றிமுதல் செய்வதில்தான் அதிகக் கவனம் செலுத்துவார்கள் ; கடத்தல்காரர்களைப் டிப்பதில் அவ்வளவாகக் கவனம் செலுத்த ாட்டார்கள். தங்கள் கட்சிக்கு வலு சேர்த்துக் கொள்ள அவர்கள் என்னதான் ர்க்கவாதங்கள் கூறினாலும், கடத்தல்காரர்களைப் பிடித்தால் கடத்தல் பொருளைத் தடுக்கும் பாதிக் காரியம் முடிந்தாற்போல் இருக்கும். எங்களிடம் வாரம் வாரம் 'வாரம்' வாங்குகிறார்களே, எப்படி எங்களைக் கைது செய்வார்கள் என்று கேட்கிறார்கள் கடத்தல்காரர்கள். தங்கள் வருஷாந்தர கோட்டாவைக் காட்டுவதற்காகத்தான் அவர்கள் பறிமுதல் செய்கிறார்களே ஒழிய நியாயமாகக் கடத்தலைத் தடுப்பதற்காக அல்ல.

சிற்சில சமயம் சுங்க இலாக்கா அதிகாரிகள் உயிரைப் பணயம் வைத்துச் செயல்பட வேண்டியிருக்கிறது. அவர்களிடம் துப்பாக்கி இருக்கிறது என்னவோ உண்மைதான்; ஆனால் அது தற்காப்புக்குத்தான். கடத்தல்காரர்களிடமோ மிக மிக நவீன ஆயுதங்கள் இருக்கின்றன. அவசியம் ஏற்பட்டால், உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும் சிறைப்படுவதிலிருந்து தப்பவும் அவர்கள் அதிகாரிகளின் உயிரை வாங்கக்கூடத் தயங்குவதில்லை. அது மட்டுமா ? சுங்க இலாக்காவினரிடம் சரியான சாதனங்களே இல்லை. வேகமாகச் செல்லும் விசைப் படகுகள் கிடையா. ஜீப்கள் கிடையா. வயர்லெஸ் செட், ஹோவர் கிராப்ட், வான வீதியிலிருந்தே கடலைச் சுற்றி வரும் ஹெலிகாப்டர், தங்கம் போன்ற பொருள்களைக் கண்டுபிடிக்கும் 'மெடல் டிடெக்டர்' — எதுவுமே கிடையாது. பம்பாய்த் துறைமுகத்தில் வைத்திருக்கும் 'மெடல் டிடெக்டர்' 1947ம் ஆண்டுக்கு முந்தியவை. மற்ற நாடுகளிலே மிக மிகப் புதுமையான 'மெடல் டிடெக்டர்கள்' வந்துவிட்டன.

கடத்தல் பொருள்களைத் தருவிப்பவர்கள் அதற்கான கிரயத்தைத் தர வேண்டும் ! வெளிநாட்டுக் கடத்தல்காரர்கள் இந்திய நாணயத்தைப் பெறுவதில்லை. அவர்கள் பொருளுக்குப் பொருளே கேட்கிறார்கள். கடத்தல் தங்கத்துக்கும் மற்றப் பொருள்களுக்கும் பதிலாக இந்தியக் கடத்தல்காரர்கள் அந்த நாடுகளுக்குத் தேவையான பொருள்களைக் கடத்தி ஏற்றுமதி செய்கிறார்கள். இப்படியாக இந்தியப் பொருள்களும் கடத்தல் பொருள்கள் ஆகின்றன. வெளிநாட்டிலிருந்து வரும் தங்கத்துக்கும் வேறு பொருள்களுக்கும் பதிலாக வெள்ளி, பண்டைய இந்தியக் கலைச் செல்வங்கள், கஞ்சா, அபின், கிராம்பு, ஏலக்காய் போன்ற பொருள்களும் உணவுப் பொருள்கள், வனஸ்பதி, சர்க்கரை, எண்ணெய் போன்ற தேவைப் பொருள்களும் கடத்திச் செல்லப்படுகின்றன.

வெளிநாடுகளில் அதிகக் கிராக்கியான பொருள் வெள்ளி. நாணயச் செலாவணிக்கு அது வெகுவாகப் பயன்படுத்தப்படுகிறது. சமீப காலமாக யுரேனியம்கூடக் கடத்தப்படுகிறது. அமெரிக்கா, பிரான்ஸ், லண்டன் போன்ற இடங்களில் இந்தியக் கலைச் செல்வங்களுக்கு மவுசு அதிகம். அயல்நாட்டுக் குபேரர்கள் தங்கள் வீடுகளை அலங்கரிக்க இந்தியாவின் பண்டைய கலைச் செல்வங்களையும், ஐரோப்பிய ஓவியங்களையும் திருட்டுத்தனமாக வரவழைக்கலாயினர். இங்கு இரண்டாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள பண்டைய விக்கிரகங்கள் அங்கு பத்து லட்சம் வரைக்கும் விலை போகின்றன. அதே போல் ஐரோப்பாவில் போதைப் பழக்கம் வளர்ந்துவிட்டதனால் கடத்தல்காரர்கள் கஞ்சா, அபினி போன்ற பொருள்களைக் கடத்தத்தொடங்கிவிட்டனர்.

இந்திய ஆலைகளில் தயாரிக்கப்படும் துணிகளைக் காட்டிலும் கடத்தல் துணிகள் நல்லவையாகவும், நயமாகவும் கிடைக்கத் தொடங்கவே, சாதாரண மக்களின் கவனமும் அதில் சென்றது. ஒவ்வொருவனும் ஸ்ட்ரெச்லான் பாண்டும், வெளிநாட்டுத் துணிகளும் ஒவ்வொரு பெண்ணும் ஜப்பானியப் புடவைகளும் உடுத்துபவர்களாகக் காட்சி தரும் நிலைக்கு அவர்கள் ஆர்வம் வளர்ந்துவிட்டது. பலன், இந்திய ஆலைத் தொழில் பலத்த அடி வாங்கியது.

மறுபுறம் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்கள் கடத்தப்படவே, அவற்றின் விலை ஏறிவிட்டது. அதோடு கடை வீதிகளிலிருந்து அவை மாயமாக மறைந்தும் போயின. தற்கால விலையேற்றத்துக்கு இதுவும் பெரும் காரணம். இந்த நிலையில், கடத்தலைத் தடுத்துக் கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டு வந்தால்தான் விமோசனம் என்ற அளவுக்கு நிலை சீர்குலைந்துவிட்டது. அதனால்தான் கள்ளக் கடத்தல்காரர்கள் படபடவென்று சிறை செய்யப்படுகின்றனர்.

ஆனால் இதனால் எல்லாம் கடத்தல் ஒரு நாளும் நிற்காது. துணிமணிகளிலிருந்து அத்தியாவசியத் தேவைப் பொருள்கள் வரை, கடத்தல் பொருள்களாக இந்தியாவில் விற்பனை ஆகின்றனவே, அவை மலிவாகச் சட்டபூர்வமாகவே கடைகளில் கிடைக்காத வரையில் கடத்தலைத் தடுக்க முடியாது. அல்லது இந்தியாவில் தயாராகும் அதே பொருள்களின் தரம் உயர வேண்டும். கடத்தல்காரர்களைச் சிறைப் பிடித்து மட்டும் பயன் இல்லை. பொதுமக்கள் நல்ல பொருளை நாடித்தான் செல்வார்கள். இந்தியாவில் தயாரான பொருளா, கடத்தலில் வந்த பொருளா என்று எண்ணிச் சீர்தூக்கி அக்கறை காட்டமாட்டார்கள். மக்களின் இயற்கையான மன இயல்புகளைப் புரிந்துகொண்டு அரசாங்கம் சட்டங்களை இயற்ற வேண்டும். அளவுக்கு அதிகமான கட்டுப்பாடுகள் கள்ளக் கடத்தலை ஊக்குவிக்கவே செய்யும்.

தமிழாக்கம் : அக்ஷயம்

ஒரு பேச்சாளர் ரொம்ப நேரம் பேசித் தள்ளிக் கொண்டிருந்தார்: ''நான் அடுத்த தலைமுறைக்காக வாதாடிக் கொண்டிருக்கிறேன் !''

''உங்கள் பேச்சு இன்னும் நீண்டால் அதற்கு அடுத்த தலைமுறைக்கும் வாதாடலாம் !''





கோ-ஆப்டெக்ஸ்
வண்ணத்துப்
பூச்சியின்
பண்டிகைகால
தள்ளுபடி
10%
Criterion Co 3126TM B

தீபாவளித் திருநாளில் ஒளிதரும் வண்ணத்துப் பூச்சி!

வண்ணத்துப் பூச்சி என்றென்றும் உங்கள் துணைவரும். சீரான விலை-நேரத்தை மிச்சப் படுத்தல்-விலையுயர்வை கட்டுப்படுத்தல்-10% விழாக்கால சிறப்பு தள்ளுபடி!

பண்டிகை காலங்களுக்கு ஏற்ற நாகரீக புத்தாடைகளுக்கு வண்ணத்துப் பூச்சியின் தனிப்படைப்புகளைத் தேர்ந்தெடுங்கள்!

புகழ் பெற்ற காஞ்சிபுரம், ஆரணி மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள், பண்டைய கலையழகு மிக்க கரைகள், புதுமையான மாதிரிகள் கொண்ட புடவைகள், பருத்தி பிரிண்டெட், கரைகள் மற்றும் சாதாரண புடவைகள், கைத்தறி ஆடைகளுக்கு புகழ் பெற்ற தலைசிறந்த தமிழக நகரங்களிலிருந்து தருவிக்கப்பட்டவைகள், வேட்டிகள் லுங்கிகள், கைக்குட்டைகள், துண்டுகள், நாகரீக வீட்டு அலங்காரத் துணி வகைகள், மற்றும் படுக்கை விரிப்புகள்.

வண்ணத்துப் பூச்சி வழங்கும் பண்டிகை கால விசேட தள்ளுபடி 10% (ரொக்க விற்பனை மற்றும் கடன் வசதி திட்டத்திற்கு) அக்டோபர் 10-ந் தேதி முதல் நவம்பர் 14-ந் தேதி '74 வரையில் அளிக்கப்படும்.



கைத்தறி ஆடைகளின் கவர்ச்சி தேவதை-வண்ணத்துப் பூச்சி!





என்று தணியும் இந்த மோகம்?

பி.வி.ஆர்

பெரிய மனிதர் வீட்டுக் கொலுப் படிகளில் எத்தனை எத்தனை பொம்மைகள் இருக்குமோ அத்தனை மேனாட்டுப் பொருள்கள் ஒருவர் வீட்டில் உண்டு. ஆனால் எதையும் அவர் எந்தக் கடத்தல் மன்னனிடமிருந்தும் ரகசியமாக வாங்கவில்லை. முறையாக வெளிநாடுகளில் வாங்கி நியாயமாக வரிப் பணம் செலுத்திக் கொண்டு வந்தவை. முப்பது வருடங்களுக்கு மேலாகவே அவர் மேல் நாட்டுப் பொருள்களை வாங்கி வீட்டில் கொலு வைத்து அழகு பார்ப்பதில் ஆசை கொண்டிருக்கிறார்.

ஏதோ சில உபயோகமுள்ள சாமான்களை வாங்குவதில் ஆட்சேபணை இல்லை. தரமான நம் நாட்டுப் பொருள்கள் இருக்கும்போது மேல்நாட்டுச் சாமான்கள் எதற்கு? தெரியாத்தனமாக இந்தக் கேள்வியைக் கேட்டு விட்டேன். அவ்வளவுதான்; மனிதருக்கு ஆவேசம் வந்து விட்டது.

''உங்க கண்ட்ரியிலேயே (அவரும் பாரத தேசம் பெற்றெடுத்த ஒரு மணிதான்!) எவன் ஸார் ஜெர்மன் டேப் ரிகார்ட்டர் மாதிரிச் செய்யறான்?... இந்த ரிஸ்ட் வாட்சைப் பாருங்கள். வருஷம், தேதி, நாள், டயம் எல்லாம் காட்டறது. உங்க ஊரிலே பஞ்சாங்கத்தையும் காலண்டரையும் பார்க்கணும் ... போகட்டும். தாழம்பூ, மல்லிப்பூ, ரோஜாப்பூன்னு பீத்திக்கிறீங்களே, எவன் பாரிஸிலே தயார் பண்ணற மாதிரி ஸெண்ட் தயார் பண்ணறான்? போன மாசம் என் மச்சினன் பாம்பேயிலிருந்து ஒரு பாட்டில் லாவண்டர் வாங்கிண்டு வந்தான். பழகின தேங்காயெண்ணெய் மாதிரி மூக்கைத் துளைச்சுது.''

எனக்கு அவருடைய பேச்சைக் கேட்டுக் கோபமோ ஆத்திரமோ வரவில்லை. சிரிப்புத்தான் வந்தது.

டேப் ரிகார்ட்டரிலும் ஸெண்டிலும் கைக் கடிகாரத்திலும்தான் நம்முடைய நாட்டு நாகரிகமே அடங்கியிருக்கிறதா?

மேற்சொன்ன நண்பர் ஓர் உதாரணம்தான். கடந்த பல ஆண்டுகளாகவே நம்மிடையே பலருக்கு வெளிநாட்டுச் சாமான்கள் மீது அபாரப் பற்று தோன்றியிருக்கிறது. சிங்கப்பூர் குடை, ஜப்பான் காமரா, பிரெஞ்சு வாசனைத் திரவியங்கள், ஜெர்மன் டெரிலின் என்று அலைகிறார்கள். நாகப்பட்டினம், காரைக்கால் போன்ற ஊர்களுக்குச் சென்றால் கேட்கிற முதல் கேள்வியே, 'ஃபாரின் சாமான்கள் என்ன ஸார் கிடைக்கிறது?' என்பதுதான். நாகப்பட்டினத்துக்கு ஒரு கப்பல் வந்தால் போதும். கடைவீதி தேர்த் திருவிழா மாதிரி காட்சி அளிக்கும்.

அணு ஆராய்ச்சியே நடத்தி வெற்றி பெற்ற நம் நாட்டில் எதை வேண்டுமானாலும் நம்மால் தயாரிக்க முடியும். ஆனால் மனிதனுக்கு அத்தியாவசியமான பொருள்களைத் தயார் செய்வதில்தான் நாடு ஈடுபட்டிருக்கிறதுஎன்று பலர் நினைக்க மறுக்கிறார்கள். விமானத்தையும் மோட்டார் காரையும் அப்பளம் தயாரிப்பது போல் தயாரிக்கும் நாட்டில் மேல்நாடுகளுக்கு ஈடாக எதைத்தான் தயார் செய்ய முடியாது?

இன்னொரு நாள் இதே நண்பரிடம் கேட்டேன்:

''ஏன் ஸார், உங்க அமெரிக்காவிலே ஒரு பத்தமடைப் பாயோ, ஒரு மதுரைச் சுங்குடியோ செய்ய முடியுமா? இத்தனை இத்தனை விக்கிரகங்களைத் திருடித் திருடி அனுப்புகிறார்களே, ஒரு விக்கிரகத்தை உங்க ஜெர்மன்காரன் தன் கையால் செய்ய முடியுமா? நம்ம நாட்டிலே பண்ணின டெரிலின் துணி ஹாங்காங்குக்குப் போய்ச் சிங்கப்பூர் வழியாகத் திரும்பி வருகிறது. அதில் ஹாங்காங் கம்பெனியின் பெயர் பளிச்சுன்னு இருக்கு. உடனே ஒரு தாவு தாவி வாங்கி உள்ளே பூட்டி வைக்கிறீர்கள்!''

''நன்னாச் சொல்லுங்க!'' என்றாள் அங்கே வந்த அவருடைய மனைவி. ''இவரைப் போலத்தான் இருப்பான் இவர் பிள்ளையும்னு நினைச்சேன். ஒரு படி மேலே மிஞ்சிப் போயிட்டான்!'' என்றாள் அவள்.

''ஏன் என்ன ஆச்சு?''


நண்பர் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டார்.

''சொல்லுங்களேன். ஒரு நாள் இல்லாட்டா ஒருநாள் தெரிஞ்சுதானே ஆகணும்? எங்க பிள்ளை அமெரிக்காவுக்குப் போயிருக்கானோ இல்லியோ, மேற்படிப்புக்கா? அத்தோடே நிக்கலை. இவருக்கு மேனாட்டிலேருந்து எது வந்தாலும் பிடிக்குமேன்னு ஒரு மருமகளையும் கொண்டு வரப்போறேன்னு எழுதியிருக்கான்! தலை எழுத்து.''

''என்னைக் கேட்டால் அவன் செய்யறதில் ஒரு தப்பும் இல்லை என்பேன். அந்த அமெரிக்கப் பெண் இந்தியாவுக்கு வந்தால் நமக்குத்தான் நல்லது. இந்தியப் பண்பு அவளுக்கு வரும். மனித தர்மத்தின் அடிப்படையில் உங்க பிள்ளை அவளைக் கல்யாணம் செய்து கொள்ளுவதில் தப்பு இல்லை'' என்றேன்.

நண்பரின் மனைவி சமாதானம் அடையவில்லை.

''என்ன இருந்தாலும் இம்போர்ட்டட் டாட்டர்—இன்—லா!'' என்றாள்.



ஹம்ராஹீ

'கூட்டுப் பயணி' என்று பொருள் தரும் இந்தப்படமும் சரியான கூட்டு; ந்த எந்தப் படங்களிலோ பார்த்த காட்சிகளைக் கூட்டிக் குறைத்து இணைத்துத் தந்துள்ள படம் ஆனதால், இதில் கதைச் சிறப்புக்கே இடம் இல்லை.

ஆனால் கதையின் தொடக்கத்தில், ஒரு பெரிய நிறுவனத்தின் முத ாளி, ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் 'இண்டர்வ்யூ' அனுப்பச் சொல்லி, அவர் தில்லியிலிருந்து திரும்பும் விமானத்திலேயே அவர் ளுக்கும் டிக்கட் ரிசர்வ் செய்யச் சொன்ன காட்சி யைக் கண்டபொழுது 'இண்டர்வ்யூ' புது முறையில் அமையும் போலிருக்கிறதே என்ற பிரமையை உண்டு பண்ணி ரசிகர்களைப் பெரிதாக எதிர்பார்க்க வைத்துவிட்டது. கடைசியில் கதாநாயகனும் கதா நாயகியும் அடிக்கும் கொட்டங்களுக்குச் சாட்சியாக நின்று அவர்களது கொட்டத்தில் அவரும் கலந்து கொண்டபோது, சரியான கேலிக்கூத்துத்தான் என்ற முடிவுக்கே வரச் செய்தது.

கள்ளக் கடத்தல்காரர்களை இணைத்து, கொள்ளைக் கூட்டங்களைக் காட்டி, நரபலிக் காட்சிக்கு வகைசெய்து இரண்டு பெண்டாட்டிக்காரனாகக் கதாநாயகனைக் கற்பனை புரிந்து - டுன்டுன்-தனுஜாவின் சண்டைக் காட்சியையும் டுன்டுன்-ரண்தீர் கபூரின் ஏகாந்தக் காட்சியையும் காட்டி, நகைச் சுவையை அபத்தச் சுவையாக்கி...

வாக்கியம் முடியவில்லை யென்றால் அதற்கு யார் பிணை?

இந்தக் கூத்தில் கிருஷ்ணசந்தர், ராமானந்த ஸாகர் போன்ற பெரிய பெயர்கள் இணைந்துள் ளனவே, அதுதான் அதிசயம்!





அஸனி ஸங்கேத்

வங்காளப் பஞ்சத்தின் பகைப்புலனில், விபூதி பூஷண் எழுதிய நாவலைத் திரை ஓவியமாகத் தயா ரித்திருப்பவர் ஸத்ய ஜீத் ரே. எந்தக் காட்சியையும் பதற்றமின்றிப் பார்ப்பவர்களின் உள்ளத்தில் அதன் விளைவைப் பதிய வைப்பதில் வல்லவர். வங்காளத் தைச் சேர்ந்த சின்னஞ் சிறு கிராமத்தில் கூடப்ப தாகப் புனையப்பட்டிருக்கும் இந்தக் கதையின் பாத் திரங்கள் மனிதனுடைய ஆசாபாசங்களையும், மனிதாபிமானச் சூழல்களையும் வாழ்ந்தே காட்டு கிறார்கள். இயற்கையின் சூழல் அவர்களின் வாழ்க்கையைப் பரிமளிக்க வைக்கிறது. இயக்குநப் பெருமை பெற்ற ஸத்யஜித் ரேக்கு ஸௌமேந்து ராயின் காமிரா கைகொடுத்து உதவுகிறது.

கதாநாயகி அனங்காவாக வரும் பபீதா மனிதாபி மானத்துக்கு இலக்கணமாகத் திகழ்கிறாள். கட்கி யாக வரும் ஸந்தியா ராய் பசி வந்திடப் பத்தும் பறந்து போவதைக் கனகச்சிதமாகச் சித்திரிக்கிறாள்.

பசியில் காமப் பசியும் சேர்ந்ததுதானே? அதை ஒருவன் தீர்த்துக்கொள்ள அனங்காவையே பயன் படுத்தியபொழுது.....? பெண்மையின் சீற்றத்தைச் சிறப்பாகக் காட்டி யிருக்கிறார்கள். 'இந்த இடம் கதைக்குத் தேவைதானா?' என்று ஒருபுறம் கேள்வி எழுந்தாலும் நிகழ்ச்சியைக் கையாண்டிருக்கும் முறையைக் குறைகூற முடியாது.

'அஸனி ஸங்கேத்' அனைத்துலகின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றுப் பல பரிசுகளையும் வாங்கிக் குவித்துள்ளது. புகழ்பெற்ற ஹிந்திக் கதை ஆசிரியர் பிரேம்சந்த் தமது 'ராணி ஸாரந்தா' என்னும் கதையின் தொடக்கத்தில் கூறுகிறார்: 'சிலரைப் புகழ் தேடி வரும், சிலர் புகழைத் தேடிச் செல்வர்' என்று! ஸத்ய ஜித் ரேயோ தமக்கு வந்த புகழைப் பாரதத்துக்கே உரிமையாக்கிப் புகழுக்குப் புத்திலக்கணம் வகுக்கிறார், பிரேம் சந்தின் கூற்றையும் மீறி!

— ரா. வீ.

''உன் உடன்பிறந்தான் பெருமையைப் பெரிதாக மெச்சிக் கொண்டாயே, இப்பொழுது என்ன சொல்கிறாய்?''

கையில் கல்யாணப் பத்திரிகையும் கடிதமுமாகக் கேட்டுக் கொண்டே, உள்ளே நுழைந்தார் சிவப்பிரகாசம்.

''என் உடன்பிறந்தானுக்கு என்ன குறைச்சலாம்?'' என்று கேட்டாள் மங்களம்.

''என்னவா? அவன் எழுதியுள்ள கடிதத்தைப் படிக்கிறேன், கேள்! கடிதமே காரம்; அதிலே நமஸ்காரம் வேறு போடறாரு! அவரு மகன் நடராஜனுக்குச் சீயாழி பரமசிவத்தின் பெண் கல்யாணியை நிச்சயம் செய்துவிட்டாராம். தேதி குறிச்சுப் பத்திரிகையும் வைச்சுட்டாரு. நமக்குத் தபாலில் அனுப்பியிருக்காரு. நேரிலே வந்து பாக்கு வெத்திலே வெக்கிறதுக்குத் துப்பு இல்லே!'' என்று அனலைக் கக்கினார் சிவப்பிரகாசம்.

மங்களத்துக்கு வாய் திறக்கத் தோன்றவில்லை.

''தேதி கிட்டத்திலேதான். இன்னிக்கே வேணுமானாலும் புறப்படு. என்ன இருந்தாலும் பிறந்த வீட்டுக் கல்யாணமாச்சே!'' கக்கிய அனலில் குங்கிலியத்தையும் தூவினார்.

''ஆத்திரப்படுவதினால் ஆயிடுமா காரியம்? ஒருத்தன் பெண்டாட்டியை இன்னொருத்தன் கொண்டு போய்விட முடியாது. நம்ம சிவகாமுவுக்குன்னு ஒருத்தன் பிறக்காமலா இருக்கப் போறான்?'' என்று கேட்டு மெதுவாக விஷயத்தைத் தொடர்ந்தாள் மங்களம்: ''இரண்டு வருஷங்களுக்குமுன் என் அண்ணன் பெண் கேட்டு வந்தாரே, அப்போ நீங்க என்ன சொன்னீங்க?''

''என்ன சொன்னேன்?''

''இப்பவே என்ன அவசரம்? குழந்தை படிக்கிறா. படிப்பு முடிஞ்சு பார்த்துக்கலாமேன்னு சொல்லலியா?''

''சொன்னேன்! அதிலே என்ன தப்பு?''

''தப்புன்னு நான் எங்கே சொன்னேன்? உங்க நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்க. அப்படிச் சொன்னப்போ, உங்க மனசிலே வேறு எந்தச் சிந்தனையும் ஓடலியா?''

''என் மனசை என்னவோ பெரிசா எடைபோட்டு விட்டாப் போல் பேசறியே! என்ன எண்ணம் ஓடிச்சாம்?''

''அதை நான் வேறு விண்டு சொல்லணுமாக்கும்!''

''பெண்ணைப் பெத்தவன் பத்தும்தான் பார்ப்பான். அது ஒரு தவறா?''

''பிள்ளையைப் பெத்தவனும் அப்படிப் பார்க்கலாமில்லே?''


''ஒரு குட்டையிலேயே ஊறின மட்டைங்கிறது எவ்வளவு சரியா யிருக்கு, பாரு! அண்ணன் குணம் தங்கைக்கு அப்படியே படிஞ்சிருக்கு! — இப்படியெல்லாம் நீ பேசறதுக்குக் காரணம் எனக்குத் தெரியும். குஷாலாப் போயிட்டு வா, உன் அண்ணன் மகன் கல்யாணத்துக்கு. வேணுமானால் உன் பெண்ணையும்கூடக் கூட்டிக்கிட்டுப் போ!'' என்று சினந்தார் சிவப்பிரகாசம்.

ஃஃஃ

''தவறாக நினைக்காதே, சிவகாமு! ஒருத்தியின் கணவனை இன்னொருத்தி பறித்துக் கொண்டு போய்விட முடியாது. இதற்கு நீயும் நானுமே சான்று. பார்க்கப் போனால் அவர் உனக்கு உறவு முறை. நீங்கள் இருவரும் உளமாறக் காதலித்தீர்கள். உங்கள் காதலைப் பிரிக்கும் கருவியாக என்னை ஆக்கிவிட்டது விதி. விதி செய்த சதிக்கு நான் பொறுப்பாளி இல்லை. பெரியவர்கள் நிச்சயித்தபடி இந்தத் திருமணம் நடைபெறுகிறது. பெரிய மனசு பண்ணி எனக்கு நீ மணமகள் தோழியாக வர வேண்டும்; மாப்பிள்ளைக்கு மட்டும்தான் தோழன் என்பதில்லை என்பதை நிரூபிக்க வேண்டும். எனக்கு ஏமாற்றம் தரமாட்டாய்; கட்டாயம் வருவாய் என்று நம்புகிறேன்!''

கல்யாணியின் கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு, கடற்கரையிலே அமர்ந்திருந்த சிவகாமுவின் மனமும் கடலாகக் கொந்தளித்தது. ''சீ! என்ன பெண் ஜன்மம் வேண்டிக் கிடக்கிறது! இவளும் ஒரு பெண் மாதிரி!'' தோழி கல்யாணியைச் சாடின அவளது எண்ண அலைகள்.

'நடராஜன் உறவுமுறை என்பது ஒருபுறம் இருக்கட்டும். இருவரிடமும் காதலைக் கனியவைத்தவள் இந்தக் கல்யாணியே அல்லவா? என்னை இந்தக் கடற்கரைக்கு அழைத்து வந்து, அவரையும் என்னையும் தனித்துப் பேசவிட்டு, எங்கள் காதல் அசடு வழிந்தபொழுது, காதல் கடலுக்கும் ஒரு கரை போட்டு ரசித்து மகிழ்ந்தவளாயிற்றே!.... அவளா இப்படிப் பெண் நாகமாக மாறி என்னைக் கடிக்க வருகிறாள்! விதி செய்கிற சதிக்கு நான் பொறுப்பாளி இல்லை என்கிறாளே! இவள் மட்டும் மனசு வைத்திருந்தால், இந்த விதியை என் பக்கம் திருப்பிவிட்டிருக்க முடியாதா? எங்கள் தூய காதல் அவளுக்குப் பொறுக்கவில்லை. எனவே, சூடி



செய்தியில் விளைந்த



யிருந்தே என் குடியைக் கெடுக்கத் துணிந்து விட்டாள். அதற்குப் பெரியவர்கள் நிச்சயித்தபடி என்று அவர்கள் மேல் பழி போடுகிறாள்.

பெயர்தான் கல்யாணியே ஒழிய, உண்மைக் காதலைக் கொன்று போட்ட கொலைபாதகி. இவள்நன்றாயிருப்பாளா?

ஆமாம், இவளை மட்டும் சொன்னால் ஆயிற்றா? என்னைக் காதலிப்பதாக நடித்துத் திரிந்த அந்த அசடும் அல்லவா பல்லை இளித்துக் கொண்டு அவளை மணக்கச் சம்மதித்து விட்டது!

இந்தக் கல்யாணத்துக்கு நான் வரவேண்டுமாம்? ஆம், கட்டாயம் போகத்தான் வேண்டும்: ஒரு புறம் அருமைத் தோழி; இன்னொருபுறம் ஆருயிர்க் காதலர்! இருவரும் என்னை எப்படி மோசம் செய்துவிட்டுக் கல்யாணம் செய்து கொள்ளுகிறார்கள் என்பதைக் காணத்தான் வேண்டும். இருவரும் இரும்பு உலக்கையை விழுங்கினாற் போலக் காட்சி தருவார்கள்! அதைக்காணும் துணிவு எனக்கு இருக்குமா?'

''சிவகாமு!''

எண்ண அலைகளில் மிதந்து கொண்டிருந்தவள் துணுக்குற்றுத் தலை நிமிர்ந்தாள். எதிரே நடராசன் நின்று கொண்டிருந்தான்.

''என்னை மன்னித்துவிடு ! இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே என் அப்பா உன் அப்பாவிடம் பெண் கேட்டாராம். இந்த நாள் வரை உன் தந்தை இரும்பு உலக்கையை விழுங்கினாற் போல் இருக்கவே, 'உன்னை எனக்குத் திருமணம் செய்துதர விருப்பமில்லையாக்கும்' என்று தீர்மானித்து வேறு இடத்தில் பெண் எடுக்கத் துணிந்து முடிவு எடுத்துவிட்டார். இதில் ஒரு வேடிக்கையைப் பாரு, உன் உயிர்த் தோழியே எனக்கு மனைவியாக வாய்க்க இருக்கிறாள். பெண் பார்க்கும் படலத்தில், நாங்கள் இருவரும் மனம் விட்டுப் பேசிக் கருத்து ஒருமித்து ஒரு முடிவுக்கு வந்துள்ளோம்.''

''ஆதரவுபட்டதே இன்பம் என்றா?''

''ஆமாம். அவள் சார்பிலும் என் சார்பிலும் அழைக்கிறேன். மறுக்காமல் தவறாமல் கல்யாணத்துக்கு நீ கட்டாயம் வரவேண்டும் !'' என்றான் நடராசன்.

சிவகாமுவுக்குப் பேச நா எழவில்லை.

ஃஃஃ

'ஜே, ஜே' என்று கல்யாணக் கூடம் களைகட்டி விட்டது. பிள்ளை வீட்டார்கள் வந்து விட்டார்கள். ஆனால் பெண்

ராம்விழிநாதன்

வீட்டார்களைத் தான் காணோம். சபாநாய கத்துக்குச் சந்தேகமாய்ப் போய்விட்டது. தனிமையில் தம் மனைவி மரகதத்தைப் பார்த்துக் காதைக் கடித்தார் : ''இன்னும் பெண் வீட்டாரைக் காணோமே ! உன் பேச்சைக் கேட்டுக் கெட்டேனே ! நாம் சொல்லி அனுப்பியதை அவர்கள் தவறாக எடுத்துக் கொண்டிருந்தால் . . . . .''

''இன்னொரு தரம் என் பேச்சை என்று சொல்லாதீர்கள். உங்கள் பிள்ளையின் பேச்சை என்று சொல்லுங்கள். சொல்லப் போனால் உங்களுக்கும் ஆசையா யிருந்தது. கேட்டு அனுப்பிவிட்டீர்கள்! இதுவரையில் நீங்கள் என் பேச்சைக் கேட்டிருக்கிறது எனக்குத் தெரியாது ?'' என்றாள் மரகதம்.

''அந்தப் பேச்செல்லாம் இப்போ எதற்கு? இப்போதைக்குள்ள பிரச்னைக்கு வழி சொல்லு!''

''பெண் கேட்கப் போன அன்றைக்கே பார்த்தேன். அவர்கள் கறார்ப் பேர்வழியா யிருந்தாங்க. 'உங்களுக்குச் சீர்செனத்தி என்ன வேண்டுமோ, அதை ஒரே மூச்சிலே கேட்டுடுங்க. அப்புறம் நினைத்து, நினைத்து, பன்னிப் பன்னிக் கேட்காதீங்க' ன்னு சொன்னாங்க. உங்களுக்கு உச்சி குளிர்ந்து போச்சு ! அப்பவும் இந்த மாதிரிதான் வந்து காதைக் கடிச்சீங்க. 'பொறுப்பை அவங்ககிட்டயே விட்டுட்டா நல்லாச் செய்வாங்க போல் இருக்கு. நாம் எதற்கு வீணிலே வாயைக் கொடுக்கணும்'னீங்க. நானும் சரிதான்னு 'கம்'முனு இருந்திட்டேன். அப்புறம் யாரு போதனையையோ கேட்டு, நீங்களும் உங்கள் பிள்ளையாண்டானும், அவங்க நல்லபடியாச் சீர்செனத்தி செய்யாமெ இருந்துட்டாங் கன்னா என்ன ஆகிறதுங்கிற ஐயத்தைக் கிளப்பிச் சீர் செனத்திக்கு லிஸ்டும் போட்டு அனுப்பிச்சிட்டீங்க. அவங்க அதைத் தப்பா நினைக்கலாம் இல்லே?''

''அப்படி நினைச்சு அவங்க கல்யாணத்துக்கு வராமல் வைச்சுட்டாங்கன்னா என்ன ஆகிறது? நம்ம மானம் கப்பலேறி விடாதா ?''

''அது இப்பத்தான் கப்பலேறியிருக்காக் கும்! உங்க தங்கச்சி பெண்ணைப் பிள்ளைக்குக் கல்யாணம் கட்டிக்கப் போறதாச் சொல்லிக் கிட்டிருந்த நீங்க அதை மாத்தினதுமே அது கப்பலேறிப் போச்சு ! உறவுமுறையை விட்டுட்டாரு பாரு, பணத்துக்கு ஆசைப்பட்டுக் கிட்டுன்னு ஊரெல்லாம் பேச்சுக் கிளம்பிடிச்சு !''

''இதோ, பாரு! இந்த இடக்குப் பேச்சுத் தான் வேண்டாங்கிறது ! நான் போய்ப் பெண் கேட்ட பொழுது அவங்க தர்ரேன்னு எங்கே சொன்னாங்க ? அமாவாசை காத்துக் கிட்டிருக்குதா? என் மவனுக்கு எத்தனை நாட்கள்தான் கல்யாணம் கட்டாமல் இருக்கிறது என்கிறே !''

''என்கிட்டே எதுக்குப் பாய்கிறீங்க ? உங்க சம்பந்திக்கு ஆள் அனுப்பிச்சுப் பாருங்க, சீர் செனத்தி கேட்டது தப்புன்னு சொல்லிப் போடுங்க. நமக்கு இல்லாத சொத்தா, அவங்க கொடுத்து விடியறதுக்கு?'' என்றாள் மரகதம்.

''அதுக்காக அவங்க காலடியிலே போய் நிற்கச் சொல்றியா ? அது நடக்காது, இந்தச் சபாநாயகத்திடம். அவங்க வந்தாலும் வரா விட்டாலும், குறித்த முகூர்த்தத்திலே என் மவனுக்குத் திருமணம் நடந்தே தீரும்.''

''மவன் இருக்கான், சரி ! அதற்கு ஒரு மருமவப் பொண்ணு வேண்டாமா ?''

''ஏழையாயிருந்தால் என்ன, நம்ம முத்து சாமி மவளைக் கட்டிப்பிட்டா ?''

''தாராளமாகக் கட்டலாம். ஆனால் குறித்த முகூர்த்தத்திலே நடக்காது. மூணு நாள் பொறுக்கணும். அப்புறம் முகூர்த்த நாள் குறிச்சு மேளதாளத்தோடு நடத்தி வையுங்க!'' விழிகளாலேயே விஷயத்தை விளக்கிவிட்டாள் மரகதம்.

''அதெல்லாம் முடியாது. நம்ம மதிப்பு என்ன ஆவது ? வச்ச முகூர்த்தத்திலே கல்யாணம் நடந்துடணும்!''

''அப்படியானால் நம்ம சிவகாமுவையே கட்டி வைச்சிடுங்க. உங்க குணம் தெரிஞ்சிருந்தும், உறவு முறையை விட்டுக் கொடுக்காமல்; மதிப்பைப் பார்க்காமல் அவங்க உங்க மகன் கல்யாணத்துக்கு வந்திருக்காங்க! உங்க மதிப்பைக் காப்பாற்ற அவங்களைவிட்டால் வேறு ஆள் கிடையாது !'' என்றாள் மரகதம்.

ஃஃஃ

குறிப்பிட்ட முகூர்த்தத்திலே சிவகாமு — நடராசன் திருமணம் நடந்ததுகூட வியப் பில்லை. கல்யாணியின் வாழ்த்து மடல் வந் திருந்ததுதான் விசேஷம்:

''எங்கள் கல்யாணப் பத்திரிகையைப் பார்த்து என்னை எப்படித் திட்டித் தீர்த் திருப்பாய், உன் காதலரை எப்படி எடை போட்டிருப்பாய் என்பதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். உன் தந்தையும் உன் மாமனும் எப்படி முரண்டு பிடிக்கிறார்கள் என்பதும், அதனால் உங்கள் காதல் திசை மாறி விபரீதக் கல்யாணமாகிவிடக் கூடும் என்பதும் உன் காதலர் வாயிலாகத் தெரிந்தது. எங்கள் பெற்றோர் சுபாவமும் எனக்கு அத்துபடி. எனவே, ஒரு நாடகம் நடித்தேன். ஆனாலும் உன் கணவர் ரொம்ப அவசரக் காரர், அம்மா ! துளிக்கூடப் பொறுமை இல்லை. உன்னைத் திருமணம் செய்துகொண்டு விடத் துடித்தார். நாங்கள் போட்ட நாடகத் திலே நன்றாக நடித்தார். ஆனால், 'ஏ, ஒன்' நடிப்பு உன் மாமியார்தான்! உன்னை மருமக ளாக்கிக் கொள்ள அவள் போட்ட திட்டம் எத்தனை அழகு!

'' என் கதி என்னவென்கிறாயா ? எனக்கும் மனம் போல் மாங்கல்யம்தான். வைத்த முகூர்த்தத்தில் இங்கே எனக்கும் திருமணம் நடந்துவிட்டது. என் கல்யாணத்துக்கு நீ வர முடியாது, உன் கல்யாணத்துக்கு நான் வர முடியாது என்ற நிலையென்றாலும், ஒருத்தன் பெண்டாட்டியை இன்னொருத்தன் கொண்டு போக முடியாது என்பது உறுதியாயிற்றே ! அதைச் சொல்லு! உன் வாழ்த்துக் கடிதம் என் கல்யாணத்துக்கு வரவில்லையே என்ற தாபம் எனக்கு இல்லை. ஏனென்றால் உன் இதயம் இப்பொழுது வைதாரை வாழ்த்திக் கொண்டிருக்கும்!''



சரஸ்வதி ②

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

ஜபமாலையும் ஏட்டுச் சுவடியும் ஞானத்தைத் தெரிவிக்கிற அடையாளங்கள் என்று எல்லாருக்கும் தெரியும். பரம ஞானமூர்த்திகளான தக்ஷிணாமூர்த்தி, சரஸ்வதி தேவி இருவர் கைகளிலும் இவற்றைக் காணலாம்.

ஏட்டுச் சுவடி வித்தையைக் குறிப்பது. இப்போது இருக்கிற படிப்பு முறையைப் பார்த்தால் வித்யை வேறு, ஞானம் வேறு என்றே தோன்றுகிறது. வித்யைதான் ஞானம் என்கிற பழைய நிலை போய்விட்டது. முன்பெல்லாம் சகல வித்யைகளும் பரமாத்மாவைக் காட்டிக் கொடுக்கவே ஏற்பட்டிருந்தன. திருவள்ளுவரும், பரமேசுவரனைப் பாதபூஜை பண்ண வைக்காத ஒரு படிப்பினால் என்ன பயன் என்று கேட்கிறார்.

கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?

அகங்காரம் எல்லாம் அடிபட்டுப் போய்ப் பரமாத்ம வஸ்துவுடன் சேருகிற ஞானத்தைத் தரவே சகல வித்யைகளும் ஆதியில் ஏற்பட்டிருந்தன. மற்ற அகங்காரங்கள் ஒருபக்கம் இருக்க, 'நாம் வித்வான்' என்பதாகப் படிப்பினாலேயே ஒரு பெரிய அகம்பாவம் வந்துவிடும். இதனால்தான் நம் பூர்வீகர்கள் வித்யையோடு, விநயத்தையும் சேர்த்துச் சேர்த்துச் சொன்னார்கள். **வித்யா விநய ஸம்பன்னே.**

இப்போது படிப்பு எல்லாம் லௌகிகத்துக்காகத்தான் என்று ஆகிவிட்டன. பலவிதமான வித்யைகள், ஸயன்ஸ்களைத் தெரிந்து கொண்டு வெகு சாமர்த்தியமாகப் பாபங்களைப் பண்ணிப் பிறரிடமிருந்து தப்பித்துக் கொண்டு பெருமைப்படுகிறோம். இப்போதைய படிப்பினால் வருகிற விஷய அறிவை ஞானம் என்று சொல்வதானால், அஞ்ஞானம்தான் மோட்ச சாதனம் என்றுகூடச் சொல்லிவிடுவேன். ஞானம் ஒன்றே மோக்ஷ உபாயம் என்று சொல்ல வந்த அத்வைதத்துக்கு நான் பிரதிநிதி என்று பேர். ஆனால் இப்போது படித்தவர்களின் 'நாகரிக' தேசங்களில் நடக்கிற காரியங்களைப் பார்க்கிறபோது எதுவுமே தெரியாமல், எழுத்தறிவே இல்லாமல், பரம அஞ்ஞானிகளாக இருந்து கொண்டு, பகவான் என்கிற ஒருத்தனை நம்பிப் பாவத்துக்குப் பயந்து, கள்ளங் கபடமில்லாமல் இருக்கிற ஆதிவாசிகளும், காட்டுக் குடிகளும்தான் ஈசுவரப் பிரசாதம் பெறுபவர்கள் என்றே தோன்றுகிறது. நாம்கூட அப்படி ஆகிவிட்டால் தேவலை போலிருக்கிறது.

ஆனால் இப்போதுள்ள வித்யைகளும் போதனை முறைகளும் வெற்று லௌகிகத்துக்கும் அகங்காரத்துக்குமே ஆஸ்பதமாக இருக்கின்றன என்பதால், ஆத்மார்த்தமான சாஸ்திரங்களை, கலைகளை, வித்யைகளைக் குறைவாகப் பேசக் கூடாதுதான். இவை எல்லாம் அகங்காரத்தைக் கரைத்து, லோக க்ஷேமத்தையும் ஆத்ம க்ஷேமத்தையும் தரவே நம் தேசத்தில் ஏற்பட்டிருந்தன. இப்போதும் கூடப் புதிது புதிதாக விருத்தியாகியிருக்கிற வித்யைகள், டெக்னாலஜி ஆகியவற்றால் எத்தனையோ லோக க்ஷேமத்தை உண்டாக்கலாம். அடாமிக் (அணு) ஸயன்ஸிலேயே நன்றாக ஊறினால் அதுவேகூட ஆத்மிக அத்வைதத்துக்குக் கொண்டு போய் விட்டுவிடும். ஓயாமல் ஆசை வாய்ப்பட்டுப் பறப்பாகப் பறந்து கொண்டிராமல் ஆன்றோர்கள் போட்டுத் தந்த வாழ்க்கை முறையை நாம் மேற்கொண்டு வித்யைகளை அப்பியசித்து வந்தால் இன்றும் அவை புறத்துக்கு நல்லது செய்யும்; உள்ளுக்கு ஞானமும் தரும். மருந்தோடு பத்தியமும் முக்கியம். வித்யை என்கிற மருந்துக்கு அடக்கம் என்கிற பத்தியம் அவசியம். இப்போது அது இல்லாததால் மருந்தே விஷமாயிருக்கிறது. ஆனால் அடக்கத்தோடு பயின்றால் வித்யையே உண்மையில் ஞானம் தரும் அமிருதம். அதனால்தான் ஞானமூர்த்திகளான தட்சிணாமூர்த்தி சரஸ்வதி இரண்டு பேரையுமே வித்யா தேவதைகளாகவும் வைத்திருக்கிறார்கள். சரஸ்வதி சகல கலாவாணி, வித்யா ஸ்வரூபிணி என்று அறிவீர்கள். 'சர்வ வித்யைகளுக்கும் பிரபு (ஈசானன்)' என்றே வேதம் சதாசிவனான தட்சிணாமூர்த்தியைச் சொல்லுகிறது. இருவரும் அக்ஷமாலை, சுவடி இவற்றோடு சந்திர கலையைத் தலையில் தரித்திருக்கிறார்கள். அதற்குப் பேரே 'கலை'. 'கலை' என்றால், எது வளருகிறதோ அது. வித்யைக்கு முடிவே இல்லை. 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்று சரஸ்வதியே விநயத்தோடு நினைக்கிறாளாம். இவள் தலையில் வைத்திருப்பது மூன்றாம் பிறை. அதுபூரண சந்திரனாக வளரவேண்டும்.


சரஸ்வதிக்கும் தட்சிணாமூர்த்தியைப் போலவே நெற்றிக் கண் உண்டு. ஆசை பஸ்மமானாலொழிய ஞானமில்லை. அதற்காகத்தான் காமனை எரித்த நெற்றிக்கண் இவளிடமும் இருக்கிறது. இவ்விரண்டு தெய்வங்களுக்கும் ஜடாமகுடம் இருக்கிறது. அதுவும் முனிகளின் அடையாளம்.

இருவருமே வெள்ளை வெளேரென்று இருக்கிறார்கள். ஏழு வர்ணங்களில் சேராத வெள்ளை, பரம நிர்மலமான சுத்த ஸத்வ நிலையைக் குறிப்பது. இந்த வெள்ளையும் கூட இன்னும் நிர்மலமாக, தன்வழியாக ஒளி ஊடுருவிச் செல்கிற அளவுக்கு (Transparent) தெளிந்து விடுகிறபோது ஸ்படிகமாகிறது. தட்சிணாமூர்த்தி, சரஸ்வதி இருவருமே இப்படிப்பட்ட ஸ்படிகத்தினாலான அக்ஷமாலையைத்தான் வைத்திருக்கிறார்கள். அந்த வெள்ளை நிறம், சந்திர கலை, ஸ்படிக மாலை, இவற்றை நினைத்தாலே நமக்கும் ஒரு தூய்மை, அமைதி, தாப சாந்தி எல்லாம் உண்டாகின்றன.



இதோ ஒரு குட்டி பாரதம்!

ரா. வீழிநாதன்



மேலே: இரவு நேரத்தில் டாட்டா நகரம் அளிக்கும் அழகுத் தோற்றம்.
கீழே: பகல் போதில் எஃகு நகரில் ஓர் ஏரியின் எழில் தோற்றம்.

கிறிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே இந்தியன் இரும்பைக் கண்டு பிடித்து அதை அம்பின் கூருக்குப் பயன்படுத்தியிருக்கிருன். அவன் வளர்ச்சியோடு இரும்பும் வளர்ந்து இன்று பல வகைகளிலும் வாழ்க்கைக்கு உதவுவதாக அமைந்துள்ளது. இந்திய இரும்பின் வரலாற்றை அடிநாள் தொட்டு நோக்கினுல் அது கதை கதையாகக் கூறும். அதைப் பெருங் கதையாக்கிய பெருமை ஜம்ஷேத் ஜீ டாட்டா அவர்களைச் சாரும்.

1907ல் தோன்றிய டாட்டா நிறுவனம் 'ஸாக்சீ'யை ஸ்டீல் ஸிடி — எஃகு நகரமாக்கி, நாளடைவில் ஸ்தாபகரின் பெயரையே சூடிக் கொள்ளும் அளவுக்குப் புகழைத் தேடிக் கொண்டது. அதைக் கண்ணுற்ற 'காலீ மாடீ' ஸ்டேஷன், தான் வெறும் களி மண் இல்லை என்பதைக் காட்டிக் கொண்டு டாட்டா நகர் ஆகிவிட்டது.

அரை நூற்ருண்டுக்குள் அற்புத நகரமாக உருவெடுக்க 'ஸாக்சீ'க்கு அப்படி என்ன பெருமை ? — இந்தக் கேள்விக்கு நீர்வளமும் நிலவளமும் இணைந்து கூறும் பதிலைப் பாருங்கள் :

'தென் பிஹாரில், சோட்டா நாக்பூர் மலைத் தொடரின் பின்னணியிலே கண்களுக்கு எட்டிய தூரம் பசுமை படரவிட்டிருக்கும் எழில்; கர்கை — ஸ்வர்ண ரேகை என்னும் இரு நதிகள் இந்த நகரத்தை அணைத்துச் சென்று இணைந்து மகிழும் இனிய காட்சி ; 'டால்மா' குன்றங்களுக்கு அடியில் பரந்து விரிந்து நகரத்தின் நாவறட்சியைப் போக்கும் இனிய நீர்ப் பெருக்கினைக் கொண்ட 'டிம்ஞ' ஏரி; சுற்றுச் சூழலில் கிடைக்கும் அற்புதக் கனி வளம். இவற்றைக் காட்டிலும் வேறு என்ன வேண்டும் ?'


இயற்கை இப்படிப் பெருமை அடித்துக் கொள்ளும் செயற்கை நகரத்தைக் காணும் ஆவலில் டாட்டா ரயில்வே நிலையத்தில் போய் இறங்கிய என்னை முதன் முதல் வரவேற்றவர் ஒரு டாக்ஸி டிரைவர்; சீக்கிய சர்தார்ஜி. கட்டுமஸ்தான உடல்; உயரத்துக்கேற்ற பருமன் ; எடுப்பான தலைப் பாகையை எடுத்துக் காட்டும் தாடி — மீசை; மிடுக்கான நடை. கண்டு மயங்கி நின்ற என்னை, ''எங்கே போகணும் ?'' என்று கேட்டார்.

'மதரார்ஸ் சம்மேளனீ' என்றேன். என்னையும் என் பெட்டி படுக்கைகளையும் தம் டாக்ஸியில் கொண்டு போட்டுவிட்டு, ''இதோ வந்து விட்டேன்!'' என்று கூறிப் போனுர் அவர்.


போனவர் போனவர்தான். ஒன்று, இரண்டு என்று பல நிமிஷங்கள் ஓடியும் அவர் திரும்பி வராமற் போகவே, எனக்கு உள்ளூற உதறல் எடுத்தது. ஒரு முறை அவர் தலை தெரிந்தாற்போலிருந்தது. ஆனுல் இறங்கிப் போய் அவரிடம், 'போகலாமா ?' என்று கேட்க எனக்குப் பயம். 'நான் அப்படிக் கேட்டுவிட்டால் என்ன செய்வது?' என்று அவருக்குப் பயம் போலும்! வியர்வையில் குளித்திருந்தவர் மீண்டும் தலை மறைவாகி விட்டார்.

கடைசியில் எப்படியோ சமாளித்துச் சிலரை அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்தார். பேசும் மொழி பலவாயினும் சிந்தனை ஒன்று என்பது கவி வாக்காயிற்றே ! அது பொய்க்குமா ?

'சரிதான்! சென்னை டாக்ஸிக்காரர்களின் நோய் அங்கு இங்கு எனுதபடி எங்கிலும் பரவியிருக்கிறது போலும் !' அவரவர்களை




▲ இரும்பு கனிப்பொருள் பெல்ட் கன்வேயரில் பயணப்பட்டு வந்து ...



▲ ...கொதிகலன்களில் உருகி ஏகோகி...

▼ ...இறுதியில் ரயில் சக்கரங்களாக உருமாறுகிறது.



அவரவர்கள் இடத்தில் கொண்டுவிட்டு முழு, முழு சார்ஜாக வாங்கிக் கொள்ளப் போகிறார்!' இருந்தாலும் போக வேண்டிய இடத்துக்கு எப்படியாவது போய்ச் சேர்ந்தால் போதும் என்றிருந்தது. இடித்த புளியாக உட்கார்ந்திருந்த என்னை முன் சீட்டுக்கு வரச் சொல்லிவிட்டு வந்தவர்களைப் புளி மூட்டையாகப் பின்சீட்டில் அடைத்தார். சொச்சம் இருந்தவர்களை என்னோடு இணைத்தார்.

வண்டியை எடுத்த வேகமே அவர் மெதுவாகப் போகமாட்டார் என்று கட்டியம் கூறியது. நான்கு சாலைகள் கூடும் இடம் ஒன்றுக்கு வந்தபொழுது, ஒரு மோட்டார் சைக்கிள் குறுக்கே; இவரது கார் நெடுக்கே. இவர் ஓடிக்க, அவர் ஓடிக்க இரண்டும் ஓரத்திலாவது உராய்ந்து மோதிக் கொள்வது என்று விரதம் பூண்டுவிட்டன. மோட்டார் சைக்கிள் மூன்று சக்கர் அடித்துக் கொண்டு விழுந்தது. அதில் இருந்த இருவரும் தூக்கியெறியப்பட்டுப் புரண்டு எழுந்தனர். இதெல்லாம் கண் மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் நடந்துவிட்டன. ஆனால் நான்...? மூடிய கண்களைத் திறக்கவேயில்லை! 'நாம் வந்த நேரம் சரியில்லை. என்ன ஆகுமோ?'

சர்தார்ஜி வண்டியிலிருந்து இறங்கிப் போனவர் நாம ஜபம் (ஜபுஜி) செய்தவாறே திரும்பி வந்தார். 'ஆண்டவன் காப்பாற்றினான். மோட்டார் சைக்கிளுக்கும் சேதம் இல்லை. பயணிகளும் சிறு சிராய்ப்புக்கூட இன்றித் தப்பினார்கள்!' என்று அவர் கூறிய பின்தான் நான் கண்களைத் திறந்தேன்.

மதராஸ் சம்மேளனியை அடைந்ததும், ''என்ன கேட்கப் போகிறாரோ? சண்டைக்கு வராமல் விட்டால் சரி!'' என்று பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினேன். 'இனியும் கேட்டால் என்ன செய்வது?' என்று திறந்த பர்ஸை மூடாமலே வைத்திருந்தேன். அவர் மீதம் எட்டு ரூபாய் நோட்டைத் தரவே, என் கண்கள் என்னை நம்பவில்லை.

''பரவாயில்லை. வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றேன்.

''எதற்கு? என் கூலி எனக்குச் சரிக்க வேண்டாமா? இந்தப் பயணிகள் எல்லாம் தருவதைக் கணக்கிட்டால், எனக்குச் சேர வேண்டியது கிடைத்துவிடும்!'' என்று கூறி விடைபெற்றார் சர்தார்ஜி.

'அடேயப்பா! அச்சுறுத்தும் உருவத்துள் எத்தனை நல்ல இதயம் ஒளிந்திருக்கிறது!' இப்படி எண்ணித் திரும்பியவனைப் பார்த்து, ''சரியான நேரத்தில்தான் வந்திருக்கிறீர்கள்!'' என்று வரவேற்றார்கள் முன்பின் அறிமுகமில்லாத நண்பர்கள். அதுவும் யாரைப் பார்த்து? 'நாம் வந்த நேரம் சரியில்லை' என்று எண்ணியவனைப் பார்த்து!

மதராஸி சம்மேளனி விழாக் கோலம் பூண்டிருந்தது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் புதுப் பெரியவர்கள் இங்கு தங்கித்தான் சாதுர்மாஸ்யம் அநுஷ்டித்து வந்தார்கள்.

சந்திர மௌளீசுவர பூஜையும் பிக்ஷையும் முடிந்து தீர்த்தம் வழங்கும் கட்டம். அதைத்தான் அவர்கள் சரியான நேரத்தில் வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நானும்

அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, தீர்த்தம் பெற்ற பொழுது வந்த விஷயத்தைக் குறிப்பிட்டேன்.

''இந்த ஊரைப் பற்றிய ஒரு விசேஷம் தெரியுமா ?'' என்று கேட்டார்கள்.

'நவீன பாரதத்தின் நற்கோயில்' என்று இந்த நகரத்தைப் பண்டித ஜவாஹர்லால் வர்ணித்தது நினைவுக்கு வந்தது.

''இது ஒரு குட்டி பாரதம். பல்வேறு மொழிகள் பேசும் பாரத மக்கள் அனைவரையும் இவ்வூரில் காணலாம் !'' என்றார்கள்.

அன்று மாலை மதராஸ் சம்மேளனியே அந்தக் குட்டி பாரதத்துக்குள் இன்னொரு குட்டி பாரதமாகக் காட்சி அளித்தது. பெரியவர்களைத் தரிசனம் செய்யப் பற்பல மொழிகள் பேசும் பாரத மக்கள் வந்திருந்தார்கள்.

பலரும் ஸ்ரீ பெரியவர்களது பாதங்களைத் தொட்டு வணங்க விரும்பினர். இது தேசாசாரம். தெற்கில் இந்தப் பழக்கம் இல்லாததால் ஸ்ரீபெரியவர்கள் பாதுகையைப் பக்கத்திலேயே வைத்து அதைத் தொட்டு வணங்கலாம் என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

பல மொழிகள் பேசுபவராயினும் பாரத மக்கள் ஒரே சிந்தனை உடையவர்கள் என்று பாரதியார் சொன்னது ஆன்மீகத் துறையை வைத்துத்தான் என்பதை இங்கு காண முடிந்தது.

'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!
யந்திரங்கள் வகுத்திடுவீரே!'

என்னும் பாரதியாரின் வாக்கைப் பின்பற்றும் இந்த நகரம் நாட்டிலே அறம் கூட்டும் துறவியைத் தெய்வமாகக் கொண்டாடி மகிழ்வதையும் காண முடிந்தது. என்னதான் மனிதன் மாய்ந்து மாய்ந்து வேலை செய்தாலும் மன நிம்மதி பெறுவதற்கு ஆன்மீகத் துறையைத் தானே சரணடைகிறான்?

மனிதனது இதயம் எப்படி ஓய்ச்சல் ஒழிவின்றி இயங்குகிறதோ, அப்படியே இங்குள்ள இரும்பாலை இயங்குகிறது, இரவு பகல் எந்த நேரமும் ஓய்வு எடுக்காமல் ! இரும்பை உருக்கும் உலையின் சூடு ஒரு நிமிஷம்கூடக் குறையக் கூடாது; குறைந்தால் வேலை ஸ்தம்பித்துவிடும். ஆகையால் கொதிகலன்கள் செயற்பட்ட வண்ணமே இருக்கின்றன. அதனால் அந்தி — சந்தி வேளைகளில் இயற்கை செய்து காட்டும் செக்கர் வானத்தைச் செயற்கை இரவு முழுவதுமே இந்த நகரத்தில் செய்து காட்டுகிறது !

டிஸ்கோ தொழிற்சாலைக்குள் சென்றால், அக்கினித் திரவமென இரும்பு உருகிப் பாய்வதைக் காணலாம். அதனை ஏற்றிச் செல்லும் கலன்கள் குளிர்ந்தபின் கசடு மேலும் இரும்பு அடியிலும் தங்கிவிடுகின்றன. இங்கு தண்டவாளங்கள், உருண்டைக் கம்பிகள், நாடாக்கள், சக்கரங்கள் என்று பல பொருள்களும் தயாராகின்றன. ஆலமரத்தின் அடியை ஒத்திருக்கும் இரும்பைக் காய்ச்சித் தட்டிக் கொட்டி, உருட்டிப் புரட்டி மந்திர ஜால வித்தை செய்யும் இயந்திரங்கள் எத்தனை பயங்கரமானவை. அவற்றின் அடியிலே நின்று செயலாற்றும் மனிதன் எத்தனை சிறியவன் ! அவனால் அசுர பலம் கொண்ட அத்தனை இயந்திரங்களையும் தன் ஆணையில் வைத்திருக்க முடிகிறது. ஆனால் புலன்களை அடக்கி ஆளும் வழியைத் தெரிந்துகொள்ளப் படாத பாடு படுகிறானே, இது ஏன்?

டெல்கோவுக்குள் நுழைந்தால், ராணுவ டிரக்குகளும் லாரிகளும் உருவாகும் அற்புதக் காட்சியைக் காணலாம். முதல் வர்ணம் தீட்டப்பட்ட 'செஸ்ஸி'யைப் புரட்டிவிட்டுச் சக்கரங்கள், இயந்திரங்கள் என்று ஒவ்வொன்றாக மாட்டிவிட்டுக் கடைசி வரை போவதற்குள் ஒரு லாரியே உருப் பெற்று நிற்பதைக் காணும் பொழுது, இது என்ன மாயமோ, மந்திரமோ என்று வியக்கத்தான் தோன்றுகிறது. இயந்திரங்களைப் பொருத்தவிட்டு மனிதன் சாட்சியாக நிற்கிறான்; சரியாகப் பொருந்திவிட்டதா என்று பார்த்து அனுப்புகிறான். இம்மிகூடப் பிசகாமல் அவை தமக்கு அளிக்கப்பட்ட வேலையை எப்படி நிறைவேற்றுகின்றன !

இப்படி இந்த இயந்திர ஜாலத்தைப் பார்த்துக் கொண்டே மைதானத்துக்குப் போனால், சமதளமாகவும், முப்பத்தேழு டிகிரி வரை சாய்வாகவும் இருக்கும் ஒரு நீள் வட்டப் பாதையில், நூறு நூற்றிருபது மைல் அசுர வேகத்தில் லாரிகளும் டிரக்குகளும் சர்க்கஸ் வேலை செய்வதைக் காண்போம். இப்படி உயிரைப் பணயம் வைத்து உழைக்கும் டிரைவர்களுக்கு ஊதியப் பணம் சற்று அதிகம் தானும். இந்தச் சோதனையில் வெற்றி பெற்ற பின்னரே, வண்டி விற்பனைக்கு வருகிறது !

சின்னஞ்சிறு கிராமம் என்றாலும் தேர்—திருவிழா என்று வந்துவிட்டால் கடை கண்ணிகள் கூடிவிடுமே, அது போல மக்கள் பெருக்கத்துக்கேற்ப கடை—கண்ணிகள் மட்டும் அல்ல; இரும்புத் தொழில் சம்பந்தமான எத்தனையோ துணைத் தொழில்களும் இங்கு தோன்றி யிருக்கின்றன.

இத்தனை தொழில்கள் வளர்ந்துவிட்ட இந்த நகரத்தில் மத்திய அரசும் தன் பங்குக்குத் தேசியக் கனி வளச் சோதனைச் சாலை நிறுவி நாடு முழுவதற்குமே தொழில் வளம் சிறக்க உதவி புரிகிறது.

'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்ற பழமொழியைக் கடைப்பிடித்துப் பல கிளைகள் விட்டு வளர்ந்துள்ள டாட்டா நிறுவனம் ஆரம்ப காலம் தொட்டே பாரதத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்வேறு மொழிகள் பேசும் மக்களையும் இங்கு தருவித்து ஒருமைப் பாட்டுடன் வாழக் கற்றுத் தந்திருக்கிறது.

இங்குதான் எத்தனை தமிழ்க் குடும்பங்கள், தெலுங்குக் குடும்பங்கள்! மலையாள, வங்காள, ஒரிய மக்களும்தான் எத்தனை பேர் ! பாரதத்தின் மொழிகள் அத்தனையும் பேசும் நகரம் இது ! 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்று உணர்ந்து வாழ்வதோடு, இவர்கள் தங்கள் கலாசாரப் பண்பாட்டை வளர்க்கத் தனித்தும் இயங்கி வருகிறார்கள். ஆம், தங்கள் கலாசாரத்துக்கேற்ற சங்கங்களை நிறுவிச் செயல்பட்டு வருகிறார்கள்.

ஒரு காலத்தில் மதராஸ் என்றாலே தென்னிந்திய மொழிகள் நான்கினையும் பேசும் மக்களைத்தான் குறிக்கும். ஆரம்பத்தில் அப்படித் தொடங்கிய சங்கம்தான், இப்பொழுது



எமது ஆதாய திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

விஷமக் கவிதை—5



வழி(ப்)படல்!

காந்தியைவழிபடப்
பலபேர் உண்டு, - எனின்
காந்தியம் வழிப்பட
எவரே உண்டு ?

தமிழழகன்

தமிழர்களைக் கொண்டு தமிழர் பண்பாட்டைப் பாதுகாப்பதாகச் செயற்பட்டு வருகிறது. இங்குள்ள கலையரங்கில் 'கல்கி' சதாசிவம் அவர்கள் வழங்கிய வல்லப கணபதி எடுப்பாகக் காட்சி தருகிறார் !

நாலு பெண்கள் கூடிவிட்டால் ஓயாத பேச்சுத்தான் என்று குறைப்பட்டுக் கொள்கிறவர்கள் இங்கு வந்து பார்த்தால் தெரியும், பெரிய காரியத்தை எப்படிச் சுலபமாகச் சாதித்திருக்கிறார்கள் பெண்கள் என்பது ! தக்ஷிண பாரத மாதர் சங்கம் ஹிந்தி, ஆங்கிலத்தைப் போதனமொழியாகக் கொண்டு மும்மொழித் திட்டத்தைச் செயற்படுத்தி அற்புதமான ஒரு சிறார்ப்பள்ளிநடத்திவருகிறது. மற்ற மொழிகள் பேசும் மாணவமணிகள் மழலைத் தமிழ் பேசுவதைக் கேட்டுப் புல்லரிக்கும்.

நான் போன போதுகூடப் பேச்சு தூக்கியேதான் ஒலித்தது, களைப்புத் தெரியாமல் வேலை செய்வதற்குப் பேச்சு ஒரு டானிக்கோ என்னமோ என்று நினைக்குமளவுக்கு. மாதர் சமாஜம் பேசும் பேச்சைச் செயலாக்கிக் காட்டியும் இருக்கிறது. இப்பொழுதே பெரிய பள்ளி ! இன்னும் பெரியதாக்கப் புள்ளி போட்டுக் கொண்டிருக்கிறது!

டெல்கோவினரும் தங்கள் பங்கு சோடை இல்லை என்பதைக் காட்டுகிறார்கள். பாரதீய கலாசங்கம் நிறுவி இணையற்ற கலாசாரப் பணி புரிந்து வருகிறார்கள்.

ஆந்திரர்களோ இலக்கிய நாடக சங்கம் ஒன்றை நிறுவி ஆத்மிகப் பணியையும் சேர்த்துச் சிறப்புப் பணி புரிந்து வருகிறார்கள். புதுப் பெரியவர்களின் கைகளினால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்து சிவ—விஷ்ணு கோயிலில் அத்வைதப் பணி செய்துள்ளார்கள் !

பங்களா கிளப் என்று ஒன்று செயற்பட்டு வருகிறது. இதை ஆரம்பித்தவர் கேரளக்காரர் என்று கேள்விப்படும் பொழுது, மொழியைக் காட்டிலும் மனிதப் பண்பின் மாண்பு தெரிகிறதல்லவா ?

கேரளக் கலாசாரத்துக்குப் பாடுபடுவதோடு சிறந்த மலையாள மொழிப் படங்களைக் காட்டி மகிழ்கிறது கேரளா கிளப். 'ஓய்வுபெற்றபின் நாங்கள் இந்த மண்ணில் வேரூன்றுவதில்லை. எங்கள் மண்ணுக்கே சென்றுவிடுகிறோம் !' என்று மண் பாசத்தைக் கொட்டினார் இதன் செயலாளர்.

பிஹாரிகளும் தங்களுக்கென்று ஒரு சங்கம் — தொழிற் சங்கம் அல்ல — நிறுவி நடத்துகிறார்கள். எல்லாப் பிராந்தியக் கலைகளுக்கும் இதில் இடம் அளித்து ஐக்கிய பாவத்தை மேலும் இறுகச் செய்யும் முயற்சியில் ஈடுபடப் போகிறதாம் இச்சங்கம். மேற்கூறிய பல சங்கங்களின் ஒத்துழைப்புடன் வேத தர்ம சாஸ்திர பரிபாலன சபையும் இயங்கி ஆஸ்திகம் வளர்க்கிறது.

ஜம்ஷேத்புரில் மழை பெய்துவிட்டால் சேறுக்கும் சகதிக்கும் அஞ்சி உடையைத் தூக்கி மடித்துக் கொண்டு போக வேண்டிய அவசியம் இல்லை. மழை பெய்து ஓய்ந்த சில நிமிஷங்களுக்குள்ளாகவே, சாலைகள் துடைத்துவிட்டாற் போல் துப்புரவு ஆகிவிடுகின்றன. இந்தச் சாலை அமைப்புக்கு நகர அமைப்பு மட்டும் காரணம் அல்ல; இயற்கை அமைப்புமே காரணம்.

இத்தனை திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்ட இந்த நகரத்திலும் திடீர்க் குடிசைகள் உண்டு. இங்கு குடியேறிவிட்டவர்களை அப்புறப்படுத்துவது பகீரதப் பிரயத்தனம் மட்டும் அல்ல; பிரும்மப் பிரயத்தனமும்கூட. இப்படி திருஷ்டி கழித்துக் கொள்ளுகிறது நகரம்.

இங்குள்ள ஜுபிலி பார்க் ஒரு சிறந்த பொழுதுபோக்கு இடம். மைசூர் பிருந்தாவனத்தின் மினி உருவம் என்றாலும் ஏறக்குறைய இருநூறு ஏக்கர்களில் இது பரந்துள்ளது. பல்வண்ண ரோஜாக்கள் இங்கு பயிராகின்றன.

விடுமுறை நாள் என்றால், 'வன போஜனம்' என்னும் 'பிக்னிக்'குக்குப் புறப்படத் தூண்டும் பல சூழல்களைக் கொண்ட நகரம். டிம்னா ஏரி, நதிகளின் சங்கமம், அதையொட்டி வளர்ந்துள்ள தோப்புகள், ஜுபிலி பார்க் ஆகியவை கண்ணுக்குக் குளுமை தரும் பசுமை மிகு இடங்கள்.

சுருக்கமாகச் சொல்லப் போனால் ஜம்ஷேத்புர் பசுமை மிகு இடம்; பசை மிகு இடம். பலரும் இங்கு வேலை கிடைக்காதா என்று ஏங்கும் இடம். அப்படியும் மக்களுக்குக் குறை ஏதும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. பொருளாதார ரீதியில் நாடே நலம் கெட்டிருக்கும் பொழுது அது இந்த நகரையும் பாதிக்கத்தானே செய்யும் ? கடலில் அலை எழுந்தால் கரையில் மோதத்தானே செய்யும்?

இங்குள்ள டாட்டா நிறுவனத்தின் மருத்துவ மனை தன்னை நாடி வருபவர்களுக்கு நோயற்ற வாழ்வை நல்குகிறது. அரசுத் துறை மருத்துவ மனையோ 'நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்' என்று வேண்டிக் கொள்ளச் சொல்கிறது.

அரசியல் ஈடுபாடு....?

பலருக்கும் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் பள்ளிகளை மூடச் சொன்னது பிடிக்கவில்லை. என்றாலும், அண்மையில் விஜயம் செய்த அவர் பேச்சைக் கேட்க மாணவர்களும் மக்களும் கொட்டும் மழையில் நின்று, நீராடி அவரையும் நீராட்டி அவரிடம் தங்களுக்குள்ள பக்தி சிரத்தையைக் காட்டிக் கொண்டனரே, அதன் பொருள் என்ன ?



பஞ்சப்படியும் பசுப்படியும்!

"லக்ஷ்மி! ஆபத்சகாயம் என்பவர் ஓர் அற்புதமான யோசனை தெரிவிக்கிறார்!"

கையில் அன்றையச் செய்தித் தாளுடன் அடுக்களைக்குள் நுழைந்தார் நாராயணன்.

"என்னவாம்?" — கடுகு தாளித்துக் கொண்டே கேட்டாள் லக்ஷ்மி.

"புள்ளி விவரப்படி கிராக்கிப்படி தருவது என்று அரசாங்கம் தீர்மானித்ததிலிருந்து விஷம் போலப் புள்ளி விவரம் ஏறிக்கொண்டு போகிறது. அதனால் பல கோடி ரூபாய்கள் கிராக்கிப்படி தரும்படியான இக்கட்டான நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கிறதல்லவா? அதைத் தவிர்க்க ஒரு வழி சொல்லியிருக்கிறார்!"

"என்ன வழி சொல்லியிருக்கிறார்?"

"இதைத் தவிர்க்கக் கிராக்கிப் படியைக் கட்டோடு நிறுத்திவிட்டு ஆளுக்கு இரண்டு இரண்டு பசுக்கள் வாங்கித் தரலாமாம். குடும்பத்துக்குத் தேவையான பால், தயிர், நெய் கிடைப்பது மட்டுமின்றி ஆண்டு ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் நிகர லாபம் வருமாம். புள்ளி விவரத்தோடு நிரூபித்திருக்கிறார்!"

"நல்ல யோசனைதான். பசு இருக்கிற வீட்டிலே லக்ஷ்மி தாண்டவமாடுவாள். ஆனால் இந்த யோசனை அரசாங்கத்துக்கு எங்கே தெரியப் போகிறது? — சீக்கிரம் குளித்துவிட்டுச் சாப்பிட வாருங்கள். உங்களுக்கும் ஆபீசுக்கு நேரமாகிறது; எனக்கும் நேரமாகிறது. சாவகாசமாகச் சாயந்திரம் வந்து பேசிக் கொள்ளுவோம்!"

"இந்த யோசனையைச் செயலாக்கினால் நம் குடும்பத்துக்கு நாலு பசுக்கள் கிடைக்கும்!" கணக்குப் போட்டுக் கொண்டே நாராயணன் குளிக்கப் போனார்.

* * *

ஆபத்சகாயத்தின் அருமையான யோசனை அமைச்சரவையின் கவனத்தை ஈர்த்திருந்தது. ஏறக்குறைய ஆறு மணி நேரம் காபினட் கூட்டம் நடைபெற்றது.

"பொருளாதார இக்கட்டிலிருந்து தப்ப இதைக் காட்டிலும் நல்ல யோசனை இருக்க முடியாது. இத்தகைய மேதாவியைக் காலம் தாழ்த்திக் கௌரவிப்பது நமக்கு அழகு ஆகாது. எனவே சுதந்திரத் திருவிழாவையோ குடியரசு நாளையோ எதிர்பார்த்துக்கொண்டு காத்திராமல் கையோடு கையாக 'பசுரத்ன' என்ற பட்டம் கொடுத்துக் கௌரவிக்கவேண்டும். அப்புறம் இத்திட்டத்தை அதிசீக்கிரம் அமுல்படுத்துவது அத்தியாவசியம்!"

பிரதமரது தாக்கீது பிறக்கவே, நிதியமைச்சகம் நிபுணர்களைக் கொண்டு ஆராய்ந்தது. புள்ளி விவரத் துறை படபடவென்று கணக்கு எடுத்தது. சட்டத் துறை அமைச்சகம், சட்டதிட்டங்களின் பொத்தல்களை அடைக்க வழி துறைகளை மேற்கொண்டது.

ஜனநாயக உரிமைகளையும் கருத்தில் கொண்டு ஓர் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

அதில் ஒரு ஷராவை அழுத்தமாகக் குறிப்பிட்டிருந்தார்கள். அரசுக்கு யாரையும் வற்புறுத்தும் நோக்கம் கிடையாது. கிராக்கிப் படிதான் வேண்டும் என்பவர்களுக்குக் கிராக்கிப் படியே தரப்படும். எங்களுக்குப் பசுக்களே தேவை என்பவர்களுக்குப் பசுக்களே தரப்படும். தலைக்கு இரண்டு பசுக்கள். பலான தேதிக்குள் எழுத்துமூலம் அரசுச் சிப்பந்திகள் தங்கள் விருப்பத்தைத் தெரிவித்துவிட வேண்டும்!

சாக்குச் சாக்காக வந்து குவிந்த மனுக்களைப் பரிசீலிக்கத் தனியானதொரு பிரிவே வேலை செய்யத் தொடங்கியது. அதற்கும் இந்தக் கிராக்கிப்படிப் பிரச்னை உண்டே, அதனிடமும் விருப்பம் கோரப்பட்டது.

அவ்வளவு கடிதங்களையும் பரிசீலித்தபோது அரசுச் சிப்பந்திகளின் ஒருமைப்பாடு தெரிய வந்தது.

* * *

"இனிமேல் பால்காரங்க வாயிலே மண்ணு தான்! என்ன அக்கிரமம் பண்ணுகிறானுக! பசும் பாலை எருமைப் பால்னு தருகிறான். தண்ணிப் பாலைப் பசும்பால்னு அளக்கிறான்! அதுகூடப் பரவாயில்லை. எத்தனை நேரம் கால் கடுக்க நிறுத்தி வைக்கிறான்!" தனிப்பட்ட பால் டிப்போக்காரனைச் சாடினார் நாராயணன். தினம் காலையில் பாலுக்குத் தவம் கிடக்கிறது அவருக்கல்லவா தெரியும்?

"'டோன்ட் மில்க்'னு ஒண்ணு; 'ஸ்டான்டர்டைஸ்டு மில்க்'னு ஒண்ணு! இரண்டும் வாயிலே வைக்க வழங்கலை! அதிலிருந்து விடிவு காலம் கிடைக்கிறதற்காகவாவது அரசை வாழ்த்தணும்!" அடுத்த வீட்டு அப்புசாமி அரசுப் பால் பண்ணைக்கு அறம் பாடினார்.

"கால்கேஸ்காரனும் இண்டேன்காரனும் என்ன பாடு படுத்தறான்கள்! அன்றைக்கு வந்து 'வாங்கிக்கோ, வாங்கிக்கோ'ன்னு



தொங்கிறுங்க. இன்றைக்கு உங்க நம்பர் 975 சார். அடுத்த மாதம் இதே தேதியிலே காஸ் வந்துவிட்டால் ஆண்டவனுக்குத் தேங்காய் உடையுங்க என்கிறுங்க. சாணத்திலிருந்து 'காஸ்' தயாரிக்கலாம். தெரியுமோ இல்லையோ?'' — தாம் ஓர் இன்ஜினியர் என்பதைப் பறை சாற்றினுர் பக்கத்து வீட்டுப் பங்காரு சாமி.

இப்படியாகச் செப்புமொழி பதினெட்டு உடையவர்கள் சிந்தனை ஒன்ருகச் செயல் படவே, அரசு அகமகிழ்ந்தது. 'பொருளாதார இக்கட்டிலிருந்து விடுபடலாம். கிராக்கிப் படியைத் தவிர்த்து விட்டால்!' என்று மனப்பால் குடித்தது. எத்தனை கோடி ரூபாய் மிச்சப்படும் என்று கற்பனையில் ஆழ்ந்தது. பாதிச் சுமை குறைந்து விட்டாற் போலப் பெருமூச்சு விட்டது.

அடுத்த கட்டமாக நாட்டில் உள்ள பசுக்களைக் கணக்கெடுத்தார்கள். பசுக்கள் பற்ருக்குறை என்று தெரிய வரவே, அயல்நாட்டுப் பசுக்களுக்கு ஆர்டர் கொடுத்தார்கள். தனியார் துறையினருக்கு இத்தனை பசுக்கள் தான் வைத்துக் கொள்ளலாம் என்று உச்ச வரம்புக்கு ஓர் அவசரச் சட்டம் போட்டு 'அடிமாடு' விலைக்கு வாங்கினுர்கள்.

இதற்காக அதிக முதலீடு செய்யத்தான் வேண்டியிருந்தது. 'ஒரு தொழிலை ஆரம்பிக்கும்போது முதலீடு செய்கிறேம். அது நாளாவட்டத்தில்தானே லாபம் தரும்? இப்பொழுது கடன் பட்டாலும் நாள்தோறும் விஷம்போல் ஏறிவரும் விலைவாசிக்கு ஏற்பக் கிராக்கிப்படி கொடுப்ப தென்ருல் கட்டி வராது. அரசாங்கமே மஞ்சள் கடிதாசு கொடுக்கும் நிலைக்கு வந்து விடும். அதற்கு இந்தப் பசு ஏற்பாடு எத்தனையோ தேவலை!' என்ற கருத்தே மேலோங்கி யிருந்தது. அரசின் சிரமம் அரசுக்குத்தானே தெரியும்? அரிப்பெடுத்தவன்தானே சொறிந்து கொள்ளவும் செய்வான்?

இப்படியும் அப்படியும் முனைந்து அரசு எப்படியோ பசு வழங்கும் பிரச்னையைச் சமாளித்து விட்டது. 'யானை விலை, குதிரை விலை' என்பது போய் 'பசு விலை' என்பது பழமொழியாகி விட்டது. 'பிஞ்சராப் போல்' பசுக்களுக்குக்கூட நல்ல கிராக்கி என்ருல், இந்தக் கிராக்கிப் படிப் பிரச்னை அரசை எப்படி ஆட்டிப் படைத்திருக்கிறது என்று தெரியவில்லையா?

* * *

அட்டெண்டர் அங்கப்பனின் மனைவி வீராயிக்குக் கொள்ளை மகிழ்ச்சி. ''அந்தக் காலத்திலே சொல்லுவாங்களாம் குந்தக் குடிசை, ஒரு முருங்கை மரம், ஓர் எருமை இருந்து விட்டால் வயிறு கழுவுவது சிரமமில்லை என்று! ஒரு வருஷத்திலே பாருங்க இந்தப் பசுக்களை வைத்துக் கொண்டு நான் எவ்வளவு சம்பாதிக்கிறேன் என்று!'' என்ருள். அங்கப்பனும் அகமகிழ்ந்து போனுன்.

''இதோ பாருங்க! நாலு பசுக்களையும் காலார ஓட்டிக் கொண்டு போறது, குளிப்பாட்டறது — இரண்டும் உங்கள் பொறுப்பு!'' என்ருள் லக்ஷ்மி.

''சரி, இரண்டு வேலையும் மாடு கறக்கிறது, சாணம் பிசைந்து வரட்டி தட்டறது உன் வேலை!'' என்ருர் நாராயணன்.

''என்னை வேலைக்காரின்னு நினைத்தீர்களா?''

''என்னை மாடு மேய்ப்பவன் என்று நினைத்தாயா?''

இப்படிக் குடும்பக் கலகத்துக்கு வித்திட்டன லக்ஷ்மி—நாராயணன் பசுக்கள் என்ருலும் நல்ல கறவையால் பிறர் பார்த்துப் பொருமைப்படும்படி செய்தன.

''எங்கள் வீட்டுப் பசுக்கள் லக்ஷ்மி வீட்டுப் பசுக்களைப் போல் பால் தரவில்லை. இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது. யாரோ கை நனைத்திருக்கிருர்கள். அவர்களுக்கு நல்ல பசுக்களாகக் கொடுத்திருக்கிருர்கள். எங்கள் பசுவை மாற்றித் தர வேண்டும். ஒருவர் வீட்டுப் பசு அதிகமாகவும், இன்னெருவர் வீட்டுப் பசு குறைவாகவும் பால் தந்தால் எப்படி? கிராக்கிப் படியில் எப்படித் தராதரம் கிடையாதோ, அப்படிப் பால் விஷயத்திலும் அரசாங்கம் செய்ய வேண்டும்!'' இப்படி ஒரு புகார் சென்றது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் இந்தக் கடிதம். இதுபோல் எத்தனை எத்தனையோ கடிதங்கள்!

''எங்கள் வீட்டுப் பசு தண்ணிப் பால் தருகிறது. அவர்கள் வீட்டுப் பசு கெட்டிப் பால் தருகிறது. நாங்கள் என்ன தவறு செய்தோம்? எதற்கு எங்களுக்கு மட்டும் தண்ணிப் பால்?''

''எங்கள் வீட்டுப் பசு பாலை இக்கிக்கொள்கிறது. இலேசில் கறப்பதில்லை!''

''எங்கள் வீட்டுப் பசு உதைக்கிறது. கால்களைத் தளைந்து கறந்துமே அவருக்கு முன் பற்கள் இரண்டு உதிர்ந்து விட்டன!'' வைத்தியச் செலவும் அரசாங்கத்தினுடையது தான் என்ருலும் சொந்தப் பணம் போய் விட்டது போலப் புகார்!

''அடுத்த வீட்டுப் பசு எங்கள் குழந்தையை முட்டிவிட்டது! அவர்கள் வீட்டுக்குழந்தையை எங்கள் வீட்டுப் பசு நக்கிக் கொடுக்கிறது!''




அபிர்ாமி அந்தாதி



சீர்காழி கோவிந்தராஜன் பாடிய அபிராமி அந்தாதி எச். எம். வி. இசைத்தட்டு வெளியீட்டு விழா திருக்கடையூரில் நடைபெற்றது. பிச்சைக் கட்டளை கனகசபை பிள்ளை, சீர்காழிக்குப் பொன்னாடை போர்த்தினார். அருகில் எச். எம். வி. நிறுவனத்தைச் சேர்ந்த திரு மால்கபதி.

பாவ லய சங்கீத சிரோமணி!



வீணை தனம்மாள் உள்ளிட்ட மிகப் பெரிய சங்கீத பரம்பரையில் வந்துள்ள ஸ்ரீமதி பிருந்தா அவர்களை பம்பாய் நகரம் அண்மையில் வரவேற்றுக் கௌரவித்தது. அவரது சம்பிரதாய சுத்தமான பாணி, மனோதர்மம், பாவ பூர்வமாக, அமைதியாகப் பாடும் முறை முதலிய சிறப்பியல்புகளைப் பிரமுகர்களும் இசை அறிஞர்களும் எடுத்துரைத்தனர். விழாவை திரு ஜே. ஜயராமன் தலைமையில் இயங்கிய பிருந்தா பாராட்டுக் குழு ஏற்பாடு செய்திருந்தது. சுவையான கட்டுரைகள் அடங்கிய பயனுள்ள மலரையும் வெளியிட்டிருக்கிறார்கள், இத்தருணத்தில். படத்தில் ஹிந்துஸ்தானி இசையில் விற்பன்னரான ஸ்ரீமதி ஹீராபாய் படோடேகர் ஸ்ரீமதி பிருந்தாவுக்கு 'பாவ லய சங்கீத சிரோமணி' என்ற பட்டத்தை வழங்குகிறார்.

''கன்றுபோட்டு ஆறுமாதங்கள் ஆகவில்லை. அதற்குள் எங்கள் வீட்டுப் பசு மறுத்து விட்டது. மறுப்படி மாட்டை வைத்துக்கொண்டு நாங்கள் என்ன செய்வது? வைக்கோலுக்கு வீண் செலவு! உடனே மாற்றிக் கட்டவும்!''

இப்படிப் புகார்கள் வைக்கோற் போராகக் குவிந்தன ஒருபுறம். இன்னொரு புறம், மனித உணவுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு போதாதென்று, மாடுகளின் தீவனத்துக்கும் வந்தது பஞ்சம்! விலையோ வானத்தை எட்டியது. விலைக் கட்டுப்பாடு கொண்டு வரவே, இருந்த தீவனமும் பதுங்கிற்று!

அன்று மகிழ்ந்த அரசாங்கம் இன்று திணறியது. பசுவின் தீவனத்துக்காக வெளிநாட்டினிடம் கப்பறை ஏந்தி நின்றது. மறுப்படிப் பசுக்களைக் கவனிக்கவென்று ஒரு வாரியம் அமைத்தது.

என்ன முயன்றும் தீவனத்தின் விலையை மட்டுப்படுத்த முடியவில்லை.

மாடு கறக்கச் தெரியாதவர்கள் கறக்க ஆட்களை வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் 'விலைவாசிக்கு ஏற்பச் சம்பளம் போட்டுக் கொடு, சாமி!' என்று கேட்கவே, பணத்துக்கு எங்கே போவது என்று திண்டாடினார்கள், பசுப்படி பெற்றவர்கள். 'பசுப் பராமரிப்புக்கு ஓர் அலவன்ஸ் தேவை' என்ற கசமுசப்பு நாளடைவில் கிளர்ச்சியாக வலுத்தது. கிராக்கிப் படியை ஒழித்துப் பசு வாங்கி வழங்கும் பொழுதே அபாரக் கடன்பட்டு விட்ட அரசாங்கம், தன் அதிகாரத்தைக் காட்டிக் கிளர்ச்சியை அடக்கி விடலாம் என்று கனவு கண்டது.

''கிராக்கிப் படிக்கு மாற்று யோசனை தெரிவித்துப் பசுக்களை வழங்கியபொழுதே, இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுங்கள் என்று கேட்டிருந்தோம். எல்லோரும் ஒருமுகமாகச் சம்மதித்து எழுதிக்கொடுத்தீர்கள். இப்பொழுது மீண்டும் கிராக்கிப் படி கேட்டால் உங்கள் கோரிக்கை சட்டப்படி செல்லாது!'' என்ற சட்டப் பிரச்னையை எழுப்பியது.

''எங்கள் கோரிக்கை சட்டப்படி செல்லாது என்று எப்படிக் கூற முடியும்? நாங்கள் கிராக்கிப் படி கேட்கவில்லையே! பசுப் பராமரிப்பு அலவன்ஸ்தானே கேட்கிறோம்? தந்தே ஆக வேண்டும். இல்லாவிட்டால் நாங்களும், எங்கள் பசுக்களும் மறியல் செய்வோம். எங்கள் கோரிக்கை ஈடேறும் வரை ஓயமாட்டோம்!'' என்று எதிர்ப்புத் தெரிவித்து மறியலுக்கான நாளும் குறித்து விட்டனர் அரசு ஊழியர்கள்.

'பார்த்தால் பசு; பாய்ந்தால் புலி!' பசுக்கள் படையெடுத்து முட்ட வந்துவிட்டால்...?

ஆட்சியாளர் கை கால் ஓடாமற் போகவே, 'பசுரத்ன' ஆபத்சகாயத்தைத் தேடுகின்றதாகக் கேள்வி. பசுத் தாக்குதலுக்குப் பயந்து அவரிடமே ஆட்சியை ஒப்படைத்துவிட்டுத் 'தப்பினோம் பிழைத்தோம்' என்று ஓடிவிடலாமா என்று! ஆனால் 'பிஞ்சாரப்போல்' நடத்தி வந்த ஆபத் சகாயம், தமது அத்தனை பசுக்களும் நல்ல விலைக்குப் போய்விடவே, பசுபதி கோயிலில் பிறர் கையை எதிர்பாராமல் பணத் தட்டுப்பாடின்றித் துறவு பூண்டு நிம்மதியாக வாழ்வதாகக் கேள்வி!

எங்கம்மா சபதம்



அம்மாவுக்கு இழைக்கப்பட்டு விட்ட கொடுமையை எதிர்த்துப் போராடும் வீராங்கனைகளான இரு சகோதரிகளின் கதை. இதில் வில்லனாகக் கருதப்பட்டவன் கடைசியில் மிகவும் நல்லவன் என்பது வெளியாகிறது. அதுதான் சற்றுப் புதுமை. இரு சகோதரிகளையும் வீராங்கனைகளாகக் காட்டுவதற்காக ஆரம்பத்திலேயே நிறைய 'டிஷ்யூம் டிஷ்யூம்' காட்சிகள் வருகின்றன.

விதுபாலா, அக்காள்; ஜெயசித்ரா, தங்கை. இருவரும் போட்டி போட்டுக் கொண்டு சக்கைப் போடு போட்டிருக்கின்றனர்.

எந்தத் தாயாவது, தன் கணவன் மீது பெரும் பழி சுமத்தித் தன்னை விட்டுப் பிரித்து விட்டான் என்பதாக எண்ணிக் கொண்டு முதலாளியைப் பழி வாங்கும் ஆசையில், தான் பெற்று வளர்த்த பெண்களின் வாழ்வையே பாழாக்குவாளா? தாய்மை என்பதன் இலக்கண இலக்கியங்களையெல்லாம், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வந்துள்ள பண்புகளையெல்லாம் வெகு சுலபமாகக் குழி தோண்டிப் புதைத்து விட்டார்கள்!

முத்துராமன், அண்ணன், மிருக டாக்டர். சிவகுமார், தம்பி, டாக்டர். இருவருமே ரொம்ப தமாஷாக நடித்திருக்கின்றனர். இருவரும் ஒருவருக்கொருவர், ஈடு கொடுத்துப் படத்துக்கே சுவையூட்டியிருக்கின்றனர். இருவேறு டாக்டர்களிடமும் வரும் நோயாளிகளை வைத்துக் கொண்டு பல நகைச்சுவை நிகழ்ச்சிகள் பின்னப்பட்டிருக்கின்றன. அந்தக் காட்சிகளில் ரசிகர்களின் கையொலியும் ஆரவாரமும் பிரமாதம்! எல்லாரும் சிரிக்கும்போது நமக்கும் சிரிப்பு வந்து விடுகிறதே!

குடும்பத் தலைவர் அசோகன், மிக இயல்பாக அலட்டிக் கொள்ளாமல் நடித்திருக்கிறார். மனோரமாவை வேலைக்காரியாக்கி, அவளுக்கு எஜமானுடன் தொடர்பு இருப்பதாக ஒரு சந்தேகத்தைக் கிளப்பி, அந்தச் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தப் போலியான பல சம்பவங்களை உருவாக்கி... அப்பாவைப் பற்றிப் பிள்ளைகளே அருவருப்பாக நினைக்க வழி வகுத்து... சக்கரைக்கும், அரிசிக்கும்தான் பற்றாக்குறை. உயர்ந்த கற்பனைகளுக்குக் கூடவா தமிழகத்தில் பஞ்சம்? அட ஆண்டவனே!

சுவையான வசனங்களுக்காகப் பஞ்சு அருணாசலத்தையும் சிக்கல் இல்லாத காட்சியமைப்பு டைரக்ஷன் ஆகியவைகளுக்காக எஸ். பி. முத்துராமனையும் பாராட்டலாம்.

''எங்கம்மா சபதம்'' — திரை உலகின் தரத்தைக் குறைக்கச் சபதமெடுத்துக் கொண்டதுபோல் கதையமைப்பைக் கொண்டிருக்கிறது. — காந்தன்

டௌரி கல்யாண வைபோகமே...

நாடகத்தின் தலைப்பே முகத்தில் புன்னகையையும் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது. நாடகமும் ரசிகர்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கவில்லை. ஒவ்வொரு காட்சியும் பார்வையாளரிடையே பலமான சிரிப்பையும் உற்சாகமான கலகலப்பையும் ஏற்படுத்தி நேரம் போவதே தெரியாமல் நல்ல பொழுதுபோக்குக்கு வழிவகுத்துக் கொடுத்திருக்கிறது. சிரித்து மகிழ்வதற்கேற்ற கதையையும், சம்பவக் கோவைகளையும் அளிப்பது வழக்கப்படி பிராம்மண சமூகச் சூழலைக் கொண்ட கற்பனை.

நடுத்தர வர்க்கத்துக் குடும்பத் தலைவன் கணேசனாகக் காத்தாடி ராமமூர்த்தி அற்புதமாக நடிக்கிறார். அந்தச் சின்ன உருவத்தில்தான் எத்தகைய அபாரமான திறமை? மனிதர் உடலை வருத்திக்கொள்ளவில்லை. குரலை உயர்த்தித் தாழ்த்திக் கர்ஜிக்கவில்லை. அங்கசேஷ்டைகள் காட்டிச் சர்க்கஸ் நடத்தவில்லை. மிக மிக இயல்பாக, எளிமையாக, அநாயாசமாக நடித்து 'அப்ளாஸ்'களை அள்ளிக் கொண்டு போகிறார். அவருடைய மனைவி உமாவாக வரும் லலிதாவும் அழகாக அடக்கமாக இயல்பாக நடித்து ரசிகர்களின் மனத்தில் இடம் பெறுகிறார்.

வேலையில்லாப் பட்டதாரியாக, அண்ணனுக்கு அடங்கிய தம்பி நடேசனாக வரும் ராஜேஷ் ஏன் அப்படி நடிக்கிறார், பேசுகிறார் என்று ஆரம்பத்தில் நினைக்கத் தோன்றினாலும் முடிவில் அந்த நடிப்பே ஒரு பாத்திரச் சிறப்பு என்பதை அறிந்து சபாஷ் கொடுக்கிறோம்.

சுப்புடு மாமாவின் கனீர்ப் பேச்சும், நடிப்பும் சுவை கூட்டுகின்றன. ராஜகலவையாக வரும் முத்தண்ணா ராமபத்ரன் தனது அப்பாவித்தன நடிப்பாலும் ஜவ்வரிசிப் பாயாசத்தினாலும் கல்யாணக் கலகலப்பை உண்டாக்கிவிடுகிறார்.

கதை வசனம், டைரக்ஷன் மூன்றையும் ஏற்றிருக்கிறார் விசு. வசனம் நன்றாக இருக்கிறது. கையில் காலணா இல்லாத கணேசனுக்கு அத்தனை வீம்பும் பிடிவாதமும் அவசியம்தானா? அதுவும் நாகோஜிராவ் உதவி அளிக்க அலையாக அலையும்போது அதை நிராகரிப்பது — அதுதான் கதை என்று கதாசிரியர் கூறலாம். ஆனால் யதார்த்தத்தில் அதற்கு வலு இல்லை. சில பாத்திரங்களின் வேஷப் பொருத்தம் சரியாக அமையவில்லை. மணமகன் மங்கபதி சுலபமாக அப்ளாஸ் வாங்கிவிடுகிறார்.

கணேசன் தம்பதியர் நடேசனின் கல்யாணத்துக்குப் பெண்ணின் தந்தையிடம் சீர்வரிசை கேட்க நிமிர்ந்து நிற்கும்போது விருவிருப்பும் சிரிப்பும் பொங்கி வருகின்றன.

'டௌரி கல்யாண வைபோகம்' அமோகமாகத் தொடர்ந்து நடக்கும். -கௌசிகன்







பழைமைப் பித்தர்கள்: புதுமைச் சித்தர்கள்!

''ஜப்பானுக்குப் போனதும்தான் நம் நாட்டில் நிலவும் மிகப் பெரியதொரு குறை சுருக்கென்று மனத்தில் தைக்கிறது'' என்றார் ஸ்ரீமதி ராதா. ''இங்கே நாம் ஒவ்வொருவருமே நமது கெட்டிக்காரத்தனத்தைக் காட்ட முற்படுகிறோம். அதனால் நெல்லிக்காய் மூட்டைபோல் இருக்கிறோம். பேச்சு நிறைய உற்பத்தியாகிறதே ஒழிய, காரிய ரீதியாகச் சாதனைகள் குறைந்து விடுகின்றன. ஜப்பானியர் அப்படியல்ல. ராணுவத்தினர்போல் ஒரு கட்டுப்பாடுடன் நடக்கிறார்கள். எறும்புகளைப் போல் சுறுசுறுப்புடன் இயங்குகிறார்கள்.''

அதனால்தான் இன்று அமெரிக்காவேகூட ஓரளவு அஞ்சும் நிலைக்கு ஜப்பானின் பொருளாதாரம் வளர்ச்சியுற்றிருக்கிறது. உழைப்பதிலும் நாணயம், நடத்தையிலும் நாணயம் காட்டும் மக்கள் ஜப்பானியர். இரவு நேரங்களில்கூடப் பெண்கள் தன்னந்தனியாக அச்சமின்றி எங்கும் போய் வரலாம்.

''கின்ஸா டாய் என்ற ஹோட்டலில் நாங்கள் தங்கியிருந்தோம். அங்கே வரவேற்பு அறையில் ஒரு பெண்மணி ஞாபக மறதியாகத் தன் கைப்பையை வைத்துவிட்டுப் போய்விட்டதை நான் கவனித்தேன். உடனே அதை எடுத்துக் கொண்டு போய் ரிஸப்ஷனில் கொடுத்தேன். அங்கிருந்தவர் கூறியது என்னை வியப்பில் ஆழ்த்தி விட்டது: 'நீங்கள் அதை எடுத்த இடத்திலேயே திரும்ப வைத்துவிடுங்கள். அந்தப் பெண்மணிக்கு நினைவு வரும்போது திரும்பி வந்து எடுத்துக் கொண்டு போவாள்.'

''அவள் எவ்வளவுதான் தாமதமாக வந்தாலும் கைப்பை அங்கேயே இருக்கும்!' என்று சொன்னார்கள். என்னால் நம்பவே முடியவில்லை. ஆனால் எங்களுக்கே அப்படி ஓர் அனுபவம் ஏற்பட்ட பிறகு நம்பித்தானே ஆக வேண்டும்! அப்பாவின் தோல் பையை இப்படித்தான் ஞாபகப் பிசகாக ஹோட்டலில் வைத்து விட்டுப் போய் விட்டோம். ஷாப்பிங் முடிந்து திரும்பி வந்து பார்த்தால் பை வைத்த இடத்தில் அப்படியே இருந்தது!''

ஷாப்பிங் என்று கிளம்பினார்களே ஒழிய எதுவும் வாங்குகிற மாதிரி இல்லை. எல்லாம் யானை விலை குதிரை விலைதான்! முக்கியமாக வேண்டியது தலைக்குப் பூ என்பதால் ஸ்ரீமதி ராதா அதை வாங்கினார். நாலு ஜவந்தி நாலு ரோஜா வாங்குவதற்குள் நம் நாட்டுக் கணக்குப்படி நூறு ரூபாய்க்கும் அதிகமாகப் பில் வந்தது. ஷாப்பிங்கை அத்துடன் முடித்துக் கொண்டார்கள்! உலகிலேயே மிக அதிக



மாகச் செலவு வைக்கும் நகரம் டோக்கியோ தான். அதுவும் கின்ஸா பகுதிதான் ரொம்ப ஃபாஷன் மிக்க இடம். கேட்க வேண்டுமா!

''செல்வச் செழிப்பை நன்றாகக் காண முடிந்தது. ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்குள் புகுந்தால் ஏதோ மகேந்திரஜால புரிக்குள் வந்துவிட்டது போல் தோன்று கிறது'' என்ற ராதாவிடம், டோக்கியோக் கச்சேரி பற்றி வினவினோம்.


''இந்தோ—ஜப்பானிய நட்புறவுக் கழகத்தின் ஆதரவில் கச்சேரி நடந்தது. சாதாரணமாக டோக்கியோவில் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதென்றால் ஆறு மாதங்களுக்கு முன்பாகவே திட்டமிட வேண்டுமாம். ஆனால் அம்மாவின் கச்சேரி இரண்டே வாரங்களில் ஏற்பாடான ஒன்று. இருந்தும் நோஹ்கியோ அரங்கம் நிரம்பி வழிந்தது. நடை பாதையிலும் மேடையிலும் அமர்ந்தும் சுவர் ஓரமாக நின்றுகொண்டும்கூட ஆர்வத்துடன் கேட்டனர். பெரும்பாலும் ஜப்பானிய ரசிகர்கள்தாம். நம்மூர் மாதிரியே ரொம்ப உற்சாகமாகக் கேட்டார்கள். ராகம் பாடும் போது இடையில்கூடத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் கரகோஷம் செய்தார்கள். அம்மாவின் கல்யாணியும் காம்போதியும் டோக்கியோ டவருக்கு மேலேயே உயர்ந்து விட்டன!'' என்றார் ஸ்ரீமதி ராதா. அன்றைய நிகழ்ச்சி குறித்து அவர் தொடர்ந்து சொன்னவை:



டோக்கியோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இசையறிஞர் தனவே என்பாரும் அங்கேயே இசைப் பிரிவில் பணியாற்றும் குமாரி குஸானோவும் கச்சேரிக்கு வந்திருந்தனர். ஸ்ரீ தனவே கர்நாடக இசை பற்றி ரசிகர்களுக்கு எடுத்துச் சொன்னார். ஏற்கெனவே இந்தியாவுக்கு வந்து நமது இசையை ஆராய்ந்திருக்கும் குமாரி குஸானோ ஸ்ரீமதி எம். எஸ்ஸை அறிமுகப்படுத்தினார்.

கிழக்காசியச் சுற்றுப் பயணத்தின்போது ஸ்ரீமதி எம். எஸ். நிகழ்த்திய எல்லாக் கச்சேரிகளிலுமே முதலில் நமது கர்நாடக சங்கீதத்தில் மும்மூர்த்திகளின் சாகித்தியங்களைப் பாடிவிட்டுப் பிறகு பாரதத்தின் பல்வேறு மொழிகளிலும் பஜன், ஷபத் போன்ற துதி கீதங்கள் பாடினார். இதனால் அந்நாடுகளில் உள்ள பல் மொழி பேசும் இந்திய சமூகத்தினரும் திருப்தியுற்றனர்; அயல்நாட்டவரும் இந்திய இசையின் பல்வேறு சாயல்களையும் உணர்ந்தனர். அதோடு பாஷைகளுக்கெல்

1. மக்ஸைஸாய் விருது பெற்றுத் திரும்பிய ஸ்ரீமதி எம். எஸ், அவர்களை லயன்ஸ் கிளப் கௌரவித்தது. தென் சென்னை லயன்ஸ் கிளப் தலைவர் ஆர். வேங்கடேசுவரனும் மத்திய சென்னை லயன்ஸ் கிளப் தலைவர் எஸ். வி. வேங்கடராமனும் பாராட்டிதழ் அடங்கிய பேழையை சதாசிவம் தம்பதியிடம் வழங்குகின்றனர்; 2. டோக்கியோ டவர்; 3. நிப்பன் வேதாந்தா சொஸைட்டியில். இடமிருந்து மூன்றாவதாகத் தலைவர் நாராயண உசிகாகி. வலது கோடியில் பொன்னுசாமி. 4. ஆயிரம் புத்தர் சிலைகளுள் ஒரு பகுதி; 5. ஃப்யூஜி மலைக்கு முன்னால் பாலத்தின் மீது விரையும் புல்லெட் ரயில்; 6. நாராவில் மான்களுக்கு பிஸ்கட் வழங்குதல்.





லாம் அப்பாற்பட்டது இசை என்ற உண்மை ஊர்ஜிதமாயிற்று.

''அரியக்குடி போன்ற பெரியவர்களுக்கெல்லாம் வாசித்த கையல்லவா அழகர்சாமி பிடில். காரைக்குடி மணியின் 'தனி' மணியாக இருக்கும் என்பது நமக்குத் தெரிந்த விஷயம். ஆனால் அங்கேயெல்லாம் மணியின் தனி ஆவர்த்தனங்களை அவர்கள் கேட்டு அடைந்த உற்சாகமே அலாதிதான்'' என்றார் ஸ்ரீமதி ராதா விசுவநாதன்.

கச்சேரி முடிந்த பிறகு நமது தூதர் திருதான் (ஜப்பானியர் வசதியாக உச்சரிக்க ஏற்றவாறு பெயரை இப்படிச் சுருக்கிக் கொண்டிருக்கிறார் திரு திருவேங்கடத்தான்) ''இன்னும் இரண்டு நாள் தாமதிக்க முடியுமானால் இன்னுமொரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்யலாம். அவ்வளவு ஆர்வம் இருக்கிறது இங்கே'' என்றார்.

திரு திருவேங்கடத்தானுக்கு மட்டுமின்றி மணிலா, ஹாங்காங், பாங்காக் ஆகிய தலைநகரங்களில் உள்ள நமது தூதர்களுக்கும்கூட ஸ்ரீ சதாசிவம், ராஜாஜி—93 மலரோடு வெளியான அந்தப் பூஜ்யரின் குரலிலேயே ஒலிக்கும் 'இசைத்தட்'டினைப் பரிசாக அளித்தார். அயல் நாடுகளில் உள்ள நமது தூதர்களுக்கு இதைவிடச் சிறந்த பரிசு வேறு என்ன இருக்க முடியும்?

டூரிஸ்டுகள் வழக்கமாகப் பார்க்கும் டோக்கியோ டவர், அரண்மனை, பழங்காலத்திய ஜப்பானின் சூழலை இன்னமும் அப்படியே பாதுகாக்கும் கோயில் முதலானவற்றையும் பார்த்துவிட்டு ஒஸாகாவுக்கு ரயிலேறினர்.

துப்பாக்கித் தோட்டா பாய்வதுபோல் மணிக்கு இருநூறு கிலோ மீட்டர் வேகத்தில் விரையும் ரயில், டோகைடோ எக்ஸ்பிரஸ். இந்த வேகத்தின் காரணமாக இதற்குப் புல்லெட் ட்ரெயின் என்றும் ஒரு பெயர் உண்டு.

''போகிற வழியில் புகழ்பெற்ற ஃப்யூஜி மலையைப் பார்த்திருப்பீர்களே?'' என்று வினவியதற்கு ''நான் தூங்கிக்கொண்டிருந்தபோது தெரிந்திருக்கும்'' என்றார் ராதா. அத்தனை அசதி! ரயிலோ ஆட்டம் ஏதுமில்லாமல் சுகமாய்ச் செல்வது. முன் ஆசனத்தின் பின்புறத்திலிருந்து இறங்கிப் பின்னுலிருப்பவருக்குச் சிறு மேஜையாக விளங்கும் பலகை மீது தண்ணீர் நிரம்பிய ஒரு டம்ளரை வைத்தால் சொட்டு நீர் சிந்தாது. எனவே ராதா அயர்ந்து தூங்கியதில் வியப்பில்லை.

ஒஸாகாவிலிருந்து பதினைந்து கிலோமீட்டர் தூரத்தில் நிப்பன் வேதாந்தா ஸொஸைட்டி உள்ளது. இது இராமகிருஷ்ண மிஷனின் ஓர் அங்கமாக நடத்தப்படுவது. இதன் தலைவர் ஸ்வாமி நாராயண உசிகாகி என்ற ஜப்பானியர். இங்கு தங்கியிருந்து கொண்டு சதாசிவம் தம்பதியும் மற்றவர்களும் ஒஸாகா மட்டுமின்றி கியோட்டோ, நாரா, கோபே ஆகிய நகரங்களுக்கும் சென்று திரும்பினர்.

''அந்த ஊர்களையெல்லாம் பார்க்கும்போது நம் நாடு எப்போது இந்த நிலைமையை அடையும் என்றுதான் எனக்குத் தோன்றியது'' என்றார் ஸ்ரீமதி ராதா. கூடவே அவர், ''நான் செல்வச் செழிப்பை மட்டும் குறிப்பிடவில்லை'' என்றார். ''அவர்கள் தங்கள் கோயில்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் அழகு, அவற்றையும் புராதன அரண்மனைகளையும் அன்றிருந்தது போல் அப்படியே பாதுகாக்கும் விதம், இவற்றைச் சுற்றுலாப் பயணிகள் சென்று பார்க்க, செய்து தரப்படும் வசதிகள்—இவையெல்லாம் பிரமிப்பாய் இருக்கின்றன. நம் நாட்டில் — தமிழகத்தில்—இல்லாத கலைச் செல்வங்களா? ஆனால் அவற்றை அயல்நாட்டவர் வந்து காண ஏற்றவாறு சூழலைத் துப்புரவாக வைத்துக் கொண்டிருக்கிறோமா? பயணிகள் போக வரவும் தங்கியிருக்கவும் போதிய வசதிகள் செய்திருக்கிறோமா? என்று எண்ணினால் பெருமூச்சுத்தான் புறப்படுகிறது!''

ஒஸாகாவில் பாதாள லோகமே ஒன்று இருப்பதைப் பார்த்தார்கள். தரைக்கு மேலே

அட்டைப் பட விளக்கம்

கற்பனை ஆற்றல் கோரும் கூந்தல் அலங்காரம்!

திரைப்படத் துறையில் பிரபல சிகை அலங்காரக் கலைஞராக விளங்கும் திரு டி. பார்த்தசாரதி கூறுகிறார்:

''ஹேர் ஸ்டைல்களில் முப்பதுக்குக் குறையாத அலங்கார வகைகள் உள்ளன.

''இப்போது 'விக்' வந்து விட்டது. 'விக்' தொழிலகங்கள், சென்னை கோடம்பாக்கத்தில் அதிகம் செயல்படுகின்றன. காரணம் ஸ்டுடியோக்கள் அருகில் இருப்பதே. ஒரு பெண்ணுக்குச் சிறந்த முறையில் 'விக்' வைத்து அலங்காரம் செய்யக் குறைந்தபட்சம் ஐந்நூறு ரூபாய் ஆகும். நேரம் அரை மணி ஆகும். எந்த விக்கையும் எந்தப் பெண்ணுக்கும் வைத்துவிட முடியாது! உருண்டை முகம், டைமன் முகம், டிரயாங்கிள் முகம், நீள முகம், ஒட்டிய முகம் - என்று குறிப்பிடும்படி பல மாதிரியான முக அமைப்புகள் இருக்கின்றன. முக அழகுக்கு ஏற்றபடியே 'விக்' ஆர்டர் தரவேண்டும். 'விக்' சென்னையிலேயே தயாரானாலும் கூட ஒட்டும் கோந்து (Glue) ஸ்ப்ரேயர் முதலியன வெளிநாட்டிலிருந்து வரும் பொருள்களே நன்கு உதவுகின்றன. நான், அவற்றையே அதிகம் உபயோகிக்கிறேன்.

''நட்சத்திரங்களைப் போல் ஹேர் ஸ்டைல் செய்து கொள்ளச் சென்னையில் பிகரெட், சபையர் தியேட்டர், கன்னிமாரா ஹோட்டல் போன்ற இடங்களில் சிகை அலங்காரக் கலைஞர்கள் இருக்கிறார்கள். பண வசதி படைத்த பெண்மணிகள் இங்கு வந்து தலைமுடி அலங்காரம் செய்து கொள்ளுகிறார்கள்.

''சிகை அலங்காரத்தில்' கற்பனை வளம் முக்கியம். பார்ப்பவர்களைக் கவர்ந்து இழுக்கும் கற்பனை அலங்காரத்தில் இருக்க வேண்டும்.

பேட்டி: 'பாலகுமாரன்'

மேலட்டை: வண்ணப் படம் - திலீப் பானர்ஜி

பல அடுக்குக் கட்டிடம் என்றால் பூமி மட்டத்துக்குக் கீழேயும் மூன்று அடுக்குக் கட்டிடங்கள். அதற்கும் கீழே இரண்டு மட்டங்களில் பாதாள ரயில் ஓடுகிறது. ஜப்பானில் நிலப்பரப்பு மிகவும் குறைவானதால் பெரிய பெரிய சிறப்பு அங்காடிகளை இப்படிப் பூமி மட்டத்துக்குக் கீழேயே கட்டியிருக்கிறார்கள். பாதாள வீதிகளையும், ஹோட்டல்களையும் சதுக்கங்களையும் மட்டுமின்றிப் பொங்கு புனல்களையும் அமைத்து அழகு படுத்துகிறார்கள். சமுத்திரத்துக்குக் கீழேயே செயற்கையான குகைப் பாதை அமைத்து ஜப்பானியத் தீவுகளை இணைக்கிறார்கள். இவை ஜப்பானியரின் ஆற்றலைக் காட்டுவன என்றால் அவர்கள்பேசிப் பழகும் முறை அன்புள்ளத்தைக் காட்டுகிறது. செடிகளிடமும் மரங்களிடமும் அவர்கள் எவ்வளவு பிரியம் வைக்கிறார்கள்! புயலில் ஒரு மரம் சாய்ந்தால் உடனே அதை வெட்டிவிடுவதில்லை. முட்டுக் கொடுத்து ஓரளவு நிமிர்த்திப் புத்துயிர் அளிக்கப் பார்க்கிறார்கள். முட்டுக் கொடுக்கும் கழியினால் மரத்துக்கு வேதனை ஏற்படாதிருக்க இடையில் துணியை மடித்து வைக்கிறார்கள்!


நாரா பழங்காலத்திய ஜப்பானியத் தலைநகர். அங்கு ஸ்ரீமதி ராதாவின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்தவை: காசியில் பசுக்கள் போல் புத்தர் கோயிலில் மான்கள் ஏராளமாக அச்சமின்றி வளைய வருவது. மூக்குத் துவாரத்தில் ஒரு மனிதன் நுழையக் கூடும் என்னுமளவுக்கு மிகப் பெரிதான ஒரு புத்தர் சிலை.

ஆயிரம் கோயில்களை உடைய மிகப்பழைமையான நகர் கியோடோ. இங்கே ஒரு கோயிலில் ஆயிரம் புத்தர் சிலைகளை வரிசை வரிசையாக நிறுத்தியிருக்கிறார்கள். கியோடோ அரண்மனையில் எவ்வளவு மெதுவாக நடந்தாலும் தரை ''கிசுகிசு'' ஒலி எழுப்புகிறது! எதிரிகள் பதுங்கி வந்தாலும் காவலர்களுக்குத் தெரிந்துவிட வேண்டும் என்று இப்படிப் பண்டைக் காலத்திலே அமைத்தார்கள்! இந்த அரண்மனையின் தர்பார், அந்தப்புரம் முதலானவற்றை இன்றும் அரசர்களும், ராணிகளும், கீஷா பெண்களும், மந்திரி பி ர தா னி க ளு ம் அலங்கரிக்கிறார்கள் — பொம்மை வடிவிலே! அந்நாளைய ஆடை அணிகளுடன் முழு மனித அளவில் தத்ரூபமாய் அமைந்த உயிர்ப் பொம்மைகள்.

ஒஸாகா கச்சேரி பற்றி ஸ்ரீமதி ராதா விசுவநாதன் கூறுவதை விட அதை எப்படி ரசித்தார்கள் என்பதை அங்கிருப்பவரே சொல்வது பொருத்தமல்லவா? நிப்பன் வேதாந்தா ஸொஸைட்டியின் அங்கத்தினரான ஜப்பானில் வாழும் தமிழர் திரு பொன்னுசாமி, நமக்கு ஒரு பெரிய கடிதம் எழுதியிருக்கிறார். நீளத் தாளில் ஆறு பக்கங்கள் டைப் செய்யப்பட்ட அந்தக் கடிதத்திலிருந்து ஒரு சோறு பதம் என்கிற முறையில் ஒரு பாராவை மட்டும் தமிழாக்கித் தருகிறோம்:

''மாலை ஆறரை மணிக்கு வழக்கமான ஆரத்தி நடைபெற்றது. (ராமகிருஷ்ண மடத்தின் பிரார்த்தனையை ஆரத்தி என்பர்.) அதில் சதாசிவம் தம்பதியும் மற்றவர்களும் கலந்துகொண்டனர். ஏழரை மணிக்கு ஆரம்பித்து ஸ்ரீமதி எம். எஸ். ஒரு மணி நேரம் பிரார்த்தனை கீதங்கள் பாடினார். பல ஜப்பானியர்களும், ஒஸாகாவில் உள்ள இந்தியத் தூதரும் அவர் மனைவியும் உள்பட முக்கியஸ்தர்களான விருந்தினர்கள் சுமார் அறுபது பேர் அழைக்கப்பட்டு வந்திருந்தனர். எம். எஸ்.ஸின் பஜன்கள் எவ்வளவு உணர்ச்சி பரவசமாக, எவ்வளவு இனிமையாக, எவ்வளவு தூய்மையாக, எவ்வளவு ஆழமாக இருந்தன என்பனவற்றை யெல்லாம் கூற எனக்கு வார்த்தைகள் அகப்படவில்லை. முப்பது வருடங்களாக அவரது பாடல்களை இசைத்தட்டுக்கள் மூலம் கேட்டு வருகிறேன். ஆனால் நேரில் கேட்கும்போது எவ்வளவு வித்தியாசமாக இருக்கிறது! நேரில் கேட்க எனக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பம் இது தான். மீரா இன்றைக்கும் வாழ்கிறாள். அவள் எதிரே, அவளைப் பார்த்துக்கொண்டும் அவள் பாடுவதைக் கேட்டுக் கொண்டும் இருக்கிறோம் என்பதாகத்தான் எனக்குத் தோன்றியது. கண்களில் கண்ணீர் ததும்பி வழிந்தது. என்னைப் போலவேதான் அங்கு கூடியிருந்த அனைவருமே பாடல்களை அனுபவித்துக்கொண்டிருந்தார்கள்.''

வாரியாரின் வாக்கு



அரிசியின் ரூபம் தெரியவொட்டாமல் உமி மூடியிருக்கிறது. உமியை நீக்கினால் அரிசியைப் பார்க்கலாம். அதுபோல் கடவுள் சொருபத்தைக் காணவொட்டாமல் ஆசாபாசம் மூடியிருக்கிறது. ஆசாபாசத்தை நீக்கினால் கடவுளைக் காணலாம்.

●

நூல் வேட்டியான பிறகும் அதை நூல் என்று சொல்வது எப்படித் தவறோ, அதுபோல் கல், விக்கிரகம் ஆனபிறகும் அதைக் கல் என்று சொல்வதும் தவறுதான்.

●

கோயிலைச் சுற்றி அசுத்தம் செய்கிறீர்களே, ஆண்டவன் கோபித்தால் நாம் வாழ முடியுமா? போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகில் அசுத்தம் செய்வீர்களா?

●

கருச் சுமந்து, பெற்று, வளர்த்து, ஆளாக்கிய குழந்தைகளை 'யார்?' என்று கேட்டால், தந்தையின் பெயரைச் சொல்லி இன்னாருடைய மகன் என்று கூறுகிறார்கள். பெயருக்குமுன் தந்தை பெயரைத் தான் குறிக்கிறார்கள். தாய்மார் தடுப்பதில்லை. தியாகத்தின் சிகரங்கள்!

''வாழும் வழி'' என்ற நூலிலிருந்து; வெளியிட்டோர்: துரை. கோதண்டபாணி, 89, சிங்கண்ண செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை 2. விலை: ரூ. 2 50.



சங்கீதம் கேட்கப் போனால்...

பி.வி.ஆர்.

கச்சேரி களை கட்டி விட்டது. வர்ணத்தில் ஆரம்பித்து இரண்டு கீர்த்தனைகளையும் முடித்துவிட்ட பாடகர் (பெரிய வித்வான்) ஒரு கன ராகத்தின் ஆலாபனையில் மெய்மறந்து போய்க் கொண்டிருந்தார். சபையில் பெரும்பாலோர் தங்களை மறந்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

இந்தச் சமயத்தில்தான் அவர் சபையில் பிரவேசித்தார். முதலில் வித்துவானுக்கு முன் சென்று அவருடைய கவனத்தைப் பறிக்க முயன்றவர் முயற்சியில் தோல்வியைக் கண்டு பிறகு அந்தத் தோல்வியைக் காட்டிக் கொள்ளாமல் ஒரு மந்தகாசப் புன்முறுவலுடன் முன் வரிசையில் இருந்த சில பிரமுகர்களின் க்ஷேமலாபங்களை விசாரித்தார். அவருடைய குரல் ஏழாவது வரிசையில் இருந்த என் காதை அறுத்தது.

''டில்லிக்குப் போயிருந்தீர்களாமே... என்ன ஆச்சு?''

''நமஸ்காரம் சார்...அன்னிக்கு நீங்க வீட்டுக்கு வந்தபோது நான் இல்லை. ஏர்போர்ட்டுக்குப் போயிருந்தேன்.''

''அடடே, ரொம்ப நாளாச்சு உங்களைப்பார்த்து. கமலா எப்படி இருக்கிறாள்?''

பிரமுகர்கள் நல்ல வேளையாக வாய் திறவாமல் பதிலை முகஜாடையால் காட்டி ஒரு வழியாக அவரை அனுப்பினார்கள். அவர் அங்குமிங்குமாக ஒரு முறை சபையோரைப் பார்த்துவிட்டு, நாலாவது வரிசையில் உட்கார்ந்து கொண்டார்.

ஒரு தடவை, அவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து சங்கீதத்தைப் பார்க்கும் (கேட்கத்தான் முடியவில்லையே!) வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நான் யார் என்று அவருக்குத் தெரியும். அவர் யார் என்று எல்லோருக்கும் தெரியும்.

அவர் வந்து உட்கார்ந்த போது தோடி ஆலாபனை நடந்து கொண்டிருந்தது.

''நீங்க ராஜரத்தினத்தின் தோடியைக் கேட்டிருக்கிறீர்களா?''

''ஏதோ இரண்டுதடவை.'' நான் முணுமுணுத்தேன்.

''போருது சார், போருது. போறவே போருது. இருபத்தைஞ்சு தடவை கேட்டாலும் இருபத்தஞ்சு விதமா இருக்கும் அவன் வாசிக்கிற தோடி.''


''இனிமே என்ன செய்யறது. அவர்தான் காலமாகி விட்டாரே...''

''அவன் தோடி சாகலையே சார்... ஒரு நாள் என் வீட்டுக்கு வாருங்கள்...'' டேப் போட்டுக்காட்டுகிறேன்...''

இதே போல் அவர் மறைந்து போன மாணிக்கங்களின் மேதையை என்னிடம் நிரவல் செய்து ஸ்வரப் பிரஸ்தாரம் செய்தார். டைகர், மகாராஜபுரம், அரியக்குடி என்று பெயர்களைச் சொல்லி என் வாய் பிளக்கும்படி செய்தார். கச்சேரியைக் கேட்க விடவில்லை.

இவரைப் போல் எத்தனையோ பேர்கள். பெண்கள் பக்கத்தில் போனால் அண்மையில் வாங்கிய புடவை, அழித்துப் பண்ணிய வளையல்கள், நாத்தனார் ஓர்ப்படிகளின் அட்டகாசம் இவற்றைப் பற்றிப் பல்லவிகள். அரிதாகிக் கொண்டு வரும் கர்நாடக சங்கீதத்தைத் தாங்களும் ரசிக்காமல், மற்றவர்களையும் ரசிக்க விடாமல் சங்கீதத்தையே அவமானம்செய்கிறவர்கள் எதற்குக் கச்சேரி நடக்கிற இடத்துக்கு வர வேண்டும்? தங்களுடைய பெருமைகளையும் குறைகளையும் வெளிச்சம் போட்டுக் காட்டவும், சொல்லித் தீர்த்துக்கொள்ளவும் கர்நாடக சங்கீதம் நடக்கிற இடங்கள் தானா கிடைத்தன?





இவர்களையெல்லாம் கூட ஒருவாறு மன்னித்து விடலாம். மிருதங்க வித்துவானின் தனி ஆவர்த்தனம் ஆரம்பமானதும் இடைவேளை விட்டிருக்கிறார்கள் என்று வெளியே சோடாக் குடிக்கவும், வெற்றிலை குதப்பவும் அரட்டை அடிக்கவும் போகிறார்களே இவர்களையும், வித்துவான் மங்களம் பாடத் தயாராகிறார் என்று தெரிந்ததும் விருட்டென்று பாய்ந்து வெளியேறுகிறார்களே அவர்களையும் எப்படி மன்னிக்க முடியும்? முன் சொன்னவர்கள் மிருதங்கவித்துவானை அவமானப்படுத்தினால், பின் சொன்னவர்கள் நாத சொரூபியான தெய்வத்தையே நிந்திக்கிறார்கள். போதாக் குறைக்குக் கூடவே பாடுகிறவர்களும் சத்தமாகத் தாளம் போடுகிறவர்களும் வேறு!

என்றைக்குத்தான் கர்நாடக சங்கீதத்தையும் அதை உபாசிக்கிற கலைஞர்களையும் நாம், வெறும் புகழ் வார்த்தைகளால் அல்லாமல் மௌனமான ஆத்மார்த்தமான ரசிகத் தன்மையால் கௌரவிக்கப் போகிறோமோ?



புகைப்படம்: பழங்காலத்திய வயலினைப் பற்றிக் கூறும் ஜெயராமனின் அந்த நாளையப் படம்!

வயலினை வரவேற்றோம்!

இன்று கர்நாடக சங்கீதக் கச்சேரிகளின் இன்றியமையாத அம்சமாகி விட்டது வயலின். ஆனால் அது மேனாட்டு வாத்தியம். அது எப்படிக் கர்நாடக சங்கீதத்துக்கு அனுசரணையாக வந்து சேர்ந்தது? இது பற்றி லால்குடி திரு ஜெயராமனைக் கேட்டோம். படிப்படியாகப் பல முன்னேற்றங்களைப் பெற்ற வயலினுக்கு வித்தாக அமைந்தது நம் நாட்டில் இருந்து வந்த ஒரு வாத்தியம்தான் என்றார் அவர்!

"வயலின் தோன்றிய வரலாற்றினைச் சுருக்கமாகக் கூறுகிறீர்களா?"

இன்று நாம் காணும் வயலின் ஆரம்பத்தில் இவ்வடிவம் கொண்டிருக்கவில்லை.

பழங்கால மனிதர் வேட்டையாடிக் களைத்திருக்கும் சமயம், தமது வில்லில் நாணைப் பூட்டியுள்ள நரம்பினை விரலால் மீட்டி அதனின்றும் எழும் ஒலியைக் கேட்டு மகிழ்ந்தனர். பின்னர், பல நரம்புகளை அமைத்து, விரலால் மீட்டப்பெறும் *(Plucked)* ஹார்ப் *(Harp)* போன்ற இசைக் கருவிகளை உருவாக்கி அதனின்று எழும் பலவித ஒலி வேறுபாடுகளைக் கேட்டு மேலும் ஊக்கம் அடைந்தனர். ஆராய்வு மனம் கொண்ட மனிதர் நாளடைவில் விரலால் மீட்டுவதோடல்லாமல், வில் *(Bow)* எனும் உப கருவியை உருவாக்கி, அதனை உபயோகிப்பதன் மூலம் தொடர்ச்சியான நீடித்த ஒலியை *(Continuity of Sound)* இசைக் கருவியில் பெற முயன்று வெற்றி கண்டனர்.

வெளிநாட்டறிஞர் *Engel (1874)* வில்லினால் வாசிக்கும் முறை இந்தியாவில் 2000 வருடங்களுக்கு முன்பே இருந்து வந்தது எனக் கூறுகிறார். மற்றொரு மேலைநாட்டு அறிஞர் *Sonnerat (1782)* நம் நாட்டில் சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பு வில்லினால் இசைக்கும் 'ராவணாஸ்திரம்' என்னும் வாத்தியம் வழங்கி வந்ததாகக் கூறுகிறார். இவ்விதம் நம் நாட்டில் உருவாகி வழங்கி வந்த ராவணாஸ்திரம் காலப் போக்கில் மறைந்து, மேனாடுகளில் பல அறிஞர்களின் ஆராய்ச்சியில் பல மாறுபாடுகளை அடைந்து, இறுதியில் முழு வளர்ச்சியுற்று மறு உருவில் தற்காலம் வழங்கி வரும் வயலினாக நம் நாட்டுக்குத் திரும்பவும் வந்தது. வயலின் வகை இசைக் கருவிகள் நான்கு. வயலினிலும் பெரியது 'வயோலா' *(Viola)*; அதனினும் பெரியது *(Cello)*; அதையும்விடப் பெரியது *(Bass)*.

"முதன்முதலில் வயலினை உருவாக்கியவர் யார்?"

பதினாறாம் நூற்றாண்டில் இத்தாலியில் வாழ்ந்த *Andreas Amati (1505 – 1580)* எனும் கலைஞரே முதலில் உருவாக்கினார். இதன் பிறகும் சில நுண்ணிய முன்னேற்றங்கள் படிப்படியாக அந்த வாத்தியத்தில் ஏற்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில் *Antonio Stradivari (1644 – 1737)*யின் கைத் திறனில் முழுமை பெற்று உருவாகிய வயலின்களே ஈடுஇணையிலாத புகழ் பெற்றன.

"மேலை நாட்டவர் வயலினைக் கையாள்வதற்கும், நாம் கையாள்வதற்கும் உள்ள வேறுபாடு என்ன?"

மேலை நாட்டவர் நின்றவண்ணம் தோளில் வைத்து வாசிப்பார்கள். நாம் உட்கார்ந்து தண்டின் முனையைக் காலில் தாங்கிக் கொண்டு, வயலினை மார்பில் சாய்த்து வைத்து இசைக்கிறோம். சுருதி அமைப்பு *(Tuning)* வைத்துக் கொள்ளும் முறை *(Holding posture)* வாசிக்கும் முறை *(Playing method)* இம்மூன்றிலும் நம் இசைக்கும், வசதிக்கும் ஏற்ப மாறுதல்களைச் செய்து கொண்டுள்ளோம்.

"இன்று கர்நாடக சங்கீதத்துக்கு இன்றியமையாததாக விளங்கி வரும் இம் மேலை நாட்டு வாத்தியம் வாய்ப்பாட்டுக்கு உகந்த பக்கவாத்தியமாகவும் தனிக் கச்சேரிக்குத் தகுதி வாய்ந்ததாகவும் எவ்விதம், யாரால் சிறப்புற்றது?"

நம் நாட்டில் பழங்காலத்தில் வாய்ப்பாட்டுக்கு உதவியாக வீணை, கோட்டுவாத்தியம், குழல் முதலியவைகளைத்தான் உபயோகித்து வந்தனர். கர்நாடக சங்கீதத்துறைக்குச் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னர் வந்த வயலின், பக்கவாத்தியமாக நூறு வருடங்களுக்கு மேல் கையாளப்பட்டு வருகிறது.

ஆங்கிலேயரின் ஆட்சியில்தான் வயலின் நம் நாட்டுக்குள் நுழைந்தது. அந்நாளில், தஞ்சையில் ஆங்கிலத்தில் தேர்ச்சியும், இசை ஞானமும் கொண்ட உத்தியோகஸ்தர் ஒருவர் இருந்தார். அவர் அரசாங்க அலுவல் காரணமாக ஆங்கிலேய கவர்னரைச் சந்திக்கச் சென்னை வந்தார். அச்சமயம் கவர்னரின் மாளிகையில், மேனாட்டு இசைக் கருவிகளான வயலின், பியானோ *(Piano)* முதலிய வற்றை அவர் காண நேர்ந்தது. அவருக்குக் கவர்னரிடம் இருந்த நட்பினால் அவ்வாத்தியங்

களை வாசித்துப் பார்க்க வாய்ப்பும் கிடைத்தது. முதலில் பியானோவின் இனிமை நிறைந்த ஒலியையும், ஸ்தாயி விஸ்தீரணத்தையும் கண்டு வியந்த அவர் அடுத்து, வயலினில் நம் இசைக்கேற்பச் சுருதி சேர்த்து *(Tuning)* வாசித்துப் பார்த்த பொழுது நம் சங்கீதத்துக்குத் தேவையான அசைவுகளும் குழைவுகளும் வயலினில் மட்டுமே கிடைக்கும் எனக் கண்டு கொண்டார். வயலின் கர்நாடக சங்கீதத்துக்குப் பெரிதும் பயன்படும் என்பதையும் உணர்ந்தார். அவர் வாசித்துப் பார்த்த வயலினை அவருக்குப் பரிசாகவே வழங்கி விட்டார், கவர்னர் !

நாளடைவில் அவருக்குத் தெரிந்த பாட்டுக்களை யெல்லாம் வயலினில் வாசித்துத் திருப்தியடைந்து, வயலினை வாய்ப்பாட்டுக்குப் பக்கவாத்தியமாகவும் பயன்படுத்தத் தொடங்கினார் என்பது கர்ண பரம்பரையாக வந்த வரலாறு.

ஆதாரபூர்வமாகப் பார்த்தால் முத்துஸ்வாமி தீட்சிதரின் சகோதரரான பாலுஸ்வாமி தீட்சிதர் (1786–1858) வயலினை முதன் முதலில் கற்றுத் தேர்ந்ததாகத் தெரிகிறது. அதைத் தொடர்ந்து வடிவேலு (1810-1847) பொன்னுஸ்வாமி முதலானோர் வயலினைக் கையாண்டு கர்நாடக இசையுலகில் வயலினின் புகழ் பெருக உதவினர். கர்நாடக சங்கீதத்தில் வயலினுடைய வரலாற்றைப் பற்றிச் சிந்திக்கும்போது, முதன் முதலில் தனி வயலின் கச்சேரி செய்து தனக்கும், வயலினுக்கும் புகழ்தேடிய திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் (1854–1912) அவர்களின் சாதனையை நினையாமல் இருக்க முடியாது.

நாத இனிமை, காத்திரம் *(Volume)* அதற்கும் மேலாக, இடைவிடாத தொடர்ச்சியுடன் இசையை வெளியிட வசதி *(Continuity of Sound)* ஆகிய சிறப்பியல்புகளை வயலின் பெற்றிருப்பதால், நம் சங்கீதத்தின் அடிப்படையான கமகங்களையும், குழைவுகளையும், குரலினின்று வெளிப்படும் உணர்ச்சி நிரம்பிய இசை வடிவங்களையும், தன்மை மாருமலும் அழகு குன்ருமலும் அதன் மூலம் இசைக்க முடிகிறது. இச் சிறப்பியல்புகளினுலேயே வயலின் கர்நாடக இசை உலகில் இன்றியமையாததான ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறது.

பேட்டி: **பாணன்**

இசையிலும் காதல்; இதயத்திலும் காதல்!



இளம் தலைமுறைப் பாடகர்கள் அனைவருக்கும் வாழ்த்துக் கூறி அவர்களின் பிரதிநிதிகளாக ராமச்சந்திரன் — சாரு தம்பதியை மிக்க மகிழ்ச்சியுடன் இன்னிசைச் சிறப்பிதழின் மேலட்டையில் பிரசுரிக்கிருேம். இவர்கள் இசைமீது கொண்ட காதல் இதயத்திலும் பரிணமிக்கத் திருமணம் புரிந்துகொண்டவர்கள். கணவனைப் பற்றி மனைவியிடமும் மனைவியைப் பற்றிக் கணவனிடமும் கேட்டோம். இதோ அவர்கள் பேசுகிருர்கள்:

சாரு: இவருக்கும் சரி, எனக்கும் சரி ; இந்தச் சங்கீதம் அம்மா வழிச் சொத்து. இரண்டு பேருமே சிறு பிராயத்தில் சங்கீதம் கற்றுக் கொண்டது அம்மாவிடத்தில்தான் ! இவர் பதினுலாவது வயதிலேயே கச்சேரி செய்திருக்காராம். வர்க்கலை சுப்பிரமணிய ஐயர், திருப்புணித்துறை கிருஷ்ணய்யர் இரண்டு பேரிடமும் சிட்சை பெற்ருர். ஆனாலும் இவர் ஓர் ஏகலைவன் ; இவருக்கு மானசிக குருவாக விளங்கியவர் மூன்றெழுத்தில் பிரபலமான ஜி. என். பி.

ராமசந்திரன்: எங்களுக்குள் ஓர் ஒற்றுமையைப் பாருங்கள். இவள் ராமநாதபுரம் கிருஷ்ணனிடம் ஓராண்டு பயிற்சி பெற்ருள் என்ருலும் முழுச் சிட்சை பெற்றது மூன்றெழுத்துப் புள்ளியிடம்தான் ! எம். எல். வி.யோடு இன்றும் சேர்ந்து பாடுகிருள். தன் தங்கைகளின் நடனத்துக்குப் பாடவும் செய்கிருள்!

சாரு: கெமிஸ்ட்ரியைப் பிரதான பாடமாக எடுத்து பி. எஸ்ஸி தேறிய இவர் உத்தியோக நிமித்தம் சென்னைக்கு வந்தார். கள்ளிக்கோட்டையில் மெடிகலுக்கு இடம்கூடக் கிடைத்தது. அவ்வளவையும் மீறி இசை இவரை ஜி. என். பியிடம் சேர்த்துவிட்டது. மத்திய அரசு உபகாரச் சம்பளம் பெற்று இரண்டு ஆண்டுகள் இவர் வசந்தகுமாரியிடம் பயிற்சி பெற்றதுகூட உண்டு !

ராம: சாருவும் ஒரு பட்டதாரிதான். சங்கீதத்தைப் பாடமாக எடுத்துக் கொண்டு பி. ஏ. தேறியிருக்கிருள். 1971ல் ஜூனியர் பாடகர்களின் முதற் பரிசையும் பெற்றிருக்கிருள் !

சாரு: இவரும் மியூஸிக் அகாடமியில் சிறப்புப் பரிசு பெற்றவர்தான். செம்மையின் ஊக்கம் பெற்று இவர் குருவாயூரப்பன் சுப்ரபாதம் ரெக்கார்டு கொடுத்திருக்கிருர். இவர் செய்த இன்னெரு பெரிய காரியம் என்ன தெரியுமோ? நாராயணீயத்தைப் பத்து எல்.பி.க்களாகக் கொடுத்திருக்கிருர். இவற்றுக்கு மெட்டு அமைத்தவர் ஸ்ரீ எஸ். வெங்கட்ராம் அவர்கள்.

பொதுவாகத் திருமணத்துக்கு ஜாதகப் பொருத்தத்தில் ஆரம்பிப்பார்கள். சாரு— ராமச்சந்திரனைப் பொறுத்தவரையில் மனப் பொருத்தம் இருந்தது; இசைப் பொருத்தம் கூடியது; தோற்றப் பொருத்தமும் இருப்பதை அட்டைப் படம் நிரூபிக்கிறது.



வழித்தோன்றலின் தனிக்கச்சேரி

தாயார் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களுடனேயே நான்கு வயது முதல் இதுநாள்வரை சேர்ந்து பாடிக் கொண்டு வந்த ராதா தனிக் கச்சேரி செய்ய வேண்டிய ஒரு நிர்ப்பந்தச் சூழ்நிலை அண்மையில் ஏற்பட்டது.

ஸ்ரீ எச். வி. ஆர். ஐயங்கார் பொறுப்பில் சென்னையில் நடந்த ஒரு மகாநாட்டின் முடிவில் ஸ்ரீமதி எம். எஸ்ஸின் கச்சேரி நடப்பதாய் இருந்தது. ஆயின் துரதிர்ஷ்டவசமாக ஸ்ரீமதி எம். எஸ். தமது சகோதரரை இழந்து துக்கம் காக்க வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது. எனவே ஸ்ரீ சதாசிவம், ஐயங்கார் அவர்களிடம் நிலைமையை விளக்கி, ''வேணுமானால் ராதாவைப் பாடச் சொல்கிறேன், இல்லை, நீங்கள் வேறு ஏதேனும் ஏற்பாடு செய்து கொள்வதானாலும் சரி'' என்றார்.

''வேறு ஏற்பாடாவது ஒண்ணாவது? ராதா தான் பாடவேண்டும்!'' என்று எச். வி. ஆர். சொல்லிவிட்டார்.

ராதாவின் இந்த அரங்கேற்றக் கச்சேரிக்கு மகாநாட்டுப் பிரதிநிதிகள் மட்டுமின்றி நண்பர்கள் பலரும் அழைப்புப் பெற்று வந்திருந்தனர். தாஸப்பிரகாஷ் ஹோட்டலில் சுமார் நூறுபேர் அமரக்கூடிய சிறிய அரங்கம் இரண்டு மணி நேரத்துக்கு இருந்த இடம் தெரியாமல் போயிற்று! ஆம், கண்ணை மூடிக் கொண்டால், 'அகாடமி அரங்கிலோ அண்ணாமலை மன்றத்திலோ எம். எஸ்ஸின் கச்சேரியைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறோமோ' என்ற பிரமை ஏற்பட்டு விட்டது. சுருதி சேர்த்துக் கொண்டு 'ஓம் நம: பிரணவார்த்தாய' என்று ஆரம்பித்து முதல் லோக க்ஷேமார்த்தம் ஆசார்யாள் வழங்கிய 'மைத்ரீம் பஜத' என்ற ஆசி கீதத்தை இசைத்ததுவரை அப்படியே எம். எஸ். பாணி!

ஸ்ரீமதி எம். எஸ்., சிஷ்யைகள் என்று யாரையும் ஏற்றுக் கொள்ளவில்லையே என்று வருத்தப்படுகிறவர்கள் பலருண்டு. ஆனால், அன்றைக்கு மகளும் பிரதம சிஷ்யையுமான ராதாவிடம் எம். எஸ்ஸின் தெய்விகக் கலை அப்படியே குடியேறியிருக்கிறது என்பதை அறிந்து பரவசமடைந்தோம்.

மகாநாட்டுப் பிரதிநிதிகள் பலர் வடநாட்டுப் பிரமுகர்கள். எனவே பஜன்கள் நிறையப் பாடினார் ராதா விசுவநாதன். அவற்றின் நெளிவு சுளிவுகள், குழைவுகள் எல்லாம் ரொம்பத் தரம். என்றாலும் ராதா கீரவாணி ராகத்தை ஆலாபனை செய்தபோதுதான் சிலிர்த்துப் போனோம். 'அடேயப்பா! இத்தனை ஆற்றலையும் இவரால் எப்படிக் கட்டுப்பெட்டியாக அடக்கி வைத்துக் கொண்டிருக்க முடிகிறது?' என்று வியந்தோம்.

பக்கவாத்தியம் வாசித்த வி. வி. சுப்பிரமணியமும் காரைக்குடி மணியும் தங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்கினர். வி. வி. எஸ். மேடையில் உட்காரும்போதே ஒரு கம்பீரம் இருக்கும்! வாசிப்பும் அப்படித்தான். எம். எஸ்ஸுக்கு வாசித்து வாசித்து அந்தப் பாணி அவருக்கு அத்துப்படி யல்லவா? அழுத்தமாக 'போ' போடுவதிலேயே ஒரு துணிச்சல் விகசிக்கும். அதுமட்டும் இருந்தால் போதுமா? வி. வி. எஸ்.ஸின் ஆற்றல் அந்தத் துணிச்சலுக்குக் கைகொடுக்கும்போது நமது செவிப் புலன்களுக்கு அரியதொரு விருந்து கிடைக்கிறது. காரைக்குடி மணியின் வாசிப்போ கனகச்சிதம். தொப்பியில் அவர் எழுப்பும் அடுக்கடுக்கான கும்கார ஒலிகள் கச்சேரிக்கு அலாதியான சோபை அளிப்பன.

ஸ்ரீமதி ராதா இனி தனிக் கச்சேரி செய்வாரோ அல்லது அம்மாவுடன் பாடுவதிலேயே திருப்தி அடைந்து விடுவாரோ அது நமக்குத் தெரியாது. ஆனால் அன்று அவரது அரங்கேற்றம் அபாரமாய் அமைந்தது தெரியும்.

'எல்லாம் சரிதான், உதவுபடியான இனிய சாரீரம் இருக்கலாம், எம். எஸ்ஸுடன் பாடிப் பாடி அவரது ஆற்றலைப் பெற்றிருக்கலாம், அவரது பாணியை அப்படியே பின்பற்றவும் செய்யலாம், ஆனால் எம். எஸ்ஸின் அந்த பக்தி பாவம்? அதற்கு எங்கு போவது?' என்ற ஒரு நியாயமான கேள்வி எழுவது இயல்பே. இத்தனை சிறப்புக்களைத் தாயாரிடமிருந்து பெற்றுள்ள ராதா நாளடைவில் அதையும் பெறாமலா விடுவார்?

— **குட்டி கிருஷ்ணன்**

மேலே: வழக்கமான கச்சேரி; இங்கே: தனிக் கச்சேரி!



கீர்த்தனைக் கதைகள்

எஸ்.வி.கே.

மஞ்சுநாத்தின் அறுபத்தைந்தாவது பிறந்தநாள். வாழ்த்துக்களையும், பெரும் மாலைகளையும், பூங்கொத்துக்களையும் தாங்கி வந்து கொண்டிருந்தவர்களுக்குக் கணக்கே இல்லை.

''மிஸ்டர் மஞ்சுநாத்! பிறந்த தின வாழ்த்துக்கள்!'' என்று அசடு வழிய இளித்துக் கொண்டே பெரிய மாலையை அவர் கழுத்தில் போட்டுக் கையில் பூங்கொத்தைக் கொடுத்து நின்றார் கருணாகரன்.

''என்ன கருணாகரன்! நீங்கள் கூட இம் மாதிரி செய்ய ஆரம்பித்து விட்டீர்கள்! எனக்கு இவையெல்லாம் பிடிக்கவே பிடிக்காது என்று உங்களுக்குத் தெரியாதா?'' என்று கடிந்து கொள்ளும் பாவனையில் கருணாகரனைத் தழுவிக் கொண்டார். கருணாகரனும் அவரைக் கட்டிக் கொண்டே ''உங்களுக்கு இவை பிடிக்காது என்று நன்றாய்த் தெரியும், ஸார். ஆனால் எங்கள் விருப்பம் என்று ஒன்று இருக்கிறதே. அதற்கு நீங்கள் கட்டுப் பட்டுத்தான் ஆகவேண்டும். அந்த விஷயத்தில் உங்களுக்கு உரிமை எதுவும் இல்லை. நாங்கள் சொல்கிறபடி இன்று நடக்கத்தான் வேண்டும்!'' என்று வெகு உரிமையோடு உதட்டு மட்டில் அன்பு ததும்பும் சொற்களைச் சிதறினார்.

சற்றுநேரம் கழித்துக் கருணாகரனின் கார் அந்த வீட்டுப் பங்களாவை விட்டு வெளியே வந்தது.

''இந்த மாதிரி எத்தனை பிறந்த தினங்களை அவரும் கொண்டாடி யிருக்கிறார், நாமும் காணிக்கை செலுத்தி வந்திருக்கிறோம்! எல்லாம் வேஷம்தான்'' என்றார் கருணாகரன் பக்கத்திலிருந்த தம் மனைவியிடம்.

''இவ்வளவு வேஷம் போடுகிறீர்களே, ஒரு பைசாவுக்கு ஏதாவது பிரயோசனம் உண்டா? அவர் உங்களுக்கு என்ன செய்து விட்டார்?''

''அவர் ஒன்றும் செய்யவேண்டாம், லக்ஷ்மி! கெடுக்காமல் இருந்தால் அதுவே போதும். அதற்குத்தான் மாலை, ஆலிங்கனம், புகழ்ச்சி எல்லாம்!'' என்றார் கருணாகரன்.

கார் ஹாரனை டிரைவர் விடாமல் சப்தித்தார். எதிரே ஒரு கூட்டம் போய்க்கொண்டிருந்தது. ''என்ன, அரசியல் ஊர்வலமா?'' என்று டிரைவரைக் கேட்டார்.

''இல்லீங்க, ஏதோ சாமி ஊர்வலம்போல் இருக்கு'' என்று ஹாரனை அழுத்தினான்.

ராமர் பட்டாபிஷேகப் படத்தை அலங்கரித்து நான்குபேர் சுமந்து போய்க் கொண்டிருந்தனர். நாகஸ்வரக்காரர் பாட்டு காதில் ஒலித்தது.

ராகம்: நீலாம்பரி தாளம்: ஆதி

பல்லவி

என்னக மனஸுகுராநி
பன்னக சாயி ஸொகஸு
பன்னுக கனுகொனனி கன்னுலேலே
கன்னுலேலே கண்டி மின்னுலேலே

சரணம்

மோஹமுதோ நீலவாரி
வாஹந காந்தினி கேரின
ஸ்ரீஹரினி கட்டு கொனனி தேஹமேலே
தேஹமேலே ஈ கேஹமேலே

ஸரஸிஜ மல்லே துளஸீ
விரவாஜி பாரிஜாத
விருலசே பூஜிஞ்சனி கரமுலேலே
கரமுலேலே ஈ காபுரமுலேலே

மாலிமிதோ த்யாகராஜு
நேலின ராமமூர்த்தினி
லாலிஞ்சி பொகடனி நாலிகேலே
நாலிகேலே ஸூத்ர மாலிகேலே.

(நாகத்தின் மேல் பள்ளியாய் இருக்கும் பரந்தாமனைக் காணாத கண்ணென்ன கண்ணே! நீலமேக காந்தியுடைய ஸ்ரீஹரியைத் தழுவாத தேகமென்ன தேகமோ! மலர்கொண்டு பூஜை செய்யாதகை என்ன கையோ! தியாகராஜன் வழிபட்ட ராமன் நாமத்தை பூஜிக்காத நாவென்ன நாவோ!)



இன்றையச் சிறப்பு அன்றே சோபித்தது!

இந்நான்கு பக்கங்களில் உள்ளவர்கள் இன்று கர்நாடக சங்கீத உலகில் பிரபலமாயிருப்பவர்கள். யார் யார் என்று ஊகிக்க முடிகிறதா, பாருங்கள். பிறகு உங்கள் ஊகம் சரிதானா என்பதைப் படித்து உணருங்கள்.



மாலி மகிழ்ந்தார்!



கச்சேரிக்கு மேல் கச்சேரி; படிப்புக்கு முழுக்கு!

சிக்கில் சிங்காரவேலன் சன்னதியிலிருந்து இனிமையாகக் குழலோசை பரவியது. எட்டு வயதுச் சிறுவன் அன்று தனது புல்லாங்குழல் திறமையை அங்கே அரங்கேற்றம் செய்து கொண்டிருந்தான்.

ஃப்ளூட் ரமணியின் பாட்டனார் ஆழியூர் நாராயணசாமி அய்யர் ஒரு புல்லாங்குழல் வித்வான். அவர் இட்ட வித்துத்தான், பேரனின் அரங்கேற்றமாக 1942ம் ஆண்டு திருக்கார்த்திகை தினம் சிக்கல் சன்னதியில் மலர்ந்தது.

பிறகு நாகப்பட்டினத்துக்குக் கச்சேரி செய்ய வந்திருந்த ஃப்ளூட் மாலியின் வாசிப்பைச் சிறுவன் ரமணி கேட்டான். அந்தக் கணத்தில் மாலிபோல் வாசிக்க வேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது. அதன் விளைவாகச் சில காலம் கழித்துத் திருவாரூர் கச்சேரிக்கு வந்திருந்த மாலியைச் சந்தித்து மாலியின் இசைத்தட்டில் வெளியாகியிருந்த பாட்டை அதே போல் வாசித்துக் காண்பித்தான். மாலிக்கு ஆனந்தம். ரமணியைத் தம் சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார். அன்று தொடங்கிய வாசிப்பு ரமணியை அமெரிக்கா வரை கொண்டு சென்றது.

பரம்பரையே தாளக்கட்டுப் பரம்பரை. அம்மாபேட்டை பக்கிரி என்ற அந்த நாளைய தவில் வித்வானின் பேரன். சிறுவன் உபேந்திரனின் விரல்கள் தோல் வாத்தியத்தில் வளைந்து கொடுத்து, லயமாக, நயமாகப் பேசியதில் ஆச்சரியம் இல்லை. தஞ்சாவூர் மிருதங்க வித்வான் வைத்தியநாதய்யரின் சிஷ்யர் ராஜம் ஐயரிடம் மிருதங்கம் கற்றுக் கொள்ள ஆரம்பித்தான்.

இவருடைய பதின்மூன்றும் வயதில் அரங்கேற்றம் தஞ்சாவூரிலேயே நடந்தது. தஞ்சாவூருக்கு ஒரு கச்சேரிக்கு வந்திருந்த செம்பை வைத்தியநாத பாகவதரைச் சிறுவன் உபேந்திரன் போய்ப் பார்த்தான். செம்பை உற்சாகத்துடன் பேசினார். ''இன்றைக்கு ராத்திரி என் கச்சேரியில் வாசிடா'' என்று உத்தரவும் போட்டுவிட்டார். கச்சேரியில் உபேந்திரனுக்குத் தனி ஆவர்த்தனத்துக்கும் சந்தர்ப்பம் கொடுத்து ஆதரித்தார். பையன் உபேந்திரன் அப்போது நாலாம் படிவம் தான் வாசித்துக் கொண்டிருந்தான். மிருதங்கம் அரங்கேற்றிய வேளை கச்சேரிக்கு மேல் கச்சேரி. படிப்புக்கு முழுக்கு! 1969ல் வீணை பாலசந்தருடன் பிரான்ஸ், பெல்ஜியம் நாடுகளில் தம் மிருதங்க நாதத்தை எழுப்பினார். அப்புறம் ஆறு தடவைகள் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டார்!

''பொம்மனாட்டி கிட்டப்பா!''



தென்காசி வள்ளிநாயகம் பிள்ளையின் புதல்வி ரத்தினத்துக்கு ஏழு வயதிலேயே சாரீரத்தில் பிருக்காக்கள் புரண்டன. அந்த நாளில் பிரபலமாக இருந்த ராமலிங்க பாகவதரிடம் சிட்சை பெற்றார்.

திரைப்பட இயக்குனர் காலஞ்சென்ற கே. சுப்பிரமணியம் ஒரு சமயம் சிறுமி ரத்தினத்தின் 'கணீர்'க் குரலைக் கேட்டுவிட்டு அவருடைய 'பக்த சேதா' படத்துக்குப் பாடச் சென்னைக்கு அழைத்து வந்து விட்டார். ரத்தினத்துக்குப் பத்து வயது. சினிமாத் துறை அவருடைய சாஸ்திரீய சங்கீத ஆர்வத்தைப் பாதிக்கவே இல்லை. அதில் முழு ஆர்வம் காட்டி வந்தார். இவருடைய பன்னிரண்டாவது வயதில் இலங்கையில் முதல் இசைக் கச்சேரி நடந்தது. அதுதான் இவருடைய அரங்கேற்றம். அப்போதே அவர் ராமநாதபுரம் கிருஷ்ணனிடம் சிஷ்யையாக அமர்ந்து விட்டார்.

''உனக்கென்னம்மா! நீ ஒரு பொம்மனாட்டி கிட்டப்பா!'' என்று இவருடைய குருநாதர் ராமநாதபுரம் கிருஷ்ணன் அடிக்கடி சொல்லுவாராம்!



கடிகாரம் தோற்றது !

ஆந்திர நாட்டில் பாருபள்ளி ராமகிருஷ்ணையா பந்துலு என்று ஒரு மகா வித்வான். அவருடைய குரு தட்சிணாமூர்த்தி சாஸ்திரி என்பவர். தம் குருநாதர் ஞாபகார்த்தமாக ஆண்டுதோறும் பாருபள்ளி ராமகிருஷ்ண பந்துலு ஒரு சங்கீத உற்சவத்துக்கே ஏற்பாடு செய்து விடுவார்.

அந்த ஊரில் எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் அற்புதமாகப் பாடுவான். அந்தப் பையனுக்கு இந்த இசை உற்சவத்தில் ஒரு வாய்ப்புக் கொடுக்க விரும்பினார்கள் நிர்வாகிகள். காலை 8–9 ஒதுக்கினார்கள்.

சிறுவன் பாட ஆரம்பித்தான், வர்ணம், ராக ஆலாபனை, கீர்த்தனைகள், ராகம், தானம், பல்லவி எல்லாம் கடல்மடை திறந்த வெள்ளமாக ஓடியது. யாரும் கடிகாரத்தைப் பார்க்கவில்லை. சிறுவன் பதினோரு மணி வரை பாடி முடித்தான். அடுத்து ஹரிகதை செய்யக் காத்திருந்த சூரிய நாராயண சாஸ்திரி ''சபையோர்களே! இந்தக் கர்ணாமிர்தமான இசையைக் கேட்டு ஆனந்தத்தில் மூழ்கியிருக்கும் உங்கள் கற்பனையை இப்போது என் நிகழ்ச்சியால் கலைக்க விரும்பவில்லை. பிறகு ஒரு சமயம் என் கதையை வைத்துக் கொள்ளலாம்'' என்று சிறுவனை ஆசீர்வதித்து ஒதுங்கிக் கொண்டார்.

அந்தச் சிறுவன் பாலமுரளி கிருஷ்ணாவுக்கு இதுவரை அவருடைய தந்தை பட்டாபிராமையாவேதான் குருவாக இருந்தார். இப்போது பாருபள்ளி ராமகிருஷ்ணய்யா தமது சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார். ஒன்பதாவது வயதில் பாலமுரளிக்கு வானொலியில் முழுநேரக் கச்சேரி!

தாத்தா ஸ்ரீகண்டையா வயலின் வித்வான். தகப்பனார் பாப்பா வெங்கட்ராமய்யா பிரசித்தி பெற்ற வயலின் வித்வான். தியாகராஜன் ஆறு வயதிலேயே தாத்தாவிடம் வயலின் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். பிறகு தகப்பனாரிடமும்கற்றுக் கொண்டார்.

அப்பா கண்டிப்புக்காரரர். ''இதை ஒரு கலைநோக்குடனே பொழுதுபோக்குக்காகவோ கற்றுக் கொள். தொழில் நோக்குடன் அணுக வேண்டாம்'' என்றுதான் வற்புறுத்தினார். ஆனாலும் எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்த பிறகு தியாகராஜன் வயலின் வாசிப்பில்தான் ஈடுபாட்டைக் காண்பித்தார். தகப்பனாரும் 'சரி போகட்டும்' என்று சும்மா இருந்து விட்டார்!

அப்பா ஒன்று நினைக்க...



தியாகராஜனின் அரங்கேற்றம் 1948ம் ஆண்டு திருவையாறு தியாகராஜ உற்சவத்தில் நடந்தது. தகப்பனாருடன் கூடச் சேர்ந்து வயலின் வாசித்தார். மேடை ஏறியது இதுதான் முதல் தடவை.

1967ல் அமெரிக்க வெஸ்லியன் சர்வகலாசாலைக்கு வயலின் பேராசிரியராகப் போய் மூன்று வருடங்கள் பணியாற்றிவிட்டுத் திரும்பி யிருக்கிறார். தென்னிந்திய வயலின் இசைக்கு அங்கே பிரமாதமான வரவேற்புஇருக்கிறது என்கிறார் தியாகராஜன்.

அமெரிக்க வாசத்தின் போது, ரமணி, டி. விஸ்வநாதன் போன்றவர்களுடன் சேர்ந்து அங்கேயே பல இசைத்தட்டுக்களைக் கொடுத்திருக்கிறார்.

வேலூர் கோபாலாச்சாரியார் அந்த நாட்களில் ஒரு புகழ் பெற்ற மிருதங்க வித்வான். நைனா பிள்ளையின் சிஷ்யர். மிருதங்கம் தவிர கொன்னக்கோல் வாசிப்பதிலும் நிபுணர். இந்தக் கோபாலாச்சாரியாரின் சிஷ்யன்தான் ராமபத்திரன். குரு சிஷ்ய உறவைத் தவிர அப்பா—பிள்ளை என்ற உறவும் உண்டு. சிறுவன் ராமபத்திரன் எட்டு, ஒன்பது வயதிலேயே மிருதங்கத்தை லர்கவமாகக் கையாளப் பழகிக் கொண்டு விட்டான். ஆனால் ராமபத்திரனின் முறையான அரங்கேற்றம் பதினைந்தாம் வயதில்தான் நிகழ்ந்தது. அதுவும் அமர்க்களமாகவே இருந்தது.

18–7–43ல் எழும்பூர் ஜகன்னாத பக்தசபா ஆதரவில் மதுரை மணி ஐயர் கச்சேரி ஏற்பாடாகி யிருந்தது. அன்றைக்கு ராமபத்திரனை உற்சாகப்படுத்தி மேடை ஏற்றி உட்கார வைத்து விட்டார்கள். ராமபத்திரனுக்கு உள்ளூற பயம். ஆனால் வாசிப்பு பிரமாதமாக அமைந்து விட்டது. கச்சேரியை ரசித்த பேராசிரியர் சாம்பமூர்த்தி மனம் திறந்து பாராட்டினார். அடுத்த வாரம் நடக்கவிருந்த அரியக்குடி அய்யங்கார் அவர்கள் கச்சேரிக்கும் ராமபத்திரனையே ஏற்பாடு செய்து விட்டார்கள். சௌடய்யா வயலின். அரங்கேற்ற நேரம் அதிர்ஷ்ட நேரமாகவே மாறியது ராமபத்திரனுக்கு.

அமெரிக்காவில் 1962ல் முதல் தடவையாக மிருதங்கத்தை அறிமுகப்படுத்தும் வாய்ப்பு ராமபத்திரனுக்குக் கிடைத்தது.

உள்ளூற பயம்;
வாசிப்பு அபாரம்!





ஆசார்யாள் சதஸ்; அரியக்குடி தம்பூரா!

இவர் வீடே ஒரு சங்கீத மண்டபமாக விளங்கிய காரணத்தால் இவருக்குச் சிறு வயதிலிருந்தே இசைத் துறையில் ஒரு லயிப்பு விழுந்து விட்டது. வழக்கறிஞரான தகப்பனார் சிறந்த சங்கீத ரசிகர். அந்த நாளில் பிரபலமா யிருந்த அத்தனை இசை வித்வான்களும் இவர் தகப்பனாரின் நண்பர்களாக வந்து போய்க் கொண்டிருந்ததால் அவர்களுடைய ஆத்மார்த்தமான சங்கீதத்தைக் கேட்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. தாமும் பாடிப் பழக ஆரம்பித்தார்.

1933 அல்லது *1934*ம் வருடம். எஸ். ராஜத்துக்கு அப்போது வயது பதின்மூன்று. காஞ்சி ஆசாரிய ஸ்வாமிகள் சித்தூரில் முகாமிட்டிருந்த வேளை. அங்கே சதசில் சில சங்கீத நிகழ்ச்சிகள் ஏற்பாடாகி யிருந்தன. முதல் நாள் அரியக்குடி கச்சேரி. மறுநாள் அதே நேரத்தில் ராஜம் பாடுவதற்குத் திடீரென்று ஏற்பாடாகி விட்டது. அன்று ராஜத்தின் கச்சேரிக்குத் தம்புராப் போட்டவர் குடும்ப நண்பர் அரியக்குடியேதான்! சுமார் இரண்டு மணி நேர அவகாசத்துக்குப் பாடி ஜமாய்த்துவிட்டார். இந்த அரங்கேற்றக் கச்சேரிக்குச் சன்மானமாக, மடத்து நிர்வாகிகள் தங்கப் பதக்கமும் பட்டும் கொடுத்தார்கள். பின்னர் ராஜத்துக்கு சாஸ்திரீய சங்கீதத்தை முறைப்படி கற்றுக் கொடுத்தவர் காலம்சென்ற வயலின் வித்வான் திருவாலங்காடு சுந்தரேசய்யர். இப்போது சென்னை வானொலியில் பணியாற்றும் ராஜம் சிறந்த ஓவியரும்கூட.

பரம்பரையே சங்கீத பரம்பரை. தகப்பனார் சங்கீத கலாநிதி பொன்னையாபிள்ளை. சிறுவன் சிவானந்தத்துக்குப் பரதநாட்டியம், சங்கீதம், மிருதங்கம் எல்லாவற்றிலுமே ஒருவித மோகம். ஆனால் பொன்னையா பிள்ளை அவர்களுக்குத் தம் புதல்வன் இந்தத் துறையில் நுழைவது கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. தடுத்துப் பார்த்தார். அப்போது அவர் அண்ணாமலை சர்வகலாசாலையில் பணியாற்றி வந்தார். ஆனாலும் சிவானந்தத்துக்கு டி.எஸ். சபேசய்யரின் சிபாரிசு பலமாக இருந்தது. எனவே சிவானந்தம் வீணை கற்கத் தேசமங்கலம் சுப்பிரமணிய ஐயரையும் கோமதி சங்கரய்யரையும் அணுகினார்.

*1936*ல் கல்யாண சோழபுரத்தில் நடந்த ஒரு கல்யாணத்தில் சிவானந்தத்தின் வீணைக் கச்சேரி அரங்கேற்றமாகியது.

சிபாரிசு பிடித்தவர்!



*1942*ல் கோவையில் ஒரு பெரிய மனிதர் வீட்டுக் கல்யாணக் கச்சேரி. கல்யாணி வர்ணத்துடன் ஆரம்பித்தார். வர்ணம் முடிந்தவுடன் அந்தத் திருமணம் சம்பந்தப்பட்ட பிரமுகர் ஒருவர் மேடையை நெருங்கி வந்து 'நோட்டு வாசியுங்க' என்று கேட்டுக் கொண்டார். சிவானந்தம் திடுக்கிட்டார். அவருக்கு அந்த வேண்டுகோள் புரியவில்லை. அவருக்கு நோட் வாசிக்கத் தெரியாது.

மாமா முத்தையா பிள்ளை தான் அன்று வயலின். அவர் ரகசியமாக ''முழிக்காதே. கோலாட்டப் பாட்டுக்களை வாசி! இங்கிலீஷ் நோட் மாதிரி அமையும்'' என்றார். சிவானந்தம் அப்படியே செய்யப் பிரமுகர் ரொம்ப சந்தோஷப்பட்டார். சன்மானத்தோடு கூட ஒரு தங்கமெடலும் கிடைத்தது. என்ன செய்வது, அப்படியும் சில ரசிகர்கள்!

''என்னோடே இந்தத் தம்புராத் தூக்கறது நிற்கட்டும்டா! நீ படித்து ஏதாவது உத்தியோகம் பாருடா!'' என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தார் தகப்பனார் மகாராஜபுரம் விசுவநாதய்யர். பையன் பள்ளிக்கூட நாட்களில் பாரதிப் பாட்டுப் போட்டிகளிலும், மற்ற இசைப் போட்டிகளிலும் பரிசுகளை வாங்கிக் குவிப்பதைக் கண்டு பெரியவருக்கு உள்ளூறப் பயமே வந்து விட்டது. ஆனாலும் சிறுவன் சந்தானம் அப்பாவின் சங்கீதத்திலேயே லயித்து அவர் பாடுவதைக் கேட்டுக் கேட்டு அந்தத் துறையின் திசையிலேதான் சென்று கொண்டிருந்தான்.

மாயவரத்தில் மதுரை மணி ஐயரின் சகோதரிக்குத் திருமணம். மகாராஜபுரம் விசுவநாதய்யர் கச்சேரி. விசுவநாதய்யருக்குத் தம்புராப் போட்டுக் கொண்டு கூடப் பாடும் ஐயங்கார் ஒருவர் அன்று வரமுடியவில்லை. ஆகவே அவசரத்துக்கு விசுவநாதய்யர் சந்தானத்தைப் பார்த்து, ''சரி சரி! இன்னிக்கு என்கூடப் பாடிடு!'' என்று கூறி வைத்தார்.

கச்சேரி, சந்தானத்துக்கு ஒரு வகையில் நுழைவுப் பரீட்சையாகவும் அமைந்தது. இந்தக் கச்சேரிக்குப் பிறகுதான் மகாராஜபுரம் தம் பிள்ளைக்கு முறையாகச் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார்!

நுழைவுப் பரீட்சை தேறினார்!




பரூர் சுந்தரமய்யரின் புதல்வராகிய எம். எஸ். கோபால கிருஷ்ணன் இன்று ஒரு சிறந்த வயலின் வித்வானக விளங்குவதில் ஆச்சரியமில்லை. புலிக்குப் பிறந்ததாயிற்றே! தகப்பனரே குரு ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டார். பள்ளிக் கூடத்துக்கும் ஒழுங்காகப் போக வேண்டும். அதைத் தவிர வீட்டில் கண்டிப்பாக எட்டு மணி நேரம் வயலின் கற்றுக் கொண்டாக வேண்டும்!

கோபாலகிருஷ்ணனின் அரங்கேற்றம் ஒன்பதாவது வய திலேயே நடந்து விட்டது—கல்கத்தாவில் தகப்பனருடன் சேர்ந்து வாசித்தார்.

1952ம் ஆண்டு தந்தையுடன் காபூலுக்குக் கச்சேரி செய்யப் போயிருக்கிறர். இந்த ஆண்டில் நேபாள அரசர் அழைப்பின் மேல் காட்மாண்டுவுக்கும் போய்க் கச்சேரி செய்து விட்டுத் திரும்பினர். தந்தையாரின் வயோதிகத் தன்மையை முன்னிட்டு இவர் வெளிநாடுகளுக்குப் போகும் பல வாய்ப்புக்களைத் தவிர்த்து விட்டார்.

சமீப காலமாக ஹிந்துஸ்தானி இசைத் துறையிலும் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகிறர்.

ஆறு மணி நேரப் படிப்பு; எட்டு மணி நேர வாசிப்பு!





இவருடைய ஆரம்ப கால குருகுலவாசம் காரைக்குடி ஜலதரங்கம் கணபதி ஐயரிடம். பதினேராவது வயதில் 1936ம் ஆண்டில் ஓரளவு அஸ்திவார ஞானத்துடன் அரியக்குடி ராமானுஜய்யங்காரிடம் வந்து சேர்ந்தார் பி. ரா்ஜம் அய்யர். பதின்மூன்ருவது வயதிலேயே சுவாமிமலை சுவாமிநாத சுவாமி சன்னதியில் தம்புராப் போட்டு அரியக்குடியுடன் கூடச் சேர்ந்து பாடும் வாய்ப்புக் கிட்டியது.

இவர் தனியாக உட்கார்ந்து முழுக் கச்சேரி செய்தது 1944ம் ஆண்டு திருவையாறு தியாகராஜ உற்சவத்தில்தான்.

சில வருஷங்களுக்கு முன்னல் பெரம்பூர் சங்கீத சபா நிர்வாகிகள், ‘சங்கீத வித்வான்களின் பிரபல சிஷ்யர்கள்’ என்ற வரிசையில் பல கச்சேரிகளுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். அரியக்குடியின் சிஷ்யன் என்ற முறையில் ராஜம் அய்யரும் ஒரு நாள் பாடினர். அன்று கச்சேரி யின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை அரியக்குடி வந்து உட்கார்ந்து கச்சேரியை ரசித்தார். இதை ஒரு பெரிய கௌரவமாக ராஜமய்யர் நினைக்கிறர்.

1945—46ல் சில மாதங்கள் திருவனந்தபுரத்தில் தங்கியிருந்தபோது ராஜமய்யர் ஐயப்ப தரிசனத்துக்குச் சபரிமலைக்குப் போயிருந்தார். அங்கே எதிர்பாராத விதமாக சௌடய்யாவும் வந்திருந்தார். இவரைப் பார்த்தவுடன் சௌடய்யாவுக்கு ஒரே உற்சாகம். ‘‘உட்கார்ந்து ‘ஹரிஹர புத்திரம்’ கீர்த்தனையைப் பாடுங்கள். அதற்கு இங்கே நான் வயலின் வாசிக்க வேண்டும்’’ என்று வயலின் பெட்டியைத் திறந்தார்.

குரு அளித்த கௌரவம்

தகப்பனர் தஞ்சாவூர் மகா லிங்கம் பிள்ளை ஒரு மிருதங்க வித்வான். தம் மழலைச் செல்வத் துக்குப் பரதநாட்டியம் கற்றுக் கொடுக்கத்தான் அவர் ஆசைப் பட்டார். சிறுவன் தியாகராஜன் அத்தனை வசீகரமாக இருந்தான். ஆனல் அந்தச் சிறுவன் ஐந்தாம் வயதில் பரதநாட்டிய ஆசைக்குப் பிரியாவிடை கொடுத்து விட் டான். காரணம் அந்நாளைய வெள்ளிச் சதங்கை அத்தனை கனம்! ஒன்பது வயது வரை தகப்பனரிடமே இசை பயின் ருன். ஒன்பதாம் வயதில் ஒரு திருப்பம். பதினுரும் வயது வரை தொழில் நாடக உலகம்!


நடனம், நாடகம், இசை!



மீண்டும் இசைத் துறை அவ ரைத் தன்பால் இழுத்தது. மிரு தங்க வித்வான் தஞ்சாவூர் வைத்தியநாதய்யரிடம் வந்து சேர்ந்தார். இவர் 1941ல் தம் சிஷ்யன் தியாகராஜனைச் செம்மங் குடி சீனிவாசய்யரிடம் ஒப்ப டைத்தார். 1941லிருந்து 44 வரை செம்மங்குடியின் சிஷ்ய ராக மலர ஆரம்பித்தார்.

1944-45ல் திருவையாறு தியா கையர் ஆராதனையின் போது நிகழ்ந்த இவருடைய அரங் கேற்றக் கச்சேரியே முதல்தரக் கச்சேரியாக அமைந்தது. இன்று தமிழ்நாடு கர்நாடக இசைக் கல்லூரியின் உதவி முதல்வர்.

தொகுப்பு: கோமதி சுவாமிநாதன்



திரைகடல் ஓடி...

"**ரா**ம நவமிக்கு முப்பது கச்சேரிகள் ஏற்பாடு செய்திருக்கிறோம். உங்கள் கச்சேரியை ராமநவமி அன்றைக்கே விமரிசையாக நடத்தணும்னு எல்லோர் அபிப்பிராயமும். கோரிக்கையை ஏற்கணும்'' என்று கேட்டுக் கொண்டார் காரியதரிசி.

''ராமநவமி அன்றைக்கா? பேஷ், பேஷ்... ராமநவமி அன்று ராம கைங்கரியம் செய்யக் கொடுத்து வைக்கணுமே!'' என்றார்பாகவதர்.

"**பா**கவதர்வாள்! அடுத்த மாதம் உங்களால் அமெரிக்கப் பிரயாணம் செய்ய முடியுமோ? இவர் உங்கள் 'டேப்'பை என் வீட்டில் கேட்டு விட்டு உங்களை அமெரிக்காவுக்கு அழைத்துப் போய், எல்லா நகரங்களிலும் உங்கள் கச்சேரிகளை ஏற்பாடு செய்யணம்னு துடிக்கிறார்'' என்று அன்று ஓர் ஆங்கிலேயரை அறிமுகப்படுத்தி வைத்துக் கேட்டார் இன்னொரு நண்பர். ''பண விஷயம் எப்படியோ?'' என்று கேட்டார் பாகவதர்.

''அதைப் பற்றி உமக்கு ஏன் கவலை? மூன்று மாதங்களில் இந்த ஊரில் மூன்று தலைமுறைகளில் சம்பாதிக்கக் கூடிய பணத்தைத் திரட்டிக் கொள்ளலாம்.''

ராமநவமி உற்சவ மண்டபத்தில் ராம நாமாவளியின் ஒலி ஆகாயத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

''இன்று நாகநாத பாகவதர் பாடியிருக்கணும். அமெரிக்கா போய் விட்டார். எங்களுக்குப் பெரும் ஏமாற்றம்தான்'' என்று காரியதரிசி சிவநேசனிடம் குறைப்பட்டுக் கொண்டார்.

''இதிலே என்ன குறை ஐயா! நம்ம ஊரிலே ராமநவமி எங்கே போகிறது? இந்த வருஷம் இல்லேன்னு அடுத்த வருஷம். இங்கு பாடினால் இன்றைக்கெல்லாம் இருந்தால் ஒரு மாலை போட்டுத் தேங்காய் மூடி ஒன்று கொடுப்பீர்கள். இப்ப அவர் ஏகமாய்ச் சம்பாதிக்கிறார். எங்கே போனாலும் புகழ்ச்சியாம். டெலிவிஷன் கச்சேரிகளாம். டேப்பாம். ஒரு மாதம் மேலே தங்கி யிருந்தால் பத்து, இருபதினாயிரம் ரூபாய் மேலும் லாபமாம்... யாரைய்யா இந்த நாளில் கொடுக்கிறார்கள்?'' என்றார் சிவநேசன்.

நாகநாத பாகவதருக்குப் பதில் அன்று பாடிய பாகவதரின் பாட்டு ஒலிபெருக்கியில் கேட்டது.

ராகம்—கல்யாணி தாளம்—சாபு

நிதி சால சுகமா...ராமுனி ஸந்
நிதி ஸேவ சுகமா — நிஜமுக பல்கு மனஸா
ததி நவநீத க்ஷீரமுலருசோ—தாச—
ரதி தியான பஜன ஸுதாரஸமு ருசோ
தம சம மனு கங்கா ஸ்நானமு சுகமா கர்—
தம துர்விஷய கூப ஸ்நானமு சுகமா
மமத பந்தனயுத நரஸ்துதி சுகமா
ஸுமதி தியாகராஜனுதுனி கீர்த்தன சுகமா

[நிதி சுகமா? ராம ஸன்னிதியில் ஸேவை சுகமா? தயிர், வெண்ணெய், பால் சுவை சுக்மா? ராம தியான பஜனை சுகமா? கங்கா ஸ்நானம் சுகமா? சேறு நிறைந்த கிணறு ஸ்நானம் சுகமா? நரஸ்துதி சுகமா? தியாகராஜன் பாடும் ராமன் துதி சுகமா?]



கீர்த்தனைக் கதை-3

திம்ப முடியுமா ?

அந்தப் பிராபல்யமான துணிக் கடையில் ஜே ஜே என்று கும்பல். கல்யாண காலம். அப்படி இப்படி நகரக்கூட இடமில்லாமல் பெண்கள், வயதான தாய்மார்கள், பாட்டிகள் புடவைகளைப் பொறுக்கி எடுப்பதில் முனைந்திருந்தார்கள். அந்த வயதான அம்மாள், ஒரு விலையுயர்ந்த சேலையைக் கையில் எடுத்துக் கொண்டு திரும்பினாள். அந்தக் கடையில் சேலை பொறுக்கும் வேலை ஒரு ஐந்து நிமிடம் ஸ்தம்பித்துப் போயிற்று. காரணம் சினிமா நட்சத்திரங்களில் முன்னணியில் இருக்கும் மாதுரி கடையினுள் நுழைந்ததுதான். அவள் பக்கத்தில் கிருதாவும், நவநாகரிக உடையும் அணிந்திருந்தவன் பெருமையில் அவளை அணுகியபடியே வந்து கொண்டிருந்தான். மாதுரி கொச்சை கொச்சையாய், நவநாகரிக கான்வென்டு பிள்ளைகள் பாணியில் அவனைப் பார்த்துப் பேசியபோதெல்லாம் அவன் முகத்தில் அலாதி பெருமிதம் படர்ந்தது. அவனும் அவளுடன் கொஞ்சிக் கொஞ்சிப் பேசினான்.

கையில் சேலையுடன் வந்த அந்த வயதான அம்மாள் கிருதாவுடன் வந்த ஆளை உற்றுக் கவனித்தாள்.

''ஏண்டா, ரகு! இவன் நம்ம ராமாயண சாஸ்திரி பேரன் இல்லை? அவன் ஜாடையாய் இருக்கே!'' என்று கடைக்கு அவளுடன் வந்திருந்த அவள் பிள்ளையைக் காதுடன் காதாய்க் கேட்டாள். ரகு அவனை உற்று நோக்கினான்.

''அவன் மாதிரிதான் இருக்கு. என்னோடு கும்பகோணம் ஸ்கூலில் படித்தவன்தான்... ஆனால் இப்ப ரொம்பவும் பருத்துக் கிடக்கிறான். ஆமாம்மா, அவனேதான். கழுத்திலே வடு இருக்கே. அவனேதான். சந்தேகமில்லை'' என்று ரகு அவனுக்குத் தெரிந்த பால்ய அடையாளத்தை வைத்துக்கொண்டு மாதுரியுடன் வந்தவன் ராமாயண சாஸ்திரியின் பேரன் வைத்தி என்று நிர்ணயித்தான்.

''ஏதோ ஒரு தளுக்கி குலுக்கி பெண்ணுடன் வருகிறானே. அவன் கல்யாணத்துக்குக்கூட நமக்கு அழைப்பு வந்து நாம் போகலே? அந்தப் பொண்ணு இப்படி யெல்லாம் பகல் வேஷம் மாதிரி வந்திருக்கு'' என்று ரகுவின் தாயார் கேட்டாள். இவர்கள் பேச்சு பக்கத்தில் இருந்தவர்களின் கவனத்தை ஈர்த்தது.

''அம்மா! கொஞ்சம் பேசாம இரும்மா. வீட்டுக்கு வந்து சொல்றேன்.'' ரகு பொது இடத்தில் இப்படி யெல்லாம் பேசுவது நாகரிகமில்லை என்று அம்மாவுக்குப் போதித்தான்.

அம்மாவும் வேறொரு மூலைக்கு ஜாக்கெட் பொறுக்கப் போனாள். அரை மணிக்கப்புறம் தான் சிப்பந்திகளுக்குக் கடையில் வந்தவர்களைக் கவனிக்க அவகாசம் கிடைத்தது.

மாதுரி சொகுசாகக் கடையை விட்டு வெளியேறினாள். சுருண்டு சுருண்ட கேசங்கள். ஓரிரண்டு கருள்கள் பௌடர் அப்பிய முகமேனியில் தவழ்ந்து விளையாடின. உடல் வளைவு நெளிவுகள் தெரிய மெல்லிய ஆடை வழுக்கி வழுக்கி விழும்படியாகக் கட்டப்பட்டிருந்தது. போதையூட்டும் மது போன்ற உடற் கவர்ச்சி. அவள் இடுப்பில் லாகவமாகக் கைகொடுத்து வைத்தி அவளைக் காரினுள் உட்கார வைத்துத் தானும் பக்கத்தில் சொகுஸாய் அமர்ந்தான். கடை முதலாளி வாசல் வரையிலும் வந்து வழியனுப்பினான். சேலைப் பாக்கெட்டுக்கள் காரின் முன் ஆசனத்தில் வைக்கப்பட்டன.

''என்ன பில்?'' என்று காரினுள்ளிருந்தே வைத்தி கேட்டான்.

''ஆறாயிரத்து ஐந்நூறு ஸார்'' என்றான் முதலாளி. தோல் பையிலிருந்து செக் புத்தகத்தை எடுத்து அந்தத் தொகைக்கு செக் எழுதிக் கொடுத்து முதலாளியின் நன்றியைப் பெற்றுக் கொண்டு காரைக் கிளப்பச் சொன்னான்.


''ஷோனாலால் வைர வியாபாரி கடைக்குப் போ!'' என்று டிரைவருக்குச் சொன்னான்.

''அம்மா, அன்று கேட்டாயே இதோ பார்!'' என்று ரகு அம்மாவிடம் ஒரு பிரபல சினிமாப் பத்திரிகையைக் காண்பித்தான். மேல் அட்டைப் படம் தொடங்கி உள்ளே ஐந்தாறு கலர்ப் பக்கங்கள் வரை மாதுரியின் கவர்ச்சித் தோற்றமே பல கோணங்களில் பிரசுரமாகி யிருந்தது. ''ஹாப்பி பர்த்டே டு யூ'' என்ற தலைப்பு.

''இதுக்குத்தான் அந்த வைத்தி அசடு மாதிரி அவள் புடவைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு வந்திருந்தானா? அதுக்கு ஏன் தான் இப்படிப் புத்தி கெட்டுப் போய்விட்டதோ? ராமாயண சாஸ்திரிகள் இருந்த நேமம், நிஷ்டை, படிப்பு, ஆசாரம் என்ன? அவருக்கு இப்படிச் சினிமாக்காரியைச் சுத்தற பேரனா? கலிகாலம் என்கிறது சரியாத்தான் இருக்கு. பெரியவா கௌரதை, பண்பு ஒண்ணும் கிடையாதா?'' என்று ராமாயண சாஸ்திரிகள் வாழ்க்கையை நினைத்து ரகுவின் தாயார் வைத்தியை மனமாரச் சபித்தாள்.

''நீ ஏன் அம்மா இப்படி அங்கலாய்க்கறே? வைத்தி அப்பா, அம்மாகூட இப்படிக் கஷ்டப்பட்டுக்க மாட்டா போலிருக்கே?'' என்று ரகு தாயாருக்கு உபதேசம் செய்தான்.

''நமக்கு ரொம்பத் தெரிந்தவா பிள்ளை இப்படிக் கெட்டுப் போகிறான் என்றால் மனம் கேட்க மாட்டேன் என்கிறதுடா. வைத்தி



வேறு நீ வேறு? உன்னுடன் பள்ளிக்கூடத்தி லேருந்து வந்து நம்ப ஆத்திலே எவ்வளவு நாட்கள் இட்லி, மிளகாய்ப் பொடி போட்டுண்டு சாப்பிட்டிருப்பான். அந்த வாஞ்சைடா! நேரில் போய்ப் புத்திமதி சொல்லலாமோ என்றுகூடத் துடிக்கிறது'' என்று மாதுரி சினிமாப் பத்திரிகையைத் தூக்கி எறிந்தாள்.

''உன் பேச்சு ஒண்ணும் அவன் காதிலே ஏறுது. மாதுரி பேச்சுத்தான் அவனுக்கு அவன் தாத்தாவின் ராமாயண உபன்யாசம். அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிறுன், தெரியுமோல்லியோ!'' என்றுன் ரகு.

''அதுதான் அன்னிக்கே கடையிலே எல்லாரும் பேசிக் கொண்டார்களே. இதுகளுக்கெல்லாம் யார் யார் எவள் எவளைக் கல்யாணம் பண்ணிக்கறு, எவள் எவனை விட்டு ஓடிவிட்டாள் இதைப் பற்றி யெல்லாம் என்ன அக்கறை?'' என்றுள் ரகுவின் தாயார்.

அடுத்த மாதம், ''அம்மா, கேட்டியா? வைத்தி வீடு ஏலத்துக்கு வந்திருக்கு! அந்த மாதுரி இவன் பணத்தை உறிஞ்சிட்டு வேறு ஒருத்தனைப் பிடித்துக் கொண்டு விட்டாள்'' என்று அந்தப் புதுமுக ஆசாமி யார் என்று போட்டிருந்த சினிமாப் பத்திரிகையை அம்மாவுக்குக் காட்டினுன் ரகு.

''பணம் போனுல் போகட்டும். புத்தி வந்தால் சரிதான்'' என்று தாயார் சொன்னுள்.

வைத்தி ஏலத்துக்கு வந்திருந்த வீட்டில் சோகத்துடன் உட்கார்ந்திருந்தான். மாதுரி செய்த வஞ்சகத்தை மறக்கப் பிரயத்தனப் படப் பட ஆவேசம் கொந்தளித்தது. ''நான் முட்டாள். கபடம் க்வ்வும் அவள் மேலாடையிலும், இளமையின் மதமதப்பிலும், செயற்கை முடி அழகிலும் மயங்கிப் போனேன். அவளைக் குற்றம் கூறுவானேன்? எனக்குப் புத்தி எங்கே போயிற்று? மனசு திடமாய் இல்லை'' என்று அந்தராத்மாவைக் கலந்து ஆலோசித்து அமைதியை நாடினுன். பக்கத்து வீட்டில் ரேடியோ அலறிற்று. தாத்தாவின் ஒலிப் பதிவு ராமாயண உபந்யாசம் நடந்துகொண்டிருந்தது. தியாகராஜஸ்வாமியின் கீர்த்தனை ஒன்றை அழகாகப் பாடிக் கொண்டிருந்தார். தாத்தாவின் குரல் கேட்டு ஓர் அமைதி. பாட்டைக் கவனமாய்க் கேட்டான்.

ராகம் தோடி தாளம் ரூபகம்

பல்லவி

தப்பி ப்ரதிகி போவ தரமா? ராமா! கலிலோ

அனுபல்லவி

முப்புந விஷயதடாகமுந முநுகக
த்ருட மனஸை

சரணம்

கஞ்சு மொதலு லோஹ தந
கநகமுலநு ஜுூசி விஸ –
மஞ்சு மறியு பெங்குலநுசு
நெஞ்சி யண்டநி மனஸை—
நங்கநாசுல மாநகுயங்க
வஸ்த்ரமுல பாககு
முங்குருலனு கநி யந்தரங்கமுநனு
ஆஸ்ஞ்சக

ஜாஜிமல்லெ மந்தார
ஸரோஜமுலனு மனஸார
ராஜ பதமுசே த்யாகராஜநுதுனி
பூஜிஞ்சக.

[இக்கலியில் சிற்றின்பத்தில் மூழ்காமல் திடமான மனத்துடன் தப்பிப் பிழைப்பது முடியுமா? செல்வம், பொன் இவைகள் பானை ஓடுகளுக்குச் சமம் என்று உணர்வதும், கபடம் நிறைந்த பெண்கள் கவர்ச்சியில் விழாமல் தப்பிப் பிழைப்பதும் சாத்தியமா? தியாகராஜன் பூஜிக்கும் ராம பக்தியைத் தவிர வேறு விதமாகக் கலியில் தப்பிப் பிழைக்க முடியுமா?]





டைகரின் குல்லாய்

டைகர் வரதாசாரியார் பிறரைப் பரிகசிப்பதில்லை. தம்முடைய நகைச்சுவைக்குத் தம்மையே இலக்காக்கிக் கொண்டு மற்றவர்களைச் சிரிக்க வைப்பார். நிலைக் கண்ணாடியின் முன்பு நின்று கொண்டு, தம் அழகைத் தாமே சுவைத்து, ''என் பெயர்தான் டைகர். ஆனால் உருவத்தில் நான் கரடி'' என்பார்!

ஒரு முறை மைசூரில் அவர் சிறிய குல்லாய் ஒன்றைத் தலை மீது அணிந்து உலாவ ஆரம்பித்தார். பிரம்மாண்டமான அவருடைய சரீரத்தின் சிகரத்தின் மீது அந்தக் குல்லாய் சிறிதும் பொருந்தாமல், அவரை ஒரு கோமாளியாகவே தோன்றச் செய்தது. நண்பர்கள் எவ்வளவு வற்புறுத்தியும் அவர் அதைக் கழற்ற மறுத்துவிட்டார். ''பிரம்மதேவனே என்னை இவ்வாறு சிருஷ்டி செய்திருக்கையில் இந்தக் குல்லாய் பாவம், என்ன செய்யும்? தேவேந்திரனுடைய மணிமுடியை எடுத்து என் தலைமேல் வைத்தாலும் இப்படித்தான் இருக்கும்'' என்று கூறிவிட்டார்.

ஒரு நாள் மாலை வாசுதேவாச்சாரியாரின் நண்பர்கள் சிலர் ஒன்றுகூடி அவரை மத்யம கால தானம் பாடுமாறு கேட்டுக் கொண்டனர். அவர் காம்போதி ராகத்தைப் பாட ஆரம்பிக்கும் சமயத்துக்குச் சரியாக டைகர் அங்கு குல்லாய் சகிதமாக ஆஜரானார். இருவருக்கும் குருவான பட்டணம் சுப்பிரமணிய அய்யர் பாணியில் ஆசாரியர் ஆனந்தமாகப் பாடவும், டைகர் மகிழ்ச்சி அடைந்து ''அண்ணா! உமது சங்கீதத்துக்கு என்ன பரிசு கொடுத்தாலும் தகும்'' என்றார். ''அப்படியானால் அந்தக் குல்லாயைக் கழற்றிக் கொடுத்துவிடுங்கள்'' என்றார் வாஸுதேவாச்சாரியார். ''கடைசியில் உம்மிடம் தோற்றேனே!'' என்று டைகர் குல்லாயைக் கழற்றி அளித்துவிட்டார்.

''பூச்சி'' காட்டிய பரிவு

ஒருமுறை பூச்சி ஐயங்கார் தமது சிஷ்யர்களுடன் அமர்ந்து சாதகம் செய்து கொண்டிருந்தார். அன்று அவர் பாடியது பட்டணம் சுப்பிரமணிய ஐயர் பேகட ராகத்தில் இயற்றியிருந்த ''மாசிட்லுண்டேதி'' என்ற அட தாள வர்ணம். மூன்று காலங்களிலும் கிரமமாகச் சாதகம் நடந்து முடிந்த சமயம் அவர் தம்புராப் போட்ட துரைசாமியைக் குறிப்பாக நோக்கவும், அவர் எழுந்து சென்று ஒரு வெள்ளித் தட்டில் புகையப் புகைய இட்டிலிகளையும், வெள்ளிப் பேலாவில் நெய்யையும் கொண்டுவந்து குருவின் முன்பு வைத்தார். தாராளமாக நெய்யை வார்த்துக்கொண்டு சுமார் இருபத்தைந்து இட்டிலிகளைப் பூச்சி ஐயங்கார் 'பலகாரம்' செய்ததாக வாஸுதேவாச்சாரியார் நகைச்சுவையுடன் குறிப்பிடுகிறார். அதைத் தொடர்ந்து ஒரு வெள்ளிக் கூஜா நிறையக் காப்பியும் பருகப்பட்டது. ''இந்த அசுர சாதகத்துக்கு இந்த ராட்சஸ ஆகாரம் தேவைபோலும்'' என்று ஆசாரியார் தம்மைத் தாமே சமாதானம் செய்து கொண்டாராம்.

பின்னர் சிஷ்யர்களின் சாதகம் ஆரம்பமாயிற்று. அவர்களை ஒவ்வொருவராக வாசுதேவாச்சாரியார் கவனித்துக் கொண்டு வரவும், ஒரு மூலையில் அமர்ந்து பாடிக் கொண்டிருந்த ஓர் இளைஞரின் சாரீரமும், ஞானமும் அவரைக் கவர்ந்தன. இதை அவர் பூச்சி ஐயங்காரிடம் பிரஸ்தாபித்த



பொழுது அவர் ''அவஞ? அவன் வெறும் மக்கு. ஊக்கம் போதாது'' என்று அசட்டையாகக் கூறிஞராம். ''இதில் ஏதோ ரகசியம் இருக்கிறது'' என்று வாஸுதேவாச்சாரியார் பிறகு விசாரித்ததில் அந்த சிஷ்யர் குருவுக்கு மிகவும் பிரியமான அரியக்குடி ராமாநுஜ ஐயங்கார் என்றும், அவருக்குக் கர்வம் ஏற்பட்டு விடக் கூடாது என்று பூச்சி ஐயங்கார் இப்படிப் பேசுவது வழக்கம் என்றும் தெரிய வந்தது!

பாகவதரே நிறுத்தும்!

கேரளாவில் ஒரு கச்சேரி. ஜி.என்.பி. அற்புதமாக ஆனந்த பைரவி ஆலாபனை செய்து கொண்டிருந்தார். ரசிகர்கள் பகுதியிலிருந்து ஒருவர் சட்டென்று எழுந்து, ''ஓய், பாகவதரே நிறுத்தும்! நிறுத்தும் !'' என்று கூவிக் கொண்டே மேடையை நோக்கி வேகமாக வந்தார். ஜி. என்.பிக்கு வெலவெலத்துப் போய்விட்டது. ''ஓய் பாகவதரே ! இந்தச் சொம்பில் உள்ள பாலைக் குடித்துவிட்டு மேலே பாடும் ! என்ன ஒண்ணுங் இளாஸ் சாரீரம்'' என்று பாராட்டிய அந்த ரசிகர் தம் கையில் இருந்த பால் செம்பினை ஜி.என்.பி.யிடம் நீட்டினார்.

சோபித்தது!

''ஓர் ஏழைத் தகப்பனர் ரொம்பச் சிரமப்பட்டுத் தம் பெண்ணைக் கன்னிகாதானம் செய்து கொடுத்து அனுப்புகிருர். பிறகு தன் பெண் போன இடத்தில் எப்படிச் சிரமப்படுகிருளோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது சர்வாபரண பூஷிதையாக, முகத்தில் மகிழ்ச்சி பொங்க அந்தப் பெண் தன் ஏழை அப்பா முன் வந்து நிற்கிருள்.

''அந்தத் தகப்பனர் அப்போது எப்படிச் சந்தோஷப்படுவாரோ அந்த நிலைமையில் இப்போது நான் இருக்கிறேன். என் 'புரோ சேவாரெவருரா' இந்த மகாராஜபுரத்திஞல் அப்படிக் சோபித்து விட்டது'' என்று கூறி மகிழ்ந்தார் வாசுதேவாச்சாரியார், ஒருமுறை.

சிவப்பழும் காட்டிய சீற்றம்

சம்ஸ்கிருத பண்டிதர் ஆவதற்காக இளம் வயதிலிருந்தே வடமொழியைப் பயில நேர்ந்த போதிலும், வாசுதேவாச்சாரியாரின் மனம் இசைக் கலையையே நாடி நின்றது. எப்படியோ மைசூர் மகாராஜாவிடமிருந்து ஒரு சிபாரிசுக் கடிதத்தைச் சம்பாதித்துக் கொண்டு, பட்டணம் சுப்பிரமணிய அய்யரிடம் குருகுல வாசம் செய்யும் நோக்கத்துடன் திருவையாற்றுக்குப் பயணமானர். அவ்வூருக்குப் புதிதாகையால் தமது அரைகுறைத் தமிழில் விசாரித்துக் கொண்டு ஒரு வீட்டின் கதவைத் தட்டினர். கதவு திறந்ததும் சிவப்பழமான ஓர் உருவம் காட்சி அளித்தது. ''என்ன ? யார் நீ?'' என்று வினவினர். ''இது பட்டணம் சுப்பிரமணிய அய்யர் வீடு.....'' என்று ஆசாரியர் ஆரம்பித்தவுடனேயே அம்மனிதரின் புன்னகை மறைந்தது. கண்கள் சிவந்தன. மறுமொழி ஏதும் கூருமல் படாரென்று கதவை மூடித் தாளிட்டுக் கொண்டார்.

அதிர்ச்சியும் ஏமாற்றமும் அடைந்த ஆசாரியர் பின்னர் சுப்பிரமணிய அய்யரின் சரியான விலாசத்

படங்கள்—இடமிருந்து வலமாக : டைகர், ஜி.என்.பி. வாசுதேவாச்சாரியார், மகாராஜபுரம், தியாகையர் கிட்டப்பா, அரியக்குடி.

தைத் தேடி அவரிடம் சிஷ்யராக அமர்ந்தார். சில மாதங்களுக்குப் பிறகு பஞ்சநதீசுவரர் ஆலயத்தில் மகா வைத்தியநாத அய்யரின் கச்சேரியைக் கேட்கச் சென்ற ஆசாரியர் கதவை அறைந்து சாத்திய மனிதர் அவரே என்று அறிந்து பேராச்சரியம் அடைந்தார். இதைத் தமது குருவினிடம் பிரஸ்தாபிக்கவும், பட்டணம் சுப்பிரமணிய அய்யர், "மகா வைத்தியநாதய்யரின் தமையனாரான ராமஸ்வாமி சிவன் எழுதிய 'விஜய சங்கிரகம்' என்ற நூலில் எனது சங்கீதத்தைப் பற்றி இழிவாக எழுதியிருந்ததால் நான், "விஜயசங்கிரக கண்டனம்" என்ற பதிலை எழுதி வெளியிட்டேன். அதற்கு அவர், 'விஜய சங்கிரக கண்டன தண்டனம்' என்ற மறுப்பை எழுதினார். அது முதல் எங்களுக்கிடையே சிறிது மனக் கசப்பு ஏற்பட்டது" என்று விளக்கம் தந்தார்!

"கிருஷ்ணார்ப்பணம்"

சென்ற தலைமுறையில் மைசூரில் பிரசித்தி பெற்று விளங்கிய வீணை சேஷண்ணாவும், சுப்பண்ணாவும் ஒரே பரம்பரையைச் சேர்ந்தவர்களாக இருந்தும், அவர்களின் பொருளாதார நிலையில் பெரிய ஏற்றத் தாழ்வு இருந்து வந்தது. சேஷண்ணா தோளின் மீது வீணையைச் சுமந்து கொண்டு, பச்சை மாவிலைத் தோரணம் கட்டியிருந்த வீடுகளில் தாமாகவே நுழைந்து, வீணை வாசித்து, அவர்களாக உவந்து கொடுத்ததைப் பெற்றுக்கொண்டு போவதுண்டு. சில சமயங்களில் ஐந்து ரூபாய்க்காக ஐந்து மணி நேரம் கச்சேரியும் செய்ததுண்டு.

சுப்பண்ணாவோ பிறந்தது முதல் திருமகளின் கடாட்சம் பெற்றவர். உல்லாச புருஷர். சதா வாசனை பூசிய உடைகளை அணிந்து கொண்டும், ஜேபியில் மல்லிகைச் சரங்களை வைத்துக் கொண்டும் காலம் கழித்தவர். கச்சேரி செய்து பிழைக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தமில்லாததால் அவருடைய வினிகைகளைப் பலர் கேட்டு இன்புற வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஆயினும் அவரது வீணைப் பயிற்சி மாத்திரம் மிகக் கடுமையானது. அவருடைய வீட்டில் கண்ணாடி போட்டு மாட்டியிருந்த ஒரு ஜாபிதாவின்படி அவர் தினந்தோறும் மூன்று வேளை ஆறு வர்ணங்கள், இருபத்தைந்து கீர்த்தனைகள், ஐந்து கன ராகங்கள், இரண்டு பல்லவிகள் ஆகியவற்றைச் சாதகம் செய்வது வழக்கம்!

சுப்பண்ணாவின் உதார குணம் மிகப் பிரசித்தமானது. செல்வத்தை யெல்லாம் வாரி வழங்கி விட்டதால் வாழ்க்கையின் பிற்பகுதியில் அவருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டது. தம்முடைய நண்பர் ஒருவரின் மகள் திருமணத்துக்காகப் பொருளுதவி செய்வதாகச் சுப்பண்ணா வாக்களித்திருந்தார். அந்த மனிதர் வெகு பிரயாசையின் பேரில் வரன் தேடி முகூர்த்தம் வைத்த சமயம் சுப்பண்ணாவின் கஜானா வறண்டிருந்தது. சுப்பண்ணா தம்முடைய மனைவியை அழைத்து, அந்த அம்மாள் அணிந்திருந்த ஒரே ஆபரணமாகிய தங்க ஒட்டியாணத்தைக் கழற்றச் செய்து "கிருஷ்ணார்ப்பணம்" என்று கூறி நண்பரிடம் வழங்கினாராம்!

தியாகையரும் கிருஷ்ணய்யரும்

தமிழ் நாட்டில் 'கனம்' என்ற இசை முறையை முதன் முதலாகப் பயின்று, அரங்கேற்றம் செய்து புகழ்பெற்ற கனம் கிருஷ்ணய்யர் நீண்ட காலம் உடையார்பாளையம் ஜமீன்தாரிடம் ஆஸ்தான வித்வானாக இருந்தவர். நூற்றுக்கணக்கான தமிழ்ப் பதங்களைப் பாடி இசை உலகுக்கு வழங்கியவர்.

இவர் ஒரு முறை திருவையாறு சென்று தியாகையரைக் கண்டு நமஸ்கரிக்கவும், அந்த மகானும் கிருஷ்ணய்யரை அன்புடன் வரவேற்று உபசரித்தார். அச்சமயம் தியாகையரின் சிஷ்யர்களான காமரஸவல்லி நாணுவையரும், தில்லை ஸ்தானம் (திருநெய்த்தானம்) ராமய்யங்காரும் ஸ்வாமிகளால் அடாணா ராகத்தில் இயற்றப் பெற்ற "ஏ பாபமு" என்ற கீர்த்தனையைப் பாடினர். பின்னர் தியாகையர் கிருஷ்ணய்யரை நோக்கி, "நீங்கள் ஏதாவது பாட வேண்டும்" என்றார். அடாணா ராகத்தைப் பாடுவதில் விசேஷத் திறமை பெற்றிருந்த கிருஷ்ணய்யர் அந்த ராகத்தை விஸ்தாரமாக ஆலாபனை செய்து, புதிதாக "சும்மா சும்மா வருமா சுகம்" என்ற பல்லவியை இயற்றிப் பாடினார். கன ஜாதியின் கம்பீரத்துடன் அவர் நூற்றுக்கணக்கான சங்கதிகளையும், கற்பனை ஸ்வரங்களையும் பொழிந்ததைக் கேட்டுத் தியாகையரே விம்மிதமடைந்து கிருஷ்ணய்யரை மனப்பூர்வமாக ஆசீர்வதித்தார். பின்னர் கிருஷ்ணய்யர் அதே பல்லவிக்கு இணங்க அநுபல்லவியையும் சரணங்களையும் இயற்றி நாகப்பட்டினம் ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் விஷயமாக ஒரு கீர்த்தனத்தைப் பாடி முடித்தார்.

மந்திரமும் ஜபமும்

தம்புரா ஸ்ருதி அமைக்க உதவும் பகுதிக்கு மந்திரம் என்று பெயர் உண்டு. சென்னை கோகலே ஹாலில் ஒரு நாள் கச்சேரி. சிஷ்யன் தம்புராவில் சுருதி சேர்த்துப் பார்க்கிறான். சரியாக வரவில்லை. "ஏய்! மந்திரம் சரியாக இருந்தால்தான் நம்ப ஜபம் இங்கே பலிக்கும். பார்த்து வை!" என்று ஒரு போடு போட்டார் அரியக்குடி.

கேட்ட குரல் கேளாத செய்தி

ஆறுவது வயதிலேயே சங்கரதாஸ் ஸ்வாமிகளின் நாடகக் குழுவில் பால பார்ட் ஏற்க ஆரம்பித்தார் திரு எஸ். ஜி. கிட்டப்பா. ஒரு சந்தர்ப்பத்தில் நல்லதங்காளில் குழந்தையாகப் பாகமேற்று நடித்த கிட்டப்பா தாம் பாட வேண்டியதையும் பாடி, நல்லதங்காள் பாட வேண்டியதையும் பாடிவிட்டார்! சபையோர் இந்தக் குழந்தைத்தனத்தைக் கண்டு வயிறு குலுங்க நகைத்ததோடு பாட்டுக்கு பேஷ் போடவும் செய்தனர்!

* * *

தேசபக்தர் கிட்டப்பாவின் திருமணத்தின் பொழுது மணப் பந்தலில், திலகர் ஸ்வராஜ்ய நிதிக்குச் சம்பாவனை செய்யப்பட்டது.

* * *

திரு முத்தையா பாகவதர் குரலில் 'தெலியலேனு' என்ற பாடலை ஹட்சின் நிறுவனம் இசைத்தட்டாகப் பதித்தது. இதை அறியாத கிட்டப்பா அதே பாடலை கொலம்பியாவில் இசைத்தட்டாகத் தந்துவிட்டார். இதனை அறிய நேர்ந்த முத்தையா பாகவதர் கிட்டப்பாவின் இசைத்தட்டைக் கேட்டுவிட்டுத் தம்முடையதை வெளியிட வேண்டாம் என்று கூறிவிட்டார். கிட்டப்பாவின் பாட்டு அவ்வளவு பிரமாதமாக இருந்ததாம்!

தொகுத்தளித்தவர்கள்: டி. எஸ். பி., பட்டினத்தார், குயிலி.

அவர்களுக்குத் தெரியுமா?

"கோகிலா! புஷ்பங்களைப் பறித்து பூஜை அறையில் வை!"

"என்ன இன்றைக்கு என்றுமில்லாத பக்திப் பிரவாகம்?"

"ஆறு மணிக்கு பம்பாயிலே யிருந்து பத்திரிகை நிருபர் என்னைப் பேட்டி காண வரப் போகிறார். என்னைப் பார்த்துவிட்டு ஏழு மணிக்கெல்லாம் அவர் வேறு ஜோலி வைத்துக்கொண்டிருக்கிறார். சீக்கிரம்!"

கோகிலாம்பாள் மனத்துக்குள்ளேயே சிரித்துக் கொண்டாள். கொஞ்ச நாட்களாகவே கல்யாணராமன் கிராப் தலையில் பின்னால் இரண்டு மயிரை நீள வளர்த்துக் குடுமியைப் போல் வைத்துக் கொண்டிருந்தான். ஓரிரண்டு வருடங்களாகக் கல்யாணராமன் பிஸினஸில் நல்ல திருப்பம் ஏற்பட்டுப் பணம் சரளமாக வர ஆரம்பித்தது. அதைத் தொடர்ந்து வருடத்தில் இரண்டு முறை திருப்பதி வேங்கடாசலபதியின் தரிசனம், காஞ்சி ஆசார்யாளுடைய தரிசனம் என்று ஒரு புது வழக்கம் ஏற்பட்டுக் கொண்டு வந்தது. 'கல்யாண ராமன் இல்லாத பகவத் கைங்கரியம் இருக்க முடியாது' என்ற நிலைமை ஏற்பட்டுக் கொண்டு வந்தது. பகவத் கைங்கர்யம் என்றதனாலேயே இவனைவிட மேல் மட்டத்தில் இருக்கும் பிரமுகர்களின் பரிசயம் கிடைக்கச் சந்தர்ப்பம் வாய்த்தது. அது பல விதங்களில் வியாபாரத்துக்கும் உதவியது!

"மிஸ்டர் கல்யாணராமன் இருக்கிறாரா?" என்று குரல் கேட்டுக் கோகிலாம்பாள் வந்தவனைப் பூசை அறைக்கு அழைத்துச் சென்றாள். கல்யாண ராமன் மூடிய கண், ஜபம் செய்யும் விரல்களுடன் ஒரு சுவர் முழுவதும் தொங்கிக் கொண்டிருந்த இந்திய க்ஷேத்திர தெய்வங்கள் அத்தனையின் முன்னால் தியானச் சிலையாகச் சிரமப்பட்டு உட்கார்ந்து கொண்டிருந்தான். வந்தவன் காமிராவைத் திறந்தான். 'பளிச் பளிச்' என்று இரண்டு போட்டோக்கள் எடுத்துக் கொண்டான். கல்யாணராமன் தியானம் கலைந்தது.

"மன்னிக்கணும், காக்க வைத்துவிட்டேன். இந்த ஒன்றுதான் என்னைக் காப்பாற்றுகிறது" என்றான்.

பிறகு பேட்டி தொடங்கிற்று. "தற்காலத்தில் ஆஸ்திகத்துக்கு என்ன ஆதரவு இருக்கிறது?" என்று பத்திரிகை நிருபர் கேட்டார். "அது சுலபமாக நிர்ணயிக்க முடியாத விஷயம். ஆஸ்திகம்னு என்ன? இப்ப, என்னை எடுத்துக் கொள்ளுங்கள். ஏதோ விடியற்காலையில் எழுந்து, ஸ்நானம் செய்து, மடியாய் எனக்குத் தெரிந்த சில துதிகளைச் சொல்லி நாலு புஷ்பங்களைப் போடுகிறேன். என்னைப் பொறுத்த வரையிலும் அதுதான். சில பேர் இருக்கிறார்கள்... பார்த்தீர்களானால் சிவப் பழமாகக் காட்சியளிப்பார்கள். வாழ்க்கையில் செய்வது என்னமோ, பாப காரியங்கள்!"

"நீங்கள் வந்திருக்கிறீர்கள். சொல்லப் போனால், இந்தப் பேட்டியில் எனக்குத் துளிக்கூட சம்மதம் இல்லை. ஏன், என்கிறீர்களா? எனக்கு விளம்பரம் துளிக்கூட பிடிக்காது. பக்தி என்பது அவனவன் செய்ய வேண்டிய கடமை!"

மூலையில் வைத்திருந்த ரேடியோப் பெட்டியிலிருந்து மதுரமாய் வயலின் இசை கேட்டது.

"என்ன பொருத்தம் பார்த்தீர்களா? நாம் பேசிக் கொண்டிருக்கும் போது இந்தத் தியாகராஜ ஸ்வாமி கீர்த்தனத்தை வாசிக்கிறார். அதன் அர்த்தம் தெரியுமா?" என்றார் கல்யாண ராமன்.

ராகம்: தேனுகா தாளம்: தேசாதி

தெலியலேரு ராம பக்தி மார்க்கமு

இலநந்தடதிருகுசு கலுவரிஞ்சேரேகாநி

வேகலேசி நீடமுனிகி பூதி பூஸி
வேள்ளநெஞ்சி வெலிகி ச்லாகநீயுலை
பாகபைக மார்ஜனலோலுலை
ரே கானி த்யாகராஜ வினுத.

(விடியற்காலையில் எழுந்து, நீராடி, விபூதி அணிந்து ஜபம் செய்வது போல் விரல்களை விட்டு எண்ணிப் பாசாங்கு செய்து, பணம் திரட்டுதலிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பவர்கள், தூய ராம பக்தியை அறிய மாட்டார்கள்.)



அபார யோசனை!

மாணவர்கள் அரசியலில் இப்போது பங்கெடுத்துக் கொள்வது போதாதாம்; இன்னும் தீவிரமாக ஈடுபட வேண்டுமாம்! இன்றைய மாணவர் கிளர்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க இதுதான் வழியாம்! மத்திய அரசு அமைத்த ஓர் ஆய்வுக் குழுவின் தீர்ப்பு இது. இக் குழுவின் தலைவரோ இன்று மத்திய கல்வி அமைச்சராகவே விளங்குகிறவர்!

ஆண்டவனே! மாணவர் சமுதாயத்தை இத்தகைய மேதாவிகளிடமிருந்து நீதான் காப்பாற்ற வேண்டும்!

எல்லா மாணவர்களும் இன்றைய அரசியல் பொருளாதார சமுதாயப் பிரச்னைகளை அறிந்திருக்க வேண்டும்; ஜனநாயகப் போக்குகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அது ரொம்ப சரி.

ஆனால் மாணவர்கள் கட்சி அங்கத்தினர்களாகவே ஆகிவிட வேண்டும்; அரசியலில் நேரடியாகப் பங்கேற்க வேண்டும் என்றால் அதனைச் சுயநலவாதிகளின் சூழ்ச்சி என்றே வர்ணிக்கலாம்.

போனால் போகிறது என்பது போல் இந்த ஆய்வுக் குழு கட்சிக் காரியாலயங்கள், கல்லூரிகளில் இயங்க வேண்டாம் என்று விட்டுக் கொடுத்திருக்கிறது. அடடா! இவர்களின் கருணையே கருணை!

கல்கி

மலர் 34

இதழ் 20

அம்பலமான ஊழல்!

இன்று அம்பலத்துக்கு வந்து அமர்க்களப்படும் லைசென்ஸ் ஊழல் விவகாரத்தில் மத்திய அரசு நடந்து கொண்ட விதம் வெட்கக்கேடு. ரகசிய விசாரணை பற்றிய ஸி. பி. ஐ. அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக உள்துறை அமைச்சர் வாக்களித்திருந்தார். மந்திரி சபை மாற்றங்களுக்குப் பிறகு வந்த புதிய உள்துறை அமைச்சரோ அவசரம் அவசரமாக வழக்கை நீதிமன்றத்துக்குக் கொண்டுபோய்விட்டுக் கையை விரித்தார். வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது ஸி. பி. ஐ. அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதும் விவாதிப்பதும் தவறு என்று கூறி நழுவப் பார்த்தார். சபாநாயகர் தம் பக்கம் பேசுவார் என்று எதிர்பார்த்த பிரும்மானந்த ரெட்டிக்குப் பெரிய ஏமாற்றம்.

திரு மொரார்ஜி தேசாய் பாராளுமன்றத்துக்குள்ளேயே சத்யாகிரஹம் செய்வேன் என்று ஆரம்பித்த பிறகு சிறிது விட்டுக் கொடுக்க முன்வந்திருக்கிறது அரசு. அறிக்கை மீது விவாதம் நடத்துவதில்லை என்று வாக்குத் தந்தால் உறுப்பினருக்கு அறிக்கையைப் பரிசீலிக்க வாய்ப்பளிப்பதாகச் சொல்கிறது. இதுவும் முழுத் திருப்தி அளிக்காது, நிச்சயம்.

இவ் விஷயத்தில் பிரும்மானந்த ரெட்டி நடந்து கொண்ட விதம் பிரும்மானந்தம் என்ன, வெறும் ஆனந்தம் அளிப்பதாகக்கூட இல்லை. ஒரே விசனம்தான்!

நல்லெண்ணம் நீடிக்கட்டும்!

காவிரி நீரைப் பங்கிட்டுக் கொடுக்கும் பொறுப்பு ஓர் உயர் மட்டக் குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது மூன்று ராஜ்யங்களுக்கும் தேவைகளை நிர்ணயித்துச் சிக்கனமான முறையில் நீரைப் பயன்படுத்த யோசனைகளையும் கூறும். அரசியல் கலப்பற்ற முறையில் நிபுணர்கள் அடங்கிய குழுவாக இது அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூன்று மாநிலங்களின் பிரதிநிதிகளும் இதில் அங்கம் வகிப்பர். இத்தகைய நல்ல முடிவுக்கு வந்த கேரள, கர்நாடக, தமிழக முதல்வர்களைப் போற்றுகிறோம். சம்பாப் பயிருக்கு நீர் தட்டுப்பாடின்றி உடனடியாகக் கபினி நீரை விட இசைந்த கர்நாடக முதல்வரை விசேஷமாக வாழ்த்துகிறோம். இதே போன்ற நல்லெண்ணமும், சகோதர பாசமும் நீடிக்கட்டும். அப்படி நீடிப்பதன் மூலம் கேரளத்தில் வீணாகிக் கொண்டிருக்கும் நதிகள் நீர் தமிழகத்துக்குப் பயனாகவும் நல்லதொரு திட்டம் பிறக்கட்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்


இசைவிழாத் தலைவர்கள்



செம்மங்குடி



திருவீழிமிழலை



அனந்தகிருஷ்ண சர்மா

சங்கீத கலாநிதி

மியூஸிக் அகாடெமியின் மதிப்புமிக்க விருதினைப் பெறும் விற்பன்னரான ராள்ளபள்ளி ஸ்ரீ அனந்தகிருஷ்ண சர்மா, பிரசித்திபெற்ற மைசூர் வித்வான் பிடாரம் கிருஷ்ணப்பாவிடம் சிட்சை பெற்றவர். சாரீரம் பழுதுற்றதால் கல்லூரியில் தெலுங்கு விரிவுரையாளராகத் தொழில் மேற்கொண்டார். ஆனால் ஆத்மார்த்தமாக இசையில்ஈடுபட்டார். ஆய்வுகள் செய்தார். அகாடெமி நிபுணர் கூட்டங்களில் கலந்து கொண்டார். திருப்பதியில் செப்பேடுகளில் தேய்ந்து கிடந்த அன்னமாசாரியாரின் நூற்றுக்கணக்கான பாடல்களைப் பெயர்த்தெழுதி, சுத்தப்படுத்தி வெளியிட்டார்.

பாரதியாரால் கீதமிசைப்பதற்கு எடுப்பானது எனச் சிறப்பிக்கப்படும் சுந்தரத் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டு, கர்நாடக இசையின் பிதாமகரான புரந்தர தாசரின் கன்னட தேசத்தில் வாசம் செய்து வரும் ஸ்ரீ அனந்தகிருஷ்ண சர்மாவைத் தமிழகத்தின் தலையாய சங்கீத நிறுவனம் கௌரவிப்பது இசை மூலம் உண்டாகும் இசைவுக்கும் பாராட்டாகிறது !

சங்கீத கலா சிகாமணி

செம்மங்குடி அவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? மேடை ஏறிய நாளிலிருந்து இன்று வரை சிகர ஜோதியாகவே ஜொலித்து வருகிறார். அரியக்குடி தலைமுறையில் தொடங்கி, ஜி. என். பி. தலைமுறை வழியாக, பாலமுரளி தலைமுறையிலும் குன்றாத புகழுடன் போடு போடு என்று போட்டு வருகிறார். மனோதர்மக் கலைஞராகவும் இருக்கிறார், சீரிய ஆராய்ச்சியாளராகவும் இருக்கிறார். பண்டிதரை வியக்க வைக்கிறார், பாமரரைப் பரவசப் படுத்துகிறார். நாதநாமக்ரியாவினால் இதயத்தைப் பிழிந்தெடுக்கிறார் என்றால், பல்லவி ஸ்வரத்தில் மூளையைக் கிளுகிளுக்க வைக்கிறார். புகழ் கொண்ட ஏராளமான சீடர் குழாத்தைப் பெற்றிருப்பது அவரது தனிப் பெருமை. இந்த நூற்றாண்டு கண்ட மகா வித்வான்களில் ஒருவராக சங்கீத சரித்திரத்தில் நிரந்தர இடத்தைப் பெற்றுவிட்ட ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யரவர்களுக்கு விருது சூட்டிப் பெருமை கொள்ளும் இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டிக்கு நம் வாழ்த்துக்களை அளிக்கிறோம்.

இசைப் பேரறிஞர்

திருவீழிமிழலை திரு சுப்பிரமணியப்பிள்ளை சங்கீதத்தின் பத்ததி, ஒழுங்கு, தனி வாழ்வின் சிஷ்டாசார ஒழுங்கு இவற்றைப் பாரம்பரியமாகப் பெற்ற கலைஞர். தமிழகத்தின் தனிச் சிறப்பான நாதஸ்வரத்தில் சிறந்து, ஆண்டவனின் திருவீதி உலாக்கள், கல்யாண ஊர்வலங்கள், சபை மேடைகள் என்று நாடெங்கும் கம்பீரமான இசையைப் பரப்பி வந்திருக்கிறார். தியாகையரிடம் விசேஷ ஈடுபாடு கொண்டு திருவையாற்றில் அருந்தொண்டு புரிந்திருக்கிறார். அதே போல் தேசாபிமானத்திலும் தீவிரமாக இருந்திருக்கிறார். நாயனங்களில் எப்போதும் 'இரட்டை'க்குத் தனிக் களை உண்டு. அவ்விதத்தில் திரு சுப்பிரமணியப்பிள்ளை அவர்களுக்கு இணை பிரியா ஜோடியாக விளங்கும் தம்பி திரு நடராஜசுந்தரம் அவர்களுக்கும் தமையனாரின் புகழில் கணிசமான பங்கு உண்டு. சுப்பிரமணியப்பிள்ளையின் தமிழிசைச் சங்கத் தலைமையால் இசையுலகு நற்பயன் பெறும்.

ராஜாஜி சிந்தனை

எல்லோருக்கும் இன்பம்

எந்த நல்ல திட்டமானாலும் அதனால் ஒரு கட்சியார் தங்களுக்குக் கஷ்டம் வந்ததாகவே நினைக்கும் படியாகிறது. தொழிலாளிகளுக்கு நல்லது செய்தால் முதலாளிகளுக்கு மனஸ்தாபமாகிறது. உழவனுக்கு நல்லது செய்தால் பண்ணையாருக்குக் கஷ்டமாகிறது. இவற்றையே மாற்றியும் சொல்லலாம். சர்க்கார் காரியங்களில் மட்டுமில்லாமல் எல்லா விஷயங்களிலும் இது ஒரு பிரகிருதி தர்மம் மாதிரி நடக்கிறது. ஆஸ்திகம் விருத்தியானால் நாஸ்திகர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆக எந்த நல்லதாலும் ஒரு கட்சியார் பாதிக்கப்படுகிறார்கள். இப்படி ஒரு கட்சியாருக்கும் கஷ்டம் தராமல் எல்லாருக்கும் சந்தோஷம் தருகிற ஒன்று உண்டென்றால் அது சங்கீதம்தான். மற்றவற்றில் ஒருவருக்கு நல்லது செய்ய வேண்டுமானால் இன்னொருவருடைய சொத்து அல்லது கொள்கையைப் பாதிக்கும்படியாகக் காரியம் செய்ய வேண்டியிருக்கிறது. சங்கீதத்தில் எவருடைய சொத்துக்கும் கொள்கைக்கும் ஹானி இல்லை. ஒருத்தருக்கும் துன்பம் தராமல் எல்லோருக்கும் இன்பம் தருகிற ஒரே சாதனமாக இருக்கிறது சங்கீதம்.

சங்கீத லட்சியம் சாந்தமே

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி
காமகோடி சங்கராசாரிய
சுவாமிகள்

லோகத்தில் மனசுக்கு ரொம்பவும் ஆனந்தமாகவும் சாந்தமாகவும் இருக்கப் பட்ட பல விஷயங்களை அப்பர் ஸ்வாமிகள் ஒரு பாட்டில் சொல்கிறார். இந்திரியங்களுக்கு அகப்படுகிற சுகங்கள் போல இருந்தாலும் நிரந்தரமான, தெய்விகமான ஆனந்தத்தைத் தருகிற வஸ்துக்களைச் சொல்கிறார். அந்த வஸ்துக்கள் என்ன? முதலில் துளிக்கூட தோஷமே இல்லாத வீணா கானம்; அப்புறம் பூரண சந்திரனின் பால் போன்ற நிலா; தென்றல் காற்று; வசந்த காலத்தின் மலர்ச்சி; வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டிருக்கிற தாமரைத் தடாகம்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

இந்திரியங்களால் பெறுகிற இன்பங்களை உபமானமாக அடுக்கும்போது ''மாசில் வீணை'' என்று சங்கீதத்துக்கே முதலிடம் தருகிறார்.

நல்ல சங்கீதம் — அதுவும் குறிப்பாக சங்கீதத்துக்கு எடுத்த வீணையோடு கானம்— என்றால் அது ஈசுவரனின் பாதத்துக்குக் கொண்டு சேர்ப்பதாகவே இருக்கும். நம் பூர்வீகர்கள் இசையை ஈசுவரனின் சரணங்களிலேயே சமர்ப்பணம் பண்ணினார்கள். அந்த இசை அவர்களையும், அதைக் கேட்கிறவர்களையும் சேர்த்து, ஈசுவர சரணாரவிந்தங்களில் லயிக்கச் செய்தது. தர்ம சாஸ்திரம் தந்த மகரிஷி யாக்ஞவல்கியரும் ''சுஸ்வரமாக வீணையை மீட்டிக்கொண்டு, சுருதி சுத்தத்தோடு லயம் தவறாமல் நாதோபாஸனை செய்துவிட்டால் போதும்-தியானம், யோகம், தபஸ், பூஜை என்ற கஷ்டமான சாதனைகளே வேண்டாம்—இதுவே மோக்ஷத்துக்கு வழிகாட்டிவிடும்'' என்கிறார். இதிலே இன்னொரு விசேஷம், சங்கீத சாதகன் மட்டுமில்லாமல், அவன் கானம் செய்வதை வெறுமே கேட்டுக் கொண்டிருக்கிற அத்தனை பேருக்கும் அவன் ஒருத்தன் செய்கிற சாதனையின் பூரண பலனை நிறைந்த திவ்விய சுகம் கிட்டிவிடுகிறது.

வித்யா தேவதையான சரஸ்வதி எப்போதும் வீணா கானம் செய்கிறாள். லௌகிகமான (Secular) பாட்டே கூடாது. பகவானைப் பற்றித்தான் பாடவேண்டும். சரஸ்வதியும் பரமேசுவரனின் பலவித லீலைகளைப் பற்றித்தான் பாடுகிறாள். ஆசாரியாள் 'ஸௌந்தரிய லஹரி'யில் அம்பாளின் கழுத்தழகைச் சொல்லும்போது, அவளிடமிருந்தே சங்கீதம் முழுதும் பிறக்கிறது என்பதை வெகு அழகாகச் சொல்லுகிறார். ('கலே ரேகா: திஸ்ரோ' என்று ஆரம்பிக்கும்.) கழுத்திலே மூன்று ரேகைகள் இருப்பது உத்தம ஸ்திரீ லட்சணம். புருஷ லட்சணம் Adam's apple என்று இங்கிலீஷில் சொல்கிற, நெஞ்சிலே இருக்கப்பட்ட உருண்டையான புடைப்பு. ஈசுவரன் ஆலகாலத்தைத் தொண்டையில் கோலிக் குண்டு மாதிரி அடக்கிக் கொண்டார் அல்லவா? ஆண்கள் எல்லோரும் அவனது ஸ்வரூபம் என்பதற்கு அடையாளமாகவே உத்தமபுருஷர்களின் தொண்டையில் இப்படி உருண்டை இருக்கிறது. அதே மாதிரி ஸ்திரீகள் யாவரும் தேவீ ஸ்வரூபம் என்பதால் அவளுடைய பரம மங்கள சின்னமான கழுத்து ரேகைகள் மூன்றும் உத்தமப் பெண்களிடமும் இருக்கிறது. இதை ஆசாரியாள் வர்ணிக்கும்போது, ''சங்கீதத்தில் ஷட்ஜ கிராமம், மத்யம கிராமம், ஆதார கிராமம் என்று மூன்று வரிசைகள் (scale, gamut) உண்டு. இந்த மூன்று தொகுப்பு (கிராமம்)க்களிலிருந்துதான் மதுரமான நானாவித ராகங்களும் எழுந்திருக்கின்றன. அம்மா, நீயோ சங்கீதத்தின் கதிகளிலும், கமகங்களிலும் மகா நிபுணை. அந்த மூன்று சங்கீத கிராமங்களும் உன் கண்டத்திலிருந்துதான் பிறந்தன. அதற்கு அடையாளமாகவே அது ஒவ்வொன்றுக்கும் உரிய சப்தங்கள் தொண்டைக்குள் எந்தெந்த இடத்தில் பிறந்து எந்தெந்த இடத்தில் முடிகின்றன என்று எல்லை வகுத்துக் காட்டுவது போல், வெளிப்பட இந்த மூன்று ரேகைகளும் உன் கழுத்தில் காணப்படுகின்றன'' என்கிறார்.

அத்வைத பரமாசாரியாளுக்குச் சங்கீதத்தில் எத்தனை பாண்டித்தியம் இருந்தது என்பதும் இங்கே தெரியவருகிறது. சங்கீதமே அத்வைதமாக நம்மை மூலத்தோடு கரைப்பதுதான். சாட்சாத் அம்பிகை வீணாதாரிணியான சியாமளாம்பிகையாக விளங்குவதைக் காளிதாஸர் 'நவரத்தின மாலிகை'யில் 'ஸரிகமபதநிரதாம்' என்று பாடுகிறார். அவள் பாடுகிற சங்கீதத்தால் அவளுடைய மிருதுவான இருதயமும், அதற்கும் உள்ளே இருக்கிற அத்வைதமான சாந்தமும் (சாந்தாம், மிருதுள ஸ்வாந்தாம்) வெளிப்படுகின்றன என்கிறார். எத்தனை உணர்ச்சிப் பரவசங்களைத் தூண்டிவிட்டாலும் சாந்தம் தான்சங்கீதத்தின் முடிந்த முடிவாக இருக்க வேண்டும். தசவித கமகங்களைச் செய்கிற சியாமளாம்பிகையான மீனாக்ஷியை வீணை மீட்டிப் பாடிக்கொண்டே இந்த சாந்தத்தோடு சாந்தமாகத்தான் முத்துஸ்வாமி தீக்ஷிதர் கரைந்து போனார். தியாகராஜ ஸ்வாமிகளும், கேட்ட மாத்திரத்தில் எல்லையில்லாத விச்ராந்தி தருகிற மாதிரி சியாம ராகத்தில் 'சாந்தமு லேக ஸௌக்யமு லேது' என்று பாடி யிருக்கிறார். ஈசன் எந்தை இணையடி நீழலில் அப்படியே லயித்துப் போகிற இந்த சாந்தத்தைத்தான் அப்பரும் 'மாசில் வீணை' என்பதால் உவமிக்கிறார்.

மகாலக்ஷ்மி குறித்த அருள்வாக்குத் தொடர் அடுத்த இதழிலிருந்து வெளியாகும்.


நட்சத்திரமும் நவநாகரீகமும்
லால்பாய் டெக்ஸ்டைல்ஸ்
உங்களுக்கென ஒரு பாக்ய
நட்சத்திரம்...ஒரு நாகரீகம்
உண்டு...இரண்டையும்
சிறப்புடன் இணைப்பது—
லால்பாய் டெக்ஸ்டைல்ஸ்.
பெருமைமிகு பிரிண்டுகள்,
அருமையான வண்ணங்கள்...
பலவிதத் துணிவகைகள்.
தேர்ந்தெடுக்க
7 மடங்கு வகைகள்
வேறு எங்குதான் கிடைக்கும்?
சிம்மம்:
ஆளப்பிறந்தவர் நீங்கள்—
நினைத்ததை முடிப்பவர். தாராள
சிந்தையுள்ளவர். சந்திக்கும்
மனிதர்களை உங்கள்பால்
கவர்ந்திழுக்கும் காந்த சக்தி
படைத்தவர். உங்கள் அதிர்ஷ்ட
வண்ணங்கள்—ஆரஞ்சு, பொன்னிறம்,
மஞ்சள். கண்கவரும் அதிநவீன
ஆடைகளில் பவனிவர விரும்புவீர்கள்—
அதே சமயம் பிறர் புகழும் வண்ணமும்
உடுத்துவீர்கள்.
கடகம்:
நீங்கள் பழமையை விரும்புபவர்
வீட்டையும் குடும்ப
வாழ்வையும் நேசிப்பவர்.
உங்கள் அதிர்ஷ்ட
வண்ணங்கள்—பச்சை,
சாம்பல் நிறம் (கிரே).
சம்பிரதாய முறைப்படி நீங்கள்
உடையணிய விரும்புவீர்கள்.
கன்னி
கூர்ந்த
எதனையும்
ஆழ்ந்து,
ஆராய்ந்தறியும்
மனம் படைத்தவர்
நீங்கள். கற்பனை
மிகுந்தவர். உங்கள்
அதிர்ஷ்ட
வண்ணங்கள்—
கருநீலம், சாம்பல்
வண்ணம் (கிரே),
துரு வண்ணம் (ரஸ்ட்).
துணிச்சலுடன் நவீன
உடைகளை அணிவீர்...
ஆனால் எப்போதும் அல்ல.
லால்பாய்—
அதிர்ஷ்டப் பொருத்தம் அளிப்போர்
லால்பாய் க்ரூப் துணிகள்
அரவிந்த்
அசோகா
ராய்பூர்
சர்ஸ்பூர்
அருண்
நூதன்
நியூ காட்டன்
ஏழு மில்களின் ஏற்றமிகு துணிகள்
CMLB.36.183 TM
சில்லறை விற்பனையாளர்கள்:
M/s. வெங்கடேஷ், 243, 244, என்.எஸ்.ஸி. போஸ் ரோடு, சென்னை-1.
M/s. ஆனந்த் டெக்ஸ்டைல்ஸ், பெரிய கடை வீதி, திருச்சி-8.
M/s. ஈஸ்வரீஸ், 26-பி, மேற்கு டவர் தெரு, மதுரை-1.



சென்னை, இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியின் 42ம் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்கப் போகிறார் ஸ்ரீ செம்மங்குடி. அவர் கூறும் சில யோசனைகள் :

ரசனை வளரட்டும்; சங்கீதம் சிறக்கட்டும்!

— செம்மங்குடி ஸ்ரீநிவாச அய்யர்!


நமது சாஸ்திரீய சங்கீதத்தில் ஆர்வம் குறைந்து வருவதாகக் கூறுகிறார்கள். அதை நான் ஒப்புக் கொள்வதற்கில்லை.

இப்போதும் சாஸ்திரீய சங்கீதத்துக்கு ரசனை அதிகம் உண்டு. முன்பு சில சபாக்கள்தான் இயங்கி வந்தன. இப்போது நூற்றுக்கணக்கான சபாக்கள் ஆங்காங்கு தோன்றிச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், ரேடியோ, இசைத்தட்டுக்கள், டேப் ரிகார்டர்கள் போன்ற சாதனங்கள், லட்சக்கணக்கான மக்களிடையே பல தரப்பட்ட சங்கீதத்தைப் பரப்புகின்றன. இதனால் அநேகம் பேர் நல்ல லட்சிய லட்சண ஞானம் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனாலும் சாஸ்திரீய சங்கீதத்தைப் பழைய தலைமுறையைச் சேர்ந்த பெரியோர்களும் நடுத்தர வயது உள்ளவர்களும்தான் கேட்க விரும்புவதாகக் காணப்படுகிறது. இளைஞர்களுக்கு, சினிமா சங்கீதம், மெல்லிசை(!) 'பாப்' சங்கீதம் போன்ற வகைகளில் தான் ஆர்வம் அதிகமாகத் தென்படுகிறது. இந்நிலை மாற அகில இந்திய ரேடியோ ஒத்துழைப்பது அவசியம்.

பொதுமக்களுக்குச் சௌகரியமான நேரத்தில் சாஸ்திரீயசங்கீதத்தைக் கேட்க ஒலிபரப்பு ஏற்பாடு கிடையாது. அப்படிச் செய்தால்தான் அதில் ருசி ஏற்படும். இரவு 9-30 மணிக்கு மேலும், காலை எட்டு மணிக்கும் அதிக சாஸ்திரீய சங்கீதத்தை ஒலிபரப்புகின்றன. இரவு தூங்கப்போகும் நேரத்திலும் காரியாலயத்துக்குக் கிளம்பும் அவசரத்திலும் சௌகரியமாகக் கேட்க முடிவதில்லை. முன்போல் இரவு ஒன்பது மணிக்கு முன்பாகவே ஒலிபரப்பினால் ருசி ஏற்படுத்தலாம். சங்கீதம் கற்பிக்கும் முறையிலும் மாறுதல் தேவை.

இப்போது சரளி வரிசையிலிருந்துதான் வாய்ப்பாட்டு சொல்லி வைக்கப்படுகிறது. இந்த முறை மாற்றப்பட வேண்டும். சின்ன உருப்படியாக, சங்கதிகள் இல்லாமல் பாடக் கற்றுக் கொடுத்து, அந்தப் பாட்டுக்களை அவர்கள் பாடப் பழகிய பிறகு, அந்த ராகத்தின் சரளி வரிசைகளைச் சொன்னால், நல்ல ஸ்வர சுத்தம் சாரீரத்தில் ஏற்பட முடியும்.

கான்வென்டில் படிக்கும் சிறு குழந்தைகளுக்கு முதலில் ஆங்கிலத்தில் பேசத்தானே கற்றுக் கொடுக்கிறார்கள் ? பிறகுதான் 'ஸ்பெல்லிங்' எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்கள்.



புகைப்படம்: வளர்ந்த ரசனையும் சிறந்த சங்கீதமும். டி. டி. கே. - செம்மங்குடி

கடந்த பல நூற்றாண்டுகளில் எத்தனையோ வித்தகர்கள் சங்கீத சாஸ்திரங்களைப் பற்றி நூல்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்களிடையே பல மோதல்கள், குழப்பங்கள் இருந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் இணைத்து இந்த நூற்றாண்டுக்கு ஒரு ராக லட்சண நூலை இசை ஆராய்ச்சியாளர்கள் எழுத முன்வர வேண்டும்.

இசைக் கல்லூரிகளில் பயின்று தேர்ச்சி பெற்று வருபவர்களுக்கு அரசாங்கம் உபாத்தியாயர் பதவி கொடுத்துச் சாஸ்திரீய இசை பரவ உதவ வேண்டும்.

எதிர்காலச் செல்வங்கள்

இசை உலகின் இளம் தலைமுறையின ரில் எதிர்காலத்தில் நன்கு சோபிப் பார்கள் என்பதற்கான அறிகுறிகளைப் பலரிடம் இன்றே காண்கிறோம். அவர் களுள் நால்வரைத் தேர்ந்தெடுத்துக் கல்கி நேயர்களுக்கு அறிமுகப்படுத்து மாறு சங்கீத ரசிகரும் அறிஞருமான திரு டி. எஸ். பார்த்தசாரதி அவர்களைக் கேட்டுக் கொண்டோம்.

ஸ்ரீமதி சீதா சுப்பிரமணியம்

சங்கீதக் குடும்பத்தில் பிறந்த இவர் தமது பன்னிரண்டாவது வயதிலிருந்து கர்நாடக இசையில் பயிற்சி பெற்று, பதினேழாவது வயது நிரம்புமுன் அகில இந்திய ரேடியோ வின் சாஸ்திரிய சங்கீதம், மெல்லிசை ஆகிய போட்டிகளில் ஜனாதிபதியின் பரிசுகளைப் பெற் ருர். பின்னர் அவர் பங்கெடுத்துக் கொண்ட போட்டிகள் பலவற்றில் முதல் பரிசுகள் இவ ருக்குச் சொந்தமாயின. திருப்பாவை, திருவெம்பாவை, தேவாரம், திவ்யப் பிரபந் தம், புரந்தரதாசர் முதலிய மகான்களின் கிருதிகள், தமிழ்க் கீர்த்தனைகள் ஆகியவற்றில் நடந்த போட்டிகளில் பரிசு பெற்றதன் காரணமாக இவருக்கு ஏராளமான உருப் படிகள் பாடம் உண்டு.

கடுமையான உழைப்பாளியாகிய ஸ்ரீமதி சீதா இயற்கையாகவே தமக்கு அமைந்துள்ள துல்லியமான சாரீரத்துக்கு இடைவிடாத சாதகத்தின் மூலம் மெருகேற்றி, கனமான சங்கீதத்துக்கும் மெல்லிசைக்கும் ஒருங்கே உதவுமாறு அதைப் பண்படுத்தியிருக்கிருர். வயலின் சந்திரசேகரன், வள்ளியூர் குரு மூர்த்தி முதலிய வித்வான்களிடம் பல அரிய அம்சங்களைக் கிரகித்து வரும் இப்பாடகி 1971ம் ஆண்டு முதல் மேடையேறி இதுவரை யில்சுமார் ஐம்பது கச்சேரிகள்செய்திருக்கிருர்.

சிறந்த மனோதர்மத்துடன் ராகங்களை விச்ராந்தியாக ஆலாபனை செய்து, பொறுக்கி யெடுத்த அழகிய கீர்த்தனங்களைப் பாவப் பொலிவுடன் பாடி, கச்சிதமாகச் சில ஆவர்த் தனங்கள் கற்பனை ஸ்வரம் பாடுவதே இவரது பாணி. கீரவாணி, லாவேரி, ஆரபி முதலிய ராகங்கள் இவரிடம் தனி அழகுடன் சோபிக் கின்றன. லலித், சிவரஞ்சனி முதலிய ராகங் களில் இவர் பாடும் மீரா பஜன்களும், பிருந்தாவனி, பூர்ண சந்திரிகா ஆகியவற்றில் பாடும் தில்லானாக்களும் ரசிகர்கள் விரும்பிச் சுவைக்கும் அம்சங்கள். தற்சமயம் பத்ராசல ராமதாஸ் ஸ்வாமியின் கிருதிகளில் விசேஷ கவனம் செலுத்தி வரும் ஸ்ரீமதி சீதாவின் எதிர்காலம் இசையுலகுக்குப் பயனளிப்பதாக அமையும்.

திருச்சி சகோதரிகள்—பிரேமா, ஜயா

மார்கழி மாதம் அதிகாலையில் ரேடியோவை இயக்கியவுடன் கணீரென்ற குரலில் இரு பெண்கள் பாடியுள்ள மாணிக்க வாசக ஸ்வாமிகளின் திருவெம்பாவையும், திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களும், அதைத் தொடர்ந்து கிருபானந்தவாரியார் அவர் களின் விளக்கமும் ஆயிரக்கணக்கான ரசி கர்கள் கேட்டு மகிழும் நிகழ்ச்சிகளாகும். சங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீநிவாசய்யர் அவர்களால் மெட்டு அமைக்கப்பெற்ற இப் பாடல்களைப் பதிவு செய்துள்ளவர்கள் 'திருச்சி சகோதரிகள்' என்று அழைக்கப்படும் பிரேமாவும், ஜயாவும் ஆவர்.

சிறு வயதில் தமது தாயாரிடமும், பின்னர் தஞ்சாவூர் சங்கரன் அவர்களிடமும் சங்கீதம் கற்ற இவ்விருவரும் சென்னை மத்திய அர சாங்க இசைக் கல்லூரியில் முறையாகப் பயின்று முதல் வகுப்பில் 'சங்கீத வித்வான்' பட்டம் பெற்றவர்கள். பிறகு மத்திய அர சாங்கத்தின் ஸ்காலர்ஷிப் பெற்று,



வயலின் மூவர்



சீதா சுப்பிரமணியம்

ஸ்ரீ செம்மங்குடி அவர்களிடமே விசேஷப் பயிற்சி பெற்றுக் கச்சேரி செய்யும் திறமை பெற்றனர். முத்துஸ்வாமி தீக்ஷிதரின் கமலாம்பா நவாவர்ண கீர்த்தனைகள், நவக்கிரக கீர்த்தனைகள் முதலியவற்றை இவர்கள், 'செம்மங்குடி பாணி'யில் பாடும் முறை கவர்ச்சிகரமானது. கனமான, இனிய குரல் படைத்த இவ்விரு சகோதரிகள் அகில இந்திய ரேடியோவின் இசைச் சித்திரங்களில் பங்கு பெற அடிக்கடி தேர்ந்தெடுக்கப்படுவதில் வியப்பொன்றுமில்லை. தற்சமயம் பல ஊர்களில் கச்சேரி செய்து சாஸ்திரீய சங்கீதத்துக்கும் தங்களுடைய பயிற்சிக்கும் புகழ் தேடி வருகின்றனர்.

வயலின் மூவர்

சென்ற ஆண்டு டிஸம்பர் சங்கீத ஸீஸனில் சென்னையில் மாத்திரம் பதினொரு கச்சேரிகள் நிகழ்த்திய எல். வைத்தியநாதன் (30), எல். சுப்பிரமணியம் (26), எல். சங்கர் (24) ஆகிய 'வயலின் மூவர்' வாத்திய சங்கீதத்

— டி.எஸ்.பார்த்தஸாரதி —



சேஷகோபாலன்



பிரேமா—ஜெயா

துறையிலேயே ஒரு புரட்சியைத் தோற்றுவித்தனர் என்று கூறுவது மிகையாகாது. தங்கள் தந்தையாராகிய லக்ஷ்மிநாராயண ஐயரிடமே பயிற்சி பெற்ற இம்மூவரும், வயலின் வாத்தியத்தில் அசுர சாதகம் செய்தவர்கள். மூவரும் சேர்ந்து பைரவி, மோகனம் ஆகிய ராகங்களில் உள்ள 'விரிபோணி', 'நித்து கோரி' முதலிய வர்ணங்களை நான்கு காலங்களில் வாசிப்பது பிரமிப்பை உண்டாக்கும் ஒரு சாதனையாகும். ஐரோப்பிய சங்கீதமும் பயின்று டிப்ளோமா பெற்றவர்களாதலால் வில் போடுதல் முதலியவற்றில் மேற்கத்திய இசையின் அரிய முறைகளைப் பின்பற்றி நமது சங்கீதத்துக்கு விசேஷமான பொலிவையும் பெருமையும் ஏற்றியுள்ளனர். இவர்கள் ஒன்றாகச் சேர்ந்து வர்ணங்கள், கிருதிகள் முதலியவற்றை வாசிக்கும்பொழுது ஒருவரே வாசிப்பது போன்ற உணர்ச்சி சபையோரிடம் ஏற்படுகிறது. அரிய லய வின்யாசம், கற்பனை ஸ்வரப்பெருக்கு, பிசிர் அற்ற இனிய நாதம் இவையே இவர்களுடைய வாசிப்பின் தனிச் சிறப்புக்கள்.

ஸ்ரீ சுப்பிரமணியம் வைத்தியக் கல்லூரியில் படித்து எம். பி. பி. எஸ். பட்டம் பெற்றவர். ஸ்ரீ சங்கர் அமெரிக்க சர்வகலாசாலை ஒன்றிலிருந்து சங்கீதத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். இவ்விருவரும் தற்பொழுது அமெரிக்காவில் கர்நாடக இசையைப் பரப்பும் தொண்டில் ஈடுபட்டுள்ளனர். சர்வகலாசாலையில் இசை போதிப்பதுடன், ஸ்ரீ சங்கர் தனிக் கச்சேரிகள் செய்தும், ஸ்ரீ சுப்பிரமணியம் பண்டித ரவி சங்கரின் வாத்திய கோஷ்டியில் வயலின் வாசித்தும் பணியாற்றி வருகின்றனர். வருகிற டிஸம்பர் சங்கீத விழாக்களின் பொழுது 'வயலின் மூவருக்கு' சென்னையிலும், பிற ஊர்களிலும் இருபதுக்கு மேற்பட்ட கச்சேரிகள் ஏற்பாடாகியிருக்கின்றன.

மதுரை சேஷகோபாலன்

சென்ற சில வருடங்களாகச் சென்னை ரசிகர்கள் மிகவும் விரும்பிக் கேட்டு வரும் மற்றோர் இளம் பாடகர் மதுரை டி. என். சேஷகோபாலன் ஆவர். ஸத்குரு சங்கீத வித்யாலயத்தின் பிரின்ஸிபாலாக இருந்த வித்வான் சங்கரசிவம் அவர்களிடம் கருத்துடன் இசை பயின்ற இவ்விளைஞர் சம்பிரதாயத்திலிருந்து சிறிதும் வழுவாது பாடுகிறார். கௌரவமான வழியில், மனோதர்மத்துடன் ராகங்களை விஸ்தாரமாக ஆலாபனை செய்கிறார். சுருதி சுத்தமான இனிய சாரீரத்துடன் மூன்று மணி நேரத்துக்கு மேல் சபையோரைச் சிறிதும் களைப்படையச் செய்யாமல் கச்சேரி செய்கிறார். இவ்விளம் வயதிலேயே சிக்கலான பல்லவிகளை அமைத்துப் பாடும் திறமை பெற்ற இவரது லயக் கட்டுப்பாட்டைப் பிரபல மிருதங்க வித்வான்களும் வியந்துள்ளனர். மேற்கூறிய வித்யாலயத்திலேயே ஆசிரியராகப் பணியாற்றி வரும் இவரிடமிருந்து வருங்காலத்தில் ரசிக உலகம் இன்னும் சீரிய இசைத் தொண்டை எதிர்பார்க்கிறது.



பழைய தமிழும் புதிய எழிலும்!



தெலுங்கும் சம்ஸ்கிருதமுமே மேடைக் கச்சேரிகளில் முக்கியமாக விளங்கிய காலத்தில் எத்தனையோ இதயங்கள் தமிழ் சாகித்தியங்களுக்கும் அந்தப் பெருமை கிட்டாதா என்று ஏங்கியதுண்டு. ஆனால் அந்த ஏக்கத்துக்கு இன்று இடமில்லாமல் பலப் புலர் அரிய தமிழ் சாகித்தியங்களை இயற்றியிருக்கிறார்கள். வித்வான்களும் பாடி மகிழ்விக்கிறார்கள்.

ஆழ்வார்கள், நாயன்மார்களைத் தொடர்ந்து தாயுமானவர், முத்துத் தாண்டவர், அருணாசலக் கவி, கோபால கிருஷ்ண பாரதி, கவி குஞ்சர பாரதி என்று எத்தனையோ பக்த கவிகள் தமிழ்ப் பாடல்கள் இயற்றிப் பெருமை சேர்த்தார்கள். அவ்வழியிலே வந்த கோடீசுவர ஐயர் ஓர் அற்புதமான சாதனை புரிந்திருக்கிறார். எழுபத்திரண்டு மேளகர்த்தா ராகங்களுக்கும் இலக்கண இலக்கியமாகத் திகழும்படி 'கந்த கானமுதம்' என்ற நூலை இயற்றியிருக்கிறார்.

1867ம் ஆண்டில் பெருங் கரை என்னும் ஊரில் பிறந்த இவரது பூர்விகம் நந்தனூர். இவர் வாசஸ்தலமாகக் கொண்ட ஊர் புதுவயல். சென்னை உயர் நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பாளராகப் பணியாற்றிய இவர், மிகுந்த இசைப் பற்றுக் கொண்டவர். கவி குஞ்சர பாரதியின் பெண் வயிற்றுப் பேரராகையால், இயல்பாகவே இசை ஞானம் இருந்தது. பூச்சி ஸ்ரீனிவாசய்யங்கார், பட்டணம் சுப்பிரமணிய அய்யர் போன்றோரிடம் சிட்சை பெற்று அதை மெருகிட்டுக் கொண்ட கோடீசுவர அய்யர் ரசிகமணி டி.கே.சி., கல்கி போன்றவர்களின் நெருங்கிய நண்பர்.

இவ்வளவிருந்தும் இவருக்கு ஓர் ஐயப்பாடு, 'தம்மால் தமிழில் இலட்சண — இலட்சிய கீர்த்தனைகள் பாட முடியுமா ?' என்று ! அதைக் கனவில் தோன்றித் தியாகப் பிரும்மம் களைந்திருக்கிறார், 'முன்னேறு, வெற்றியடைவாய்!' என்று ஆசி கூறி. 'இனி நமக்கொரு கவலையும் இல்லை' என்ற பிலஹரி ராகக் கீர்த்தனை அந்தக் கனவை ஒட்டி உருவானதே.

இன்னொரு முறை இவருக்கு நெருங்கிய உறவினர் வேணுகோபாலய்யர் தீராத நோயினால் துன்புற்றுக் கொண்டிருந்தார். 'உன் பேரில் பக்தியும் சங்கீதத்தில் ஈடுபாடும் எனக்கு நிலையாக இருக்க வேண்டுமானால், ஸ்ரீ வேணுகோபால தேவா! வா, வா... நின்னருள் தருகவே !' என்று உருகிப் பாடியிருக்கிறார். பக்தி இசை, நோயைத் தீர்த்து வைத்திருக்கிறது.

முருகன்பால் அபார பக்தி கொண்ட இவர் கீர்த்தனைகள் கவிகுஞ்சரதாசன் என்ற முத்திரையுடன், அந்தந்த ராகங்களின் பெயர்களையும், இலட்சணங்களையும் விளக்கும் இலட்சிய நூலாக வெளிவந்துள்ளன. அவரது பாடல்களைப் பாடிப் பரவி வரும் ஸ்ரீ நாகமணியும் அப்பாவுக்குச் சரியான பிள்ளைதான். இவரும் பல கீர்த்தனைகள் கவனம் செய்துள்ளார். இவரும், இவரது மனைவி குஞ்சரியும் அவரது பாடல்களைப் பாடுவதன் மூலம், கோடீசுவர ஐயரை 'கோடியில் ஒருவர்' என்று நிரூபித்து வருகின்றனர்.

சென்ற தலைமுறையைச் சேர்ந்த கோடீசுவர அய்யரைப் பற்றிப் படித்த கையோடு இன்றையத் தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக — ஒருவரை ஸ்ரீ ஆர். வேணுகோபால் அவர்களைச் சந்தியுங்கள்.

'' எனக்கு இசைப் பற்று பூர்வீக சொத்தோ பரம்பரைச் சொத்தோ அல்ல. 'சகவாச தோஷம்' என்பார்களே, அப்படிச் சில சங்கீத ரசிகர்களுடனும், விமரிசகர்களுடனும் தொடர்பு உண்டு ; பேசி மகிழ்வேன். பாட்டும் கவனம் செய்யும் காலம் வரும் என்று நான் நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. ஆனால் இதயத்துள் ஓர் ஏக்கம் இருந்து வந்தது.

ஒரு நாள் என் உள்ளுக்குள்ளிருந்து ஒரு சக்தி உசுப்பிவிட்டது. என்னையும் மீறி வசந்தா ராகத்தில் முதல் கீர்த்தனையை என் உள்ளம் எழுதியது. அதற்கு ஸ்வரம் போட்டுப் பாடிப் பார்த்தேன் ! எனது முதல் கீர்த்தனை தெலுங்கில்தான் தோன்றியது.

அப்புறம் ஒரு சமயம் திட்டைக்குப் போயிருந்தேன். ஸ்ரீ சுகந்த குந்தலாம்பிகையைத் தரிசனம் செய்தேன். தன்யாசியில் உருவான 'ஸ்ரீ சுகந்தகுந்தலாம்பிகா' கீர்த்தனம் அன்று தோன்றியதுதான்! தோடி ராகத்தில் 'தாமதமா' கீர்த்தனம்கூட அன்றே உருவானதுதான் '' என்கிறார் ஸ்ரீ ஆர். வேணுகோபால். இவர் இதுவரை நாற்பது கீர்த்தனைகள் எழுதியிருப்பார். ஸ்ரீ வேணுகோபாலின் மொழியில் சொன்னால் இசைத் தேவி அவரை ஒரு கருவியாக்கிக் கொண்டாள் என்று கூறுவதுதான் பொருத்தம்.

அவர் மூலம் இசைத் தேவிக்குக் கிடைத்த கீர்த்தனைகள் பல பிரபல வித்வான்கள் மூலம் பரிமளிக்கிறது என்றால் தெய்வ சாந்நித்தியத்துக்கு அவை இட்டுச் செல்கின்றன என்பது தானே பொருள் ?

— ரா. வீ.

ஜலதோஷம் ஒழிக



காப்பது கைகண்ட ஆறு மருந்துகளின் கலவையான

ரபெக்ஸ்




வலுவாகத் தேய்ப்பதற்கான ஜலதோஷ நிவாரணி—ஜலதோஷத்தை அதி விரைவில் தணித்திட-அடைபட்ட மூக்கைத் திறக்க, மார்பிலுள்ள நெரிசலைக் கரைக்க, உடம்பிலே கதகதப்பூட்ட — தனிப்பட உருப்பெற்றது.

20 கிராம், 65 கிராம் புட்டிகளிலும், 6 கிராம் டப்பியிலும், வருபவை.

இலவசம் பால் பேனா... 20 கிராம் புட்டி வாங்கும்போது.

everest/921/ACW-tm



அரியதொரு சங்கம்; பெரியதொரு தலைவர்!

திருநெல்வேலி மாவட்டம், இடிந்தகரை என்ற கிராமத்தில் மீனவர் மிகுதி. ஏதோ உட்பூசலினுல் இந்த மீனவர்கள் பெருந் துயரத்துக்கு உள்ளானுர்கள். வாழ்வா, சாவா என்ற நிலையில் இவர்கள் இருப்பதை விசுவ ஹிந்து பரிஷத் ஊழியர்கள் அறிந்தனர். உடனே அங்கு விரைந்து அவர்களின் புனர் வாழ்வுக்கு வழி செய்தனர். உடனடியாகத் தேவைப்பட்ட உடை, உணவு கொடுத்ததுடன் அவர்கள் மீண்டும் சுய கௌரவத்துடன் வாழ வகை செய்யும் விதத்தில் மீன் பிடிக்கும் வலைகள் முதலியன வாங்கித் தந்தனர். அவர்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வசதியாக ஒரு சிறிய பீடித் தொழிலகமும் அமைத்துத் தந்தனர். குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் எழுந்தது. ஹிந்து மதத்தைக் கிராமவாசிகள் திரும்பவும் பின்பற்ற விரும்புவதை அறிந்து அதற்கும் வசதி செய்து ஒரு பிள்ளையார் கோயில் நிர்மாணித்தனர்.

இத்தகைய நற்பணியாற்றும் விசுவஹிந்து பரிஷத்தை ஸ்தாபித்தவர்கள் ஆன்மிகத் துறையிலும் அறிவாற்றலிலும் சிறந்த மிகப் பிரபலமான மனிதர்கள். அவர்களில் பலர் இன்று ஜீவியந்தர்களாக இல்லாத போனுலும் விசுவ ஹிந்து பரிஷத் தொடர்ந்து ஆக்கப் பணி புரிந்து வருகிறது. கடந்த பத்தாண்டுகளில் அதன் பணி இந்தியாவின் எல்லாத் திசைகளுக்கும் பரவியுள்ளது. ஆயிரக் கணக்கான தொண்டர்கள் தேசத்தின் நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் சென்று ஹிந்து மதத்தின் பல்வேறு ஜாதியினரின் ஒத்துழைப்பை மட்டுமின்றி, வேற்று மதத்தவரின் ஒத்துழைப்பையும் கோரிப் பெற்றுள்ளனர். பல மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள், ஹரிஜனங்களுக்கு ஹாஸ்டல் போன்றவற்றைத் திறம்பட நடத்துகின்றனர். இத்தகைய அன்புப் பணிகளும் சொற்பொழிவுகளும், பஜனைகளும், கலை நிகழ்ச்சிகளும் ஹிந்து மதத்தின் பல்வேறு வகுப்பினரிடையே ஒற்றுமையையும் ஒன்றிய நோக்கையும் வளர்த்து வருகின்றன. தமிழகத்தில் மட்டும் நான்கு மருத்துவ மனைகள் இயங்குகின்றன. இது தவிர முன்னர் குறிப்பிட்ட இடிந்தகரையில் போல் இடிந்துபோன சமூக வாழ்வைப் பலப் பல கிராமங்களில் புதுப்பித்துள்ளனர்.

ஹிந்து சமூகத்தின் ஒற்றுமைக்கு உதவி அதனைப் பலப்படுத்துதல், ஹிந்து மதத்தின் கோட்பாடுகளின்படி புற வாழ்வும் ஆன்மிக அக வாழ்வும் நடத்த மக்களுக்கு உதவுதல், அயல் நாடுகளில் உள்ள ஹிந்துக்களுடன் தொடர்பு கொண்டு தேவையான சகாயங்கள் புரிதல் ஆகிய மூன்று நோக்கங்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட விசுவ ஹிந்து பரிஷத், துயர் துடைப்பதும் கை கொடுத்துத் தூக்கி விடுவதுமே இந்நோக்கங்கள் நிறைவேறச் சிறந்த வழி என்று புரிந்து கொண்டு அரும் பணியாற்றி வருகிறது.

விசுவ ஹிந்து பரிஷத்தின் இன்றைய அகில இந்தியத் தலைவர் மகாராணு பக்வத் சிங் டிசம்பர் 14ந் தேதி சென்னை வருகிருர். முந்நாளில் உதயப்பூர் மகாராஜாவாக விளங்கிய ஸ்ரீ பக்வத் சிங், இந்தியா சுதந்திரமடையும்வரை இலையில்தான் சாப்பிடுவோம்,வைக்கோல் பரப்பில்தான் படுப்போம், டில்லி செங்கோட்டைக்குள் நுழைய மாட்டோம் என்றெல்லாம் சபதம் எடுத்துக்கொண்ட ஓர் உன்னத ராஜ பரம்பரையில் தோன்றியவர். 1956ல் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு திரு பக்வத் சிங்கின் கரம் பற்றிச் செங்கோட்டைக்குள் அழைத்துப் போனுர்.

திரு பக்வத் சிங் சகல கலா வல்லவர் என்று சுருக்கமாகச் சொல்லிவிடலாம். ஐ. ஸ்.எஸ். படித்துத் தேறியது முதல், கிரிக்கெட், போலோ—விளையாட்டுக்கள் வரை அவர் அடைந்துள்ள பட்டங்கள், தேர்ச்சிகள் எத்தனை எத்தனையோ. உலகம் முழுவதிலுமுள்ள பல்வேறு சமூக நல ஸ்தாபனங்களுடன் தொடர்பு கொண்டவர். கலைகளின் வளர்ச்சிக்கும் சமூகப் பணிகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருபவர்.

விசுவ ஹிந்து பரிஷத்தின் தலைவருக்குச் சென்னையில் தக்க முறையில் வரவேற்பளிக்க முக்கியஸ்தர்கள் அடங்கிய ஒரு குழு உருவாகியுள்ளது. அவர்களோடு சேர்ந்து நாமும் நல்வரவு கூறுவோம். அறிவாற்றலையும் அன்புள்ளத்தையும் இரு சாம்ராஜ்யங்களாகப் பெற்றுள்ள பக்வத் சிங் அவர்களை 'வருக வருக' என வரவேற்று வாழ்த்துவோம்.

திருத்தம்

இவ்வருட 'கல்கி' தீபாவளி மலரில் வெளியாகியுள்ள ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் அருள்வாக்கில், சுந்தர ஸ்வாமிகள் திருவாரூரில் ஏழு கோயில்களுக்கு ஒரே நாளில் கும்பாபிஷேகம் செய்ததாகப் பிரசுரமாகி யிருக்கிறது. இது தவறு. திருவையாற்றையும் அதைச் சுற்றிய ஆறு ஸ்தலங்களையும் சேர்த்து 'ஸப்த ஸ்தானம்' எனப்படும் ஏழு கோயில்களுக்கு சுந்தர ஸ்வாமிகள் ஒரே தினத்தில் குடமுழுக்கு நிகழ்த்தியதாகவே ஸ்ரீ ஆசாரியப் பெருமான் அருளியிருக்கிருர்கள். பிரசுரத்தில் ஏற்பட்ட தவற்றுக்கு வருந்துகிருேம்.

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி:

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்-கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லா-வற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கரை திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பநவீனமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான் முன்னோடியாக விளங்குவதனால், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைந்துள்ளது.

இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது ஸெல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ள-தோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—

தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)



மிகமென்மையான பிளேடு-களையும், விண்வெளி பிளேடுகளையும் உபயோகித்துப் பார்த்தேன்.
கத்திமுனைபோல கூரான பிளேடுகளையும் விதவித-மான விநோத உலோகங்களடங்கிய பிளேடுகளையும் உபயோகித்துப் பார்த்தேன்.
வெட்டுக்காயங்களும், கீறல்களும், எரிச்சலும்தான் மிச்சம்.
கடைசியாக சில்வர் ப்ரின்ஸ் உபயோகித்துப் பார்த்தேன். முகக்ஷவரம் மழமழப்பாகவும், சுத்தமாகவும் இருந்தது... நிறைவேற்றமுடியாத உறுதிமொழிகளல்ல.
சில்வர் ப்ரின்ஸ்
சுத்தமான, மழமழப்பான க்ஷவரத்தைத் தரும்...
உறுதிமொழியை நிறைவேற்றிடும் பிளேடு.
SILVER PRINCE
STAINLESS
சில்வர் ப்ரின்ஸ்–சுகமான க்ஷவரம்...சோக்குசான க்ஷவரம்
நீங்கள் சில்வர் ப்ரின்ஸ் கொண்டு மழமழப்பாகவும், சுத்தமாகவும் க்ஷவரம் செய்து கொள்ளலாம். ஏனெனில் இறக்குமதி-யான மிகச் சிறந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீலில், இந்தியாவில் அதி முன்னேற்ற-
SILVER
PRINCE
STAINLESS
மான தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப் படுகிறது சில்வர் ப்ரின்ஸ். நீங்களும் சுகமான க்ஷவரத்தைப் பெறுகிறீர்கள். எனவேதான் சில்வர் ப்ரின்ஸ் முகக்ஷவரத்தை சுகக்ஷவரம் என்கிறோம்.


1
ஒற்றர் ஜாக்கிரதை
கதை: நாடோடி
சித்திரம்: ராஜு
ஜெர்மன் பத்திரிகையின் டோக்கியோ நிருபர் சார்ஜ், ஒரு ஸ்திரீ லோலன். மது, மங்கை என்று அவன் காலத்தைச் செலவிட்டதால்....
கம் ஆன், டார்லிங்!
... அவனை ஒரு ருஷ்ய ஒற்றன் என்று யாரும் சந்தேகிக்கவில்லை!
ஜப்பான் நிச்சயமாக ருஷ்யாவைத் தாக்காது. அவர்கள் நோக்கமெல்லாம் சீனாவும் இதர ஆசிய நாடுகளும் தான்.
ரகசிய ரேடியோத் தகவலை அறிந்த ஸ்டாலின்....
சார்ஜ் ருஷ்யாவைக் காப்பாற்றி விட்டான்!
ஜப்பான் நம்மைத் தாக்காது என்பதால் கிழக்கு சைபீரியாவில் உள்ள இருபது லட்சம் துருப்புக்களை நாம் மேற்கு முனையில் முன்னேறி வரும் ஜெர்மானியரைத் தடுத்து நிறுத்தப் பயன் படுத்தலாம். மாஸ்கோவைக் காப்பாற்றி விடலாம்!
டோக்கியோவில் சார்ஜின் உதவியாளர்:
கிளாசன் - ஜெர்மானியன். ரகசிய ரேடியோத் தொடர்பில் நிபுணன்.
ஒஸாக்கி - ஜப்பானியன். பத்திரிகை நிருபர். ஜாப் பிரதமருக்கு உறவு. பல ரகசியங்களை அறிந்து வந்து கூறினான்.
ஜெர்மன் தூதராலயத்திலும் சார்ஜுக்குப் பல நண்பர்கள். ஒற்றன் என சந்தேகியாமல் பார்ட்டிகளில் சார்ஜிடம் பேசினார்கள். எல்லாத் தகவல்களும் ருஷ்யாவுக்குப் பறந்தன.


எட்டு வருஷம் திறம்படச் செயலாற்றினான் சார்ஜ். ஒரு நாள் மேஜர் ஹிராநோ அழகி தியாமியை அழைத்தார்.
யாரோ தகவல்களை ரேடியோ மூலம் மாஸ்கோவுக்கு அனுப்புகிறார்கள். சார்ஜ் மீது சந்தேகம். உறுதிப் படுத்திக் கொள்ள உன் உதவி தேவை!
ஹோட்டல் குன்ஸானில் எழிலரசி தியாமியின் நடனம்...
என்ன அழகு! இவளை அடையாமல் விட மாட்டேன்!
பல நாள் முயற்சிக்குப் பிறகு சார்ஜ் வெற்றி கண்டான். அவளது மேக்-அப் அறையில்..
தியாமி!
சார்ஜ்! உனது கடற்கரை வீட்டுக்குப் போவோம்!
மேக்-அப் அறையை விட்டு வெளியேறும் போது ஓட்டல் பணியாள் சார்ஜ் மீது தவறி இடித்தது போல் பாசாங்கு செய்ய, ஒரு கடிதம் கை மாறுகிறது.
ஸாரி!
கடற்கரை வீட்டில்... ஒஸாக்கி அனுப்பிய கடிதத்தைப் படிக்கிறான் சார்ஜ்.
என்ன கடிதம்?
உனக்கு ஒன்றுமில்லை!
அந்தக் கடிதம்:
ஜப்பான் பெர்ல் ஹார்பரைத் தாக்கப் போகிறது!
— ஒஸாக்கி
கடிதத்தைச் சுக்குச் சுக்காகக் கிழித்து ஜன்னல் வழியே எறிகிறான் சார்ஜ்.
டார்லிங்! அம்மா என்னைக் காணாமல் தவிப்பாள். காலை தான் வீடு திரும்புவேன் என்று ஃபோன் செய்து விடுகிறேன்.
வரவேற்பு அறையில் ஃபோன் இருக்கிறது. பேசி விட்டுச் சீக்கிரம் வா. என்னைக் காக்க வைக்காதே!

''ராமசுப்பு! இனிமேலும் உன் கல்யாணத்தைத் தள்ளிப் போடுவது உசிதமில்லை. இந்த வருடம் நடத்தியே ஆகவேண்டும். நமக்கு அவசரம் இல்லையென்றாலும், பெண்களைப் பெற்றவர்கள் பொறுமையாக இருப்பார்களா? என் அண்ணாவும், உன் அத்தையும் என்னை நெருக்குகிறார்கள். பிரேமாவா, கௌரியா என்பதைத் திட்ட வட்டமாக யோசித்துச் சொல்லிவிடு, அப்பா'' என்று அலமேலு தன் மகனிடம் கேட்டபோது, 'பிரேமாவைத்தானம்மா பிடித்திருக்கிறது' என்று சொல்ல மாட்டானா என்கிற துடிப்பும், 'கௌரியைப் பிடித்திருக்கிறது' என்று சொல்லாமல் இருக்க வேண்டுமே என்கிற தவிப்பும் அவள் குரலில் கலந்திருந்தன.

அலமேலுவின் அண்ணா பெண் பிரேமா. கௌரியோ அவளுடைய கணவரின் தங்கையின் மகள்.

அலமேலுவுக்குப் பிறந்த வீட்டில் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்கிற ஆசை. ஆனால் பிரேமா படித்தவள். நாகரிகமான போக்கு உடையவள். கௌரியோ படித்திருந்தும் அடக்கமாக இருப்பவள். இந்த வித்தியாசம் தன் எண்ணத்தை ஈடேறாதபடிக்குச் செய்து விடுமோ என்று பயந்தாள் அலமேலு.

''பிரேமாவா, கௌரியா? சொல்லிவிடு'' என்று அவள் கேட்டதும், ''அம்மா! அவர்களில் எந்த ஒருத்திமீதும் எனக்கு அளவுக்கு அதிகமான விருப்பமோ, அனாவசியமான வெறுப்போ கிடையாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். ஊதாரிச் செலவுகளெல்லாம் செய்யாத, நம்போன்ற நடுத்தரக் குடும்பத்துக்கு ஏற்றவளாக எவள் இருக்கிறாளோ, அவளையே நீ மருமகளாகத் தேர்ந்தெடுத்துவிடு'' என்று ராமசுப்பு சொன்னதும் அமலேலு கொஞ்சம் அயர்ந்துதான் போனாள்.

அவர்கள் இருவரில் இரண்டாமவளுக்குத்தான் 'அவன் சொல்லும் குணம் இருக்கக்கூடும் என்பதை அவர்களைப் பார்த்தவுடனேயே யாரும் சொல்லி விடுவார்களே!

அலமேலுவின் மனம் அலைபாய்ந்தது. சாதாரண அந்தஸ்துள்ள நாத்தனாரைச் சம்பந்தியாக்கிக்கொள்ள அவள் கௌரவம் இடம் தரவில்லை. பிரேமாவிடம் அந்தரங்கமாகப் பேசி, ராமசுப்புவின் விருப்பத்துக்கேற்ற குணமுள்ளவள் அவள்தான் என்கிற எண்ணம் அவன் மனத்தில் உண்டாகும்படியாக அவளை நடந்துகொள்ளச் சொல்ல வேண்டும் என்று நினைத்தவளுக்குத் தெய்வாதீனமாக எந்த விதமான முயற்சியும் செய்யாமலேயே நல்லதொரு தீர்ப்புக் கிடைத்து விட்டது.

''ராமசுப்பு! அவ்விரு பெண்களில், நீ விரும்பும் குணமுடையவள் யார் என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு...'' என்று அவள் முடிக்கு முன், ''பரீட்சை வைக்கப் போகிறாயா?'' என்று கேட்டுச் சிரித்தான் ராமசுப்பு.

''அப்படித்தான் வைத்துக் கொள்ளேன். நாளைக்கு ஒருத்தி இங்கே வருவாள். அதற்கு மறுநாள் ஒருத்தி வருவாள். இந்த இரண்டு நாட்களும் நீ இங்கேயே இருந்து



சிக்கனம்!

கஸ்தூரி பஞ்சு

அவர்களைக் கவனித்து உன் கருத்தைச் சொல்ல வேண்டும், என்ன?'' என்றாள்.

''ஓகே!'' என்று தலையாட்டினான் ராமசுப்பு.

முதலில் கௌரியை அழைத்துக்கொண்டு வந்தாள் அலமேலு.

மூவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபொழுது காய்கறிக்காரியின் கூவல் கேட்டது. அலமேலு அவளைக் கூப்பிட்டுக் கூடையை இறக்கி வைக்கச் சொன்னாள்.

''கௌரி! விலைபேசி முட்டைகோஸ் ஒரு கிலோ வாங்கும்மா. நான் உள்ளே போய்ச் சில்லறை எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்று சொன்ன அலமேலு, உள்ளே போவதற்கு முன், மகனை ஜாடையாகப் பார்க்கத் தவறவில்லை.

பீரோவைத் திறந்து பணத்தை எடுத்துக் கொண்டு அவள் திரும்புவதற்குள் கௌரியே உள்ளே வந்து விட்டாள், இரண்டு முட்டைகோஸ்களைத் தூக்கிக்கொண்டு.

''வாங்கிவிட்டாயா கௌரி? அவள் என்ன விலை சொன்னாள்? நீ என்ன கேட்டாய்?'' என்று விசாரித்தாள்.



''கிலோ ஒரு ரூபாய் என்று சொன்னாள். இருபது பைசா குறைத்துக் கேட்டால் கொடுத்திருப்பாள். அவளிடம் பேரம் எதற்கு என்று பேசாமல் வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்'' என்று அவள் சொன்னதும், அர்த்தத்துடன் மகனைப் பார்த்தாள் அலமேலு. அவனும் முறுவலித்தான்.

அன்று மாலை ராமசுப்பு கௌரியை அவள் வீட்டில் கொண்டுபோய் விட்டு விட்டு வந்ததும், அவனிடம் அவளைப் பற்றிப் பேச அலமேலு வாயெடுத்தபோது, ''உஸ்ஸ்... முழுப் பரீட்சையும் முடிவதற்குள் எதுவும் பேசக் கூடாது'' என்று உதட்டில் விரலை வைத்து விளையாட்டாக எச்சரித்தான் ராமசுப்பு.

''அதுவும் சரிதான்'' என்று ஒப்புக்கொண்டாள் அலமேலு.

மறுநாள் பிரேமா வந்தாள். அதன்பின் மற்ற நிகழ்ச்சிகளெல்லாம் முந்தைய தினத்தைப் போலவேதான் நடந்தன. ஒரே ஒரு சின்ன மாற்றம். முதல் நாள் காய்கறிக்காரி; மறுநாளோ சாத்துக்குடிப் பழக்காரன். இன்னொரு வித்தியாசம், முதல் நாள் அலமேலு பீரோவைத் திறந்து பணத்தை எடுத்துக் கொண்டு வருவதற்குள், கௌரி காய்கறியுடன் வந்து விட்டாள். இன்றோ அலமேலு பணத்துடன் திரும்பி வந்து உட்கார்ந்து பதினைந்து நிமிடங்கள் ஆகியும்கூட வியாபாரம் முடியவில்லை. ஒரே பிடிவாதமாகப் பேரம் பேசினாள் பிரேமா. ராமசுப்பு பிரமிப்புடன் அவளைக் கவனித்துக் கொண்டிருந்ததைப் பார்த்த அலமேலுவுக்கு வயிற்றில் பால் வார்த்தது போலிருந்தது.

அன்று மாலை பிரேமாவை அழைத்துக் கொண்டு போய் அவள் வீட்டில் விட்டு விட்டுத் திரும்பி வந்த ராமசுப்புவை ஆர்வத்துடன் நோக்கினாள் அலமேலு.

''அம்மா! உன் மூளைக்கு நோபல் பரிசு தான் கொடுக்க வேண்டும்'' என்று புன்னகையுடன் ஆரம்பித்தான் ராமசுப்பு.

''அப்படி என்னடா செய்து விட்டேன் நான்?'' என்று பெருமிதத்துடன் கேட்டாள் அலமேலு.

''சாதாரணக் காரியமா செய்திருக்கிறாய் நீ? எத்தனை பெரிய பிரச்னையை எவ்வளவு சுலபமாகத் தீர்த்து வைத்து விட்டாய்! அம்மா! உண்மையிலேயே சொல்கிறேன், அவ்விருவரில் யாரை மணந்து கொள்வது என்று புரியாமல் மனத்துக்குள்ளேயே நான் ரொம்பவும் குழம்பித்தான் போயிருந்தேன். மேலெழுந்தவாரியாகப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாதே என்கிற பயம் வேறு எனக்கு. இப்போது எந்தவிதக் கலக்கத்துக்கும் இடமின்றி, என் மனத்துக்கேற்றபடி, நம்போன்ற நடுத்தரக் குடும்பத்துக்கு அனுசரணையாக, அதிக செலவு செய்யும் மனப்போக்கு இல்லாதவள் யார் என்பதை எத்தனை அழகாகக் கண்டுபிடித்துக் கொடுத்து விட்டாய் நீ!'' என்று அம்மாவுக்கு ஒரேயடியாகப் புகழ்மாலை சூட்டினான் ராமசுப்பு.

ஆனந்த மிகுதியில் ஆகாயத்தில் பறந்தது அலமேலுவின் உள்ளம். ''ஏதோ வேலையும்

வெள்ளையா, கறுப்பா?



பழைய காலத்து அரசன் ஒருவனது பெண்ணை ஓர் ஏழை இளைஞன் காதலித்தான். ராஜகுமாரியும் அவனைக் காதலித்தாள். ஆனால், அரசனுக்குத் தன் பெண்ணை ஒரு சாதாரண மனிதனுக்குக் கொடுக்க இஷ்டமில்லை. எனினும் தன் பெண்ணைத் திருப்தி செய்ய விரும்பினான். அதற்காக அவன் ஒரு பரீட்சை வைத்தான்.

ராஜ சபையில் ஒரே கூட்டம். அரசன், ஒரே மாதிரியான இரு பெட்டிகளைக் காட்டினான். "ஒன்றில் ஒரு வெள்ளை மணியும் மற்றொன்றில் ஒரு கறுப்பு மணியும் வைத்திருக்கிறேன். நீ உனக்குத் தோன்றிய பெட்டியைத் திற. அதில் வெள்ளை மணி இருந்தால் என் பெண்ணைக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன். கறுப்பு மணி இருந்தால் உன்னை உடனே சிரச்சேதம் செய்துவிடுவேன்'' என்று இளைஞனைப் பார்த்துக் கூறினான்.

அரசன் இரண்டு பெட்டிகளுக்குள்ளும் கறுப்பு மணிகளையே வைத்திருந்தான். அதைத் தெரிந்து கொண்ட ராஜகுமாரி தன் காதலனுக்கு ஏதோ சைகை செய்தாள்.

இளைஞன் புரிந்துகொண்டான். கடவுளை வணங்கி ஒரு பெட்டியைத் திறந்தான். அதிலிருந்த மணியை யார் கண்ணிலும் படாதபடி உள்ளங் கையால் மறைத்து எடுத்தான். கையை மூடியபடியே வாய்ப் பக்கம் கொண்டு போனான். மணியை வாய்க்குள் போட்டு விழுங்கி விட்டான்.

அரசனும், சபையினரும் இந்த எதிர்பாராத செய்கையைக் கண்டு திகைத்தார்கள்.

''அரசர் பெருமானே! மற்றப் பெட்டியைத் திறந்து பாருங்கள்!'' என்றான் இளைஞன்.

அரசன் அதைத் திறந்தபோது அதில் கறுப்பு மணி இருந்தது.

''ஆகையால், நான் விழுங்கியது வெள்ளை மணி'' என்று இளைஞன் கூறினான்.

அரசன் இதைக் கேட்டு விழித்தான். அவன் ''இல்லை, இல்லை. நான் இரண்டு பெட்டிகளிலும் கறுப்பு மணியைத்தான் போட்டேன்'' என்று ஒப்புக் கொள்வதற்கில்லையல்லவா?

போதும் கூடி வந்தது. எனக்கும் யோசனை தோன்றியது. அவ்வளவுதான்'' என்றவள் ''ஆமாம், பிரேமாவை விட்டு விட்டு வந்த போதே, அவள் அப்பா, அதுதான் உன் மாமாவிடம் உன் விருப்பத்தைச் சொல்லி விட்டு வந்திருப்பதுதானே!'' என்றாள்.

''நானும்கூடச் சொல்லத்தான் நினைத்தேன். ஆனால் எனக்கென்னவோ வாய் வரவில்லை. பேசாமல் வந்து விட்டேன்'' என்று அவன் சொன்னதும், அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''என்னடா ராமசுப்பு, பெண் பிள்ளையைப் போல் வெட்கப்படுகிறாயே! இதில் என்ன தயக்கம்?'' என்றாள்.


''அப்படியில்லை அம்மா. இப்போ அடுத்தாற்போல் கௌரியின் வீட்டுக்குப் போய் அத்தையிடம் சொல்லிவிட்டுத்தானே வந்திருக்கிறேன். கௌரியை மணக்கச் சம்மதம் என்று நான் சொன்னதும் அவர்களுக்கெல்லாம் ஏக சந்தோஷம். அப்படி யில்லாமல் மணக்க முடியாது என்கிற செய்தியை முகத்துக்கு எதிராகச் சொல்லக் கொஞ்சம் தயக்கமாகத்தானே இருக்கிறது?'' என்று அவன் சொன்னதும், அலமேலுவுக்கு நெஞ்சை அடைத்தது. ''டேய் ராமசுப்பு, நீ....நீ... என்னடா சொல்கிறாய்?'' என்று திணறலுடன் கேட்டாள்.

''ஓ, கடைசியாக நான் இந்த முடிவெடுத்ததற்கு முக்கியமான காரணத்தை உன்னிடம் சொல்லவே யில்லையல்லவா?'' என்று ஆரம்பித்த ராமசுப்பு, தொடர்ந்தான்: ''நான் நேற்று கௌரியை அவள் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனேனல்லவா? அப்போது, வழியில் உள்ள ஒரு பெரியஹோட்டலுக்குக் காப்பி சாப்பிட அவளைக் கூப்பிட்டேன். அவளும் வந்தாள். காப்பி சாப்பிட்டானதும் பில்லை ஒரு பீங்கான் தட்டில் வைத்தான் சர்வர். நான் ரூபாயை அதில் வைக்கப் போனதும், 'சட்'டென்று அதைக் கையில் எடுத்துக்கொண்ட கௌரி, 'பில்லையும் பணத்தையும் நீங்களே கொண்டு போய்க் கௌண்டரில் கொடுத்துவிடுங்கள்' என்றாள். 'கௌரி! நீயா இப்படிச் சொல்கிறாய்? காலையில் காய்கறிக்காரியிடம் நீ....' என்று நான் இழுத்ததை அவள் புரிந்து கொண்டு, 'அவள் காய்கறி விற்கும் காசில் அவள் குடும்பம் நடக்கிறது. குழந்தைகள் வளர்கின்றன. மேலும் இருபது பைசா நமக்குப் பெரிய இழப்பில்லை. ஆனால் இங்கே நாம் காப்பி சாப்பிட்டேயாக வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. மேலும் நாம் கேட்பதைக் கொடுப்பதற்காகத்தான் இங்கே சர்வர் சம்பளம் வாங்குகிறான். இதில் 'டிப்ஸ்' வேறு எதற்கு? அதுவும் தவிர இப்படிப்பட்ட ஆடம்பர மெல்லாம் நம்மைப் போன்றவர்களுக்குக் கட்டுப்படியாகுமா?' என்றாள்.

''இன்று பிரேமாவையும் அதே ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போனேன். நேற்று மாதிரியே காப்பி குடித்தோம். சர்வர் பீங்கான் தட்டில் பில்லை வைத்தான். காலையில் சாத்துக்குடிக்காரனிடம் நாலணாவுக்குப் பேரம் பேசினவள் இப்போது 'டிப்ஸ்' கொடுத்தால் என்ன சொல்வாளோ என்று பில்லை நான் கையில் எடுத்ததும், 'வெடுக்'கென்று அதைப் பறித்து, மீண்டும் தட்டின் மீது வைத்த பிரேமா, 'அத்தான்! இந்த மாதிரி இடங்களில் நமக்குக் கௌரவம்தான் முக்கியம். பேசாமல் ஒரு ரூபாயைத் தட்டு மீது வைத்துவிட்டு வாருங்கள். நம் சிக்கனத்தை யெல்லாம் வாசலில் விற்றுக்கொண்டு வருகிறார்களே, அவர்களிடம்தான் காட்ட வேண்டுமே தவிர, இங்கு இல்லை' என்றாள்.

''அம்மா! அதைக் கேட்டதும் எனக்கு எப்படி ஆகிவிட்டது தெரியுமா? நான் உடனேயே ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். என் முடிவு சரிதானே?''

ராமசுப்புவுக்கு அலமேலு என்ன பதில் சொல்வாள்?



ஒற்றர் ஜாக்கிரதை — சென்ற இதழ் தொடர்ச்சி
கியாமி ஃபோன் செய்தது தன் தாயாருக்கு அல்ல; மேஜர் ஹிரானேவுக்கு! பெண்ணாசையே சார்ஜைக் காட்டிக் கொடுத்தது!
டார்லிங்! இனி இன்று இரவு முழுவதும் நான் உனக்கே சொந்தம்!
மறுநாள் காலை கதவு தட்டப் பட்டு சார்ஜ் திறந்ததும்....
நான் மேஜர் ஹிரானே. இந்தக் கடிதம் தோட்டத்தில் கிடைத்தது. துண்டுகளை சேர்த்து ஒட்டியிருக்கிறேன்!
சிறை வாசத்துக்கு நான் தயார்.
ஆனால் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின், ரஷ்யாவில் சிறையிருந்த ஒரு ஜப்பானிய ஒற்றனின் விடுதலைக்கு விலையாக சார்ஜ் விடுதலை பெற்றான்.
தாங்க்யூ! நான் மறுபடி சுதந்திரப் பறவை!
சில நாட்களுக்குப் பிறகு... ஹோட்டலில் நடனமாடிக் கொண்டிருந்த கியாமியை ஒரு துப்பாக்கி குறி பார்த்துச் சுட்டது!
இருள், குழப்பத்தினிடையே கொலையாளி நழுவி விட்டான். கியாமியை சார்ஜ் தான் பழி வாங்கி விட்டதாகப் பலர் கூறுகின்றனர். ஆனால் கொலைகாரன் யார் என்பது இன்று வரை நிரூபணமாக வில்லை!


2
ஒற்றர் ஜாக்கிரதை
கதை: நாடோடி
சித்திரம்: ராஜ்
ஹிட்லரின் பிரசார மந்திரி கெர்பெல்ஸின் ஆசை நாயகி ரூத். ஆனால் அவனுக்கு அவளை அலுத்து விட்டது. தன் தாணமல் அவளை அனுப்பி விட நினைத்தான்.
என்ன யோசனை?
உன்னால் ஒரு பெரிய காரியம் ஆக வேண்டும்.
நீ உன் பெற்றோருடன் ஹவய்யி செல்! அங்கிருந்தபடி ஜப்பானுக்கும் ஜெர்மனிக்கும் உதவு!
மறுத்துப் பேச துணிவின்றி குடும்பம் கப்பலேறியது. ரூத்தின் தகப்பனார் டாக்டர் கூஹன் ஜப்பான் மொழியில் வல்லுனர். ஹவய்யி தீவுகளில் ஜப்பானிய கலாச்சாரம் பற்றி ஆராய வந்துள்ளதாகக் கூறிக்கொண்டார்.
அழகி ரூத் அமெரிக்க கடற்படை அதிகாரிகளை மயக்கினாள். அவர்களிடம் கிடைத்த தகவல் போதாமல்....
பெர்ல் துறைமுகம் அருகே அழகு நிலையம் நிறுவியிருக்கேன். உங்கள் மனைவிமார்களை அங்கு அனுப்புவீர்களா?
கண்டிப்பாக! உன் கை பட்டாவது எங்கள் மனைவிமார்களிடம் அழகு தேவதை கருணை காட்டுவாளா, பார்க்கலாம்!


கடற்படை அதிகாரி களின் மனைவிகள் பேச்சிலிருந்து பல தகவல்களை அறிந்தாள் ரூத்.
என் கணவர் நாளை இரவு நாலு கப்பல் களுக்குத் தலைமை தாங்கிக் கிளம்புகிறார்.
இரவில் தகவல்களை ஜப்பானுக்கு அனுப்ப ரூத் கையாண்ட முறை..
எட்டு மணி முதல் ஒன்பது மணி வரை ஒரு ஜன்னலை மட்டும் திறந்து வைக்கிறேன்.
தொலைவில் இருந்த ஜப்பானிய நீர்மூழ்கிக் கப்பலில்...
ஒரு ஜன்னலில் மட்டும் ஒளி தெரிகிறது. அமெரிக்கக் கப்பல் படை துறைமுகத்தை விட்டுப் புறப்படப் போகிறது!
வேறு ஒரு நாள்...
ஒன்பது மணி முதல் பத்து மணி வரை இரு ஜன்னல்களைத் திறந்து வைக்கிறேன். அது விமானம் தாங்கிக் கப்பல்கள் வந்துள்ளதை உணர்த்தும்.
பகல் போதில்...
இன்று ஒரு துண்டு மட்டும் காயப் போட வேண்டும். நீர்மூழ்கியில் இருப்பவர்கள் துறைமுகத்தில் பத்துப் போர்க் கப்பல்கள் இருப்பதை உணர்வார்கள்.
இவ்விதம் சமிக்ஞைகள் மூலம் அமெரிக்க போர்க் கப்பல்களின் நடமாட்டங்களை ஜப்பானியருக்கு ரூத் உணர்த்தி வந்தாள். நீர் மூழ்கிக் கப்பலிலிருந்து ரேடியோ செய்தி டோக்கியோ செல்லும். இதற்கு ரூத் பெற்ற ஊதியம் ஆண்டுக்கு 50,000 டாலர்கள்!
ரூத் காரணமாக பேர்ல் ஹார்பரை ஜப்பானியர் தாக்கி வெற்றி பெறுவது சாத்தியமாயிற்று.

தொடரும்



ஒற்றர் ஜாக்கிரதை
சென்ற இதழ் தொடர்ச்சி
ஜப்பான் பெர்ல் ஹார்பரைத் தாக்கிய அன்று அமெரிக்க வீரர்கள் ஹவய்யி யிலிருந்த ஜப்பானிய தூதரகத் தைச் சூழ்ந்தனர்.
எல்லாரும் சரணடையுங்கள்! தஸ்தாவேஜுகளை எரிக்க முயல வேண்டாம்!
கைப்பற்றிய கடிதங்களை ஆராய்ந்த போது ...
ரூத் தன் அழகினால் நம்மை மயக்கி விட்டாள். அவள் உளவாளி என்பதை இது நிரூபிக்கிறது!
ரூத்தும் அவள் பெற்றோரும் சிறையிடப் பட்டனர்.
ஆல்பர்ட்! ரூத் தூக்கில் தொங்குவாள் என்பதை நினைக்க என்னவோ செய்கிறது.
அவள் தப்ப வழி உண்டு!...
.... அவர்கள் ஜெர்மனியிலிருந்து வந்தவர்கள். ஜப்பான் பற்றியும் டாக்டர் கூஹனுக்கு நிறைய விஷயங்கள் தெரியும்!
நம்மை ஏமாற்றியது போதாதா? இப்போது அக்குடும்பம் தாய் நாட்டுக்கே துரோகம் செய்ய வேண்டும் என்கிறாய்!
உயிர் தப்ப அவர்கள் எதையும் செய்வார்கள், காப்டன்! ஹிட்லரிடம் என்ன விசுவாசம் வேண்டிக் கிடக்கிறது!
ஆல்பர்ட் கூறியது மெய்யாயிற்று. ரூத்தும் அவள் பெற்றோரும் விடுதலை பெற்றனர்.
கடலின் ஆழத்தைக் கூட அளக்கலாம். பெண் மனத்தின் ஆழத்தை அறிவது சிரமம் என்பது புரிகிறது!


ஒற்றர் ஜாக்கிரதை 3
கதை: நாடோடி | சித்திரம்: ராஜு
முதல் உலகப் போரின் போது ஜெர்மானியன் லெஸ்ஸர் பெல்ஜியம் வந்து சேர்ந்தான். வியாபார நிமித்தம் ஊர் ஊராகச் சுற்றுவது போல் லெஸ்ஸர் பாசாங்கு செய்ய, அவன் ஆசை நாயகி, ஜெர்மானிய அழகி அன்னா மரியா பொழுது போக்காக ஓவியம் தீட்டத் தொடங்கினாள்.
இந்தக் கோட்டைச் சுவரில் பல பீரங்கி வாய்கள் தெரிந்தாலும் நேர் எதிரே வரும் படைகளைத் தான் அவற்றால் சுட முடியும். பக்க வாட்டில் தாக்கினால் வெற்றி பெறலாம்....
இருப்பிடம் திரும்பியதும்....
கோட்டையின் ஓவியத்தை ஜெர்மனிக்கு அனுப்பினால் சந்தேகம் எழும். எனவே வெள்ளை பூசி....
.... அதன் மேல் இயற்கைக் காட்சியை வரைந்து அனுப்புகிறேன். ஜெர்மானிய அதிகாரிகள் மேல் பூச்சுக்களை அகற்றி உண்மையை உணர்வார்கள்.
ஒரு நாள் லெஸ்ஸர் திடும்மென்று இறந்து விட்டான். அன்னா மரியா பெருந் துயரமடைந்தாள்.
உன் ஆத்மா சாந்தியடையும் விதத்தில் நான் தொடர்ந்து ஒற்றாடல் செய்வேன்!
தன் தீர்மானப்படியே அழகி, அலங்காரி, அன்னா மரியா பெல்ஜிய தளபதிகளுடன் பழகி ரகசியங்களை அறிந்தாள்.
அன்பே! நீ அருகில் இருந்தால் ஒரே கிளுகிளுப்புத் தான்!


அப்போது யதேச்சையாக அவள் கைப் பை திறந்து கொள்ள....
வண்டியை நிறுத்த வேண்டாம். அந்தக் காகிதங்கள் முக்கியமல்ல!
சேச்சே..
பறந்து போன இவற்றைக் காரை நிறுத்திப் பொறுக்கி எடுப்பது என்ன பிரமாதம்?
ஒரு தாள் மீது தற்செயலாகக் கண்ணோட்டம் செலுத்திய பெல்ஜிய தளபதி...
துரோகி! பாசாங்குக்காரி! ராணுவ ரகசியங்களை ஜெர்மனிக்கு அனுப்புகிறாயா!
ஆனால் அவன் கடிதத்தைப் படிப்பதை அன்னமரியா ஓரக் கண்ணால் பார்த்து விடவே....
டாட்டா!
ஏய்! நில்லு! நில்லு!
தான் இனி பெல்ஜியத்தில் இருப்பது ஆபத்து என உணர்ந்த அன்னா, இங்கிலாந்துக்கு எப்படியோ வந்து சேர்ந்தாள். தன்னை ஓர் ஐரிஷ்காரி என வர்ணித்துக் கொண்டாள். பள்ளி ஆசிரியையாக வேலை ஏற்றாள். ஒரு நாள்...
சாரணச் சிறுவர்களா! மரப் பொந்தில் பதுங்கி இருந்து கண் காணிக்கும் வித்தையை இன்று சொல்லித் தருகிறேன்!

தொடரும்


ஒற்றர் ஜாக்கிரதை — சென்ற இதழ் தொடர்ச்சி
ஆசிரியை சொல்லித் தந்தபடி ஒளிந்திருந்து அந்தச் சிறுவர்கள் உலகின் முதல் டாங்கியை பிரிட்டன் பரீட்சித்துப் பார்ப்பதைக் கண்டனர்.
பின்னர்....
நீங்கள் கற்றுத்தந்தபடியே செய்தோம். புதிதாக ஒரு வாகனம் உருவாகியுள்ளதைக் கண்டு பிடித்தோம்!
அவர்கள் தந்த விவரத்தை வைத்து ஜெர்மனிக்கு சங்கேத மொழியில் கடிதம் எழுதினாள் அன்னா.
பயங்கரமான நகரும் இரும்புக் கோட்டை — தரைக் கப்பல் — தயாராகியுள்ளது. ரொம்ப ஆபத்தான வாகனம்....
கடிதத்தைப் பெற்ற ஜெர்மானிய ராணுவ அதிகாரி....
தரைக் கப்பலாம்! நகரும் கோட்டையாம்! அபத்தம்! கிழித்துப் போடு, இந்தக் கடிதத்தை.
ஆனால் விரைவில் பிரிட்டனின் டாங்கிப் படை யுத்த களத்தில் ஜெர்மானிய ராணுவத்தைச் சின்னா பின்னம் செய்தது!
தன் கடிதத்தை அலட்சியம் செய்த ஜெர்மானிய அதிகாரிக்கு அன்னா மரியா சீக்கிரமே ஒரு பரிசு அனுப்பினாள்.
அவள் கடிதத்தின் நகலும் ஒரு கைத் துப்பாக்கியும்! ராணுவத் தண்டனையிலிருந்து தப்ப நான் தற்கொலை செய்து கொள்வது நலம் என உணர்த்துகிறாள்!



ஒற்றர் ஜாக்கிரதை 4
தொகுப்பு: நாடோடி சித்திரம்: ராஜு
ஒற்றடனுக்கு அழகிய பெண்கள் பயன் படுவது போலவே ஆண்களும் அழகால் காரியங்களைச் சாதித்ததுண்டு. கண்டோர் மயங்கும் அழகன் சாஸ்நாவ்ஸ்கீ. போலந்திலிருந்து வந்து பெர்லினில் வசித்தான்.
அவனிடம் மயங்கினள் ஹெலன். செல்வமும் செல்வாக்கும் மிக்க ஜெர்மானிய பிரபுவின் மனைவி.
டார்லிங்! நம் காதல் உன் கணவனுக்குத் தெரிந்தால்.
கவலையில்லை. நீ தான் என் உடல், பொருள், ஆவி!
ஹெலன்! என்னைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?
உன் காதல் எனக்குக் கிடைத்திருப்பது தெரியும் அது போதுமே!
ஒரு வேளை நான் ஓர் ஒற்றனாகக் கூட இருக்கக் கூடுமல்லவா?
நான் எதற்கும் துணிந்திருக்கிறேன். உன் அன்பு மட்டும் வற்றாமல் பெருகட்டும்.
சொக்கிப் போன ஹெலன் அவனது ஒற்றடலுக்கும் உதவினள்!
என் உறவுக்காரி நட்ஸ்னர் யுத்த மந்திராலயத்தில் ஸ்டெனோ. பணத்தாசை காட்டிப் பார்க்கலாம்!
அபார யோசனை! அவள் டைப் அடிக்கும் கடிதங்களின் கார்பன் காகிதங்களை மட்டும் பர்ஸில் மடித்துப் போட்டுக் கொள்ளச் சொல்லு, யாரும் பாராத போது. ஒவ்வொரு கடிதத்துக்கும் புதுப் புது கார்பன் தாள்கள் பயன் படுத்தச் சொல்!


நட்ஸ்னரிடமிருந்து கிடைத்த கார்பன் தாள்களை இரவில் ஆராய்ந்து பல தகவல்களைப் போலந்துக்கு அனுப்பினான் சாஸ்நாவ்ஸ்கீ.
ஹல்லோ, ஹல்லோ! ப்ளாக் நைட் ஸ்பீக்கிங்! ஹிட்லர் போலந்தைத் தாக்குவது நிச்சயம்...!
நட்ஸ்னர் தனக்குக் கிடைத்த பணத்தால் ஆடம்பர வாழ்க்கை நடத்தினான்.
ஆகா! காரும், சொந்த வீடும், வேலைக்காரர்களும்... இது வல்லவா வாழ்க்கை!
சந்தேகம் எழுந்து காரியாலயத்தில் விசாரணை நடந்த போது...
மிஸ்டர்! செய்யும் வேலையில் தவறிருந்தால் சொல்; திருத்திக் கொள்கிறேன்! ஆபீஸ் நேரத்துக்குப் பிறகு நான் எப்படி நடந்து கொள்கிறேன் என்பது என் சொந்த விஷயம்!...
... எனக்குப் பணக்கார நண்பர் ஒருவர் இருக்கிறார்...
ஓகோ! பணக்கார நண்பரா! புரிகிறது!
ஆனால் இத்தகைய மட்டமான பதிலைத் தன் தாயாரிடம் அவளால் கூற முடியவில்லை. கிராமத்திலிருந்து பெர்லின் வந்த தாயிடம் வேறு ஒரு பொய் பேசினாள்!
அடேயப்பா இத்தனை ஆடம்பர வாழ்வா உனக்கு!
பதவி உயர்வு கிடைத்தது அம்மா. உனக்குத் தெரியுமே அப்பாவின் நண்பர் ஜெனரல் ரிப்பன்ட்ராப்பை. அவர் தான் சிபாரிசு செய்தார்!
ரொம்ப சந்தோஷம் எனக்கு!

பேபி ஃபுட் பற்றுக்குறையிருந்தால் பாலமுல் உங்களுக்கு உதவ முடியும்

பாட்டிலில் கொடுத்தல்

குழந்தைக்கு மூன்று மாதம் ஆனதும், உணவு தயாரிக்கும் போது, பேபி ஃபுட்



ஸ்பூனுல் ஊட்டுதல்

சிறிது பால் அல்லது நீருடன் பாலமுல் கலந்து பசைபோல் ஆக்குங்கள். சுவைக்கு வேண்டிச் சர்க்கரை சேருங்கள். காலையில் பாட்டிலில் கொடுப்பதற்குமுன்

RADEUS/BA/IR

*ஒரு ஸ்பூனும், எளிதில் ஜீரணமாகும் பாலமுல் ஒரு ஸ்பூனுமாகக் கலந்து கொடுக்கத் தொடங்குங்கள். பிறகு படிப்படியாக அதிகமாக்கி, பேபி ஃபுட் பாதியும், பாலமுல் பாதியுமாகக் கொடுங்கள்.



இதை ஸ்பூனுல் ஊட்டுங்கள். படிப்படியாய், ஒரு நாளைக்கு 2, 3 தடவைகளாக பாலமுலை, பழச்சாறு, பருப்பு, முட்டை, இவைகளோடு கொடுத்து, சுவைத்து இன்புறச் செய்யுங்கள்.


100 கிராம். அமுல்ஸ்ப்ரே, பாலமுல் இரண்டையும் உணவுச் சத்தில் ஒப்பிட்டுப் பாருங்கள்.

	அமுல்ஸ்ப்ரே	பாலமுல்
புரதம்	22.0 கிராம்	22.0 கிராம்
கார்போஹைட்ரேட்ஸ்	50.0 கிராம்	60.0 கிராம்
கொழுப்பு	18.0 கிராம்	7.0 கிராம்
கால்ஷியம்	1.0 கிராம்	1.0 கிராம்
ஃபாஸ்ஃபரஸ்	0.8 கிராம்	0.8 கிராம்
இரும்புச் சத்து	4.0 மி.கிராம்	6.0 மி.கிராம்
வைடமின் A	1500 ஐ.யு.	1500 ஐ.யு.
வைடமின் D	400 ஐ.யு.	300 ஐ.யு.
வைடமின் B_1	0.6 மி.கிராம்	0.5 மி.கிராம்
வைடமின் B_2	1.0 மி.கிராம்	0.6 மி.கிராம்
வைடமின் B_6	0.3 மி.கிராம்	—
நியாஸினமைட்	6.0 மி.கிராம்	5.0 மி.கிராம்
வைடமின் C	30.0 மி.கிராம்	50.0 மி.கிராம்

பாலமுல்

பாலுடன் கூடிய தானிய உணவு ஏறக்குறைய அமுல்ஸ்ப்ரே

கெய்ரா டிஸ்ட்ரிக்ட் கோவாபரேடிவ் மில்க் ப்ரொட்யூஸர்ஸ் யூனியன் லிமிடெட், ஆனந்த்.


ஒற்றர் ஜாக்கிரதை — சென்ற இதழ் தொடர்ச்சி
சில நாட்களுக்குப் பின் நட்ஸ்னரின் தாய் ஒரு பார்ட்டியில் ரிப்பன்ட்ராப்பைச் சந்தித்த போது...
என் மகளுக்குச் சிபாரிசு செய்து பெரிய பதவி அளித்தீர்கள்! ரொம்ப நன்றி.
என்னாலானதைச் செய்தேன்!
நான் இவள் மகளுக்காக ஒரு சிபாரிசும் செய்ய வில்லையே? இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது!
ரிப்பன்ட்ராப் ரகசியமாக நட்ஸ்னரைக் கண்காணிக்க ஏற்பாடு செய்தார்.
ஓகோ அப்படியா சேதி! கார்பன்களை அமுக்குகிறாயா!
ரிப்பன்ட்ராப்புக்குத் தகவல் எட்ட அவர் நட்ஸ்னரை விசாரித்தார்.
இந்த சிகரெட் கனல் உன் கன்னத்தைப் பொசுக்கக் கூடாதென்றால் முழு உண்மையையும் சொல்!
நட்ஸ்னர் பயந்து போய் உண்மைகளைக் கக்க, சாஸ்நாவ்ஸ்கீயும் ஹெலனும் கைதாயினர்.
சில காலத்துக்குப் பின் போலந்தில் பிடிபட்ட ஒரு ஜெர்மானிய ஒற்றனின் விடுதலைக்கு விலையாக சாஸ்நாவ்ஸ்கீ விடுவிக்கப்பட்டான். ஆனால் நட்ஸ்னரையும் ஹெலனையும் எதிர் நோக்கியது தூக்கு மேடை!



ஒற்றர் ஜாக்கிரதை
5
தொகுப்பு: நாகோடாமி சித்திரம்: ராஜு
கிரேக்கப் பத்திரிகை ஒன்றின் பாரிஸ் நிருபர் கான்ஸ்டன்டைன். அவனது மற்றொரு தொழில் ஒற்றாடல்! ஜெர்மானிய ஒற்றனாகப் பணியாற்றிய அவனுக்குப் பிரெஞ்சுக் காதலி ரெஜினா. ஒரு நாள்...
என்ன செய்கிறாய்?
என் தாய் அனுப்பிய பிறந்த நாள் பரிசு. ஒரு ஜதை ஸாக்ஸ். தபாலில் வரும் போது பொட்டலம் பிரிந்து அழுக்காகி விட்டது. துவைக்கிறேன்.
துவைத்துத் தருமாறு என்னை ஏன் கேட்கவில்லை? இதில் ஏதோ சூது இருக்கிறது. ரகசியமாய்க் கண் காணிப்போம்.
ஸாக்ஸை நீரில் நனைத்துப் பிழிந்ததால் கான்ஸ்டன்டைனுக்கு ரகசிய ரசாயனத் திரவம் கிடைத்ததை உணர்ந்தாள் ரெஜினா.
இவன் கிரேக்கப் பத்திரிகையாளனுமல்ல ஜெர்மானிய ஒற்றன் தான் சந்தேகமில்லை.
அவள் பிரெஞ்சு அதிகாரிகளைச் சந்தித்துக் கான்ஸ்டன்டைன் பற்றிக் கூறிய போது....
நன்றி, ரெஜினா! தொடர்ந்து அவன் காதலியாகவே நடித்து வா, என்ன? அவ்வப் போது தகவல் தெரிவி.
கிரீஸ் அப்போது ஜெர்மானியர் வசம் இருந்ததால் கிரேக்கப் பத்திரிகைத் தலைமையகத்திலிருந்து கான்ஸ்டன்டைனுக்குத் தகவல் அனுப்புவது ஜெர்மானிய அதிகாரிகளுக்குச் சாத்தியமாயிற்று.
தலைமையகத்திலிருந்து கடிதம்....


....பிரெஞ்சு கலாசாரம் பற்றிக்கட்டுரை வேண்டுமாம்! பேஷ்! மார்ஜினில் இருக்கும், ஜெர்மானிய ராணுவ மந்திராலயத்தின் செய்தி!
ரசாயன திரவத்தைத் தடவி அனலில் சூடேற்றினல் மறைந்திருக்கும் எழுத்து புலனாகும்!
காதலிகள் ஜாக்கிரதை
காதலிகள் ஜாக்கிரதை? ஒரு வேளை ரெஜினை பற்றி ஜெர்மானிய அதிகாரிகளுக்குத் தெரிந்து விட்டதோ? அவள் பிரெஞ்சு வேவுகாரியோ? என்னைக் காதலிப்பதாய் நடிக்கிறளோ?
சில நாட்கள் கழித்து வந்த வேறொரு கடிதத்தில் மறைந்திருந்த எழுத்து வெளிப்பட்ட போது...
கிறோம். இது சம்பந்தமாய்
பெச 'லேடி டாக்டர்' வருவாள்
ஜெர்மானிய ஒற்றர் தலைவி தான் லேடி டாக்டர் என்ற புனை பெயருடன் வருவாள். காதலி ஜாக்கிரதை என்ற அவர்கள் அறிவுரையை நான் அலட்சியம் செய்திருப்பது அவளுக்குத் தெரியக் கூடாது.
தான் ரீம்ஸ் நகர் போவதாகக் கூறி ரெஜினை அவள் தாய் வீட்டுக்கு அனுப்பினான் கான்ஸ்டன்டைன்.
அவள் உடைமைகளையெல்லாம் இந்தப் பெட்டியில் திணித்து நண்பன் வீட்டில் வைத்து விடுகிறேன்.

தொடரும்


ஒற்றர் ஜாக்கிரதை — சென்ற இதழ் தொடர்ச்சி
கான்ஸ்டன்டைன் கண்ணில் படாமல் ஏய்த்து விட்ட ரெஜினாவின் ஒரே ஒரு ப்ரா அவனை லேடி டாக்டரிடம் காட்டிக் கொடுத்து விட்டது!
உண்மையைச் சொல். அவள் இப்போது எங்கே இருக்கிறாள்?
தன் தாயாருடன் வசிக்கிறாள்.
தவறு! நான் சொல்கிறேன். ரீம்ஸ் நகருக்குப் போவதாக நீ பொய் சொன்னதாகவும் லேடி டாக்டர் என்பவளை நீ சந்திக்கப் போவதாகவும் பிரெஞ்சு அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிருப்பாள்!
காதலிகள் ஜாக்கிரதை என்ற எங்கள் எச்சரிக்கையை நீ அலட்சியம் செய்ததால் இன்னும் சற்று நேரத்தில் நம்மைக் கைது செய்ய இங்கு பிரெஞ்சு போலீஸ் வரும்!
ஐயோ! தப்ப வழி?
இந்தக் கடிதத்துடன் மயான பூமிக்குச் செல். மஞ்சள் கோடு போட்ட நீலச்சட்டை அணிந்திருப்பவனிடம் கொடு. உன்னை அவன் தப்புவிப்பான். நான் வேறு மார்க்கமாய் ஜெர்மனியை அடைகிறேன்.
உயிர் மீதுள்ள ஆசையால் லேடி டாக்டர் கூறியபடி நடந்து கொண்டான் கான்ஸ்டன்டைன்.
இரண்டே நாளில் நான் ஜெர்மனியை அடைய வேண்டும். லேடி டாக்டர் உத்தரவு!
ஆனால் கான்ஸ்டன்டைன் மயான பூமியை விட்டு வெளியே வரவேயில்லை!
லேடி டாக்டர் ஒருவனுக்கு உதவுமாறு கடிதம் எழுதித் தந்தால் அதற்கு அர்த்தம் நேர் மாறானது என்பது உனக்குத் தெரிய நியாயமில்லை, கான்ஸ்டன்டைன்! கட்டளையை நிறைவேற்றினேன். உன் ஆத்மா சாந்தி அடையட்டும்!


ஒற்றர் ஜாக்கிரதை 6
தொகுப்பு: நாடோடி சித்திரம்: ராஜு
இத்தாலியில் உருவான ஒரு விமான தளத்தின் வரைபடம் பிரெஞ்சு தளபதி பேனியருக்குத் தேவைப்பட்டது. காசுக்காக ஒற்றாடல் புரியும் பலருள் ரோஸா என்பவள் மூலம் சில தினங்களில் பிளான் கிடைக்கவும் செய்தது. ரொம்ப சுலபமாய்க் கிடைத்ததாலேயே பேனியருக்குச் சந்தேகம்!
நம் எதிரிகள் வேண்டுமென்றே தவறான வரைபடத்தை நம் தலையில் கட்டியிருப்பார்கள்!
அப்படியென்றால் இதை நம்மிடம் விற்ற ரோஸா மறு தரப்பிலும் பணம் பெற்றுக் கொண்டிருப்பாள்!
இருக்கலாம். உண்மையை அறிந்து வரும் பொறுப்பை சான்-பியரி ஏற்கட்டும். இருவரும் மகா சாமர்த்திய சாலிகள்!
சான்-பியரி என்ற காதலர்களுக்கு ஒற்றாடலே தொழில். பணத்துக்காக யார் தரப்பிலும் வேலை பார்ப்பார்கள்! தளபதி பேனியரின் வேண்டுகோளை ஃபோன் மூலம் அறிந்ததும்....
...அன்றிரவு ரோஸா கொடுத்த ஒரு பார்ட்டிக்கு ஒரு கனவான் போல் நடித்துச் சென்றான் பியரி.
சீயர்ஸ்!
சற்று நேரத்தில் ரோஸாவை வான் பீடன் என்பவன் தனியே அழைத்துப் போவதை கண்டு பியரி பின் தொடர்ந்த போது...
மரியாதையாக அசல் பிளானை என்னிடமே திருப்பித் தந்து விடு!
பணம் கொடுத்தால் தருகிறேன்!


அடி பாவி! முதலில் அசல் பிளானில் சில மாறுதல்களைச் செய்து மேஜர் பேனியரிடம் சேர்ப்பிப்பதாகச் சொல்லி என்னிடம் பணம் வாங்கிக் கொண்டாய். பிறகு சாமர்த்தியமாய் அதை நகல் எடுத்து நகலில் சில மாறுதல்களைச் செய்து பேனியரிடம் தந்து அவனிடம் பணம் பெற்றுக் கொண்டாய்! ...
... இப்போது அசல் பிளானைத் திருப்பித் தா என்று நான் கேட்டால் அதற்கும் பணம் கேட்கிறாய்!
அசல் வரைபடம் இதுதான் என்று பேனியரிடம் தந்து நான் மீண்டும் பணம் பண்ண முடியுமே!
பணப் பேயே! துரோகி! நாளை மாலைக்குள் பிளான் என்னிடம் திரும்பி வரா விட்டால்...! ஜாக்கிரதை!
பார்ட்டிக்குப் பிறகு காதலர்கள் பியரி–சான் சந்திப்பு. பியரி அசல் வரைபடத்தைத் திரும்பப் பெற திட்டம் வகுத்தான்.
நீ இப்படி செய்...
பியரியின் யோசனைப்படி காலை ரோஸாவின் வீட்டை அடைந்தாள் சான்.
யார் நீ?
உங்கள் டெய்லரின் உதவியாள். அளவுகளைத் தொலைத்து விட்டாராம். மீண்டும் அளவெடுத்து வர அனுப்பினார்.
யுக்தி பலித்தது. அளவெடுப்பது போல் நடித்த சான்...
இந்தக் கூரிய கத்திரிக்கோல் உன் அழகான முதுகில் குத்திக் கிழிக்கக் கூடாதென்றால் அசல் பிளான் எங்கிருக்கிறது கூறிவிடு!

தொடரும்



போட்டிக் கதை-17

கிடைக்காத பாக்கியம்

எஸ். வி. ஜெ

குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயினவெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்றதாயினுமாயின செய்யும்
நலந்தரும் சொல்லைநான் கண்டு
கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்

ஆராவமுத ஐயங்கார் கிணற்றடியில் வாளியில் தண்ணீரை இழுத்துத் தப தப வென்று தலை மேல் கொட்டிக் கொண்டார். ''நாராயணா என்னும் நாமம்'' என்று வாய் முணுமுணுத்துக் கொண்டே வாளியைக் கிணற்றில் இறக்கி அது நிரம்பியவுடன் மேலுக்கு இழுத்து மறுபடியும் தலையில் கொட்டிக் கொண்டார். வாய் ஆழ்வார் பாசுரங்களை இசைத்துக் கொண்டிருந்தது; திருமஞ்சனம் ஆர அமர நடந்து கொண்டிருந்தது.

பழுத்த வயது. எழுபது இருக்கும். உடல் தளர்ந்து கைகால்கள் அசையும்பொழுது சுருங்கிய சதை தளதளவென்று ஆடிற்று. சிவந்த மேனி. நாராயணன் நாமம் இடைவிடாது சொல்லிச் சொல்லி மெருகேறிய முகக் காந்தி. நெற்றியில் திருமண் இட்ட இடம் வடு விழுந்து திருமண் இருப்பது போலவே வெளுத்திருந்தது. தண்ணீர்த்துளிகள் உடலில் சூரிய கிரணத்தில் பளபளவென்றது. முக க்ஷவரம் செய்யாதிருந்ததால் பத்துப் பதினைந்து நாட்கள் வளர்ந்த வெள்ளை மயிர் தாடையிலும் முக வாயிலும் வளர்ந்து நரஸிம்ம அவதாரம் போல் கம்பீரமாய் முகம் தேஜஸுடன் மிளிர்ந்தது. துவைத்துப் போட்டிருந்த தலைவத்தால் உடம்பைத் துடைத்து விட்டுக் கொண்டார்.

''நாராயணா! உடம்பு தள்ளவில்லையே! இன்னும் பூமிக்குப் பாரமாய் என்னை எவ்வளவு நாட்கள் இருக்க வைத்து வேடிக்கை பார்க்க உன் திருவுள்ளமோ!'' என்று காஞ்சிபுரம் வேஷ்டியை இடுப்பில் பஞ்சகச்சம் வைத்துக் கட்டிக் கொண்டு திருமண் காப்புக்கு உட்கார்ந்தார். அப்போது கருட சேவையில் கருடாழ்வார் அலங்கரிக்கப்பட்டு ஸ்ரீமன் நாராயணனைத் தாங்கக் காத்திருப்பது போல் ஆராவமுத ஐயங்கார் திகழ்ந்தார்.

''சீதம்மா!'' என்று குரல் கொடுத்தார்.

''இதோ, வந்துவிட்டேன்'' என்று துளசிச் செடிகள் மத்தியிலிருந்து குரல் கொடுத்தாள் சீதம்மா.

''இன்னும் திருத்துழாய் சேகரித்துக் கொண்டிருக்கிறாயா? ஆராதனைக்குச் சந்தனம் அரைத்தாகி விட்டதா?'' என்று கேட்டார்.

வெள்ளித் தட்டில் துளசி நிரம்பி வழிந்தது. சீதம்மாள் ஆராவமுத ஐயங்காரின் தேஜஸுக்கு எள்ளளவும் குறைந்தவள் இல்லை. நெற்றியில் ஆண்டாளைப் போல் திலகமிட்டிருந்தாள். ஈரத் தலைமயிரைத் துடைத்து அப்படியே பின்புறம் முடித்திருந்தாள். அதன் மேல் ஒரு கொத்து மல்லிகை மலர். முகம் மஞ்சள் பூசிக் குளித்ததால் தங்கம் போல் தகதகத்தது. இரண்டு காதுகளிலும் ஜ்வலிக்கும் வைர ஓலைகள். அதேபோல் மூக்குத்தி. ஆராவமுத ஐயங்கார் நரஸிம்ம அவதாரம் போல் கம்பீரமாய் இருந்தால் சீதம்மாள் அலர்மேல்மங்கைத் தாயார்போல் புன்னகை பூத்துக் கருணையின் வடிவமாய்த் திகழ்ந்தாள்.

ஆராவமுத ஐயங்கார் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னாள். ''நீங்கள் திருமண் காப்பு முடித்துக் கொண்டு வருவதற்குள் சந்தனம் மற்றும் ஆராதனைக்கு வேண்டிய சகலமும் தயாராய் இருக்கும்.''

''சீதம்மா! உனக்கு வயதாகிப் போச்சு. முன் மாதிரி வேகமாய் ஓடி ஆடி எனக்கு சிசுருஷை செய்ய முடியவில்லை. நான் விட்டேனா? உன்னை விரட்டறேன்'' என்று மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

''எனக்கு வயதானால் உங்களுக்கு மாத்திரம் ஆகவில்லையான்னா? உங்களைவிட நான் எட்டு வயது சின்னவள். அதை மறந்துவிடாதீர்கள்'' என்று பதிலுக்குச் சொன்னாள்.

வயதானவர்களின் அன்புப் பிணைப்பே தனிரகம். இன்றைய நாகரிக வாழ்க்கையின் கொஞ்சல்கள் இல்லை என்றாலும் பகவத் கைங்கரியத்தில் கணவனுக்கு மனைவி



இளைத்தவள் இல்லை என்ற போட்டா போட்டி.

''ஒத்துக்கறேன் அம்மா. என்னை விட எட்டு வயது சின்னவள்தான். எனக்கு உடம்பு வர வரத் தள்ளலே. திருமண் இட்டுக் கொள்ளக் கூட முடியாமல் கைவிரல்கள் எப்படி நடுங்குகின்றன பார்த்தாயா ?''

''நான் இட்டுவிடறேனே!'' என்று சீதம்மாள் முன்வந்தாள்.

''பதி சிச்ருஷையில் அதையும் சேர்க்க வேண்டிய நாள் தூரத்தில் இல்லை என்று தோன்றுகிறது. நாராயணன் திருவுள்ளப்படிதானே எல்லாமே நடக்கப் போகிறது? இவ்வளவு நாட்கள் பண்ணிய ஆராதனையோடு அவன் திருப்திப்பட்டுத் திருவடியில் சேர்த்துக் கொள்கிறானோ, அல்லது கை தளர்ந்து, கண் போய், பிறத்தியார் கையை எதிர்பார்க்குமாறு என்னை அலைக்கழிக்கப் போகிறானோ, தெரியலே... நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன், நாராயணா என்னும் நாமம்''' என்று முணுமுணுத்துக் கொண்டே மணையிலிருந்து எழுந்தார்.

''ஆமாம்! நீங்கள் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது ராமானுஜம் ஏதோ சொன்னானே, என்ன சொன்னான்?'' என்றாள் சீதம்மாள்.

''ராமானுஜம் வந்தானா? என்ன சொன்னான்? அவனைப் பார்க்கவும் இல்லை, என்ன சொன்னான்னு கேட்கவும் இல்லையே!'' என்றார் ஆராவமுத ஐயங்கார்.

''உங்களுக்கு வர வர உலகமே மறந்து போயிடறது. அதிலும் கையிலே வாளியை எடுத்துண்டு கிணற்றடிக்குக் குளிக்கப் போயிட்டா வைகுந்தத்திலே நாராயணனையே சேவிக்கப் போகிறவர்மாதிரி பிள்ளை, பெண், பெண்டாட்டி ஒண்ணும் கண்ணுலே படறதில்லை. குழந்தை என்ன சொன்னானோ... வந்து கேட்டால் என்ன பதில் சொல்லுவீர்கள்?'' என்று கணவனைக் கடிந்து கொண்டாள். தாய் உள்ளத்தில் முதல் இடம் புத்திர வாத்ஸல்யம்.

இவை ஒன்றும் அவர் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. ஆராதனை மும்முரமாய் நடந்து கொண்டிருந்தது. பெரிய வெண்கல மணி கண, கணவென்று ஒலி எழுப்பியது.

''இன்று என்ன சர்க்கரைப் பொங்கல் ?'' என்றார் ஆராவமுத ஐயங்கார், நிவேதனத்தைப் பார்த்து விட்டு.

''ராமானுஜம் ஏதோ பிஸினஸ் விஷயமாய் யாரையோ பார்க்கப் போகணும்னு நேற்று சொல்லிக் கொண்டிருந்தான். அது ஒரு சிக்கலும் இல்லாமல் முடியணுமேன்னு ஸ்வாமிக்குச் சர்க்கரைப் பொங்கல் பண்ணினேன்'' என்று பிள்ளையின் சிரேயஸ்ஸை மனத்தில் வைத்துப் பகவத் கிருபையைக் கோரினாள்.

''என்ன! இப்ப இருக்கிற பணம் போறலையாமா ? நானும் இவ்வளவு நாட்களாகத் தினம் ஆராதனம் செய்து கொண்டு வருகிறேன். ஒரு நாள் கை நீட்டிப் பெருமாள் தீர்த்தம் வாங்கிக் கொள்ள வீட்டில் இருக்கிறானா ? பணம், பணம்னு அப்படி ஒரு பைத்தியமா ? உன் பிள்ளையின் போக்கு உனக்குத் தான் பெருமையாகப் படறது'' என்று பிள்ளையின் மேல் குறை கூறிக் கொண்டே சீதம்மாளின் உள்ளங் கையில் வெள்ளி வட்டிலிலிருந்து ஆராதனைத் தீர்த்தத்தை விட்டார்.



ஈ.வெ.ரா.வும் இறைவனும்!

கோவை பீளமேட்டில் உள்ளது சர்வஜன உயர்நிலைப்பள்ளி. 1932ல் இப்பள்ளிக்கு வருகை தந்த ஈ.வெ.ரா. பள்ளி பார்வையாளர் புத்தகத்தில், "இப் பள்ளியும் அதனை நிறுவிய பி.எஸ்.ஜி. ரங்கசாமி நாயுடுவும் எல்லா நலனும் பெற இறைவனை இறைஞ்சுகிறேன்" என்று தமது கைப்பட எழுதியுள்ளார். இந்த வாரம் பொன்விழா கொண்டாடும் இப்பள்ளி ஈ. வெ. ரா.வின் இந்த வாசகங்களைக் காட்சிக்கு வைத்துள்ளது. (தினமணி—9-12-74)

''தலையிருக்கச்சே, வாலாடுமா? நீங்கள் தான் செய்கிறீர்களே. அது பிள்ளையைச் சேராதா?'' என்று பிள்ளைக்கு வக்காலத்து வாங்கினாள் சீதம்மாள்.

''அப்படின்னா நீ என்ன சொல்லறே? நான் உசிரோடு இருக்கச்சே, அவன் ஸ்வாமிக்குத் தண்டன் இடறதை நான் பார்த்துச் சந்தோஷப்படக் கூடாது. அதுதானே!'' என்று தம் உள்ளத்தில் ஆழ்ந்து புதைந்து கிடக்கும் அபிலாஷையை வாய்விட்டுச் சொன்னார். தம் பிள்ளை தாம் ஆராதனம் செய்தபின் ஸ்வாமியைச் சேவித்து, தம் கையால் கொடுக்கும் பெருமாள் தீர்த்தத்தை உள்ளங் கையில் வாங்கி உறிஞ்சித் தலையில் தெளித்துக் கொண்டு, நைவேத்தியத்தை வாயில் போட்டுக் கொள்ளும் காட்சியைக் காண ஆசைப்பட்டார். அது நிறைவேறாமலே வாழ்க்கையில் ஒரு குறைவுடனேயே பரம பதம் அடைந்து விடப் போகிறோமே என்ற குறை.

ராமானுஜம் இன்ஜினீயரிங் படிப்புமுடித்து ஒரு சிறு தொழிலை ஐந்தாண்டுகளுக்குமுன் ஆரம்பித்தான். அவன் ஜாதகத்தின் விசேஷமோ, அல்லது தகப்பனார் பல்லாண்டு இசைத்ததின் பலனோ தொழில் நல்ல வருவாயைத் தேடித் தந்தது. முதலில் ஒரு ஸ்கூட்டரில்நடமாடத் தொடங்கியவன், பணம் சேரச் சேர அது தொழில் கௌரவத்துக்குப் போதாது என்று பெரிய காராகவாங்கி அதில் பறந்தான். பெரிய பணக்காரர்களுடன் பழகித் தொழில் முறைகள் பற்றித் தெரிந்து கொண்டான். எந்தெந்த நிறுவன அதிகாரிகளுடன் யார் யார் சாதுர்யமாய்ப் பேசி ஒவ்வொரு காண்ட்ராக்டும் பெற்றார்கள் என்று அளவளாவி அறிந்தான். ஒரு நிறுவனத்தை முதலில் தொடங்கிய ராமானுஜம், ஓரிரண்டு வருடங்களில் அவன் வீடு தேடி வரும் சிலருடன் கூட்டுத் தொழில்கள் ஆரம்பித்துப் பணம் திரட்டும் வழிகளை விரிவுசெய்துகொண்டிருந்தான். அவன் பேச்சில் ஓர் அலட்சியம் தொனித்தது. நடையில் தனக்கு நிகர் யாரும் இல்லை என்ற மிடுக்கு ஏறிற்று. பணம் செலவழிப்பதிலும் ஒரு நிதானம் இல்லை.

அன்று ஆராதனத்தை முடித்துக் கொண்டு, பிள்ளை தம் ஆசையைப் பூர்த்தி செய்யாத குறையுடன் வாசல் ஹாலில் ஈஸிசேரில் உட்கார்ந்தார் ஆராவமுத ஐயங்கார். வாசலில் கார்க் கதவு சாத்தும் சப்தம் கேட்டது.

''ராமானுஜம் வந்து விட்டான் போல் இருக்கிறது. உங்களுக்குக் குறை ஏன்? அவனிடம் உங்கள் ஆசையைச் சொல்கிறேன்'' என்று சீதம்மாள் சொன்னாள். அவன் வீட்டினுள் நுழையும்பொழுதே முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருப்பதைத் தாய், தகப்பன் பார்த்தார்கள். நேரே ஹாலுக்கு வந்தான்.

''ஏன் அப்பா! நான் என்ன சொல்லி விட்டுப் போனேன். உன்னால் எனக்கு ஐம்பதாயிரம் பிஸினஸ் போயிற்று'' என்று இரைந்தான்.

''என்னடா, சொன்னே ராமு?'' என்று தாயார் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் பேசினாள். ஒரு நூறு ரூபாய் பிஸினஸில் நஷ்டம் என்றாலும் ராமானுஜத்தின் பேச்சு, வார்த்தை, நடத்தை எல்லாமே அப்பா இல்லை, அம்மா இல்லை எல்லோரையும் தூக்கி எறிந்தது போலவே யிருக்கும்.

''சொன்னேன், சுரைக்காய்க்கு உப்பு இல்லேன்னு. அப்பா குளித்துக் கொண்டிருக்கச்சே, 'என்னைத் தேடிண்டு வரவனை உட்கார்ந்திருக்கச் சொல்லு. வந்துவிடுகிறேன்' என்று சொல்லச் சொன்னேன். அவன் வந்து பார்த்துவிட்டுப் போயிருக்கிறான். அப்பாதான் கேட்க வேண்டாம். 'நாராயணா'ன்னு ஆரம்பிச்சுட்டாரானா பூகம்பமே வந்தாலும் தெரியாது.

''ஏன், அப்பா, ஆராதனையை ஐந்து நிமிஷங்கள் கழித்துப் பண்ணினால் ஸ்வாமி வேண்டாம் என்கிறாரா?'' என்று தகப்பனாரை நையாண்டி செய்வது போல் கேட்டான். அவர் அப்படியே குன்றிவிட்டார்.

''ஏண்டா, ராமு! என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகக் கூடாதா?''

''நீதான் துளசி பறித்துக் கொண்டிருந்தே..... உங்களையெல்லாம் நம்பறதை விட ஒரு காரியதரிசியை நியமிக்க வேண்டியதுதான்'' என்று கோபம் அடங்காதவனாய்ப் பேசினான். எதற்கும் தகப்பனார் ஒரு வார்த்தை பேசவில்லை. அவர் மனம் கொந்தளித்தது. ராமானுஜம் கத்திவிட்டு மறுபடியும் தன் காரில் போய் விட்டான்.

ஆராவமுத ஐயங்கார் அப்புறம் ஒரு வார்த்தை யாருடனும் பேசவில்லை. கடைசியாகப் 'பல்லாண்டு' பாடி மனைவிக்குத் தீர்த்தம் வழங்கியதோடு சரி. சாப்பிட உட்கார்ந்தார். ஆகாரம் இறங்கவில்லை. பையன் பிஸினஸ் பெருகக் கோரிச் செய்த சர்க்கரைப்

முதலில் தோன்றியது எது?

சாதாரணமாக உபயோகப்படுத்தப்படும் முற்றுப்புள்ளி (.) கமா (,) செமிகோலன் (;) கோலன் (:) இவைகளில் முதலில் வந்தது எது? தெரிந்து கொள்ளுங்கள்: முற்றுப்புள்ளி தான்! இது 14ம் நூற்றுண்டில் வந்தது. அடுத்தது கோலன் (1485) பிறகு கமா (1520) கடைசியாக செமி-கோலன் (1570).

ஆதாரம்: க்யூரியஸ் ஃபாக்ட்ஸ் தகவல்: பாலி

பொங்கல் பிரயோசனப்படவில்லை. நஷ்டம் வந்ததாகத் தாய், தகப்பன் மேல் குற்றம் கண்டுபிடித்தது தான் கண்டது.

மனச் சோர்வுடன் ஆராவமுத ஐயங்கார் படுத்துக் கொண்டார். மத்தியானம் மணி இரண்டு அடித்தது. சீதம்மாள் கையில் காப்பியுடன் ஆராவமுத ஐயங்காரை எழுப்பினள். பதில் ஒன்றுமில்லை. அசைத்துப் பார்த்தாள். பலனில்லை. திகில் பிடித்துக் கொண்டது. டெலிபோனை எடுத்துப் பிள்ளையின் தொழிற்சாலைக்குப் போன் செய்தாள். "ராமு! அப்பா பிரக்ஞை இல்லாமல் இருக்கிறுர். உடனே டாக்டரை அழைத்துக் கொண்டு வா."

கொஞ்ச நேரத்தில் வாசலில் கார் வந்து நின்றது. டாக்டரும் வந்திருந்தார். தகப்பனுர் படுத்திருந்த கட்டிலின் அருகில் நின்று கொண்டு, "அப்பா!" என்ருன். மல்லாந்து இருக்கும் நிலைக்குக் கொண்டு வர டாக்டரும், அவனுமாக அவரைத் திருப்பினுர்கள். தலையணையில் ராமானுஜம் கை வைத்துப் பார்த்தான். நனைந்திருந்தது. எழுபது வயதுத் தகப்பனுர் அழுததைத் தலையணைதான் பார்த்தது. டாக்டர் பரிசோதித்தார். கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீர்க் கறையை விரலினுல் தடவிப் பார்த்தார்.

"இவருக்கு ஏதோ அதிர்ச்சி என்று தோன்றுகிறது. மனத்தைவிட்டுச் சொல்லாமல் அழுதிருக்கிறுர் போலிருக்கிறது. ஏதாவது அதிர்ச்சி தரும் சம்பவம் நிகழ்ந்ததா?" என்று கேட்டார்.

"இல்லை, காலையிலே நான் சற்றுக் கோபமாய்ப் பேசினேன். வேறு ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை."

சீதம்மாள் விக்கினுள். அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. "'இன்றைய ஆராதனையுடன் ஸ்ரீமத் நாராயணன் திருப்திப்பட்டுத் திருவடியில் சேர்த்துக் கொள்வானு' என்று காலையிலேதாண்டா சொன்னுர். அதற்குள் இப்படிப் போய்விட்டாரே" என்று அழுதாள்.

துக்கம் விசாரிக்க வந்து போனவர்களின் எண்ணிக்கை அநேகம். செய்ய வேண்டிய கருமங்கள் ஒரு குறைவும் இல்லாமல் நடந்தன. எல்லாம் முடிந்து ராமானுஜம் வீட்டு ஹாலில் உட்கார்ந்திருந்தான். தாயார் வீட்டில் மற்றோர் அறையில் நிலைகுலைந்து சோகத்தில் படுத்துக் கிடந்தாள்.

தகப்பனுர் போன சூன்யம் கொஞ்சம் கொஞ்சமாக ராமானுஜத்தை வேதனையில் ஆழ்த்தியது. அவர் ஸ்தூல சரீரம் போன சூனியம் பெரிதாகப் படவில்லை. அவர் சூக்ஷ்ம சான்னித்தியம் போனதுதான் பெரிய சூன்யமாய் அவன் உள்ளத்தைக் கடைந்தது. கிணற்றின் மர ராட்டினத்தில் ஒலி இல்லை; வாளியில் தண்ணீரைத் தலைக்குமேல் தூக்கிக் கொட்டும் நீர்வீழ்ச்சியின் சலசலப்பு ஒலி இல்லை; பளபளவென்று துலங்கும் வெண்கல மணியின் கணகணவென்ற மங்கள ஒலி இல்லை; "நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்" என்று தகப்பனுர் இசைத்த பக்தி ஒலி இல்லை. ஏன்? வீட்டில் ஒருவித ஒலியும் இல்லை.

ராமானுஜம் எழுந்தான். தகப்பனுர் உபயோகித்த அறைக்குப் போனுன். மறு நாளுக்கு மடியாய்த் துவைத்துப் போட்டிருந்த காஞ்சீபுரம் வேஷ்டி கொடியில் உலர்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. பூஜை அறைக்குப் போனுன். கடைசி நாள் ஆராதனை செய்த திருத்துழாய் பதினைந்து நாட்களாக அப்புறப்படுத்தப்படாமல் சருகாய்ப் போய் வெள்ளித் தட்டில் கிடந்தது. புளி போட்டுத் துலங்கச் செய்யாத வெங்கல மணி அழுக்கேறித் துக்கம் காப்பது போல் இருந்தது. அன்று சீதம்மாள் போட்ட கோலம் மட்டும் அழியாமல் இருந்தது. அங்கிருந்து கிணற்றடிக்குப் போனுன். கயிற்றில் கட்டப்பட்டிருந்த வாளி அப்படியே இருந்தது.

ராமானுஜம் சட்டையைக் கழற்றி எறிந்தான். மங்கள ஒலிகள் இல்லாத வீட்டின் பயங்கர நிசப்தம் அவனைப் பீதி அடையச் செய்தது. வாளியைக் கிணற்றில் இறக்கினுன். ராட்டினம் கடகடவென்று சப்தித்தது. அவன் உடலை ஏதோ ஒரு வேகம் ஆட்கொண்டது. இருபது வாளித் தண்ணீரை இழுத்துத் தகப்பனுர் போல் கொட்டிக் கொண்டான். நீர் வீழ்ச்சியின் சத்தம் சலசலவென்றது. தகப்பனுர் உபயோகித்த காஞ்சீபுரம் வேஷ்டியை இடுப்பில் கட்டிக் கொண்டான். அவர் உட்கார்ந்து உபயோகித்த மணையில் உட்கார்ந்து திருமண் இட்டுக் கொண்டான். வெள்ளித் தட்டில் வாடி வதங்கியிருந்த துளசியை எறிந்து புதிதாகச் சேகரித்துக் கொண்டான். பூஜை அறைக்கு வந்தான். தகப்பனுர் நடத்திய ஆராதனை கிரமம் ஒன்றும் தெரியவில்லை. அவன் சின்னவயதில் மனப்பாடம் செய்த ஒரே ஒரு பாசுரம் நினைவில் இருந்தது. வெண்கல மணியைப் பலக்கச் சப்தித்தான். "குலம் தரும், செல்வம் தந்திடும்" என்று பாசுரத்தை உரக்கச் சொன்னுன். பூஜை அறையில் தகப்பனுர் குரல் எதிரொலித்தது போல் ஓர் உணர்வு.

துக்கத்தில் படுத்திருந்த சீதம்மாளுக்கு ஒரு பிரமை. எங்கிருந்து இந்த ஒலிகள் வருகின்றன. பர்த்தா போய்விட்டாரே..... பிரமையா? என்று கண் விழித்தாள். பிரமை இல்லை என்று நிச்சயித்தாள். தள்ளாடி நடந்தாள். ராமானுஜம் பாசுரத்தின் முடிவை அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னுன்.

"நலம்தரும் சொல்லைக் கண்டு கொண்டேன் நாராயணு என்னும் நாமம்" என்று முடித்துக் கொண்டே சாஷ்டாங்கமாய்த் தண்டனிட்டான்.

எழுந்தவனை, அப்படியே தழுவி, "ராமானுஜம் இந்தப் பாக்கியத்தைக் காணத்தானேடா, உன் தகப்பனுர் ஏங்கினுர். இந்தப் பாக்கியம் கிடைக்காமலே போய் விட்டாரே!" என்று சீதம்மாள் விம்மினுள்.


ஒற்றர் ஜாக்கிரதை — சென்ற இதழ் தொடர்ச்சி
பயந்து போன ரோஸா பேசினாள்:
அதோ அந்த ஃபாஷன் பத்திரிகையின் கடைசி பக்கத்தைப் பின் புற அட்டையுடன் சேர்த்து ஓரங்களில் ஒட்டியிருக்கிறேன். இரு தாள்களுக்கும் இடையில் அசல் வரைபடம் இருக்கிறது!
ஃபாஷன் பத்திரிகையுடன் வெளியேறிய சான், காதலன் பியரியுடன் அன்றிரவு தளபதி பேனியரைச் சந்தித்தாள்.
அசல் பிளான் எங்கள் வசம் உள்ளது!
உங்களுக்குத் தேவையானால் பத்தாயிரம் ஃபிராங்க் தர வேண்டும்.
சல்லிக் காசு பெயராது! ரோஸா கொலை செய்யப் பட்டிருக்கிறாள். அவளைக் கடைசியாகச் சந்தித்தது நீ தானே?
ஐயோ! எனக்கொன்றும் தெரியாது. நான் நிரபராதி!
எங்களை விட்டு விடுங்கள்! அசல் பிளானைத் தந்து விடுகிறோம்! இந்தாருங்கள்!
அப்படி வா வழிக்கு!
ஃபாஷன் பத்திரிகை கை மாறியதும்....
கவலைப் படாதே சான்! வரைப் படத்தைப் பெறுவதற்காக உன்னைச் சும்மா மிரட்டினேன். இந்தா வெகுமதி ஆயிரம் ஃபிராங்! ஸ்விஸ் நாட்டுக்கு ஹனிமூன் போங்கள்!
ஆனால் ரோஸா கொலை செய்யப் பட்டாள் என்று மேஜர் பேனியர் கூறியதும் மெய்தான். அசல் பிளானை அவள் சானிடம் பறி கொடுத்து விட்டாள் என்று அறிந்த வான் பீடன் ஆத்திரமடைந்து அவளைச் சுட்டு விட்டுப் போலீஸில் சரணடைந்தான்!



7
சித்திரம்: ராஜ்
லண்டனில் பழைய புத்தகக் கடை நடத்தி வந்த பில்பி ருஷ்யாவுக்காக உளவறிந்து கொண்டிருந்தான். ஒரு நாள் ருஷ்ய தூதராலயத்திலிருந்து தகவல் வந்தது...
இந்தப் புத்தகம் என்ன விலை?... பிரிட்டிஷ் ராணுவ அதிகாரி காம்பெல்லிடம் SXK என்று தலைப்பிட்ட ஃபைல் உள்ளது. அதன் ஃபோட்டோ பிரதி தேவை... என்ன ஐந்து பவுண்டா?
அபூர்வ நூல்! விலையைப் பாராதீர்கள்.
அன்று மாலை பில்பி தன்னை யாரும் பின் தொடரவில்லை என்று நிச்சயித்துக் கொண்டு காம்பெல் வீட்டை அடைந்தான்.
காலிங் பெல்லை அழுத்தி விட்டு...
கதவை யாரும் திறக்கு முன் இந்த பிளாஸ்டிக் தகட்டைச் சாவித் துவாரத்தில் நுழைத்து, லேசாகத் திருகி எடுத்து விடலாம்.
...கதவைத் திறந்த பெண்ணிடம் தான் தவறான விலாசத்துக்கு வந்து விட்டதாகக் கூறினான்.
ஸாரி, தொந்தரவு கொடுத்து விட்டேன்.
நண்பன் பீட்டரின் வீட்டுக்குச் சென்றான் பில்பி.
சாவித் துவாரத்தின் அடையாளங்கள் இதில் உள்ளன.
இரு சாவிகள் தயாரித்துத் தருகிறேன். ஒன்று நிச்சயம் திறக்கும்.


அன்றிரவு...
சபாஷ் பீட்டர்! முதல் சாவியே திறந்து விட்டது!
வீட்டுக்குள் காம்பெல்லின் காரியாலய அறையை அடைந்து மேஜை மீதும் அதன் டிராயர் களிலும் எதையும் கலைக்காமல் தேடியதில்...
SXK
ஆ! இதோ இருக்கிறது SXK !
பாக்கெட்டிலிருந்து சிறிய காமிராவை எடுத்து ஒவ்வொரு பக்கமாகப் படமெடுத்துக் கொண்டான் பில்பி.
பிளாஷ்
மறுநாள் காலை ராணுவ அதிகாரி காம்பெல் பிரிட்டிஷ் ஒற்றர் தலைவரை சந்தித்து....
நீங்கள் சந்தேகித்தது சரிதான். பில்பி ஒற்றன்தான்.
நீங்கள், 'அவனைக் கவனி ஆனால் பிடிக்காதே' என்றதால் சும்மா விட்டேன். SXK ஃபைலைப் போட்டோ எடுத்திருக்கிறான். சீக்கிரம்! அது ருஷ்யரிடம் கைமாறு முன் பில்பியைக் கைது செய்யுங்கள்!
அதற்கு அவசியமே இல்லை. உங்களிடம் தரப்பட்ட SXK ஃபைல் உண்மையானது அல்ல. ருஷ்யர்கள் மெய்யெனக் கருத வேண்டிய தவறான தகவல்களே அதில் இருந்தன! இனி நீங்கள் தைரியமாக அசல் SXK ஃபைலைப் பார்வையிட எடுத்துப் போகலாம்!

முற்றும்.

உங்கள் மகன் லட்சாதிபதியாக வேண்டுமா? இன்றே ரூ. 13,700 முதலீடு செய்யுங்கள்.

maa/CBI-185 TAM



நீங்கள், உங்கள் குழந்தைகளின் மேல் படிப்பு, உங்கள் மகளின் திருமணம் போன்ற குறிப்பிட்ட நோக்கத்துடன் சேமிக்க வேண்டுகிறீர்களா?

அதற்குச் சிறந்த வழி; உங்கள் குழந்தைகளின் பெயரில் கார்பொரேஷன் பாங்கின் ''பாலநிதி ரொக்க பத்திரங்களில்'' இப்பொழுதே முதலீடு செய்யுங்கள்.

இந்தப் பத்திரங்கள் கவர்ச்சியுள்ள வட்டியோடு சிறு தொகைகளிலும் கிடைக்கின்றன.

பாலநிதி ரொக்க பத்திரங்கள்

—சிநேக மனப்பான்மையுடன் விளங்கும் வங்கி

வருமானவரி விதி விலக்குள்ளவை.
இத்திட்டத்தின் சிறப்பு அம்சம்:
சேமிப்பை வேண்டும்போது சிறு தொகைகளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இன்று ரூ. 1000க்கு முதலீடு செய்யப்பட்ட தொகை 10 ஆண்டுகளில் ரூ. 2707 ஆக வளர்ந்து விடுகிறது. இருபது ஆண்டுகளில் ரூ. 7328 ஆக பெருகுகிறது.

எங்கள் வங்கிக்கு வருகை தாருங்கள்.
எங்கள் உதவியை நீங்களே போற்றுவீர்கள்!

கர்நாடகம், கேரளம், ஆந்திரம், தமிழ்நாடு, குஜராத், மஹாராஷ்டிரம், வங்காளம், டில்லி, கோவா மாநிலங்களில் 150க்கு மேற்பட்ட கிளைகள்,

கார்பொரேஷன் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம் : உடுப்பி

நிர்வாக அலுவலகம் : மங்களூர்

ESTD. 1906

ஸ்கூட்டரை விட்டுக் கீழே இறங்கினேன். வழக்கம் போல் 'லானின்' ஓர் ஓரத்தில் ஸ்கூட்டரை நிறுத்திவிட்டுத் திரும்பினேன்.

ஒரு ரோஜா மலர் பூத்திருந்தது.

அந்த ரோஜாச் செடி தினம் தினம் எப்படியோ ஒரு மலரை எனக்குத் தந்துவிடுகிறது. அதைப் பறித்துக் கொண்டு ஆபீஸில் நுழைந்தேன்.

பஸ்ஸரின் ஒலி !

'மானேஜிங் டைரக்டர்' அறையிலிருந்து எனக்கு அழைப்பு. என் சட்டைக் காலரைச் சரி செய்து கொண்டேன். தலையை ஒரு முறை படிய என் கரங்களால் அழுத்திக் கொண்டேன். காற்றுக் காலம்! ஸ்கூட்டரில் வந்ததால் தலை ஒரேயடியாகக் கலைந்து போகிறது. முகத்தை இயல்பாக வைத்துக்கொள்ள முயன்றேன். சில பொறாமை பிடித்த கண்கள் என்னை உற்றுப் பார்ப்பதை என்னால் உணர முடிந்தது. சிலரின் கேலிச் சிரிப்புக்களை என்னால் கணக்கிட முடிந்தது.

நான் மானேஜிங் டைரக்டர் அறைக்குள் நுழைந்தேன்.

''ஹலோ, குட்மார்னிங் மிஸ்டர் சுரேஷ்!''

''குட்மார்னிங் மேடம் !''

அவள் சிரித்தபடி, ''ப்ளீஸ்! டேக் யுவர் ஸீட்!'' என்றாள்.

இந்தக் கம்பெனிக்கு அவள்தான் 'மானேஜிங் டைரக்டர்', 'ஓனர்' எல்லாம்.

அவளின் நிர்வாகத் திறனைக் கண்டு வியந்திருக்கிறேன். இந்தப் பெரிய ஆபீஸில் இத்தனை ஆண்களுக்கும் அவள் எஜமானியாக இருக்கிறாள் என்றால் அதிகாரத்தால் அல்ல! அன்பால்!

அவளிடத்தில் எனக்கு மதிப்பு உண்டு.

பயம் உண்டு ... பக்தி உண்டு ... அதே சமயம்...

''மிஸ்டர் சுரேஷ்.... இத்தனை 'ஆர்டர்' 'பெண்டிங்'கிலே இருக்கிறது போல் இருக்கிறதே.... சீக்கிரம் அதைக் கவனியுங்கள்.''

அவள் வரிசையாக எனக்கு 'ஆர்டர்' கொடுத்துக் கொண்டிருந்தாள். தேங்கிக் கிடப்பவைகளை நான் 'கிளியர்' செய்ய வேண்டுமாம். என் மனத்தில் தேங்கிக் கிடப்பவைகளை....? அதற்கு மட்டும் அவளால் 'ஆர்டர்' கொடுக்க முடியாது. என் மனத்துக்கு நான்தான் அரசன்! அதிகாரி !— எல்லாம்.

கைநிறைய பேப்பர்களை அள்ளியபடி அவள் அறையைவிட்டு வெளியே வந்தேன்.

அவள் பெயர் 'லேகா'. ஹிந்தியில் 'லேக்' என்றால் ஏரி....

அவள் இதய ஏரியில் நான் படகு ஓட்ட ஆசைப்பட்டால் நடக்குமா ?

அவள் என் மேலதிகாரி.

என் மனத்துள் நான் ரஸிப்புக்களை வைத்துக் கொள்ளலாமே தவிர அதை வெளியில் சொன்னால் என்னைப் பைத்தியம் என்பார்கள்.

ஊமையின் கனவாக, குருடனின் லட்சியமாக, என் கற்பனைகள் என்னுள் விரிந்தன. அவை எனக்கு மட்டுமே சொந்தம்.

அவள் அடிக்கடி என்னை அழைத்து ஆபீஸ் சம்பந்தமாகப் பேசியபோது அவளுடன் நான் என்ன என்னவோ பேசினேன் — மனத்தில் தான்.

அவள் பேசும் ஒவ்வொரு பேச்சும் எனக்காகப் பேசுவதாக எண்ணுகிறேன்.

அவள் செயல் ஒவ்வொன்றும் என் அன்புக்கு அவள் காட்டும் பதில் அன்பு என்று எனக்குள் நினைத்துச் சிரிக்கிறேன்.

அன்றொருநாள் —

ஆபீஸில் நுழைகிறேன். மனமே சரியில்லை.

தினம் தினம் ஒரு பூவை எனக்குத் தருகிற ரோஜா அன்று ஏன் வெறுமையுடன் நின்றது?

சாதாரணமான விஷயம்தான். ஏனோ என்னால் அதைக்கூடத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்தச் செடியில் மலரை மட்டும் நான் பார்க்கவில்லை !

அவள் முகத்தையும் அல்லவா சேர்த்துப் பார்த்தேன்.

இன்று மலர் மறைந்து முள் மட்டும் ஏன் தெரிகிறது ?


மேஜையை நெருங்கியபோது 'பஸ்ஸரி'ன் ஒலி !



ஒரு மலர் பூக்கிறது

விமலா ரமணி

போட்டிக்கதை.



என்னுள் ஒரு பரபரப்பு.

வாசலில் ரோஜா பூக்காவிட்டால் என்ன? எனக்காக...எனக்காக மட்டுமே... என் மனத்துக்குத் தெரிந்த மலர் ஒன்று தினம் தினம் பூக்கிறதே! நான் 'காலரை'ச் சரி செய்து கொண்டேன். தலையைப் படியப் படிய.......

என் கைகள் துவளுகின்றன.

என்னை முந்திக் கொண்டு இவன் யார் 'புதியவன்' அவள் அறைக்குள் நுழைகிறான்?

நானும் நுழைந்தேன்.

''ஓ ! ரெண்டு பேருமே வந்துவிட்டீர்களா? இவர்தான் மிஸ்டர் சுரேஷ்...! இவர் மிஸ்டர் ராகவன்........''

நான் அவனை வியப்புடன் பார்க்கிறேன்.

''மிஸ்டர் சுரேஷ்...! இவர் உங்களுக்கு 'அஸிஸ்டெண்ட்'. உங்களுக்குக் கொஞ்சம் ஓவர் வொர்க் இல்லையா ? இனி அதை இவருடன் 'ஷேர்' செய்துகொள்ளலாம்.....''

எனக்கு ஓர் உதவி ஆள்! என் பாரங்களைக் குறைக்க ! என் வேலைகளில் பங்கு கொள்ள !

நான் கேட்கவில்லையே !

''மிஸ்டர் ராகவன் ! மிஸ்டர் சுரேஷ் இருக்கிறாரே, ரொம்பக் கெட்டிக்காரர். நம் ஆபீசுக்கு இவ்வளவு நல்ல புகழும், செல்வாக்கும் இருக்கின்றனவென்றால், என்னால் ஏதுமில்லை. இதன் பின்னணியில் இருப்பவர் மிஸ்டர் சுரேஷ்தான். அவர் சொல்கிறபடி நான் நடந்து கொள்கிறேன். பெயரும், புகழும் எனக்கு வருவதென்னவோ உண்மைதான். ஆனால் காரணம் மிஸ்டர் சுரேஷ்தான் !'' அவள் பேசிக் கொண்டே போனாள்.

நான் சொல்கிறபடி அவள் கேட்கிறாளா ?

'ப்ளீஸ், லேகா! வேண்டாம்.... இந்த அஸிஸ்டெண்ட் எனக்கு வேண்டாம் !'

என்னால் சொல்ல முடியவில்லை !

அவளும் கேட்கவில்லை!

''என்ன ஸார், என்னவோ போல் இருக்கிறீர்கள்?'' என்றான் என்னுடன் என் இடத்துக்கு வந்த ராகவன்.

நான் சமாளிக்க முயன்றேன்.

''ஒன்றுமில்லை.... ஸ்கூட்டர் கீயை எங்கே வைத்தேன் என்று திடீரென்று தோன்றியது. டைரக்டர் அறையிலேயே வைத்துவிட்டேன் போலிருக்கிறது. இருங்கள்.... எடுத்துக் கொண்டு வருகிறேன்......''

என் திறமையை எனக்குள் வியந்தபடி அவளை மீண்டும் பார்க்கும் ஆவலில் நான் எழுவதற்கும் —

'பஸ்ஸரி'ன் ஒலி எழுந்தது!

ஓ ! அவளும் என்னுடன் தனியாகப் பேச விரும்புகிறாளோ ?

நான் அறைக்குள் நுழைந்தேன்.

சிரித்துக் கொண்டே 'எஸ்' என்றவளின் முகம் ஒரு கணம் மாறியதை என்னால் உணர முடிந்தது.

''ஓ ! நீங்களா ? மிஸ்டர் ராகவனைக் கூப்பிட்டேன். அவரைக் கொஞ்சம் வரச் சொல்லுங்கள்......''

நான் ஒரு கணம் தடுமாறிப் போனேன்.

நான் அவசரமாக வெளியேறியதன் காரணமாக அறையின் 'ஸ்ப்ரிங்' கதவுகள் அடித்துக் கொண்டன !

அவள் அறைக்குள் நுழைந்த ராகவன் வெகுநேரம் கழித்து வெளியே வந்தான்.

''என்ன ஸார், கடைசியில் 'ஸ்கூட்டர் கீயை' எடுத்துக் கொள்ளாமலே வந்துவிட்டீர்கள் போலிருக்கிறதே! இந்தாருங்கள்!''

அவன் என்னிடம் தந்த அந்தச் சாவியைப் பார்த்தேன். திறக்கப்படாத என் உள்ளத்துக்குச் சாவி தேவையே இல்லை !

பஸ்ஸரின் ஒலி :

ராகவன் எழுந்து போகிறான்.



அடிக்கடி இது சகஜமாகிவிட்டது. ராகவன் வந்த புதிதில், ஒரு வேளை இப்போது என்னைத் தான் அழைக்கிறாளோ என்று எதிர்பார்த்து நான் காத்திருந்ததெல்லாம் வீணாகிவிட்டது.

அவள் என்னை அழைப்பதே யில்லை.

ஆனாலும் அவளிடத்தில் எனக்கு மரியாதை உண்டு.....அன்பு உண்டு....பக்தி உண்டு...

அத்துடன்....

இன்னமும் என் உள்ளத்தில் அந்த மலர் வாடாமல் இருந்து கொண்டிருக்கிறது.

அன்று ஒரு 'சர்க்குலர்' வந்தது.

எங்கள் ஆபீஸில் புதிதாக ஒரு நாடகப் பிரிவு ஆரம்பிக்கப் போவதாகவும், அதற்காக ஒவ்வொருவரும் குறைந்தபட்சம் ஐந்து ரூபாயாவது தர வேண்டும் என்றும் அறிவிப்பு.

டைரக்டரின் கலை ஆர்வத்தைப் பலர் பாராட்டினர்; பலர் வெட்டிச் செலவு என்றார்கள்.

எனக்கு இதன் காரணம் புரிந்தது.

ராகவன் !

அவன் அழகன். கலை ஆர்வம் கொண்டவன் ! கல்லூரி நாடகங்களில் நடித்து அனுபவப்பட்டவன். அந்த அனுபவம் அவனுக்கு வேலையைத் தந்திருக்கிறது. அவளிடத்தில் நெருக்கத்தையும் தந்திருக்கிறது.

நடிகர்கள் தேர்வு நடந்தது.

ஃபியட் கார் உங்களுக்குத் தெரியும். அதன் விளக்கம்?

ஃபாப்ரிகா இதாலியானா ஆடோமொபிலி டொரினோ.

நா. மனோகரன்



''மிஸ்டர் சுரேஷ்! நீங்கள்கூட ஏதாவது சின்ன 'ரோல்' எடுத்துக் கொள்ளுங்கள்.''

அவள் வற்புறுத்தினாள்.

''எக்ஸ்க்யூஸ் மீ மேடம்...நான் ஒரு ரஸிகன்...கடைசிவரை இப்படி ரஸிகனாகவே இருந்துவிடுகிறேன்..'' என் குரல்கரகரத்தது.

தினம் தினம் ரிகர்ஸல்.... அது சம்பந்தப்பட்ட பேச்சுக்கள், வேடிக்கைகள், ஹாஸ்யங்கள்..... ஒரே மாதிரி ஆபீஸ் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்த எங்களுக்கு இது ஒரு மாறுதலாக இருந்தது. மனத்துக்கு இதமாக இருந்தது. அது மட்டுமல்ல, 'தான் ஒரு மானேஜிங் டைரக்டர்' என்ற தகுதியை மறந்து லேகாவும் ஒரு சாதாரண ஊழியரைப் போல் எங்களுடன் கலந்து கொண்டது அனைவருக்கும் வியப்பாக இருந்தது....எனக்கு?

''என்ன மிஸ்டர் சுரேஷ்.... யோசனை? மிஸ்டர் ராகவன் இந்த சீனில் எப்படி நடித்தார் பார்த்தீர்களா? ரியலி ஒண்டர்புல்!''

அவள் முகத்தின் மகிழ்வின் தெறிப்புக்களை, கண்களில் போதையின் மயக்கத்தை என்னால் எடை போட முடிந்தது! நான் மௌனமாக ஆமோதித்தேன்.

''கொஞ்சம் 'டம்மி' படிக்கிறீர்களா, மிஸ்டர் சுரேஷ்?''

யாரோ ஒருவர் வரவில்லை என்பதற்காக என்னை ராகவன் வற்புறுத்தினான்.

''டம்மிதானே, ப்ளீஸ்....'' — லேகாவும் சொன்னாள்.

என்னை 'டம்மி'யாக்கிப் பார்ப்பதில் எத்தனை பேருக்கு மகிழ்ச்சி!

லேகாவின் குரலுக்கு மறுப்புச் சொல்லத் தெம்பற்றவனாய் எழுந்து போனேன்.

நாடக தினம்.

எக்கச்சக்கக் கூட்டம். எங்கள் கம்பெனியைப் பொறுத்தவரையில் இது ஒரு புதிய அனுபவம்!

சென்னையிலிருந்து 'திரைப்பட டைரக்டர்கள்' ஸ்பெஷலாக வரவழைக்கப்பட்டிருந்தனர். சரித்திர நாடகமானதால் எக்கச்சக்கமாய்ச் செலவு. நான் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தேன். எல்லா ஏற்பாடுகளும் என்னைச் சேர்ந்தவை. நாடக அரங்கம் அமைப்பது, வாழை மரம் கட்டுவது, சென்னையிலிருந்து வரும் ஸினிமா டைரக்டர்களை விமான நிலையத்துக்குச் சென்று அழைத்து வந்து, அவர்கள் வசதியாகத் தங்க ஹோட்டலில் அறைகள் ஏற்பாடு செய்வது இப்படி எத்தனை எத்தனையோ!

காட்சிக்குக் காட்சி கை தட்டல்!

நான் இருண்ட பந்தலில் அமர்ந்திருந்தேன்...... நாடக முடிவில் அனைவரும் ராகவனைப் பாராட்டிப் பேசினார்கள்....

ஒவ்வொருவரும் அவன் திறமையை வியந்து புகழ்ந்தனர்.

அவள் முகம் மலர்ந்ததைக் கவனித்தேன்.

அவனுக்கு ஒரு வெள்ளிக் கோப்பை பரிசாக அளிக்கப்பட்டது. அவன் வெற்றிப் பெருமிதத்துடன் கையில் 'கப்'புடன், கழுத்தில் மாலையுடன் டைரக்டர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டான். கடைசியாக நன்றி தெரிவிக்கும்போது என் பெயரையும் சொன்னார்கள் என்று நினைக்கிறேன்.

மறுநாள்... அன்று ராகவன் வரவில்லை.

அன்று முழுவதும் 'பஸ்ஸர்' ஒலிக்கவில்லை!

இரண்டு நாட்கள் ஆகின.

மூன்று நாட்கள் ஆகின!

ராகவன் வரவே இல்லை!

ஆபீஸ் விஷயமாகப் பல காரியங்கள் முடங்கிக் கிடப்பதை உணர்ந்தேன்.

என்ன செய்வது?

இன்னும் ஆபீஸில் பலர் அந்த நாடகத்தின் பிரமையிருந்து மீண்டதாகவே தெரியவில்லை! அதே பேச்சு!

நான் யோசித்துக் கொண்டிருந்தபோது 'பஸ்ஸர்' ஒலித்தது!

ராகவன் இப்போது இங்கு இல்லை! இது... இது கண்டிப்பாக எனக்குத்தான்!

நான் எழுந்தேன்.... வழக்கம்போல் 'காலரை'ச் சரி செய்யக் கை விழைந்தபோது எனக்குள் நானே சிரித்துக் கொண்டேன்.

கலைந்த தலையுடன் அவள் அறைக்குள் நுழைந்தேன். அவள் குனிந்தபடி அமர்ந்திருந்தாள். அவள் முன்....?

ஒரு கவர் பிரிக்கப்பட்டிருந்தது.

''மிஸ்டர் ராகவனிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. அவர் இனி வேலைக்கு வரமாட்டாராம். சினிமாவில் நடிக்கச் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதாம். கடிதம் எழுதியிருக்கிறார்.... இந்த நாடக விழாவால் குறைந்தது ஐயாயிரம் ரூபாயாவது செலவாகியிருக்கும் என்று நினைக்கிறேன். அந்தச் செலவை 'கம்பெனி'க் கணக்கில் காட்ட வேண்டாம்! அது...அது....என்னுடைய சொந்த நஷ்டமாக இருக்கட்டும்... ஆமாம்; என் கணக்கிலிருந்து நான் அந்த நஷ்டத்தைத் தந்து விடுகிறேன். அது என் சொந்த நஷ்டம்...

அவள் ஒரு கணம் நிறுத்தினாள்.

குனிந்த தலை நிமிராமல் பேசியதிலிருந்து அவளுள் குடிகொண்டிருக்கும் பாரத்தை என்னால் யூகிக்க முடிந்தது.

அவள் முன் போடப்பட்டிருந்த கண்ணாடி மேஜையில் அவள் அழகிய முகம்....

அந்த முகத்தின் கலங்கிய கண்கள்....

அதிலிருந்து வெளிவரக் காத்திருக்கும் பனி நீர்த் துளிகள்....

''மிஸ்டர் சுரேஷ்...! 'பெண்டிங்'கில் இருக்கும் இந்த 'ஆர்டர்'களைக் கொஞ்சம் சீக்கிரம் கவனியுங்கள். ரொம்ப நாட்களாக நாம் தூங்கிவிட்டோம்...இனி 'பிரிஸ்கா'க இருக்க வேண்டும்.... ஓ.கே.''

அவள் இயல்பாகச் சிரிக்க முயன்றாள்.

'உண்மைதான் லேகா.... நீ தூங்கிப் போனாய்.... ஓர் அழகான இனிமையான தாலாட்டில் உறங்கிப் போனாய்!' நான் வெளியே வந்துவிட்டேன். என் பக்கத்து 'சீட்' காலியாகத்தான் இருக்கிறது! மீண்டும்...

ஒரு மலர் பூத்துக் கொண்டேயிருக்கிறது!



பாம்புப் படைத் தலைவர்

சிவபாலன்

சென்னையில் உள்ள பெல்ஜிய நாட்டுத் தூதரகத்திலிருந்து 'அவசர போலீஸ் உதவி—100'க்குத் தொலைபேசி அழைப்பு வந்தது.

உடனே போலீஸ் லாரி விரைந்தது. பெல்ஜிய தூதரகத்தில் உள்ள அனைவரும் பயத்தால் செயலற்றுத் தென்பட்டனர்.

'ஒரு பெரிய நல்ல பாம்பும், பெரிய சாரைப் பாம்பும், பங்களாத் தோட்டத்தின் பின்புறம் நுழைந்திருக்கின்றன' என்று போலீசுக்குத் தெரிவிக்கப்பட்டது.

போலீசார் வீட்டைச் சுற்றிலும் சந்து, பொந்து, மரம் செடி அடர்ந்த தோட்டம், முழுவதும் தேடியும், பாம்புகள் தென்படவில்லை!

''பாம்பைப் பிடிக்கப் பாம்பாட்டியை வரவழைக்கலாம்!....'' என ஒருவர் கூறினார்.

உடனே போலீஸ் லாரி கோடம்பாக்கத்தில் உள்ள ரங்கராஜபுரம் பகுதியில் வசிக்கும் ஜனுப் மோடி மஸ்தான் வீட்டுக்கு எதிரில் வந்து நின்றது.

போலீஸ் லாரியைக் கண்டதும் அக்கம் பக்கமுள்ளவர்கள் 'ஏதோ என்னவோ' என்று பயந்தார்கள். ''மஸ்தானை அழைத்துச் சென்று பயத்தைப் போக்கவே வந்திருக்கிறோம்!'' என்று போலீஸார் கூறினார்கள்.

பெல்ஜியத் தூதரகத்தின் பின்னால் பொந்துகளில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு டஜன் பாம்புகளை உயிரோடு பிடித்து விட்டார் மஸ்தான்! எல்லாம் நாகப் பாம்புகளே!

அரை நாளில் டஜன் பாம்புகளைப் பிடித்ததற்கு நூற்றுப் பதினைந்து ரூபாய் சன்மானம் அவருக்குக் கிடைத்தது!

தமிழக அமைச்சராக இருந்த திரு பி. கக்கன் வீட்டிலும், பாம்பு வந்து, உடனே போலீஸ் உதவி கோரப்பட்டது. ஓய்வுபெற்ற ஐ. ஜி. ஒருவர் வீட்டிலும் பாம்பு வந்தது. இப்படிப் பலர் போலீஸுக்கு ஃபோன் செய்கிறார்கள். சில இடங்களில் போலீசாரே பாம்பைக் கொன்று பயத்தைப் போக்கினார்கள்.

ஆனால், கக்கன் வீட்டிலும், ஓய்வு பெற்ற ஐ. ஜி. வீட்டிலும் இன்னும் சில இடங்களிலும், 'பாம்பைக் கொல்லாதீர்கள் உயிருடன் பிடித்துச் செல்ல யாரையாவது வரச் சொல்லுங்கள்' என்று கேட்டுக் கொண்டார்கள். ''வாழும் பாம்பை வீட்டில் கொல்ல வேண்டாம்'' என்ற எண்ணம்தான் காரணம். போலீஸ் மஸ்தானின் உதவியை நாடியது.


இப்படிப் பிடித்துப் போகும் பாம்புகளைக் கொண்டு ஜீவனம் செய்கிறார் மஸ்தான்! அவரிடம், பாம்புக் கடிக்கு வேர் இருக்கிறது என்கிறார்களே?'' என்று கேட்டேன்.

''இருக்கிறது. கொல்லி மலைச் சாரலில் 'சிரியா நங்கை' என்ற வேர் அகப்படுகிறது. அமாவாசையன்று விரதம் கொண்டு, காப்புக் கட்டி வேர் எடுக்கணும். அந்த வேரைப் பாலில் உரசி அரைத்து, நல்ல பாம்போ, வேறு விஷப் பாம்போ கடித்து நுரை கக்கி விட்டாலும்கூட, இந்த மருந்தை உள்ளுக்குக் கொடுக்கணும். பாம்பு கடித்தது எனத் தெரிந்து பதினைந்து நிமிடங்கள் தாண்டாமல், நாக்கில் அரைத்துத் தடவிவிட்டால் நிச்சயம் பிழைத்து விடுவார்.

''சத்தியத்துக்குக் கட்டுப்பட்டது நல்ல பாம்பு. மந்திரத்துக்கும் கட்டுப்பட்டது. என் குருநாதர் உபதேசம் செய்த மந்திரம் தான் எனக்கும் என் குடும்பத்துக்கும் ஆபத்து வராமல் காத்து வருகிறது'' என்பது இந்தப் பாம்புச் சித்தரின் கருத்தாகும். மஸ்தான் ஆயிரம் நல்ல பாம்புகளைப் பிடித்துப் பற்களைப் பிடுங்கி, விஷப் பையையும் அகற்றியவர்.

பாம்புகளை வைத்து என்ன செய்கிறார்?

திரைப் படங்களுக்குத்தான் 'சப்ளை' செய்கிறார்! தமிழ், தெலுங்கு, கன்னட, இந்திப் படங்களில் வந்த பல பாம்புகள் மஸ்தான் வைத்திருப்பவைதாம்.





புற்றில், இயற்கையான சூழலில் நல்ல பாம்புகள் வருஷக் கணக்கில் வாழுமாம். ஆனால் அந்தப் பாம்புகளைச் சினிமாப் படப் பிடிப்புக்காக ஆயிரம் 'வாட்' விளக்கு வெளிச் சத்தில் ஓடவிட்டால் ஆறு மாதங்கள் கூட உயிர் வாழ்வதில்லையாம்!

கருநாகம், கோதுமை நாகம், செட்டி நாகம், பாப்பார நாகம் — என நான்கு வகை நாகங்களே பெரியதாக — எட்டு, பத்தடி நீளம்வரை வளர்ச்சி பெற்றிருக்குமாம்.

பூநாகம் என அழைக்கப்படும் சில சிறிய நாகங்கள் தாழம்பூ, மல்லிகைப்பூ, புளியம்பூ வாசனைக்காக அம்மரங்களையோ புதர் களையோ சுற்றி இரவில் ஊர்ந்து வருமாம்.

''நல்ல பாம்பின் நச்சுப் பற்களைப் பிடுங்கு கிறீர்களே, பற்கள் மறுபடியும் வளருமா?'' என்று கேட்டேன்.

''ஆறு மாசத்துக்கொரு முறை பற்களைப் பிடுங்கியாகணும். விஷப் பல் வளரக்கூடியது. விஷப் பையை எடுக்கும்போது துளி விஷம் பல்லிடுக்கில் தெறித்திருந்தால்கூட, விஷத் துளியே விஷப் பல்லாக மீண்டும் முளைக்கும்'' என்கிறார் மஸ்தான். உயிரியல் விஞ்ஞானிகள் வேறு அபிப்பிராயம் வைத்திருக்கக் கூடும்.

''குழந்தைங்க வர்ற இடம்... எடுத்துண்டு போ!...'' எனப் பயத்தால் தெருவில் வரும் பாம்பாட்டியை விரட்டுகிறோம் நாம்.

ஆனால் மஸ்தான் வீட்டில் எழுபதுக்கு மேல் பாம்புகள் பெட்டிகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றன. இவரது குழந் தைகள் பயமில்லாமல் வாழ்கின்றன!

ஒரு சினிமாப் படத்துக்காக 'நூறு நல்ல பாம்புகள் படம் எடுத்து ஆட வேண்டும்... பாம்புகள் சீறி வரவேண்டும்' என்றார் ஒரு படாதிபதி. அதோடு போச்சா அந்தப் பயங் கரக் காட்சி! ''தேள்கள், நட்டுவாக்காளிகள் எல்லாம் தேவை. எவ்வளவு முடியுமோ, கொண்டுவா!'' என்று முன்பணம் தந்தார்!

நூற்றுப் பதினைந்து நாகங்கள், முந்நூறு தேள்கள், எட்டு டஜன் நட்டுவாக்காளிகள்.

ஒரு பெரிய தகர டிரம்முக்குள் தேள்களை யும், நட்டுவாக்காளிகளையும் அடைத்து அவற் றுக்கு மாமிசங்களையும் உணவாகப் போட்டு, பத்து நாட்கள் பாதுகாத்தார் மஸ்தான் தம் வீட்டில்.

இத்தனை சிரமப்பட்ட பிறகு நூறு பாம்பு களை மட்டும் படத்திலே இடம் பெறச் செய்து, மற்றவற்றை வேண்டாம் என்று கூறி விட் டார் தயாரிப்பாளர்! படத் தயாரிப்பே பாதியில் நின்று போயிற்று! அவ்வளவு தேள் களையும் என்ன செய்வது?

கட்டு மரத்தில் கொண்டு சென்று, நடுக் கடலில் டின்னோடு தூக்கி எறியச் செய் தாராம் மஸ்தான். வேறு எங்கே விட்டாலும் ஆபத்தை விலைக்கு வாங்கியதாகுமே!

இன்று தம் மகன்களையும் பாம்புகளுடன், படப் பிடிப்புகளுக்கு அனுப்பி வைக்கிறார். சமீபத்தில் ஓர் இந்திப் படத்துக்காக சிம்லா வரை சென்றார். வெளிநாட்டுக்காரர்கள், பாம்பு— கீரி சண்டையைப் பார்க்க விரும்பி இவரை அழைக்கிறார்கள்.

''கோடி வித்தையும் சாண் வயத்துக்குத் தான்.... இப்ப வருமானமே போதவில்லை. தினமும் பாம்புகளுக்கு முட்டை, பால் வாங் கவே இருபது ரூபாய் வேண்டி யிருக்கிறது. அவைகளை வைச்சுத்தான் என் குடும்பம் பிழைக்கணும்!....'' என்கிறார் மஸ்தான் உற் சாகம் இழந்த குரலில்.

நமக்கு அபாயமாகத் தோன்றும் வாழ்வில் 'அபாயமில்லை' என்று உணர்த்தும் அதிசய மனிதரான மோடி மஸ்தான் ஆழ்ந்த கடவுள் நம்பிக்கை கொண்டவர்.



1. நண்பர்களான நாகங்களுடன் மோடி மஸ்தான்!
2. மலைப்பாம்புடன் விளையாடும் மஸ்தானின் பிள்ளை.
3. 'பயமா? அப்படின்னா?'
4. ''பாம்பாட்டியா வேஷம் கட் டிட்டா ஆச்சா? பிடியுங்க தைரியமா!''